# THE SCORCHING GUILE

# தம்பிமார் கதை



**Institute of Asian Studies**
Chemmancherry, Chennai - 600 119
India

# THE SCORCHING GUILE
# தம்பிமார் கதை

*General Editor*

**G. JOHN SAMUEL**

*Editors*

**A.K. PERUMAL**

**K. JAYA KUMAR**

*English Rendering*

**M. SUBRAMONIA PILLAI**

**Institute of Asian Studies**
Chemmancherry, Chennai - 600 119
India

THE SCORCHING GUILE : தம்பிமார் கதை

Pages : lxxii + 245

First Edition : December 1999

Price : Rs. 300/- US $ 30

Publication No. : 71

© INSTITUTE OF ASIAN STUDIES, Chennai.

Published under the financial assistance received from the Directorate of Tamil Development of the Government of Tamil Nadu for good translations.

**Copies can be had from**

The Publications Division,
**Institute of Asian Studies**,
Chemmancherry, Chennai - 600 119,
India.

Phone (Off.) 4961662, 4960831
(Res.) 4960085
Fax : 91-44-4960959
E-mail : ias@xleb.com
World Wide Web site: http://xlweb.com/heritage/asian/

Composed by: INSTITUTE OF ASIAN STUDIES,.Chennai-600 119.

Printed by: STUDENTS OFFSET SERVICES, Chennai - 600 017: Ph. 4343862

# Contents


பதிப்புரை ... ... v

தம்பிமார் ... ஒரு சிறு குறிப்பு ... ... xi

Editors Note ... ... xvi

A Note on Tampimar's Temple ... ... xxi

Translator's Note ... ... xxiv

ஆய்வுரை ... ... xxv

Preface ... ... lviii

The Scorching Guile - தம்பிமார் கதை ... ... 1 - 220

(Tamil - Transliteration - Translation)

Glossary ... ... 221

பின்னிணைப்புகள்

துணைநூல் பட்டியல் ... ... 226

சொல்லடைவு ... ... 228

ஊர்ப்பெயர் அகராதி ... ... 235

வழக்குச்சொல் அகராதி ... ... 238

பிற ஆவணங்கள் ... ... 241

# A System of Transliteration of Tamil

## VOWELS

| Short | | Long | |
|---|---|---|---|
| அ | a | ஆ | ā |
| இ | i | ஈ | ī |
| உ | u | ஊ | ū |
| எ | e | ஏ | ē |
| ஒ | o | ஓ | ō |

| | |
|---|---|
| ஐ | ai |
| ஔ | au |

## CONSONANTS

| Hard | | Soft | | Medial | |
|---|---|---|---|---|---|
| க் | k | ங் | ṅ | ய் | y |
| ச் | c | ஞ் | ñ | ர் | r |
| ட் | ṭ | ண் | ṇ | ல் | l |
| த் | t | ந் | n | வ் | v |
| ப் | p | ம் | m | ழ் | ḻ |
| ற் | ṟ | ன் | ṉ | ள் | ḷ |
| ஸ் | s | ஷ் | ṣ | ஹ் | h |
| | | ஜ் | j | | |

## ĀYTAM

ஃ k̲·

## பதிப்புரை

தம்பிமார் கதை என்னும் கதைப்பாடல் ஒரு சுவடிப்பதிப்பாகும். இப்பதிப்பிற்குக் கீழ்க்கண்டவர்களின் ஏடுகள் பெரிதும் உதவின.

| | | |
|---|---|---|
| 1. | 'கலைமாமணி' முத்துசுவாமிப் புலவர் | வில்லிசைக் கலைஞர், சுயம்புலிங்கபுரம். |
| 2. | சுயம்புராஜன் | வில்லிசைக் கலைஞர், ராஜாக்கமங்கலம். |

இதில் முந்தையது ஓலைச் சுவடியாகவும், பிந்தையது தாள் சுவடியாகவும் உள்ளன. மேலும், பதிப்பிற்கு முத்துசாமிப் புலவர் தம்பிமார் கதை குறித்துப் பாடிய வில்லிசை நிகழ்ச்சியின் ஒலிநாடாவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏற்கனவே இவ்வேடு குமரி மாவட்டத்திலுள்ள திரு. P. அரிகிருட்டினன் என்பவரால் பெறப்பட்டு, டாக்டர் தி. நடராசன், திரு. ப. சர்வேஸ்வரன் என்பவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பு நூலும் இந்நூலின் பதிப்பிற்குப் பெரிதும் உதவின.

தம்பிமார் கதையின் காலத்தைக் கிடைத்த சுவடிகள், ஒலிநாடா, அச்சு நூல் ஆகியன கொண்டு அறிய இயலவில்லை. 'கலைமாமணி' முத்துசுவாமிப் புலவரின் ஓலைச் சுவடியில் உள்ள காலக் குறிப்பைக் கொண்டு இவ்வேடு கி.பி. 1897-ம் ஆண்டில் படியெடுக்கப்பட்டதை உணர முடியும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அம்மாண்டிவிளை, இராஜாக்கமங்கலம், கட்டைக்காடு, சாத்தன் விளை, சாத்தன்கரை, திருநயினார்குறிச்சி, தோப்பூர், தோப்பூர் வடலிவிளை, பண்ணையூர், மணவாளக்குறிச்சி ஆகிய ஊர்களில் உள்ள முத்தாரம்மன் கோயில்களில் மார்த்தாண்ட வர்மாவால் 'வன்கொலை'யால் இறந்துட்ட தம்பிமார்கள் தெய்வமாக வழிபடப்படுகின்றனர். இத்தெய்வங்கள் 'புதுக்கூட்டத்து வ்ாதைகள்' என்றழைக்கப்படுகின்றன. பெரும்பாலும் இக்கோயிலுள்ள பூசாரிகள் இத்தெய்வ வணக்கம் தத்தம் பகுதிகளில் 150 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

தம்பிமார் கதைப்பாடலோடு தொடர்புடைய ஒட்டக்காரனுக்குச் சாலைக் குளம் நீள்கரையில் கோயில் எடுத்து வழிபாடு செய்ய மார்த்தாண்ட வர்மாவே ஆணையிட்டதாக ஒட்டன் கதையில் குறிப்புள்ளது (ப. சர்வேஸ்வரன், ஒட்டன் கதை, முன்னுரை). இக்கருத்தை உறுதிப்படுத்துவது

போல் சிதம்பர நாடார் கதையிலும் குறிப்புள்ளது (சு. தங்கத்துரை, சிதம்பர நாடார் கதை). எனவே மார்த்தாண்ட வர்மா ஆட்சியின் இறுதிக் காலமான, அதாவது ஓட்டக்காரனுக்கு வழிபாடு ஏற்பட்ட காலமான கி.பி. 1758-ஐ சார்ந்த, முந்தைய, பிந்தைய காலங்களில் தம்பிமார்களுக்கும் கோயில் ஏற்பட்ட பின்னர் தம்பிமார் குறித்த கதைப்பாடல் புனையப்பட்டிருக்கலாம்.

மேலும், இக்கதைப்பாடலில் வரும் பத்மநாபபுரம் என்னும் திருவிதாங்கூர் அரண்மனையை மன்னர் கி.பி. 1744-ல் (கி.பி. 1750 என்ற கருத்தும் உண்டு) திருவனந்தபுரம் பத்மநாப சுவாமிக்குக் காணிக்கையாக்கினார் என்று வரலாற்றில் குறிப்பு உள்ளது.

இக்கதைப் பாடலைப் பாடிய ஆசிரியர் குறித்தும் யாதொரு செய்தியையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

தம்பிமார் கதை அன்றைய அரசரான மார்த்தாண்ட வர்மாவை எதிர்த்த இரு போராளிகளான வலிய தம்பி, குஞ்சு தம்பி ஆகிய இருவரின் கதையாகும். இவ்விருவரும் மார்த்தாண்ட வர்மாவினால் கொலை செய்யப்படுகின்றனர். தம்பிமார்கள் இருவருக்கும் ஆதரவாய்ப் போராடிய எட்டு வீட்டுப் பிள்ளைமார் ஆகியோரும் மன்னனால் தண்டிக்கப்பட்டவர்கள். நாஞ்சில் பிள்ளைமார் என்றறியப்படும் ஜாதியில் மன்னனுக்கு ஆதரவாய்த் திகழ்ந்தவர்கள் இன்றளவும் 'மருமக்கள் வழி'யினர் என்றே அறியப்படுகின்றனர். இதைப் போலவே நாடார் சமூகத்தில் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் வாழும் ஒரு பகுதியினர் மன்னருக்கு ஆதரவாகத் திகழ்ந்தவர்கள் ஆவர். இவர்கள் ஒழிந்த பெரும் பகுதியினர் தம்பிமார்களுக்கு ஆதரவாய் இருந்தனர்.

தம்பிமார்களுக்கு ஆதரவாய் இருந்த இம்மக்களின் முன்பாகத் தம்பிமார்களின் மரணமும், எட்டுவீட்டுப் பிள்ளைமார் மரணமும், எட்டுவீட்டுப் பிள்ளைமார்களின் பெண்கள் குமரி மாவட்டத்திலுள்ள சில மீனவ கிராமங்களிலுள்ள மீனவர்களுக்கு ஏலத்தில் கொடுக்கப்பட்டதும் வரலாற்று உண்மைகள்.[1]

ஆகவே, தங்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட தம்பிமார்களுக்குக் கதைப்பாடல் எழுதியதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள கதைப்பாடல் ஆசிரியர் துணியாது இருந்திருப்பர்; தம் காலத்தை அவர் பதிவு செய்யாது இருந்திருக்கக் கூடும்.

1. "Forty-two of the proudest nobilies were sentenced to be hanged and their women and children were given away in slavery."

A History of Kerala (1498-1801 A.D.), p.229.

தம்பிமார்களுக்கு என தனித்த கோயில் இல்லாமல் இருப்பதும் இதற்கு ஆதாரம் சேர்க்கும். தம்பிமார்களுக்கான கோயில்கள் பல முத்தாரம்மன் கோயில்களில் மண் பூட வடிவங்களிலேயே காணப்படுகின்றன.

பாடல்கள் விருத்தம் மற்றும் நடை ஆகிய யாப்பில் அமைந்துள்ளன. இரு வகையினவும் மிகுந்த எளிமையுடன், யாவரும் வாசிக்கும் தன்மையில் உள்ளன. பாடல் களம், தம்பிமார் மற்றும் மார்த்தாண்ட வர்மாவின் வாழ்க்கை இடங்கள் அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்தன. ஆதலின் சொல்லாட்சிகள், ஆடை ஆபரணங்கள், இயற்கை சித்தரிப்புகள் ஆகியன இப்பகுதியை விளக்குவனவாக உள்ளன. பல்வேறு வட்டார வழக்குச் சொற்களும், சொற்றொடர்களும் இப்பகுதிச் சொற்களாக உள்ளன.

இப்பதிப்பு நூலில் பிரதியெடுக்கும் பொழுது பதிப்புமுறை கருதிக் கீழ்க்கண்டவைகள் கையாளப்பட்டன.

1. மிகை சீர்கள் மற்றும் பதிப்பாசிரியரால் இடப்பட்ட எழுத்துக்கள் ஆகியன வளைவுக் குறிகளில் காட்டப்பட்டுள்ளன.

2. தமிழ் மொழியின் ஒலி கட்டமைப்புக்கு உட்பட்டு வராத, பிழையான வடிவங்கள் என்றறியப்பட்டவைகள் சரியான வடிவங்களாக மாற்றப்பட்டன. பிழையான வடிவங்கள் சுவடிச் சொற்கள் என்கிற தலைப்பில் பாடல்களின் கீழே தரப்பட்டுள்ளன.

3. செய்யுட்கள் யாப்பமைதிக்கு ஏற்ப சீர் பிரிக்கப்பட்டுள்ளன.

4. வல்லொற்று மிகும் இடங்கள், மிகா இடங்கள் என்பன கண்டறியப்பட்டு அதற்கேற்ப மாற்றங்கள் செய்யப்பட்டன.

5. கதையோட்டத்தைப் புரிந்து கொள்வதற்கு வசதியாகக் கதைப்பாடல் முழுமைக்கும் போதுமான இடங்களில் துணைத் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. இவை பதிப்பாசிரியரால் தரப்பட்டவை என்பது தெரிய அத்தலைப்புகள் தடித்த எழுத்துகளில் அமைக்கப்பெற்றன.

6. ந-ன-ண; ர-ற; ழ-ள-ல முதலிய எழுத்துக்கள் கதைப்பாடலில் தம்முள் மயங்கி வருவதைக் கண்டறிந்து அவை உரிய முறையில் திருத்தம் செய்யப்பட்டன.

7. விளக்கமான குறிப்புரை ஒன்று ஒவ்வொரு பாடல்களுக்கும் தரப்பட்டுள்ளது. இது வரலாற்று விளக்கங்களையும், பொருள் விளக்கங்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

8. தி. நடராசன் மற்றும் ப. சர்வேஸ்வரன் ஆகிய இருவராலும் பதிப்பிக்கப்பட்ட அச்சு நூலிலுள்ள சில சிறந்த பாடங்கள் நூலில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

9. நூல் பகுதி (Text) கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது.

9.1. தமிழ்ப்பாடல் பகுதி

9.2. அதற்கிணையான ஒலி பெயர்ப்பு வடிவம் (transliteration)

9.3. தமிழ்ப்பாடலுக்கான ஆங்கில மொழிபெயர்ப்பு

10. நூல் பகுதிக்கு முன்பாகப் பதிப்புரை, Editor's Note, ஆய்வுரை, Preface ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

11. நூல் இறுதிக்குப் பிறகுப் பின்னிணைப்புப் பகுதி தரப்பட்டுள்ளது. இதில்,

11.1. துணைநூற்பட்டியல்

11.2. சொல்லகராதி

11.3. ஊர்ச் சொல்லகராதி

11.4. வட்டாரவழக்குச் சொல்லகராதி

11.5. நூலுக்குப் பயன்படும் பிற ஆவணங்கள் ஆகியன

பெரும்பாலும் இவ்வமைப்பிலேயே நிறுவனத்தால் நாட்டார் வழக்காற்றுப் பாடல்கள் பல பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் கீழ்க்கண்டவை அமைகின்றன.

1. வாய்மொழியாக வழக்காற்றில் உள்ள கதைப்பாடல்கள்

1.1. அண்ணன்மார் கதை 1.2. பூலித்தேவன் சிந்து 1.3. சந்தனத்தேவன் கதை

2. வில்லிசையில் நிகழ்த்தப்பெறுகின்ற, ஓலைச்சுவடியிலிருந்து பெறப்பட்ட கதைப்பாடல்கள்

2.1. உச்சினிமாகாளி கதை

2.2. குறுக்குளாஞ்சி கதை

2.3. சின்னத்தம்பி கதை

2.5. பெண்ணரசியர் கதை

2.6. பெருமாள்சுவாமி கதை

2.7. வெங்கலராஜன் கதை

2.4. பலவேசஞ் சேர்வைக்காரன் கதை 2.8. இராமர் கதை.

3. யட்சகான நாடக வடிவில் காணப்படும் கதைப்பாடல்கள்

3.1. சாரங்கதாரன் யட்சகானம் 3.3. நீலி யட்சகானம்

3.2. தேரூர்ந்தசோழன் யட்சகானம்

4. நாடக வடிவிலான கதைப்பாடல்

4.1. சாகுந்தலை நாடகம்

5. சமண சமயக் கோட்பாட்டைக் கூறும் கதைப்பாடல்

5.1. வராங்கன் கதை

6. அம்மானை வகைக் கதைப்பாடல்கள்

6.1. அர்ச். மரி கருதம்மாள் அம்மானை 6.3. வைகுண்ட அம்மானை
6.2. ஆமையர் அம்மானை

நாட்டார் இலக்கியங்களைத் தொடர்ந்து சேகரிப்பதையும், பாதுகாப்பு செய்வதையும் முக்கிய நோக்கமாகக் கொண்ட இந்நிறுவனம் பல கதைப் பாடல்களைச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளது. தற்பொழுது வெளிவரும் தம்பிமார் கதை என்னும் இக்கதைப்பாடல் வில்லிசைக் கதைப்பாடல் வகையில் ஒன்பதாவது நூலாக வெளிவருகிறது.

நன்றியுரை

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் வரலாற்றில் பல பகுதிகள் இன்றைய தமிழக வரலாற்றை அறிய பெரிதும் உதவுவன. அவ்வகையில் தம்பிமார் கதை, ஓட்டன் கதை, மாடம்பிமார் கதை, திவான் வெற்றி, இரவிக்குட்டிப் பிள்ளை போர் போன்றன திருவிதாங்கூர் சமஸ்தான கதைப்பாடல்களில் முக்கிய இடம்பெறுகின்றன.

இச்சமஸ்தான கதைகளைத் தொடர்ந்து ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட வேண்டும் என்றும் அதற்கு நீங்கள் இருவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் கூறியதோடு, தேவையான அனைத்து அதவிகளையும் செய்தவர் ஆசியவியல் நிறுவன இயக்குநர் முனைவர் ஜி. ஜான் சாமுவேல் அவர்கள். அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடப்பாடு உடையோம்.

நூலின் அமைப்பு மற்றும் பாடலின் யாப்பு அமைதி ஆகியவற்றில் பெரிதும் கவனம் செலுத்தி நூல் சிறக்கத் துணை நின்றவர் நிறுவனச்

சுவடித்தலைவர் முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்களுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவோம்.

நூல் வடிவம் பெற பல நிலைகளில் பலர் துணை புரிந்தனர். ஆய்வுரைக்கு அரிய வரலாற்று செய்திகளைத் தந்தும் வழிகாட்டியும் உதவியர் முனைவர் தே. வேலப்பன் அவர்கள். தம்பிமார் கதையின் வில்லிசை நிகழ்களை நேரடியாகச் சென்று கேட்கவும், தரவுகள் சேகரிக்கவும் உதவியவர்கள் முனைவர். எஸ். ஸ்ரீ குமார் மற்றும் முனைவர் ந. ஜெகதீசன் அவர்கள்.

ஆங்கில மொழிபெயர்ப்பு சிறக்க உதவியவர் பேரா. என். எஸ். தரன் அவர்கள் மற்றும் பேரா. கா. மோகன்ராம், வீ. கணேசன் அவர்கள்.

தமிழ் மெய்ப்பு திருத்துவதிலும் சொல்லடைவு முதலியன தயார் செய்வதிலும் பேருதவிகள் புரிந்தவர்கள் திரு. இராதா ஜெயலட்சுமி, கு. செல்வ லட்சுமி, கோ. உத்திராடம், யா. அந்தோணி சாமி, பி. பன்னீர் செல்வம் மற்றும் இ. பகவதி ஆகியோர்.

அழகிய முறையில் கணனியில் அச்சு கோர்த்தும் விரைவாக நூல் வெளிவர துணைநின்றவரும் திருமதி த.செ. சாந்தம் அவர்கள், மற்றும் திரு. இரா. ரஸ்கின் லேவி ஆகியோர்.

அழகிய ஓவியம் வரைந்து அளித்தவர் அ.செ. நடராஜன், அழகாக அச்சிட்டோர் மாணவர் மறுதோன்றி அச்சகத்தார்.

ஆசியவியல் நிறுவனத்தில் நடைபெறும் சங்க இலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் இந்நூல் வெளியிடப்படும் இத்தருணத்தில் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அ.கா. பெருமாள்
கி. ஜெய குமார்

## தம்பிமார் கோயில்கள் - ஒரு சிறு குறிப்பு

### கோயில் அமைவிடங்கள்

வலிய தம்பி, குஞ்சு தம்பி ஆகிய இரு வரலாற்று வீரர்களுக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் துணை தெய்வமாக வழிபடப்படும் சிறு கோயில்கள் உள்ளன. அம்மாண்டி விளை, ராஜாக்கமங்கலம், கட்டைக்காடு, சாத்தன் விளை, சாத்தாங்கரை, திருநயினார்குறிச்சி, தோப்பூர், தோப்பூர்வடலி விளை, பண்ணையூர், மணவாளக்குறிச்சி, மாவிளை, முருங்க விளை, வெள்ளமடி ஆகிய ஊர்கள் குறிப்பிடத்தக்கன.

### கோயில் அமைப்பு

இவ்வூர்களிலுள்ள முத்தாரம்மன் கோயில் அனைத்திலும் தம்பிமார்களுக்குச் செவ்வக வடிவிலான மண் உருவங்கள் (பூடங்கள்) உள்ளன. இவ் உருவங்கள் பொதுவாக 40 செ.மீ. உயரத்திலிருந்து 120 செ.மீ. உயரம் வரையிலும் அமைந்துள்ளன. இவ் உருவங்கள் எல்லா இடங்களிலுமுள்ள கோயில்களில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. இவ்வூர்களிலுள்ள முத்தாரம்மன் கோயில்களில் சாத்தன்கோயில் ஊர் தவிர்த்த பிற இடங்களில் வடக்குப் பார்த்து அமையப் பெற்றுள்ளன. இவ்வூர் கோயில் மட்டும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

### பூஜை நாட்கள் மற்றும் பூஜை முறைகள்

தம்பிமாருக்கான மண் சுதைகள் அமையப் பெற்ற முத்தாரம்மன் கோயில்களில் தினவழிபாட்டுக் கோயில்கள் சிலவே உள்ளன. எஞ்சியனவற்றிற்கு வாரத்தின் செவ்வாய்கிழமை, கார்த்திகை மாதத்தின் அனைத்து நாட்கள், மற்றும் பக்தர்களால் நேர்ச்சை செலுத்தும் நாட்கள் ஆகியவற்றில் மட்டும் பூஜைகள் நடக்கின்றன. முத்தாரம்மனுக்குப் பூஜைகள் நடக்கும் அனைத்து நாட்களிலும் புதுக் கூட்டத்து வாதைகள் என்று பெயர் சூட்டப்பெற்ற தம்பிமார்களுக்கும் பூஜைகள் நடக்கின்றன. பொதுவாக இவ்வனைத்துக் கோயில்களிலும் சைவ உணவே படைக்கப் படுகின்றது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர்வரை ஒரு சில முத்தாரம்மன் கோயில்களில் ஆடு, கோழி முதலியன பலியாகக் கொடுக்கப்பட்டிருந்தன. அக்காலங்களில் முதன்மை தெய்வமான முத்தாரம்மனோடு புதுக்கூட்டத்து வாதைகளுக்கும் சேர்த்துப் பலியிடும் வழக்கம் இருந்தது.

### தம்பிமார் உருவங்கள்

தம்பிமார்களின் நினைவாக ஏற்படுத்தப்பட்ட மண் சுதைகளின் முன்பாக, விழாக் காலங்களில் வாள், சூலம், கத்தி, வல்லயம், கருங்காலிக் கம்பு ஆகிய ஆயுதங்கள் வைக்கப்பட்டு பூஜை நடத்தப்படுகிறது. இவ்விதம் வைக்கப்படும் ஆயுதங்களில் கருங்காலிக் கம்பு முக்கியமானதாகத் திகழ்கிறது. இது இரண்டு மீட்டர் நீளமுடையது.

### இருவகை விழா முறைகள்

பொருளாதார வசதியைப் பொறுத்து அம்மாண்டி விளை தொடங்கித் தம்பிமார் உருவங்கள் உள்ள கோயில்களில் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. அதிக பண வசதி உள்ளபோது இவ்விழாக்கள் மூன்று நாட்களுக்கும் இல்லாத பொழுது 'சிறப்பு வழிபாடு' என்கிற நிலையில் ஒரு நாளுக்குமாக நடத்தப்படுகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் கொடை விழா திங்கள்கிழமை காலையில் ஆரம்பித்து புதன்கிழமை மாலையில் முடிவடையும். ஒரு நாள் நடைபெறும் கொடை விழா செவ்வாய்கிழமை காலையில் ஆரம்பித்து புதன்கிழமை காலையில் முடிவடைகிறது.

மூன்று நாட்களும் கொடை விழா நடைபெறும் காலங்களில் மட்டுமே தம்பிமார் குறித்த வில்லிசை முழுமையாகப் பாடப்படுகிறது. இக்கதைப்பாடல், முத்தாரம்மன் கதை, மற்றும் பிற ஒரு சில கதைப்பாடல்கள் வில்லிசையில் இம்மூன்று நாட்களிலும் நிகழ்த்தப்படும். இக்கதைப்பாடல்கள் பொதுவாகத் திங்கள்கிழமை மாலையிலிருந்து செவ்வாய்கிழமை இரவு வரையிலும் தொடர்ந்து நிகழ்த்தப்படும். பொதுவாகத் தம்பிமார் கதை நடு இரவில் அதாவது இரண்டு மணி முதல் மூன்று மணி வரை நிகழ்த்தப்பெறும். முத்தாரம்மன் முதன்மை தெய்வமாக உள்ள கோயில்களில் தம்பிமார் கதை முழுமையும் படிக்கும் வழக்கம் இல்லை. எனினும் அம்மாண்டி விளை, சாத்தா விளை, தோட்டா விளை, மா விளை, துவண்டவிட்டை, பண்ணையூர் ஆகிய ஊர்களில் தம்பிமார் கதை முழுவதுமாகப் படிக்கப் பெறுகின்றன.

### சாமியாடும் முறைகள்

தம்பிமார் கதை முழுவதும் பாடப்பெறும் கோயில்கள் அனைத்திலும், அவர்களின் கதை படிக்கப்பெறும் பொழுது தம்பிமார்களின் அருள்வந்து இருவர் சாமியாடுவர். இவர்கள் இருவரையும் வலிய தம்பி, குஞ்சு தம்பி ஆகியவர்களாகப் பாவித்து

மக்கள் அருள் வார்த்தை கேட்கின்றனர். பொதுவாகக் கோயிலில் சாமியாடுவோர் பரம்பரையாக வருகின்றவர்களாக இருக்க வேண்டும். மேலும், சாமியாடுவோர், கோயிலில் வந்து வழிபடுவதோடு பூஜை செய்யும் உரிமை உடையோர் அனைவரும் கோயிலுக்கு வரி கொடுப்பவர்கள்ாக இருக்க வேண்டும் என்கிற நியதி உள்ளது.

தம்பிமார்களின் அருள் வந்து ஆடுவோர், வில்லிசையில் தம்பிமார்களின் கதையைப் பாடும் வில்லிசைக் கலைஞர், பார்வையாளர்கள் ஆகிய மூவருக்கும் இடையே சாமியாட்டம் நிகழும். பொழுது ஓர் ஒத்திசைவு இருக்கும் வண்ணம் தம்பிமார் கதை நிகழ்த்தப் பெறுகிறது. சாமியாடிகளின் ஆட்டத்தினுடைய உச்சகட்டத்தில் வில்லி சைக் கலைஞர் பார்வையாளர்களையும் ஒருங்கிணைக்கும் வண்ணம் கதையைக் கூறுகிறார். தம்பிமார் கதையில் வரும் வலிய தம்பியும், குஞ்சு தம்பியும் போர்க்களப் பயிற்சியில் ஈடுபடும் கதைப்பகுதி பாடப்படும் பொழுது சாமியாடிகள் மண்பீடங்களின் முன்னால் நின்று கொண்டு நீண்ட வாள் ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஆட ஆரம்பிப்பர்.

பிற கதைப்பகுதிகள் படிக்கப்படும் நேரத்தில் கீழே அமர்ந்து இருக்கும் சாமியாடிகள் தம்பிமார்களுக்கும் மார்த்தாண்ட வர்மாவிற்கும் இடையே நடைபெறும் போரைப்பற்றி பாடும்பொழுது மீண்டும் ஆக்ரோஷமாக ஆட ஆரம்பிப்பர். இக்கதைப் பகுதியின் பொழுது சாமியாடிகள் கையில் வாளைக் கொண்டிருப்பார். இவ்வாளினைச் சுழற்றிக் காட்டியும், சில வேளைகளில் தலையில் அடித்தும் ஆவேசத்துடன் ஆடுவர். சாமியாடிகள் வாளைத் தலையில் அடித்து ஆடும் பொழுது, அவர்களின் வேகத்தை மட்டுப்படுத்த கோயிலில் உள்ள முக்கிய பிரமுகர்கள் சாமியாடிகளின் கையைப் பிடித்துக் கொள்ளுவர். இவ்விதம் தம்பிமார்கள் ஆக்ரோஷமாக ஆடும் இரவு இரண்டு மணி அளவில் தம்பிமார்கள் உறைந்திருக்கும் மண் பூடங்களுக்குப் பூஜைகள் நடக்கின்றன.

### ஒரு நாள் விழாவில் தம்பிமார் கதை படிக்கப்படும் முறை

ஒரு நாள் மட்டுமே, அதாவது செவ்வாய்கிழமை காலையில் தொடங்கி மறுநாள் முடியும் கொடை விழாக்களில் முத்தாரம்மன் கதை மற்றும் அம்மனோடு தொடர்புடைய கதைகள் முதன்மைப்படுத்திப் பாடப்படுகின்றன. தம்பிமார் கதை இவ்விழாவில் அதிகபட்சமாக நாற்பது நிமிடங்களே பாடப்படுகின்றன. வில்லிசைக் கலைஞர் பெரும்பாலும் தம்பிமார் கதையிலிருந்து நூறிலிருந்து நூற்றியம்பது வரிகள் வரையிலுமே அதிகபட்சமாகப் பாடுகிறார்.

மேலும், ஒரு நாள் மட்டுமே கொடை விழா நடைபெறும் கோயில்களில் தம்பிமார்களுக்கெனத் தனித்த நிலையில் சாமியாடிகள் எவரும் இல்லை. வில்லிசைக் கலைஞர் தம்பிமார்களுக்கும், மார்த்தாண்ட வர்மாவிற்கும் இடையே நடைபெறும் போர்பற்றிப் பாடும் பொழுதும், வன் கொலையால் தம்பிமார்கள் இறந்தது குறித்துப் பாடும்பொழுதும் முத்தாரம்மன் என்னும் முக்கிய தெய்வத்திற்காக ஆடுவோர் தம்பிமாரின் நினைவாக வைக்கப்பட்ட மண் பீடங்களின் (பூடம்) முன்னரும் நின்று சிறிது ஆடிக் கொள்கின்றனர்.

### தம்பிமாரை வழிபடுவோர்

தம்பிமார்களுக்கு என அமைந்த கோயில்களில் பெரும்பாலானவை நாடார் சமுகத்திற்கு உரிமை உடையனவாக உள்ளன. ஒரு சில கோயில்கள் மக்கள் வழியைச் சார்ந்த கிருஷ்ணவகை குடும்பத்தாருடன் தொடர்புடையன. மக்கள் பொதுவாகத் தம்பிமார் கதைகளை முழுமையாகக் கேட்கவே விரும்புகின்றனர். ஆகையால் மூன்று நாட்கள் கொடை விழா நடைபெறும் கோயில்களுக்கே தம்பிமார் கதை கேட்க மக்கள் அதிக அளவில் வருகின்றனர்.

### தம்பிமார் கதையின் இசை வடிவம்

தம்பிமார் கதை வில்லிசைக் கலைஞர்களால் பொதுவாக மூன்று வகை தாள, இசை வேறுபாடுகள் கொண்டு பெரும்பாலும் பாடப்படுகின்றன. இத்தாள, இசை வேறுபாடுகள் கதையின் போக்கிற்கேற்ப மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளப்படுகின்றன.

1) முதல்வகைத் தாளமானது மன்னர் . இராம வர்மா சுசீந்திரம் ஊருக்குத் திருவிழா காண வருதல், தம்பிமாருக்கும் மார்த்தாண்ட வர்மாவிற்கும் இடையே போர் மூளுதல் ஆகிய கதைப்பகுதிக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதைத் திரிவிடைத் தாளம் என வில்லிசைக் கலைஞர்கள் அழைக்கின்றனர். இக்கதையைப் பாடும் பொழுது,

"தானை தந்தோம் தானே தந்தம்
தனைன்னே தானே தந்தம்
தானை தந்தோம் தானே தந்தம்
தனைன்னே தானே தந்தம்"

என்கிற ஓசை மெட்டை அமைத்துக் கொள்கின்றனர்.

2) இரண்டாம் வகையின தாலாட்டு மெட்டில் அமைவது.

இம்மெட்டு அபிராமி தன் குழந்தைகளைத் தாலாட்டும் பொழுது அமைக்கப்படுகிறது.

3) மூன்றாம் வகையின தம்பிமார் போர்க் கலையைப் பயிலும் பொழுதும், தம்பிமார்களுக்கும் மார்த்தாண்ட வர்மா மன்னனுக்கும் இடையே போர் நடைபெறும் பொழுது பாடப்படுவதாகும். இக்கதைப் பகுதிகளைப் பாடும்பொழுது,

"தன்னே தனதன்னம் தானே தனதன்னன்னம்
தன்னே தனதன்னம் தானே தனதன்னன்னம்"

என்கிற மெட்டு பயன்படுத்தப்படுகிறது.

***நிகழ்த்து கலையில் தம்பிமார் கதையின் தனித்த நிலை***

முத்தாரம்மன் கதைப்பாடல் முதலியவற்றைப் பாடும் பொழுது பல வில்லிசைக் கலைஞர்கள் பாடல்களுக்குச் சினிமா மெட்டைக் கொடுத்துப் பாடுகின்றனர். ஆனால் தம்பிமார் கதைப்பாடலைப் பொறுத்தவரையில் கதைப்பாடலை வில்லிசைப் பாடுவோர் சினிமா மெட்டிற்கு உட்படுத்துவதில்லை. தம்பிமார் கதையைப் பாடுவோரில் பெரும்பாலோரும் கதை எழுதப்பட்ட தாள் சுவடிகளைப் பார்த்தே பாடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பிமார் கதைப்பாடலைச் சிறப்பாகப் பாடுவதில் குமரி மாவட்டத்தில் பல வில்லிசைக் கலைஞர்கள் சிறப்பாகத் திகழ்கின்றனர். அவர்களின் பட்டியல் ஒன்று பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

## Editor's Note

The ballad *Tampimār Katai* is published from manuscripts. The following are sought for consultation.

| | |
|---|---|
| 1."Kalaimāmaṇi" Muttucāmi Pulavar | *Villu pāṭṭu* artiste, Cuyampuliṅkapuram |
| 2. Cuyampurājaṉ | *Villu pāṭṭu* artiste, Rājākkamaṅkalam. |

The former is a palm leaf manuscript and the latter is paper manuscript. The recorded performance of Muttucāmi Pulavar, on tape was also included in the research. This work was received by Mr. P. Arikiruṭiṉaṉ of the Kaṉṉiyākumari district and was published by Dr. T. Natarajan and Dr. P. Sarvesvaran. This publication was also of much help.

From the available manuscripts, published work and the tape, it is not possible to date the *Tampimār Kaṭai* . Muttucāmi Pulavar mentions the time when it was copied. From his note we come to the conclusion that the copy was made in 1897 A.D.

In the Ammaṉ temples at, Ammāṇṭi Viḷai, Rājākkamaṅkalam, Kaṭṭaikkāṭu, Cāttaṉ Viḷai, Cāttaṉ Karai, Tirunayinārkuṟicci, Tōppūr, Tōppūrvāṭali Viḷai, Paṇṇaiyūr, Maṉavāḷakkuṟicci, the Tampis executed by Mārttāṇṭa Varma are worshipped as deities. These deities are called 'Putukkūṭṭattu Vātaikaḷ'. The priests in these temples claim that the worshipping of these deities is more than 150 years old.

In *Ōttaṉ Katai* there is a mention about Mārttāṇṭa Varma ordering the construction of a temple for Ōṭṭakāraṉ, who is associated with the *Tampimār Katai*. This gets confirmed in *Citampara Nāṭār Katai*. Hence, it may be safely concluded that the 'Tampimār temples might have been constructed during the last phase of Mārttāṇṭa Varma's rule, that is, the period around 1758 AD., when Ōṭṭakāraṉ temples were constructed. It may be somewhere perhaps the ballads came into existence after the temples were built.

In the ballad there is a mention about the Patmanāpapuram palace. There is a historical evidence that the palace belonging to the king of Travancore was gifted to the Patmanāpa Cuvāmi of Thiruvaṉantapuram in 1744 A.D. (1750 A.D. is also considered).

Nothing is known about the author of this work. *Tampimār Katai* revolves around the fortunes of the rebels Valiya Tampi and Kuñcu Tampi who opposed the rule of Mārttāṇṭa Varma. These two rebels were executed by Mārttāṇṭa Varma. The *Eṭṭu vīṭṭu piḷḷaimār* who supported the cause and fought with the Tampis were also punished by the king. People belonging to the caste, Nāñcil piḷḷaimār are even today known as belonging to the *marumakkaḷ* clan. Similarly, a portion of the *Nāṭār* caste people living in the Akastīsvaram taluk of the Kaṉṉiyākumari district were in support of the king. The rest, forming the majority, supported the rebel brothers.

It is a historical truth that the executions of the Tampis, the *Eṭṭu vīṭṭu Piḷḷaimār*, and the public auctioning of the women folk of the *Eṭṭu vīṭṭu Piḷḷaimār* in the presence of the people who had been supporting the cause of the Tampis. Perhaps the author of the ballad could have been afraid of acknowledging his authorship. That may be the reason why he might have omitted mentioning the date of the composition. The fact that there are no separate temples for the Tampis, adds strength to the above statement. In the Muttārammaṉ temples, they are worshipped as formless idols.

The songs are rendered in the poetical genres, *viruttam* and *naṭai*. Both are very simple enabling easy reading. The setting of the ballad belongs is the Travancore state, and hence the usage of words, dress, jewels and the descriptions of nature portray this palace and period. Many regional and dialectical words, phrases and idioms, used in the ballad belong to this region.

The following changes were made in this publication.

1) The extra *cīr* (metrical foot) and the extra letters introduced by the former publisher are shown within the brackets.

(eg.) *Kārperum niṟattōṉ marukaṉ (Poṉṉeṉum) Kaṇapati kāppu tāṉē*

2) The system of sound which do not agree with the Tamil phonemic pattern , Errors in diction are emmded and given at the bottom of the songs in the name of *cuvaṭi coṟkaḷ*-i.e. words from the manuscript).

3) The songs are organized according to the prosody.

4) The *valloṟṟu* ( hard consonants) are placed according to the grammar.

5) To facilitate the easy understanding of the flow of the story, sub-

headings are given wherever the necessity is felt. To show that these were introduced by the editor , these words are made bold.

6) n-ṉ-ṇ; r-ṟ ; l-ḷ-ḻ sound changes are corrected.

7) For each song a detailed explanatory note is given. They contain historical references as well as meaning.

8) Suitable portions from the book published by T.Natarajan and P.Sarvesvaran are included in the text.

9) The text is organised as follows:

9.1) portions of Tamil songs.
9.2) comparable transliteration
9.3) the English translation.

10) The book starts with the Editor's note (Tamil and English) , Translator's note and Preface (Tamil and English).

11) The appendix is given at the end .The following are found in the appendix:

Bibliography, Word index, Index of the names of places, Index of the dialectical words, Documents used for the book

Most of the books on folk lore published by the Institute follow the same pattern. A list of such books are given below.

1) Ballads in oral poetry

1.1) The Elder Brothers story
1.2) The First Freedom Fighter
1.3) The Bundit Brothers

2) Ballads in Bow songs

2.1) The Wandering Voice (three ballads)

2.2) The Dateless Muse

2.3) The Unsung Melodies

2.4) The Valorous Virgins

2.5) The Divine Pilgrimage

2.6) The Epic Eternal

3) Ballads in *Yaṭcakāṉams*

   3.1) A Tale of Betrayal

   3.2) Where Justice Gems

   3.3) A Tale of Nemesis

4) Ballad in Drama form

   4.1) A Tale of Romance

5) Ballad in *Camaṇa* religon

   5.1) Destiny and Divinity

6) Ballads in *ammāṉai* form

   6.1) The Defender of the Faith

   6.2) The Vows Fulfilled

   6.2) Vaikuṇṭa Ammāṉai

The Institute of Asian Studies has devoted itself in collecting and saving folklore. It has published many ballads. The present book, *Tampimār Katai* belonging to the *villu pāṭṭu* genre, is the ninth book in the series.

**Acknowledgement**

A major portions in the history of Travancore and the ballads like *Tampimār katat, Oṭṭaṉ katai, Māṭampimār Katai, Tivāṉ veṟṟi, Iravikkuṭṭi piḷḷai pōr* are sought for their significance.

We are very grateful to Dr. **G. John Samuel**, Director, Institute of Asian Studies, for entrusting the job of editing this folk ballad and for his moral support and encouragement.

We thank Dr. **P. Subramaniam**, Head of the Dept. of manuscriptology who paid a special in the structuring of the original text and correcting the original text and the preface.

We thank Dr. T.Velappan who has guided and helped with the historical references; Dr. S. Sree kumar, Dr. T.V. Jagatheesan, Kalaimāmaṇi Muttuswami Pulavar for helping us in field study and in collecting bow-songs; Prof. N.S. Dharan,

Prof.K. Mohan Ram, for the English rendering of this ballad and Dr.V. Ganesan for going through English proof; Miss. Radha Jayalaskhmi, G. Selva lakshmi, G. Uttiradam, Y. Anthonisamy, K. Panneerselvam, E. Bhagavathi for their kind help in proof reading and preparing index.

Mrs. T.C. Santham, and R. Ruskin Levy the DTP operators were instrumental in composing this work and the art work was done by Mr.A.S. Natarajan and the neat printing of this book was done by Students Xerox Offset Printers. We express our sincere thanks to them.

On this special occasion when the chief minister Dr. Kalaiñar **M. Karunanidhi** inaugurates the scheme of translating the *cankam* literature in other Dravidian languages at Institute of Asian Studies, and releases the publications of the Institute, we take this opportunity to thank everyone who have put their hard labour to bring out this ballad into a neat printed edition.

**A.K. Perumal**

**K. Jaya Kumar**

# A note on Tampimār's Temple

## The places where the temples are situated

In Kaṉṉiyākumari district, there are small temples for Valiya Tampi and Kuñcu Tampi where they are worshipped as secondary deities. Ammāṇṭi Viḷai, Rājakkamaṅkalam, Kaṭṭaikkāṭu, Cāttaṉ Viḷai, Cattāṅkarai, Tiruniyiṉārkuṟicci, Tōppūr vaṭali viḷai, Paṇṇaiyūr, Maṉavāḷakkuṟicci, Mā viḷai, Muruṅka viḷai, Veḷḷamaṭi are places where such temples exist.

Structure of the Temples in all the Muttārammaṉ temples in these places, the idols of the Tampis are in rectangular shapes. These range from 40 cm to 120cm tall. In all the temples they face the East while the primary deity faces North. In Cāttāṉ Viḷai alone both the prime deity and these idols face East.

## The days and the manner in which the *pūjas* are held

Daily *pūjas* are performed in only a few temples of Muttārammaṉ where the idols of the Tampis exist. In the rest of the temples, the *pūjas* are held on Tuesdays, on all days of the Tamil month *kārttikai* and the days on which the devotees fulfil their vows made to the deities. Whenever *pūjas* are held for Muttārammaṉ, pujas are held also for theTampimārs called Putu kūṭṭattuVātaikaḷ. Normally in all these temples they sacrifice only vegetarian food stuff. Till about thirty years ago, in Muttārammaṉ temples ,fowls and goats were sacrificed. During those times , they used to sacrifice animals not only for Muttārammaṉ but also for Puttu kūṭṭattu Vātaikaḷ.

## The Images of the Tampiār

During festivals, in front of the images raised in the memory of the Tampiārs, they used to keep in position, swords, tridents, knives, *vallayam*, a stick from a kind of ebony tree and perform *pūjas*. Among these, the stick is considered to be of importance. It is two meters long.

## Two types of festivals

Depending on the availability of funds , in the temples wherever there are the Tampimār idols, the festivals are held . When they have excessive funds the festival lasts for three days and when they do not have enough money, it is held for only one day as a sort of special worship. The three day festival starts on Monday morning and ends in the evening, on Wednesday. The one day festival begins on Tuesday morning and end in the morning, on Wednesday. Only during the three day festival, there is *Villupāṭṭu*. This ballad, *Muttārammaṉ*

*Katai* and some other ballads are performed during these three days. Normally, such a performance, starting from the evening of Monday goes on continuously till Tuesday night . Mostly, the *Tampimār Katai* bow song is performed between 2.00 a.m. and3.00 a.m. In temples where Muttārammaṉ is the primary deity, recitation of the *Tampimār katai* is not fully performed. But, in Ammāṇṭi Viḷai, Cātta Viḷai, Tōṭṭa viḷai, Mā viḷai, Tuvaṇṭaviṭṭai and Paṇṇaiyūr the *Tampimār Katai* is performed fully.

## The various methods of *Cāmiyāṭal*

(giving oracular predictions while possessed by a spirit)

In all the temples where the *Tampimār Katai* is performed two people would start *cāmiyāṭal.* They are supposed to be possessed by the Tampis. Considering those two people as Valiya Tampi and Kuñcu Tampi, people ask for oracular predictions from them. Most of the persons who engage in *cāmiyāṭal.* get to do it hereditarily. They go to the temple to offer their prayers to the deity. There is a rule that those who perform pujas in the temples pay the temple tax.

The *Tampimār Katai* is performed in such a way that there exists a common harmony between those who perform the *Cāmiyāṭal,* the artiste who performs the *Tampimār Katai* and the onlookers. During the climax of the possessed dancing of the *Cāmiyāṭi* (the dancers), the bow-song artiste narrates the story in such a way that the audience get completely absorbed in the story. During the narration of the battle exercises of Valiya Tampi and Kuñcu Tampi in the story, the dancers would dance with swords in their hands, in front of the idols of the Tampis.

When the other portions of the story is being narrated the *Cāmiyāṭikaḷ* would be seated down. When the story moves on to the battle between the Tampis and Mārttāṇṭa Varma, the dancers would start dancing, as if possessed. During this performance the dancers would hold the swords in their hands. Swinging the swords round their heads sometimes causes hitting of their heads with the swords. When the dancers hit their heads with the swords the important persons of the village would hold their hands to control their speed. As the dance is performed, the *pūjas* for the sand idols representing the Tampis are held at about 2.00 a.m. in the morning.

## The narration of the *Tampimār Katai* in one day

During the one day festivals, the songs about Muttārammaṉ and related stories are sung. The *Tampimār Katai* is sung for a maximum of 40 minutes, when

the bow-song artiste renders a maximum of 100 to 120 lines. In temples where the festival is celebrated for only one day, there are no special dancers for the Tampis. When the bow-song artiste sings about the battle between the Tampis and Mārttāṇṭa Varma, and when he sings about the execution of the Tampis, the dancers who normally perform before Muttārammaṉ, dance also before the idols of the Tampis for a little while.

## The worshippers of Tampimār

Most of the temples erected for the Tampis belong to the *Nāṭār* community. Some temples belong to the *Kriṣṇaṉ vakai* families. People normally want to listen to the *Tampimār Katai* in full. Hence, people throng temples where the complete narration of the ballad is held in three day festivals.

## The musical form of the *Tampimār Katai*

The bow-song artistes perform the *Katai* using three types of beats (*tāḷam*) and rhythm variations.

1) The first one is called *tiriviṭai tāḷam*. It is used during the narration of king Rāma Varma coming to Cucīntiram to witness the festival and the starting of the war between the Tampis and Mārttāṇṭa Varma. It is rendered as follows:

*tāṉana tantōm tāṉē tantam*
*taṉṉaṉṉē tāṉē tantam*
*tāṉaṉa tantōm tāṉē tantam*
*taṉṉaṉṉē tāṉē tantam*

2) The second portion follows the rhythm of *tālāṭṭu* (lullaby). This rhythm is set while Apirāmi sings lullabies to her children.

3) The third type is used when the Tampis learn martial arts and when they battle with Mārttāṇṭa Varma. The rhythm goes like this:

*taṉṉē taṉataṉṉam tāṉē taṉataṉṉaṉṉam*

## The specialty of *Tampimār Katai* in the performing arts

Sometimes the *Villu pāṭṭu* artistes use popular film tunes when they sing the songs of Muttārammaṉ. But they never render *Tampimār Katai* in such tunes. It is to be noted that when they sing these songs, they always follow written scripts. In singing the Tampimar songs, the *Villu pāṭṭu* artistes of Kaṉṉiyākumari district are well known experts. Their names are given in the appendix.

## TRANSLATOR'S NOTE

The Institute of Asian Studies, Chennai has assigned, as part of its publishing mission, the task of translating this 'ballad of growth' - *Tampimār katai* to the translator. It is essentially a folk-poem, popular among the bow-songsters of Kanniyākumari District, the southernmost part of India. Bow-songs are generally recited before rural masses gathered during festival times.

The prime features of the Balled are simplicity and musicality. There is mystery, magic and majestic play of supernatural elements. Like a train that moves on the same track, the Ballad with twists and turns moves on the twin rails of simplicity and musicality. Music, ie. verbal music, is the undercurrent of all the dramatic events and vibrant dialogues of the ballad. The translator, keeping in mind the two essential qualities to the translated text of the Ballad. Regarding other features, the method adopted is not literal but something that comes close to transcreation.

A poem is essentially an expression in words of feelings. The Ballad at hand is no exception. The translator's main task has been to transplant the sould of the ballad and allow it to grow in the alien language. Utmost care has been taken to preserve the spirit of the poem.

As the translator is familiar with the social, political, cultural and linguistic background of the material presented in the Ballad, he has expanded a few points here and there for the sake of clarity. They are not deviations but essential additions intended for the benefit of the readers who are not familiar with the customs and ceremonies of the place. To cite a few instances - marriage between the followers of matriarchy and patriarchy, *Tēvatāci* system etc.

The translator records his grateful thanks to Dr. **G. John Samuel,** Director, Institute of Asian Studies, for giving him this valuable assignment. Thanks are also due to Prof. N.S. Dharan for his valuable suggestions for the betterment of the translation.

**M. SUBRAMONIA PILLAI**

## ஆய்வுரை

தமிழகத்தில் கிடைக்கின்ற கதைப்பாடல்களில் பெரும்பாலான கதைகள் தென் மாவட்டங்களிலேயே கிடைக்கின்றன. குறிப்பாகக் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் அதிக அளவு காணப்படுகின்றன[1]. இவ்விரு மாவட்டங்களில் கிடைக்கின்ற கதைப்பாடல்களில் குறிப்பிட்டவை தவிர பிற எல்லாமே வில்லிசை என்ற நாட்டார் கலை நிகழ்ச்சியில் பாடுவதற்கு உரியனவாக விளங்குகின்றன. எனவே இக்கதைப் பாடல்களைப் பொதுவாக வில்லிசைப் பாடல்கள் என்று கூறலாம். தென் மாவட்ட வில்லிசைப் பாடல்களில் பெரும்பாலானவை நாட்டார் தெய்வ வழிபாடு தொடர்பானவையாக உள்ளன. நாட்டார் தெய்வக் கோவில்களில் நிகழும் வில்லிசைக் கலை நிகழ்ச்சியில் நாட்டார் தெய்வம் குறித்த கதையைப் பாடவேண்டும் என்ற கட்டாயம்[2] வழக்கில் இருக்கின்ற நிலையை இக்கதைப் பாடல்களின் பாதுகாப்பிற்குரிய காரணமாகக் கொள்ள முடியும்.

### வில்லிசைப் பாடல்களின் வகைகள்

1நெல்லை, குமரி மாவட்டங்களில் காணப்படுகின்ற வில்லிசைப் பாடல்களை அவற்றின் கதைத்தன்மையின் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பகுக்க முடியும், அவை 1. புராண இதிகாசக் கதைகள், 2. புராண சார்புக் கதைகள், 3. சமூகக் கதைகள், 4. வரலாற்றுக் கதைகள் ஆகியனவாம்.

தென்மாவட்ட வரலாற்றுக் கதைப்பாடல்களை அவற்றின் போக்கின் அடிப்படையில் மூன்று நிலைகளில் பகுக்க முடியும். அவை 1. வரலாறு குறிப்பிடும் அரசன் தொடர்பாக வருபவை, 2. வரலாற்றுடன் தொடர்புடைய வீரனின் சாதனையின் அடிப்படையில் உருவானவை, 3. வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உருவானவை ஆகும்.

---

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் 127 கதைப்பாடல்களின் பெயர்கள் கிடைத்துள்ளன. இவற்றின் 56 எண்ணிக்கை அளவில் அச்சில் வந்துவிட்டனர்.

2. வில்லிசைக்கலை கோவில் சார்ந்த கலை. இக்கலையைக் கோவில் வழிபாட்டுக் கூறுகளுள் ஒன்றாகவும் கூற முடியும். விழா நிகழும் கோவிலில் உள்ள முக்கிய தெய்வம் அல்லது துணைத்தெய்வம் தொடர்பான கதை வில்லிசை நிகழ்ச்சியில் பாடப்பட்ட பின்னரே பிற கதைகதைப் பாட வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. இதனால் அருகிய நிலையில் உள்ள வில்லிசைப் பாடல்களும் அச்சில் வராத கதைகளும் வழக்கில் உள்ளன.

குமரி மாவட்ட வரலாற்றுக் கதைப்பாடல்கள்

கன்னியாகுமரி மாவட்டம் தொடர்பான வரலாற்றுக் கதைப் பாடல்களாக 16 எண்ணிக்கை அளவில் கிடைத்துள்ளன[3]. இவை குமரி மாவட்டத்தின் வரலாறு தொடர்புடையனவாகவோ, வரலாற்று வீரன் தொடர்புடையனவாகவோ அந்த வீரனின் உறவினர்களின் தொடர்புடையனவாகவோ உள்ளன. இவற்றிலும் திருவிதாங்கூர் வரலாறு தொடர்பாக ஏழு கதைப்பாடல்கள் கிடைத்துள்ளன. அவை திவான் வெற்றி, இரவிக்குட்டிப்பிள்ளை போர், தர்ம ராஜாவின் ராமேஸ்வர யாத்திரைக் கதை, வலியதம்பி குஞ்சுதம்பி கதை, மாடம்பி கதை, ஒட்டன் கதை, வலிய எஜமான் கதை ஆகியனவாம். இக்கதைகள் எல்லாமே 17,18,19ஆம் நூற்றாண்டு வேணாட்டு, திருவிதாங்கூர் வரலாறு தொடர்பானவை.

இந்தக் கதைகளில் திவான் வெற்றி என்ற கதைப்பாடல் ராஜா கேசவதாஸ் என அழைக்கப்பட்ட ஒரு திவானைக் குறித்தது.. திவான் வெற்றி என்ற இக்கதைப் பாடல் திருவிதாங்கூர் மன்னர் இராமவர்மாவிற்கும் (கி.பி.1758-1798) மைசூர் அரசனான திப்பு சுல்தானுக்கும் நடந்த போரில் கேசவபிள்ளை என்ற ராஜா கேசவதாஸ் செய்த சாகசங்களைக் குறிக்கிறது[4].

இரவிக்குட்டிப்பிள்ளை போர் என்ற கதைப்பாடல் திருமலை நாயக்கரின் (கி.பி.1623-1659) படைத்தலைவனான ராமையனுக்கும், வேணாட்டு அரசன் உண்ணி கேரளவர்மனின் (1631-1651) படைத்தலைவன் இரவிக்குட்டிப் பிள்ளைக்கும் நடந்த அந்தப் போரைக்

---

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கின்ற/பாடப்படுகின்ற/வரல்ாற்றுத் தொடர்பான கதைப்பாடல்கள்.

1. உலகுடையார் கதை 2. உடையார் கதை 3. சந்தனமகாராஜன் கதை 4. காடராஜன் கதை 5. ஐவர் ராஜாக்கள் கதை 6. கன்னடியன் போர் 7.இடைச்சி செல்லி கதை 8. மன்னர் மதிப்பன் போர் 9. காணி சாவு 10. திவான் வெற்றி 11. இரவிக்குட்டி பிள்ளை போர் 12. தர்மராஜாவின் ராமேஸ்வர யாத்திரை 13. வலியதம்பி குஞ்சுதம்பி கதை 14.மாடம்பிமார் கதை 15. ஒட்டன் கதை 16. வலிய எஜமான் கதை

4. (1) திவான் வெற்றி கதைப்பாடலின் மூலத்தை மட்டும் திருவிதாங்கூர் பல்கலைக்கழகம் 1943-ல் வெளியிட்டுள்ளது.

(2) திவான் வெற்றி கதைப்பாடலைக் குறித்து கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை "A contemporary Tamil song sob AD [91794 on Rajakesava Das" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார் (Kerala Society Papers Vol. 2 Series 10. 1910. pp.279 - 283).

(கி.பி.1635) படைத்தலைவன் இரவிக்குட்டிப் பிள்ளைக்கும் நடந்த போரைக் (கி.பி. 1635) குறிக்கிறது[5].

தர்மராஜாவின் ராமேஸ்வர யாத்திரை கார்த்திகைத் திருநாள் ராமவர்மா என்ற மன்னரின் (கி.பி.1758-1798) தீர்த்த யாத்திரை தொடர்பானது[6]. வலியதம்பி குஞ்சு தம்பிகதை, மாடம்பிமார் கதை (எட்டு கூட்டத்தம்பிமார் கதை), ஒட்டன் கதை, வலிய எஜமான் கதை ஆகியன மார்த்தாண்டவர்மா தொடர்பானவை. இந்த நான்கு கதைகளில் வலிய எஜமான் கதை திருவிதாங்கூர் எல்லையில் உள்ள ஆரல்வாய்மொழிக் கோட்டையைக் காத்த வீரன் ஒருவனைக் குறித்தது[7]. பிற மூன்று கதைகளும் மார்த்தாண்டவர்மாவின் காலத்தில் நடந்த உள்நாட்டுக் கலகம் குறித்தவை. இவற்றில் ஒட்டன் கதை மார்த்தாண்டருக்கு ஆதரவாளனான முண்டன் என்ற ஒட்டக்காரன் தொடர்பானது[8]. பிற இரண்டும் மார்த்தாண்டருக்கு எதிராகக் கலகம் விளைவித்த தம்பிமார்களைக் குறித்தும், மாடம்பிமார்களைக் குறித்தும் புனையப்பட்டவை.

மார்த்தாண்ட வர்மாவின் உள்நாட்டுப் பூசல் தொடர்பான கதைகளில் வலியதம்பி குஞ்சுதம்பி கதையும், மாடம்பிமார் கதையும் (எட்டு கூட்டத் தம்புரான் கதை) மார்த்தாண்ட வர்மாவைக் குறித்த செய்திகளை நாட்டார் தன்மையுடன் காட்டுகின்றன.

---

5. ராமையன் தளவாய்க்கும் இரவிக்குட்டி பிள்ளைக்கும் நடந்த போரைக் குறித்த இரவிக்குட்டி பிள்ளை போர் கதைப்பாடலைப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை இராமப்பையன் அம்மானை என்ற நூலின் பிற்சேர்க்கையாகக் கொடுத்துள்ளார் (சென்னைப் பல்கலைக் கழகம், 1953.).

2. சதாசிவம் பிள்ளை எழுதிய இரவிக்குட்டிப் பிள்ளை விற்பாட்டு அச்சில் வரவில்லை.

3. இரவிக்குட்டிப் பிள்ளை போர் மலையாளக் கதைப்பாடலை புதுசேரி ராமச்சந்திரன் வெளியிட்டுள்ளார்.

6. தர்மராஜாவின் ராமேஸ்வர யாத்திரை அச்சில் வரவில்லை. கார்த்திகைத் திருநாள் என்ற ராமவர்மா (கி.பி.1758-1798) ராமேஸ்வரத்திற்குச் சென்ற நிகழ்ச்சியும், சேதுபதி மன்னரைச் சந்தித்ததும் இதில் பேசப்படுகின்றன.

7. வலிய எஜமான் கதை அச்சில் வரவில்லை. இக்கதையின் சில பகுதிகள் பத்மநாபபிள்ளை எழுதிய ஆரல்வாய்மொழி வரலாறு நூலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன (1943)

8. வி. சர்வேஸ்வரன், ஒட்டன் கதை, மனோ வெளியீடு, மதுரை, 1982.

**திருவிதாங்கூர் மன்னர்கள்**

திருவிதாங்கூர் வரலாற்றாசிரியர்களால் "பிற்காலத் திருவிதாங்கூர் ராஜ்யத்தை நிர்மாணித்தவர்" என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற மார்த்தாண்டவர்மா (கி.பி.1729-1758) திருவிதாங்கூர் மன்னர்களில் முதலானவர். பல்லவ மன்னர்களில் முதல் மகேந்திரவர்மனுக்கும், பிற்காலச் சோழர்களில் முதல் இராஜராஜனுக்கும், நாயக்கமன்னர்களில் திருமலை நாயக்கருக்கும் வரலாற்றாசிரியர்கள் கொடுக்கின்ற இடம் போன்றதுதான் திருவிதாங்கூர் அரசர்களில் மார்த்தாண்டவர்மாவிற்கு உள்ள இடமும்.

திருவிதாங்கூர் வரலாறு மார்த்தாண்டவர்மாவுடன் (கி.பி.1729) தொடங்கி பாலராமவர்மா சித்திரைத்திருநாளுடன் (கி.பி.1949) முடிவடைகிறது. இந்த 220 ஆண்டுகளில் 9 மன்னர்களும் 3 ராணிகளும் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கின்றனர். இவர்களில் சிலர் மலையாள இலக்கியத்திற்கும், கர்நாட இசைக்கும் தங்களின் பங்களிப்பைச் செய்திருக்கின்றனர். காலம் காலமாக வழக்கில் இருந்துவந்த சமூகக் கொடுமைகளைச் சட்டம் இயற்றித் தடுத்தவர்கள் சிலர் உண்டு. இவர்களை வரலாற்றாசிரியர்கள் மரியாதையுடனும், கரிசனையுடனும் பார்க்கின்றனர்.

**மார்த்தாண்டவர்மாவின் புதிய பரிணாமங்கள்**

இந்த மன்னர்களில் மார்த்தாண்டவர்மா வேறானவர். இவர் கலைஞர் அல்லர். சீர்திருத்தவாதி அல்லர். ஆனால் இவருக்கு வேறு பரிமாணங்கள் உள்ளன. இவர் தனக்குப் பின்னால் வந்த மன்னர்களுக்குச் சிக்கல் இல்லாத அரசைக் கொடுத்தவர். நாட்டின் எல்லையை விரிவாக்கி நிலையான ஆட்சிக்காக வழிமுறைகளை முடிவு செய்தவர். யோகக்காரர்களைக் கட்டுப்படுத்திக் கோவில் நிர்வாகச் சீர்கேட்டைச் சமன்படுத்தியவர். இவற்றைச் செயல்படுத்தியதில் தயக்கம் காட்டாதவர்.

திருவிதாங்கூர் மன்னர்களில் மார்த்தாண்டவர்மா நாட்டார் வழக்காற்றியல் செய்திகளில் (மலையாளம், தமிழ்) பெரிது படுத்தப்பட்டு பேசப்படுபவராக இருக்கிறார். ஒரு வகையில் இவர் வீரவழிபாட்டுக்குரிய அரசராக விளங்கினார் என்றும் கொள்ளலாம்.

மார்த்தாண்டவர்மா 53 வயதுவரை வாழ்ந்தவர் (கி.பி.1705-1758). இவர் 24 வயதில் ஆட்சிக்கு வந்தார். ஆதித்யவர்மாவின் தம்பியான

இராமவர்மா 1728-ல் இறந்த பின்னர் திருவிதாங்கூர் அரச பாரம்பரியப்படி இராமவர்மாவின் மருமகனும் ஆற்றுங்கல் ராணியின் மகனுமான மார்த்தாண்டவர்மா ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

மார்த்தாண்டவர்மா தான் ஆட்சிக்கு வந்த ஐந்தாம் ஆண்டில் மிகக்குறுகிய நாடாக இருந்த திருவிதாங்கூர் ராஜ்யத்தை விரிவுப்படுத்தி விட்டார். 1734-ல் கொட்டாரக்கரை நெடுமங்காடு பகுதிகளும், 1742-ல் கொல்லம், காயங்குளம் பகுதிகளும், 1750-ல் சங்கனாச்சேரி, கோட்டயம், ஏற்றுமானூர் ஆகிய பகுதிகளும் திருவிதாங்கூருடன் இணைக்கப்பட்டன. இவர் காலத்தில் திருவிதாங்கூர் ராஜ்யம் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே அரூர்புழை வரை பரந்து இருந்தது.

**மார்த்தாண்டவர்மா பதவியேற்பின் போது நாட்டின் நிலை**

மார்த்தாண்டவர்மா நாட்டின் பொறுப்பை ஏற்றபோது கல்குளம் என்ற பத்மநாபபுரம் நாட்டின் தலைநகராக இருந்தது. அப்போது நாட்டின் நிதிநிலையும், நிர்வாகமும் சீரழிந்த நிலையில் இருந்தன. நாட்டிற்கென்று நிலையான கட்டுப்பாடுள்ள படைகூட இருக்கவில்லை. மார்த்தாண்டவர்மாவுக்கு முந்திய காலங்களில் நாட்டு நிர்வாகம் சீரழிந்து இருந்ததற்குச் சமூக ரீதியான காரணங்கள் உண்டு. இந்தக் காரணங்களை உணர்ந்தால் மார்த்தாண்டவர்மாவின் காலத்தில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பத்தின் காரணத்தை உணர முடியும்.

**யோகக்காரர்களும் வேணாடும்**

திருவிதாங்கூர் ராஜ்யம் 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை வேணாடு எனப்பட்டது. வேணாட்டு அரசர்கள் எல்லா காலக்கட்டத்திலும் கோவில் நிர்வாக சபைக்குக் கட்டுப்பட்டே ஆட்சி செய்திருக்கின்றனர் கி.பி.1229-க்குப் பின்னர் வேணாட்டுக் கோவில் நிர்வாகப் பொறுப்பை மலையாளப் பிராமணர்களே ஏற்றனர். கோவிலை நிர்வகித்த மலையாள பிராமணர்களின் நிர்வாக சபை அங்கத்தினர்கள் யோகக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

யோகக்காரர்கள் கோவிலை மட்டுமல்லாது கோவில் இருந்த கிராமத்தையும் கூட நிர்வகித்தனர். வேணாட்டரசர்களின் இறுதிக் காலத்தில் யோகக்காரர்கள் நாட்டின் பொது நிர்வாகத்தில் மறைமுகமாகத் தலையிடும் அளவுக்கு முன்னேறி விட்டனர். இதனால் யோகக்காரர்களின் நிர்வாகம் மேல்வர்க்க சாதிய நிர்வாகமாக இருந்தது. இராமவர்மா காலத்தில் இது உச்ச நிலைக்கு சென்று விட்டது.

யோகக்காரர்களின் கோவில் நிர்வாகத்திற்குத் துணைபோக நிலச் சுவாந்தார்களின் கூட்டம் (எட்டு வீட்டுப் பிள்ளைமார்கள் அல்லது மாடம்பிமார்கள்) இருந்தது. இராமவர்மா காலத்தில் திருவிதாங்கூர் இருந்த நிலையைப் பின்வருமாறு வகுத்துரைக்க முடியும்.

1. நாட்டின் பொருளாதார நிலை சீரழிந்து இருந்தது.

2. கோவில் நிர்வாகத்துறையினர் வருமானத்துறையிலும் நீதித்துறையிலும் தலையிட்டனர்.

3. நாட்டில் முறையான நிர்வாகமோ ராணுவமோ இல்லாததால் மதுரை நாயக்கர்கள் தென்திருவிதாங்கூரின் மீது அடிக்கடி படையெடுத்தனர்,

4. மக்களிடமிருந்து வரிவசூலிக்க முடியாத நிலையில் நெல்லையில் இருந்து குதிரைப் படைகளைக் கொண்டு வந்து வரிவசூலித்த கொடுமை நடந்தது.

5. இராமவர்மாவின் மக்கள் நாஞ்சில் நாட்டில் செல்வமும், பதவியும் பெற்றிருந்தனர்.

இராமவர்மாவின் இறுதிக்காலம் (கி.பி.1721-1729) இத்தகைய நிலைமையில் இருந்ததால் மன்னருக்கும், மக்களுக்கும் உள்ள உறவில் நிறையவே இடைவெளி இருந்தது. இந்த நிலையில்தான் மார்த்தாண்டவர்மர ஆட்சிக்கு வருகிறார்.

### தம்பிமார்களின் ஆதரவாளர்கள்

இராமவர்மாவின் மக்கள் பொதுவாக வலியதம்பி, குஞ்சுதம்பி என அழைக்கப்பட்டனர். இவர்கள் பப்புதம்பி, இராமன்தம்பி என்றும், ராமன் தம்பி, ராமன் ஆதிச்சன் என்றும், தம்புரான் ராமன், தம்புரான் ஆதிச்சன் என்றும் வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பலவீனமான அரசரான ராமவர்மாவின் மக்களான இவர்கள் இராமவர்மாவிற்குப் பின்னர் தாங்களே நாட்டின் வாரிசு என அதிகார பூர்வமாக உரிமை கொண்டாடினர். மதரீதியான செயல்பாடுகளால் நாட்டின் அரசியலைத் தங்கள் கைக்குள் வைத்திருந்த யோகக்காரர்களும் (மாடம்பிமார்கள்), எட்டு வீட்டுப்பிள்ளைமார்களும் தம்பிகளுக்கு ஆதரவாய் நின்றனர். அவர்கள் திருவிதாங்கூரின் அரசியல் பாரம்பரிய

முறையை நன்கு அறிந்திருந்த போதும் கூட தம்பிகளுக்கு ஆதரவாய் இருந்தனர்.

மார்த்தாண்டவர்மா ஆட்சிக்கு வரும் முன்பே (கி.பி.1729க்கு முன்பு) தம்பிமார்கள் அரசாட்சிப் பொறுப்புக்கு ஆசைப்பட்டனர். இராமவர்மாவோ நாட்டின் மரபு மருமக்கள்வழி முறைப்பட்டதால் தன் மருமகன் மார்த்தாண்டவர்மாவை அரசராக்கியிருக்கிறார். இந்த சூழ்நிலையை எட்டு வீட்டுப் பிள்ளைமார்களும், யோகக்காரர்களும் பயன்படுத்திக் கொண்டனர். தம்பிகளை முன்நிறுத்தி உள்நாட்டுக் கலகத்துக்கு விதை போட்டனர். இந்த நிகழ்ச்சிகளைத் திருவிதாங்கூர் வரலாற்றை எழுதியவர்கள் சுவையாகவே கூறுகின்றனர்[9].

### தம்பிமார்களின் மன்னருக்கு எதிரான போராட்டங்கள்

மார்த்தாண்டவர்மாவிற்கு எதிராக யோகக்காரர்களும், எட்டு வீட்டுப் பிள்ளைமார்களும் நின்றாலும் மன்னரை அழிக்க அரசியல் ரீதியான சூழ்ச்சியைத் தம்பிகளே மேற்கொண்டனர். தம்பிகள் திருச்சி நவாபைச் சந்தித்தனர் என்றும், நெல்லையில் அழகப்ப முதலியாரைச் சந்தித்தார் என்றும் இருவேறு கருத்துக்கள் உண்டு. அழகப்ப முதலியார் அப்போது நவாபின் நெல்லை ஏஜன்டாக இருந்தார். தம்பிகள் "இராமவர்மாவின் மக்களாகிய நாங்களே திருவிதாங்கூரின் அரசப்பொறுப்பை ஏற்க வேண்டும். ஆனால் மன்னரின் மருமகன் அரசராகி விட்டார்" என்று காரண காரியங்களுடன் தங்கள் நிலையை விளக்கினர். முதலியாருக்குத் தம்பிகளின் வாதம் சரியாகப்பட்டது.

முதலியார் குதிரைப்படையுடன் திருவிதாங்கூர் வந்தார். புலியக்குறிச்சியில் பாளையம் அடித்தார். நாஞ்சில் நாட்டில் சில கிராமங்களில்

---

9. 1 V. Nagam Aiya, The Travancore State manual. Vol I., 1989, p.333.
2. Shangunny menon, History of Travanore, 1982, p.115.
3. S. Sreedara menon, A survey of Kerala History, 1988, p.231.
4. K.V. Krishna Iyer, A short History of Kerala, 1966, p.99.
5. K.M. Panikkar, History of Kerala, 1960, p.99.
7. A.P. Ibrahim Kunju, Expansion of Travancore in Eighteenth century, 1975, p.432.
8. K.K. Kusman, "Marthandavarma and the problem of his succession 1981, p.238.
9. K. Siva Sankaran, "வேணாட்டிண்டே பரிணாமம்" (மலையாளம்), 1993, p.212.

கொள்ளை அடித்தார். மார்த்தாண்டவர்மா முதலியாரைச் சந்தித்து சமரசம் பேசினார். சில பரிசுகளும் கொடுத்தார். "திருவிதாங்கூரின் அரசவம்சம் மருமக்கள் வழிவருவது. ஒரு அரசனுக்குப் பிறகு அவனது மருமகனே ஆட்சிக்கு வரத் தகுதி உடையவன். இது இந்த நாட்டுப் பாரம்பரியம்'' என விளக்கினார். மன்னரின் பேச்சு முதலியாருக்கு நம்பிக்கை கொடுத்தது. தம்பிகளையும், மன்னரையும் அழைத்து சமரசம் பேசினார். இந்த நிகழ்ச்சி நடந்த சில நாட்களுக்குப் பின்னர் எட்டு வீட்டுப் பிள்ளைமார்கள் மீண்டும் சதியில் இறங்கினர்.

மன்னருக்கு எதிரான கொலை சதித்திட்டமும் முறியடிப்பும்

மார்த்தாண்ட்வர்மாவிற்கு எதிரானவர்கள் எல்லோரும் திருவனந்தபுரத்திலிருந்து கிழக்கே 14 கி.மீ தொலைவில் உள்ள வெங்கானூர் என்ற ஊரில் ஒரு சத்திரத்தில் கூடினர். திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் ஆராட்டுத் திருவிழா அன்று விழாவில் கலந்து கொள்ள வரும் அரசரைக் கொலை செய்ய வேண்டும் என அந்தக் கூட்டத்தில் முடிவு செய்தனர். இந்தத் தகவலை அரசருக்கு எதிரானவர்களுக்குத் தெரிவித்தனர்.

இதே நேரத்தில் வெங்கானூர் சத்திரத்தில் குற்றேவல் செய்து வந்த பண்டாரம் என்பவன் எதிராளியின் சதி முயற்சியை மார்த்தாண்டவர்மாவின் தளவாய் ஆக இருந்த இராமையனிடம் ரகசியமாகத் தெரிவித்துவிட்டான். இராமையன் அதை ரகசியமாக வைத்துக்கொண்டு செயல்பட்டார். ஆராட்டு விழாவிற்கு மன்னர் வாள் ஏந்தியபடி சென்றார். ஆனால் சதிகாரர்கள் முடிவு செய்தபடி எதுவும் நடக்கவில்லை.

வலியதம்பியின் மரணம்

சதிகாரர்கள் நாகர்கோவிலில் மீண்டும் ஒரு ரகசியக் கூட்டம் நடத்தினர். இந்தக் கூட்டத்தில் வலியதம்பி, மன்னரை நேரடியாகச் சென்று கொலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இச்சதிக் கூட்டம் நடந்த சில நாட்களில் வலிய தம்பி நாகர்கோவில் அரண்மனைக்குச் சென்றார். அன்று மார்த்தாண்டவர்மா அங்கு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். வலியதம்பி இராமவர்மாவின் மகன் என்ற தோரணையில் பாதுகாவலைத் தாண்டி மன்னர் இருந்த இடத்துக்குச் சென்று விட்டார்.

மன்னரின் அருகே சென்றார். தன் இடையில் இருந்த வாளை உருவி மன்னரை வெட்டினார். வாள் குறி தவறி கூரை உத்திரத்தில் பட்டது. அப்போது பாதுகாவலுக்கு நின்ற காவலன் தன் கையிலிருந்த பாரசீகக் கத்தியால் தம்பியைக் குத்தினான். தம்பி இறந்தார். இதே நேரத்தில் தம்பியைத் தொடர்ந்து வந்த சதிகாரர்களும் கைது செய்யப்பட்டனர்[10]. அவர்கள் திருவனந்தபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். சிலர் தூக்கில் தொங்க விடப்பட்டனர். சிலரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சிலர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டனர். சிலர் மீனவர்களிடம் கொடுக்கப்பட்டனர். சிலரின் வீடுகள் உடைக்கப்பட்டன[11].

மார்த்தாண்டவர்மாவிற்கும் தம்பிகளுக்கும் நடந்த உள்நாட்டு கலகம் கி.பி.1729-1734-க்கு இடைப்பட்ட காலத்தில் நடந்திருக்கலாம்[12].

### வழக்காறுகளும் கதைப்பாடலும்

வலியதம்பி குஞ்சுதம்பி கதை இராமவர்மாவின் திருமணத்தில் தொடங்கி கி.பி.1734-ல் முடிகிறது. மாடம்பிமார் கதை கி.பி.1729-34-க்குள் உள்ள நிகழ்ச்சிகளைச் சித்தரிப்பது. தம்பிகளுக்கும், மார்த்தாண்டருக்கும் உள்ள முரண்பாடு குறித்தும் மன்னர் சதிகாரர்களிடமிருந்து தப்பிய முயற்சி குறித்தும், பின்னர் தம்பிகளின் உறவினர்களை அழித்தது குறித்தும் வாய்மொழி வழக்காறுகள் குமரி மாவட்டத்தில் இன்றும் வழக்கில் உள்ளன. இந்த வழக்காறுகளைக் கதைப்பாடல்கள் முழுதும் பயன்படுத்தியுள்ளன என்று கூறு முடியாது.

### வரலாறும் கதைப்பாடலும்

வலியதம்பி, குஞ்சுதம்பி கதை, மாடம்பிமார் கதை ஆகிய இரு கதைகளையும் திருவிதாங்கூர் வரலாற்றாசிரியர்கள் மிகக் குறைவாகத்தான் பயன்படுத்தியுள்ளனர். தென்திருவிதாங்கூர்ப் பகுதியில் மார்த்தாண்ட வர்மாவைச் சார்ந்தும் எதிர்த்தும் இருவேறு கட்சிகள் நின்றதைக் கதைப்பாடல்கள் உணர்த்தும் அளவுக்கு வரலாற்றாசிரியர்கள் காட்டவில்லை.

---

10. V. Nagam Aiya, 1989, p.337

11. Ibid., p. 338.

12. தம்பிகள் கொலை செய்யப்பட்டது கி.பி.1730 என்றும், கி.பி.1734 என்றும் இரு கருத்துக்கள் உள்ளன. கி.பி.1734 என்ற கே.எம். பணிக்கரின் கருத்து (1960 - 231) ஏற்கத் தகுந்ததாக உள்ளது. மார்த்தாண்டவர்மா கி.பி1734-லிருந்துதான் தன் நாட்டின் எல்லையை விரிவுப்படுத்தியிருக்கிறார். எனவே கி.பி.1729-1734-க்கு இடைப்பட்ட 6 ஆண்டுகள் உள்நாட்டுக் கலகம் நிகழ்ந்ததாகக் கொள்ளலாம்.

### மன்னரின் செல்வாக்கு

திருவிதாங்கூர் ராஜ்யத்தின் மன்னர், மக்களால் நாட்டின் அரசராக மட்டும் மதிக்கப்படவில்லை. கடவுளின் அம்சமாகவும் அவர் கருதப்பட்டார். அவர் பத்மநாபதாசனாகவும் இருந்தார். அப்படிப்பட்ட நிலையில் மன்னருக்கு எதிராக இயங்கிய வீரர்களுக்கு வழிபாடு வரக் காரணம் என்ன? இந்த வழிபாடு மார்த்தாண்டரின் சமகாலத்தில் ஏற்பட்டிருக்க முடியாது, திருவிதாங்கூரில் உள்நாட்டுக் கலகம் விளைவித்தவர்களுக்குக் கதைப்பாடல்கள் தோன்றக் காரணம் என்ன?

### தம்பிமார் கதையின் தோற்றத்திற்கான காரணங்கள்

வில்லிசை என்ற நாட்டார் கலை நிகழ்ச்சியில் இக்கதை பாடப்படும் அளவுக்குத் துணிச்சலைக் கொடுத்தது எது? இதற்கெல்லாம் வில்லி சைப் பாடல்கள் காரணம் சொல்லவில்லை. என்றாலும் மேலோட்டமாகக் கோடிட்டுக் காட்டத்தான் செய்கின்றன.

வலிய தம்பி குஞ்சுதம்பி கதையும், மாடம்பிமார் கதையும் மன்னரை எதிர்த்தவர்களின் கதை, மன்னரால் வன்கொலைப்பட்டவர்களின் கதை. அவர்களைத் தெய்வமாக்குவதற்கென்றே படைக்கப்பட்ட கதை, நிராயுதபாணியாக நின்ற தம்பியைப் பலர் பிடித்து வைத்திருக்க மன்னர் கொன்றதாகச் சித்தரிக்கும் கதை. இப்படி ஒரு கதையைப் படைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதற்கும், அந்த வீரர்கள் வழிபாடு பெறுவதற்கும் உரிய காரணங்களை நூலின் மூலத்திலிருந்தும், கள ஆய்வுச் செய்திகளின் வழியும் ஓரளவு அறிய முடிகிறது.

தமிழகத்தின் தென்பகுதிகளில் கிழக்கிந்திய கம்பெனி காலத்தில் வெள்ளைக்காரர்களை எதிர்த்த குறுநிலத் தலைவர்களைக் குறித்து கதைப்பாடல்கள் கிடைக்கின்றன. கட்டபொம்மனைக் குறித்து பல்வேறு கருத்துக்களுண்டு. அவனது சமகாலத்தில் மக்கள் எப்படிக் கருதினார்கள் என்பதில் வரலாற்றாசிரியர்களிடம் முரண்பாடுள்ளது. ஆனால் கட்டபொம்மனைக் குறித்து 10 கதைப்பாடல்கள் உள்ளன. மேலும் பூலுத்தேவனைக் குறித்த நாட்டார் வடிவங்களுக்குரிய பாடல்கள் உள்ளன. இவை தோன்றக் காரணம் என்ன?

இந்த வீரர்களின் மறைவிற்குப் பின்னர் கம்பெனி அதிகாரிகள் தென் பாண்டி மக்களை நடத்திய முறை மிக மோசமாக இருந்தது. கம்பெனி ஆட்சியில் அடிமைகளாக வாழ்ந்த அவர்கள் அப்போதுதான் கட்டபொம்மனைச் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

தங்களைக் கொடுமைப் படுத்தப்படுபவனால் மரணமடைந்தவன் என்ற எண்ணம் கட்டபொம்மனின் மேல் வந்தது. எனவே அவன் கதைப் பொருளானான். அவன் வாழ்வு கலைக்குரியதாயிற்று. அவனைக் கூத்தாக நடித்தனர். அவன் புகழைப் பாடினர்.

தம்பிமார் கதைப்பாடல் தோன்றிய காலம்

இதே நிலைதான் தம்பிகளுக்கும். தம்பிமார்கள் சமூகப் புரட்சியாளர் அல்லர். அரசபதவிக்காக ஆசைப்பட்டு கலகம் செய்தவர்கள்தாம். அதற்காகக் கட்சி சேர்த்துக் கொண்டவர்கள்தாம். அவர்கள் சமகாலத்தில் வழிபாடு பெற்றிருக்க முடியாது. அவர்களின் சமகாலத்தில் அவர்களைக் குறித்த கதைப்பாடலும் தோன்றியிருக்க முடியாது.

தம்பிகளின் காலத்திற்குப் பின்னர் திருவிதாங்கூர் அரசர்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உள்ள மோசமான உறவு அந்த மக்களிடம் தம்பிமார்களைக் குறித்த மதிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்த மன்னர்களின் காலத்தில் ஒடுக்கப்பட்ட சில சமூகத்தினருக்குக் கோவிலினுள் செல்லத் தடை. ஆனால் கோவில் வேலையைச் சம்பளமின்றிப் பார்க்க வேண்டும் (ஊழியம் என்பது அதற்குரிய சொல்) என்ற கட்டாயம்; பெண்கள் மேலாடை அணியத் தடை போன்றன திருவிதாங்கூர் மன்னர்கள் ஆட்சியில் இருந்த நடைமுறை. எனவே இக்காலத்தில் அடிமைகளாக வாழ்ந்த மக்கள் திருவிதாங்கூர் மன்னரை எதிர்த்து மடிந்த தம்பிகளின் பேரில் மதிப்பு வந்திருக்கலாம்.

தம்பிகளின் சமகாலத்தில் அவர்களுக்கு ஆதரவாக இருந்தவர்கள் தம்பிகள் இறந்தபின் அவர்களை வழிபட்டிருக்கலாம். பின்னர் கதைப்பாடல் உருவாயிருக்கலாம்.

கதைப்பாடல் செய்திகளும் வரலாறும்

வலிய தம்பி குஞ்சுதம்பி கதை மூலத்தின் (Text) படி உள்ள செய்திகளை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்ததில் பின்வரும் கருத்துக்களை அறிய முடிகின்றன.

ராமவர்மா திருவிதாங்கூரின் அரசராக இருந்த காலத்திலிருந்து கதை தொடங்குகிறது. அப்போது திருவனந்தபுரம், திருவிதாங்கோடு, திருவஞ்சிக்கரை, பத்மநாபபுரம், பாறசாலை ஆகிய நகரங்கள் முக்கியமாக இருந்தன (வரி. 4-7). இங்கு முக்கியமான அதிகாரிகள் இருந்தனர். இது கதைப்பாடல் கூறும் செய்தி.

இந்த நகரங்களில் பத்மநாபபுரம் முக்கியமான நகரமாக இருந்தது. திருவிதாங்கூரின் தலைநகரும் இதுதான். இக்கதைப்பாடலின் முக்கிய நிகழ்ச்சிகள் பத்மநாபபுரத்தைச் சுற்றியே வருகின்றன.

பத்மநாபபுரத்தின் பழைய பெயர் கல்குளம். கி.பி.1620 வரை இங்கு மண் கோட்டைதான் இருந்தது. கி.பி.1664-ல் கல்குளத்தில் வலுவான கோட்டை இருந்ததையும், அது முக்கியமான நகராகக் கருதப்பட்டதையும் ஜான்நியோஹஸ் என்பவர் தான் நேரடியாகப் பார்த்த நிகழ்ச்சியை திருவிதாங்கூர் வரலாறு குறிப்பிடுகிறது[13]. மார்த்தாண்டவர்மா கல்குளம் கோட்டையைப் பத்மநாப சுவாமிக்கு காணிக்கை ஆக்கிய பின்பு (கி.பி.1744) பத்மநாபபுரம் என்ற பெயர் பிரபலம் ஆகிவிட்டது.

2. சுசீந்திரம் ஊர் தாணுமாலயன் கோவில் மார்கழித் திருவிழாவிற்கு இராமவர்மா வருகிறார் (வரி 17). அப்போது அவரை அபிராமி சந்திக்கிறாள் (வரி 61). இவள் வடக்கு சீமையிலிருந்து தட்சணத்திற்குப் பஞ்சம் பிழைக்க வந்தவள். இவள் ஆய்ச்சிமார் குலத்தில் உதித்தவள் (வரி 21). மகாதேவர் கோவிலில் கைமுறையும், மெய்முறையும் காட்டிய அனுபவம் உடையவள் (வரி 71). அவள் மன்னரைச் சந்திக்கப் போனபோது கூட கைமுறையும், மெய்முறையும் காட்டுகிறாள் எனக் கதைப்பாடல் கூறுகிறது.

இந்த கதைப்பாடலின்படி அபிராமி இடையர் (ஆய்ச்சியர்) குலத்தவள் ஆகிறாள். பதிப்புக்கு எடுத்துக்கொண்ட எல்லா பிரதிகளிலும் ஆய்ச்சியர் என்றே உள்ளது. ஆனால் இந்தக் கதையை பாடுகின்றவர்களிடம் கருத்து வேறுபாடு உள்ளது[14]. இந்தக் கதை வழக்கில் உள்ள பகுதிகளில் வாழ்கின்ற இடையர் சமுகத்தினரிடையேயும் அபிராமி பற்றிய நாட்டார் வழக்காற்றுச் செய்திகள் எதுவும் இல்லை.

அபிராமி தேவதாசி குலத்தவளாக இருக்க வேண்டும். இவள் மகாதேவர் கோவிலில் கைமுறையும், மெய்முறையும் காட்டியதாகக் கூறுகிறாள். மன்னரின் முன்பு திருவிழாக் கூட்டத்தில் கைமுறையும் மெய்முறையும் காட்டுகிறாள். இந்தத் தகவலின்படி இவள் கோவிலில் நடனம் ஆடுபவள் என்று முடிவு செய்யலாம்.

13. V. Nagam Aiya 1989 P308

14. கலைமாமணி முத்துசாமிப்புலவரும், வில்லிசைக் கலைஞர் சுயம்பு ராஜனும் இக்கதையை கடந்த 15 ஆண்டுகளாகப் பாடுகின்றனர். முத்துசாமிப்புலவர் "தம்பிமார்களின் அம்மா தேவதாசி என்று பாடினால் கோவில்காரர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அந்தக்காலத்துக்கு சரி. அதனால் எனக்கு முந்திய காலத்தில் பாடியவர்கள் கூட இடைச்சி என்று சொன்னதால் நானும் பாடுகிறேன்" என்றார்.

வடசீமையில் உள்ள அயோத்தியிலிருந்து வந்தவள் அவள் எனக் கதைப்பாடல் கூறினாலும்., அவள் தஞ்சைப் பகுதியிலிருந்து வந்ததாகக் கருதலாம். பிற கதைப் பாடல்களிலும் இதுபோன்று கூறும் வழக்கம் உண்டு.[15]

தேவதாசியர் சமூகம்

கன்னியாகுமரி மாவட்டக் கோவில்களில் பிற்காலச் சோழர்காலம் முதல் கி.பி1930 வரை தேவதாசி முறை இருந்தது[16]. இந்த மாவட்டக் கோவில்களில் குறிப்பாகச் சைவக்கோவில்களில் பதியிலரான இவர்கள் நடமாடும் (கைமுறை, மெய்ம்முறை) பணியைச் செய்து வந்தனர். இந்த தேவதாசிகளில் சிலர் தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்தவர்களும் உண்டு[17]. இவர்கள் தமிழ்த் தேவதாசிகள். பிற்காலத்தில் மலையாளத் தேவதாசிகளும் கோவில்களில் இருந்தனர். தமிழ்த் தேவதாசிகள் தங்களை நாஞ்சில் நாட்டு வேளாள சமூகத்துடனும், மலையாள தேவதாசிகள் தங்களை நாயர் சமூகத்துடனும் இணைத்துக் கொண்டனர் என்பதை கி.பி.1930-க்கு பிற்பட்ட சமூகநிலை புலப்படுத்துகிறது.

ராமவர்மா அபிராமியை மணந்த நிலை

இந்தக் கதைப்பாடல் குறிப்பிடும் அபிராமி தஞ்சை பகுதியிலிருந்து வந்த தமிழ்த் தேவதாசியாகக் கொள்ளலாம். சுசீந்திரம் கோவிலைச் சார்ந்த தேவதாசிகளைப் பெரும் செல்வந்தர்கள் வைப்பாக வைக்கும் வழக்கம் நடைமுறையிலிருந்தது.[18] இத்தகைய செல்வந்தர்கள் பெரும்பாலும் நாயர், வேளாளர் ஆகிய இரு சமூகத்தைச் சார்ந்தவர்களாகவோ அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவோ இருந்தனர். இத்தகைய பெண்கள் இரண்டாம் மனைவியாகவும் கருதப்பட்டனர். எனவே அபிராமியை மன்னர் தம் மனைவியாக ஏற்றுக்கொண்டு இரணியசிங்க நல்லூரில் இருத்தியிருக்கிறார்.

---

15. கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கதைப்பாடல்களில் குடிபெயர்ந்து வருகின்றவர்களை வடசீமையிலிருந்து (காசி, அயோத்தி,) வருவதாக கூறும் நிலை உள்ளது. சோமாண்டிக் கதையில் வரும் சோமாண்டி வட சீமையில் காசியிலிருந்து வருவதாகக் குறிக்கப்படுகிறான். நல்லதங்காள் கதையிலும் நல்லதங்காளின் மனைவி காசிராஜனின் மனைவியாகக் குறிக்கப்படுகிறான்.

16. K.K. Pillai, The Suchindrum, Temple 1953, p. 259.

17. Ibid., p.278.

18. Ibid., p.287.

அபிராமியும், அவர் மக்களும் இரணியசிங்க நல்லூரில் இருந்தனர் என்பதைக் கதைப்பாடல் பல இடங்களில் கூறுகிறது (வரி. 115-119). இரணியசிங்க நல்லூர் சேரமான்பெருமாள் காலத்திலேயே முக்கிய நகரமாக இருந்தது. அவர் அந்த அரண்மனையில் இறந்தார் என்ற மரபு வழி செய்தி உண்டு.

இரணியசிங்க நல்லூரைக் குறித்து சுசீந்திரம் கல்வெட்டு (1208) கூறுகிறது. எனவே இதன் பழமை 1000 ஆண்டுகள் செல்லுகிறது. எனவே இராமவர்மா இந்த நகரில் அபிராமியைத் தங்க வைத்துவிட்டு தான் பத்மநாபபுரத்தில் இருந்திருக்கிறார்.

**இராமவர்மா தம்பிமார்களுக்கு வழங்கிய சொத்துக்கள்**

இராமவர்மா தன் மனைவிக்கும் மூன்று மக்களுக்கும் நிறையவே சொத்துக்களும், மானியங்களும் அளித்திருக்கிறார். சில பகுதிகளில் தீர்வை வாங்கும் உரிமையையும் விட்டு கொடுத்திருக்கிறார். இதைக் கதைப்பாடல் விரிவாகவே கூறுகின்றது. மன்னர் மக்களுக்குக் கொடுத்த சொத்துக்கள், மானியங்கள் விபரம் பின்வருமாறு.

நாலாலமுட்டுச் சந்தையிலே தீர்வை வாங்கும் உரிமை, கொடுப்பக்குழி பேட்டையில் முதல் எடுக்கும் உரிமை, தாழாக்குடி சந்தையில் முதல் எடுப்பு உரிமை, கூட்டப்புளி சிவனணைஞ்ச நாடார், அம்மாண்டிவிளை முத்திருள நாடார், கறுப்பு நாடார், முருங்கவிளை முத்திருள நாடார், கறுப்பு நாடார் ஆகிய நிலச்சுவாந்தர்களின் சொத்துக்களில் தீர்வை வாங்கும் உரிமை, வாத்தியார் கோணம், வம்புமலை கோணம், தரவுகடை வயல் ஆகியவற்றில் வரி வசூலிக்கும் உரிமை, இடலாய்குடி, தாழாக்குடி, மணக்குடி உப்பளம் ஆகிய ஊர்களில் தீர்வை வாங்கும் உரிமை, கிள்ளியூர் ஏலாவில் மூன்று ஏக்கர் நிலத்தின் உரிமை என்று தம்பிமார்களுக்குக் கொடுக்கப்பட்ட சொத்துக்களின் விபரங்களை அடுக்கிக் கொண்டே போகிறது கதைப்பாடல் (வரி.507-555).

இங்குக் குறிப்பிடப்பட்ட ஊர்களில் பெரும்பாலானவை நாஞ்சில் நாட்டைச் சார்ந்தவை. பிற கல்குளம் தாலுகாவில் உள்ளவை. இரண்டு தம்பிகளும் கல்குளம் தாலுகாவில் உள்ள இரணியசிங்கநல்லூர் அரண்மனையில் இருந்தாலும் அவர்களின் சொத்துக்கள் நாஞ்சில் நாட்டிலேயே இருந்திருக்கின்றன. தம்பிகளின் வேறு தொடர்புகளும் நாஞ்சில் நாட்டில் இருந்தன. இதற்கு அவர்கள் தமிழ் பெண்ணுக்கு பிறந்தவர்கள் என்பதும் காரணமாக இருந்திருக்கலாம்.

கதைப்பாடல் கூறும் இந்தத் தகவல் உண்மையானவை என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன[19].

### யோகக்காரர்களும் தம்பிமார்களும்

தம்பிகள் இராமவர்மாவின் முறைப்படியான மனைவியின் பிள்ளைகள் இல்லை என்றாலும் செல்வந்தர்களாகவும், செல்வாக்கு உடையவர்களாகவும், அதிகாரப் பதவியுடையவர்களாகவும் இருந்தனர். முக்கியமாக கோவில் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். இதனால் யோகக்காரர்களின் தொடர்பும் அவர்களுக்கு இருந்தது[20]. இதுவே தம்பிகளுக்கும், மன்னருக்கும் பகையை ஏற்படுத்தியிருக்கலாம்.

---

19. மார்த்தாண்ட வர்மா தம்பிகளுக்குக் கொடுத்த சொத்துக்களின் விபரம் பின்வருமாறு:

இரணியசிங்கநல்லூர் கோட்டையும் கோயுக்கல்லும் மேற்படி தேவன்சேரி வகையும் மேற்படி கடையும் ஊட்டுப்புரையும் ஆளூர் மேற்படிக் கோட்டையும் இலங்கத்து செம்பகராமன்புதூர் ஆள்வர்கோவில் ஸ்ரீ காரியக்கணக்கும் குன்னத்தூர் காப்புக்காட்டு வகையும் சாணுவகையும் செட்டிற சிட்டிற ஈர கீழ்ப்பாகமும் கண்டு காட்சி தலப்பணமும் வகையும் தெங்கினாட்டு இறவா - - - - - உள்ள மேற்படி வக பனயும் விளப்பில் சாலவகையும் திருவனந்தபுரத்த ஸ்ரீவராகத்து கோவில் கல்லும் கடினங்குளத்துள்ள மகாதேவர் கோவில் ஸ்ரீகாரியக் கணக்கும் மற்றும் மலநாடு வக நெல்லுவக அரமனவக எப்பேர்பட்டதும், நாஞ்சி நாட்டு வலி கொல்லி கிழார்மங்கலம் உள்ளிட்ட பற்றில் கோட்டப்பணம் விஷேசால் காணிக்கையும், முப்புவகை உழவும் உடவும் நீங்கலாக உள்ளமேல் வாரமும் அஞ்சாலியும் பணவக பிறகத்த கைகுறங்கென்றும் வகயும் நைனார் மைசூர் விண்ணகர் எம்பெருமாள் கோவிலில் ஸ்ரீகாரியக்கணக்கும் வடசேரி தோவாளை உள்பட்ட கிறவா கறுவக ஆயமும்-உணவு பாட்டமும் வெங்களம் குளம் செம்பகராமன்புதூர் ஈவக பணவக எப்பேர்ப்பட்டதும் தறி நீங்கலாக 883 ஆம் ஆண்டு (கி.பி. 1708) பணவக எப்பேர் பட்டதும் இராமவர்ம உண்ணி கல்பிச்சு தேவாரம் சொன்னாட்டப் பள்ளி சேரிளன் சேரிளன் பெரும்பனாதை கொடுத்த நீட்டு ஒன்று.

Travancore Dynastic Records, Kerala Society Papers series 7 (1911) p. 951.

20. தம்பிகள் திருவிதாங்கூர் பகுதிகளில் கோவில்களில் ஸ்ரீகாரியக் கணக்கு பொறுப்பை வகித்திருக்கின்றனர்.

செம்பகராமன்புதூர் ஆர்லார்கோவில் ஸ்ரீகாரியக் கணக்கு திருவனந்தபுரத்து ஸ்ரீவராகத்து கோவில் கடினாம்குளத்து மகாதேவர் கோவில் ஸ்ரீகாரியக் கணக்கு வலி கொல்லிகிழார் மங்கலம் மதுசூதனன் விண்ணகர் எம்பெருமாள் கோவில் ஸ்ரீகாரியக் கணக்கு Kerala Society Papers 7, p. 951 .

எனவே கோவில் நிர்வாகத்தை வகித்த யோகக்காரர்களுக்கும், கோவில் ஸ்ரீகாரியப் பொறுப்பை ஏற்றிருந்த தம்பிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

**மார்த்தாண்டவர்மா தம்பிமார்களிடையே பூசல்கள் வருவதற்கான காரணங்கள்**

மார்த்தாண்டவர்மா தம்பிமார்களின் தங்கையைத் திருமணம் செய்ய விரும்புகின்றார். தம்பிகளிடம் பெண் கேட்கிறார். தம்பிகள் மன்னரும் தாங்களும் வேறு வேறு குலங்களை சார்ந்தவர்கள் என்று கூறி மறுக்கின்றனர்.

தம்பிகள் மறுபடியும் யோசித்து விட்டு மார்த்தாண்டவர்மாக்குத் தங்கள் தங்கையை மணம் செய்து கொடுக்க ஒப்புதல் அளிக்கின்றனர். ஆனால், அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அரசப்பட்டம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கின்றனர். இதைக் கேட்ட மார்த்தாண்டவர்மா - வெகுண்டு எழுகிறார்.

மார்த்தாண்டவர்மா தன் மாமன் படுத்திருந்த மெத்தை தம்பிகளின் வீட்டில் இருப்பது பொறுக்காமல் அதை எடுத்துவர காவலரை அனுப்புகிறார். வலியதம்பி அந்த மெத்தை தனக்கு உரியதென்றும், அதை எடுக்க மன்னருக்கு உரிமை இல்லை என்றும் கூறி தடுக்கின்றார். கோபத்தில் மெத்தையைக் கத்தியால் கீறிப் பஞ்சைக் காற்றில் பறக்க விடுகிறார்.

இந்த நிகழ்ச்சியால் மார்த்தாண்டவர்மா பெரும் கோபம் அடைகிறார். மாமா இராமவர்மாவின் தம்பிகளின் குடும்பத்திற்குக் கொடுத்திருந்த சொத்துக்களை எடுத்து விடுகிறார். மானியங்களும் கிடையாது என்கிறார். தம்பிகள் நிலத்தின் தீர்வைகள் அரசுக்கே சொந்தம் என்கிறார்.

தம்பிகளுக்கும் மன்னருக்கும் பகை ஏற்படுவதற்காகக் கூறப்படும் கதைப்பாடலின் இந்தக் காரணங்கள் திருவிதாங்கூர் வரலாற்றுடன் ஓரளவு ஒத்துப் போகின்றன. சில வேறுபாடுகளும் முரண்பாடுகளும் உள்ளன.

தம்பிகளே மார்த்தாண்டவர்மாவிடம் தங்கள் தங்கையை மணக்குமாறு கேட்கின்றனர். மன்னர் அதற்கு மறுத்திருக்கிறார். தம்பிகளின் தங்கையை மணந்தால் திருவிதாங்கூர் ஆட்சி நிலைகுலையும் என்று அவர் கருதினார்[21]. இதே காரணத்தால் தம்பிகளின் தாய் மாமா கொச்சுமாறப் பிள்ளைக்கும், மார்த்தாண்டருக்கும் பகைமை வந்தது. இது குறித்த செய்திகளை மதிலக ஓலை கூறுகின்றனது[22].

21. கே. சிவசங்கரன், "வேணாட்டின்றே பரிணாமம்" 1993, ப. 217.

22. மேற்படி நூல், ப. 218.

அழகப்ப முதலியார் ஊரைக் கொள்ளையிடுதல்

தம்பிகள் மார்த்தாண்டரைப் பழிவாங்க நெல்லைச் சீமையிலிருந்த அழகப்ப முதலியாரிடம் உதவி கேட்டதைக் கதைப்பாடல் விரிவாகக் கூறுகிறது (வரி. 1046-1068). திருவிதாங்கூரின் நேரடி வாரிசு தாங்களே என்றும் அந்த உரிமையைத் தர மார்த்தாண்டர் மறுக்கிறார் என்றும் கூறினர். முதலியாருக்கு நல்ல பணமும், கள்ள பணமும் லஞ்சமாகக் கொடுக்கின்றனர். முதலியாரிடம் நாஞ்சில் நாட்டைக் கொள்ளையிட வரவேண்டும் என்று கூறுகின்றனர்.

கொள்ளை என்றதும் முதலியார் மகிழ்ச்சியடைகிறார். தம்பிகளுக்கு உதவுவதாக வாக்களிக்கிறார். முதலியாரின் படை முதலில் கடுக்கரையில் பாளையம் அடிக்கிறது. பின்னர் தெரிசனங்கோப்பு, சிறைமீட்ட ஊர், அழகியபாண்டியபுரம், திட்டுவிளை, பூதப்பாண்டி, வடசேரி, ஏழகரம், சுசீந்திரம் கோவில் ஆகிய இடங்களில் கொள்ளையடிக்கிறது.

இந்தச் செய்திகளைக் கதைப்பாடல் விரிவாகக் கூறுகிறது (வரி 1111-1140).

நாஞ்சில் நாட்டில் மதுரை நாயக்கர் படைகள் தொடர்ந்து கொள்ளையடித்திருக்கின்றன; படையெடுத்திருக்கின்றன. இந்தச் செய்திகளைத் திருவிதாங்கூர், மதுரை நாயக்கர் வரலாற்றை எழுதியவர்கள் நுணுக்கமாக கூறவில்லை. என்றாலும் குமரி மவாட்ட வில்லிசைப் பாடல்களில் இதற்கான குறிப்புகள் உள்ளன.[23]

---

23. வில்லிசைப் பாடல்களில் வடுகர் (தெலுங்கர்) படைகளின் பட்டியலில் தோட்டியார், கம்பளத்தார், குழுவர், நாயக்கர், சக்கிலியர் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். கொலைபட்டு தெய்வமாகிக் கைலையில் வரம் பெற்றவர்கள் முதலில் மதுரைப் படைவீட்டைப் பழிவாங்குகின்றனர்.

"வடுகர்குல வங்குசத்தை

வதைகள் செய்வோர் மாயமுத்து"

பலவேசக்காரன்க (அச்சில் வராத ஏடு)

கு. ஆறுமுகப் பெருமாள் நாடார், தோட்டுக்காரி அம்மன் கதை 1981, ப. 48. தி. நடராஜன், உலகுடையார் கதை, 1981. ப. 419, நா. வானமாமலை, ஐவர் ராசாக்கள் கதை, 1974, ப.149.

நாஞ்சில் நாட்டு வரலாற்று ஆவணமான முதலியார் ஓலைச்சுவடிகளிலும்[24] இச்செய்திகள் விரிவாகவே கூறப்படுகின்றன. நாஞ்சில் நாட்டில் அழகப்ப முதலியார் நடத்திய கொள்ளை குறித்த கதைப்பாடல்களின் செய்திகள் முதலியார் ஓலைச்சுவடியுடன் மிகவும் ஒத்துப் போகின்றன[25].

---

24. நாஞ்சில் நாட்டு அழகியபாண்டியபுரம் என்ற ஊரில், நாஞ்சிநாட்டு வரலாற்றுடன் தொடர்புடைய குடும்பங்கள் இருந்தன. அவர்கள் முதலியார்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் வேணாட்டு அரசருக்காக வரிவசூலிக்கும் பொறுப்பையும், நாஞ்சில் நாட்டுக் கூட்டத் தலைமைப் பொறுப்பையும், சிறிய தண்டனை வழங்கும் உரிமையையும் பெற்றிருந்தனர். இந்த முதலியார்கள் வீட்டில் நிறையவே ஓலை ஆவணங்கள் இருந்தன. இவற்றில் 107 ஆவணங்களில் மூலங்களை மட்டும் திருவிதாங்கூர் அரசு வெளியிட்டுள்ளது (1910).

கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை 94 ஆவணங்களைப் பிரதி செய்து வைத்துள்ளரர். 19 ஆவணங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார் (Mudaliar manuscript series 7, pp 17-40). எஞ்சிய 500-க்கு மேற்பட்ட ஆவணங்கள் திருவிதாங்கூர் தொல்பொருள் காப்பகத்தில் உள்ளன. இந்த ஆவணங்களில் கி.பி. 15,16,17,18,19ஆம் நூற்றாண்டுகளில் நாஞ்சில் நாட்டின் படைஎடுப்பு, வேளாண் தொழில்நிலை குறித்த செய்திகள் பேசப்படுகின்றன.

(முதலியார் ஓலைச்சுவடி குறிப்பிடும் நாஞ்சில் நாட்டு நாயக்கர் படையெடுப்புகள்)

கி.பி.1707 - ஸ்ரீனிவாச ராவ், பெற்றாரெட்டி தலைமையில் படையெடுப்பு

கி.பி.1714 - அன்ந்தோசி நாயக்கர் தலைமையில் படைஎடுப்பு

கி.பி.1722 - சிவசைல முதலியார் வேணாட்டு மன்னர் ஒருவருக்காக நாஞ்சில் நாட்டில் வரிப்பிரிப்பதற்கு உதவி செய்ய படையுடன் வந்தார்.

கி.பி.1723 - சுப்பையன் நாயக்கர் தலைமையில் கொள்ளையடிப்பு

கி.பி.1725 - அழகப்ப முதலியார் படையெடுப்பு

25. அழகப்ப முதலியார் நாஞ்சில் நாட்டில் கொள்ளையடித்த செய்தியை முதலியார் ஓலைச்சுவடி (கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் கையெழுத்துப் பிரதியில் உள்ளது) பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"கிழக்கு நிந்நும் அரமனையார் வகை இராணுவும் குதிரையும் கொண்டு அழகப்பன் முதலி 900ஆம் ஆண்டு (கி.பி.1725) தைமாதம் 22ஆம் தேதி முதல் வைகாசி 25ஆம் தேதிவரை திருப்பதிசாரத்திலும் பெருவிளையிலும் தெரிசனங்கோப்பிலும் புலியூர் குறிச்சி டிலாவிளையிலும் இரணிய சிங்கநல்லூர் கிழக்கே புறத்து சரவிளையிலும் பாளையம் செயிதுபடை பொருக்கொண்டும் நாஞ்சி நாட்டில் மங்கலம் முதல் மணக்குடி வரை படை வருகக் கொண்டும் - - - -" அழகப்பமுதலியார் 1725-ல் கொள்ளையடித்த செய்தியே முதலியார் ஓசைச்சுவடியில் உள்ளது. 1729-34ஆம் ஆண்டுக்குள் மீண்டும் ஒருமுறை தம்பிமார்களுக்காக முதலியார் வந்திருக்க வேண்டும்.

மன்னர், மார்த்தாண்டவர்மாவிடம் "சுசீந்திரத்தில் கோவில் திருவிழா வரப்போகிறது. கோவிலில் பாத்திரங்கள் இல்லை. அவை எங்கே என்று கேட்கிறார். தம்பிகள் "முதலியார் கொள்ளையடித்து விட்டார்" என்கின்றனர். கதைப்பாடல் கூறும் இச்செய்திக்கு வரலாற்றுச் சான்று உண்டு[26].

### தம்பிகளும் மார்த்தாண்டவர்மாவும் சமாதானப்படுத்தப்படுதல்

அழகப்ப முதலியார் தன் குதிரைப்படைகளுடன் பத்மநாபபுரம் அருகே கூடாரம் அடித்த செய்தி மார்த்தாண்டருக்குத் தெரிந்தது. அவர் முதலியாருடன் போர் செய்ய எட்டு மாடம்பிமார்களை அழைக்கிறார். மன்னரும் மாடம்பிமார்களும் முதலியாரை எதிர்த்து போர் செய்கின்றனர். முதலியார் பின்னடைகிறார். மன்னர் முன்னேறுகிறார். இந்த நேரத்தில் மாடம்பிமார் சதி செய்கின்றனர். போர்க்களத்திலிருந்து பின்வாங்குகின்றனர். உடனே முதலியார் முன்னேறுகிறார். மன்னர் ஓடி ஒளிய வேண்டிய நிலை வருகிறது. ரகசியமாகத் தப்பிச் செல்கிறார். தம்பிகள் மன்னரைத் தேடிக்கண்டுப் பிடிக்கின்றனர். வாளால் அவரை வெட்டப் போகும்போது முதலியார் தடுக்கிறார். பின் தம்பிகளுக்கும், மன்னருக்கும் சமரசம் செய்து வைக்கிறார். இது கதைப்பாடல் கூறும் செய்தி.

### தம்பிமார் கதை - மாடம்பிமார் கதை வேறுபாடுகள்

மாடம்பிமார்கதை வேறுவிதமாகக் கூறுகிறது. மாடம்பிமார்களில் மூத்தவரின் மகளை மார்த்தாண்டவர்மா மணக்க மறுத்ததால் மாடம்பிகளுக்கும் மன்னருக்கும் பகைமை வருகிறது. மன்னர் கோவில் கணக்குகளைச் சரியாக எழுதவில்லை என அவதூறு கிளப்புகிறார்கள். இதனால் மன்னர் வெகுண்டு 16 மாடம்பிமார்களுடன் போர்செய்து அவர்களைத் தூக்கில் தொங்கவிடுகிறார்.

இவ்விரு கதைப் பாடல்களிலும் வரலாற்று முரண்பாடுகள் உள்ளன. இரண்டு கதைகளும் குறிப்பிடும் மாடம்பிமார்கள் திருவிதாங்கூரின் முக்கிய நிலச்சுவாந்தர்களான எட்டுவீட்டுப் பிள்ளைமார்கள்தாம்.

---

26. Popular Tradition association with Alagappa Mudaly a terrible plunder of Suchindrum, besides it is believed that a huge vessal of bronze belonging to the pagoda was taken away by his marauder. K.K.Pillai, 1953, p.50.

இவர்கள் இரு கதைப்பாடல்களும் மாடம்பிமார் என்றே குறிப்பிடுகின்றன. வரலாற்றாசிரியர்கள் இவர்களை மாடம்பிமார்கள், எட்டுவீட்டு பிள்ளைமார்கள் என்று சொல்லிக் குறிப்பிடுகின்றனர். தம்பிகள் கொலை செய்யப்பட்ட பின்பு தம்பிகளின் குடும்பத்துப் பெண்களையும், மாடம்பிமார்களின் குடும்பத்துப் பெண்களையும் முட்டம் கடற்கரையில் வாழ்ந்த முக்குவர்களிடம் ஒப்படைத்து விட்டனர் என்பது மரபு வழிவந்த செய்தி[27].

மாடம்பிமார்களின் எண்ணிக்கை எட்டு எண்பது பொதுவான மரபு. மாடம்பிமார் கதை அவர்கள் 16 பேர் என்கின்றது. வரலாற்றாசிரியர்கள் 16 பேர்களின் பட்டியலையும் தருகின்றனர்[28]. இவர்களில் போற்றி, பண்டாலை என்றும்·இரு நம்பூதிரிகள் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டனர். பிறர் கைது செய்யப்பட்டனர் என்ற கருத்தும் உண்டு[29].

---

27. வலியதம்பி குஞ்சுதம்பி கதை, வில்லிசை நிகழ்ச்சிகளில் கீழ்கண்ட பாடல் பாடப்பட்டதாக முத்துசாமிப்புலவர் கூறினார்.

கச்சைமுறி புடுத்த பெண்டுகளை
கண்ணாடி முண்டுடுத்த பெண்டுகளை
முக்குவர் தன்னே போட்டியிட்டு
ஏலம் எடுத்தார் நூறுநூறு
கொச்சு குஞ்சு குறுமான்களை
ஏலம் எடுத்தா நூறுநூறு

கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு கலவரத்தின் (1981) பின்னர் இப்பாடல் பாடப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

28. எட்டு வீட்டுப் பிள்ளைமார்கள் 1. சங்கர பண்டாரக் குறுப்பு 2. கொச்சு மாதேவன் பண்டாரக் குறுப்பு 3. தெற்கே வீட்டு ஈச்சம்பி குறுப்பு4. வடக்கே வீட்டு ஈச்சம் குறுப்பு 5. சிறயின்கீழ் முண்டக்கல் காமக்கோட்டி பிள்ளை 6. மகுடம் சேரி இரவிக்குட்டிப் பிள்ளை 7. சிறுபள்ளி நம்புகாளிப் பிள்ளை 8. வரியன் பிள்ளை என்ற குஞ்சுராமன் பிள்ளை

இந்த எட்டு பேருடன் கீழ்வரும் எட்டுபேரையும் சேர்த்து 16 மாடம்பிமார்களாகக் கூறுகின்றார் டி.கே. வேலுப்பிள்ளை.

1. குளத்தூர் கணக்கு காளிகாளி 2. களக்கூட்டம் கணக்கு ராமன் ஈஸ்வரன் 3. சிறையின்கீழ் வடக்கே வீட்டு கணக்கு சிறுப்பள்ளி மார்த்தாண்டன் அனந்தன் 4. பரகோட்டு கணக்கு அய்யப்பன் விக்கிரமன் 5. கணக்கு தம்பிராமன் ராமன் 6. பாண்டி கூட்டத்து கணக்கு சங்கர நாராயணன் அய்யப்பன் 7.போற்றி 8. பண்டாலை

இந்தப் பதினாறு பேரில் பண்டிக் கூட்டத்து கணக்கு சங்கர நாராயண அய்யப்பன் என்பவர் மட்டும் நாஞ்சில் நாட்டுத் தமிழர். பிற 15 பேர்களும் மலையாளிகள்.

T.K. Velupillai, Travancore State Manual, Vol. II, 1940, p.273.

29. Ibid

கதைப்பாடல்கள் யோகக்காரர்களைக் குறித்து எதுவும் பேசவில்லை. ஆனால் மார்த்தாண்டவர்மா சுசீந்திரம் யோகக்காரர்களின் கொட்டத்தை அடக்கிய நிகழ்ச்சியை கே.கே.பிள்ளை விரிவாகவே கூறுகிறார். மதம் கடவுள் கோவில் என்ற போர்வையில் நாட்டில் தலைவனைப் புறக்கணித்த கோவில் நிர்வாகிகளின் வீடுகளை அரசரே உடைத்தெறிந்திருக்கிறார்[30].

தம்பிமார்கள் கொலை செய்யப்பட்ட இடம் நாகர்கோவில் எனக் கதைப்பாடல் கூறும் (வரி. 1460). இதை வாய்மொழி மரபு உறுதிப்படுத்துகிறது[31].

வலியத்தம்பி, குஞ்சுதம்பி கதை, மாடம்பிமார் கதை ஆகிய இரு கதைகளையும், தம்பிமார்களுக்கு வழிபாடு நிகழும் கோவில்களில் பாடப்படும் வல்லிசை நிகழ்ச்சியையும், வாய்மொழி மரபுகளையும் ஒருசேர வைத்துப் பார்க்கின்றபோது வரலாற்றாசிரியர்கள் கூறாத சில சமூக முரண்பாடுகளை உணர்த்துவதை அறிய முடிகிறது.

### மக்கள்-மருமக்கள் வழி போராட்டம்

தம்பிமார்களின் தாய் அபிராமி தமிழ் நாட்டிலிருந்து குடியேறியவர்கள். தம்பிமார்கள் நாஞ்சில் நாட்டில் அதிகாரிகளாக இருந்திருக்கின்றனர். தம்பிமார்களின் சொத்துக்கள் நாஞ்சில் நாட்டிலேயே இருந்தன. ஆனால் நாஞ்சில்நாட்டு வேளாளர்கள் முழுக்கவும் மன்னரை ஆதரித்திருக்கின்றனர். நாயர்களில் சில குடும்பங்களைத் தவிர பிறர் மன்னரை ஆதரித்திருக்கின்றனர். நாடார்கள் பொத்தையடி ஊரைச் சார்ந்த சில குடும்பங்கள் மட்டும் மன்னரை ஆதரித்தன[32]. நாடார்களில் பெரும்பான்மையானவரும் பணிக்கர் சமூகத்தினரில் சிலரும் தம்பிகளின் ஆதரவாளர்களாக இருந்திருக்கின்றனர்.

---

30. K.K. Pillai, 1953, p.50.

31. தம்பிமார்கள் கொலைப்பட்ட அரண்மனை இருந்த இடத்தில் இப்போது காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளது. சுமார் 20-25 ஆண்டுகளுக்கு முன்புவரை அரண்மனை இருந்ததற்கு அடையாளங்கள் இருந்தன.

32. "ஓட்டன் கதை" என்ற கதைப்பாடல் மன்னருக்கு ஆதரவாளர்களின் தொடர்பானது. இக்கதை தொடர்பான குடும்பங்கள் நாகர்கோவில் கன்னியாகுமரி சாலையில் 10 கி.மீ. தொலைவில் உள்ள பொத்தையடி மருந்துவாள் மலை அடிவாரம் என்ற கிராமத்தில் வாழ்ந்தனர். இவர்களின் மரபினர் என்று கூறிக் கொள்ளுகின்றவர்கள் இவ்வூரில் இன்னும் வாழ்கின்றனர்.

எனவே இந்தச் செய்திகளின் அடிப்படையில் பார்க்கும் போது மக்கள் வழி, மருமக்கள் வழி போராட்டமாக மக்கள் தம்பிகளின் போராட்டத்தைக் கருதலாம். நாஞ்சில் நாட்டு வேளாளர்கள் மருமக்கள் வழியைப் பின்பற்றுபவர்கள். நாடார்களோ மக்கள் வழியினர். எனவே நிலஉடைமையாளர்களான வேளாளர்கள் மருமக்கள் வழியைப் பின்பற்றும் மன்னரின் ஆதரவாளர்களாக இருந்தனர் என்று கூறலாம்.

இரண்டாவது முக்கியமான செய்தி அழகப்ப முதலியார் நாஞ்சில் நாட்டில் கொள்ளையடித்த நிகழ்ச்சி. நாயக்கர் படையெடுப்பின் போதெல்லாம் பெருமஅளவு பாதிக்கப்பட்டவர்கள் நாஞ்சில் நாட்டு வேளாளர்கள்தாம்[33]. எனவே மருமக்கள்வழியைப் பின்பற்றிய நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் மேல் தம்பிகளுக்கு ஆத்திரம் இருந்திருக்கிறது. அழகப்ப முதலியாரைக் கொண்டு நாஞ்சில் நாட்டைக் கொள்ளையிடத் தூண்டியதும் இதனால்தான் என்றும் கூற முடியும்.

---

33. முதலியார் ஓலைச்சுவடிகள், திருவிதாங்கூர் அரசு வெளியீடு, திருவனந்தபுரம் 1910 எண்.16.

கொல்லம் 873 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 9 ஆம் தேதி நாட்டுத் தங்கடம் தீர்ந்து கல்வெட்டி நாட்டிக் கொடுத்தவக நாயக்கரிடே படைவந்து நாஞ்சிநாட்டு 852 ஆம் ஆண்டு முதல் பலநாளும் படைவந்து!

படைக்கேடு வருககொண்டு 849 ஆம் ஆண்டு முதல் 869 ஆம் ஆண்டு வரைக்கி அஞ்சாலி அடைச்சு நீக்கி அடைக்க வேண்டும் . . . .

## வலிய தம்பி குஞ்சு தம்பி கதை சுருக்கம்

திருவனந்தபுரத்திலும், திருவிதாங்கோட்டதிலும், பத்மநாபபுரத்திலும் பெரிய பெரிய துரைமார்கள் வாழ்ந்திருந்தனர். இத்தகைய நாட்டை ராமவர்மத் தம்புரான் ஆண்டு வந்தார். மன்னரின் கட்டளைப்படி நாட்டில் உள்ள ஆலயங்களில் ஆறாட்டும், திருவிழாக்களும் நடந்தன. ஒருமுறை சுசீந்திரம் தாணுமாலயன் கோவிலில் நடந்த மார்கழித் திருவிழாவைக் காண மன்னர் வந்தார்.

வடநாட்டில் அயோத்தி என்ற பட்டணத்தில் இடையர் குலத்தில் பிறந்த அபிராமி என்பவரும், அவளுடன் பிறந்த கிருஷ்ணன் என்பவனும் அயோத்தி மகாதேவர் கோவிலில் நடனப்பணியைச் செய்து வந்தனர். ஒரு சமயம் அயோத்தியில் பெரும் பஞ்சம் வந்தது. அப்போது அபிராமியும், கிருஷ்ணனும் இனி நாம் இந்த ஊரில் இருக்க வேண்டாம். தட்சண பூமிக்குச் செல்லுவோம் என முடிவு கட்டி தெற்கு நோக்கி வந்தார்கள்.

அயோத்திவிட்டு நடந்து கங்கைகொண்டான், கயத்தாறு ஆகிய ஊர்களைக் கடந்து ஆசிரமம் என்ற ஊருக்கு வந்தார்கள். அங்கு இரவு தங்கிவிட்டு திருக்குறும்குடி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நாங்குனேரி, வள்ளியூர், பணக்குடி என்ற ஊர்களைக் கடந்து ஆரல்வாய்மொழி வந்தனர். அங்கே ஒருநாள் தங்கிவிட்டு தோவாளை, வெள்ளமடம் ஆகிய ஊர்களைத் தாண்டி ஆனைப்பாலம் வழியாகச் சுசீந்திரம் ஊருக்கு வந்தனர். அங்கு மார்கழித் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அபிராமி சுசீந்திரம் கோவில் தெய்வமான தாணுமாலயனைத் தொழுதாள். தம்குறைகளைச் சொல்லி வணங்கினாள். பின்னர் மன்னரைத் தரிசித்தாள்.

அபிராமி மன்னரை வணங்கிவிட்டு தன் வரலாற்றைக் கூறினாள். ''அயோத்திப் பட்டணத்தில் வாழ்ந்தவர்கள் நாங்கள். அங்கு மழையின்றிப் பஞ்சம் வந்தது. அதனால் பிழைக்க இங்கு வந்தோம்'' என்றாள். அவளது தாமரை போன்ற முகத்தை ராமவர்மா பார்த்தார். அவள்மீது ஆசை கொண்டார். அவளது அழகு அவரைக் கவர்ந்தது. அவளுக்குப் பட்டும், கச்சையும் கொடுக்க விரும்பினார். அவளது ஜாதகத்தை கணித்த மந்திரிமார் அவளுக்குப் பட்டும் கச்சையும் கொடுக்க நேரம் குறித்தனர். மன்னரும் அப்படியே நாதசுரம் ஒலிக்க, குரவை முழங்க அவளுக்குப் பட்டும், கச்சையும் கொடுத்தார். அவளது அண்ணனுக்கு நல்ல கவணியும் கொடுத்தார்.

மன்னர் சுசீந்திரத்திலிருந்து புறப்பட்டார். அபிராமி மன்னரின் அருகே பல்லக்கில் வந்தாள். அவளது அண்ணன் குதிரையில் வந்தான். அவர்கள் நாகர்கோவில், சுங்கான்கடை, செட்டிமடம் கடந்து இரணியல் அரண்மனைக்கு வந்தனர். மன்னர் அபிராமியை அம்மை தம்புரான் என அழைத்தார். அவளது அண்ணன் கிருட்டிணனுக்குக் கொச்சுமாறப் பிள்ளை எனப் பெயர் கொடுத்தார்.

அம்மை தம்புரானும், மன்னரும் பள்ளியறை சேர்ந்தனர். இருவரும் மனம் பொருந்தி வாழ்ந்தனர். அம்மை தம்புரான் கடவுள் அருளால் கர்ப்பம் உற்றாள். பத்தாம் மாதத்தில் ஆண் மகவு ஒன்றை ஈன்றாள். அக்குழந்தையின் வலதுகையில் சங்கு, சக்கர ரேகை இருந்தது. குழந்தையின் எதிர்காலத்தைக் கணிக்க சோதிடன் வந்தான்.

சோதிடன் பரல்களைப் பரத்தினான். நாள் கிரகங்களைக் கணித்தான். தம்புரானைப் பார்த்துச் சொன்னான். ''தம்புரானே இக்குழந்தை உத்திர நட்சத்திரத்தில் பிறந்தது. யோகம் உள்ளதுதான். இவனுக்கு ஒரு தம்பியும், ஒரு தங்கச்சியும் பிறப்பார்கள். பின்னாளில் இந்த நாட்டை ஆளப்போகின்ற மன்னர் அம்மை தம்புரானின் மகளை திருமணம் செய்ய விரும்பிக் கேட்பார். அவளது அண்ணன்மார்கள் அதற்கு இணங்க மாட்டார்கள். அதனால் இரு ஆண்பிள்ளைகளும் கொல்லப்படுவார்கள்'' என்றான். மன்னர் அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். என்றாலும் வருவது வரட்டும் என அமைதியாக இருந்தார்.

மன்னர் மூத்த மகனுக்கு ஆபரணங்கள் செய்யத் தட்டானை வரவழைத்தார். அவனுக்குப் பொன்னை நிறுத்துக் கொடுத்தார். மூத்தமகன் வலியதம்பிக்கு மூன்று வயதானபோது அம்மைதம்புரான் இரண்டாவது ஆண்குழந்தையைப் பெற்றாள். அதைக் குஞ்சுதம்பி என்றனர். அதைக் கொச்சுமணித் தங்கை என அழைத்தார்.

கொச்சுமணித் தங்கையின் எதிர்காலத்தைக் கணிக்க சோதிடனை அழைத்து வந்தனர். சோதிடன் பரல்பரப்பிப் பார்த்தான். பலனைச் சொன்னான். "வலிய தம்பிக்கு 22 வயதாக ஆகும்போது இந்தப் பெண் 16 வயது மங்கையாக இருப்பாள். அப்போது வன்கொலை நிகழும். இந்த நாட்டின் மன்னராகப் பின்னர் பட்டம் ஏற்கப் போகின்ற மன்னர் கொச்சுமணித் தங்கையைப் பெண் கேட்பார். தம்பிகள் பெண் கொடுக்க மறுப்பார்கள். அதனால் அந்த மன்னருக்கும், தம்பிகளுக்கும் இடையே பிணக்கு வரும். அந்த மன்னர் தம்பிகளின் அதிகாரத்தை ஒடுக்குவார். சொத்துக்களைப் பறிப்பார். தம்பிகளைக் கொல்லவும் செய்வார்" என்றான்.

வலிய தம்பிக்கு ஏழு வயதானபோது அவனுக்கு எழுத்தறிவிக்க வேண்டும் என நினைத்தார் ராமவர்மா மன்னர். மந்திரி "பத்மநாபபுரத்தில் நீலகண்ட பிள்ளை என்ற ஒருவர் உண்டு. குடும்பத்திற்குக் கல்வி கற்பிப்பதில் சமர்த்தர். அவரை அழைக்கலாம் என்றார். அந்த அண்ணாவிற்கு ஆள் அனுப்பினார் மன்னர். ஒட்டன் பத்மநாபபுரத்திற்கு ஓடிச் சென்றார். அண்ணாவியை நாடாளும் மன்னர் அழைப்பதாகச் சொன்னார். அண்ணாவி அந்த மொழிக்கேட்டு "இது என் கடமை" என்றார்.

அண்ணாவி தலையில் சிவப்பு உருமாலைக் கட்டிக் கொண்டார்; நெற்றியிலே நீறணிந்தார்; கேரளபுரத்திற்கு நடந்து வந்தார். அங்கே வலிய தம்பி, குஞ்சுதம்பி ஆகிய இருவரும் அண்ணாவியைச் சந்தித்தனர். அண்ணாவி தம்பிகளை அழைத்துக்கொண்டு மன்னரிடம் வந்தார். மன்னரிடம் தம்பிகள் படிப்பதற்குப் பள்ளிபுரை கட்டவேண்டும் எனக் கேட்டார். மன்னவரும் அதற்கு ஆணையிட்டார். சிங்கநல்லூரின் மேற்கு பக்கம் மேற்கு தெருவில் பள்ளிபுரை கட்டினார்கள். அந்த அறையில் எல்லா கடவுளர்களின் ஓவியங்களையும் வரைந்து வைத்தார்கள். ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி மேடைகள் கட்டினார்கள்.

ஒரு நல்லநாளில் ஆசான் தம்பிகளுக்குக், கல்வி கற்பிக்க ஆரம்பித்தார். தமிழ், மலையாளம், ஆங்கிலம் முதலிய மொழிகளையும் கணக்கு வழக்குகளையும் ஆசான் கற்பித்தார். அவர்கள் கற்கும் திறமை கண்டு ஆசான் திகைத்தார். ஆசான் மன்னரிடம் "இத்தகைய சீடர்களை நான் கண்டதில்லை" என்றார்.

மன்னர் வலிய தம்பிக்கு ஒன்பது வயதானதும் வாள் சண்டை, மற்போர், உடைவாள் வெட்டு ஆகியன கற்பிக்க விரும்பினார். அதற்குரிய அறையையும் கட்டி முடித்தார். தகுந்த ஆசானை வரவழைத்தார். ஆசான் தம்பிகளுக்குப் பலவகையான போர்முறைகளைக் கற்பித்தார். பொன்னங்குருவி பாய்வது போல போரில் பாயும் முறையையும், வல்லயங்கொண்டு எறிகின்ற முறையையும், கைகளால் பூட்டுப் போடுகின்ற முறையையும் வர்மத்தட்டு முறையையும், இப்படி பலவகைப் போர் முறைகளைக் கற்பித்தார். தம்பிகள் இருவரும் ஆசானை விஞ்சும் அளவுக்குத் திறம் பெற்றனர். இதைக்கண்ட மன்னர் மகிழ்ந்தார். ஆசானுக்கு 1008 களஞ்சு பொன்னைக் கட்டிக் கொடுத்தார். ஆசான் தம்பிகளுக்கு யானை ஏற்றமும், குதிரை ஏற்றமும் கற்பித்தார்.

தம்பிமார்கள் இவ்வாறு எல்லா கலைகளையும் கற்று இன்பமுடன் வீற்றிருந்தனர். இராமவர்மாவும், கிட்டிணத்தம்மாளும் இணைபிரியாத

புறாக்களாக வாழ்ந்து வந்தனர். மன்னர் ராமவர்மா நாம் உயிருடன் இருக்கும்போதே நம் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்க வேண்டும். நாம் இறந்த பிறகு இவர்களை யாரும் கவனிக்க மாட்டார்கள் என்று நினைத்தார். நாலாமுட்டில் உள்ளசந்தையில் முதலெடுப்பு தீர்வை, கொடுப்பக்குளி பேட்டையில் முதல்எடுப்பு, தாழாக்குடி பகுதிகளில் வரிப்பிரிக்கும் பொறுப்பு, கூட்டப்புளி, கொடுப்பக்குளி, அம்மாண்டிவிளை போன்ற இடங்களில் நிலங்களும் தம்பிகளுக்கு கொடுத்தார். கொச்சுமணித் தம்புரானுக்கு மூன்று ஏக்கர் நிலம் கொடுத்தார்.

மக்கள் மூவருக்கும் நிறைந்த செல்வத்தைக் கொடுத்த மகிழ்ச்சியில் மன்னர் இருந்தார். இந்தக் காலகட்டத்தில் முன்னோரின் வழக்கப்படி ராமவர்மாவும் தீர்த்தமாடச் சென்றார். தம்பிமார்கள் ஆயுதங்களுடன் மன்னருக்குக் காவலாகக் குதிரையில் சென்றனர். மன்னர் சிங்கநல்லூர் அரண்மனையை விட்டுப் புறப்பட்டு அச்சம்பாறையைக் கடந்து தலக்குளம் ஏலாவைக் கடந்து வள்ளியாபுரம் வந்தார்.

வள்ளியாபுரத்தை அடுத்த எழுத்திட்டான் பாறையில் ஒரு காலத்தில் ஒரு பூதம் எழுதி வைத்திருந்த வாசகத்தை மன்னர் படித்தார். அதனால் மகிழ்ச்சியடைந்தார். பின்னர் பேய் கடுக்காய்மூடி, மம்மத்து மூலைக் கடந்து வள்ளியாறு வந்தனர். பின்னர் வாலியாம்பாறை என்ற இடத்துக்கு வந்தார். அந்த இடம் எல்லா ஆறுகளும் ஒன்றாகக் கலக்குமிடம். புண்ணிய தீர்த்தம் என மந்திரிகள் கூறினார்கள். படை பரிவாரங்களும் தீர்த்தமாடின. மன்னர் ஆற்றங்கரையில் ஏறிய சமயத்தில் கடல் பெருக்கெடுத்தது.

மன்னர் கடலைப் பார்த்தார். அவருக்கு அங்கமெல்லாம் நடுங்கியது. எல்லோரும் காணும்படியாகத் தன் விரலைத் துண்டித்துக் கடலில் எறிந்தார். விரல்துண்டு உதிரம் சொரிந்தபடி ஆற்றில் விழுந்தது. உடனே கடல் அடங்கியது. அலை நின்றது. மன்னர் மனம்மகிழ்ந்தார். மன்னர் விரலைத் துண்டித்த இடம் கைக்கடிகைப்பட்டணம் என பெயர் பெற்றது.

மன்னர் தீர்த்தமாடிய பின்னர் சிங்கநல்லூருக்குப் புறப்பட்டார். அப்போது முத்தாரம்மன் தேரில் எதிரே வந்தாள். வட்டி நிறைய வகைவகையாய் முத்துக்களைக் கொண்டு வந்தாள். அந்த வித்துக்களை வாரி மன்னரின் மேலே எறிந்தாள். அடுத்த நாள் மன்னருக்குக் கொடுங்காய்ச்சல் அடித்தது. மன்னர் அன்ன ஆகாரம் புசியாமல் கிடந்தார். பஞ்சு மெத்தையில் துயின்ற மன்னனைப் பருமணலில் கிடத்தினார்கள்.

மன்னரின் அருகே இரண்டு மகன்களும், மகளும் நின்று அழுதனர். கிட்டிணத்து அம்மையும் கலங்கி நின்றார். மன்னர் மந்திரிகளிடம், "நான் இனிப் பிழைக்க மாட்டேன், இந்த நாட்டை ஆளுவதற்கு ஒரு அரசனை நியமிக்க வேண்டும். ஆற்றுங்கல்லில் அரசாளும் அழகன் வாலவஞ்சி மார்த்தாண்டரை இங்கு அழைத்துவர வேண்டும்" என்றார்.

துரிதமாகச் செல்லும் காவலர்கள் ஆற்றுங்கல்லுக்குச் சென்றனர். அங்கு அரச வம்சத்தின் தாயாதிக் குடும்பத்தைச் சார்ந்த வாலவஞ்சி மார்த்தாண்டரைக் கண்டு ராமவர்மாவின் எண்ணத்தைத் தெரிவித்தனர். மார்த்தாண்டவர்மா புரவிமேல் வந்தார். ராமவர்ம மன்னரைக் கண்டார். அவரது வாடிய உடம்பைக் கண்டார். மனம் நெகிழ்ந்து அழுதார். மன்னரும் மார்த்தாண்டரைக் கையால் அணைத்து "இந்த பாருலகை நீ தான் ஆட்சி செய்ய வேண்டும். கிட்டிணத்தம்மாளுக்கும் என் பிள்ளைகள் மூன்று பேருக்கும் துணையாக நீ இருக்க வேண்டும். அவர்களுக்கு உறவு என்று சொல்ல வேறு யாரும் இல்லை. அவர்களுக்கு நான் விட்டுக் கொடுத்த சொத்துகளின் உரிமை இவர்களிடமே இருக்கட்டும். அந்த உரிமையை எடுத்து விடாதே. சுசீந்திரம் கோவிலின் படித்திரத்தை முடக்கி விடாதே" என்று நீண்ட அறிவுரை கூறினார். சேரநாட்டின் செங்கோலையும், முத்திரையையும் மார்த்தாண்டவர்மாவின் கையிலே கொடுத்தார். கண்ணை மூடினார். மன்னரின் ஆவி பிரிந்தது.

மன்னரின் கருமாதிகள் முறைப்படி முடிந்த பின்னர் மக்கள் மூவரும் சிங்கநல்லூர் அரண்மனையில் வாழ்ந்தார்கள். நாட்டின் நிர்வாகத்திலும், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதிலும் மன்னருக்குத் துணை இருப்பதாகத் தம்பிகள் வாக்களித்தனர். அப்படியே துணையாக இருக்கவும் செய்தனர். இப்படி இருக்கும் நாளில் ஒரு நாள் மார்த்தாண்டவர்மா கொச்சுமணித்தங்கையை நேரிலே கண்டார். அவள் மீது ஆசை கொண்டார். தன் முறைப்பெண் என்ற உரிமையும் அவருக்கு இருந்தது.

மன்னர் மந்திரிகளிடம் சிங்கநல்லூரிலிருந்த தம்பிகளை அழைத்து வருமாறு பணித்தார். காவலர்கள் மன்னர் அழைத்த செய்தியைத் தம்பிகளிடம் சொன்னார்கள். தம்பிகளும் மன்னரிடம் முகம் காட்டப் போகும்போது கடைப்பிடிக்க வேண்டிய நியமத்துடன் புறப்பட்டனர். பலவகை ஆபரணங்களை அணிந்தனர். ஆயுதங்களை எடுத்துக் கொண்டனர். தாயாரைத் தொழுது விடைவாங்கிப் புறப்பட்டனர். மன்னரைக் கண்டு வணங்கினர்.

பின்னர் தம்பிகளை அமரச் சொன்னார். பின் தம்பிகளிடம் "உங்கள் தங்கை கொச்சுமணிக்குப் பரிவட்டம் கொடுக்க விரும்புகிறேன். அவள்

எனக்கு முறைப்பெண் அல்லவா. எனக்கு அவளைத் திருமணம் செய்ய உரிமை இருக்கிறது" என்றார். இதைக் கேட்ட தம்பிமார் சினந்தனர்; பதறினர். "இல்லம் துருவம் என்னும் இரு பிரிவினர்களுக்குள் திருமணம் செய்யும் வழக்கம் உண்டோ! துருவத்தில் பிறந்த மன்னருக்கு நாங்கள் பெண்தர முடியுமா? இது நடக்கிற காரியமல்லவே" என்றனர்.

தம்பிகள் கொஞ்சம் சமாதானத்துடன் மீண்டும் பேசினர். "மன்னரின் வயதுக்கும் கொச்சுமணியின் வயதுக்கும் பொருந்திவரவில்லையே. என்றாலும் ஒரு நிபந்தனையின் வழி இதற்கு சம்மதிக்கிறோம். அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்குத்தான் இந்த நாட்டின் அரச பதவி கொடுக்க வேண்டும். இதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அப்படியானால் இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கிறோம்" என்றனர்.

தம்பிகளின் நிபந்தனையைக் கேட்ட மன்னர் வேங்கைப்புலிபோல் சீறினார். "நீங்கள் பேசுவது நியாயமல்லவே. என் கண்ணில் விழிக்காதீர். நீங்கள் எல்லோரும் மலைப் பகுதிக்குப் போய் விடுங்கள்" என்றார். மன்னர் திகைத்தார். விக்கி நின்றனர். தம்பிகள் மன்னரிடம் விடைபெறாமலே சிங்கநல்லூருக்குச் சென்றனர். தம்பிகள் சோர்ந்துபோய் இருப்பதைக் கண்ட கிட்டிணத்தம்மாள் "என்ன நடந்தது" எனக் கேட்டாள். தம்பிகள் நடந்ததைக் கூறினார்கள். தாயாரும் அதுகேட்டு மனம் வருந்தினாள்.

இப்படி இருக்கும் நாளில் மார்த்தாண்ட வர்மா இந்தத் தம்பிகளை நிம்மதியாக இருக்க விடக்கூடாது. என் மாமன் ஆண்டிருந்த, படுத்திருந்த பள்ளிமெத்தையை இந்தத் தம்பிகளுக்கு உரிமையாக இருக்க விட மாட்டேன். அதை எடுத்துவர வேண்டும்" என நினைத்தார். அப்படியே காவலர்க்கு ஆணையிட்டார்.

மன்னரின் ஆணையை ஏற்ற பட்டன்மார்கள் தம்பிகளின் இல்லத்துக்குச் சென்றனர். இராமவர்ம மன்னரின் மெத்தையையும் கட்டிலையும் எடுக்க முயன்றனர். இந்த நேரத்தில் முத்துமயில் இலவாணிச்சியின் வீட்டில் குஞ்சு தம்பி இருந்தார். அவருக்குக் காவலர்கள் மெத்தையை எடுக்க வந்த செய்தி கிடைத்தது. அவர் கோபத்துடன் அரண்மனைக்கு வந்தார். மெத்தையை எடுத்து செல்பவர்களைத் தடுத்தார். தன் வாளை உருவி அவர்களிடம் காட்டினார். "என் தந்தை எனக்கு கொடுத்த மெத்தையை நீங்கள் எடுப்பதா" எனக் கேட்டார். மெத்தையைக் கண்டதுண்டமாக வெட்டினார். பஞ்சைக்

காற்றில் பறக்க விட்டார். இதைக் கண்ட பட்டன்மார்கள் மன்னரிடம் ஓடிச் சென்று குஞ்சுதம்பி செய்த காரியத்தை சொன்னார்கள்.

நாடு நீங்கிய மன்னரின் மெத்தையைக் குஞ்சுதம்பி கிழித்துப் பறக்க விட்டார் என்ற செய்தியைக் கேட்ட மார்த்தாண்டவர்மா, "இந்தத் தம்பிகளை நான் வாழ விடப் போவதில்லை" என்றார். அவர்களுக்கு கொடுத்திருந்த மானியங்களைப் பறித்துக் கொண்டார். அவர்களின் சொத்துக்களை அரசு உடைமை ஆக்கினார். இதனால் தம்பிமார்களுக்கு மன்னர் பேரில் வஞ்சினம் வந்தது. மன்னரைப் பழிவாங்க வேண்டும் எனத் துடித்தனர். "பக்கத்துப் பகை நாட்டிற்குச் சென்று படைகொண்டு வரவேண்டும். அந்தப் படைகளால் மார்த்தாண்டரை அழிக்க வேண்டும். இந்த நாட்டை நம் வசம் ஆக்க வேண்டும் என முடிவு கட்டினர்.

தம்பிகளின் வைராக்கியம் கூடியது. வீட்டில் இருந்த வெள்ளி, வெங்கல பாத்திரங்களையும், ஆபரணங்களையும் முட்டைக் கட்டினர். தாயாரையும், தங்கையையும் அழைத்துக்கொண்டு சிங்கநல்லூர் கோவில்விட்டு சுசீந்திரம் சென்றனர். அங்கு ராமகிருஷ்ணக் குருக்கள் என்பவரின் வீட்டில் தயாரையும், தங்கையையும் இருத்தினார்கள். கொஞ்சம் நல்ல பணத்தையும் கொஞ்சம் கள்ளப் பணத்தையும் இரண்டு சாளியல் அளவு சுமடாகக் கட்டினர். பிச்சைக் கைப்பள்ளி நாயர், மாடன் பொன்னிற நாயர் ஆகியோருடன் பக்கத்து நாட்டுக்குப் புறப்பட்டனர்.

தம்பிமார் பகைநாட்டிற்குச் சென்று படையுடன் வரப்போகிறார்கள் என்ற செய்தி பரந்தது. நாஞ்சி நாட்டார்கள் தம்பிமார்களிடம் சென்றனர். யானையும், யானையும் மோதிக்கொண்டால் அவற்றிற்கிடையே அகப்பட்டுக் கொண்ட கொசு எதற்காகும். நீங்கள் படையோடு வந்தால் நாட்டில் அழிவுகள் நேருமே. படையெடுக்க வேண்டாம் என்றனர். தம்பிகளோ "இந்த நாடு எங்களுக்கு உரியது. நீங்கள் எத்தனை கூறினாலும் கேட்க மாட்டோம்" என்றனர். தம்பிகள் பிடிவாதமாக இருந்தனர்.

நெல்லைச் சீமையில் வரிப்பிரிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த அழகப்ப முதலியார் தம்பிமார்களைக் கண்டதும் மகிழ்ச்சியோடு வரவேற்றார். தம்பிமார்களும் அவரை வணங்கிவிட்டுத் தாங்கள் வந்த காரணத்தைக் கூறினர். "இராமவர்மாவின் மக்களாகிய எங்களுக்கு எங்கள் தந்தை விட்டுக் கொடுத்த சொத்துக்களையும், மானியங்களையும் மார்த்தாண்டவர்மா பறித்துக் கொண்டார். எங்களை நட்டாற்றில் விட்டு விட்டார். உங்களிடம் சரணடைய வந்தோம்" என்றனர். ஒரு சாளியல்

நல்ல பணத்தையும், ஒரு சாளியல் கள்ளப் பணத்தையும் முதலியாரின் முன்னே வைத்தனர்.

பணத்தைக் கண்ட முதலியாரின் முகம் மலர்ந்தது. தம்பிகளைப் பார்த்து "நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்?" என்று கேட்டார். தம்பிகள் "பத்மநாபபுரம் கோட்டையைப் பிடித்து எங்கள்வசம் ஒப்படைக்க வேண்டும். நீங்கள் நாஞ்சில் நாட்டில் மூன்று நாட்கள் கொள்ளையிட நாங்கள் உதவுகின்றோம்" என்றனர். கொள்ளை என்றதும் முதலியாரின் முகம் மீண்டும் மலர்ந்தது. "சந்தோசமாக வருகிறேன்" என்றார்.

அழகப்ப முதலியார் தன் பெரும் படைகளை அணிவகுத்தார். தம்பிகளின் ஆட்களும் சேர்ந்து கொண்டனர். சிந்துபூந்துறை விட்டு, திருக்குறுங்குடி வழியாகப் பணக்குடிக்கு வந்து கடுக்கரை வந்தனர். கடுக்கரையில் பாளையம் அடித்தனர். பின் அங்கிருந்து புறப்பட்டு நாஞ்சில் நாட்டின் 12 பிடாகைகளிலும் கொள்ளையடித்தனர். நாஞ்சில் நாட்டு ஊர்களை அழித்தனர். தம்பிகள் அங்கிருந்து சுசீந்திரம் சென்று கிட்டிணத்தம்மாளைக் கண்டனர். "அம்மா மயங்க வேண்டாம்; மார்த்தாண்டவர்மாவை மலைக்கு மேலே அனுப்பி விடுவோம்; கவலை விடுக" என்றனர்.

முதலியார் சுசீந்திரத்திற்கு வந்தார். கோவில் பாத்திரங்களையும், அணிகலன்களையும் கொள்ளை கொண்டார். பின் அங்கிருந்து தம்பிமார்களின் படைகளுடன் பத்மநாபபுரத்திற்குச் சென்றார்.

இந்த நேரத்தில் பத்மநாபபுரம் கோட்டையிலிருந்த மன்னர் பகைவர்களின் பீரங்கி முழக்கத்தைக் கேட்டார். கொச்சிரவி மார்த்தாண்ட பிள்ளை, கிட்ணன் கேசவன் மந்திரி ஆகிய இருவரையும் அழைத்தார். பகைவருடன் போரிட யாரை அனுப்புவோம் எனக் கேட்டார். களக்கூட்டத்துப் பிள்ளை, மகுடச்சேரி மார்த்தாண்ட பிள்ளை, 'வீரபாகு பிள்ளை, நெடுமங்காட்டு நீலகண்ட பிள்ளை, அனந்தபத்மநாப பிள்ளை ஆகியோர்களையும் வரவழைத்தார். மாடம்பிமார்கள் 16 பேரும் பத்மநாபபுரம் கோட்டைக்கு வந்தனர்.

பத்மநாபபுரம் கோட்டைக்கு வெளியே அழகப்ப முதலியாரின் படையும், மார்த்தாண்டரின் படையும் சந்தித்துக் கொண்டன. பெரும் போர் செய்தன. மாறி மாறி பீரங்கிக் குண்டுகளைப் பொழிந்தன. மாடம்பிமார்கள் முதலியாரின் எதிரே நின்று போர் செய்தனர். ஆனால் போரின் பாதியிலே மாடம்பிமார்கள் சதிசெய்தனர். ஓடிவிட்டனர்.

மன்னர் மாடம்பிமார்கள் சதித்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றார். தம்பிகளின் படை முன்னேறியது. மன்னர் கோட்டையின் ரகசியவழி மூலம் தப்பிக்க முயற்சி செய்தபோது தம்பிகள் கண்டு விட்டனர். நீண்ட வாளை எடுத்து மன்னரை வெட்டப் போனான் வலிய தம்பி. முதலி யார் அதைத்தடுத்தார். "அரசழிக்க நாயமில்லை. விட்டுவிடு" என்றார். தம்பிகளும் மன்னரைக் கொலை செய்யும் எண்ணத்தைக் கைவிட்டனர்.

இந்த நிலையில் மன்னர் அழகப்ப முதலியாரைச் சந்தித்தார். நல்ல பணமும் கள்ளப் பணமுமாக இரண்டு சாளியல் பணம் கொடுத்தார். முதலியார் மனம் மாறினார். போர் செய்வதை நிறுத்தினார்; தம்பிமார்களை அழைத்தார்; மன்னரிடம் வந்தார். நீங்கள் இனி போர் செய்யக்கூடாது. ஒருவரை ஒருவர் சதி செய்யக்கூடாது என்றார். தம்பிமார்களையும், மன்னரையும் பத்மநாபபுரம் நீலகண்டசாமி கோவிலுக்கு அழைத்துச் சென்றார்.

முதலியார் மன்னரையும் தம்பிகளையும் பார்த்து "இந்த நாட்டு முறைப்படி பாலும் கடையாலும் தொட்டு நாங்கள் இருவரும் சதிசெய்ய மாட்டோம் என சத்தியம் செய்யுங்கள்'' என்றார். அப்போது மார்த்தாண்டர் கள்ளத்தனமாக சத்தியம் செய்ய நினைத்தார். ஓர் ஈயை பிடித்தார். தன் நகத்துக்குள்ளே மறைத்து வைத்துக்கொண்டார். கோவிலின் முன் வாசலுக்குச் சென்றார். பாலும் கடையாலும் வைத்து ஈ உயிர் உள்ளவரை தம்பிகளுக்குத் துரோகம் செய்யமாட்டேன்" என்றார். உடனேயே அந்த ஈயை நசுக்கிக் கொன்றுவிட்டார். தம்பிமார்களோ ''நாங்கள் ஜீவன் உள்ள மட்டும் மன்னருக்குத் துரோகம் செய்ய மாட்டோம்" என உண்மை பேசினர்.

சத்தியம் செய்து முடிந்ததும் அழகப்ப முதலியார் மன்னரிடம் "அரசே தம்பிமார்களுக்கு உரிய மானியங்களைக் கொடுத்து விடுங்கள். அவர்களின் சொத்துக்களை அவர்களுக்கே திருப்பியளிக்க வேண்டும். இது என் கட்டளை" என்றார். மன்னரும் அதற்கு இணங்கினார். முதலி யார் இருவரும் சமாதானமாகி விட்டதாக எண்ணி தன் படையை அழைத்துக்கொண்டு பாண்டிச்சீமைக்குச் சென்றார்.

தம்பிகள் மன்னர் மனம் மாறிவிட்டார் என எண்ணித் தன் பரிவாரங்களுடன் சுசீந்திரம் சென்றனர். அவர்களுக்கு வரவேண்டிய மானியங்களும் ஒழுங்காக வந்தன. இந்த நிலையில் மன்னர் நாகர்கோவில் கொட்டாரத்துக்கு வந்தார். அவர் தம்பிகள் உயிரோடு இருப்பது வரை நாம் நிம்மதியாக வாழ முடியாது என உணர்ந்தார். தம்பிகளைக் கொலை செய்யத் திட்டமிட்டார். தன்னைச் சந்திக்குமாறு தம்பிகளுக்கு ஆள் அனுப்பினார்.

மன்னரின் கட்டளையை ஒட்டன் வலிய தம்பியிடம் சொன்னான். உடனே வலிய தம்பி மன்னரைக் காணப் புறப்பட்டார். பலவகையான அணிகளை அணிந்தார். ஆடைகளை அணிந்தார். தாயாரிடம் விடை பெற்றார். தாயார் கிட்டிணத்தம்மை "மன்னரின் கட்டளைக்கேற்றவாறு நடந்துகொள்" என்றார்.

வலிய தம்பி நாகர்கோவில் கொட்டாரத்தை அடைந்தார். மன்னரைக் கண்டார். மன்னன் வலியதம்பியை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவரைக் குறித்து விசாரித்தான். "உன் உடைவாளைத் தா'' என்றார். வலிய தம்பி சூது அறியாமல் தன் உடைவாளைக் கொடுத்தார். தம்பி வாளைக் கொடுத்ததும் மன்னரின் முகம் மாறியது. காவலர்களிடம் "கொட்டாரத்தின் எல்லாக் கதவுகளையும் அடைத்து விடுங்கள்" என்றார்.

தம்பி திகைத்து நின்றார். தம்பியின் வாளைத் தூக்கி எறிந்தார். தம்பியைப் பார்த்து "இப்போது கேட்பாய் தம்பி! சுசீந்திரத்தில் மார்கழித் திருவிழா நடக்க வேண்டியிருக்கிறது. கோவில் பூசைப் பாத்திரங்கள் வேண்டுமே. அரை நாழிகைக்குள் அவற்றைக் கொண்டுவா" என்றார். தம்பி "என்ன அரசே! அவற்றை அழகப்ப முதலியார் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்" என்றார். உடனே மன்னர் "அழகப்ப முதலியார் உன் அப்பனோ" என்றார். தம்பியோ "எனக்கு அவர் அப்பன் என்றால் உங்களுக்கு மாமன் அல்லவா'' என்றான். இந்த நேரத்தில் ஆசான்மார்களும், பணிக்கன்மார்களும் வலிய தம்பியைச் சூழ்ந்துக் கொண்டார்கள்.

மார்த்தாண்டவர்மாவின் வீரர்கள் தம்பிகளுடன் மல்லுக்கட்டினர். சிலரை கையாலே கொன்றான். ஆயுதமின்றி அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆசான்மார்கள் தம்பியைக் கட்டித் தூக்கிக்கொண்டு போய் மன்னரின் முன்னே கிடத்தினர். மன்னர் வாளால் அவனை வெட்டினார். வலிய தம்பி இறந்தார்.

வலிய தம்பி இறந்ததை தாழக்குடி கேள்வியில் இருந்த குஞ்சுதம்பி அறிந்தார். நாகர்கோவில் கொட்டாரத்திற்கு ஓடிச் சென்றார். கொட்டாரத்தினுள் நுழைந்தார். மன்னரின் அறைக்குள் சென்றார். மன்னரைக் கையிலிருந்த வாளால் ஓங்கி வெட்டினார். வாள் குறிதவறி உத்திரத்தில் பட்டது. மன்னர் விழித்துக்கொண்டார். அப்போது காவலர்கள் குஞ்சுதம்பியைச் சூழ்ந்துக் கொண்டனர். அவரைப் பிடித்துக் கட்டினர்.

மன்னர் குஞ்சுதம்பியை வெட்டினார். குஞ்சுதம்பி குருதி கொப்பளிக்க இறந்தார். இருவரும் மரணமடைந்த செய்தியை கிட்டிணத்தம்மை கேட்டாள். "என் மக்களே நீங்கள் இறந்தபின் நான் இருக்க மாட்டேன்" என்றாள். அவள் சொல்லியபடி இறந்து போனாள். தாயார் இறந்ததைக் கண்ட மகளும் இறந்து போனாள். கொச்சுமாறப் பிள்ளை மாமனும் இறந்தார். இறந்துபோன எல்லோரும் கைலாயத்தை அடைந்தனர். அவர்களை சிவபெருமான் வரவேற்றார். என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார். அவர்களுக்கு "புதுக்கூட்டத்து வாதை" எனப்பெயர் கொடுத்தார். தாயாருக்கும், தங்கையருக்கும் புகழ்பெரிய நீலி புதுக்கூட்டத்து இசக்கி எனப் பெயர் கொடுத்தான். அவர்களும் சிவன் கொடுத்த வரத்தை ஏற்று பூலோகத்தில் வீற்றிருந்தார்.

# Preface

Most of the stories of the popular ballads currently available in Tamil Nāṭu are found in the southern districts, especially in Kaṉyākumari and Tirunelvēli districts. Of the available in these two districts, except some particular ballads, most are found fit for rendering through the folk-art form called bow-song *villup pāṭṭu*. Hence, these ballads may also be called bow-songs. Almost all the bow-songs of the southern districts are related to folk-deity worship. It is customary on the part of the folk-artists including the bow-songsters, to base their story on the presiding deity of the particular temple at which they perform their art. This in turn, has helped fostering and preserving most of the ballads.

## Classification of bow-songs

The bow-songs of Tirunelveli and Kaṉyākumari districts can be classified into four categories on the basis of their story elements. They are:

1. Stories based on Mythology and Epics
2. Stories related to Mythology
3. Stories based on Society and
4. Stories based on History.

The historical ballads can, on the basis of the course of the story, be further divided into three. They are the stories,

1) related to the king mentioned in the story,

2) created on the basis of the achievements of heroes in history, and, those,

3) created from historical events.

So far, sixteen historical ballads of Kaṉyākumari district have been found. They are related to either the history of the district, historical heroes or their relatives. Of the sixteen, seven are based on Travancore history. They are, 1. Dewāṉ's Victory (*Tivāṉ veṟṟi*), 2. Ravikuṭṭi Piḷḷai War, (*Iravikkuṭṭp piḷḷai pōr*) 3. Dharmarāja's Pilgrimage to Rāmēswaram (*Tarmarājāviṉ rāmēsvara yāttiraik katai*) 4. Valia Thambi and Kuñju Thambi story (*Valiyatampi Kuñcutampi katai*), 5. Mādambi Story (*Māṭampi katai*), 6. Oṭṭaṉ Story and (*Oṭṭaṉ katai*), 7. Valia Ejamoṉ story (*Valiya ejamāṉ katai*).

All these stories are based on the 17th, 18th and 19th century history of Travancore and Vēṇāṭu.

Of the above mentioned stories, *Dewān's Victory* is about a Dewān named Raja Kesava Dhas. It gives an account of the feats of Kesava Piḷḷai alias Raja Kesavadoss in the war that took place between Rāma Varma, the king of Travancore, and Tippu Sultan, the king of Mysore.

The ballad *Ravikuṭṭi Piḷḷai War* is based on war in 1635 A.D. Ravikuṭṭi Piḷḷai, the captain of Vēṇāṭu king Uṇṇi Kēraḷa Varma, and Rāmayyaṉ, the captain of king Thirumalai Nāyakkar.

*Dharma Rāja's Pilgrimage to Rāmēswaram* is about the pilgrimage undertaken by the King Kārthikai Thirunāḷ Rāma Varma (1758-98 A.D.). *Valia Thambi - Kuñju Thambi Story*, *Maṭambimār Story* (Eight House Piḷḷais Story), *Oṭṭaṉ Story*, and *Vaḷia Ejamāṉ Story* are all related to Mārtāṇṭa Varma. Of the four stories, *Valia Ejamāṉ Story* is about the adventures of a soldier who saved the fort at Āralvāymoḷi the border of Travancore State from the enemy. The other three stories are based on the civil war that took place during the reign of Mārtāṇṭa Varma. *Oṭṭaṉ Katai* specifically refers to the heroic deeds of Muṇṭaṉ, the messenger. The other two stories are woven around the insurgency against Mārtāṇṭa Varma by the great Thambis and Māḍambis.

Of all the stories which are related to the internal strife of Travancore kingdom headed by Mārtāṇṭa Varma, only *Valiya Thambi Kuñju Thambi Story* and *Māḍambis Story* show folk-features, and present a lot of information regarding the history of Mārtāṇṭa Varma.

## Travancore Kings

Mārttāṇṭa Varma (1729-1758 A.D.), generally called by the historians of Travancore Kingdom, is the first king of the Travancore dynasty. His position in history is like that of the status assigned to the first Pallava king Mahindra Varma, Rāja Rajaṉ - I of the later Cōḷās, and Thirumalai Nāyakkar of Nāyakkar dynasty.

The history of Travāṉcore begins with Mārttāṇṭa Varma (1729 A.D.) and ends with Bāla Rāma Varma Cittirai Thirunāḷ (1949 A.D.). This period of 220 years saw nine kings and three queens at the helm of affairs. A few among them contributed to Malayāḷam literature and Carnatic music. A few others

enacted radical legislation to abolish many of the social evils prevalent in the land from times immemorial. These kings command respect and admiration from the historians.

## The evolution of Mārttāṇṭa Varma

Mārttāṇṭa Varma is unique among these kings. He was not an artist, nor was he a reformer. But he had a few special qualities. He gave his successors a trouble-free kingdom. It is he who expanded the boundaries of the kingdom and gave it stability. He pruned the powers of *Yōkakkārs* and removed the lacunas found in the temple administration. In implementing these measures he never showed any hesitation. In oral tradition (Malayāḷam and Tamiḻ) Mārttāṇṭa Varma is acclaimed as great among the Travancore kings. It may be said that in a way he is worthy of hero worship.

Marttāṇṭa Varma lived for 53 years (1705-1758 A.D.). He ascended the throne at the age of twenty four. In 1728 A.D. after the death of Rāma Varma, the brother of Ātitta Varma, Mārttāṇṭa Varma became the king of Travancore. He was the nephew of Rāma Varma and the son of the queen of Āṟṟiṉkal. The custom and convention of Travancore allowed the nephew to take over the kingdom. In matters of succession they followed the Matriarchal system.

Within a short span of five years he expanded the kingdom. In 1734 A.D. he annexed Koṭṭārakkara and Neṭumaṅkāṭu. In 1742 A.D., Kollam, and Kāyaṅkuḷam came to him. In 1750 A.D. Caṅkaṉācēri, Kōṭṭayam and Yēṟṟumāṉur became the part of Travancore kingdom. During his reign, the Travancore kingdom stretched from Kaṉyākumari in the south to Arūrpuḷai in the north.

## The condition of the land at Mārttāṇṭa Varma's ascension

When Mārttāṇṭa Varma ascended the throne, the capital was Kalkuḷam alias Patmanāpapuram. The financial and administrative positions were in a state of disorder. The kingdom did not even have a stable and disciplined army. There were pulls and pressures from influential quarters. The social set-up too contributed to the ills of the country and society. All these factors led to a civil war during Mārttāṇṭa Varma's reign.

## *Yōkakkārs* and Vēṇāṭu

Until the beginning of the 18th century, Travancore was called Vēṇāṭu.

All the kings of Vēṇāṭu ruled the country, accepting and respecting the superiority of the Committee that governed and controlled the temples. In fact, their governance was perfectly in tune with the wishes of the temple administrators. After 1229 A.D., the temple administrative committee fell into the hands of Malayāḷa Brahmins. The members of the committee were all Brahmins and they were called *Yōkakkārs.*

The *Yōkakkārs* looked after not only the temples but also the villages. Towards the close of Vēṇāṭu dynasty they became a force to reckon with and had a say in anything and everything related to the rule of the land. They became the power centre, and occupied key positions in general administration. Their control was indirect, but powerful and decisive. Their power and authority was based on their superior position in society by their being the upper caste. Their power reached its peak during the reign of Rāma Varma.

The *Yōkakkārs* had the support and patronage of the landlords 'Eight House Piḷḷais' or Māṭampis). Following are the characteristics of the state of Travancore during the period of Rāma Varma:

1. The economic condition was in total disarray.
2. The temple administrators interfered in the departments of Revenue and Judiciary.
3. The Maturai Nāyakkars frequently attacked South Travancore taking advantage of the land's lack of regular administration and army.
4. In the absence of an organised revenue set-up, the king entrusted the task of collecting taxes from the public with the Cavalry mercenary hired for the purpose from Nellai.
5. Rāma Varma's sons enjoyed absolute power and privileges in Nāñcil Nāṭu.

The last phase of the king Rāma Varma (1721-1729 A.D.) was thus a period of maladministration and inefficiency which naturally created a wide gulf between the ruler and the ruled. It was in these circumstances that Mārttāṇṭa Varma came to power.

**The Brothers and their supporters**

Rāma Varma's sons were generally called Valiya Tampi and Kuñcu Tampi by the people of Travancore. They were also called Pappu Tampi and

## History and Ballads

The Travancore historians have made only limited use of the *Valiya Tampi-Kuñcu Tampi Story* and *Māṭampi Story*. They have never attempted to depict the conflict of the two warring groups - the king and the rebels - as depicted in the Ballads. Their impact is not effective when compared to that of the ballads.

## The Greatness of the king

To the people of Travancore, the king wasnot merely the head of the state, but a celestial being too. They considered him a disciple of Lord Patmanāpaṉ the presiding deity of Travancore kingdom. Moreover, it was the belief of the public that the king was a descendant of God. But how have the enemies of the king who wanted to kill the king, come to be worshipped as deities? It could never have happened during the life time of the king. The king was always thought of benevolent and benig at that time. What could be the reasons for the emergence of the ballads detailing the traitrous activities of the rebels? There must be some valid reasons for its popularity among the commonfolk.

## Reasons for the popularity of the Brothers' story

What gave the bow-songsters the boldness to sing this story? No bow-song gives reasons. However, some hints are thrown here and there.

The two stories - *Valiya Tampi Story* and *Māṭampi Story* are about those who opposed the king and revolted against his governance. Both of them describe the cruel manner in which the king killed them. The stories were composed specially, to make people worship the rebels as Gods. The stories give a gruesome picture of the king's cold-blooded murder of the unarmed Brothers. From the field data and the source of the text, the circumstances which caused the composition of such a story leading to the worship of these heroes can be learnt to some extent. There are some ballads in the southern districts of Tamil Nāṭu based on the revolt of the kings or landlords against the white men during the period of the East India Company. One is that of Vīrapāṇṭiya Kaṭṭappommaṉ. Though the story has different versions that confuse the historians they all agree that it is based on revolt. There are ten different versions of the life of Kaṭṭappommaṉ. There is controversy among historians concerning the popularity enjoy by Kaṭṭappommaṉ during his life time. Moreover, the life of Pūlittēvaṉ also is the theme of several ballads. How did they come into being? After their

death they were made martyrs. Having experienced the hardships of the British rule, people looked upon with awe the first man who revolted against the British rulers. Thus emerged the names of Kaṭṭappommaṉ and Pūlittēvaṉ. They were charged with powerful emotion when they visualised the cruel death of the two great heroes at the hands of the white oppressers. Thus the two came to be looked upon as great heroes. Their life became the national pride. The artists made use of their popularity and composed songs. Other art forms also flourished highlighting the life of the two great martyrs.

### The period of the origin of the story of the Brothers

The same is the case with the Brothers. The Brothers were not revolutionaries in the sense that they had taken up the cause of the poor and downtrodden. They did not fight for the well-being of the people. Theirs was a fight for power. Their intention was to inherit the kingdom. They did not like the very concept of giving the kingdom to the nephew under Matriarchal system. To further their cause they mobilized support for themselves. Hence they could not have secured people's worship during their life time. The ballads glorifying them could not have appeared then. After their time the bitter relationship between the Travancore kings and the oppressed must have created respect for the Brothers among the people. A section of the oppressed people were denied temple entry. But they had to take up the temple work for no remuneration. The worst part of it was that the women among them were forbidden to cover their breasts the presence of the upper class people. This practice was in vogue during the reign of Travancore kings. The underprivileged were treated like slaves and were often exploited and ill-treated. When the Brothers fell out with the king, these poor people thought and felt that the Brothers were victims like them and started evincing interest in them. They thought that the two were their leaders, and heroes and hence martyrs. The Brothers became worthy of respect, esteem and reverence. The people who stood by the Brothers offering them political, financial and moral support must have worshipped them after their death. Later the songsters must have picked up the story and begun to recite it in the village temples and other places in the form of ballads.

### History and field data

We come to learn the following points from anyalysing the details in the text of *Valia Tampi Kuñcu Tampi Story* from a historical perspective:

The story begins with the reign of Rāma Varma, the king of Travancore. This is the information we get from the ballad. The important places then were Tiruvaṉantapuram, Tiruvitāṅkōṭu, Tiruvañcikkarai, Patmanāpapuram, and Pāṟacālai (l. 4-7). All the important officials were stationed in these places.

1. Patmanāpapuram occupied prominence among the said places. It was the capital of Travancore state. Most of the events narrated in the ballad happened in and around Patmanāpapuram. Kalkuḷam was the original name of Patmanāpapuram. The town has an earthen fort built with lime and sand till 1620 A.D. John Neohas' account of the fort is recorded in the Travancore Manual. It is recorded that he visited the palace in 1624 A.D. and saw the strong fort at Kalkuḷam. Later, king Mārttāṇta Varma dedicated Kalkuḷam fort to the presiding deity Patmanāpacāmi in 1744 A.D. After that the town became popular as Patmanāpapuram.

2. Rāma Varma arrived at Cucīntiram during the festival of Lord Tāṇumālayaṉ (l. 17). Apirāmi had an audience with him (l.61). She had migrated from the distant north because of famine and poverty. She was born among the *Yātavar* (l.21). She was a dancer who had dedicated her life to the temple of Mahātēvar (l. 71). The ballad says that she ravished the king by means of her physical movements and facial expressions as a dancer. According to the ballad *Apirāmi* was of *Yātavar* clan. All the versions say that she was a *Yātavar*. But the bow-songsters differ in this regard. A series of field investigations carried out in different parts of the places occupied by the *Yātavar* does not provide the researcher with any supportive material to show that Apirāmi belonged to *Yātava* community.

Apirāmi must have been a member of the *Tēvatāci* sect. In the presence of she asserted in many a word that she had displayed her dancing talents in Mahātēvar temple. Her subsequent performance before the king itself in a proof that she is a *Tēvatāci*. We may infer from this that she was a *Tēvatāci*, who dedicated her life to Lord Mahātēvar. Though her native place is mentioned as Ayōtti of the distant north, it may be presumed that she came from Tañcāvūr customarity referred to as north in other ballads too.

*Tēvatāci* system had been in practice in all the temple of Kaṉyākumari district right from the later Cōḻa period to 1930 A.D. *Tēvatāci* attended to almost all temple work including dancing and music. Most of the Saivite temples had *Tēvatāci* practice. Most of the *Tēvatācis* were from Tañcāvūr district. They

were called Tamil *Tēvatācis*. Later there emerged another group from the local area. They also did all that the Tamil *Tēvatācis* did. They spoke Malayāḷam. They were called *Malayāḷa Tēvatācis*. Later, the *Tamiḻ Tēvatācis* gradually merged with the Nāñcil Nāṭu *Veḷḷāḷa* people while the *Malayāḷa Tēvatācis* merged with the Nair community. These facts are borne out by the post-1930 social fabric.

**The circumstances leading to Rāma Varma marrying Apirāmi**

Apirāmi, depicted in the ballads, must be a *Tamiḻ Tēvatāci* from Tañcāvūr.

It was customary for the rich landlords of the time to keep the *Tēvatācis* attached to Cucīntiram temple as their concubines. Most of these landlords belonged to eigher Nair or *Veḷḷāḷa* community, or were members of the royal family. These *Tēvatācis* were also considered as their second wives. So it was only natural for the king to accept Apirāmi as his wife. After the marriage he took her to Iraṇiya Ciṅkanallūr where he lived with her.

Lines 115-119 of the ballad give an account the life of Apirāmi and her sons in Iraniya Ciṅkanallūr. Iraṇia Ciṅkanallūr had been an important palace even from the period of Cēramāṉ perumāḷ. The oral tradition says that Cēramāṉ Perumāḷ died in this palace. There is also a reference to Ciṅkanallūr in the Cucīntiram edict (line 1208). Therefore its antiquity dates back to one thousand years. Rāma Varma must have lived in Patmanāpapuram palace after providing a palace for Apirāmi at Ciṅkanallūr.

**The king's gift to his sons**

It seems that the king Rāma Varma was very generous in giving his wife and children plenty of property and privileges. He also gave them the right to collect cess and other forms of taxes from some specified areas. The ballad gives a vivid account of the assets and grants received by Apirāmi and her sons. The details of the property and privileges thus offered are as follows: The right to collect cess from the market at Nālālamūṭu; the right to collect cess from Koṭuppakkuḻi-pēṭṭai; the right to get cess from Tāḻākkuṭi market; to levy taxes on the property owned by the landlords Kūṭṭuppuḷi Civaṉaṉaiñca Nāṭār, Ammāṇṭi Viḷai Muttiruḷa Nāṭār, Muruṅka Viḷai Muttiruḷa Nāṭār, Karuppa Nāṭār; the right to levy property taxes in Vāttiyārkōṇam, Vampumalaikōṇam, Taravukaṭai Vayal etc.; the right to collect taxes from Tāḻākkuṭi, Iṭalāykuṭi, Maṇakkuṭi salt fields; the right over 3 acres of land at Kiḻḻiyūr; Thus the endless list goes on (lines 507-555).

Most of the villages mentioned above belong to Nāñcil Nāṭu. The rest belong to Kalkuḷam taluk. Though the two Brothers lived in Ciṅkanallūr of Kalkuḷam taluk, their land was spread over in different parts of Nāñcil Nāṭu. They had other contacts also in Nāñcil Nāṭu. The reason for their close association with Nāñcil Nāṭu is not far to seek. By birth they were Tamiḻs. So it is natural that they maintained close relationship with the people of Nāñcil Nāṭu. There is enough historical evidence to prove the veracity of all these things narrated in the ballad.

**_Yōkakkārs_ and Brothers**

The Brothers were not the legitimate sons of the king. Yet they had the power and fame to command respect from all quarters. Most of all, they had the support of the temple administrators or *Yōkakkars*. They were always seen in their company. Probably it was the Brothers' association with the *Yokakkārs* which contributed to the enmity between them and the king.

**The reasons for the rift between Mārttāṇṭa Varma and the Brothers**

Mārttāṇṭa Varma wanted to marry the Brothers' sister. He conveyed his desire to the Brothers. They informed the king that they were members of two different sects following totally different customs. Hence the king's proposal could not be considered.

However the Brothers thought over the king's proposal for a while, and then came up with another suggestion to overcome the present hurdle. They wanted the king to swear that he would make his son the next king ie. they wanted to have an assurance from the king that the kingdom would go to the son and not to the nephew. In Travancore kingdom Matriarchal system was followed. The Brothers were followers of Patriarchal system. The king became angry on hearing their suggestion for to him it amounted to sacrilege.

Mārttāṇṭa Varma then ordered that the mattress of his uncle Rāma Varma from Ciṅkanallūr be brought to him, as he wanted to teach a lesson to the Brothers. Taking away the mattress amounted to severing family relationship. Valiya Tampi claimed heirship to the mattress and did not allow the guards to remove it from his house. He highlighted the point that the new king had no legal right to his father's property. To give vent to his anger, he tore up the mattress into pieces and let the cotton fly in the air.

This incident provoked the king to take retaliatory action. He promulgated orders to seize the property owned by the Brothers. The Brothers replied that they had got the power and property from their father, the previous king, and the new king had no power to take them away. Moreover, they were the lawful heirs to the kingdom and therefore had every right to own and enjoy the property and power.

The reasons for the conflict between the king and the Brothers as stated in the ballad agree with those in the Travancore history, despite some variations and contradictions.

Another version says that it was the Brothers who went to the king and asked him to marry their only sister. Their proposal was turned down by the king as he felt that the marriage would cause tremors in his kingdom and that he would lose popular support. This is believed to be the real reason for the enmity between the king and Koccumārappa Piḷḷai, the maternal uncle of the Brothers. The Matilaka palm-leaf manuscript' has this version.

## A̱lakappa Mutaliyār's plunder of the villages

A̱lakappa Mutaliyār an agent of the Nawab of Tricci, was stationed in Nellai with an army of mercenaries. The Brothers, in order to dethrone Mārttāṇṭa Varma, sought his help. The ballad (lines 1046-68) records this incident thus: The Brothers went to Nellai just to seek his help. They convinced Mutaliyār saying that they were the sons of Rāma Varma, and hence the king's lawful heirs. After convincing him they bribed him with money, both official and counterfeit. Besides, they lured him by the prospect of 'plundering all the villages in Nāñcil Nāṭu. The suggestion of 'plundering the wealth of the villages' had its magical effect on Mutaliyār who felt immensely happy. As promised Mutaliyār went with the Brothers marching towards Nāñcil Nāṭu. He and his big army camped at Kaṭukkarai and looted the surrounding villages. They went to Tericaṉaṅkōppu, Ciṟaimīṭṭavūr, A̱lakiyapāṇṭiyapuram, Tiṭṭuviḷai, Pūtapāṇṭi, Vaṭacēri, Eēḷakaram and finally to Cucīntirum temple and took away all they could.

The ballad, throughout the latter part, gives a detailed account of the events mentioned above (lines 1111-40). Nāñcil Nāṭu had been attacked and looted several times in the past by Nāyakkar army. Though it is not recorded adequately in the history books on Nāyakkars and Travancore kings, the bow songs of Kaṉyākumari district and Mutaliyār palm-leaf manuscripts offer a lot of

information on these events. The historical documents of Nāñcil Nāṭu also detail these events. The details in the Mutaliyār palm-leaf manuscripts corroborate with the ballads that deal with Mutaliyār's plunder of Nāñcil Nāṭu.

A particular episode in the ballad is that the king directed the Brothers to make available the temple vessels for the ensuing festival. The Brothers replied that they had been taken away Mutaliyār. There is enough historical evidence for the historical accuracy of this episode.

**Reconciliation effected between the king and the Brothers**

The king learnt that Mutaliyār camped near Patmanāpapuram with his mighty cavalry. He gave orders to the Eight Māṭampis to drive away the enemy forces. They at first fought with the Mutaliyār forces bravely and gave them stiff resistance. The Mutaliyār forces were losing ground and were about to retreat. The king's forces seemed to gain ascendency. At this juncture, the *Māṭampis* initiated the process of withdrawing from the battle field. Mutaliyār forces made use of this opportunity and went on attacking the king's forces. The Māṭampis act was an unexpected betrayal. The king had no option but to escape from the palace. He was searching for a safe passage to escape while he was making an attempt to sneak though the secret passage, he was seized by the Brothers. They were about to kill him when Mutaliyār intervened. He worked for a compromise and was successful in his endeavour. This is what the ballad says.

**Different versions of *Brothers story and Māṭampis Story***

*Māṭampis Story* tells another reason for the conflict. Mārttāṇṭa Varma refused to marry the eldest Māṭampi's daughter. So they revolted against the king. They floated a concocted story to defame the king. According to this story there was misappropriation of temple funds. It was said that the king was instrumental for this misappropriation. On hearing this story the king was enraged, and he defeated all the sixteen Māṭampis in a battle and hanged them. These two stories differ widely from the historical account.

The Māṭampis as described in the two ballads, refer to the landlords of Travancore who were popularly known as *Eṭṭuvīṭṭu Piḷḷais.* The two ballads refer to them as Māṭampis too. The historians too refer to them as either *Māṭampis* of *Eight House Piḷḷais.* After the murder of the Brothers, their family members, particularly women and children, and also the members of the *Māṭampis* families

were handed over to the fisherfolks who lived in Muṭṭam. This has been known to the people of this region for long. This version has been handed down from one generation to another orally.

There is unanimity in the view that the Māṭampis were eight in number. But according to *Māṭampis Story* they were sixteen. At the same time, the historians give a detailed list of sixteen. They tell that, of the sixteen, two *Nampūti, Pōṟṟi* and *Paṇṭālay* were exiles and the others were imprisoned. The ballads do not say anything about the *Yōkakkārs*. But the historian K.K. Piḷḷai gives a detailed account of the king's success in disciplining the *Yōkakkārs*. 'Religion, God and Temple' were the shields that protected the *Yōkakkārs*. The king brought them out from their safe haven for, they did not show respect to the head of the state. Their crime was that they claimed superiority over the king. The king gave orders to demolish their houses.

The ballad points out Nakarkōyil as the place where the Brothers were murdered (line 1460). The oral tradition also confirms this.

**The conflict between Patriarchy and Matriarchy**

If we make a comparative study of *Valiya Tampi-Kuñcu Tampi story, Māṭampis' Story*, the bow-songs performed in the temples where the Brothers are worshipped, and the oral traditions, we come to learn about some social contradictions that are not recorded by the historians. The contradictions in fact are caused by the dichotomy between Matriarchy and Patriarchy.

Apirāmi, the mother of the two Brothers belonged to Tamiḻ Nāṭu. She came to Nāñcil Nāṭu along with her sons. The Brothers were given official permission to govern Nāñcil Nāṭu. They held property in the form of land and buildings in Nāñcil Nāṭu. The *Nāñcil Nāṭu Veḷḷāḷās* were the followers and supporters of the Travancore kings.

Among the *Nāyars* too, except a few families, the others supported the kings. Only the *Nāṭārs* of Pottaiyaṭi owed allegiance to the kings. Most of the *Nāṭārs* and a few of the *Paṇikkars* were against the king. Naturally they supported the brothers in their attempt to dethrone the king.

Hence, on the basis of the available sources, it may be assumed that the people regarded the feud between the king and the Brothers as the feud between Patriarchy and Matriarchy. The *Nāṭārs* are the followers of Patriarchal

system, whereas the *Nāñcil Nāṭu Veḷḷāḷās*, the landlords, are the followers of Matriarchy. Therefore, the *Veḷḷāḷās*, the landed gentry, can be said to be the followers of Matriarchy by being the supporters of the king.

The second important point is related to Aḻakappa Mutaliyār's plunder of Nāñcil Nāṭu. Whenever there was an aggression, be it by the Mutaliyār forces or the **Nāyakkar** forces, the most affected ones were the *Nāñcil Nāṭu Veḷḷāḷās*. In the ballad, the Brothers show hatred for the *Veḷḷāḷās*. They were waiting for a chance to settle the score. Their act of allowing Mutaliyār to loot the areas occupied by these *Veḷḷāḷās* could be interpreted as an expression of their enmity towards them.

# தம்பிமார் கதை

## கணபதி காப்பு

**விருத்தம்**

1. சீர்பெறும் கைலை மேவும் சிவனுட பாதம் சேர்ந்த[1]
பேர்பெறும்[2] உலகு தன்னில் வெம்பகை மீறித் தம்மில்
வீர்பெறும் தம்பி மார்கள் வன்குலையாய் பட்டி றந்த
கார்பெறும் நிறத்தோன் மருகன் (பொன்னெனும்) கணபதி காப்பு தானே.

2. மின்னெனும் உமையா ளீன்ற விநாயகன்[3] குணத்தி னாலே
தன்னெனு மாண்டி ருந்த தம்பிமார் கதையைப் பாடப்
பொன்னெனும் கிட்டி ணத்தாள் மாண்புகள் வளர்த்த செல்வன்
மன்னரால் கொலைகள் பட்ட கதையைநாம் கூறு வோமே.

1.1. கைலை - கயிலை மலை 1.3. வீர்பெறும் - வீறுபெறும்; இவண் எதுகை நோக்கி 'வீர்பெறும்' என வந்தது. குலை - 'கொலை' என்பதன் பேச்சு வழக்கு. 1.4. கார்பெறும் நிறத்தோன் - கரு நிறமுடைய திருமால். மருகன் - மருமகன்; விநாயகனைக் குறித்தது.

சு.சொ. 1. சேற்ந்த 2. பேற்பெறும் 3. வினாயகன்

## Kaṇapati Kāppu

**viruttam**

*1.* *cīrpeṟum kailai mēvum civaṉuṭa pātam cērnta*
*pērpeṟum ulaku taṉṉil vempakai mīṟit tammil*
*vīrpeṟum tampi mārkaḷ vaṉkulaiyāy paṭṭi ṟanta*
*kārpeṟum niṟattōṉ marukaṉ (poṉṉeṉum) kaṇapati kāppu tāṉē.*

*2.* *miṉṉeṉum umaiyā ḷīṉṟa vināyakaṉ kuṇatti ṉālē*
*taṉeṉu māṇṭi runta tampimār kataiyaip pāṭa*
*poṉṉeṉum kiṭṭi ṇattāḷ māṇpukaḷ vaḷartta celvaṉ*
*maṉṉarāl kolaikaḷ paṭṭa kataiyai nāmkūṟu vōmē.*

## Invoking the blessings of Kaṇapati

The benevolent and favourite kin of Tirumāl
Unfurled is the pathetic story of the two Brothers
The Brothers who got killed in the holy land of Civaṉ
Blessed by Kaṇapati the son of dazzling Umaiyāḷ
Fostered by Kiṭṭiṉattāḷ, the mother of miseries untold
Unique is the story of the two Brothers
The victims of the Royal cruelty.

நடை

3. நாடான நாடதிலே நல்லவட சீமையிலே
தேசமான தேசத்திலே சிறந்தபடை வீடதிலே
சிறந்தபடை வீடதிலும் திருவனந்த புரமதிலும்
திருவனந்த புரமதிலும் திருவிதாங் கோடதிலும்
திருவிதாங் கோடதிலும் திருவஞ்சிக் கரையதிலும்
பல்பநாப புரமதிலும் பாறச்சாலை தன்னதிலும்
மட்டில்லா துரைமார்களும் வாசல் பிரதானிகளும்[1]
ஆறிலொரு கடமைதாண்டி அசையாத மணியுங்கெட்டி
மாற்றானைத்[2] துரத்திவெட்டி வையகத்தை அரசாண்டு
ராமவர்மத் தம்புரானும் நாட்டைஅர சாண்டிருந்தார்
இருக்குமந்த நாளையிலே ஏற்றகோவில் சிவாலயங்கள்
கோவில்தோறும் திருவிழாவும்[3] கொடியேற்று ஆராட்டும்[4]
கொடியேற்ற வேணுமென்று கூண்டமன்னர் கற்பிக்கவே
மார்கழி[5] மாசத்திலே வாய்த்தநல்ல சதயத்திலே
சதயத்திலே கொடியேற்ற தக்கமுடி மன்னவரும்
திருக்கொடியும் தானேற்றி முடிமன்னர் எழுந்தருளிச்
சேனைபடை குதிரையோட சுயிந்திரத்தில் வந்தமர்ந்தார்.

3.3. திருவனந்தபுரம் - இன்றைய கேரள மாநிலத்தின் தலைநகர்; நாகர்கோவிலிருந்து 82 கி.மீ. தொலைவில் மேற்கே உள்ளது; 1790 முதல் திருவிதாங்கூரின் தலைநகராக ஆனது. திருவிதாங்கூர் வரலாற்றுடன் தொடர்புடையது. 3.4. திருவிதாங்கோடு - குமரி மாவட்டம் கல்குளம் வட்டம் தக்கலை அருகே உள்ள ஊர். கி.பி. 11ஆம் நூற்றாண்டு கல்வெட்டு திருமுதாங்கோடு என்று கூறும்; அருவிக்கரை கல்வெட்டு (கி.பி. 1235) இவ்வூரைத் திருவிதாங்கோடு என்று கூறுகிறது; திருவிதாங்கோடு என்ற பெயரே பிற்காலத்தில் திருவிதாங்கூர் என மருவியது என்ற கருத்தும் உண்டு. 3.5. திருவஞ்சிக்கரை - திருவனந்தபுரம் அருகில் உள்ள 'விழிஞம்' என்ற இடமே திருவஞ்சிக்கரை ஆக இருக்க

வேண்டும். 3.6 பல்பநாபுரம் - கல்குளம் தாலுகாவில் தக்கலையின் அருகே உள்ள ஊர். நாகர்கோவில் திருவனந்தபுரம் சாலையில் உள்ளது. இவ்வூர் 1790ஆம் ஆண்டு வரை திருவிதாங்கூரின் தலைநகராக இருந்தது. இங்கு இப்போதும் கற்கோட்டையும், அரண்மனையும் திருவிதாங்கூர் அரச வரலாற்றுச் சின்னங்களும் உள்ளன. 1620 வரை இவ்வூரில் மண் கோட்டையே இருந்தது. இவ்வூரில் உள்ள மகாதேவர் கோவில் கல்வெட்டு ஒன்று (கி.பி. 1227) இவ்வூரின் பெயர் கல்குளம் என்று கூறுகிறது. 1744இல் மார்த்தாண்டவர்மா திருவிதாங்கூரைப் பத்மநாபசுவாமிக்குக் காணிக்கையாக்கிய பின் பத்மநாபபுரம் என்ற பெயர் பிரபலம் ஆனது. 3.7. மட்டில்லா துரைமார்கள் - ஒப்பிட முடியாத துரைமார்கள். வாசல் பிரதானிகள் - அரண்மனையின் முக்கிய பிரமுகர்கள்; மந்திரி முதலியோர். 3.8. ஆறிலொரு கடமை - மக்களின் வருமானத்தில் பெறப்படும் ஆறிலொரு பங்கு வரிப்பணம். அசையாத மணி - நீதிக்காக வாசலில் கட்டப்படும் ஆராய்ச்சி மணி; அசையாத மணி என்றது மன்னனின் நியாயம் தவறாத ஆட்சிச் சிறப்பை உணர்த்தியது. 3.9. மாற்றான் - பகைவன். வையகம் - உலகம் 3.10. ராமவர்மத் தம்புரான் - வேணாட்டு அரசர்; 18ஆம் நூற்றாண்டில் வேணாட்டை ஆண்டவர். 3.12. கொடியேற்று - கோவில் திருவிழாவில் கொடியைக் கொடிமரத்தில் பறக்கவிடும் துவக்க விழாச் சடங்கு. ஆராட்டு - திருவிழாவின் பத்தாம் நாளில் கருவறைத் தெய்வத்தின் உற்சவ மூர்த்தியைக் கடல் அல்லது ஆற்று நீரில் நீராட்டும் சடங்கு. 3.13. வேணுமென்று - 'வேண்டுமென்று' என்பதின் பேச்சுவழக்கு. கூண்டமன்னர் - சிறப்பான மன்னன். கற்பிக்கவே - ஆணையிடவே. 3.14. மாசம் - 'மாதம்' என்பதின் பேச்சு வழக்கு. சதயம் - 27 நட்சத்திரங்களுள் 24வது நட்சத்திரம். 3.15. தக்க முடிமன்னர் - தகுதி வாய்ந்த மகுடம் அணிந்த மன்னர். 3.16. எழுந்தருளி - ஊர்வலமாய் வந்தருளி. 3.17. சேனை படை - காலாள்படை. சுயிந்திரம் - சுசீந்திரம்; நாகர்கோயில் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது; திருவிதாங்கூர் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடையது; 10ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று, 'நாஞ்சிநாட்டுச் சுசீந்திரமான சுந்தரசோழ சதுர்வேதி மங்கலம்' என்றும், 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று, 'இராஜ இராஜப் பாண்டி நாடான சுந்தர சோழ சதுர்வேதி மங்கலம்' என்றும் முறையே கூறுகின்றன.

சு.சொல் : 1. பிறதானிகளும் 2. மாத்தானைத் 3. திருவிளாவும் 4. ஆறாட்டும் 5. மாற்களி

**naṭai**

*3.*
*nāṭāṉa nāṭatilē nallavaṭa cimaiyilē*
*tēcamāṉa tēcattilē ciṟantapaṭai viṭatilē*
*ciṟantapaṭai viṭatilum tiruvaṉanta puramatilum*
*tiruvaṉanta puramatilum tiruvitāṅ kōṭatilum*
*tiruvitāṅ kōṭatilum tiruvañcik karaiyatilum*
*palpanāpa puramatilam pāṟacālai taṉṉatilum*
*maṭṭillā turaimārkaḷum vācal pirataṉikaḷum*
*āṟiloru kaṭamaitāṇṭi acaiyāta maṇiyuṅkeṭṭi*
*māṟṟāṉait turattiveṭṭi vaiyakattai aracāṇṭu*
*rāmavarmat tampurāṉum nāṭṭai aracāṇṭiruntār*
*irukkumanta nāḷaiyilē ēṟṟakōvil civālayaṅkaḷ*
*kōviltōṟum tiruviḻāvum koṭiyēṟṟu ārāṭṭum*

*koṭiyēṟṟa vēṇumeṉṟu kūṇṭamaṉṉar kaṟpikkavē*
*mārkaḻi mācattilē vāyttanalla catayattilē*
*catayattilē koṭiyēṟṟa takkamuṭi maṉṉavarum*
*tirukkoṭiyum tāṉēṟṟi muṭimaṉṉar eḻuntaruḷi*
*cēṉaipaṭai kutiraiyōṭa cuyintirattil vantamarntār*

Fertile was the land that lay in the north
Familiar to the people of Tiruvaṉantapuram,
Tiruvitāṅkōṭu and Tiruvañcikkarai
Founded strongly by divine rulers and
Placed near Pāṟacālai and Patmanāpapuram
Fortified was the city of the lords and learned.
Benign and benevolent was the king
Bitter and deadly to his foes
Mindful of the one sixth tax collection
But mild in its extraction.
Rāmavarma Tampurāṉ was his name
Royal palace was proud of his fame.
The bell that stood there unmoved and unused
Told that there was no grievance
Safe were the citizens; secure was the kingdom
For, the king was perfect and just.
Ardent devotee was the king
Ordered festival in all the temples
Temples that house Lord Civaṉ
Temples that outnumber stars.
In *mārkaḻi*, the queen of months
At *catayam*, the star of time
Cucīntiram became the star of attraction
For, the king there stayed with his courtiers.

## கிருஷ்ணரும் அபிராமியும் அயோத்தியில் வாழ்ந்து வருதல்

நாடான நாடதிலே நல்லவட சீமையிலே
தேசமான தேசத்திலே சிறந்தயோத்தி பட்டணத்தில்
அயோத்திப் பட்டணத்தில் ஆச்சிமார் குலத்துதித்த

ஆச்சிமார் குலத்துதித்த ஆயிழையாள்[1] அபிராமி
அவளோடுடன் பிறந்த ஆனதொரு கிருட்டிணரும்
அயோத்தி பதிதனிலே வாய்த்ததொரு கைமுறையும்
கைமுறையும் ஆடியவர் கட்டுடனே பிழைத்துவந்தார்.[2]

**3.18.** வடசீமை - வடநாடு. **3.19.** அயோத்தி பட்டணம் - அயோத்தி நாடு; மிகை கருதியும் மோனை கருதியும் இவ்வாறு கூறப்பட்டது; வரலாற்று நோக்கின் படி தஞ்சை, திருச்சி பகுதிகளைச் சார்ந்த ஏதேனும் ஓர் ஊராக இருக்கலாம். **3.20.** ஆச்சிமார் குலம் - ஆய்ச்சியர் குலம்; இடைச்சியர் குலம். **3.21.** ஆயிழையாள் - தேர்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த பெண்ணாள். **3.23.** கைமுறை - கோவிலில் தேவதாசியர்கள் ஆடும் நடனத்தின் பெயர். **3.24.** கட்டுடனே - பாங்குடனே; வரம்புடனே எனினும் அமையும்.

சு.சொல் : 1. ஆயிளையாள் 2. பிளைத்துவந்தார்

## Kiruṣṇarum apirāmiyum ayōttiyil vāḻntu varutal

*nāṭāṉa nāṭatilē nallavaṭa cīmaiyilē*
*tēcamāṉa tēcattilē ciṟantayōtti paṭṭaṇattil*
*ayōttip paṭṭaṇattil āccimār kulattutitta*
*āccimār kulattutitta āyiḻaiyāḷ apirāmi*
*avaḷōṭuṭaṉ piṟanta āṉatoru kiruṭṭiṇarum*
*ayōtti patitaṉilē vāyttatoru kaimuṟaiyum*
*kaimuṟaiyum āṭiyavar kaṭṭuṭaṉē piḻaittuvantār*

## Life of Kiruṣṇaṉ and Apirāmi at Ayōtti

In Ayōtti, the distant alien land
There lived a damsel
Born among the *Yātavas* brought up among the dancers
Her name was Apirāmi
Her forte was dancing
She lived with Kiruṣṇaṉ, her brother
Dedicated to the temple of Civaṉ
Both were happy performing their duty

## பஞ்சத்தால் இருவரும் தென்னாடு நோக்கிப் போதல்

பிழைத்துவரும் நாளதிலே பெருத்தபஞ்சம் தான்பிடித்து
அண்ணனும் தங்கையுமாய் அவரேதோ சொல்லுவாராம்
இங்கிருந்தால் யிப்போது இனிமேலும் பிழைக்கமாட்டோம்
தெச்சணா பூமியிலே சென்றுவயறு பிழைக்கப்போவோம்[1]

தளவாட மானதுவும் தன்னுடைய சேகரமும்
அயோத்தி நாடுமிட்டு அவர்கள்தெற்கே நடந்தார்கள்.

3.26. அவர் ஏதோ சொல்லுவாராம் - கிருஷ்ணன் கீழ்க்கண்டவாறு கூறுவாராம். 3.28. தெச்சணா பூமி - தென் பகுதி; தென் தமிழ்நாட்டைக் குறித்தது. 3.29. தளவாடம் - உடைமைகள். சேகரம் - சேகரித்த (சேர்த்த) பொருட்களின் தொகுதி.

சு.சொ : 1. பிளைக்கபோவோம்

## Pañcattāl iruvarum tennāṭu nōkkip pōtal

*piḻaittuvarum nāḷatilē peruttapañcam tāṉpiṭittu*
*aṇṇaṉum taṅkaiyumāy avarētō colluvārām*
*iṅkiruntāl yippōtu iṉimēlum piḻaikkamāṭṭōm*
*teccaṇā pūmiyilē ceṉṟuvayaṟu piḻaikkap pōvōm*
*taḷavāṭa māṉatuvum taṉṉuṭaiya cēkaramum*
*ayōtti nāṭumiṭṭu avarkaḷteṟkē naṭantārkaḷ*

Varuṇaṉ, the God of rain vanished from the land
No rain for months, no rain for years.
Barren became the land,
Barren became the mind
Artists were the suffering lots always knocking at doors.
"Let us go to the South
To eke out our livelihood."
Said Kiruṣṇaṉ to his sister
To save her life and her art.

## இருவரும் தென்னாட்டில் கடந்த இடங்கள்

கெங்கைகொண்டான் கயத்தாறும் கீர்த்தியுள்ள[1] கடம்பூரும்
கடம்பூர் ஊர்தனிலே கால்சோர வந்தார்கள்
அன்றுதங்கி முழித்தெழுகி[2] அதிகாலம் எழுந்திருந்து
கண்டகண்ட ஊர்பதியும் காரிகையாள் அபிராமி
தேசமெல்லாம் தானோடித் திருமுறைகள் இல்லாமல்
திருக்கணம்குடி வழியாக[3] திருநெல்வேலி தன்'லேவந்தார்
அன்றுதங்கி முழித்தெழுகி அதிகாலம் எழுந்திருந்து
பாளையங்கோட்டை வழியாகப் பரபரென நடந்தாரே
நாங்குனசேரி விட்டு நலமுடனே வழிநடந்தார்[4]

வள்ளியூர் தனிலேவந்து மகிழ்ந்துமுறை காட்டிநின்றார்
அன்றுதங்கி முழித்தெழுகி அதிகாலம் எழுந்திருந்து
பணக்குடி வழியாகப் பாவனையாய் வந்தாராம்.

3.31. கெங்கை கொண்டான் - கங்கை கொண்டான்; திருநெல்வேலி - மதுரை ரயில் பாதையில் உள்ள ஒரு சிற்றூர்; இவ்வூரை ஒட்டி சித்திரா நதி செல்கிறது. கயத்தாறு - நாகர்கோயில் சென்னை நெடுஞ்சாலையில் திருநெல்வேலியிலிருந்து 30 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர்; கட்டப்பொம்மன் இங்குத் தூக்கிலிடப்பட்டான். கடம்பூர் - மணியாச்சியை அடுத்த சிறு கிராமம். 3.32. கால் சோர - கால்கள் சோர்ந்து போகும்படி. 3.33. முழித்தெழுகி - விழி துயின்று. அதிகாலம் - அதிகாலை.

சு.சொ : 1. கீற்த்தியுள்ள 2. முளித்தெளுகி 3. வளியாக 4. வளிநடந்தார்

## Iruvarum teṉṉāṭṭil kaṭanta iṭaṅkaḷ

*keṅkaikoṇṭāṉ kayattāṟum kīrttiyuḷḷa kaṭampūrum*
*kaṭampūr ūrtaṉilē kālcōra vantārkaḷ*
*aṉṟutaṅki muḻıtteḻuki atikālam eḻuntiruntu*
*kaṇṭakaṇṭa ūrppatiyum kārikaiyāḷ apirāmi*
*tēcamellām tāṉōṭit tirumuṟaikaḷ illāmal*
*tirukkaṇamkuṭi vaḻiyāka tirunelvēli taṉilēvantār*
*aṉṟutaṅki muḻitteḻuki atikālam eḻuntiruntu*
*pāḷaiyaṅkōṭṭai vaḻiyākap parapareṉa naṭantārē*
*nāṅkuṉacēri viṭṭu nalamuṭaṉē vaḻinaṭantār*
*vaḷḷiyūr taṉilēvantu makiḻntumuṟai kāṭṭiniṉṟār*
*aṉṟutaṅki muḻitteḻuki atikālam eḻuntiruntu*
*paṇakkuṭi vaḻiyākap pāvaṉaiyāy vantārām*

Braving the burning sun and blaming their fate
They passed through several villages and by temples
Kaṅkaikoṇṭāṉ, Kayattāṟu and Kaṭampūr.
Tirukkaṇaṅkuṭı, Tirunelvēli and Nāṅkunēri
Were the places they passed through
Vaḷḷiūr, Paṇakkuṭi and Āralvāymoḻi
Were the vıllages they stayed temporarily.

## இருவரும் நாஞ்சில் நாட்டினுள் புகுதல்

அய்யமடம் காடும்விட்டு ஆரல்வாய்மொழி கோட்டைவந்தார்
அன்றுதங்கி முழித்திளகி அதிகாலம் எழுந்திருந்து[1]
தோவாளை அய்யன்கோவில் சுகமுடனே வந்துகண்டார்

அன்றுதங்கி முழித்திளகி அதிகாலம் எழுந்திருந்து
வெள்ளமடம் தான்கடந்து துரிசாகத் தான்கடந்து
ஆத்தங்கரை வழியாக ஆனப்பாலம் தான்கடந்து.

3.36. திருக்கணம்குடி - திருக்குறுங்குடி; திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் அருகே உள்ளே ஊர்; ஆழ்வார்களால் பாடப்பெற்றதும், வேணாட்டரசர்களால் நிவந்தம் பெற்றதுவுமான திருமால் கோயிலொன்று இங்குள்ளது. திருநெல்வேலி - திருநெல்வேலி மாவட்டத்தில் தலைநகராய் விளங்கும் ஊர். 3.38. பாளையங்கோட்டை - திருநெல்வேலி யிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 3 கி.மீ. தொலைவில் அமைந்த ஊர். பரபரென - 'வேகமாக நடந்து' என்ற பொருளைத் தரும் ஒலிக் குறிப்புச்சொல். 3.39. நான்குனசேரி - நாகர்கோயில் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்த ஓர் ஊர்; இங்கு ஆழ்வார்கள் பாடிய வானமாமலை கோயில் ஒன்றுள்ளது. 3.40. வள்ளியூர் - நாகர்கோயில் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்த, மலை முருகன் கோயில் உள்ள இடம். 3.42. பணக்குடி - நாகர்கோவில் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வள்ளியூரை அடுத்து அமைந்த ஓர் ஊர்; சுசீந்திரம் கல்வெட்டு ஒன்று இவ்வூரை 'முறந்தாநாட்டு பணகுடி' என்று கூறும். பாவனை - யோசனை. 3.43. அய்யமடம் காடு - பணக்குடிக்கும் 'ஆரல்வாய்மொழிக்கும் இடைப்பட்ட பகுதியில் மலையடிவாரத்தில் உள்ள சாஸ்தா கோயில் மடம். ஆரல்வாய்மொழி கோட்டை - நாகர்கோயில் திருநெல்வேலிச் சாலையில் 14 கி.மீ. தொலைவில் உள்ளது; கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுகாவில் உள்ளது. இது திருவிதாங்கூர் எல்லையாக கி.பி. 1956 வரை கருதப்பட்டது; ஆரல்வாய்மொழியில் இன்றும் கோட்டைக்கரை என்ற பெயரில் அழைக்கப்படும் இது 1745இல் மார்த்தாண்டவர்மா அரசரால் வலிய எஜமான் என்ற அதிகாரியின் உதவியுடன் கட்டப்பட்டது. 3.45. தோவாளை - நாகர்கோவில் சென்னை தேசிய நெடுஞ்சாலையிலுள்ள, ஆரல்வாய்மொழியை அடுத்த ஓர் ஊர்; இவ்வூர் குலசேகரப் பேரேறி குளக்கரையிலுள்ள விஷ்ணு கோயில் கல்வெட்டு ஒன்று இதைத் தேவாளை எனக் குறிப்பிடும். அய்யன்கோவில் - சாஸ்தா கோவில். 3.47. வெள்ளமடம் - நாகர்கோயிலிருந்து வடகிழக்கே 5 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர். துரிசாக - 'துரிதமாக' என்பதின் பேச்சுவழக்கு; வேகமாக. 3.48. ஆத்தங்கரை - 'ஆற்றின்கரை' என்பதின் பேச்சுவழக்கு; ஆறாவது நாகர்கோவிலினுள் ஓடும் பழையாறு. ஆனப்பாலம் - யானைப்பாலம்; நாகர்கோயிலுக்கும் சுசீந்திரத்திற்கும் இடையே இடலாக்குடி என்ற ஊரிலுள்ள ஒரு பாலத்தின் பெயர்.

சு.சொ : 1. எளுந்திருந்து

## Iruvarum nāñcil nāṭṭiṉuḷ pukutal

*ayyamaṭam kāṭumviṭṭu āralvāymoḻi kōṭṭaivantār*
*aṉṟutaṅki muḻittiḷaki atikālam eḻuntiruntu*
*tōvāḷai ayyaṉkōvil cukamutaṉē vantukaṇṭār*
*aṉṟutaṅki muḻittiḷaki atikālam eḻuntiruntu*
*veḷḷamaṭam tāṉkaṭantu turicākat tāṉkaṭantu*
*āttaṅkarai vaḻiyāka āṉappālam tāṉkaṭantu*

## Famine drove them to the south

Touching Tōvāḷai and Veḷḷamaṭam
They reached Cucīntiram through Āṉaippālam.

With flowers and festoons everywhere
Cucīntiram wore the look of festivity.

### இருவரும் சுசீந்திரம் வர, அபிராமி தாணுலிங்கத்தை வணங்குதல்

சுயீந்திரத்துப் பதியினிலே திருவிழாவை[1] வந்துகண்டார்
கண்டபோது அபிராமி கையாரத் தொழுதுகொண்டு[2]
சேருமிடம் ஒன்றுமில்லே சேர்ப்பார் யாருமில்லே
மூன்றுமுகம் ஒருமுகமாய் முளைத்தெழுந்த[3] தாணுலிங்கம்
தாணுலிங்கம் சந்நதியில் தையல்நல்லாள் கைதொழுது.

3.49. பதி - ஊர். 3.50. கையாரத் தொழுது - கைகளால் வணங்கி. 3.52. மூன்றுமுகம் ஒரு முகமாய் முளைத்தெழுந்த தாணுலிங்கம் - சிவன், திருமால், பிரம்மன் ஆகிய மூவரும் தாணுமாலயனாய், ஒரு முகமாய், கொன்றை மரத்தடியில் உறைவதாக ஐதீகம். 3.53. தையல் நல்லாள் - பெண்ணில் சிறந்தவள்; அபிராமி.

*சு.சொ : 1. திருவிளாவை 2. தொளுதுகொண்டு 3. முளைத்தெளுந்த*

### Iruvarum cucīntiram vara apirāmi tāṇuliṅkattai vaṇaṅkutal

*cuyīntirattup patiyiṉilē tiruviḻāvai vantukaṇṭār*
*kaṇṭapōtu apirāmi kaiyārat toḻutukoṇṭu*
*cērumiṭam oṉṟumillē cērppār yārumillē*
*mūṉṟumukam orumukamāy muḷaitteḻunta tāṇuliṅkam*
*tāṇuliṅkam cannatiyil taiyalnallāḷ kaitoḻutu*

With eyes closed, hands folded
Stood Apirāmi and Kiruṣṇaṉ supplicating their lot
Before the presiding deity
Trinity in unison
Tāṇu-māl-ayaṉ, three faces in one
Telling three are none but one.

### அபிராமி மன்னன் திருமுகம் காண விரும்புதல்

திருமும்பிலே காண்பதற்குச் செல்லவேணு மென்றுசொல்லி
பழையாற்றில் தான்குளித்துப் பொன்னிறப் பொட்டுமிட்டு
வன்னமணிப் பட்டுடுத்து வகைவகையாய் அலங்கரித்து
நல்லதொரு கைமுறையும் கைமுறையும் மெய்முறையும்
செய்முறைகள் காட்டிநின்று சீராக உடல்வளைத்துக்

கடுகவந்து மன்னர்முன்பு திருமுகங்கள் காணவென்று
தோழிமார்[1] பின்னடைய சென்றுநின்று அடிதொழுதாள்.[2]

3.54. திருமும்பில் - திருவின் முன்னால்; திரு என்னும் சொல் அரசனை உணர்த்த, 'மும்பில்' என்ற மலையாளச் சொல் முன்னால் என்ற பொருள் தந்தது. வேணும் - வேண்டும். 3.56. வன்ன மணி - அழகிய. 3.58. சீராக - முறைப்படியாக. 3.57. கடுக - விரைவாக. திருமுகம் - மன்னரின் அழகியமுகம். 3.60. பின்னடைய - தோழிமார் பின்னே தூரத்தில் நின்று கொண்டிருக்க.

சு.சொ : 1. தோளிமார் 2. அடிதொளுதாள்

## Apirāmi maṉṉaṉ tirumukam kāṇa virumputal

*tirumumpilē kāṇpataṟkuc cellavēṇu meṉṟucollip*
*paḻaiyāṟṟil tāṉkuḷittup poṉṉiṟap poṭṭumiṭṭu*
*vaṉṉamaṇip paṭṭuṭuttu vakaivakaiyāy alaṅkarittu*
*nallatoru kaimuṟaiyum kaimuṟaiyum meymuṟaiyum*
*ceymuṟaikaḷ kāṭṭiniṉṟu cīrāka uṭalvaḷaittuk*
*kaṭukavantu maṉṉarmuṉpu tirumukaṅkaḷ kāṇaveṉṟu*
*tōḻimār piṉṉaṭaiya ceṉṟuniṉṟu aṭitoḻutāḷ.*

## Reaching Cucīntiram and meeting the king

Strange is the way that God gives his nod
To the prayers of His wards.
"The king grants audience to artists of all sorts"
Said one, that saved the two.
Bathed Apirāmi in the pure waters of Paḻaiyāṟu
Beautified herself with fashionable ornaments
Performed the pure art before the king,
Brushing every other girl to the pavillion.

## அபிராமி மன்னரைக் காணுதலும் மன்னர் வினாவும்

விருத்தம்

4. திருமுகம் காண நின்ற தேன்மொழி செவிடு பார்த்து
அருமையாய் அவளை நோக்கி அரசமன்ன ரேது சொல்வார்
உரிமையாய் இங்கு வந்தஉன் ஊரேது பேர்தா[1] னேது
கருமங்க ளான தெல்லாம் கருத்துடன் சொல்லுமென் றாரே.

4.1. தேன்மொழி - தேன்போலும் இனிய சொல் பேசும் அபிராமி. செவிடு - முகம். 4.2 ஏது - என்ன. 4.4. கருமங்கள் - மன எண்ணங்கள்.

*சு.சொ : 1. பேற்தா*

## Apirāmi maṉṉaraik kāṇutalum maṉṉar viṉāvum

**viruttam**

4. *tirumukam kāṇa niṉṟa tēṉmoḻi ceviṭu pārttu*
*arumaiyāy avaḷai nōkki aracamaṉṉa rētu colvār*
*urimaiyāy iṅku vantauṉ ūrētu pērtā ṉētu*
*karumaṅka ḷāṉa tellām karuttuṭaṉ collumeṉ ṟārē.*

Unmoved were the eyes on the king
Asked her name and place with grace.
Praying God and thanking God for this Golden moment
Apirāmi poured her heart before the king
To woo him with no time lost.

## அபிராமி நாடுவிட்டு நாடு வந்த காரணம் கூறுதல்

**நடை**

5. திருமனது கற்பிக்கவே சேயிழையாள்[1] அபிராமி
அடிதொழுது நமஸ்கரித்து ஆசாரம் பலதும்செய்து
திருவடியைத் தொழுதுகொண்டு தேன்மொழியாள் அறிவிக்கவே
வடநாடு தன்னதிலே வாய்த்த அயோத்திப்பட்டிணத்தில்
அயோத்திப் பட்டிணத்தில் அடியாள்பேர் அபிராமி
அடியாள்தன் னுடன்பிறந்த அண்ணன்பேர் கிட்டிணத்தாள்
மகாதேவர் கோவிலிலே வாய்த்ததொரு கைமுறையும்
கைமுறையும் தானடத்திக் கட்டுடனே பிழைத்துவந்தோம்[2]
பிழைக்குமந்த நாளதிலே இசல்மாரி பொழியாமல்[3]
மாரியது பொழியாமல் வாய்த்தபஞ்சம் தான்பிடித்துக்
கொடுக்கல்வாங்கல் கிடையாமல் போக்கின்றி இங்குவந்தோம்.

5.1. திருமனது - அரசர்; ராமவர்மா. கற்பிக்கவே - ஆணையிடவே. சேயிழையாள் - சிறந்த ஆபரணங்களை அணிந்தவள். 5.2. ஆசாரம் - அனுஷ்டானம்; வணக்க முறைகள். 5.3. திருவடி - மன்னரைக் குறித்தது. 5.8. கட்டுடனே - வரம்புடனே. 5.9. இசல்மாரி - இயல்பாகப் பெய்ய வேண்டிய மழை. 5.11. கொடுக்கல் வாங்கல் இடையாமல் - பொருள்களைக் கொடுப்பதற்கும் வாங்குவதற்கும் இயலாமல். போக்கின்றி - வேறு வழியின்றி.

சு.சொ : 1. சேயிளையாள் 2. பிளைத்துவந்தோம் 3. பொளியாமல்.

## Apirāmi nāṭuviṭṭu nāṭu vanta kāraṇam kūṟutal

**naṭai**

5. *tirumaṇatu kaṟpikkavē cēyiḻaiyāḷ apirāmi*
*aṭitoḻutu namaskarittu ācāram palatumceytu*
*tiruvaṭiyait toḻutukoṇṭu tēṉmoḻiyāḷ aṟivikkavē*
*vaṭanāṭu taṉṉatilē vāytta ayōttippaṭṭiṇattil*
*ayōttip paṭṭiṇattil aṭiyāḷpēr apirāmi*
*aṭiyāḷtaṉ ṉuṭaṉpiṟanta aṇṇaṉpēr kiṭṭiṇattāḷ*
*makātēvar kōvililē vāyttatoru kaimuṟaiyum*
*kaimuṟaiyum tāṉaṭattik kaṭṭuṭaṉē piḷaittuvantōm*
*piḷaikkumanta nāḷatilē icalmāri poḻiyāmal*
*māriyatu poḻiyāmal vāyttapañcam tāṉpiṭittuk*
*koṭukkalvāṅkal kiṭaiyāmal pōkkiṉṟi iṅkuvantōm*

### Apirāmi narrating her story

With select words and silver tone said she:
"Ayōtti is my land
Apirāmi is my name.
Kirusṇaṉ is my brother
Great is my profession.
A perfect dancer with a permanent sponsor
Dedicated to the temple of Civaṉ
Devoted to the art of dancing
Unpredictable is the vagaries of nature
Untold are the miseries of this creature!
Forced to flee the land
For, there is no rain and grain
Fortunate are we here in your heaven!"

### மன்னர் அபிராமியை விரும்புதல்

அப்போது தம்புரானும் அவர்மனது களிகூர்ந்து
பெண்ணரசைக் கண்டபோது பேதையர்மேல் ஆசைகொண்டு
பங்கயஞ்சேர் முகத்தாளுக்குப் பட்டுக்கச்சை கொடுக்கவேணும்
பள்ளிமெத்தை சேர்வதற்குப் பாரமன்னர் கற்பிக்கவே

கற்பித்த நாழிகையில்[1] கடுகநின்ற மந்திரிமார்
ஆகட்டும் தம்புரானே அதுதான் கருமமென்ன
தேரோட்டம் திருவிழாவும்[2] சீவிலியும் தானடத்தி.

5.12. தம்புரான் - மன்னர் ராமவர்மாவைக் குறித்தது. களி கூர்ந்து - மகிழ்ச்சியடைந்து. 5.13. பேதை - அறிவைப் பேதலிக்க வைக்கும் பெண். 5.14. பங்கயஞ்சேர் - தாமரை மலரை ஒத்தது போன்று. பட்டுக்கச்சை - பட்டுச்சேலை. வேணும் - 'வேண்டும்' என்பதின் பேச்சு வழக்கு. 5.15. பள்ளி மெத்தை - பஞ்சணை; மஞ்சம். பாரமன்னர் - வலிமையான மன்னர். கற்பிக்கவே - ஆணையிடவே. 5.16. கடுக நின்ற - மன்னரை விட்டு மரியாதை நிமித்தம் அகல நின்ற. 5.17. கருமம் = கடமை. 5.18. தேரோட்டம் - தேர்த் திருவிழா. சீவிலி - ஸ்ரீபலி; கோயில் தின பூஜை முடிந்த பிறகு மூலவருக்கும் பரிவாரத் தெய்வங்களுக்கும் நடக்கும் சடங்கு.

சு.சொ : 1. நாளிகையில் 2. திருவிளாவும்

## Mannar apirāmiyai virumputal

*appōtu tampurāṉum avarmaṉatu kaḷikūrntu*
*peṇṇaracaik kaṇṭapōtu pētaiyarmēl ācaikoṇṭu*
*paṅkayañcēr mukattāḷukkup paṭṭukkaccai koṭukkavēṇum*
*paḷḷimettai cērvataṟkup pāramaṉṉar kaṟpikkavē*
*kaṟpitta naḻikaiyil kaṭukaniṉṟa mantirimār*
*ākaṭṭum tampurāṉē atutāṉ karumameṉṉa*
*tērōṭṭam tiruviḻāvum civiliyum tāṉaṭattit*

## The king fell in love with Apirāmi

Happy was the king, gay was his heart.
With eyes of passion, and eyes of compassion
Looked at Apirāmi, the queen of Beauty.
"Give her silk saree and fine mattress.
She is my favourite, seizing my thoughts
Make her my queen and take care of her needs"
Said the king to the standing ministers.
They knew his mind and obliged him best.

## மன்னர் கோவில்கல் கொட்டாரத்திற்கு வருதல்

திருநாளும் முகிந்தபோது சிறந்தமுடி மன்னவரும்
தாணுமாலையப் பெருமாளைத் தம்புரானும் தான்தொழுது[1]
பள்ளியந் திலாவதிலே பாரமன்ன ரெழுந்தருள[2]
வெள்ளித்தடிக் காரர்களும்[3] விரையசொல்லச் சேவுகளும்

கொல்ல வில்லர்களும் கொச்சுகூட்ட நாயன்மாரும்
குஞ்சுகூட்ட நாயன்மாரும் கோடிபடை சூழ்ந்துவர
சுயிந்திரத்துப் பதியும்விட்டு சிறந்தமன்னர் எழுந்தருளி[4]
ஆச்சிராமம் விட்டு ஆனைப்பாலம் கடந்து
கண்டபெரும படையோட கோட்டாறு தான்கடந்து
வடிவீஸ்வரம் தனிலேவந்து வணங்கிநின்று அடிதொழுது[5]
காணிக்கையு மிட்டல்லோ கய்யாரத் தொழுதுகொண்டு[6]
நாகருவாழ்[7] கோவில்விட்டு ராமவர்மத் தம்புரானும்
கோவில்கல் கொட்டாரத்தில் சொகுசாக வீற்றிருந்தார்.

**5.19.** முகிந்தபோது - முடிந்தபோது. **5.21.** பள்ளியந்திலா - ஓய்வெடுக்கும் சிறிய அரண்மனை. பாரமன்னர் - வலிமையான மன்னர்; ராமவர்மாவைக் குறித்தது. **5.22.** வெள்ளித்தடிக்காரர்கள் - மன்னரின் முன்னே வெள்ளித்தடி ஏந்தி வரும் காவலர்கள். விரையச் சொல்லச் சேவுகள் - விரைவாகச் சென்று செய்திகள் சொல்லும் சேவகர்கள். **5.23.** கொல்ல வில்லர் - கொல்லும் வலிமையுடைய வில்லை ஏந்தியவர். கொச்சுகூட்ட நாயன்மார் - இராமவர்மாவோடு உடனிருந்த முக்கிய பிரமுகர்கள்; நாயர் சமூகத்தினர். **5.24.** குஞ்சு கூட்ட நாயன்மார் - இராமவர்மாவின் உடன்வந்த முக்கிய பிரமுகர்கள்; நாயர் சமூகத்தினர். **5.25.** சுயிந்திரம் - 'சுசீந்திரம்' என்ற ஊரின் திரிந்த வழக்கு. **5.26.** ஆச்சிராமம் - ஆஸ்ராமம்; நாகர்கோயில் கன்னியாகுமரிச் சாலையில் நான்கு கி.மீ. தொலைவில் உள்ளது; அத்திரி முனிவர் தங்கிய ஆசிரமம் இருந்த ஊர் என்பது ஐதீகம்; இவ்வூர் கல்வெட்டு (1776) 'ஆச்சிராமம்' என்றே குறிப்பிடுகிறது. ஆனைப்பாலம் - நாகர்கோவில் கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் இடலாக்குடி - ஆஸ்ராமம் என்னும் இரு ஊர்களுக்கிடையிலமைந்த ஒரு பாலத்தின் பெயர். **5.27.** படையோட - 'படையோடு' என்பதின் பேச்சு வழக்கு. கோட்டாறு - நாகர்கோயிலின் பழைய பெயர்; இந்திரனின் ஐராவதம் தன் கோட்டினால் (கொம்பினால்) கிளறவும் ஆறு பெருக்கெடுத்ததால் 'கோட்டாறு' என பெயர் வந்ததாக ஐதீகம்; கல்வெட்டுகளில் இவ்வூர் 'திருகோட்டாறான மும்முடிச்சோழ நல்லூர்எனக் குறிக்கப்படுகிறது; இவ்வூரை நின்றசீர் நெடுமாறன் என்ற கூன் பாண்டியன் கைப்பற்றியதாகப் பாண்டிக் கோவை குறிப்பிடுகிறது. **5.28.** வடிவீஸ்வரம் - நாகர்கோவில் ஊரின் ஒரு பகுதியின் பெயர்; இவ்வூரின் வடிவு ஈஸ்வரி அம்மன் பெயரால் இவ்விடத்திற்கு இப்பெயர் வந்தது; இக்கோயில் கல்வெட்டு (கி. பி. 1536) 'நாஞ்சி நாட்டு மும்முடிச்சோழ நல்லூர் வடிவீஸ்வரம்' என இவ்வூரைக் குறிப்பிடுகிறது; திருவிதாங்கூர் மன்னர்கள் கன்னியாகுமரி செல்லும் பொழுது இப்பகுதி வழியாகச் சென்றனர்; இது ராஜபாதை என்றும் அழைக்கப்பட்டது. **5.29.** கய்யார - கையார; கைகளால். **5.30.** நாகருவாழ் கோவில் - நாகரின் அரசன் வாழும் கோவில்; நாகர் என்பது நல்லபாம்பைக் குறித்தது; இவ்வூர் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகர். **5.31.** கோவில்கல் கொட்டாரம் - திருவிதாங்கூர் காலத்தில் கட்டப்பட்ட ஓர் அரண்மனை; அது இப்பொழுது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் இருந்த இடத்தில் இருந்ததாக வாய்மொழி மரபு கூறும்.

சு.சொ : 1. தான்தொளுது 2. ரெளுந்தருள 3. காறர்களும் 4. எளுந்தருளி 5. அடிதொளுது 6. தொளுதுகொண்டு 7. நாகருவாள்

## Maṉṉar kōvilkaḷ koṭṭārattiṟku varutal

*tirunāḷum mukintapōtu ciṟantamuṭi maṉṉavarum*
*tāṇumālaiyap perumāḷait tampurāṉum tāṉtoḻutu* ·

*paḷḷiyan tilāvatilē pāramaṉṉa reḻuntaruḷa*
*veḷḷittaṭik kārarkaḷum viraiyacollac cēvukaḷum*
*kolla villarkaḷum koccukūṭṭa nāyaṉmārum*
*kuñcukūṭṭa nāyaṉmārum kōṭipaṭai cūḻntuvara*
*cuyintirattup patiyumviṭṭu ciṟantamaṉṉar eḻuntaruḷi*
*āccirāmam viṭṭu āṉaippālam kaṭantu*
*kaṇṭaperum paṭaiyōṭa kōṭṭāṟu tāṉkaṭantu*
*vaṭivīsvaram taṉilēvantu vaṇaṅkiniṉṟu aṭitoḻutu*
*kāṇikkaiyu miṭṭallō kayyārat toḻutukoṇṭu*
*nākaruvāḻ kōvilviṭṭu rāmavarmat tampurāṉum*
*kōvilkal koṭṭārattil cokucāka vīṟṟiruntār*

As it was the consummation of the Car Festival
All went and worshipped Tāṇumālaya Perumāḷ
As the king emerged from the temple
All followed the royal Flag.
Moving were the soldiers that carried the silver armour
Marching were the captains that carried the deadly weapons
Rāmavarma Tampirāṉ, the king and his royal courtiers
Thus left Cucīntiram and reached Āsrāmam
Crossing the Āṉaippālam and
Passing through Vaṭivīsvaram
Reached the renowned town Nākarkōyil.

**அபிராமியை அரசர் மணம் புரிதல்**

**வேறு**

6. வீற்றிருந்த திருமனசு கொண்டு
விஸ்தாரமான மந்திரி மார்கள்
அருகழைத்து[1] திருவுளம்[2] பற்றினார்
ஆயிழைக்குப்[3] பரிவட்டம் கொடுக்கவே
கோத்திரத்துடன் கிட்டே அழைத்தல்லோ[4]
சுறுதியாக மன்னர் கற்பித்தார்
கற்பித்தார் பட்டுக்கச்சை கொடுக்கவே
காரிகையாளுக்கு நாளும் திவசமும்
உற்றராசியும் பக்கமும் ஆமென்ன
உறுதியாய்ப் பட்டுகச்சை கொடுக்கவே

பட்டுக்க்சை தன்னை வருத்தியே
        பாரமன்னர் திருக்கையினால் தொட்டு
அபிராமி தன்னை அழைத்தல்லோ
        ஆயிழைக்குப் பரிவட்டம் சாத்தினார்
பரிவட்டங்கள் சாற்றிய பின்னாலே
        பாவை நல்லாள் தன்தமயனுக்கு
முண்டுநல்ல கவணி கொடுக்கவே
        மொகமொகென குரவைகள் முழங்கிட
சங்கீதத்துடன் ஒசை முழக்கமும்
        சந்தோசத்துடன் நாக சுரக்குழல்[5]
நாகரெத்தின முத்து இலங்கவே
        நாகயிடி போல முழக்கமும்[6]
வெஞ்சாமரை வீசிய ஒசையும்
        மிக்கமன்னர் எழுந்தருளி[7] னாரே.

**6.1.** திருமனசு கொண்டு - 'மேன்மையான அரசரின் மன எண்ணத்தின் காரணமாக' என்ற பொருளில். விஸ்தாரமான - அறிவுடைய. **6.2.** அருகழைத்து - அருகே அழைத்து. திருவுளம் பற்றினார் - 'மேன்மையான மன்னர் தன் உள்ளத்தின் கருத்தைக் கூறினார்' என்ற பொருளில். ஆயிழை - அழகிய ஆபரணங்கள் அணிந்த பெண். பரிவட்டம் - சேலை. **6.3.** கோத்திரத்துடன் - முறையுடன். சுறுதியாக - விரைவாக. கற்பித்தார் - கட்டளையிட்டார். **6.4.** பட்டுக்கச்சை - பட்டுச்சேலை. திவசம் - திதி. **6.5.** உற்ற ராசி - பொருத்தமான ராசி. **6.6.** வருத்தியே - வரவழைத்தே. பார மன்னர் - வலிமையான மன்னர். **6.7.** சாத்தினார் - 'சாற்றினார்' என்பதின் பேச்சு வழக்கு; அணிவித்தார். **6.9.** முண்டு - 'வேட்டி'யைக் குறிக்கும் வட்டார வழக்குச் சொல். கவணி - உடம்பில் போர்த்தும் விலையுயர்ந்த ஒரு வகை மேலாடை. மொகமொக - ஒலி குறிப்புச் சொல்; குரவையிடும் காலத்தில் உண்டாகும் ஓசை குறிப்பை உணர்த்தியது. குரவை பெண்கள் நாவால் குழறி உண்டாக்கும் ஒரு வித மங்கல ஓசை. **6.10.** நாகசுரக்குழல் - நாதஸ்வரம். **6.11.** நாகரெத்தினம் - முதிர்ந்த பாம்பினால் உமிழப்பட்ட மிகுந்த ஒளியுடைய ரத்தினக் கல். இலங்கவே - ஒளி விட்டு பிரகாசிக்கவே. நாகயிடி - மேகங்கள் இடி.

சு.சொ : 1. அருகளைத்து 2. திருவுழம் 3. ஆயிளைக்குப் 4. அளைத்தல்லோ 5. சுரக்குளல் 6. முளக்கமும் 7. எளுந்தருளி

## Apirāmiyai aracar maṉam purital

**vēṟu**

*viṟṟirunta tirumaṉacu koṇṭu*
        *vistāramāṉa mantiri mārkaḷ*
*arukaḻaittu tiruvuḷam paṟṟiṉār*
        *āyiḻaikkup parivaṭṭam koṭukkavē*
*kōttirattuṭaṉ kiṭṭē aḻaittallō*

*curutiyāka ma<u>n</u><u>n</u>ar ka<u>r</u>pittār*
*ka<u>r</u>pittār paṭṭukkaccai koṭukkavē*
*kārikaiyāḷukku nāḷum tivacamum*
*u<u>r</u><u>r</u>arāciyum pakkamum āme<u>n</u><u>n</u>a*
*u<u>r</u>utiyāyp paṭṭukaccai koṭukkavē*
*paṭṭukaccai ta<u>n</u><u>n</u>ai varuttíyē*
*pāramaṉṉar tirukkaiyiṉāl toṭṭu*
*apirāmi taṉṉai aḻaittallō*
*āyiḻaikkup parivaṭṭam cāttiṉār*
*parivaṭṭaṅkaḷ cā<u>r</u><u>r</u>iya piṉṉālē*
*pāvai nallāḷ taṉtamayaṉukku*
*muṇṭunalla kavaṇi koṭukkavē*
*mokamokeṉa kuravaikaḷ muḻaṅkiṭa*
*caṅkītattuṭaṉ ōcai muḻakkamum*
*cantōcattuṭaṉ nāka curakkuḻal*
*nākarettiṉa muttu ilaṅkavē*
*nākayiṭi pōla muḻakkamum*
*veñcāmarai vīciya ōcaiyum*
*mikkamaṉṉar eḻuntaruḷi ṉārē.*

## Apirāmi becoming the Queen

Stayed the graceful king there
In the palace raised for such special visits
All the ministers assembled there
Having made everything for the royal pleasure
Awaiting attentively for the royal order
It was on the auspicious hour
They brought Apirāmi with royal bearing
Silk saree and special clothes
Ordered the king for Apirāmi
And blessed her with royal dress
And performed the royal ceremony
He took her to the royal court
Holy chants and holy songs everywhere
Hopeful Kiruṣṇaṉ also got his share.

## மன்னர் அனைவருடனும் வேம்படிவாழ் கோவில்கல் வருதல்

வேறு

7. நாகருவாழ்[1] கோவில்விட்டு ராமவர்மத் தம்புரானும்
பள்ளியந் திலாவதிலே பாரமன்னர் எழுந்தருளி[2]
பல்லாக்கில் அபிராமி பக்கத்தில் தான்வரவே
அவள்தமயன் பரியேறி அரசமன்னர் பின்வரவே
நாகருவாழ் கோவில்விட்டு நல்லவெட்டூணி மடம்கடந்து
பஞ்சவர்கள் உறையுமந்த பஞ்சவர்ணக் காடுமிட்டு
பஞ்சவர்ணக் காடுமிட்டு பார்வதியாள் அகரம்விட்டு
கள்ளியங் காடுமிட்டு கணியாங்குளம் கடந்து
சுங்காங்கடை கடந்து துறட்டியோட்டு மடத்துவழி
செட்டிமடம் தான்கடந்து சிறந்தமுடி மன்னவரும்
குதிரபாஞ்சாங் குளங்கடந்து கூண்டமன்னர் எழுந்தருளி
சிங்கநல்லூர் படைவீட்டில் சேயிழையும்[3] மன்னவரும்
வேம்படிவாழ்[4] கோவில்கல்லில் விரையமன்னர் எழுந்தருளி
திருப்பள்ளி கொள்ளுமுன்பே திருவனந்தல் பற்றுவாராம்.

7.1. நாகருவாழ்கோவில் - நாகர்கோயில். 7.2. பள்ளியந்திலா - 'பள்ளியந்துலா' என்பதின் பேச்சு வழக்கு; பள்ளி கொள்ளும் வண்ணம் அமைக்கப் பெற்ற அழகிய, உலா செல்லும் ஒரு வகை சிவிகை; 'சயன தண்டிகை' எனவும் பெயர் பெறும். 7.4. பரி - குதிரை. 7.5. வெட்டுணிமடம் - வெட்டூர்ணிமடம்; நாகர்கோயில் திருவனந்தபுரம் நெடுஞ்சாலையில் உள்ள, நாகர்கோயிலிருந்து மூன்று கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர். 7.6. பஞ்சவர்ணக்காடு - வெட்டூர்ணிமடம் அடுத்த காட்டுப்பகுதியின் பெயர்; பாண்டவர்கள் வனவாசத்தின் போது இங்கே தங்கியதாக ஐதீகம். 7.7. பார்வதியாளகரம் - பார்வதிபுரம்; நாகர்கோயிலிருந்து மூன்று கி.மீ. தொலைவிலிலுள்ள ஓர் ஊர். 7.8. கள்ளியங்காடு - நாகர்கோவிலிருந்து நான்கு கி.மீ தொலைவிலுள்ள ஓர் சிறிய ஊர்; இங்குள்ள சிவன் கோயிலில் மார்த்தாண்டவர்மா தம்பிகளுக்கு அஞ்சி மறைந்திருந்ததாக வாய்மொழி மரபு செய்தி உண்டு; இவ்வூர் கோயில் கல்வெட்டு (கி.பி.1688) இதனை, 'தென்னாட்டு வீரநாராயணசேரி கீழ்பால் கள்ளியங்காடு' எனக் குறிப்பிடுகிறது. கணியாங்குளம் - வேணாட்டு வரலாற்றுடன் தொடர்புடைய ஓர் ஊர்; நாகர்கோயிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. 7.9. சுங்காங்கடை - மேற்படி ஊரை அடுத்த மிகச் சிறிய ஊர்; சுங்கம் வசூலிக்கும் இடமாகத் திகழ்ந்தது. துறட்டியோடுமடம் - 'தோட்டியோடு மடம்' என்று அழைக்கப்பெறும் இம்மடம் சுங்காங்கடையிலிருந்து 1.5. கி.மீ தொலைவிலுள்ளது. 7.10. செட்டிமடம் - தோட்டியோடு மடத்தை அடுத்த சிறிய கல் மண்டபம். 7.11. குதிரபாஞ்சாங்குளம் - 'குதிரைபாய்ந்தான் குளம்' என்ற ஊர் பெயரின் திரிபு வடிவம்; நாகர்கோயிலிருந்து ஆறு கி.மீ. தொலைவிலுள்ள இவ்வூரைப் பிற வில்லிசைப் பாடல்களும் குறிப்பிடும்; பத்பநாபபுரத்திலிருந்து நாகர்கோவில் வரும் குதிரை வீரர்களுக்கு இக்குளக் கரையில் விபத்து நேரும் என்கிற நம்பிக்கை அடிப்படையில் இப்பெயர் வந்தது. 7.12. சிங்கநல்லூர் - இரணய சிங்கநல்லூர்; தற்பொழுது இவ்வூர் இரணியல் என்றழைக்கப்படுகிறது; நாகர்கோயில் - குளச்சல் சாலையில் 20 கி.மீ. தொலைவிலுள்ள இவ்வூரில் சேரமான் பெருமாள் உயிரோடு 'சொர்க்கம் புகுந்த

அரண்மனை ஒன்றுண்டு என்பது வாய்மொழி மரபுச் செய்தி; கி.பி. 1992 வரை நல்நிலையிலிருந்த இவ்வூர் அரண்மனை இடிபாடுகளுடன் காணப்படுகிறது; சுசீந்திரம் கல்வெட்டு (1208) இவ்வூரை இரணிய சிங்கநல்லூர் என குறிப்பிடும்; இவ்வூர் வேம்படிவாழ்கல் அரண்மனையில் தம்பிகள் வாழ்ந்ததாகக் கதைப்பாடல் குறிப்பிடுகிறது. 7.13. விரைய விரைவாக. 7.14. திருப்பள்ளி கொள்ளுதல் - படுத்தல். திருவனங்கன் - திருமால்.

சு.சொ : 1. நாகருவாள் 2. எளுந்தருளி 3. சேய்பிளையும் 4. வேம்படிவாள்

## Maṉṉar aṉaivaruṭaṉum vēmpaṭivāḻ kōvilkaḷ varutal

**vēṟu**

*nākaruvāḻ kōvilviṭṭu rāmavarmat tampurāṉum*
*paḷḷiyan tilāvatilē pāramaṉṉar eḻuntaruḷi*
*pallākkil apirāmi pakkattil tāṉvaravē*
*avaḷtamaiyaṉ pariyēṟi aracamaṉṉar piṉvaravē*
*nākaruvāḻ kōvilviṭṭu nallaveṭṭūṇi maṭamkaṭantu*
*pañcavarkaḷ uṟaiyumanta pañcavarṇak kāṭumiṭṭu*
*pañcavarṇak kāṭumiṭṭu pārvatiyāḻ akaramviṭṭu*
*kaḷḷiyaṅ kāṭumiṭṭu kaṉiyāṅkuḷam kaṭantu*
*cuṅkāṅkaṭai kaṭantu tuṟaṭṭiyōṭṭu maṭattuvaḻi*
*ceṭṭimaṭam tāṉkaṭantu ciṟantamuṭi maṉṉavarum*
*kutirapāñcāṅ kuḷaṅkaṭantu kūṇṭamaṉṉar eḻuntaruḷi*
*ciṅkanallūr paṭaiviṭṭil cēyiḻaiyum maṉṉavarum*
*vēmpaṭivāḻ kōvilkallil viraiyamaṉṉar eḻuntaruḷi*
*tiruppaḷḷi koḷḷumuṉpē tiruvaṉanakal paṟṟuvārām*

Passing through various places
Like Veṭṭūrṇimaṭam, Pārvatipuram
Kaḷḷiyaṅkāṭu, Kanyiāṅkuḷam.
Cuṅkāṉkaṭai, Turaṭṭiyōṭu
Ceṭṭimaṭam, Ciṅkanallūr
The King took his queen in a Palanquin
Headed towards his capital.

## அபிராமி மற்றும் அவளின் சகோதரருக்குப் புதிய பெயரை அரசர் சூட்டுதல்

இன்று யிவள்தனக்கு ஏதுதிருப்பேர் தான்கொடுப்போம் 15
அபிராமி தனைமாற்றி அம்மைதம்புரான் என்றழைத்தார்

கிட்டிணத் தாளம்மை என்றுசொல்லிக் கிருபையுடன் வாழ்த்தினாரே
அபிராமியுடன் பிறந்த அண்ணன்பேர் கிட்டினர்தாம்
கிட்டிணர்என்று நாட்டவரும் கிருபையுடன் பெயர்கொடுக்க
கொச்சுமாடன் பிள்ளையென்று கூறுவாராம் திருநாமப்பேர்
ராமவர்ம தம்புரானும் நல்லகிட்டிணத் தம்மாதானும்
பள்ளியறை மெத்தையிலே பாவித்தார் இருபேரும்
இருபேரும் திருமனசு இணக்கமுடன் தான்பொருந்தி.

7.15. ஏது - என்ன. 7.17. கிருபை - கருணை. 7.22. பாவித்தார் - பொருந்தினார். 7.23. மனசு - 'மனம்' என்பதின் பேச்சுவழக்கு. இணக்கம் - விருப்பம்.

## Apirami ma<u>r</u><u>r</u>um avaḷi<u>n</u> cakōtararukkup putiya peyarai aracar cūṭṭutal

*i<u>n</u><u>r</u>uyivaḷ ta<u>n</u>akku ētutiruppēr tā<u>n</u>koṭuppōm*
*apirāmi taṇaimā<u>r</u><u>r</u>i ammaitampurā<u>n</u> e<u>n</u><u>r</u>aḻaittār*
*kiṭṭiṇat tāḷammai e<u>n</u><u>r</u>ucollik kirupaiyuṭa<u>n</u> vāḻttiṉārē*
*apirāmiyuṭa<u>n</u> pi<u>r</u>anta aṇṇa<u>n</u>pēr kiṭṭiṇartām*
*kiṭṭiṇare<u>n</u><u>r</u>u nāṭṭavarum kirupaiyuṭan peyarkoṭukka*
*koccumāṭa<u>n</u> piḷḷaiye<u>n</u><u>r</u>u kū<u>r</u>uvārām tirunāmappēr*
*rāmavarma tampurā<u>n</u>um nallakiṭṭiṇat tammātā<u>n</u>um*
*paḷḷiya<u>r</u>ai mettaiyilē pāvittār iruppērum*
*irupērum tirumaṉacu iṇakkamuṭa<u>n</u> tā<u>n</u>porunti*

## The king gave new names to Apirāmi and Kiriṣṇa<u>n</u>

'Apirāmi needs a new name'
Said the king several times
Selected a name that became his favourite
'Kiruṭṭi<u>n</u>attammāḷ, Kiruṭṭi<u>n</u>attumāḷ'
The name that filled his heart and mind
Gave her the name and blessed her with the same
Her brother also got a name
Kiruṣṇa<u>n</u> took a different role
Koccumā<u>r</u>a Piḷḷai was the name
Given by the graceful king.
Rāmavarma Tampirā<u>n</u> and Kiruṭṭi<u>n</u>attammāḷ
The royal couple
Led the life of a holy pair

With one soul and twin lives
Shared the bed and shared everything.

### கிட்டிணத்தம்மாள் கர்ப்பமடைதல்

மனம்பொருந்தி இருபேரும் வாழ்ந்திருக்கும் நாளையிலே
இருக்குமந்த நாளையிலே ஏந்திழையும்[1] மன்னவரும்
பசலையொன்று இல்லாமல் பயிந்தொடியாள் வருந்துவாளாம்
ராமவர்மா தம்புரானாம் நாடித்திருமனது தான்சடைத்து
கிட்டிணத்தா ளம்மைதானும் கிருபையுடன்[2] தானிருக்க
இருக்குமந்த நாளையிலே மாயவனார் திருவருளால்
வயிற்றில்கர்ப்பம் மிகப்பெற்று மாதம்பத்து சென்றபோது.

7.24. நாளையிலே - 'காலத்திலே' என்ற பொருளில். 7.25. ஏந்திழை - ஆபரணங்களை அணிந்தவள்; கிட்டிணத்தாளம்மையைக் குறித்தது. 7.26. பசலை - குழந்தை. 7.27. சடைந்து - சோர்ந்து. 7.29. மாயவனார் - திருமால்.

சு.சொ : 1. ஏந்திளையும் 2. கிறுபையுடன்

### Kiṭṭiṇattammāḷ karppamaṭaital

*maṉamporunti irupērum vāḻntirukkum nāḷaiyilē*
*irukkumanta nāḷaiyilē ēntiḻaiyum maṉṉavarum*
*pacalaiyoṉṟu illāmal payintoṭiyāḷ varuntuvāḷām*
*rāmavarmā tampurāṉām nāṭittirumaṉatu tāṉcaṭaittu*
*kiṭṭiṇattā ḷammaitāṉum kirupaiyuṭaṉ tāṉirukka*
*irukkumanta nāḷaiyilē māyavaṉār tiruvaruḷāl*
*vayiṟṟilkarppam mikappeṟṟu mātampattu ceṉṟapōtu*

### Pregnancy of Kiruṭṭiṇattammāḷ

Happiness filled their heart
Happiness filled the Royal palace
Nothing worried them for months together
One fine morning the damsel had a sad mien
Rāmavarma Tampirāṉ read her mind
And learnt her desire for child
They prayed before Lord Tirumāl
The presiding deity of the land
Blessed by the Lord
Bore she a child for ten months.

## குழந்தை பிறத்தல்

பத்தான மாசத்திலே பாவையர்க்கு[1] மெய்நோக
மெய்நோக மருத்துவத்தை விரசலுடன் கூட்டிவந்தார்
பத்தான மாசத்திலே பாவையர்க்கு மெய்நோக
மெய்நோக மருத்துவத்தை விரசலுடன் கூட்டிவந்தார்
கூட்டிவந்த மருத்துவமும் குலுங்காமல் பிடித்திழுக்க[2]
பிடித்திழுக்க[3] மருத்துவத்தாள் பிறவிசெய்த குழந்தையது[4]
வலதுகையில் சங்குசக்கரம் மாந்தளிர்போல் மேனியுமாய்
வையகம் தழைக்கயென்று[5] வந்துபிறந்த பாலகனார்.

7.31. மெய்நோக - பிரசவ வலி எடுக்க. 7.32. மருத்துவத்தை - மகப்பேறு பார்க்கும் மருத்துவச்சியை. விரசலுடன் - வேகத்துடன். 7.35. குலுங்காமல் பிடித்திழுக்க - குழந்தையின் பிறப்பு வாயிலில், குழந்தை அசைந்து சேதம் ஏற்படாதபடி பிடித்திழுக்க. 7.36. பிறவி செய்த - பிறந்த. 7.37. சங்கு சக்கரம் - உள்ளங்கையில் காணப்பட்ட சங்கு, சக்கர அடையாளங்கள்; இது குழந்தையின் மேன்மையினைச் சோதிட முறைப்படி குறித்தது. 7.38. வையகம் - உலகம்.

சு.சொ : 1. பாவையற்கு 2,3. பிடித்திளுக்க 4. குளந்தையது 5. தளைக்கயென்று

## Kuḻantai piṟattal

*pattāṉa mācattilē pāvaiyarkku meynōka*
*mēynōka maruttuvattai viracaluṭaṉ kūṭṭivantār*
*pattāṉa mācattilē pāvaiyarkku meynōka*
*mēynōka maruttuvattai viracaluṭaṉ kūṭṭivantār*
*kūṭṭivanta maruttuvamum kuluṅkāmal piṭittiḻukka*
*piṭittuḻukka maruttuvattāḷ piṟaviceytā kuḻantaiyatu*
*valatukaiyil caṅkucakkaram māntaḷirpōl mēṉiyumāy*
*vaiyakam taḻaikkayeṉṟu vantupiṟanta pālakaṉār*

## Birth of a child

There was a hue and cry everywhere
On the day after the tenth month
All went in different directions
In search of the royal nurse.
Came she with years of experience;
With the air of ease and peace
Born was the baby there
With symbols on his right hand

And beauty on his fore-head
Came there the king
Rāmavarma Tampirāṉ
Saw the child with abundant love
And blessed him to live for ever.

### மன்னர் குழந்தைக்குச் சாதகம் கணிக்கக் கட்டளையிடுதல்

பாலன்வந்து பிறந்தபோது பாரமுடி மன்னவரும்
ராமவர்ம தம்புரானும் திருமனசு கற்பிக்கவே
இந்தப்பாலன் பிறந்தபலன் இனிகேட்க வேணுமென்று
சோதிரியை வரவழைத்துச் சொல்லிமன்னர் கற்பிக்கவே.

7.40. கற்பிக்கவே - கட்டளையிடவே. 7.42. சோதிரி - சோதிடர். 7.41. பாலன் - குழந்தை.

### Maṉṉar kuḻantaikkuc cātakam kaṇikkak kaṭṭaḷaiyiṭutal

*pālaṉvantu piṟantapōtu pāramuṭi maṉṉavarum*
*rāmavarma tampurāṉum tirumaṉacu kaṟpikkavē*
*intappālaṉ piṟantapalaṉ iṉikēṭka vēṇumeṉṟu*
*cōtiriyai varavaḻaittuc collimaṉṉar kaṟppikkavē*
As it was the custom
To know the future of the new born
Sent the king for the astrologer
To know the prospects of his son.

### சோதிடர் சாதகம் கணித்துப் பலன் கூறுதல்

பிள்ளையது பிறந்தபலன் புரச்சம்வச்சு பார்க்கவேணும்
மெழுகிவரை தான்கீறி விளங்கும்நிறை நாழிவச்சு
மாயனரு ளால்கிரகம் வகுத்தியவ ரெண்ணிப்பார்த்து
அன்பத்தெட்டு அட்டமங்கலம் அடவுடனே(கீறி) பரல்பரத்தி
பாலாலே பரல்கழுவி பலகையிலே நிரத்துவாராம்
வாழ்கிரகம்[1] ஆனதெல்லாம் நன்றாகச் சாற்றுவாராம்[2]
கேளும்கேளும் தம்புரான் கிரகப்பலன் சொல்லுகிறேன்
உத்திரத்தில் பிறந்தபிள்ளை யோகமுண்டும் தம்புரானே
பக்கமும் கிரகமுந்தான் பழுதில்லைகாண் தம்புரானே
பின்னுமொரு கிரகமது பிரபலமாய் உதிக்குதல்லோ
ஏதுபலன் தானுதிக்கும் இப்போது சோதிருசி

அம்மைதம்புரான் திருவயற்றில் அதிகபலன் தான்பிறக்கும்
இன்னுமொரு ஆண்மதலை ஈன்றெடுப்பாள் அம்மைதம்புரான்
அதன்பின்பு பெண்மதலை அம்மையும் பெற்றெடுப்பாள்
அவள்வந்து பிறந்தபின்பு அழிந்திடுவார்[3] தம்பிமார்கள்
ஏதுபகை ஏதாலே இவர்இறப்பார் சோதிருசி
அப்போது சோதிரிசி அரசன்முன்பில் சொல்லுவானாம்
பின்னுலகை ஆளவரும் பேருலகில் மன்னவரும்
கொச்சுமணித் தங்கையர்க்குக்[4] கூண்டபரிவட் டங்கள்கொடுக்க
பட்டுக்கச்சை கொடுப்பதற்கும் பள்ளிமெத்தை சேர்வதற்கும்
மன்னரும் கற்பிக்கவே மாறிவிடுவார் தம்பிமார்கள்
மாட்டோமென்று தம்பிமார்கள் மன்னருடன் எதிர்த்துநிற்பார்
வன்குலையாய் தம்பிமாரை மன்னவரும் கொலைசெய்வார்.

7.43. புரச்சம் - பொரிச்சம்; பொருத்தம். வச்சு - 'வைத்து' என்பதின் பேச்சு வழக்கு. 7.44. மெழுகி வரைதான் கீறி - தரையை மெழுகி கிரக நிலைகளைப் பார்க்கும் கட்டம் வரைந்து. நிறைநாழி - நெல் தானியம் நிறைத்து வைத்த இருக்கும் நாழி என்னும் ஒரு வகை முகத்தல் அளவு கருவி. 7.45. கிரகம் வகுத்தி - கிரக நிலைகளைக் கட்டத்தினுள் வரச் செய்து. எண்ணிப்பார்த்து - கிரகங்களின் இருப்பிட எண்களை எண்ணிப்பார்த்து. 7.46. அன்பத்தெட்டு - 'ஐம்பத்தெட்டு' என்பதின் பேச்சு வழக்கு. அட்டமங்கலம் - எட்டு வகை மங்கலப் பொருட்கள். பரல் பரத்தி - சோழி எனப்படும் கடல் கிளிஞ்சலைப் பரத்தி. 7.47. பலகையிலே - கிரகங்களின் நிலையை வரைந்த பலகையிலே. நிரத்துவாராம் - பரப்புவாராம். 7.48. சாற்றுவாராம் - கூறுவாராம். ர.50. உத்திரம் - ஒரு நட்சத்திரத்தின் பெயர். 7.51. பக்கமும் கிரகமும் - பக்கத்திலுள்ள கிரகங்களும். பழுதில்லை - குற்றமில்லை. 7.52. பின்னுமொரு - வேறுமொரு. பிரபலமாய் - மேன்மையாய். 7.53. ஏது பலன் - என்ன பலன். சோதிரிசி - சோதிடரே. 7.58. ஏதாலே - என்ன காரணத்தினாலே. 7.59. முன்பில் - முன்பாக. 7.60. பேருலகில் - பெரிய உலகில். மன்னவரும் - மார்த்தாண்ட வர்மா மன்னரும். 7.61. கொச்சிமணித் தங்கை - தம்பிமார்களின் தங்கையின் பெயர். பரிவட்டம் - பட்டுச்சேலை. 7.63. கற்பிக்கவே - கட்டளையிடவே. 7.65. குலை - 'கொலை' என்பதின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. வாள்கிரகம் 2. சாற்றுவாளாம் 3. அணிந்திருவார் 4. தங்கையற்கு

## Cōtiṭar cātakam kaṇittup palaṉ kūṟutal

*piḷḷaiyaṭu piṟantapalaṉ puraccamvaccu pārkkavēṇum*
*meḻukivarai tāṉkiṟi viḷaṅkumniṟai nāḻivaccu*
*māyaṉaru ḷālkirakam vakuttiyava reṇṇippārttu*
*aṉpatteṭṭu aṭṭamaṅkalam aṭavuṭaṉē(kiṟi) paralparatti*
*pālālē paralkaḻuvi palakaiyilē nirattuvārām*
*vāḻkirakam āṉatellām naṉṟākac cāṟṟuvāṟām*

*kēḷumkēḷum tampurāṉ kirakappalaṉ collukiṟēṉ*
*uttirattil piṟantapiḷḷai yōkamuṇṭum tampurāṉē*
*pakkamum kirakamuntāṉ paḷutillaikāṉ tampurāṉē*
*piṉṉumōru kirakamatu pirapalamāy utikkutallō*
*ētupalaṉ tāṉutikkum ippōtu cōtiruci*
*ammaitampurāṉ tiruvayiṟṟil atikapalaṉ tāṉpiṟakkum*
*iṉṉumoru āṇmatalai īṉṟeṭuppāḷ ammaitampurāṉ*
*ataṉpiṉpu peṇmatalai ammaiyum peṟṟeṭuppāḷ*
*avaḷvantu piṟantapiṉpu aḻintiṭuvār tampimārkaḷ*
*ētupakai ētālē ivariṟappār cōtiruṣi*
*appōtu cōtiriṣi aracaṉmuṉpil colluvāṉām*
*piṉṉulakai āḷavarum pērulakil maṉṉavarum*
*koccumaṇit taṅkaiyarkkuk kūṉṭaparivaṭ ṭaṅkaḷkoṭukka*
*paṭṭukkaccai koṭuppatarkum paḷḷimettai cērvataṟkum*
*maṉṉarum kaṟpikkavē māṟiviṭuvār tampimārkaḷ*
*maṭṭōmeṉṟu tampimārkaḷ maṉṉaruṭaṉ etirttuniṟpār*
*vaṉkulaiyāy tampimārai maṉṉavarum kolaiceyvār*

## Astrologer making the Horoscope

There came the astrologer
Swept the ground, drew the round the square
Positioned the stars in their places
Predicted each movement with accuracy
Foretold the course of his life.
"Listen to me, Oh, Tampirāṉ"
Said the astrologer in trance
"The child born on the star *uttiram*
Will have luck and fortune.
The stars adjacent to *uttiram*
Also are pure and blameless
Yet another star that lies far
Also shows signs of issues further
His royal mother hereafter will bear
One more son, that is not a wonder
After that you will hear

Arrival of a daughter, that I swear.
What I tell you next, Oh! King!
That prompts me to hold my tongue
The birth of the third is the death of the two.
There will be a king joining issues with your sons
Seeking the hand of the girl to settle
His enemies political score
Offering silk saree and fine mattress
To make her his favourite girl
Your sons the loving brothers two
Will bluntly refuse the wishes of the king
The wrath the cruel king takes
I tell you only the truth
Will cost the life of your sons"
Said the man before the king.

### மன்னரின் வருத்தம்

கொலைகளென்ற சொல்கேட்டு கோடிமனந் தான்சடைந்து
திருமனதுதான் சடைந்து திரும்பமன்னர் கற்பிக்கவே
வாரதெல்லாம் வரட்டென்று வரிசையுடன் சோதிரிசிக்கு.

7.66. கோடி - மனம் நிலையிலுருந்து கோடி; பிறழ்ந்து. சடைந்து - தளர்ந்து. 7.68. வாரதெல்லாம் - 'வருகின்றதெல்லாம்' என்பதின் பேச்சு வழக்கு. வரட்டு - 'வரட்டும்' என்பதின் பேச்சு வழக்கு.

### Ma<u>nn</u>ari<u>n</u> varuttam

*kolaikaḷe<u>n</u>ṟa colkēṭṭu kōṭimana<u>n</u> tā<u>n</u>caṭaintu*
*tiruma<u>n</u>atutā<u>n</u> caṭaintu tirumpama<u>nn</u>ar kaṟpikkavē*
*vāratellām varaṭṭe<u>n</u>ṟu varicaiyuṭa<u>n</u> cōtiricikku*

"Cold blooded murder! Oh! Cruel murder"
Echoed the words everytime in the heart
Sad was the king, sullen was his face.
Set right his broken heart
For his was the royal blood.
Bold to face whatever was his fate.

## சோதிடனுக்குப் பரிசு வழங்குதல்

வரிசையுடன் சோதிரிசிக்கு வேண்டுவண்ணம் வரிசைகளும்
மிகக்கொடுத்து அனுப்புவாராம்[1] சொல்பெரிய மன்னவரும்
தட்டானை வருத்தியல்லோ தான்கொடுத்தான் தங்கமது
பொன்னை நிறுக்காமல் பொலியளந்தாரே தம்புரானும்
வேணுமென்ற பணிகளெல்லாம் விதவிதமாய் தானொதுக்கி
பண்புடனே தட்டானும் பவிசாகத் தான்வாங்கி
சுட்டாகக் கட்டிக்கொண்டு சுவடுவைத்து அடிநடந்தான்.

**7.70.** சொல் பெரிய மன்னவர் - சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் பெரிய மன்னவர்; ராமவர்மா. **7.71.** தட்டான் - பொன் வேலை செய்பவன். **7.72.** பொலியளந்தார் - நெல்லை அளப்பது போல் பொன்னை அளந்தார். **7.73.** வேணுமென்ற - 'வேண்டுமென்ற' என்பதின் பேச்சு வழக்கு. **7.75.** சுட்டாக - சுருட்டாக; அரசன் தந்த பொன் மற்றும் பொருளை எல்லாம் துணியில் சுருட்டிச் சுருணையாக்கி. சுவடு வைத்து - அடி மேல் அடியை அளந்து வைத்து.

சு.சொ : 1. அன்புவாளாம்

## Cōtiṭaṉukkup paricu vaḻaṅkutal

*varicaiyuṭaṉ cōtiricikku vēṇṭuvaṇṇam varicaikaḷum*
*mikakkoṭuttu aṉuppuvārām colperiya maṉṉavarum*
*taṭṭāṉai varuttiyallō tāṉkoṭuttāṉ taṅkamatu*
*poṉṉai niṟukkāmal poliyaḷantārē tampurāṉum*
*vēṇumeṉṟa paṇikaḷellām vitavitamāy tāṉotukki*
*paṇpuṭaṉē taṭṭāṉum pavicākat tāṉvāṅki*
*cuṭṭākak kaṭṭikkoṇṭu cuvaṭuvaittu aṭinaṭantāṉ*

Gave the astrologer his due
Which included gold and pearl to name
Tired, wept and cried the goldsmith
That tried to measure the gold gift.

## குழந்தைக்கு வலிய தம்பி என்று பெயர் சூட்டுதல்

வாய்த்தநல்ல பாலனுக்கு இருபத்தெட்டாம் நாளையிலே
இருபத்தெட்டும் கெட்டியல்லோ ஆருடைய பெயரிடுவோம்
அருமையுள்ள பாலனுக்கு திருமனதில் உதித்தபடி
திருநாமப் பெயரிடுவோம் வலியதம்பி மன்னரென்று
மன்னவரும் கற்பிக்கவே கற்பிக்கவே திருநாமம்

**7.77.** இருபத்தெட்டும் கெட்டியல்லோ - குழந்தை பிறந்த 28-ம் நாள், குழந்தையின் இடுப்பில் மஞ்சள் கயறு கட்டி. ஆருடைய - 'யாருடைய' என்பதின் பேச்சு வழக்கு. 7.79. வலிய தம்பி - மூத்த தம்பி. 7.80. கற்பிக்கவே - கூறவே.

## Kuḻantaikku valiyatampi eṉṟu peyar cūṭṭutal

*vāyttanalla pālaṉukku irupatteṭṭām nāḷaiyilē*
*irupatteṭṭum keṭṭiyallō āruṭaiya peyariṭuvōm*
*arumaiyuḷḷa pālaṉukku tirumaṉatil utittapaṭi*
*tirunāmap peyariṭuvōm valiyatampi maṉṉareṉṟu*
*maṉṉavarum kaṟpikkavē kaṟpikkavē tirunāmam*

No name was given to the baby
Till he attained twenty eighth day
It was a very special and auspicious day
Holy thread was put round his waist
Hosts of names were considered
Finally there came a name
From the heart of the king
By placing the child on his lap
The king pronounced the name twice
"Valiya Tampi, Valiya Tampi.

### குழந்தையைத் தாலாட்டுதல்

கண்மணியே வலியதம்பி வலியதம்பி மன்னரென்று
மடியில்வைத்துத் தாலாட்ட குரலெடுத்து ஒராட்ட
ராரிரரி ராராரோ பொன்மணியே மன்னவனே
கண்ணேநீ ராராரோ கண்மணியே காவலனே
பொன்னிலங்கும் மேனியனே புவிதனையும் ஆளவென்று
மண்ணுலகை ஆளவந்த மன்னவனே ராராரோ
கிட்டிணத்தா எம்மைபெற்ற கீர்த்தியுள்ள பாலகனே
ஆனைகட்டி குதிரைகட்டி அரசரோடு வாதாட
சேனைபடை க்ளெல்லாம் சேகரிக்க வந்தாயோ
மன்னனைப் போலுதித்த வலியதம்பி ராராரோ
சிங்கநல்லூர் படைவீட்டில் தெரிசிக்க வந்தவனே
வந்தாரே மன்னவர்க்கு வலியதம்பி ராரிராரோ
பாரடங்க ஆளவந்த பாலகனே கண்மணியே
என்றுசொல்லித் தாய்மார்கள் இன்பமுடன் பாடினார்கள்.

**7.82.** ஓராட்ட - தாலாட்ட. **7.85.** பொன்னிலங்கும் - பொன் போலும் ஒளிர்விடும். **7.87.** கீர்த்தி புள்ள - புகழ் வாய்ந்த. **7.88.** ஆனை - 'யானை' என்பதின் பேச்சு வழக்கு. **7.91.** தெரிசிக்க - தரிசிக்க; வணங்க. **7.93.** பாரடங்க ஆள வந்த - பாரை அடக்கி ஆள்வதற்கு வந்த.

## Kuḻantaiyaik tālāṭṭutal

*kaṇmaṇiyē valiyatampi valiyatampi maṉṉareṉṟu*
*maṭiyilvaittut tālāṭṭa kuraleṭuttu ōrāṭṭa*
*rārirari rārārō poṉmaṇiyē maṉṉavaṉē*
*kaṇṇēṉī rārārō kaṇmaṇiyē kāvalaṉē*
*poṉṉilaṅkum mēṉiyaṉē puvitaṉaiyum āḷaveṉṟu*
*maṇṇulakai āḷavanta maṉṉavaṉē rārārō*
*kiṭṭiṇattā ḷammaipeṟṟa kīrttiyuḷḷa pālakaṉē*
*āṉaikaṭṭi kutiraikaṭṭi aracarōṭu vāṭāṭa*
*cēṉaipaṭai kaḷellām cēkarikka vantāyō*
*maṉṉaṉaip pōlutitta valiyatampi rārārō*
*ciṅkanallūr paṭaiviṭṭil tericikka vantavaṉē*
*vantārē maṉṉavarkku valiyatampi rārirārō*
*pāraṭaṅka āḷavanta pālakaṉē kaṇmaṇiyē*
*eṉṟucollit tāymārkaḷ iṉpamuṭaṉ pāṭiṉārkaḷ*

## Naming ceremony and the lullaby sung for the child

Picked up the name by all
Pleased the king with sovereign songs
They praised the king and his son
It filled the palace and floated everywhere
"Valiya Tampi is our king!
Oh! Golden king Valiya Tampi
Born to our queen Kiruṭṭinattāḷ
Born to rule the world.
May you expand our kingdom!
With elephants and horses!
May you retain the name of our king
By conquering kings and emperors!"
Sang the nurses and his mother
Nobody notices how a flower blooms
Nobody notices how a moon grows.

## வலிய தம்பி மூன்று வயதடைதல்

ஒன்றான திருவயதில் ஓவியம்போல் வலியதம்பி
இரண்டான திருவயதில் நடைபிடித்து விளையாடி
மூன்றான திருவயதில் மொய்குழலாள்[1] திருவயிற்றில்.[2]

7.96. நடைபிடித்து - நடந்து திரிந்து. 7.97. மொய்குழலாள் - வண்டு மொய்க்கும் கூந்தலை உடையாள்.

சு.சொ : 1. மொய்குளலாள் 2. திருவயற்றில்

## Valiyatampi mūṉṟu vayataṭaital

*oṉṟāṉa tiruvayatil ōviyampōl valiyatampi*
*iraṇṭāṉa tiruvayatil naṭaipiṭittu viḷaiyāṭi*
*mūṉṟāṉa tiruvayatil moykuḻalāḷ tiruvayiṟṟil*

When Tampi was one year old
He resembled a portrayal
When he was two years old
He was playing
When he was three years old
His mother became pregnant.

## கிட்டிணத்தம்மாள் இரண்டாவதாக ஆண்மகவொன்றைப் பெறுதல்

திருவயிற்றில் பின்னுமொரு ஆண்மதலை பெற்றெடுத்தாள்
பெற்றெடுத்தாள் தயாரும் பெற்றநல்ல பாலனுக்குப்
பெயரிட வேண்டுமென்று பெரிதாக யோசித்தாள்.

## Kiṭṭiṇattammāḷ iraṇṭāvatāka āṇmakavoṉṟaip peṟutal

*tiruvayiṟṟil piṉṉumoru āṇmatalai peṟṟeṭuttāḷ*
*peṟṟeṭuttāḷ tāyārum peṟṟanalla pālaṉukkup*
*peyariṭa vēṇṭumeṉṟu peritāka yōcittāḷ*

His mother had one more child
Kiruṭṭinattammāḷ was happy
To deliver her second child.
She was thinking of thousand names

### இரண்டாவது குழந்தைக்குக் குஞ்சுதம்பி என்று பெயர் சூட்டுதல்

ஆருடைய பெயரிடுவோம் அருமையான பாலகனுக்கு
வலியதம்பிக்குப் பின்பிறந்த மன்னர்குஞ்சு தம்பிஎன்றார்
குஞ்சுதம்பி மன்னரென்று கூறிவிட்டார் திருநாமப்பேர்.

7.101. ஆருடைய - 'யாருடைய' என்பதின் பேச்சு வழக்கு. 7.102. குஞ்சு தம்பி - இளைய தம்பி.

### Iraṇṭāvatu kuḻantaikkuk kuñcutampi eṉṟu peyar cūṭṭutal

*āruṭaiya peyariṭuvōm arumaiyāṉa pālakaṉukku*
*valiyatampikkup piṉpiṟanta maṉṉarkuñcu tampieṉṟār*
*kuncutampi maṉṉareṉṟu kūṟiviṭṭār tirunāmappēr*

To give her son a suitable name
Finally decided on a name
It was Kuñcu Tampi, which was sonorous and mellifluous
For he was born next to Valiya Tampi.

### கிட்டிணத்தம்மாள் மூன்றாவதாகப் பெண் குழந்தை பெறுதல்

வலியதம்பி மன்னவர்க்கு வாய்த்ததிருவயது அஞ்சுசெல்ல
குஞ்சுதம்பி மன்னவர்க்குக் கூண்டதிருவயது மூணுசெல்ல
பின்னுமொரு பெண்மதலை பெற்றெடுத்தாள் தாயாரும்.

7.104. அஞ்சு - 'ஐந்து' என்பதின் பேச்சு வழக்கு. 7.105. கூண்ட திரு வயது - பொருந்திய மேலான வயது. மூணு - 'மூன்று' என்பதின் பேச்சு வழக்கு. 7.106. பெண் மதலை - 'பெண் குழந்தை.

### Kiṭṭiṇattammāḷ mūṉṟāvatākap peṇkuḻantai peṟutal

*valiyatampi maṉṉavarkku vāyttatiruvayatu añcucella*
*kuñcutampi maṉṉavarkkuk kūṇṭatiruvayatu mūṇucella*
*piṉṉumoru peṇmatalai peṟṟeṭuttāḷ tāyārum*

### Arrival of a girl child

When Valiya Tampi crossed the age of five
And Kuñcu Tampi three
Their mother gave birth to a female child.

### மன்னன் பெண் குழந்தைக்குச் சாதகம் கணிக்கக் கட்டளையிடல்

அந்தநேரம் சோதிரிசியை அரசமன்னர் வரவழைத்துப்
பெண்மதலை பிறந்தபலன் பார்த்துநன்றாய்ச் சொல்லவேணும்.

7.108. வேணும் - 'வேண்டும்' என்பதின் பேச்சு வழக்கு.

### Maṉṉaṉ peṇ kuḻantaikkuc cātakam kaṇikkak kaṭṭaḷaiyiṭal

*antanēram cōtiriciyai aracamaṉṉar varavaḻaittup*
*peṇmatalai piṟantapalaṉ pārttunaṉṟāyc collavēṇum*

There came the happy king
Sent word for an astrologer
To know the future of their daughter.

### சோதிடர் சாதகம் கணித்துப் பலன்கூறத் தொடங்குதல்

முக்தாவெளி யானிதிலே மொழிகிவரை தனைக்கீறி
அட்டமங்கலம் தனைக்கீறி அதிலேகண பதிவைத்துப்
பாலாலே பரல்கழுவி[1] பலகையிலே நிரத்துவாராம்
நாளான கிரகநிலை நன்றாகப்பார்த்துச் சொல்லுவானாம்
இம்மதலை பிறந்தபலன் இனிகேளும் தம்புரானே
அழிவில்லாத[2] தம்பிமார்க்கு அழிவுவரும் தம்புரானே
வன்கொலையாய் தம்பிமார்கள் மன்னர்கையால் இறந்திடுவார்.

7.109. முத்தா வெளி - அரண்மனை முற்றத்தின் வெளிப்பகுதி. மொழிகி - மொழுகி. வரைதனைக் கீறி - சோதிடத்தில் நவக்கிரகங்கள் நிற்கும் நிலைகளை அறிவதற்காகக் கோடுகளை வரைந்து. 7.110. அட்ட மங்கலம் - இணைக்கயல், கண்ணாடி, சாமரம், கொடி, தோட்டி, நிறைகுடம், முரசு, விளக்கு என்னும் எட்டு மங்கலப் பொருட்கள். கணபதி வைத்து - விநாயகரைப் பிரிதிஷ்டை செய்து. 7.113. நாளான கிரகநிலை - குழந்தை பிறந்த நேரத்துக் கிரக அமைப்பு. 7.115. மன்னர் - மார்த்தாண்டவர்மாவைக் குறித்தது.

சு.சொ : 1. பரல்களுவி 2. அளிவில்லாத

### Cōtiṭar cātakam kaṇittup palaṉ kūṟattoṭaṅkutal

*muktāveḷi yāṉitilē moḻikivarai taṉaikkīṟi*
*aṭṭamaṅkalam taṉaikkīṟi atilēkaṇa pativaittup*
*pālālē paralkaḻuvi palakaiyilē nirattuvārām*
*nāḷāṉa kirakanilai naṉṟākappārttuc colluvāṉām*
*immatalai piṟantapalaṉ iṉikēḷum tampurāṉē*
*aḻivillāta tampimārkku aḻivuvarum tampurāṉē*
*vaṉkolaiyāy tampimārkaḷ maṉṉarkaiyāl iṟantiṭuvār*

They swept and made clean
The portals of the royal court
Marked nine columns for nine stars
Placed Lord Kaṇapati near the lamp
Brought pure sea-shells kept in the milk pot
Placed everything on the holy piece of wood
For, only then the astrologer could predict
"Look here, Oh Liberal King!"
Said the astrologer to the king.
"I tell you everything of her future
The only sister to the valiant brothers
Will bring death and destruction
To the brave and immortal brothers.
The cruel hand of a king
Will bring death to the young."

### மன்னர் வினாவும் சோதிடர் பதிலும்

ஏதுஎன்ன இறப்பதற்கு அறிந்துசொல்லு சோதிரிசி
அரசமன்னர் கற்பிக்கவே ஆணையிட்டுக் கூறிடவே
மன்னர்சொல்லைக் கேட்டவுடன் ஏதுசொல்வான் சோதிரிசி
கேளும்கேளும் தம்புரானே கிரகபலன் சொல்லுகிறேன்
கொச்சுமணித் தங்கைபலன் கூறுகிறேன் தம்பிரானே
வலியதம்பி மன்னவர்க்கு வயதொரு இருபத்திரண்டில்
குஞ்சுதம்பி மன்னவர்க்குக் கூண்டதிருவயது பத்தொன்பதில்
கொச்சுமணித் தங்கையர்க்குக் கூண்டதிருவயது பதினாறில்
தம்பிமாரும் தங்கையரும் தான்வளரும் நாளதிலே
வளருமந்த நாளயிலே (மன்னர்) ராமவர்ம தம்புரானும்
தைதீர்த்தம் மாமாங்கம் தானாட வேணுமென்று
வாலியாம் பாறையிலே வந்துதீர்த்தம் தானாடித்
திரும்பிமன்னர் வரும்போது தேரேறி உலகளந்தாள்
வாரிமுத்தை விதைத்திடுவாள் மன்னர்திரு மேனியிலே
திருமேனியில் விதைத்திடவும் சிறந்தமன்னர் எழுந்திடவும்[1]
அரசழிந்து[2] போய்விடவும் அரசரின் இளமுறைதான்
இளமுறைக்கு அரசாளும் ஏத்தமுடி மன்னவரும்
தம்பிமார்களுடன் தான்கூடிக் கொச்சுமணி தங்கையர்க்கு[3]

பட்டுக்க்சை கொடுப்பதற்கும் பள்ளிமெத்தை சேர்வதற்கும்
பாரமன்னர் கற்பிக்கவே கற்பிக்கவே மன்னவரும்
மாறிடுவார் தம்பிமார்கள் மாறியவர் நின்றுகொண்டு
மாட்டோமென்று சொல்லிடுவார் மாட்டோமென்று சொல்லிடவே
மன்னரும் கசடுவைத்து மனசுக்குள்ளே சூதுவைத்து
உம்பளங்கள் கொடுத்திருந்த உடமைகளும் தானெடுப்பார்
உலகாளும் மன்னவரும் தம்பிகளும் பகையாகி
மறுதுருவம் தனிலேசென்று மாறிப்படை கொண்டுவந்து
பொருதுமன்னர் தன்னைவிரட்டிப் பிடித்திடுவார் கோட்டைதன்னை
பிடித்திடுவார் தம்பிமார்கள் பின்னுமவர் மாறிக்கொண்டு
மாறிப்படை கூட்டிவந்து மன்னவனைத் தானனுப்பி
இருக்குமந்த நாளையிலே ஏற்றபுகழ் மன்னவரும்
உபாயமாகத் தம்பிமாரை மன்னவருந் தானழைத்து
நாகருவாழ்[4]கோயிலிலே நன்றாக முகங்காட்ட
முகங்காட்டி நிற்கும்நேரம் முடிமன்னர் கசடுவைத்து
வந்துநின்ற தம்பிமாரை மன்னருட கையதினால்
கொன்றிடுவார் தம்பிமாரைக் கண்டதுண்ட மாக்கிடுவார்.

7.116. ஏது - காரணம். 7.118. ஏது சொல்வான் - என்ன சொல்வான்; காரணம் சொல்வான் என்ற பொருளிலும் அமையும். 7.126. மாமாங்கம் - விசேச தீர்த்தத் திருவிழா. வேணும் - வேண்டும் என்பதன் பேச்சு வழக்கு. 7.127. வாலியாம்பாறை - கடியப்பட்டணம் என்ற ஊரை அடுத்து உள்ள பெரிய குளத்தின் கரையில் உள்ள பாறை; இதில் முதல் ராஜராஜனின் கல்வெட்டு உள்ளது. 7.128. உலகளந்தாள் - உலகை அளந்தவள்; முத்தாரம்மன்; இத்தெய்வம் தென் மாவட்டங்களில் நாட்டாரின் பெண்தெய்வமாகக் கொள்ளப்படுகிறது. 7.129. வாரி முத்தை விதைத்திடுவாள் - பெரியம்மை என்னும் நோய் வருவதற்குரிய முத்தை உடம்பெங்கிலும் விதைத்திடுவாள். 7.131. அரசரின் இளமுறை - அரசரின் அடுத்த அரசாக வரும் இளைய மன்னர்; மார்த்தாண்டவர்மாவைக் குறித்தது. 7.134. பட்டு . . . . சேர்வதற்கும் - இத்தொடர் மார்த்தாண்டவர்மா தம்பிமார்களின் தங்கையான கொச்சுமணி தங்கையைத் திருமணம் செய்ய விரும்பியதை உணர்த்தும். 7.136. மாறிடுவார் - கருத்து வேறுவாடு கொள்வார். 7.138. கசடு - குற்றம்; இங்கு விரோதம். மனசு - 'மனம்' என்பதின் பேச்சு வழக்கு. சூது - வஞ்சகம். 7.139, உம்பளங்கள் - வெகுமானங்கள். 7.141. மறு துருவம் - அயல்நாடு. மாறி - மாறுபாடு கொண்டு. 7.142. பொருது - போர் செய்து. 7.144. கூட்டிவந்து - அழைத்து வந்து. 7.146. உபாயமாக - தந்திரமாக. 7.147. முகங்காட்ட - சந்திக்க.

சு.சொ : 1. எளுந்திடவும் 2. அரசள்ந்து 3. தங்கையற்கு 4. நாகருவாள்

## Man̲n̲ar vin̲āvum cōtiṭar patilum

*ētuen̲n̲a ir̲appatar̲ku ar̲intucollu cōtirici*
*aracaman̲n̲ar kar̲pikkavē āṇaiyiṭṭuk kūr̲iṭavē*

*maṉṉarcollaik kēṭṭavuṭaṉ ētucolvāṉ cōtirici*
*kēḷumkēḷum tampurāṉē kirakapalaṉ collukiṟēṉ*
*koccumaṇit taṅkaipalaṉ kūṟukiṟēṉ tampirāṉē*
*valiyatampi maṉṉavarkku vayatoru irupattiraṇṭil*
*kuñcutampi maṉṉavarkkuk kaṇṭatiruvayatu pattoṉpatil*
*koccumaṇit taṅkaiyarkkuk kūṇṭatiruvayatu patiṉāṟil*
*tampimārum taṅkaiyarum tāṉvaḷarum nāḷatilē*
*vaḷarumanta nāḷayilē (maṉṉar) rāmavarma tampurāṉum*
*taitīrttam māmāṅkam tāṉāṭa vēṇumeṉṟu*
*vāliyām pāṟaiyilē vantutīrttam tāṉāṭi*
*tirumpimaṉṉar varumpōtu tērēṟi ulakaḷantāḷ*
*vārimuttai vitaittiṭuvāḷ maṉṉartiru mēṉiyilē*
*tirumēṉiyil vitaittiṭavum ciṟantamaṉṉar eḻuntiṭavum*
*aracaḻintu pōyviṭavum aracariṉ iḷamuṟaitāṉ*
*iḷamuṟaikku aracāḷum ēttamuṭi maṉṉavarum*
*tampimārkaḷuṭaṉ tāṉkūṭik koccumaṇi taṅkaiyarkku*
*paṭṭukaccai koṭuppataṟkum paḷḷimettai cērvataṟkum*
*pāramaṉṉar kaṟpikkavē kaṟpikkavē maṉṉavarum*
*māṟiṭuvār tampimārkaḷ māṟiyavar niṉṟukoṇṭu*
*māṭṭōmeṉṟu colliṭuvār māṭṭōmeṉṟu colliṭavē*
*maṉṉavarum kacaṭuvaittu maṉacukkuḷḷē cūtuvaittu*
*umpaḷaṅkaḷ koṭuttirunta uṭamaikaḷum tāṉeṭuppār*
*ulakāḷum maṉṉavarum tampikaḷum pakaiyāki*
*maṟuturuvam taṉilēceṉṟu māṟippaṭai koṇṭuvantu*
*porutumaṉṉar taṉṉaiviraṭṭip piṭittiṭuvār kōṭṭaitaṉṉai*
*piṭittiṭuvār tampimārkaḷ piṉṉumavar māṟikkoṇṭu*
*māṟippaṭai kūṭṭivantu maṉṉavaṉait tāṉaṉuppi*
*irukkumanta nāḷaiyilē ēṟṟapukaḻ maṉṉavarum*
*upāyamākat tampimārai maṉṉavarun tāṉaḻaittu*
*nākaruvāḻ kōyililē naṉṟāka mukaṅkāṭṭa*
*mukaṅkāṭṭi niṟkumnēram muṭimaṉṉar kacaṭuvaittu*
*vantuniṉṟa tampimārai maṉṉaruṭa kaiyatiṉāl*
*koṉṟiṭuvār tampimāraik kaṇṭatuṇṭa mākkiṭuvār*

## Prediction of the Astrologer

The king was shocked
And asked the astrologer more to probe.
"Listen to me, Oh, Tampuraṉ!
This is what is in store for you
What I tell you is based on the movements of the stars
The stars that stand for your daughter.
When Valiya Tampi Tampuraṉ attains twenty two
And Kuñcu Tampi Tampuraṉ bocames nineteen.
Their sister will be sixteen
Happy will be the family.
The king Rāmavarma Tampuraṉ
Will think of a pilgrimage
To have a holy dip during the month of *tai*
At Vāliyāmpāṟai pond
Away from his royal palace.
While he returns from there
He will have the wrath of Muttārammaṉ
The goddess that looks after the earth
Every part of his body will bear
Pearls of Her anger -
Small-pox is the end of Her anger.
Nobody can save the king
Nobody can save him from sinking
To save the subjects and kingdom
Somebody will occupy the throne
The new king is most likely to love your daughter
He will offer silk saree and fine mattress
To make her, his favourite one
There will be resistance to his advances
Your sons, the two brave brothers
Will mar the king's plans
The king will deprive them of all their rights
The rights to own and govern the land

They will become exiles, living in neighbouring lands
Seeking help from friendly kings
There will be deadly wars
Between the king and your sons
Fort will fall in their hands
Fruit of war will be theirs.

## The king reconciled

Only then will the king devise a plan
To wipe them out from the world
He will send notes of peace
And invite them to have a feast
Nākarkōyil is the place
None can save the Brothers
They will be cut into pieces
By the King's cruel hands."

**மன்னர் மன அமைதி கொள்ளுதல்**

தங்கையவள் பிறந்தபலன் தம்பிரானும் கேட்டபின்பு
திருச்செவியில் கேட்டபோது திருவுளங்கள் பற்றுவாராம்
பொல்லாத பிள்ளைபெற்றால் போடுவாரோ தாய்தகப்பர்.

**7.152.** திருவுளங்கள் பற்றுவாராம் - திருவுள்ளத்திலே நினைப்பாராம். **7.153.** பொல்லாத பிள்ளை - பெண் குழந்தையைக் குறித்தது; பொல்லாத பிள்ளை என்றமை அப்பெண் குழந்தையால் உண்டாகும் பிற்கால நஷ்டத்தைக் குறித்து.

## Maṉṉar maṉa amaiti koḷḷutal

*taṅkaiyavaḷ piṟantapalaṉ tampirāṉum kēṭṭapiṉpu*
*tirucceviyil kēṭṭapōtu tiruvuḷaṅkaḷ paṟṟuvārām*
*pollāta piḷḷaipeṟṟāl pōṭuvārō tāytakappar*

Heard the king all these dreadful prophecies
Associated with the birth of this sister
Thought for a while
Reconciled, for who can disown
A precious child of his own

## சோதிடர் சன்மானம் பெற்றுத் திரும்புதல்

வேண்டுவண்ணம் சோதிரிசி விரசாகப் பொன்கொடுத்து
விடைவாங்கி சோதிரிசி வீடுநோக்கிப் பதியில்சென்றார்.

7.154. விரசாக - விரைவாக.

## Cōtiṭar caṉmāṉam peṟṟu tirumputal

*vēṇṭuvaṇṇam cōtirici viracākap poṉkoṭuttu*
*viṭaivāṅki cōtirici vīṭunōkkip patiyilceṉṟār*

Gave the astrologer more than
What he had expected
Now the girl was the centre of attraction.

## குழந்தை அலங்கரிக்கப் படுதல்

சோதிரிசி போனபோது தோகையரைத் தாராட்டி
நீராட்டிப் பொட்டுமிட்டு நிலத்திலே தான்கிடத்திக்
காராரும் குழல்மடவார்[1] கன்னிநல்லாள் தான்தனக்கு
ஒருகழஞ்சு[2] பொன்நெறுத்து உடன்கொடுத்தார் தம்புரானும்
வேணுமென்ற பணிகளெல்லாம் விதவிதமாய்த் தானொதுக்கி
ஒதுங்கவந்த பணிகளெல்லாம் உடனெடுத்துத் தானணிந்து
இருபத்தெட்டும் கெட்டியல்லோ இனிப்பேரிட வேணுமென்றார்.

7.156. தோகை - பெண் குழந்தையைக் குறித்தது. 7.158. காராரும் குழல் மடவார் - கரிய மேகம் போலும் கூந்தலை உடைய பெண். கன்னி நல்லாள் - கன்னிமைத் தன்மை வாய்ந்த நல்ல பெண்; இவ் அடைகள் குழந்தையைக் கவனித்த செவிலியை உணர்த்தின. 7.159. கழஞ்சு - சுமார் மூன்று கிராம் அளவுள்ள ஓர் எடையளவு. நெறுத்து - 'நிறுத்து' என்பதன் பேச்சு வழக்கு. 7.160. வேணுமென்ற - 'வேண்டுமென்ற' என்பதின் பேச்சு வழக்கு. பணி - வேலை. 7.162. இருபத்தெட்டும் கெட்டியல்லோ - 'குழந்தை பிறந்த இருபத்தெட்டாம் நாளில் அதன் இடுப்பில் மஞ்சள் கயிறு கட்டி அல்லவா' என்ற பொருளில்.

சு.சொ : 1. குளல்மடவார் 2. ஒருகளஞ்சு

## Kuḻantai alaṅkarikkap paṭutal

*cōtirici pōṉapōtu tōkaiyarait tārāṭṭi*
*nīrāṭṭip poṭṭumiṭṭu nilattilē tāṉkiṭattik*
*kārārum kuḻalmaṭavar kaṉṉinallāḷ taṉtaṉakku*
*orukaḻañcu poṉṉeṟuttu uṭaṉkoṭuttār tampurāṉum*

*vēṇumenṟa paṇikaḷellām vitavitamāy tāṉotukki*
*otuṅkavanta paṇikaḷellām utaṉeṭuttut tāṉaṇintu*
*irupatteṭṭum keṭṭiyallō iṉippēriṭa vēṇumeṉṟār*

She was bathed and beautified
The nurse who did was lucky
She got gold and other gifts
The king was happy and
His happiness reflected in his acts
Waiting for the twenty eighth day.

### குழந்தைக்குக் கொச்சுமணி தங்கை என பெயரிடுதல்

வலியதம்பி குஞ்சுதம்பி மன்னவர்கள் உடன்பிறந்த
குஞ்சுதம்பிக்கும் பின்பிறந்த கொச்சுமணி தங்கையென்றார்
கூண்டமன்னர் உடன்பிறந்த கொச்சுமணி தங்கையென்றார்
கொச்சுமணி தங்கையென்று கூறுவாராம் திருநாமப்பேர்
பேரிட்டு மன்னவரும் பெருமையுடனே வளர்த்தாரே.

### Kuḻantaikkuk koccumaṇi taṅkai eṉa peyariṭutal

*vaḷiyatampi kuñcutampi maṉṉavarkaḷ utaṉpiṟanta*
*kuñcutampikkum piṉpiṟanta koccumaṇi taṅkaiyeṉṟār*
*kūṇṭamaṉṉar utaṉpiṟanta koccumaṇi taṅkaiyeṉṟār*
*koccumaṇi taṅkaiyeṉṟu kūṟuvārām tirunāmappēr*
*pēriṭṭu maṉṉavarum perumaiyutaṉē vaḷarttārē*

### The girl was named

That was auspicious to name the girl
As she was born next to
Valiya Tampi and Kuñcu Tampi
And as she was the last to be born
She was named Koccumaṇi Taṅkai
And was brought up with love and affection.

### தம்பிமார்களுக்குக் கல்வி கற்பிக்க மன்னன் கட்டளையிடுதல்

வளர்ந்தாரே தம்பிமாரும் வாணுதலாள் தங்கையரும்
கிட்டினத்தாளம்மை தம்புரானும் கிருபையுடன்' தான்வளர்க்க,

வளர்ந்தாரே மூணுபேரும் மன்னர்திரு முன்பதிலே
வலியதம்பி மன்னவர்க்கு வாய்த்ததிருவயது ஏழுசெல்ல
குஞ்சுதம்பி மன்னவர்க்கு கூண்டதிருவயது அஞ்சுசெல்ல
ஏழான[2] திருவயதில் எழுத்தோத வைக்கவேணும்
வலியதம்பி குஞ்சுதம்பி மன்னவர்கள் இருபேர்க்கும்
வரியெழுத்து தான்படிக்கச் சிறந்ததொரு தம்பிமார்கள்
ஆருடனே தம்பிமாரை அறிவெழுத்து ஓதவைப்போம்
என்றுசொல்ல மன்னவரும் ஏதுசொல்வார் மந்திரிமார்.

7.168. வாணுதலாள் - ஒளி பொருந்திய நெற்றியை உடையவள். 7.169. கிருபை - கருணை. 7.172. அஞ்சு - 'ஐந்து' என்பதின் பேச்சு வழக்கு. 7.173. எழுத்தோத - எழுத்துக்களைப் படிப்பிக்க. 7.175. வரியெழுத்து - எழுத்துக்களின் வரி வடிவம். 7.176. ஆருடனே - 'யாருடனே' என்பதின் பேச்சுத் தமிழ்.

சு.சொ : 1. கிறுபையுடன் 2. ஏளான

## Tampimārkaḷukkuk kalvi kaṟpikka maṉṉaṉ kaṭṭaḷaiyiṭutal

*vaḷarntārē tampimārum vāṇutalāḷ taṅkaiyarum*
*kiṭṭiṉattāḷammai tampurāṉum kirupaiyuṭaṉ tāṉvaḷarkka*
*vaḷantārē mūṇupērum maṉṉartiru muṉpatilē*
*valiyatampi maṉṉavarkku vāyttatiruvayatu ēḻucella*
*kuñcutampi maṉṉavarkku kūṇṭatiruvayatu añcucella*
*ēḻāṉa tiruvayatil eḻuttōta vaikkavēṇum*
*valiyatampi kuñcutampi maṉṉavarkaḷ irupērkkum*
*variyeḻuttu tāṉpaṭikkac ciṟantatoru tampimārkaḷ*
*āruṭaṉē tampimārai aṟiveḻuttu ōtavaippōm*
*eṉṟucolla maṉṉavarum ētucolvār mantirimār*

All the three grew up
Under the care and affection
Of the king and the queen
Seven was the age
Set for education
Valiya Tampi was seven
Kuñcu Tampi was Five
"The right time for learning"
Said the king to his minister
Sent word for a learned teacher.

## மன்னர் தம்பிமார்க்குத் திருநீலகண்ட பிள்ளையை ஆசானாக அமர்த்துதல்

பண்டுமுன்னாள் இந்நாட்டில் பரிவுடைய ராசகுரு
உண்டுகாணும் தம்புரானே உற்றபல்பநா பபுரத்தில்
அறிவுடைய ராசகுரு திருநீலகண்ட பிள்ளையுண்டு
அவரல்லவோ ராசகுரு ஆயிரந்தான் படித்தவரு
என்றவார்த்தை கேட்டபோது ஏற்றராம வர்மதம்புரானும்
அண்ணாவியைக் கூட்டிவர அரசமன்னர் கற்பிக்கவே
வெளுக்குமுன்னே ஒட்டன்ஒடி விரைவாகச் சென்றுநின்று
திருநீலகண்ட பிள்ளையோட செய்தியெல்லாம் செப்புவானாம்
நாடாளும் ராசமன்னர் நாடிவுன்னை வரச்சொன்னார்
அவருடைய மக்களுக்கு அழகுதம்பி[1] இருவருக்கும்
அறிவெழுத்து[2] ஓதிவைக்க அரசரிங்கே அனுப்பிவிட்டார்
என்றமொழி கேட்டபோது ஏதுசொல்வார் நீலகண்டர்.

7.178. பண்டு - முன்பு. பரிவுடைய - அன்புடைய. 7.183. அண்ணாவி - புலவர். 7.184. வெளுக்கு முன்னே - விடிவதற்கு முன்னால். ஒட்டன் - ஒற்றன்; தூது செல்வோன் என்ற பொருளிலும். 7.184. திருநீலகண்ட பிள்ளையோட - திருநீலகண்ட பிள்ளையின் இடத்தில். 7.188. அறிவெழுத்து - அறிவைப் புகட்டும் எழுத்துக்கள்.

சு.சொ : 1. அளகுதம்பி 2. அறிவெளுது

## Maṉṉar tampimārkkut tirunīlakanṭa piḷḷaiyai ācāṉāka amarttutal

*panṭumuṉṉāḷ innāṭṭil parivuṭaiya vācakuru*
*unṭukāṇum tampurāṉē uṟṟapalpanā papurattil*
*aṟivuṭaiya rācakuru tirunīlakanṭa piḷḷaiyunṭu*
*avarallavō rācakuru āyirantāṉ paṭittavaru*
*eṉṟavārttai kēṭṭapōtu ēṟṟarāma varmatampurāṉum*
*aṇṇāviyaik kūṭṭivara aracamaṉṉar kaṟpikkavē*
*veḷukkumuṉṉē ōṭṭaṉōṭi viraivākac ceṉṟuniṉṟu*
*tirunīlakanṭa piḷḷaiyōṭa ceytiyellām ceppuvāṉām*
*nāṭāḷum rācamaṉṉar nāṭivuṉṉai varaccoṉṉār*
*avaruṭaiya makkaḷukku aḻakutampi ivarukkum*
*aṟiveḻuttu ōtivaikka aracariṅkē aṉuppiviṭṭār*
*eṉṟamoḻi kēṭṭapōtu ētucolvār nīlakanṭar*

## Appointment of *Guru*

"This ancient land has many talents
We have a Royal *Guru* (teacher)
His name is Tirunīlakanṭa Piḷḷai
He is very learned,
Learnt thousands of book
And mastered thousand arts
He lives in Patmanāpapuram"
Said the minister seeking approval
As he got the royal nod
He sent for the royal *Guru*
The special messenger sent by the minister
Stood before the teacher and
Said these words:
"The Royal king needs your service
To train his sons in every art and craft".
Happy was the *Guru*.

### நீலகண்ட பிள்ளை அரண்மனைக்கு வருதல்

நன்றெனவே பதிலளித்து நாடியவர் மனைபுகுந்து
நீளசேலை வலித்துடுத்து சிவப்புறுமால் தலையில்கட்டி
நெற்றியிலே நீறணிந்து நீளமுடி கோதிவிட்டு
நன்றெனவே இருபேரும் நடந்துகேரள புரம்வந்தார்.

**7.191.** வலித்துடுத்தி - இறுக்கமாகக் கட்டி. சிவப்புறுமால் - சிவந்த நிறத்தை உடைய தலைப்பாகை. **7.193.** கேரளபுரம் - கல்குளம் வட்டம், திருவிதாங்கோடு பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஓர் ஊர்; இவ்வூர் சிவன் கோயில் கல்வெட்டு (கி.பி.1315) ஒன்று, 'பாலகோட்டு தேசம் முத்தலைக்குறி சசி ஸ்ரீ வீர கேரளம்' என இவ்வூரைக் குறிக்கிறது. கி.பி. 1606ஆம் ஆண்டு கல்வெட்டு 'கேரளபுரம்' என்றே குறிப்பிடும்.

### Nīlakanṭapiḷḷai aranmanaikku varutal

*nanrenavē patilaḷittu nāṭiyavar manaipukuntu*
*nīḷacēlai valittuṭuttu civappurumāl talaiyilkaṭṭi*
*neṟṟiyilē nīranintu nīḷamuṭi kōtiviṭṭu*
*nanrenavē irupērum naṭantukēraḷa puramvantār*

Happy to give his consent telling it was his duty
Went inside his house
Wore neat garment for head and rest
Affixed holy marks on his forehead
And left for Kēraḷapuram
To fulfil the king's wish.

### தம்பிமார்கள் ஆசிரியரை வணங்குதல்

ஆசான்வரும் வரவதுகண்டு அழகோடுதம்பிகள் இரண்டுபேரும்
அன்பத்தோர் அடிமுன்னேநடந்து ஆசானது அடியினைத்தொழுதார்.[1] 195

**7.194.** ஆசான் - குரு. **7.195.** அன்பத்தோர் அடி முன்னே நடந்து - ஐம்பத்தோரு அடிகள் முன்பாக நடந்து; குருவிடம் சீடர்களுக்கிருந்த பணிவை உணர்த்தியது.

சு.சொ : 1. அடியினைத்தொளுதார்

## Tampimārkaḷ āciriyarai vaṇaṅkutal

*ācāṉvarum varavatukaṇṭu aḻakōṭutampikaḷ iraṇṭupērum*
*aṉpattōr aṭimuṉṉēnaṭantu ācāṉatu aṭiyinaittoḻutār*

On seeing the arrival of the *Guru*
At a distance of fifty feet
The two brothers straight went and received.
Touched his feet and
Expressed their regard and respect
Bowed to him with full reverence.

### மன்னர் வினாவும் ஆசிரியர் பதிலும்

**வேறு**

**8.** அண்ணாவிதானும் தம்பிகளைத் தான்கூட்டி கோவிக்கல்லில்
கொற்றமுடி ராசமன்னர் திருமுன்பு சென்றபோது
திட்டெனவே தம்புரானும் திருவிளங்கள் பற்றுவாராம்
எனக்குள்ள வாத்தியாரே எழுத்தோத முகூர்த்தம்சொல்லும்
என்றவார்த்தை கேட்டபோது நீலகண்ட அண்ணாவிதான்
இப்போது பள்ளிபுரை வைக்கவேணும் என்றாரே.

**8.1.** கோவிக்கல் - அரண்மனை. **8.3.** திட்டெனவே - உடனடியாகவே. திருவிளங்கள் பற்றுவாராம் - மேன்மையான உள்ளத்தால் இசைவு சொல்லுவாராம். **8.4.** முகூர்த்தம் - நல்ல நேரம். **8.6.** பள்ளிபுரை வைக்க - பள்ளிக் கூடம் கட்டி வகுப்பறைகள் அமைக்க.

## Mannar vināvum āciriyar patilum

**vēṟu**

*aṉṉāvitāṉum tampikaḷai tāṉkūṭṭi kōvikkallil*
*koṟṟamuṭi rācamaṉṉar tirumuṉpu ceṉṟapōtu*
*tiṭṭeṉavē tampurāṉum tiruviḷaṅkaḷ paṟṟuvārām*
*eṉakkuḷḷa vāttiyārē eḻuttōta mukūrttamcollum*
*eṉṟavārttai kēṭṭapōtu nīlakaṇṭa aṉṉāvitāṉ*
*ippōtu paḷḷipurai vaikkavēṇum eṉṟārē*

Moved by this rare gesture
The *Guru* took them to royal court.
The King received him with due respect
Asked him to predict the right time.
"This is the right time
To commence the work
To construct a school
To teach your wards, future kings"
Said the *Guru*,
On the south west part.

## பள்ளிக்கூடம் கட்டப்படுதல்

மேற்குத் தெருவதிலே மிக்ககன்னி மூலையிலே
தானம்செய்து தறியறைந்து கன்னித்தூண் நாட்டியல்லோ
காலும்நாலும் தான்நிறுத்திக் கருத்துடனே ஏறவைத்தார்
இதமாகக் களுக்கோல்பரத்தி எங்கும்வாமடை அடித்திறுக்கி
ஓடறுத்து முகித்தபோது உடனேபொன்னு மகுடம்பதித்து
உள்ளும்புறமும் வெள்ளிபூசி உடனேஉரு வெழுதுவாராம்
இந்த வண்ணம் பள்ளிமுகித்து பள்ளியில் புரைதிலித் தாரே.

8.7. கன்னி மூலை - தென் மேற்கு திசை. தறியறைந்து - முளைகள் அடித்து. கன்னித் தூண் - அழிவில்லாத தூண். 8.10. களுக்கோல் - மூங்கில். வாமடை - குறுக்குச் சட்டத்தை இறுக்கும் ஆப்பு. 8.11. ஓடறுத்து - ஓடு வேய்ந்து. முகித்த - முடித்த. பொன்னு மகுடம் பதித்து - பொன்னால் ஆகிய மகுடத்தைப் பதித்து. 8.12. உருவெழுதுவாராம் - படம் வரைவாராம். 8.13. திலித்தாரே - கட்டினாரே.

## Paḷḷikkūṭam kaṭṭappaṭutal

*mēṟkut teruvatilē mikkakaṉṉi mūlaiyilē*
*tāṉamceytu taṟiyaṟaintu kaṉṉittūṇ nāṭṭiyallō*

*kālumnālum tāṉṉiṟuttik karuttuṭaṉē ēṟavaittār*
*itamākak kaḻukkōl paratti eṅkumvāmaṭai aṭittuṟukki*
*ōṭaṟuttu mukittapōtu uṭaṉēpoṉṉu makuṭampatittu*
*uḷḷum puṟamum veḷḷipūci uṭaṉēuru veḻutuvārām*
*intavaṇṇam paḷḷimukittu paḷḷiyil puraitilit tārē*

## Construction of a school for the Brothers

That was the holy and divine spot
Began the work for a school
Offerings were made to God
Before the decorative roof was made
A dome with silver lining in and out
A wall with paintings of Gods.

### பள்ளிக்கூட அமைப்பு

தெளிந்த ஞானிகள் திண்ணைகள் வேறே
அறிவார்ந்த பிள்ளைகள் திண்ணைகள் வேறே
அறிவுள்ள ஞானி திண்ணைகள் வேறே
மந்திரி மாருடை திண்ணைகள் வேறே
மாடம்பி மாருட திண்ணைகள் வேறே
நம்பூதிரி மாருட திண்ணைகள் வேறே
காசில் லாதார் திண்ணைகள் வேறே
கசடு வைத்தார் திண்ணைகள் வேறே
நலமொடு தம்பிமார் திண்ணைகள் வேறே
விதவித மாக புரியது திரித்து
வெற்றிக் கயிறால் அசையது கட்டி
சமைத்து வைத்த பள்ளிப் புரையில்
சாணக மிட்டு தரையது மொழுகி
வெள்ளித் தட்டம் தனிலே கொண்டு
வெற்றிலை பாக்கு நிறைத்திடு வாராம்
பொன்னும் தட்டம் தனிலே கொண்டு
பூவும் நெல்லும் அரிசியும் நீரும்
சாணிக் கணபதி சரியாய் வைத்துப்
போற்றித் தொழுது துதித்துப் பாடிப்
பூவும் சொரிந்து பொன்னைச் .சொரிந்து

வானம் பனையில் ஓலையினைக் கீறி
வள்ளத் தாலே ஊற விட்டார்.

8.18. மாடம்பி - எட்டு வீட்டுப் பிள்ளைமார் என்னும் அரசவுரிமைகளில் தலையிடுவதற்குரிய நாயர் சாதியர். 8.19. நம்பூதிரி - அந்தணர்களில் ஒரு வகையினர். 8.21. கசடு - வஞ்சகம். 8.23. புரியது திரித்து - அறைகளைத் தனித்தனியாகக் கட்டி. 8.24. அசை - துணி உலரப் போடுவதற்காக இரு பக்கமும் இழுத்துக் கட்டப்பட்ட கயிற்றால் ஆகிய கொடி. 8.26. சாணகம் - பசுஞ்சாணி. 8.31. சாணிக் கணபதி - பசுவின் சாணியினால் செய்யப் பெற்ற கணபதி. 8.34. வானம் பனை -வளர்ந்து முற்றிய பனை. 8.35. வள்ளத்தாலே - தண்ணீரில்.

## Paḻḻikkūṭa amaippu

*teḻinta ñāṉikaḷ tiṇṇaikaḷ vēṟē*
*aṟivārnta piḷḷaikaḷ tiṇṇaikaḷ vēṟē*
*aṟivuḷḷa ñāṉi tiṇṇaikaḷ vēṟē*
*mantiri māruṭai tiṇṇaikaḷ vēṟē*
*māṭampi māruṭa tiṇṇaikaḷ vēṟē*
*nampūtiri māruṭa tiṇṇaikaḷ vēṟē*
*kācil lātār tiṇṇaikaḷ vēṟē*
*kacaṭu vaittār tiṇṇaikaḷ vēṟē*
*nalamoṭu tampimār tiṇṇaikaḷ vēṟē*
*vitavita māka puriyatu tirittu*
*veṟṟik kayiṟāl acaiyatu kaṭṭi*
*camaittu vaitta paḷḷip puraiyil*
*cāṇaka miṭṭu taraiyatu moḻuki*
*veḷḷit taṭṭam taṉilē koṇṭu*
*veṟṟilai pākku niṟaittiṭu vārām*
*poṉṉum taṭṭam taṉilē koṇṭu*
*pūvum nellum ariciyum nīrum*
*cāṇik kaṇapati cariyāy vaittup*
*pōṟṟit toḻutu tutittup pāṭip*
*pōvum corintu poṉṉaic corintu*
*vāṉam paṉaiyil ōlaiyiṉaik kīṟi*
*vaḷḷat tālē ūṟa viṭṭār*

A stage for each to sit and learn
Everything was made to royal order
Wisemen would have a structure

That was convenient to them
Academicians would have a form
Totally different from the former
Ministers would have yet another
The Royal members and the lords
Would have a school to suit their needs
*Nampūtiris* and common folks
Would have separate blocks
Business people would build
A school of their own
The king's school was unique
Each one differed in every respect
The school for the royal brothers
Had all facilities available everywhere
The floor was neat and clean
For, it was swept with cowdung
The *Guru* was given his due
Offerings of various kinds made to
Please the Goddess of learning
Golden plate carried flower, betel,
Arecanut, paddy, rice and water.
For Lord Kaṇapati made of cow-dung
Flower and golden petals thrown on the idol
And palm-leaf was got ready
To use it as writing material.

### தம்பிமார்கள் குருவை வணங்கிக் கல்வி கற்றல்

வாந்தி ணக்கிப் பண்டி பிடித்து
வட்டச் சுழியும்[1] இட்டன ரேதான்
பள்ளிப் புரையில் தம்பி மார்கள்
பரிவோடு வந்து புகுந்த நேரம்
மாதுளை என்றொரு பூவை எடுத்து
மாதா வையும் வந்து துதித்தாராம்
தூதுளை என்றொரு பூவை எடுத்துச்
சூரி யனையும் வந்து துதித்தாராம்

பிச்சி என்றொரு பூவை எடுத்துப்
பிள்ளை மாரையும் வந்து தித்தாராம்
அரளி என்றொரு பூவை யெடுத்து
ஆசா னையும் வந்து தித்தாராம்
வந்து தித்தாராம் வளமுடன் கணபதி
விரவொடு தேங்கா தன்னிலே தட்டி
அள்ளி அரிசியும் பூவும் எடுத்து
அழகொடு தம்பி எழுத்து தொடங்கினார்.

**8.36.** வாந்திணக்கி - எழுத்தை எழுதுவதற்கு ஏற்றவாறு ஓலைகளை வடிவமைத்து. பண்டி பிடித்து - ஓலைகளை அடுக்கி அவற்றின் மேலும் கீழும் கமுகம் பாளையால் அட்டை தயாரித்து. **8.37.** வட்டச் சுழி - ஓலைகள் பக்குவமடைந்து விட்டதை உணர வட்டமாகச் சுழிக்கும் சுழி. **8.38.** பள்ளிப்புரை - தேர்ந்தெடுத்த அறை. **8.39.** பரிவோடு - விருப்பத்தோடு. **8.40.** மாதுளை - மாதுளம் பூ. **8.42.** தூதுளை - ஒரு வகை பூ. **8.45.** பிள்ளைமார் - எட்டு வீட்டு பிள்ளைமார். **8.49.** விரவொடு - மங்கலப் பொருட்கள் அனைத்தையும் விரவுதல் செய்து.

சு.சொ : 1. சுளியும்

## Tampimārkaḷ kuruvai vaṇaṅkik kalvi kaṟṟal

*vānti ṇakkip paṇṭi piṭittu*
*vaṭṭac cuḻiyum iṭṭaṉa rētāṉ*
*paṉṉi puraiyil tampi mārkaḷ*
*parivōṭu vantu pukunta nēram*
*mātuḷai eṉṟoru pūvai eṭuttu*
*mātā vaiyum vantu tutittārām*
*tūtuḷai eṉṟoru pūvai eṭuttuc*
*cūri yaṉaiyum vantu tutittārām*
*picci eṉṟoru pāvai eṭuttup*
*piḷḷai māraiyum vantu titittārām*
*araḷi eṉṟoru pūvai eṭuttu*
*āca ṉaiyum vantu tutittārām*
*vantu tutittārām vaḷamuṭaṉ kaṇapati*
*viravoṭu tēṅkā taṉṉilē taṭṭi*
*aḷḷi ariciyum pūvum eṭuttu*
*aḻakoṭu tampi eḻuttu toṭaṅkiṉār*

## Inauguration of Training

Before they took the palm-leaf
Offered floral-tribute to all
Different colours to different rank
*Mātuḷai* flower for mother
*Tūtuḷai* flower for sun god
*Picci* flower for Royal Piḷḷais,
Lords and guards of the Palace
*Araḷi* flower for the *Guru*
Spread all sacred things
Coconut, rice and flower.

### ஆசான் தம்பிமார்களுக்குக் கற்றுக் கொடுத்த பல்வித வித்தைகள்

**வேறு**

9. திருவெழுத்து தான்படிக்கச் சிறந்ததொரு தம்பிமார்கள்
திருவடிதொழுது வணங்கி வந்தவர் இருந்தார்
இருந்தாரே தம்பிமார்கள் ஏற்றஆசான் இடமதிலே
இதமொடு வாத்தியார்தான் ஓதிக் கொடுக்க
அரிசிரி கணபதியும் அரிநமா ஓம்மெனவே
அரிவிரி ஏடும்கையில்[1] கொடுத்தவர் சொல்வார்
அரிநமோ வென்று அண்ணாவி ஓதிகொடுக்க
அழகொடு தம்பிமார் பின்னவரும் ஓதஓத
அரிநமோத்து சிந்தம் என்றுதான் ஓதஓத
நலமொடு வாத்தியார் தானவரும் ஓதஓத
அஆஇ என்று அண்ணாவி ஓதிகொடுக்க
ஓதிடவே தம்பிமார்கள் உற்றதொரு அரியெழுத்தை
உறுதியாக தானே மன்னாயென் றழைத்தார்
அஆஇஈஉஊ எயென்று ஆசானும் ஓதிகொடுத்தாரே
படித்தாரே பலகலைநூல் பதினெட்டும் படித்தாரே
படித்த தாலே பத்தெட்டிலுள்ள ஓரெழுத்தும்
பண்புடனே கூட்டி லக்கம் கற்றார்
அரிகரிஎன்றே வேந்தன் ஆசானும் படித்துகொடுத்தாரே
ஊருகளும் பேருகளும் உடனெழுதிக் கொடுத்துபடித்தாரே
பள்ளி கிரந்தம் பலகலைநூல் சாஸ்திரமும்

பதிவாகத் தம்பி மார்கள் படிக்க
ஒருசொல்நீர் கண்டுகேளும் உற்றதிரு வாசகமும்
ஒன்றுரெண்டு கூட்டி லக்கம் கற்றார்
எண்வாய் கணக்குகளும் எழுத்தினுட வாசகமும்
எட்டெழுத்தும் கற்றுபடித்தாரே ஏற்றிமுறி சுழுகரணங்களும்
மலையாள கிரந்தங்களும் மன்னர்க்குள்ள பாசைகளும்
வளமையுடன் கூட்டியிலக்கம் வன்மையுடன் வசமாய்கற்றார்
இங்கிலீஷ் பாசைகளும் இதமாகவே படித்தார்
கட்டுகட்டு ஓலைகளைக் கனமான காயுதங்கள்
கணிசமாய்தான் படித்தார் வாசகங்கள் கூடபடித்தார்.

9.1. திருவெழுத்து - மேன்மையான எழுத்து. 9.5. அரிசிரி - ஹரி ஸ்ரீ. அரிநமா ஓம் - 'ஓம் ஹரி நமா' என்னும் மந்திரம். 8.6. அரிவிரி ஏடு - அரிந்த பனை ஓலையாலான ஏடு. 9.8. அழகொடு - அழகாக. 9.9. அரிநமோத்து சிந்தம் - ஹரி நமோத்து சிந்தம்; குழந்தைகளுக்கு விஜய தசமி பண்டிகையின் போது கல்வி கற்பிக்க ஆரம்பிக்கும் போது இந்த வாசகத்தைச் சொல்லும் வழக்கம் சில சமூகங்களில் இன்றும் உள்ளது. 9.12. அரிபொழுத்து - 'ஓம் நமோ நாராயணா' என்னும் மந்திர எழுத்து. 9.15. பல கலை நூல் பதினெட்டும் - பல்விதமான கலைகளை அறிந்து கொள்ள உதவும் பதினெட்டு நூல்களும்; 'படிச்ச பதினெட்டும்' என்பது நாஞ்சில் நாட்டு வழக்காறு. 9.16. பத்தெட்டிலுள்ள - பதினெட்டு மெய்யெழுத்துகளிலுள்ள. 9.17. லக்கம் - இலக்கம்; எண் கணிதம். 9.19. ஊரு - ஊர். பேரு - பேர். 9.20. பள்ளி கிரந்தம் - பள்ளிக்கூடத்து பாட நூல்கள். பலகலைநூல் - பல விதமான கலைகளைத் தெரிந்து கொள்ள உதவும் நூல்கள். 9.21. பதிவாக - மனதில் பதிய. 9.22. திருவாசகம் - மேலான வசனங்கள். 9.24. எழுத்தினுட - 'எழுத்தினுடைய' என்பதின் பேச்சு வழக்கு. 9.25. எட்டெழுத்து - திருமால் மந்திரம். முறி - பத்திர எழுத்து. சுழுகரணங்கள் - எழுத்துக்களின் சுழிப்பு முறைகள் மற்றும் கூத்து முறைகள். 9.26. மலையாள கிரந்தம் - மலையாள மொழியிலமைந்த நூல். பாசை - பாஷை;' மொழி. 9.27. இலக்கம் - எண் கணிதம். வன்மையுடன் - தீவிரத்துடன். வசமாய் - எளிதாக. 9.29. ஓலைகள் - ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட நூல்கள். காயுதங்கள் - காகிதங்கள்; காகிதங்களில் எழுதப்பட்ட நூல்களைக் குறித்தது. 9.30. கணிசமாய் - அதிக அளிவில். வாசகம் - அறிக்கை.

சு.சொ : 1. ஒடும்கையில்

## Ācāṉ tampimārkaḷukkuk kaṟṟu koṭutta palvita vittaikaḷ

**vēṟu**

*tiruveḻuttu tāṉpaṭikkac ciṟantatoru tampimārkaḷ*
*tiruvaṭitoḻutu vaṇaṅki vantavar iruntār*
*iruntārē tampimārkaḷ ēṟṟaācāṉ iṭamatilē*
*itamoṭu vāttiyārtāṉ ōtik koṭukka*
*ariciri kaṇapatiyum arinamā ōmmeṉavē*

*ariviri ēṭumkaiyil koṭuttavar colvār*
*arinamō veṉṟu aṇṇāvi ōtikoṭukka*
*aḻakoṭu tampimār piṉṉavarum ōtaōta*
*arinamōttu cintam eṉṟutāṉ ōtaōta*
*nalamoṭu vāttiyār tāṉavarum ōtaōta*
*aāi eṉṟu aṇṇāvi ōtikoṭukka*
*ōtiṭavē tampimārkaḷ uṟṟitoru ariyeḻuttai*
*uṟutiyāka tāṉē maṉṉāyeṉ ṟaḷaittār*
*aāiīuū eyeṉṟu ācāṉum ōtikoṭuttārē*
*paṭittārē palakalainūl patiṉeṭṭum paṭittārē*
*paṭitta tālē pattettiluḷḷa ōreḻuttum*
*paṇpuṭaṉē kūṭṭi lakkam kaṟṟār*
*arikarieṉṟē vēntaṉ ācāṉum paṭittukoṭuttārē*
*ūrukaḷum pērukaḷum uṭaṉeḻutik koṭuttupaṭittārē*
*paḷḷi kirantam palakalainūl cāstiramum*
*pativāka tampi mārkaḷ paṭikka*
*orucolnīr kaṇṭukēḷum uṟratiru vācakamum*
*oṉṟureṇṭu kūṭṭi lakkam kaṟṟār*
*eṇvāy kaṇakkukaḷum eḻuttiṇuṭa vācakamum*
*eṭṭeḻuttum kaṟṟupatittārē ēṟṟimuṟi cuḻukaraṇaṅkaḷum*
*malaiyāḷa kirantaṅkaḷum maṉṉarkkuḷḷa pācaikaḷum*
*vaḷamaiyuṭaṉ kūṭṭiyilakkam vaṇmaiyuṭaṉ vacamāykaṟṟār*
*iṅkiliṣ pācaikaḷum itamākavē paṭittār*
*kaṭṭukaṭṭu ōlaikaḷaik kaṇamāṉa kāyutaṅkaḷ*
*kaṇicamāytāṉ paṭittār vācakaṅkaḷ kūṭapaṭittār*

## Art and craft taught

Thus began the training of the Brothers
Who prayed and knelt before the *Guru*
Began the formal course of study
Wrote the first holy words
*Hari Sri* and *Hari ōm*
Chanted the divine words
Again and again and wrote them.
Followed the words of the *Guru*

In chorus the lessons grew
Vowels consonants all
Words and phrases all
Learnt they with interest
Learnt they everything by heart.
Familiar fine arts eighteen
Figures and complex problems umpteen
Epics and classics brought from everywhere
Devotional literature and dramatic art form.
Malayalam language and manners of majestic kings
English language easily they learnt
Printed books and palm-leaf manuscript.
Perused everything with enthusiasm
Not only theory they learnt practical art
Drafted model letters to friendly kings and formidable foes.

### ஆசான் தம்பிமார்களின் கல்வி மேன்மை கண்டு வியத்தல்

மறுதேசத்து மன்னவர்க்கு வாசகங்கள் எழுதிடவும்
வந்தவோலை பிரித்தறிந்து வகையாய்த்தான் அறிந்திடவும்
இன்றுநீங்கள் கற்றதைப்போல் என்னுடைய தம்பிமாரே
இவ்வுலகில் கண்டதில்லை மாறுபாடு ஒன்றுமில்லை.

### Ācāṉ tampimārkaḷiṉ kalvi mēṉmai kaṇṭu viyattal

*maṟutēcattu maṉṉavarkku vācakaṅkaḷ eḻutiṭavum*
*vantavōlai pirittaṟintu vakaiyāyttāṉ aṟintiṭavum*
*iṉṟunīṅkaḷ kaṟṟataippōl eṉṉuṭaiya tampimārē*
*ivvulakil kaṇṭatillai māṟupāṭu oṉṟumillai*

Learnt how to discriminate
The warmth and wrath, the good and bad
From the tone and tenor.
"I have never had such a pair
In the world that learnt the art and craft
With ease and interest"
Commented the *Guru*.

### ஆசான் மன்னரிடம் தம்பிமார் பெருமைகூறி விடைபெறுதல்

**வேறு**

10. தம்பிமாரைக் கொற்றவனார் முன்னே விட்டு
கூறுவாராம் ராச மன்ன ரோடு
இப்படியே படித்தவர்கள் ஏற்றதம்பிகள் போல
இவ்வுலகில் கண்டதில்லை என்று சொல்லி
என்றவார்த்தை கேட்டபோது ஏது சொல்வார்
இன்றிவர்க்குப் பொன்னு கொடுக்க என்று
ஆயிரத்தெட்டு பொன்னதுவும் கெட்டி யல்லோ
ஆசானுட கையில் கொடுத்தார் உடனே
விடைவாங்கி வாத்தியாரும் விடுதி நோக்கித்
தன்பதிக்கு நடந்தாரே இயல்பாகத் தானே.

10.3. பொன்னு - பொன். கெட்டியல்லோ - 'கட்டியல்லவா' என்பதின் பேச்சு வழக்கு.
10.5. விடுதி - இருப்பிடம்.

### Ācāṉ maṉṉariṭam tampimār perumai kūṟi viṭaipeṟutal

**vēṟu**

10. *tampimāraik koṟṟavaṉār muṉṉē viṭṭu*
*kūṟuvārām rāca maṉṉa rōṭu*
*ipppaṭiyē paṭittavarkaḷ ēṟṟatampikaḷ pōla*
*ivvulakil kaṇṭatillai eṉṟu colli*
*eṉṟavārttai kēṭṭapōtu ētu colvār*
*iṉṟivarkkup poṉṉu koṭukka eṉṟu*
*āyirattеṭṭu poṉṉatuvum keṭṭi yallō*
*ācāṉuṭa kaiyil koṭuttār uṭaṉē*
*viṭaivāṅki vāttiyārum viṭuti nōkki*
*taṉpatikku naṭantārē iyalpākat tāṉē.*

Said the same words before the king
That made the king feel happy
"Give him thousand gold coins"
Ordered the king and offered it
In the hands of the master
Pleased, blessed, set out the master

To His house carrying the gift.
Carrying the memories of his pleasant stay.

## தம்பிமார்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்கப் பிறிதொரு ஆசான் வருதல்

**வேறு**

11. ஏழான திருவயதில் எழுத்தோதி முகித்தபோது
மதப்புலிபோல் வலியதம்பி சினப்புலிபோல் குஞ்சுதம்பி
ஆழியிட்ட முடுவுகளும் அரையில்கச்சப் புறமிலங்க
வலியதம்பி மன்னவர்க்கு வாய்த்த திருவயதுஒன்பதாக
குஞ்சுதம்பி மன்னவர்க்குக் கூண்டதிரு வயதேழுசெல்ல
ஒன்பதான திருவயதில் உடவாள் வெட்டி படிப்பதற்கு
உடவாள்வெட்டி படிப்பதற்கு உடனிலங்கப் புரைமுகித்து
ஆசானையும் தான்வருத்தி அரசமன்னர் கற்பிக்கவே
வட்டமாய் எழுதியல்லோ வைத்தாரே கணபதியும்
விளக்கிநிற நாழிவச்க[1] வீரவுட வாளும்வச்சு
அரிஅரி கணபதியென்று அழகொடுதம்பிமார் தொடங்கினாரே
எண்ணவொண்ணா வரிசைகளும் ஏற்றநல்ல ஆயுதமும்
தம்பிமார்கள் கைதனிலே தான்கொடுத்தார் ஆசானும்.

11.1. முகித்த போது - முடித்த போது. 11.3. ஒண்ணாத - முடியாத. வீரவாளிப் பட்டு - ஒரு வகை பட்டு. 11.4. ஆளி - யாளி; ஒரு வகை மிருகம். முடுவு - முடுகு; கங்கணம், மோதிரம். அரை - இடுப்புப் பகுதி. கச்சப்புறம் - ஒரு வகை அணி. 11.7. உடவாள் - 'உடைவாள்' என்பதின் பேச்சு வழக்கு. 11.8. இலங்க - களரி பயிற்சி செய்ய. புரை முகித்து - அறையைக் கட்டி முடித்து. 11.10. நிற நாழி வச்சு - நாழி என்னும் முகத்தல் அளவை நிறைய நெல் வைத்து. 11.12. வரிசைகள் - முறைமைகள்; இங்குப் போர் முறைகளைக் குறித்தது. 11.14. வலத்தே நிற்க - வலப்பக்கமாக நிற்க.

சு.சொல் : 1. நாளிவச்சு

## Tampimārkaḷukku āyutap payiṟci koṭukkap piṟitoru ācāṉ varutal

**vēṟu**

*ll.* *ēḻāṉa tiruvayatil eḻuttōti mukittapōtu*
*matappulipōl valiyatampi ciṉeppulipōl kuñcutampi*
*vilaimatikka voṇṇāta vīravāḷip paṭṭuṭutti*
*āḻiyiṭṭa muṭuvukaḷum araiyilkaccap puṟamilaṅka*

*valiyatampi maṉṉavarkku vāytta tiruvayatuoṉpatāka*
*kuñcutampi maṉṉavarkkuk kūṉṭatiru vayatēḻucella*
*oṉpatāṉa tiruvayatil uṭavāḷveṭṭi paṭippataṟku*
*uṭavāḷveṭṭi paṭippataṟku uṭaṉilaṅkap puraimukittu*
*ācāṉaiyum tāṉvarutti aracamaṉṉar kaṟpikkavē*
*vaṭṭamāy eḻutiyallō vaittārē kaṇapatiyum*
*viḷakkiniṟa nāḻivaccu vīravuṭa vāḷumvaccu*
*ariari kaṇapatiyeṉṟu aḻakoṭu tampimar toṭaṅkiṉārē*
*eṇṇavoṇṇā varicaikaḷum ēṟṟanalla āyutamum*
*tampimārkaḷ kaitaṉilē tāṉkoṭuttār ācāṉum*

## Martial Art by another Master

Like valiant tigers the brothers grew up
Roaming with silk garments
And gold and silver ornaments
Went they round the palace.
Valiya Tampi was nine years
And Kuñcu Tampi was seven years.
When the king thought of
Giving them training in armoury
There came a master to teach
Martial art and sword play
On an auspicious day
The ground was prepared
And rounds and rounds made
Placed Lord Kaṇapati
To bless the trainees
Bowing before the benevolent God
Began their training in armoury
Took the sword that was kept before the lamp
Along with paddy filled *nāḷi* pot
The master was standing on the right side
The Brothers on the left
Receiving instructions from the master

## ஆசான் தம்பிமார்களுக்கு அளித்த பயிற்சிகள்

ஆசானும் வலத்தேநிற்க தம்பிமார் இடத்தேநிற்க
ஆசானொடு தம்பிமாரும் அழகொடு கூட்டுமென்றார்
ஆரோஆரோ என்றொருசத்தம் ஆகாசங்கள் இடித்ததுபோல்
வாஸ்தாரங்கள் விட்டதோர்சத்தம் மலைகளிடிந்து விழுந்ததைப்போல்
வலதுகைதனில் பொந்தியுமாக இடதுகைதனில் பரிசையுமாகப்
பம்மிபம்மி வாருமென்றாரே பரிசொடுநேர்ந்து வாருமென்றாரே
வலத்தேவீசி எழும்பியேநின்று வடமொடுஒதிரம் வெட்டுமென்றாரே
வாருமென்னுட தம்பிமாரே கூக்கூரலெழுப்பி கொக்கரித்தாரே
இடத்தேவீசி எழும்பியேநின்று இதமொடாயுதம் வெட்டுமென்றாரே
வலத்தேவீசி இடத்தேவெட்டி வாருமென்னுட தம்பிமாரே
இடத்தேவீசி வலத்தேவெட்டி எழும்பியே வாரும்
குஞ்சுதம்பி உச்சகடகம் வெட்டு மென்றாரே.

**வேறு**

12. வந்தாரைப் பிறதாரை வெட்டும் என்றாரே
நெற்றிப் பூட்டிலே வெட்டும் என்றாரே
நேரிய வாள்முறை தட்டும் என்றாரே
மண்டி போட்டு வெட்டும் என்றாரே
வயித்தில் குத்தி மறியும் என்றாரே
அந்தத் தொழில்முறை யானது சேர
அழகொடு தம்பிமார் கற்றுப் படித்தார்
இன்னும் தொழில்முறை பலதுக ளுண்டு
என்னுட தம்பிகள் வாரும் என்றாரே
வர்ம வகைகள் படியும் என்றாரே.

**வேறு**

13. மாத்தானும் படையெடுத்து மாறிப்படை பொருதிடுகில்
மதயானை முன்பில்சென்று மத்தகத்தில் ஏறிடவும்
ஆனயுட கைதனிலே ஆணழகன் வலியதம்பி
வலியதம்பி குஞ்சுதம்பி மன்னவர்க ளிருபேரும்
மாத்தானின் கைகாலும் மறுகாலும் வாங்கிடவும்
வலங்கையிலும் இடங்கையிலும் வழிமுறைகள் படித்தாரே.

**விருத்தம்**

14. பொன்னாங் குருவிகள் பாய்ந்தது போல
போருக் கிடையிலே செல்கிற முறையும்

வல்லயம் கொண்டு எறிகிற முறையும்
மறுபடி வல்லயம் வாங்கிற முறையும்
அந்தத் தொழில்முறை யானது சேர
அழகொடு தம்பிமார் கற்றுப் படித்தார்
இன்னும் தொழில்முறை பலதுக ளுண்டு
என்னுட தம்பிகள் வாருமென் றாரே.

**வேறு**

15. மற்போரும் கம்பு சுற்றும் வளமொடு
பூட்டுகள் பூட்டு கி(ன்)ற முறையும்
கைமுறைகள் பூட்டு கி(ன்)ற முறையும்
காலுகள் மாறித் தட்டுகிற முறையும்
வர்ணத்[1] தட்டு தட்டுற முறையும்
மறுபடி சென்று எழும்புற முறையும்
நானிகைத் தட்டும் நேரத் தட்டும்
நலமுடன் படித்தார் தம்பி மார்கள்
அந்தத் தொழில்முறை யானது சேர
அழகொடு தம்பிகள் கற்றுப் படித்தார்
இன்னும் தொழில்முறை யானது சேர
அழகொடு தம்பிகள் கற்றுப் படித்தார்
இன்னும் தொழில்முறை பலது களுண்டு
என்னுட தம்பிகள் வாரும் வாரும்
ஆசானுடன் தம்பிகள் இருவரு மாக
அங்கப் போரது பொருதிடு வாராம்
அங்கே அப்போ வெட்டின போது
ஆசா னுக்கடி கொண்டிடு மாமே
ஆசா னுக்கடி கொண்ட போது
அரச மன்னர் மனமது மகிழ்ந்தார்.

11.16. கூட்டுமென்றார் - இணைந்து நில்லும் என்றார். ஆராரோ - குரவை ஒலியைக் குறித்தது. 11.17. வாஸ்தாரங்கள் - அறைகூவல். 11.18. பொந்தி - கதாயுதம் போன்றதொரு ஆயுதம். 11.19. பரிசை - ஒரு வகை ஆயுதம். 11.20. பம்மிபம்மி - மெதுவாக பதுங்கி. 11.21. வடமொடு - வட்ட அமைப்போடு. ஓதிரம் - ஒரேயடியாக. 11.22. கூக்கூரல் - மிகுதியான ஓசை. கொக்கரித்தாரே - ஆரவாரம் செய்தாரே. 11.25. உச்ச - மேலான. கடகம் - ஒரு வகை ஆயுதம். 12.1. பிறதாரை - பிறரை. நெற்றிப்பூட்டு - நெற்றிப்பொட்டு; கன்னத்தையும் நெற்றியையும் இணைக்கும் கண் ஓரப் பகுதி. 12.2. நேரிய - நெறியுடன் அமைந்த. மண்டி போட்டு - முழங்கால்கள் தரையில் படுமாறு மடங்கி நின்று. 12.3. மறியும் - கீழே தள்ளும். 12.4. வர்ம வகை - ஆயுதமின்றி, உடம்பில் குறிப்பிட்ட மர்ம

இடங்களில் அடித்து எதிராளியை நிலைகுலையச் செய்யும் ஒரு வகை போர் முறை; தமிழகத்தின் தென் மாவட்டங்கள், கேரள மாநிலத்தில் சில பகுதிகளில் இம்முறை போர் வழக்கில் உள்ளது. 13.1. மாத்தானும் - 'மாற்றனும்' என்பதின் பேச்சுவழக்கு; பகைவனும். மாறி - மாறுபாடு கொண்டு. பொருதிடுகில் - போர் செய்யுமானால். 13.2. மத்தகம் - யானையின் பிடரி. 13.3. ஆனயுட - 'யானையுடைய' என்பதின் பேச்சு வழக்கு. 13.6. வலங்கை - வலங்கை பிரிவு. இடங்கை - இடங்கைப் பிரிவு. வழிமுறைகள் - போர்முறைகள். 14.1. பொன்னாங் குருவி - வேகமாகப் பாய்ந்து பறந்து செல்லும் ஒரு குருவி வகை. போருக்கிடையில் - படைகளுக்கிடையில். 14.2. வல்லயம் - ஈட்டி போன்றதொரு ஆயுதம்; வாங்கிற - வாங்குகிற; 'திருப்பிப் பெறுகின்ற' என்ற பொருளில். 15.1. கம்பு - சிலம்பம். பூட்டு - கை, கால்களை அசைக்க முடியாதபடி உடம்பின் பகுதியைச் செயலிழக்கச் செய்யும் ஒரு வகை யுத்த முறை. 15.2. காலுகள் மாறி தட்டுகிற முறை - எதிராளிகளின் கால்களைத் தட்டி, நிலைகுலைந்து அவர்கள் விழும்படி செய்யும் முறை. 15.3. வர்ணத் தட்டு - ஒரு வகை வர்ம யுத்த முறை. எழும்புற முறை - வர்ணத் தட்டு முறையால் அடிபட்டவரை எழுப்புகிற முறை. 15.4. நானிகைத் தட்டு, நேரத்தட்டு - ஒரு வகை வர்ம அடிமுறைகள். 15.6. தொழில் முறை - போர் முறை. 15.8. அங்கப்போர் - உடலால் செய்யும் போர். 15.9. அப்போ - 'அப்பொழுது' என்பதின் பேச்சு வழக்கு. 15.9. ஆசானுக்கு அடி கொண்டிடுமாமே - 'தம்பிமார்கள் தங்கள் போர்த் திறமையால், தங்களுக்குச் சொல்லிக் கொடுத்த ஆசான் மீதே அடி பட்டுவிடும் படியாகத் திகழ்ந்தார்' என்ற பொருளில்.

சு.செ : 1. வற்ணத்

## Ācāṉ tampimārkku aḷitta payiṟcikaḷ

*ācāṉum valattēniṟka tampimār iṭattēniṟka*
*ācāṉoṭu tampimārum aḻkoṭu kūṭṭumeṉṟār*
*ārōrō eṉṟorucattam ākācaṅkaḷ iṭittatupōl*
*vāstāṅkaḷ viṭṭatōrcattam malaikaḷiṭintu viḻuntataippōl*
*valatukaitaṉil-pontiyumāka iṭatukaitaṉil paricaiyumākap*
*pammipammi vārumeṉṟārē paricoṭunērntu vārumeṉṟārē*
*valattēvici eḻumpiyēniṉṟu vaṭamoṭuōtiram veṭṭumeṉṟārē,*
*vārumeṉṉuṭa tampimārē kūkkuraleḻuppi kokkarittārē*
*iṭattēvici eḻumpiyēniṉṟu itamoṭāyutam veṭṭumeṉrarē*
*valattēvici iṭattēveṭṭi vārumeṉṉuṭa tampimārē*
*iṭattēvici valattēveṭṭi eḻumpiyē vārum*
*kuñcutampi uccakaṭakam veṭṭu meṉṟārē.*

**vēṟu**

12. *vantāraip piṟatārai veṭṭum eṉṟārē*
*neṟṟip pūṭṭilē veṭṭum eṉṟārē*
*nēriya vāḷmuṟai taṭṭum eṉṟārē*
*maṇṭi poṭṭu veṭṭum eṉṟārē*
*vayittil kutti maṟiyum eṉṟārē*

*antat toḻilmuṟai yāṉatu cēra*
*aḻakoṭu tampimār kaṟṟup paṭittār*
*iṉṉum toḻimuṟai palatuka ḷuṇṭu*
*eṉṉuṭa tampikaḷ vārum eṉṟārē*
*varma vakaikaḷ paṭiyum eṉṟārē.*

**vēṟu**

13. *māttāṉum paṭaiyeṭuttu māṟippaṭai porutiṭukil*
*matayāṉai muṉpilceṉṟu mattakattil ēṟiṭavum*
*āṉayuṭa kaitaṉilē āṉaḻakaṉ valiyatampi*
*valiyatampi kuñcutampi maṉṉavarka ḷirupērum*
*māttāṉiṉ kaikālum maṟukālum vāṅkiṭavum*
*valaṅkaiyilum iṭaṅkaiyilum vaḻimuṟaikaḷ paṭittārē.*

**viruttam**

14. *poṉṉāṅ kuruvikaḷ pāyntatu pōla*
*pōruk kiṭaiyilē celkiṟa muṟaiyum*
*vallayam koṇṭu eṟikiṟa muṟaiyum*
*maṟupaṭi vallayam vāṅkiṟa muṟaiyum*
*antat toḻilmuṟai yāṉatu cēra*
*aḻakoṭu tampimār kaṟṟup paṭittār*
*iṉṉum toḻilmuṟai palatuka ḷuṇṭu*
*eṉṉuṭa tampikaḷ vārumeṉ ṟārē.*

**vēṟu**

15. *maṟpōrum kampu cuṟṟum vaḷamoṭu*
*pūṭṭukaḷ pūṭṭu ki(ṉ)ṟa muṟaiyum*
*kaimuṟaikaḷ pūṭṭu ki(ṉ)ṟa muṟaiyum*
*kālukaḷ māṟit taṭṭukiṟa muṟaiyum*
*varṇat taṭṭu taṭṭuṟa muṟaiyum*
*maṟupaṭi ceṉṟu eḻumpuṟa muṟaiyum*
*nāṉikait taṭṭum nērat taṭṭum*
*nalamuṭaṉ paṭittār tampi mārkaḷ*
*antat toḻilmuṟai yāṉatu cēra*
*aḻakoṭu tampikaḷ kaṟṟup paṭittār*
*iṉṉum toḻilmuṟai yāṉatu cēra*
*aḻakoṭu tampikaḷ kaṟṟup piṭittār*

*iṉṉum toḻilmuṟai palatu kaḷuṇṭu*
*eṉṉuṭa tampikaḷ vārum vārum*
*ācāṉuṭaṉ tampikaḷ iruvaru māka*
*aṅkap pōratu porutiṭu vārām*
*aṅkē appō veṭṭiṉa pōtu*
*ācā ṉukkaṭi koṇṭiṭu māmē*
*ācā ṉukkaṭi koṇṭa pōtu*
*araca maṉṉar maṉamatu makiḻntār*

Swift was their movement
Not soft was their voice
Rough was their motion
They jumped in air
Fell on the ground
Moved backward and forward
Left and right made circles.

### Encountering an enemy camp

Pointed the sword everywhere
Like a flash they moved the sword
Killed the enemy that was a dummy
The tip of the sword touched his forehead
Another one went straight into his belly
Knelt down and jumped
The Brothers to wipe him out
"There is more to learn, more to train
Come and learn every one"
Said the able master
"Manoeuvring tactics in Martial art
Must be learnt and practised"
Added the master to his disciples.
They also imbibed the art of
Avenging an enemy on elephant
To face the elephant on the front
And to kill the enemy

By cutting the right hand
And left leg, the left hand
And the right leg.
They passed in all severe tests
Placed by their Master
Facing an individual became an easy job
But encountering an enemy camp
Among the soldiers who form a mob
Would be a Herculean task.

## Mock Fight

The master devised a plan
To raise them as a warrior clan
A mock fight was arranged
A group of Soldiers assembled
Like a sparrow the two Brothers
Flew inside the crowd with vigour and vitality
Slashed, thrashed, crushed and quelled the crowd
Took the spear and threw it far
Caught hold of it and flung it.
It went straight and hit the one who sent it
"What you have learnt is
Only a bit of Ocean-
A lot is there to be learnt
Come and have every other art left"
Said the master to the earnest learners.
Martial art and magical fete
Archery and gymnastics, boxing and wrestling
To hit the enemy at any spot
To outwit the enemy at any cost
Every art this and that
They would sweat it out with thirsty heart
The king was immensely happy.

### மன்னர் ஆசானுக்குப் பரிசுகள் வழங்கல்

ஆயிரத் தெட்டு பொன்னது கொட்டி
        ஆசானுட கையில் கொடுத்தார்
அடியைத் தொழுது விடையும் வாங்கி
        ஆசானும் தம்பதியில் போனார்.

15.12. அடியைத் தொழுது - பாதங்களை வணங்கி.

### Mannar ācānukkup paricukal valaṅkal

*āyirat teṭṭu ponnatu koṭṭi*
        *avānuṭa kaiyil koṭuttār*
*aṭiyait tolutu viṭaiyum vāṅki*
        *ācānum tampatiyil pōnār*

When they defeated their master
The king gave their master
Gold coins thousand and eight
Praying for the king's good health
The master left for his hearth.

### தம்பிகள் பயில குதிரை மற்றும் யானை வருதல்

வேறு

16. ஒன்பதான திருவயதில் உடவாள்வெட்டிக் கற்றபோது
உடவாள்வெட்டிக் கற்றபோது உற்றபுகழ் தம்பிமார்கள்
திருவயது பத்துசெல்ல திண்வலிய தம்பிக்குதான்
குஞ்சுதம்பி மன்னவருக்குக் கூண்டதிருவயது ஏழுசெல்ல
கொச்சுமணித் தங்கையர்க்குக் கூண்டதிருவயது அஞ்சுசெல்ல
வளர்ந்துவரும் நாளதிலே மன்னவரும் கற்பித்தாரே
பத்தான திருவயதில் பரியேற்று தான்படிக்கப்
பரியேற்று தான்படிக்கப் பரியாளர் தனைவருத்தி
ஆகாசப் பச்சியென்னும் அலுங்கு மாகுத்தனையும்
வரவழைத்து மன்னவரும் மகிழ்ந்துதிரு விளங்கள்பற்ற
இந்நேரம்[1] பரிவேணும் என்னுடைய தம்புரானே
கால்நெடிய பரிக்குதிரை கடும்புரவி வேணுமென்றார்
வேணுமென்ற நேரத்திலே வீரமுள்ள குதிரைபட்சி

பந்தியிலே கெட்டிநின்ற பரிதனையும் தானவுத்து
குளமதிலே கொண்டுசென்று குளிப்பாட்டி அலங்கரித்துப்
பட்டதிலேதான் துடைத்துப் பன்னீரும்தான் தெளித்து
வாரிப்பல பணிபூண்டு வாய்த்தநெற்றிப் பட்டம்கெட்டி
வெள்ளியாலே சேணம்வச்சு வீரவாளித் தான்பொதிந்து
இருப்புசேணம் பொன்னாலே இருகால்படியும் பொன்னாலே
கசைகுடையும் பொன்னாலே கைப்பிடிவாரும் பொன்னாலே
முன்வாரும் பொன்னாலே பின்வாரும் பொன்னாலே
வந்துநின்ற புரவிதன்னைகண்டு வலியதம்பி மன்னவரும்
மன்னர்திரு முன்பில்சென்று வணங்கி அடிதொழுது.

**16.1.** உடவாள் - 'உடைவாள்' என்பதின் பேச்சு வழக்கு. **16.3.** திண் வலிய - மிகுந்த வலிமையுடைய. **16.5.** அஞ்சு - 'ஐந்து' என்பதின் பேச்சு வழக்கு. **16.7.** பரியேற்று - குதிரை ஏற்றம். **16.8.** பரியாளர் - குதிரைக்காரர். வருத்தி - வருவித்து. **16.9.** ஆகாசப்பச்சி - குதிரையேற்றம் சொல்லித் தரவந்தவன் பெயர்; பெயரே அவன் திறமையை உணர்த்தியது. அலுங்கு மாகுத்தன். - தளிர் மாலை சூடிய மாகுத்தன் எனும் சாதியன். **16.11.** பரி - குதிரை. **16.12.** புரவி - குதிரை. **16.13.** குதிரை பட்சி - பறக்கும் குதிரை. **16.14.** பந்தி - குதிரைகளைக் கட்டுமிடம். கெட்டிநின்ற - கட்டிப்போட்டிருந்த. அவுத்து - 'அவிழ்த்து' என்பதின் பேச்சு வழக்கு. **16.17.** வாரி - அழகு படுத்தி. பணி பூண்டு - ஆபரணம் பூண்டு. **16.18.** சேணம் - குதிரையில் உட்காருவதற்காகப் போடப்படுகின்ற தோலினால் செய்யப்பட்ட இருக்கை. வச்சு - 'வைத்து' என்பதின் பேச்சு வழக்கு. வீர வாளி - வலிமையான அம்பு. **16.19.** இருப்பு சேணம் - குதிரையில் முதுகில் இருப்பதற்குரிய இருக்கை. கால்படி - கால் வைப்பதற்குரிய படி. **16.20.** கைப்பிடிவார் - குதிரையை ஓட்டுவதற்காக வைத்திருக்கும் கயிறு. குடை - குதிரையில் பொருத்தப்பட்ட குடை. **16.23.** முன்பில் - முன்பாக.

சு.சொ : 1. இன்னேரம்

## Tampikaḷ payila kutirai maṟṟum yāṉai varutal

**vēṟu**

16. *oṉpatāṉa tiruvayatil uṭavāḷveṭṭi kaṟṟapōtu*
*uṭavāḷveṭṭi kaṟṟapōtu uṟṟapukaḷ tampimārkaḷ*
*tiruvayatu pattucella tiṉvaliya tampikkutāṉ*
*kuñcutampi maṉṉavarukkuk kūṇṭatiruvayatu ēḻucella*
*koccumaṇit taṅkaiyarkkuk kūṇṭatiruvayatu añcucella*
*vaḷarntuvarum nāḷatilē maṉṉavarum kaṟpittārē*
*pattāṉa tiruvayatil pariyēṟṟu tāṉpaṭikkap*
*pariyēṟṟu tāṉpaṭikkap pariyāḷar taṉaivarutti*
*ākācap pacciyeṉṉum aluṅku mākuttaṉaiyum*

*varavaḻaittu maṉṉavarum makiḻntutiru viḷaṅkaḷparra*
*innēram parivēṇum eṉṉuṭaiya tampurāṉē*
*kālneṭiya parikkutirai kaṭumpuravi vēṇumeṉṟār*
*vēṇumeṉṟa nērattilē vīramuḷḷa kutiraipaṭci*
*pantiyilē keṭṭiniṉṟa paritaṉaiyum tāṉavuttu*
*kuḷamatilē kontuceṉṟu kuḷippāṭṭi alaṅkarittup*
*paṭṭatilētāṉ tuṭaittup paṉṉīrumtāṉ tōḷittu*
*vārippala paṇipūṇṭu vāyttaneṟṟip paṭṭamkeṭṭi*
*veḷḷiyālē cēṇamvaccu vīravāḷit tānpotinttu*
*iruppucēṇam poṉṉālē irukālpaṭiyum poṉṉālē*
*kacaikuṭaiyum poṉṉālē kaippiṭivārum poṉṉālē*
*muṉvārum poṉṉāle piṉvārum poṉṉālē*
*vantuniṉṟa puravitaṉṉaikaṇṭu valiyatampi maṉṉavarum*
*maṉṉartiru muṉpilceṉṟu vaṇaṅki aṭitoḻutu*

## Laurels from the Master

Nine was the age set
To learn the use of sword and spear.
Koccumaṇi was five years old
Kuñcu Tampi was seven
And Valiya Tampi ten
Time for the Brothers
To learn horse riding.
*Ākācapaṭci* (skybird) was the name of the trainer
Belonging to *mākuttaṉ* tribe
He was assigned the job of
Imparting efficiency in horse riding
A tall and brave horse was there
Brought and bathed in scented water
Beautified with gold and silver saddles
Gold and silver nothing but
Gold and silver the horse had.

## தம்பிமார்களின் பயிற்சி

வலியதம்பி குஞ்சுதம்பி மன்னர்பரி தானேறி
விடைவாங்கித் தம்பிமார்கள் வீர மாகுத்தனுடன்

குதிரைவையாளி விளைதனிலே குஞ்சுதம்பி வலியதம்பி
சித்திரப் பரியினிலேறிச் சென்றாரே தம்பிமார்கள்
ஆகாசப் பச்சியென்னும் ஆடல்புரவி மீதிலேறி
வலியதம்பி குஞ்சுதம்பி அழகுபரி[1] தனிலேயேறிக்
கைப்பிடிவாளும் தான்பிடித்துக் கடும்பரியை விரட்டிவிட்டார்
வட்டமிட்ட தம்பியரை மந்திரிமார் சூழநின்றார்
வட்டமிட்டார் பரியின்மீதிலே மன்னர்தம்பிமா ரேறிக்கொள்ள
கண்டனபேரும் சூழ்ந்துநிற்க கடும்புரவி குசைநெகிழ்த்தார்[2]
குசைநெகிழ்த்தார் குதிரையாலே குதித்துசாட ஆகாசத்தில்
ஆகாசத்திலே நடைபிடித்திட அரசர்தம்பிமா ரிருபேர்களும்
நடைபிடித்திட புரவியானதை நாலுதிக்கிலும் புரவியானதில்
பரிசைவாளும் வீசிவெட்டவும்கோடி படையினில் குதித்துவெட்டவும்
குதிரையானது ஆகாசத்தில் அரசர்வெட்டவும் ஆனைசாகவும்
ஆகாசத்திலே குதிரைதாண்டவும் ஆணழகர்தம்பி மார்களிடத்துகிடந்ததோர்
கடுகப்பொன்மணி ஆபரணங்களும் தாவட்டங்களும் கீழேவிழுந்திட
தடவிக்கொள்ளாமல் கோரியெடுத்தனர் வாள்முனையில் கோரியெடுத்தல்லோ
வாய்த்ததம்பிமார் மடியில்வைத்தார் வாய்த்தமாலையைக் கண்டபேரெல்லாம்.

16.25. வீர மாகுத்தன் - வீரம் பொருந்த குதிரை செலுத்துபவன். 16.26. வையாளி விளை கல்குளம் தாலுகா அம்மாண்டி விளை அருகிலுள்ள மிகச் சிறிய ஊர். 16.27. சித்திரப் பரி - அழகிய வேலைப்பாடுகள் அமைந்த குதிரை. 16.28. ஆகாசப் பச்சியென்னும் ஆடல் புரவி - குதிரையின் பெயர்; ஆகாயத்தில் பறவை போலும் பறக்கும் திறனுடையது என்பதைப் பெயர் உணர்த்தியது. 16.33. அனபேரும் - 'அனைவரும்' என்ற பொருளில். குசை நெகிழ்த்தார் - கடிவாளத்தை நெகிழச் செய்தார். 16.35. நடைபடித்திட - நடை பழகிட. 16.36. நாலு - 'நான்கு' என்பதின் பேச்சு வழக்கு. 16.37. பரிசை - கேடயம். 16.38. ஆனை சாகவும் - யானை இறக்கவும். 16.39. தாண்டவும் - கடந்து செல்லவும். 16.40. கடுகப் பொன்மணி - ஒரு வகை கழுத்தணி. தாவடம் - ருத்திரமணி மாலை என்னும் ஒரு வகை கழுத்தணி. 16.41. தடவிக் கொள்ளாமல் - தடுமாறாமல். கோரி எடுத்தனர் - அள்ளி எடுத்தனர்.

சு.சொ : 1. அளகுபரி 2. குசைநெகிள்த்தார்

## Tampimārkaḷin̲ payir̲ci

*valiyatampi kuñcutampi man̲n̲arpari tān̲ēr̲i*
*viṭaivāṅki tampimārkaḷ vīra mākuttan̲uṭan̲*
*kutiraivaiyāḷi viḷaitan̲ilē kuñcutampi valiyatampi*
*cittirap pariyin̲ilēr̲i cen̲r̲ār̲ē tampimārkaḷ*
*ākācap pacciyen̲n̲um āṭalpuravi mītilēr̲i*
*valiyatampi kuñcutampi aḻukupari tan̲ilēyēr̲i*
*kaippiṭivāḷum tān̲piṭittuk kaṭumpariyai viraṭṭiviṭṭār*

*vaṭṭamiṭṭa tampiyarai mantirimār cūḻaniṉṟār*
*vaṭṭamiṭṭār pariyiṉmītilē maṉṉartampimā rēṟikkoḷḷa*
*kaṇṭaṉapērum cūḻntuniṟka kaṭumpuravi kucaiṇekiḻttār*
*kucainekiḻttār kutiraiyālē kutittucāṭa ākācattil*
*ākācattilē naṭaipiṭittiṭa aracartampimā rirupērkaḷum*
*naṭaipiṭittiṭa puraviyāṉatai nālutikkilum puraviyāṉatil*
*paricaivāḷum vīciveṭṭavumkōṭi paṭaiyiṉil kutittuveṭṭavum*
*kutiraiyāṉatu ākācattil aracarveṭṭavum āṉaicākavum*
*ākācattilē kutiraitāṇṭavum āṉaḻakartampi mārkaḷiṭattukiṭantatōr*
*kaṭukappoṉmaṇi āparaṇaṅkaḷum tāvaṭṭaṅkaḷum kīḻēviḻuntiṭa*
*taṭavikkoḷḷāmal kōriyeṭuttaṉar vāḷmuṉaiyil kōriyeṭuttallō*
*vāyttatampimār maṭiyilvaittār vāyittamālaiyaik kaṇṭapērellām*

## A ride on the back of Horse and Elephant

Bowed the two Brothers before the king
Mounted on the horse fully armed with sword
The horse galloped round and round
And they controlled it with deft hands
The name of the horse was skybird
It was flying sky-ward
All the ministers assembled there
Awaiting for the arrival
The horse flew in all directions
Carrying the two brave Brothers
They displayed their rare skill.

## பயிற்சி கண்ட மன்னர்களின் மகிழ்ச்சி

மகிழ்ந்திருகையால் தம்பிமாரை வாரியெடுத்தனர் மார்பில்சேர்த்தனர்
அழகன் தம்பிமார்கள் தன்னையும் இந்தவண்ணப் பரியேற்றுகள்
இவ்வுலகில் கண்டதில்லை இவ்வுலகில் கண்டதில்லை
என்றுபச்சியும் பரியெறக்கியே பாரமன்னர் தொழுதுநின்றாரே[1]
பரியிறக்கியே தம்பிமார்களும் பாரமுடிமன்னர் தொழுதுநின்றாரே

16.43. வாரியெடுத்தனர் - சேர்த்தணைத்து எடுத்தனர். 16.44. பரியேற்றுகள் - குதிரை ஏறிச் செலுத்தும் முறைகள். 16.46. பச்சிஆகாச பட்சியெனும் மாவுத்தன். எறக்கி - 'இறக்கி' என்பதின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. தொளுதுனின்றாரே

### Payirci kaṇṭa maṉṉarkaḷiṉ makiḻicci

*makiḻintirukaiyāl tampimārai vāriyeṭuttaṉar mārpilcērttaṉar*
*aḻakaṉtampi mārkaḷtaṉṉaiyum intavaṇṇap pariyēṟṟukaḷ*
*ivvulakil kaṇṭatillai ivvulakil kaṇṭatillai*
*eṉṟupacciyum pariyeṟakkiyē pāramaṉṉar toḻutuniṉṟārē*
*pariyiṟakkiyē tampimārkaḷum pāramuṭimaṉṉar toḻutuniṉṟārē*

And killed an elephant
They proved their deft handling
By lifting a piece of gold
Fallen from the crown with the tip of their sword
Day and month they drove
Day and month they learnt.
When they finished the king was satisfied.

### ராமவர்மா - கிட்டிணத்தம்மை இல்லற வாழ்க்கை

கந்தர்வ மடவார்கள் இணையும் புறாவும்போல
இருபேரும் ஒருமுகமாய் கொஞ்சும்கிளி வாய்மலர்போல்
கண்டிருந்த தம்புரானும் தாயார்கிட்டிணத் தாளம்மையும்
தம்பிமார்கள் இருபேரும் குணத்தால்கொச்சு மாறப்பிள்ளையுமாய்
குஞ்சும்மாடம்மை பிள்ளையுமாய் பிச்சைபெருமாள் வயிராவியும்
அழகன்விக்[1] கிலாங்குருவியுமாய் எல்லோரும் ஒருமுகமாய்
இதத்துடனே வாழ்ந்திருந்தார் வாழ்ந்திருக்கும்[2] நாளதிலே.

16.48. கந்தர்வ மடவார்கள் - தேவலோக சாதியருள் ஒரு வகையினர்; இவண் தம்பிமார்களின் திறம், அழகு கருதி ஒப்புமை கூறப்பட்டது. இணையும் புறாவும் - ஆண்புறாவும் பெண்புறாவும் போல. 16.52. பிச்சைபெருமாள் வயிராவி - ஒருவரின் பெயர்; 'வயிராவி' என்பது காளி கோயிலுடன் தொடர்புடைய ஒரு சாதியின் பெயர்; இச்சாதியர் சுசீந்திரம் ஊருக்குக் குடிபெயர்ந்து வந்தவர். 16.53. விக்கிலாங்குருவி - ஒருவரின் பெயர். 16.54. இதத்துடன் - இன்பத்துடன்.

சு.சொ : 1. அளகன்விக் 2. வாள்ந்திருக்கும்

### Rāmavarmā - kiṭṭiṇattammai illaṟa vāḻkkai

*kantarva maṭavārkaḷ iṇaiyum puṟāvumpōla*
*irupērum orumukamāy koñcumkiḷi vāymalarpōl*
*kaṇṭirunta tampurāṉum tāyārkiṭṭiṇat tāḷammaiyum*
*tampimārkaḷ irupērum kuṇattālkoccu māṟappiḷḷaiyumāy*

*kuñcumāṭammai piḷḷaiyumāy piccaipērumāḷ vayirāviyum*
*aḻakaṉvik kilāṅkuruviyumāy ellōrum orumukamāy*
*itattutaṉē vāḻntiruntār vāḻntirukkum nāḷatilē*

## Devine life of the king

The master had all praise
And said they were wise
Rāmavarma Tampirāṉ and Kiruṭṭiṉattammāḷ
Led the life of the divine doves
With their sons and daughter
With their friends and family members
Happy and contentment prevailed in their life
Rāmavarma Tampirāṉ, Vañai Mārttāṇṭa Tampirāṉ,
Ministers and royal members
Iṭattaṟuvāḷ Pōṟṟi, Vaḷḷiyāttu Pōṟṟi
Makuṭañcēri Piḷḷai, Talaiccēri Mārttāṇṭa Piḷḷai
Mārttāṇṭa Piḷḷai and the others.

### ராமவர்மாவின் அரசாட்சி

வாய்த்தராம வர்மதம்புரானும் வஞ்சிமார்த்தாண்ட தம்புரானும்
மந்திரிமா ரனைபேரும் மந்திரிமார் மாடம்பிமார்
வன்னியகாலப் பெருமாளும் எட்டிரண்டு பத்துபேரும்
இடத்தறுவாள் போத்தியோடே வள்ளியாத்து போத்தியோட
மகுடஞ்சேரி பிள்ளையாரும் தலைசேரி மார்த்தாண்டபிள்ளை
தம்பிமார்த்தாண்ட பிள்ளையுமாய் எல்லோரும் ஒருகுடைகீழ்
இதமாக ஆண்டிருந்தார் அசையாத மணியுங்கெட்டி
ஆறிலொரு கடமைதாண்டி ஆயஞ்சுங்கா முதலெடுப்பும்
அரண்மனையும் சாவடியும் அங்காடி தெருவும்வைத்து
அலங்காரக் கொடியுங்கெட்டிக் கள்ளர்துட்டர் தனையடக்கிக்
கருதிமன்னர் ஆண்டிருந்தார் ஆண்டிருக்கும் நாளதிலே.

16.56. அனைபேரும் - அனைவரும். மாடம்பிமார் - நிலச்சுவான்தார்கள்; மேலும் இவர்கள் அரசர்களின் நண்பர்களாகவும் நிர்வாகத்திற்கு உதவியவர்களாகவும் திகழ்ந்தனர். 16.60. ஒரு குடைகீழ் - ஒரு அரசாட்சியின் கீழ். 16.61. அசையாத மணியுங் கெட்டி - 'அரண்மனை வாயிலில் வைக்கப்பட்ட நீதி கேட்டு அடிக்கப்படும் மணி நாக்கு அசையாத வண்ணம் நேர்மையுடன் ஆட்சி செய்து' என்ற பொருளில். 16.62. ஆயஞ்சுங்கா - ஆயமும் சுங்கமும்; அதாவது ஏற்றுமதி இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு விதிக்கப்படும் வரி. முதலெடுப்பு - வருமானம். 16.63. சாவடி - சத்திரம்.

### Rāmavarmāvin aracātci

*vāyttarāma varmatampurānum vañcimārttānta tampurānum*
*mantirimā ranaipērum mantirimār mātampimār*
*vanniyakālap perumālum ettirantu pattupērum*
*itattaruvāl pōttiyōta valliyāttu pōttiyōta*
*makutañcēri pillaiyārum talaicēri mārttāntapillai*
*tampimārttānta pillaiyumāy ellōrum orukutaikil*
*itamāka āntiruntār acaiyāta maniyunketti*
*āriloru katamaitānti āyañcunkā mutaletuppum*
*aranmanaiyum cāvatiyum ankāti teruvumvaittu*
*alankārak kotiyunketti kallartuttar tanaiyatakko*
*karutimannar āntiruntār āntirukkum nālatilē*

### Flawless rule of the king

All governed the land and people
With the bell unmoving,
Announcing flawless rule
One sixth of the produce,
Taken as tax from the farmers,
Laid roads and made markets
Raised Flags and regulated law and order
Thus the king ruled the land,
With peace and prosperity in plenty...

### ராமவர்மாவின் மகிழ்ச்சியான இல்லறம்

தம்பிமார் இருபேரும் தங்கைமாட்டம்மை பிள்ளையுமாய்
தாயார்கிட் டிணத்தாளம்ம தம்புரானும் இணையும்பிறவும்போல்
இருபேரையும் மடியில்வைத்து மடியில்வைத்து முத்தமிட்டு
வாழ்ந்துவரும் நாளதிலே ஆளியிட்ட முடுகுகளும்
அரையில்கச்சப் பிறமிலங்க பொன்னரந்நாண் துடரரந்நாண்
பொன்னுரைத்துப் பொட்டுமிட்டு இந்திரனபோல் களிபெற்று

16.67 பிறவு - 'புறா' என்பதின் வட்டார வழக்குச் சொல். 16.70. துடரரந்நாண் - 'தொடர் அரைஞாண்' என்பதின் பேச்சு வழக்கு. இடுப்பில் அணியும் ஒரு வகை ஆபரணம். 16.71. பொன்னுரைத்துப் பொட்டுமிட்டு - பொட்டு இடுவதற்குப் பொன்னை உரைத்து: இது ராமவர்மாவின் செல்வச் செழிப்பை உணர்த்தியது. களி - மகிழ்ச்சி.

## Rāmavarmāvin makilcciyāna illaram

*tampimār irupērum tankaimātammai pillaiyumāy*
*tāyārkit tinattālammai tampurānum inaiyumpiravumpōl*
*irupēraiyum matiyilvaittu matiyilvaittu muttamittu*
*vālntuvarum nālatilē āliyitta mutukukalum*
*araiyilkaccap piramilanka ponnarannān tutararannān*
*ponnuraittup pottumittu intiranpōl kaliperru*

The two Brothers and the sister
Sat on the laps of their mother
Kiruttinattammāl spent lavishly
Gold and pearl to show her love.

## ராமவர்மா தம்பிமார்களுக்குத் தானம் தர விழைதல்

இருக்குமந்த நாளதிலே மக்கள்தானம் கொடுப்பதற்கு
மன்னவரும் கற்பிக்கவே நம்முடைய பின்காலம்
நாடுயிங்கே உறப்புமில்லே நம்முடைய நாளதிலே
நாம்கொடுக்க வேணுமென்று ஏதுவகைதான் கொடுப்போம்.

**16.73**. கற்பிக்கவே - ஆணையிடவே. **16.73.** நம்முடைய பின்காலம் - நாம் இறந்ததற்குப் பிறகு உள்ள காலம். **16.74.** நாடுயிங்கே உறப்புமில்லை - நாடு தம்பிமார்களுக்கே செல்லுமென்ற உறுதியுமில்லை; இத்தொடர் திருவிதாங்கூர் மருமக்கள் தாயமுறையை உணர்த்தியது. நம்முடைய நாளதிலே - நாம் உயிரோடு வாழ்கின்ற போதிலே.

## Rāmavarmā tampimārkalukkut tānam tara vilaital

*irukkumanta nālatilē makkaltānam kotuppatarku*
*mannavarum karpikkavē nammutaiya pinkālam*
*nātuyinkē urappumillē namutaiya nālatilē*
*nāmkotukka vēnumenru ētuvakaitān kotuppōm*

On his part the king said
There would be none to look after
Their children after their death
There was no guarantee
That they would inherit their property
For, the kingdom would never go to sons
As it was their custom and convention

The king thought of sharing the land
With his sons and daughter
While he was alive and active.

### ராமவர்மா தம்பிமார்களுக்குக் கொடுத்த சொத்துகளும் மானியங்களும்

ஏற்றதம்பி மார்களுக்கு இரவியென்ற காங்கயனும்
ஏற்றகுட்டி மரக்காலும் பொன்னுடவாள் பேய்க்குறுப்பும்
முண்டக்கண்ணு பிள்ளையோட முத்தலைக் குறுப்புமாரும்
மாமன்கொச்சு மாறப்பிள்ளையும் மன்னவர்க்கு இணையாகத்
தம்பிமார் இருபேரும் தங்கைமாடம்மை தங்கையற்கும்
ராமவர்ம தம்புரானும் நாடித்திருமனசு சந்தோசமாய்
வலியதம்பி மன்னவர்க்கு வாய்த்தநாலால மூட்டுமானியங்களும்
நாலாலமூட்டுச் சந்தையிலே நல்லமுதலெடுப்பு தீர்வைகளும்
கொடுப்பக்குழி[1] பேட்டைதன்னில் கண்டமுதல் எடுப்புகளும்
கூண்டவலிய தம்பிமன்னவர்க்குக் குஞ்சுதம்பி மன்னருக்குக்
கண்டமன்னர் கற்பிக்கவே கச்சேரியில் பதிவுசெய்தார்
தாளக்குடி கேள்விதன்னில் சந்தைமுதல் எடுப்புகளும்
கொடுத்தாரே மன்னவரும் குஞ்சுதம்பி தந்தெனக்கு
வலியதம்பி மன்னவர்க்கு வாய்த்தகுடிபதி தான்கொடுத்தார்
அவருட குடிபதியும் கூட்டப்பளி தனில்வாழும்[2]
குலசேகர மார்த்தாண்டனும் அவனுட குடிபதியும்
அங்கேயுள்ள முதலெடுப்பும் அங்கேயுள்ள முதலெடுப்பும்
அம்மாண்டிவிளை பதிதனிலே அன்பாக வாழ்ந்திருந்த[3]
முத்திருள நாடானுடன் முன்னடி கறுப்புநாடன்
அவனுட குடிபதியும் அங்கயுள்ள குடிப்பதியும்
அங்கேயுள்ள முதலெடுப்பும் முருங்கவிளை பதிவாழும்[4]
முருகன் சேனைக்குட்டி நாடானுட (அவனுட)குடிபதியும்
அங்கேயுள்ள .முதலெடுப்பும் பாரமன்னர் கற்பிக்கவே
வலியதம்பி மன்னவர்க்கு வாத்தியார் கோணங்களும்
பாராளும் வலியதம்பிக்குக் குஞ்சுதம்பி மன்னவர்க்குக்
குதிரைகெட்டும் சேணங்களும் வம்புமலை கோணங்களும்
வாய்த்த குஞ்சுதம்பி மன்னவர்க்குச் சிறந்தபுகழ்.

### ராமவர்மா மகளுக்குக் கொடுத்த சொத்துகளும் மானியங்களும்

தம்பிமார்கள் இளநீர்பரம்புகளும் தங்கைகொச்சு மாடம்மைக்குத்
தரவுகடை வயலதுவும் சிங்கநல்லூர் படைவீட்டில்
சேர்ந்தகடை முதலெடுப்பும் மஞ்சநீர் ஆடுதற்கு
கிடலாய்குடி தாளக்குடி அங்கேயுள்ள முதலெடுப்பும்
அழகிகொச்சு மாடம்மைக்குப் பரிவட்டம் கட்டிநிற்க
மணக்குடி உப்பளமும் அங்கேயுள்ள முதலெடுப்பும்
அவள்கொச்சு மாடம்மைக்குச் சிறந்தபுகழ் தம்பிமார்க்கு.

### ராமவர்மா தம்பிமார்களுக்குக் கொடுத்த பிற மானியங்கள்

திருவரைநாண் கொடிகளுடன் வேட்டையாடி களைத்துவிட்டு
விரைந்துவரும் நேரமதில் இருபேரும் தந்தனக்கு
இளநீர் பரம்பிகளும் கிட்டிணத்தம்மை தம்புரானுக்குத்
கிள்ளியூர் ஏலாவில் மூன்றுகோட்டை விதைப்பாடு
பெய்குழலுக்கு[5] உம்பளமாய் உம்பளங்கள் இறகூலி
ஒன்றுபோலதான் கொடுத்தார் கொடுத்தவகை அத்தனையும்
எடுத்துவந்தார் தம்பிமார்கள் இறைபகுதி குடிபகுதி
தீர்வைமட்டும் எடுத்துவந்தார் தீர்வைமட்டும் எடுத்துவந்தார்
அத்தனையும் தம்பிமார்கள் அடக்கி அரசாண்டிருந்தார்.

### ராமவர்மாவைத் தம்பிமார்கள் பணிதல்

சிங்கநல்லூர் படைவீட்டில் சிறந்தவேம்படிவாழ் கொட்டாரத்தில்
ராமவர்மதம் புரானைநாடித் திருமுகங்காட்டத் தொழுதுநின்றாரே
அந்தநேரம் தம்பிமார்கள் அரசர்திரு முனையில்வந்து
அடிதொழுது நமஸ்கரித்து அவர்சேவித்து வரவே
சேவித்தோர் தம்பிமார்கள் திருமுன்பிலே நின்று
தினந்தோறும் கைதொழுது திருதம்பியார் நிற்க.

16.76-79. ஏற்ற . . . . இணையாக - இந்நான்கு வரிகளிலும் கூறப்படும் ஆட்பெயர்கள் அரசரின் நண்பர்களாகவும், நிர்வாகத்திற்கு உதவியவர்களாவும் திகழ்ந்தவர்கள் ஆவர். 16.83. நாலால முட்டுச் சந்தை - நாகர்கோயில் - திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஓர் ஊர்; தற்பொழுது இது 'படந்தாலமுடு' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. முதலெடுப்பு தீர்வை - வரி பிரித்து எடுக்கும் உரிமை. 16.84. கொடுப்பக்குழிபேட்டை - கல்குளம் தாலுகா, குருந்தன்கோடு பஞ்சாயத்திலுள்ள மிகச் சிறிய ஊரிலுள்ள சந்தை. 16.86. கச்சேரி - பதிவாளர் அலுவலகம். 16.87. தாளக்குடி - தோவாளை தாலுகாவிலுள்ள ஓர் ஊர்; குஞ்சு தம்பியுடன் மிகவும் தொடர்புடைய இவ்வூரிலுள்ள கோவில் கல்வெட்டு (கி.பி.1533) இவ்வூரை தாழக்குடி என்று குறிப்பிடுகிறது. பிறதொரு கல்வெட்டு (கி.பி.1762)

ஆதிச்சன்புதூர் என்று குறிப்பிடுகிறது. 16.90. கூட்டப்பளி - கன்னியாகுமரி - திருநெல்வேலி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள ஓர் ஊர்; கூட்டப்புளி என் தற்பொழுது வழங்கப்படுகிறது. 16.93. அம்மாண்டிவிளை - கல்குளம் தாலுகா வெள்ளிமலை பஞ்சாயத்தின் கீழ் வரும் ஓர் ஊர்; தம்பிமார்களுக்கு இவ்வூரில் வழிபாடு நடத்தப்படுகிறது. 16.96 முருங்க விளை - கல்குளம் தாலுகா தக்கலை பேருராட்சியின் கீழ் வரும் வாள்வச்ச கோட்டம் பஞ்சாயத்திலுள்ள ஒரு சிறு ஊர். 16.99. கோணம் - வயல்வெளிப்பகுதி; குறிப்பிட்ட ஒருவரின் வயல்கள் ஒரே இடத்தில் இருந்தால் அதைக் 'கோணம்' எனக் குறிக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. 16.101. சேணம் - குதிரைக் கொட்டில். 16.103. இளநீர் பரம்பு - இளநீர் குடிப்பதற்காக விடப்பட்ட பெரிய தோப்பு. 16.104. தரவுக்கடை வயல் - ஓரிடத்துள்ள குறிப்பிட்ட வயலின் பெயர். 16.105. மஞ்சநீர் ஆடுதல் - பூப்பு நீராடுதல். 16.106. இடலாய்குடி - நாகர்கோயில் ஒரு பகுதியாக இவ்வூர் அமைந்துள்ளது; சுசீந்திரம் (கி.பி.1619) இவ்வூரை இடலாய்குடி என குறிப்பிடும்; சோழபுரம் கல்வெட்டில் (கி.பி.12-ம் நூற்றாண்டு) இவ்வூர் குறிப்பிடப்படுவதால் இவ்வூர் பழமையானது என்பர்; ஆய் நாட்டின் முக்கிய நகரமாக இது இருந்தது என்ற கருத்தும் உண்டு. 16.107. பரிவட்டம் - சீலை. இங்கு திருமணம். 16.108. மணக்குடி உப்பளம் - அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் அமைந்த இவ்வூர் நாகர்கோயிலிலிருந்து தெற்கே 10 கி.மீ. தொலையில் உள்ளது; முதலாம் ராஜராஜன் கல்வெட்டில் இவ்வூர் உப்பளம் என்று குறிப்பிடப்படுகிறது 16.113. கிள்ளியூர் - விளவங்கோடு தாலுகாவிலுள்ள ஓர் ஊர். ஏலா - நீர்க்கட்டு அதிகமுடைய வயலிடம். 16.114. பெய்குழல் - மழை பெய்தாற் போலும் கருத்த நிறமுடைய கூந்தலை உடைய கிட்டிணத்தம்மையைக் குறித்தது. இறகூலி - இறைகூலி; அரசர்க்குச் செலுத்தும் வரி. 16.117. தீர்வை - வரி. 16.118. அடக்கி - தன் ஆளுமைக்கு உட்படுத்தி. 16.122. சேவித்து - வணங்கி. 16.123. திருமுன்பிலே - அரசரின் முன்பாகவே.

சு.சொ : 1. கொடுப்பக்குளிபேட்டை 2 தனில்வாளும் 3. வாள்ந்திருந்த 4. பதிவாளும் 5 பெய்குளலுக்கு

## Rāmavarmā tampimākaḷukkuk koṭutta cottukaḷum māṉiyaṅkaḷum

*ēṟṟatampi mārkaḷukku iraviyeṉṟa kāṅkayaṉum*
*ēṟṟakuṭṭı marakkālum poṉṉuṭavāḷ pēykkuṟuppum*
*muṇṭakkaṇṇu piḷḷaiyōṭa muttalaik kuṟuppumārum*
*māmaṉkoccu māṟappiḷḷaıyum maṉṉavarkku iṇaiyāka*
*tampimār irupērum taṅkaimāṭammai taṅkaiyaṟkum*
*rāmavarma tampurāṉum nāṭıttırumaṉacu cantōcamāy*
*valiyatampı maṉṉavarkku vāyttanālāla mūṭṭumāṉiyaṅkaḷum*
*nālālamūṭṭuc cantaiyilē nallamutaleṭuppu tīrvaikaḷum*
*koṭuppakkuḻi pēṭṭaitaṉṉıl kaṇṭamutal eṭuppukaḷum*
*kūṇṭavaliya tampimaṉṉavarkkuk kuñcutampı maṉṉarukku*
*kaṇṭamaṉṉar kaṟpıkkavē kaccēriyıl patıvuceytār*
*tāḷakkuṭi kēḷvitaṉṉıl cantaimutal eṭuppukaḷum*
*koṭuttārē maṉṉavarum kuñcutampı tanteṉakku*
*valıyatampi maṉṉavarkku vāyttakuṭipatı tāṉkoṭuttār*

*avaruṭa kuṭipatiyum kūṭṭappaḷi taṉilvāḻum*
*kulacēkara mārttāṇṭaṉum avaṉuṭa kuṭipatiyum*
*aṅkēyuḷḷa mutaleṭuppum aṅkēyuḷḷa mutaleṭuppum*
*ammāṇṭiviḷai patitaṉilē aṉpāka vāḻntirunta*
*muttiruḷa nāṭāṉuṭaṉ muṉṉaṭi karuppunāṭaṉ*
*avaṉuṭa kuṭipatiyum aṅkēyuḷḷa kuṭipatiyum*
*aṅkēyuḷḷa mutaleṭuppum muruṅkaviḷai pativāḻum*
*murukaṉ cēṉaikkuṭṭi nāṭāṉuṭa (avaṉuṭa) kuṭipatiyum*
*aṅkēyuḷḷa mutaleṭuppum pāramaṉṉar kaṟpikkavē*
*valiyatampı maṉṉavarkku vāttıyār kōṇaṅkaḷum*
*pārāḷum valıyatampikkuk kuñcutampı maṉṉavarkku*
*kutiraikeṭṭum cēṇaṅkaḷum vampumalai kōṇaṅkaḷum*
*vāytta kañcutampi maṉṉavarkkuc cıṟantapukaḻ*

**Rāmavarmā makaḷukkuk koṭutta cottukkaḷum māṉiyaṅkaḷum**

*tampımārkaḷ ıḷanīrparampukaḷum taṅkaikoccu māṭammaikkut*
*taravukaṭai vayalatuvum ciṅkanallūr paṭaiviṭṭil*
*cērntakaṭai mutaleṭuppum mañcanīr āṭutaṟku*
*iṭalāykuṭı tāḷakkuṭı aṅkēyuḷḷa mutaleṭuppum*
*aḻakıkoccu māṭammaikkup parıvaṭṭam kaṭṭinıṟka*
*maṇakkuṭı uppaḷamum aṅkēyuḷḷa mutaleṭuppum*
*avaḷkoccu māṭammaikku ciṟantapukaḻ tampimārkku*

**Rāmavarmā tampimārkaḷukkuk koṭutta piṟa māṉiyaṅkaḷ**

*tiruvarainān koṭikaluṭaṉ vēṭṭaıyāṭı kaḷattuviṭṭu*
*viraintuvarum nēramatıl ırupērum tantaṉakku*
*iḷanīr parampıkaḷum kiṭṭiṇattammaı tampurāṉukku*
*kiḷḷiyūr ēlāvıl mūṉṟukōṭṭai vıtaippāṭu*
*peykuḻalukku umpaḷamāy umpaḷaṅkaḷ iṟakūlı*
*oṉṟupōlatāṉ koṭuttār koṭuttavakai attaṉaiyum*
*eṭuttuvantār tampımārkaḷ ıṟaipakuti kuṭipakuti*
*tīrvaimaṭṭum eṭuttuvantār tīrvaımaṭṭum eṭuttuvantār*
*attaṉaiyum tampımārkaḷ aṭakki aracāṇṭıruntār*

**Rāmavarmāvait tampimārkaḷ paṇital**

*ciṅkanallūr paṭaiviṭṭil ciṟantavēmpaṭıvāḻ koṭṭāṟattil*
*rāmavarmatam purāṇaınāṭi tırumukaṅkāṭṭat toḻutuniṉṟārē*

*antanēram tampımārkaḷ aracartıru muṉaiyilvantu*
*aṭitoḻutu namaskarittu avarcēvittu varavē*
*cēvittōr tampimārkaḷ tirumuṉpilē niṉṟu*
*tiṉantōṟum kaıtoḻutu tirutampiyār niṟka*

## The king prepared the will

Had the king lengthy consultations
With his friends and trusted lieutenants
With his officials and relatıves.
Koccu Mārappa Piḷḷai was also there
To give fınal shape to his plans.
Gave his sons the right
To collect taxes and levies
From the areas ranging from
Nālālamūṭu, Koṭuppakkuḻi
Tāḻākkuṭi and Kūṭṭappuḷi
Gave them the authority
To collect property tax and
Other taxes from the domain
Headed by Muttıruḷa Nāṭār
And Kaṟuppu Nāṭār on one side
Coconut garden, Paddy field.

## Property and Power to sons

Places for the horses
Palaces for the sons
Koccumāṭammai had her share
In Tāḻākkuṭi and Maṇakkuṭı
Besides a portion in Ciṅkanallūr
Salt mınes and other propertıes
Set aside as hıs charıty
The share had spread everywhere-
To quench theır thirst after hunting
They had some land ın Kıḷḷıyūr
In short, it was scattered and spread

That would yield income throughout.
The right to collect tax
Empowered them rule the land.
The two brothers stood side by side
In Cinkanallūr palace
They thanked their father profusely
Obeyed and followed every one of his word.

### ராமவர்மா தீர்த்தமாட விரும்புதல்

ஆண்டைக்கொரு தைதீர்த்தம் மாமாங்கம் தானாட
அதியபெரு தீர்த்தமன்று அரசமன்னர் மகிழ்ந்து
தைதீர்த்தம் மாமாங்கம் தானாட வென்று
தக்கதொரு மந்திரிமார் ஒக்கவர வழைத்தாரே
முன்னிருந்த ராசாக்கள் முடிபொறுத்த மன்னர்
முன்பிலவர் தீர்த்தமாடும் வாலியான் பாறை
வாலியான் பாறையிலும் வாய்த்த கன்னியாகுமரி
மன்னவர் தீர்த்தமாடி வருவார்க ளந்நேரம்
இந்தவண்ணம் வாலியன் பாறைதீர்த்த மாட
எல்லோரும் குதிரைபடை சேரவர வழைத்தார்
அங்கேயுள்ள பெரும்படையும் இங்கே வந்துநிற்க
இந்தநேரம் தீர்த்தமாட போக வேணுமென்று
எட்டுதிக்கும் ஆளோட விட்டா ரப்போது.

**16.125** ஆண்டைக்கொரு தை தீர்த்தம் - ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் தை தீர்த்தத் திருநாள். **16.128.** ஒக்க வர - ஒரு சேர வர. **16.129** முன்னிருந்த ராசாக்கள் - ராம வர்மாவிற்கு முன்பாக அரசாட்சி செய்த ராஜாக்கள். முடி பொறுத்த மன்னர் - அரச பாரம் தாங்குவதற்காக மணிமுடி சுமந்த மன்னர். **16.130.** வாலியான் பாறை - கடியபட்டணத்தின் அருகே உள்ள ஓர் குளத்தினை அடுத்த சிறிய ஊர். **16.137.** எட்டு திக்கும் - எட்டு திசையும்.

### Rāmvarmā tittamāṭa virumputal

*āṇṭaikkoru taitīrttam māmāṅkam tāṉāṭa*
*atiyaperu tīrttameṉṟu aracamaṉṉar makiḻntu*
*taitīrttam māmāṅkam tāṉāṭa veṉṟu*
*takkatoru mantirimār okkavara vaḻaittārē*
*muṉṉirunta rācākkaḷ muṭiporutta maṉṉar*
*muṉpilavar tīrttamāṭum vāliyāṉ pāṟai*

*vāliyān paṟaiyilum vāytta kanniyākumari*
*maṉṉavar tirttamāṭı varuvārka lannēram*
*ıntavaṇṇam vāliyan paṟaitirtta māṭa*
*ellōrum kutıraipaṭaiyum cēravāra vaḻaittār*
*aṅkēyuḷḷa perumpatai iṅkē vantuniṟka*
*ıntanēram tittamāṭa pōka vēṇumeṉṟu*
*eṭṭutıkkum āḷōṭa viṭṭā rappōtu*

## King's trip to Kaṉṉiyākumari

Worshipped and showed warmth through their deed.
As ıt was the custom
To have a holy dip during the month of *tai*
Once in a year ın the sea
At Kaṉṉıyākumarı away from the palace
The kıng set out for Vāliyāṉpāṟai
Lıke the previous kings
Flanked by mınısters and soldiers
Collected from dıfferent camps
To serve the kıng and to guard the king
The two brothers became attentive
Equipped wıth right type of armoury
They kept themselves ready and Stood before the king
Mounted on horse back
Valiya Tampı and Kuñcu Tampi
Waıted for the right signal.

### படைகளின் அணிவகுப்பு

விட்டதொரு மந்திரிமார் ஒட்டன் மனமகிழ்ந்து
விரைவாக சேனைபடை தன்னைத் திலித்தாரே
திலித்தாரே தம்பிமார்கள் சேனைபெரும் படைகளெல்லாம்.

### தம்பிமார்களின் அலங்காரம்

தம்பிமார் இருபேரும் தானேதங்க அணி அணிந்தார்
கைக்குவீர சங்கிலியும் கழுத்தில்தங்க சரப்பளியும்
ஆளியிட்ட முடுகுகளும் அரையில்கச்சப் புறமிலங்க

இடையில்வீர வாளிப்பட்டுடுத்து ஏத்தநல்ல பொன்னரஞ்ஞாண்
பொன்னரஞ்ஞாண் துடரரஞ்ஞாண் பொன்னின்முட்டு உடவாளும்
பொன்னாலே உடவாளும் பொன்பதித்த பரிசுகளும்
தங்கத்தாலே நாராயணம் தங்கமணி மாலைகளும்
கைமுடுகு கச்சப்புறம் காலில்வீரத் தண்டைகளும்
கைக்கிணங்க மோதிரமும் கஞ்சியிட்ட கவனிகளும்
பொன்னுரைத்துப் பொட்டுமிட்டு புனுகுநன் றாகப்பூசி
மணிமார்பில் சந்தனமும் வாடையது கமகமென

## ராமவர்மா அனைவரும் சூழப் புறப்படுதல்

வலியதம்பி மன்னவரும் வண்ணப்பரி மீதிலேறிக்
குஞ்சுதம்பி மன்னவரும் கூண்டபரி தன்னிலேறி
இருபேரும் பக்கத்தில் இசவாகச் சேவிக்கவே
வெங்கலமுரசு ஒலித்துவர வெண்டயம் முன்னேவர
வெள்ளிக்குழல் ஊதிவர அரிவையரும் குரவையிட
குடிகாரி ஆடிவர கும்மாளங்கள் போட்டுவர
மஞ்சள்சட்டக் காரர்களும் காக்கிசட்டக் காரர்களும்
வெள்ளச்சட்டக் காரர்களும் விருது பிடித்துவர
ஆனைமேல் குச்சுகெட்டி சுங்கிணங்கும் ஒட்டகையும்
குதிரைப் படைநடுவே குதிரைப் பட்சிநெருங்கி
பல்லாக்கு மேனாவும் பார வெடிகுமுற
பார வெடிகுமுற படைகளெல்லாம் சாயுதல்லோ
கோடி எருதுகளும் கோலான வண்டிகளும்
வண்டிமேல் பீரங்கி வலிய கற்பித்தவரே[2]
வலியவெடி குடுக்கைகளும் கம்பக்கட்டுக் காரர்களும்
வெள்ளித்தடிக் காரர்பட்டாளம விரையச்செல்லும் சேவுகளும்
கொல்லத்து வில்லர்களும் குஞ்சுகட்ட நாயன்மார்களும்
தளவாயும் முக்காலும் பிறதி பிள்ளமாரும்
காரியக் காரர்களும் சேரமன்னர் ஆயன்மாரும்
சென்ற படைவீட்டில் சிறந்த தம்பிமார்களோடே
பள்ளியந் திலாவதிலே பாரமன்னர் எழுந்தருளிக்
குடைமேல் குடைநெகிழ்த்த[3] குதிரைப்படை தான்நெருங்க
வலியதம்பி மன்னவரும் குஞ்சுதம்பி மன்னவரும்
கூண்டமன்ன ரிடதுபிறம் மாமன்கொச்சு மாறப்பிள்ளையும்
மன்னரைச் சேவிக்கவே ராமவர்ம தம்புரானும்.

## ராமவர்மா கடந்து சென்ற இடங்கள்

நாடிதீர்த்தம் ஆடவென்று சிங்கநல்லூர் படைவீடும்
தெருவதுவும் தான்கடந்து பன்னிகோட்டு தெருவுமிட்டு
பத்தரகாளி இலங்கமிட்டு தம்பிமார்கள் இருபேரும்
தக்கபெரும் படையோட அச்சம்பாறை தான்கடந்து
சிறந்ததலக்குள ஏலாவிட்டு வள்ளியாபுரம் கடந்து
வாய்த்த கலுங்கும்விட்டு பெரியகுளத்தின் கரைவழியாய்ப்
பெரும்படைகள் சாயுதல்லோ எழுந்திட்டான் பாறைதன்னில்
எழுதிவச்ச எழுத்தைக்கண்டு பண்டுபூதம் எழுதிவைத்த
பழையயெழுத்து வாசகமும் கண்டுவாசித்து மனதடக்கிக்
கடுகதிருமுகம் களிகூர்ந்து பேய்க்கடுக்காய் மூடுமிட்டு
பெரியமடை முகம்கடந்து கூட்டத்தெங்கு எல்லைவிட்டு
கூண்டபெரும் படையோட மம்மத்து மூலைவிட்டு
பன்னியங் காடும்விட்டு வள்ளியாறு தனைக்கடந்து
வாய்த்தமுடி மன்னவரும் மன்னவரும் மனமகிழ்ந்து
வாலியாம் பாறைகண்டு மன்னவரும் நின்றாரே.

16.138. ஒட்டன் - தூதுவர். 16.139. திலித்தாரே - அழைத்தாரே. 16.141. அணி - நகைகள். 16.142. வீர சங்கிலி - ஒரு வகை ஆபரணம். சரப்பளி - ஒரு வகை ஆபரணம். 16.143. முடுகு - ஒரு வகை கை விரல் மோதிரம். அரை - இடுப்பு. 16.145. பொன்னின் முட்டு உடவாள் - பொன்னாலாகிய கைப்பிடி கொண்ட உடைவாள். 16.147. நாராயணம் - ஒரு வகை பொன்னாபரணம். தங்கமணி மாலைகள் - தங்கத்தாலும் மாணிக்கத்தாலும் இயைந்த மாலைகள். 16.149. இணங்க - பொருத்தமான. கஞ்சியிட்ட கவனிகள் - கஞ்சி முக்கப்பெற்ற முறுக்கேற்றப்பட்ட அங்க வஸ்திரம். 16.150. புனுகு - ஒரு வகை வாசனைப் பொருள். 16.151. வாடை - மணம். 16.152. வண்ணப் பரி - அழகிய குதிரை. 16.153. கூண்ட பரி - பொருந்திய குதிரை. 16.154. இசவாக - இசைவாக; பொருத்தமாக. 16.155. வெங்கல முரசு - வெங்கல உலோகத்தில் ஓசை எழும்பினாற் போல ஒலிக்கும் முரசு வகை. வெண்டயம் - பித்தளையிலான உள்ளீடு வளையம்; உள்ளீட்டினுள் ஓசை கருதி சில உருண்டைகள் இட்டு வைப்பது மரபு; இது அரசரால் மரியாதைக்காவும், சில சலுகைகள் பெற்றதின் அடையாளங்களுக்குமாறாக அளிக்கப்படுதல் மரபு. 16.156. வெள்ளிக் குழல் - வெள்ளியால் செய்யப்பெற்ற ஒரு வகை ஊது குழல். அரிவையர் - எழு வகை பருவ மகளிருள் ஐந்தாம் பிரிவினைச் சார்ந்த மகளிர். 16.157. குடிகாரி - குடிக்கும் தன்மையுடையோர். கும்மாளம் - மிகுதியான மகிழ்ச்சி. 16.158 சட்டக்காரர் - சட்டைக்காரர். 16.159. விருது - கொடி. 16.160. ஆனை - யானை. குச்சு - அம்பாரி. சுங்கிணங்கு - ஒரு வகை இசைக்கருவி. ஒட்டகை - ஒட்டகம். 16.161. குதிரைப்பட்சி - பட்சிபோல் பறக்கும் வேகம் கொண்ட குதிரை. 16.162. மேனா - பல்லக்கு. பார வெடி - கனமான வெடி. குமுற - சப்தத்துடன் ஒலிக்க. 16.163. சாயுதல்லோ - 'நெருக்கத்தின் மிகுதியால் சாய்கிறது' என்ற பொருளில். 16.164. கோலான - அழகான. 16.165. பீரங்கி - வெடியிட்டு வெடிக்கச் செய்வதற்கான ஓர் ஆயுதக் கருவி. 16.165. வலிய கற்பித்தவர் - பெரிய படையின் ஒரு பகுதிக்குத் தலைவர். 16.166. குடுக்கை - உள்ளீடு நீக்கப்பட்டு காய வைக்கப்பட்ட சுரை முதலியவற்றின் கூடு. கம்பக்கட்டுக்காரர் - வாணவேடிக்கை நடத்துபவர். 16.167. விரைய

- வேகமாக. சேவு - சேவகம் புரியும் ஊழியர். 16.168. கொல்லம் - ஓர் ஊர்; இது கேரள மாநிலத்தில் உள்ளது. வில்லர் - வில் ஆயுதத்தைக் கையாளுவதில் வல்லவர்கள். குஞ்சுகட்ட நாயன்மார் - ஒரு வகை அரச விசுவாசிகளின் பெயர். 16.169. தளவாய் - படைத்தளபதி. பிறதி பிள்ளைமார் - முக்கியமான பிரமுகர்கள். 16.170. காரியக்காரர் - சிறு நிர்வாக அதிகாரி. ஆயன்மாரும் - ஆசான்களும். 16.172. பள்ளியந்திலா - அரசர் ஒய்யெடுத்துச் செல்லும் வண்ணம் அமைக்கப் பெற்ற பெரிய சிவிகை. 16.173. நெகிழ்த்த - நிழற்ற; ஒளி வீச. 16.175. இயதுபிறம் - 'இடதுபுறம்' என்பதின் பேச்சுவழக்கு. 16.176. சேவிக்கவே - வணங்கவே. 16.177. நாடி - விரும்பி. 16.178. பன்னிகோட்டு தெரு - அரண்மனை அடுத்து விளங்கும் ஒரு தெருவின் பெயர். 16.179. இலங்கம் - மாளிகை. 16.180. அச்சம்பாறை - ஓர் இடத்தின் பெயர். 16.181. தலக்குளம் - இரணியசிங்கநல்லூரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர்; பராந்தகன் கல்வெட்டு (கி.பி. 906) இவ்வூரை, 'மலைமண்டிலத்து தலக்குளம்' எனக் குறிப்பிடும். வள்ளியாபுரம் - தலக்குளம் அருகே உள்ள சிறிய ஊரின் பெயர் 16.182. கலுங்கு - முச்சந்தி அல்லது நாசந்தியில் சாலையோரமாகக் கட்டப்பட்டிருக்கும் சிறிய திண்டு. பெரியகுளம் - கடியப்பட்டிணம் என்ற ஊரிலுள்ள குளத்தின் பெயர். 16.183. சாயுதல்லா - நகர்ந்து செல்கிறதே. எழுந்திட்டான் பாறை - பெரிய குளத்தின் கரையிலுள்ள பாறையின் பெயர். 16.184, 185. எழுதி . . . வாசகமும் - இவ்வடிகளில், 'பெரியகுளத்தின் பாறையில் பூதம் ஒன்று எதையோ எழுதி வைத்திருப்பதாக நம்பிக்கை' உணர்த்தப்படுகிறது. எழுதிவச்ச - 'எழுதி வைத்த' என்பதின் பேச்சுவழக்கு. பழையயெழுத்து - பண்டைய எழுத்து; பூதம் பண்டே எழுதியுது என்பதை இது உணர்த்தியது. மனதடக்கி - மனதில் பதியவைத்து. 16.186. கடுக - வேகமாகச் செல்ல. திருமுகம் - ராமவர்மா. களிகூர்ந்து - மகிழ்ச்சியால் மிகுந்து. 16.186 - 189. பேய்க் . . காடும்விட்டு - இவ்வடிகளில் வரும் பேய்க்கடுக்காய்முடு, பெரியமடைமுகம், கூட்டத்தெங்கு, மம்மத்து முலை, பன்னியங்காடு ஆகியன மன்னர் ராம்வர்மாவும் அவருடன் சென்றவர்களும் கடந்து சென்ற இடங்களைக் குறிப்பிடும். 16.189. வள்ளியாறு - இரணியசிங்கநல்லூர் ஊரை அடுத்து ஓடுகின்ற ஓர் ஆற்றின் பெயர்.

களத்தில்தங்க, 2 கல்பித்தவரே 3. குடைநெகிள்தத

## Paṭaikaḷiṉ aṇivakuppu

*viṭṭatoru mantirimār ōṭṭaṉ maṉamakiḻntu*
*viraivākac cēṉaipaṭai taṉṉait tiḷittārē*
*tiḷittārē tampimārkaḷ cēṉaiperum paṭaikaḷellām*

## Tampimārkaḷiṉ alaṅkāram

*tampimār iruperum tāṉētaṅka aṇiaṇintār*
*kaikkuvīra caṅkiliyum kaḻuttiltaṅka carappaḷiyum*
*āḷiyiṭṭa muṭukukaḷum araiyilkaccap puṟamilaṅka*
*iṭaiyilvīra vāḷippaṭṭuṭuttu ēttanalla poṉṉaraññāṇ*
*poṉṉaraññāṇ tuṭararaññāṇ poṉṉinmuttu uṭavāḷum*
*poṉṉālē uṭavāḷum poṉpatitta paricukaḷum*
*taṅkattālē nārāyaṇam taṅkamaṇi mālaikaḷum*
*kaimuṭuku kaccappuṟam kāḷilvīrat taṇṭaikaḷum*

*kaikkiṉaṅka mōtiramum kañciyiṭṭa kavaṉikaḷum*
*poṉṉuraittup poṭṭumiṭṭu puṉukuṉaṉ ṟākappūci*
*maṇimārpil cantaṉamum vāṭaiyatu kamakameṉa*

## Rāmavarmā aṉaivarum cūḻap puṟappaṭutal

*valiyatampi maṉṉavarum vaṉṉappari mītilēṟi*
*kuñcutampi maṉṉavarum kūṇṭapari taṉṉilēṟi*
*irupērum pakkattil icavākac cēvikkavē*
*veṅkalamuracu olittuvara veṇṭayam muṉṉēvara*
*veḷḷikkuḻal ūtivara arivaiyarum kuravaiyiṭa*
*kuṭikāri āṭivara kummāḷaṅkaḷ pōṭṭuvara*
*mañcaḷcaṭṭak kārarkaḷum kākkicaṭṭak kārarkaḷum*
*veḷḷaccaṭṭak kārarkaḷum virutu piṭittuvara*
*āṉaimēl kuccukeṭṭi cuṅkiṉaṅkum oṭṭakaiyum*
*kutiraip paṭainaṭuvē kutiraip paṭciṉeruṅki*
*pallākku mēṉāvum pāra veṭikumuṟa*
*pāra veṭikumuṟa paṭaikaḷellām cāyutallō*
*kōṭi erutukaḷum kōlāṉa vaṇṭikaḷum*
*vaṇṭimēl piraṅki valiya kaṟpittavarē*
*valiyaveṭi kuṭukkaikaḷum kampakkaṭṭuk kārarkaḷum*
*veḷḷittaṭic kārarppaṭṭāḷam viraiyaccellum cēvukaḷum*
*kollattu villarkaḷum kuñcukaṭṭa nāyaṉmārkaḷum*
*taḷavāyum mukkālum piṟati piḷḷamārum*
*kāriyak kārarkaḷum cēramaṉṉar āyaṉmārum*
*ceṉṟa paṭaiviṭṭil ciṟanta tampimarkaḷōṭē*
*paḷḷiyan tilāvatilē pāramaṉṉar eḻuntaruḷik*
*kuṭaimēl kuṭainekiḻtta kutiraippaṭai tāṉneruṅka*
*valiyatampi maṉṉavarum kuñcutampi maṉṉavarum*
*kūṇṭamaṉṉa ri ṭatupiram māmaṉkoccu māṟappiḷḷaiyum*
*maṉṉaraic cēvikkavē rāmavarma tampurāṉum*

## Rāmavarmā kaṭantu ceṉṟa iṭaṅkaḷ

*nāṭitīrttam āṭaveṉṟu ciṅkaṇallūr paṭaiviṭum*
*teruvatuvum tāṉkaṭantu paṉṉikōṭṭu teruvumiṭṭu*
*pattarakāḷi ilaṅkamiṭṭu tampimārkaḷ irupērum*
*takkaperum paṭaiyōṭa accampāṟai tāṉkaṭantu*

*cirantatalakkuḷa ēlāviṭṭu vaḷḷiyāpuram kaṭantu*
*vāytta kalaṅkumviṭṭu periyakuḷattin karaivaḷiyāyp*
*perumpaṭaikaḷ cāyutallō eḻuntiṭṭān paraitannil*
*eḻutivacca eḻuttaikkaṇṭu paṇṭupūtam elutivaitta*
*paḻaiyayeḻuttu vācakamum kaṇṭuvācittu manataṭakkik*
*kaṭukatirumukam kaḷikūrntu pēykkaṭukkāy mūṭumiṭṭu*
*periyamaṭai mukamkaṭantu kūṭṭatteṅku ellaiviṭṭu*
*kūṇṭaperum paṭaiyōṭa mammattu mūlaiviṭṭu*
*panniyaṅ kāṭumviṭṭu vaḷḷiyāru tanaikkaṭantu*
*vāyttamuṭi mannavarum mannavarum manamakiḻntu*
*vāliyām pāraikaṇṭu mannavarum ninrārē*

## Royal Procession

The herald moved forward
With the rhythm of the silver
Trumpet and other musical instruments
Swift came there the mounted guards
In colourful uniforms of
Yellow, white and khaki
Led by the decorated elephant
The palanquin started moving
To mark the journey the canon thundered
Crackers and explosives burst
Special messengers from Kollam
And Nair travel-attendants.

## The two brothers Assignment

Assembled there in legion
Koccu Tampi and Valiya Tampi
Uncle Koccu Mārappa Piḷḷai
All the kith and kin
Arrived there to see the king
They worshipped him and got his blessings
Left Ciṅkanallūr palace and streets
Crossed Accampārai, Vaḷḷiāpuram,
Kaluṅku, Periyakuḷam through Talakkuḷam

Read the inscription on the rock
Written by a genie in the past
Memorised each and every word
Passing through places of different nature
And finally reached Vāliyāṉpāṟai.
Happy was the king to spot the estuary
Where the rivers of different origins
Met the sea and merged there.

### ராமவர்மா தீர்த்தமாடுதல்

மனமகிழ்ந்து சந்தோசமாய்த் திருவிளங்கள் பற்ற
எத்தேசம் உள்ளபல ஆறும் நன்றாய்கூடி
இங்கேவந்து பாய்ந்திடும் என்றுதிரு விளங்கள்பற்ற
அங்கேநின்ற மந்திரிமார் காரியக் காரரெல்லாம்
அடிதொழுது மன்னர்முன்னே அறிவித்தா ரப்போது
தாரணியில் உள்ளபல ஆறு நன்றாய்கூடித்
தான்திரண்டு வாலியாம்பாறை தலம்நன்றாய் சேர
இத்தலமும் அதிகதலம் என்றுமன்னர் மனமறிந்து
எல்லையில்லா சேனையோட விதவிதமாய்த் தீர்த்தமாடி
சேனைபெரும் படைகளுடன் மந்திரிமார் சூழ
சிறந்தமுடி மன்னவரும் தீர்த்த மாடினாரே.

16.192. திருவிளங்கள் பற்ற - உள்ளத்தில் நினைக்க. 16.197. தாரணி - உலகம். 16.199 அதிக தலம் - சிறப்பான இடம். 16.200. எல்லையில்லா - அளவிடமுடியாத.

### Rāmavarmā tīrttamāṭutal

*maṉamakiḻntu cantōcamāyt tiruviḷaṅkaḷ paṟṟa*
*ettēcam uḷḷapala āṟum naṉṟāykūṭi*
*iṅkēvantu pāyntiṭum eṉṟutiru viḷaṅkaḷpaṟṟa*
*aṅkēniṉṟa mantirimār kāriyak kārarellām*
*aṭitoḻutu maṉṉarmuṉṉē aṟivittā rappōtu*
*tāraṇiyil uḷḷapala āṟu naṉṟāykūṭi*
*tāṉtiraṇṭu vāliyāmpārai talamnaṉṟāy cēra*
*ittalamum atikatalam eṉṟumaṉṉar maṉamaṟintu*
*ellaiyillā cēṉaiyōṭa vitavitamāyt tīrttamāṭi*
*cēṉaiperum paṭaikaḷuṭaṉ mantirimār cūḻa*
*ciṟantamuṭi maṉṉavarum tīrtta māṭiṉārē*

## Holy-dip and other rituals

All the ministers and all the officials
Accepted, king's selection and approved his decision
The king and his troupe had their holy dip
When he came out of the sea
He did all the rites and rituals
Gave gold and coins liberally

### ராமவர்மா தானம் செய்தல்

தீர்த்தமாடிக் கரையேறித் திருமஞ்சனம் தான்பொழிந்து
திருவரையில் ஏற்றவர்ணப் பரிவட்டம் சாற்றிச்
சாற்றியே திருக்கையினால் பொன்பணங்கள் வாரி
தானதர்ம முதலாக வேண்டுவண்ணம் கொடுத்தார்
வேண்டுவண்ணம் தான்கொடுத்து வீர்முடி மன்னவரே
விரைவுடனே பன்னியம் திலாவதிலே எழுந்தருளி
மன்னவரும் எழுந்தருளி வாறதந்த நேரம்.

### பெருங்கடல் ராமவர்மாவைத் தொடர்தல்

வையகத்தைச் சூழ்ந்திருக்கும் ஆழியது குமுற
ஆனியெனப் பெருங்கடலும் அலையது கோவித்து
அரசாளும் மன்னரைத்தான் பிறகாலே துடர
துடர்ந்துகடல் தான்பேரலே திரும்பிமன்னர் பார்த்துச்
சொல்பெரிய மன்னருட அங்கமெல்லாம் நடுங்க.

### ராமவர்மாவின் செயல்

அங்கமெல்லாம் நடுங்கியவர் திருக்கையை நீட்டி
எல்லோரும் தான்காண சுண்டுவிரல் தறித்தார்.

### ராமவர்மாவின் செயல் கண்ட கடலின்நிலை

சுண்டுவிரல் உதிரமது கண்டு அந்தக்கடலும்
சொல்பிறகே துண்டுபோல அலைஅமைந்து நிற்க
அலைஅமைந்து நிற்கக்கண்டு அனைபேரு மறிய.

### கடல் அமைந்த இடத்திற்குக் 'கடியப்பட்டணம்' எனப்பெயர் சூட்டுதல்

அரசமன்னர் மனமகிழ்ந்து திருவினங்கள் பற்ற
கைவிரலைக் கடிந்ததனால் கடியப் பட்டிணமென்று

கைக்கடியப் பட்டணந்தான் என்றுபெயர் கொடுத்தார்
பெயர்கொடுக்க மந்திரிமார் அனைபேரும் மகிழ்ந்து
மன்னவரும் அப்போது மதயானை தனைநோக்கி
பெரும்படையும் மன்னவரும் எழுந்தருளி னாரே. 225

16.203. திருமஞ்சனம் - மேலான தீர்த்தம். 16.208. பன்னியந்திலா - சிவிகை. 16.209. வாற - 'வருகிற' என்பதின் பேச்சுவழக்கு. 16.210. ஆழி - கடல். குமுற - பேரிரைச்சலுடன் கொந்தளிக்க. 16.211. ஆனி - கேடு. 16.212. பிறகாலே துடர - பின்புறம் தொடர; 'துடர' பேச்சு வழக்கு. 16.213. துடர்ந்து - 'தொடர்ந்து' என்பதின் பேச்சு வழக்கு. பேரலே - பேருவதை. 16.214. அங்கம் - உடம்பு 16.216. தறித்தார் - வெட்டினார். 16 218. துண்டு - கைவிரல் துண்டு. அமைந்து - ஆரவாரமற்று அமைதியாக. 16.219. அனைபேரும் - அனைவரும். 16.220. திருவினங்கள் பற்ற - அரசரின் கூட்டத்தார் தொடர. 16 221. கைவிரலைக் கடிந்ததனால் - மகாராஜா, கைவிரலைத் துண்டித்த இடமாகையினால். கடியப்பட்டணம் - இராமவர்மா தன் கைவிரலைத் துண்டித்தமையால் இதற்கு கைக்கடியப் பட்டினம் என்ற பெயரும் உண்டு என்பது மரபுவழிச் செய்தி; இவ்வூர் கல்குளம் வட்டம் முட்டம் பஞ்சாயத்தில் உள்ளது; திருநயினார்குறிச்சி கல்வெட்டு (கி.பி. 1257) ஒன்று இவ்வூரை 'இராஜ ராஜ தென்னாட்டு குறுநாட்டு கைக்கடியப்பட்டிணம்' என்று கூறும்; பிறதொரு கல்வெட்டு (கி.பி 1139) 'கடியப்பட்டிணம்' என்று குறிப்பிடும். ஆகவே, ராமவர்மா தொடர்பான கதை இவ்வூரோடு இணைத்துப் பின்னர் புனையப் பட்டிருக்க வேண்டும்.

## Rāmavarmā tāṉam ceytal

*tīttamāṭik karaiyēṟit tirumañcaṉam tāṉpoḻintu*
*tiruvaraiyil ēṟṟavarṇap parivaṭṭam cāṟṟic*
*cāṟṟiyē tirukkaiyiṉāl poṉpaṇaṅkaḷ vāri*
*tāṉatarma mutalāka vēṇṭuvaṉṉam koṭuttār*
*vēṇṭuvaṉṉam tāṉkoṭuttu vīramuṭi maṉṉavarē*
*viraivuṭaṉē paṉṉiyam tilāvatilē eḻuntaruḷi*
*maṉṉavarum eḻuntaruḷi vāṟātanta nēram*

## Peruṅkaṭal rāmavarmāvait toṭartal

*vaiyakattaic cūḻntirukkum āḻiyatu kumuṟa*
*āṉiyeṉap peruṅkaṭalum alaiyatu kōvittu*
*aracāḷum maṉṉaraittāṉ piṟakālē tuṭara*
*tuṭarntukaṭal tāṉpēralē tirumpimaṉṉar pārttuc*
*colperiya maṉṉaruṭa aṅkamellām naṭuṅka*

## Rāmavarmāviṉ ceyal

*aṅkamellām naṭuṅkiyavar tirukkaiyai nīṭṭi*
*ellōrum tāṉkāṇa cuṇṭuviral taṟittār*

### Rāmavarmāvin ceyal kanta katalin nilai

*cuntuviral utiramatu kantu antakkatalum*
*colpirakē tuntupōla alaiamaintu nirka*
*alaiamaintu nirkakkantu anaipēru mariya*

### Katal amainta itattirkuk katiyappattanam enappeyar cūttutal

*aracamannar manamakilntu tiruvilankal parra*
*kaiviralaik katintatanāl katiyap pattinamenru*
*kaikkatiyap pattanantān enrupeyar kotuttār*
*peyarkotukka mantirimār anaipērum makilntu*
*mannavarum appōtu matayānai tanainōkki*
*perumpataiyum mannavarum eluntaruli nārē*

The moment he started his journey
He was followed closely by the sea
Shuddered and shocked the king and his company,
The ebb and flow, the rise and fall
Never ceased but tried to touch his feet
The king thought for a while
Raised his finger and cut it
The blood that came from his finger
Perhaps shocked the sea
Now it was calm, controlled and went back.

### King's power over the sea

The king was happy to note its retreat
As he cut his finger there
The place was named Katiyapattinam
Followed by his ministers and officials
The king started his return-journey.

### ராமவர்மா சிங்கநல்லூரர் படைவீடு சேர்தல்

ஆனைகழுத்தில் ராசமன்னர் குடைபோல் குடைநிகழ
கோடிமார்கள் இருபேரும் தானுமவர் பக்கத்திலே
கைகடிக பட்டணமும் கடுகமன்னர் தான்கடந்து
பள்ளியங் காடும்விட்டு பம்மத்து முலைவிட்டு

பெரியகுளத்து ஏலாவிட்டு பேய்க்கடுக்கா மூடுமிட்டு
எழுந்திட்டாம் பாறைதன்னில் எழுதிவைத்த எழுத்தைக்கண்டு
கரைவழியாய்த் தான்நடந்து கலுங்கு முகமும்விட்டு
வள்ளியாபுரம் கடந்து வாய்த்ததலக் குளமும்விட்டு
பன்னிகோட்டு தெருவுமிட்டு பத்திரகாளி இலங்கமிட்டு
சிங்கநல்லூர் படைவீட்டில் தெருவதிலே செல்லும்நேரம்
மன்னவரும் எழுந்தருளி வாய்த்தாரங் களிடுவாராம்.

## முத்தாரம்மன் ராமவர்மாவிற்கு பெரியம்மை நோயைக் கொடுத்தல்

வாய்த்தார முழக்கமதில்[1] மங்கைநல்லாள் உலகளந்தாள்
சிறந்தமுப்பு ராதியுடன் ஏழுசாளியல்[2] வித்துங்கொண்டு
ஏந்திழையாள்[3] உலகளந்தாள் வையகத்தை நடுயிடத்தில்
வாரிவித்தை தான்விதைத்துத் தேசமதில் தூற்றிக்
கைலையில் பெற்றவரம் கண்டுசோதிக்க எண்ணி
தேரேறி வாறநேரம் வாறவந்த நேரமதில்
மன்னர்திரு முகத்தைக்கண்டார் திருமுகத்தைக் கண்டபோது
தேன்மொழியாள் உலகளந்தாள் வகைவகையாய் வித்தைவாரி
பாராளும் மன்னன்மேனியில் வாரிவித்தை விதைத்திடவே.

## மன்னருக்குக் காய்ச்சல் ஏற்படுதல்

மன்னவர்க்கு ஆரத்தியம் ஆரத்தியம் கண்டபோது
அரசமுடி மன்னவரும் திருமேனி தான்சடைந்து
திருக்காய்ச்சல் அடித்திடுமாம் மன்னவரும் எழுந்தருளி
பள்ளியறை தனில்புகுந்து பள்ளிகொள்ளும் நேரமதில்
திருமேனி தான்சடைந்து திருக்காய்ச்சல் அடித்திடுமாம்.

## மன்னர் உடம்பில் காணப்படும் பெரியம்மை நோயின் கடுமை

காய்ச்சலடித்த மறுநாளில் காணுதல்லோ பலவகையாய்
அனல்வாரி மணல்வாரி அரித்துவாரி தூத்துவாரி
உதிரமண்டலம் படர்தாமரை உள்ளெலும்பை உலுக்கிவிடும்
கல்லுருவி கரிஞ்சம்பட்டை கடுங்கோபம் கொண்டவித்து
பதினெட்டில் கொல்லும்வித்து பத்தொன்பதில் கொல்லும்வித்து
இப்படியே வித்தினங்கள் இசவாகக் கண்டபோது
அன்னம்தண்ணீர் குடியாமல் அமுதேதும் புசியாமல்
பஞ்சுமெத்தையில் துயின்றமன்னன் பருமணலில் பள்ளிகொள்ள

தம்பிமாரும் தங்கையரும் தாயார்கிட்டிணத் தாளம்மையாரும்
மாமன்கொச்சு மாப்பிள்ளையுடன் மனங்கலங்கி அழுதிடுவார். 260

16.226. ஆனை - 'யானை' என்பதின் பேச்சு வழக்கு. 16.227. கோடிமார்கள் - இளமையானவர்கள்; தம்பிமார்களைக் குறித்தது. 16.228. கடுக - விரைவாக. 16.229 - 234. பள்ளியங்காடு, பம்மத்துமூலை, பெரியகுளத்து ஏலா, பேய்க்கடுக்காமூடு, எழுந்திட்டாம் பாறை, கலுங்குமுகம், வள்ளியாபுரம், தலக்குளம், பன்னிகோட்டுதெரு, பத்திரகாளி இலங்கம் - மேலே கூறப்பட்ட ஊர்கள் ராமவர்மா வாலியாம்பாறையில் தீர்த்தமாடி தன் அரண்மனைக்குப் பரவாரங்களுடன் திரும்பும்பொழுது அவர் கடந்து வந்த இடங்களாகும். 16.236. வாய்த்தாரம் - ஆரவாரம். 16.237,238. மங்கை நல்லாள், உலகளந்தாள், முப்புராதி - இப்பெயர்கள் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் மக்களால் வணங்கப்படுகின்ற நாட்டார் பெண் தெய்வமான முத்தாரம்மனைக் குறித்தது. 16.238. சாளியல் - ஒரு முகத்தலளவைப் பெயர். வித்து - வெப்பு நோயை உருவாக்கும் வித்து. 16.239 ஏந்திழையாள் - முத்தாரம்மனைக் குறித்தது. வையகம் - உலகம். 16.241. கைலையில் . எண்ணி - 'கயிலாசத்தில் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பெரிய முத்து, சின்ன முத்து ஆகிய இரு வகை வெப்பு நோய்களை உருவாக்கும் முத்துக்களைப் பெற்று, அதைச் சோதிக்க எண்ணி' என்ற பொருளை இத்தொடர் தந்தது. 16.242. வார நேரம் - 'வருகிற நேரம்' என்பதின் பேச்சு வழக்கு. 16.246. ஆரத்தியம் - பெரியம்மை நோய். 16.247. சடைந்து - வருந்தி. 16.248. திருக்காய்ச்சல் - 'அம்மை நோய்' வந்ததமையால் ஏற்பட்ட தெய்வீகக் காய்ச்சல். 16.251. காணுதல்லோ - 'காணுகின்றதே' என்பதின் வட்டார வழக்குச் சொல். 16.252-254. அனல்வாரி . . . . கரிஞ்சம்பட்டை - பெரியம்மை நோய் வகைகள். கடுங்கோபம் கொண்டவித்து - கடுமையான சினத்துடன் அம்மை நோயினை உடலில் இறைக்கும் முத்து. 16.255. பதினெட்டில் கொல்லும் வித்து - நோய் கண்ட பதினெட்டாம் நாள் ஆளைக் கொன்று விடும் அம்மை முத்து. பததொன்பதில் கொல்லும் வித்து - அம்மை நோய் கண்ட பத்தொன்பதாம் நாள் கொன்றுவிடும் வித்து 16.256. இசவாக - 'இசைவாக' என்பதின் பேச்சு வழக்கு; பொருத்தமாக. 16.257. குடியாமல் - குடிக்க முடியாமல் அமுது - உணவு 16 258. பருமணலில் பள்ளி கொள்ள - உடலை உறுத்தும் மணலின் மேல துயில; அம்மைநோய் கண்டவர் பாய், படுக்கை பயன் படுத்தக்கூடாது என்னும் வழக்கத்தை இது குறித்தது.

சு.சொ : 1 முளக்கமதில 2 ஏஞசாளியல் 3 ஏந்திழையாள்

## Rāmavarmā ciṅkanallūr paṭaiviṭu cērtal

*āṉaikaḻuttil rācamaṉṉar kuṭaipōl kuṭainikaḻa*
*kōṭimārkaḷ irupērum tāṉumavar pakkattilē*
*kaikaṭika paṭṭaṇamum kaṭukamaṉṉar tāṉkaṭantu*
*paḷḷiyaṅ kāṭumviṭṭu pammattu mūlaiviṭṭu*
*periyakuḷattu ēlāviṭṭu pēykkaṭukkā mūṭumiṭṭu*
*eḻuntiṭṭām pāṟaitaṉṉil eḻutivaitta eḻuttaikkaṇṭu*
*karaivaḷiyāyt tāṉnaṭantu kaluṅku mukamumviṭṭu*
*vaḷḷiyāpuram kaṭantu vāyttatalak kuḷamumviṭṭu*
*paṉṉikōṭṭu teruvumiṭṭu pattirakāḷi ilaṅkamiṭṭu*
*ciṅkanallūr paṭaiviṭṭil teravatilē cellumnēram*
*maṉṉavarum eḻuntaruḷi vāyttāraṅ kaḷituvārām*

### Muttāramman rāmavarmāvirku periyammai nōyaik koṭuttal

*vāyttāra muḷakkamatil mankainallāḷ ulakaḷantāḷ*
*cirantamuppu rātiyuṭan ēḻucāliyal vittuṅkoṇṭu*
*ēntiḻaiyāḷ ulakaḷantāḷ vaiyakattai naṭuyiṭattil*
*vārivittai tāṉvitaittut tēcamatil tūrrik*
*kailaiyil peṟṟavaram kaṇṭucōtikka eṇṇi*
*tērēri vāranēram vāravanta nēramatil*
*maṉṉartiru mukattaikkaṇṭār tirumukattaik kaṇṭapōtu*
*tēṉmoḻiyāḷ ulakaḷantāḷ vakaivakaiyāy vittaivāri*
*pārāḷum maṉṉaṉmēṉiyil vārivittai viṭaittiṭavē*

### Maṉṉarukkuk kāyccal ēṟpaṭutal

*maṉṉavarkku ārattiyam ārattiyam kaṇṭapōtu*
*aracamuṭi maṉṉavarum tirumēṉi tāṉcaṭaintu*
*tirukkāccal aṭittiṭumām maṉṉavarum eḻuntaruḷi*
*paḷḷiyarai taṉilpukuntu paḷḷikoḷḷum nēramatil*
*tirumēṉi tāṉcaṭaintu tirukkāyccal aṭittiṭumām*

### Maṉṉar uṭampil kāṇappaṭum periyammai nōyiṉ kaṭumai

*kāyccalaṭitta maṟunāḷil kāṇutallō palavakaiyāy*
*aṉalvāri maṉalvāri arittuvāri tūttuvāri*
*utiramaṇṭalam paṭartāmarai uḷḷelumpai ulukkiviṭum*
*kalluruvi kariñcampaṭṭai kāṭuṅkōpam koṇṭavittu*
*patiṉeṭṭil kollumvittu pattoṉpatil kollumvittu*
*ippaṭiyē vittiṉaṅkaḷ icavākak kaṇṭapōtu*
*aṉṉamtaṇṇīr kuṭiyāmal amutētum puciyāmal*
*pañcumettaiyil tuyiṉṟamaṉṉaṉ parumaṇalil paḷḷikoḷḷa*
*tampimārum taṅkaiyarum tāyārkiṭṭiṉat tāḷammaiyārum*
*māmaṉkoccu māppiḷḷaiyuṭaṉ maṉaṅkalaṅki aḻutiṭuvār*

Passing through several places
Paḷḷiyaṅkāṭu, Periyakuḷam, Vaḷḷiyāpuram
To name a few places
He reached his palace at Ciṅkanallūr.
There was a temple

To the deity who ruled the world she had a boon from Himalaya.
To test the effect of the one

## Visit of Muttārammaṉ Goddess

She went round the street
Filled the air with seeds
Seeds of 'Pearl' that brought the deadly disease
The king was also a victim
Ravaged by the deadly disease
The king became tired and withered
Not able to drink elixir or even water
Not able to sleep on fine mattress
Slept on the floor
Surrounded by his sons and daughter.

## The king's sickness

Kiṭṭinattāḷ and Koccumāraṉ Piḷḷai on either side,
They sobbed and wept, moaned and cried.

## ராமவர்மா மார்த்தாண்டவர்மாவை நாடாள அழைத்தல்

அழுதவரை திருக்கையினால் அமர்த்திபின்னர் கற்பிக்கவே
இன்றைக்கு ஆரத்தியம் இனிபிழைப்ப தில்லையென்று
பின்புலகை அரசாள பெருகிமுடி சூடிவைக்க
ஆற்றங்கரை துருவமாளும் அழகன்வால வஞ்சிமார்த்தாண்டன்
மார்த்தாண்ட மன்னரையும் மாடமதுகூட்டி வரவேண்டும்.

16.261. அமர்த்தி - சமாதானப்படுத்தி 16.262. ஆரத்தியம் - அம்மை நோய் 16.264. ஆற்றங்கரை துருவம் - ஆற்றிங்கல் பகுதி. வால - இளமையான. 16.265. மாடம் அரண்மனை

## Rāmavarmā mārttāṇṭavarmāvai nāṭāḷa aḻaittal

*aḻutavarai tirukkaiyiṉāl amarttipiṉṉar kaṟpikkavē*
*iṉṟaikku ārattiyam iṉipiḻaippa tilaiyeṉṟu*
*piṉpulakai aracāḷa perukimuṭi cūṭivaikka*
*āṟṟaṅkarai turuvamāḷum aḻakaṉvāla vañcimārttāṇṭaṉ*
*mārttāṇṭa maṉṉaraiyum māṭamatukūṭṭi varavēṇṭum*

The dying king raised his hand
Comforted them and consoled them

With words of royal stature
Asked them to invite Vañci Mārtāṇṭaṉ
To allot him the land and kingdom

### மார்த்தாண்டவர்மாவிற்குச் செய்தி அனுப்புதல்

மாடமது கூட்டிவர மந்திரிமார் கற்பிக்கவே[1]
ஆனைபடை குதிரையோட ஆற்றங்கல் துருவத்தில்
ஆற்றங்கல் துருவத்தில் அம்மைத்தம் புரான்முன்பதிலே
சென்றுநின்று அழுதழுது செய்தியெல்லாம் செப்புவாராம்
சென்றபடைவீட்டில் மன்னவர்க்குத் திருமேனி தான்சடைந்து
திருமேனி தான்சடைந்து திருவிளங்கள் பற்றிடவே
வாலவஞ்சி மார்த்தாண்ட மன்னவரைக் கூட்டிவர
அழைக்கவந்தோம் தம்புரானே அரசமன்னர் அனுப்புமென்றார்

**16.266.** கற்பிக்கவே - கூறிடவே. **16.268.** அம்மை தம்புரான் - மார்த்தாண்டனின் தாய்; திருவிதாங்கூர் அரசு மருமக்கள் தாயம் வழி வருவதால் தூதர்கள் முதலில் அரசனின் தாயைச் சந்தித்தனர்.**16.269.** செப்புவாராம் - கூறுவாராம். **16.271.** திருவிளங்கள் பற்றிடவே - திரு உள்ளத்தால் எண்ணிடவே.

சு.சொல் : 1 கல்ப்பிக்கவே

### Mārttāṇṭavarmāviṟkuc ceyti aṉupputal

*māṭamatu kūṭṭivara mantirimār kaṟpikkavē*
*āṉaipaṭai kutiraiyōṭa āṟṟaṅkal turuvattil*
*āṟṟaṅkal turuvattil ammaittam purāṉmuṉpatilē*
*ceṉṟuniṉṟu aḻutaḻutu ceytiyellām ceppuvārām*
*ceṉṟapaṭaivīṭṭil maṉṉavarkkut tirumēṉi tāṉcaṭaintu*
*tirumēṉi tāṉcaṭaintu tiruviḷaṅkaḷ paṟṟiṭavē*
*vālavañci mārttāṇṭa maṉṉavaraik kūṭṭivara*
*aḻaikkavantōm tampurāṉē aracamaṉṉar aṉuppumeṉṟār*

Straight went the messengers
To far off Āṟṟiṅkal town
Submitted before the royal queen
Everything from the start to finish
Told her the wish of the king
To take up the sceptre and throne by her son
Requested her to send Vañci Mārttāṇṭa Varma.

### மார்த்தாண்டவர்மா சிங்கநல்லூர் படைவீடு அடைதல்

அழுதேற்றம் தான்யோசித்து ஆற்றங்கல் துருவமிட்டு
சேனைபெரும் படையோட திருவனந்த புரமதிலே
சிறந்தபல்ப நாபபுரமுயிட்டு காணிக்கையு மிட்டல்லவோ
கனத்தபெரும் படையோட திருவனந்த புரமும்விட்டு
சிறந்தவால வஞ்சிமார்த்தாண்டன் சேனைபடை குதிரையோட
சேனைபடை குதிரையோட சென்றபடைவீடு தனிலேவந்தார்.

16.274. ஏற்றந்தான் யோசித்து - அரச மேன்மையை நினைத்து. துருவம் - பகுதி. 16.276. பல்பநாப புரம் - பத்மநாப சுவாமி இருக்குமிடம். 16 277. கனத்த - பெரிய.

### Mārttāṇṭavarmā ciṅkanallūr paṭaivīṭu aṭaital

*aḻutēṟṟam tāṉyōcittu āṟṟaṅkal turuvamiṭṭu*
*cēṉaiperum paṭaiyōṭa tiruvaṉanta puramatilē*
*cirantapalpa nāpapuramuyiṭṭu kāṇikkaiyu miṭṭallavō*
*kaṉattaperum paṭaiyōṭa tiruvaṉanta puramumviṭṭu*
*cirantavāla vañcimārttāṇṭaṉ cēṉaipaṭai kutiraiyōṭa*
*cēṉaipaṭai kutiraiyōṭa ceṉṟapaṭaivīṭu taṉilēvantār*

### Arrival of Vañci Mārttāṇṭaṉ

The youthful Prince of Āṟṟiṅkal
The nephew of Rāmavarma Tampirāṉ.
On hearing the news about his uncle
Rāmavarma Tampirāṉ, he started from Āṟṟiṅkal
With soldiers riding on horses
The Tampirāṉ passed through Tiruvaṉantapuram.
Made offerings to God
And reached Ciṅkanallūr.

### மார்த்தாண்டவர்மா மன்னரைக் கண்டு துயரடைதல்

வேம்படிவாழ்[1] கோவில்கல்லில் வேந்தர்திரு முன்பில்சென்று
வாலவஞ்சி மார்த்தாண்டர் மன்னரையும் கண்டபோது
மதிமசங்கி அழுதிடுவார் வாலவஞ்சி மார்த்தாண்டர்
திருக்கையினால் தானணைத்து திருவிளங்கள் பற்றுவாராம்.

16 280. வேம்படி வாழ் கோவில்கல் - ராமவர்மா அம்மை நோயால் வருந்தி, படுத்திருக்கும் தம்பிமார்கள் வாழும் அரண்மனையின் பெயர் 16.282. மதி மசங்கி - அறிவு மயங்கி. 16.283. திருவிளங்கள் பற்றுவாராம் - தன் திருவுள்ளத்தில் நினைத்தவற்றைக் கூறுவாராம்.

சு.சொல் : வேம்படிவாள்

### Mārttāṇṭavarmā mannaraik kaṇṭu tuyaraṭaital

*vēmpaṭivāḷ kōvilkalluḷ vēntartiru munpilcenru*
*vālavañci mārttāṇṭar mannaraiyum kaṇṭapōtu*
*matimacaṅki aḷutiṭuvār vālavañci mārttāṇṭar*
*tirukkaiyināl tānaṇaittu tiruviḷaṅkaḷ parruvārām*

Looked at the king and Uncle
Broken and fell before the king
The king embraced him
And said these words:

### மார்த்தாண்டவர்மாவிடம் நாட்டை ஒப்படைக்கும் மன்னரின் உபதேசங்கள்

நான்பிழைப்ப[1] தில்லையினி நடக்கும் கருமங்களும்
பழுதுகேடு[2] வாராமல் பாருலகை ஆளவேண்டும்
தங்கையாக்கும் தாயார்க்கும் தம்பிமார் இருபேருக்கும்
இந்நாட்டில் ஒருவரிலை என்னுட மருமகனே
இரணியல்வாழ் கோவில்கல்லும் இளம்முறையும் முடக்காதே
குடியடிமை முடக்காதே கொடும்பாதகம் செய்யாதே
சுயிந்திரத்து எல்லைகணக்கும் படித்தரமும் முடக்காதே
நானிருந்து பொறுத்ததுபோல் நீயிருந்து பொறுக்கவேணும்
கிழக்கிருந்து வந்தபேர்கள் குதிரைராணுவ உடல்வாறார்
என்றுசொல்லி ராமவர்மா ஏற்றவால வஞ்சிமன்னருடன்
தம்பிமார் இருபேரையும் தான்பிடித்துத் திருக்கையினால்
வாலவஞ்சி மார்த்தாண்டர் மன்னருட கைகொடுத்து
செங்கோலும் முதத்திரையும் திருமுடியும் தான்கொடுத்துத்
திருக்கையினால் தான்கொடுக்கத் திருவயது குறைந்திடுமாம்.

**16.284.** கருமங்களும் - செயல்களும். **16.285** பழுது கேடு - குற்றங்குறைகள். **16.287.** ஒருவரிலை - 'துணைக்கு, பாதுகாப்பிற்கு ஒருவருமில்லை' என்ற பொருளில் **16.289.** குடியடிமை - அடிமை முறை, திருவிதாங்கூரில் அடிமைச் சந்தைகள் அக்காலத்தில் இருந்தன. **16 290.** சுயிந்திரம் - சுசீந்திரம் எல்லை கணக்கு - சொத்துக் கணக்கு. படித்தரம் - கோயில் நிபந்தங்கள். **16.292.** கிழக்கிருந்து வந்த பேர்கள் - கிழக்கு திசையாம் பாண்டிய நாட்டிலிருந்து வந்தவர்கள், நாயக்கர்கள்; இவர்கள் இவ்விதம் படையெடுத்து வருவதை முதலியார் ஓலைச்சுவடிகளும உறுதிப்படுத்துகின்றன வாறார் - 'வருகிறார்' என்பதின் பேச்சு வழக்கு. **16.295.** மன்னருட - 'மன்னருடைய' என்பதின் பேச்சு வழக்கு **16.296** முத்திரை - ராஜ முத்திரை மோதிரம் திருமுடி - கிரீடம் **16.297.** திருவயது - மேன்மையான வாழ்க்கை. குறைந்திடுமாம் - முடிந்திடுமாம்; அமங்கலச் சொல்லை மங்கலமாகக் கூறப்பட்டது

சு சொ : 1 நான்பிழைப்ப 2. பழுதுகேடு

## Mārttāṇṭavarmāviṭam nāṭṭai oppaṭaikkum maṉṉariṉ upatēcaṅkaḷ

*nāṉpiḻaippa tillaiyiṉi naṭakkum karumaṅkaḷum*
*paḻutukēṭu vārāmal pārulakai āḷavēṇṭum*
*taṅkaiyarkkum tāyārkkum tampimār iruperukkum*
*innāṭṭil oruvarilai eṉṉuṭa marumakaṉē*
*iraṇiyalvāḷ kōvilkallum iḷammuraiyum muṭakkātē*
*kuṭiyaṭimai muṭakkātē koṭumpātakam ceyyātē*
*cuyintirattu ellaikaṇakkum paṭittaramum muṭakkātē*
*nāṉiruntu poṟuttatupōl nīyiruntu poṟukkavēṇum*
*kiḻakkiruntu vantapērkaḷ kutiraiirāṇuva uṭaṉvārār*
*eṉṟucolli rāmvarmā ēṟravāla vañcimaṉṉaruṭaṉ*
*tampimār iruperaiyum tāṉpiṭittut tirukkaiyiṉāl*
*vālavañci mārttāṇṭar maṉṉaruṭa kaikoṭuttu*
*ceṅkōlum muttiraiyum tirumuṭiyum tāṉkoṭuttut*
*tirukkaiyiṉāl tāṉkoṭukkak tiruvayatu kuṟaintiṭumām*

"I won't recover from my illness.
Oh! my nephew!
Take charge of the family
And do the needful for my last journey.
Look after your aunt and our children
There is no one to raise my sons and daughter.
Take the kingdom and govern the country
Look after the household Gods
At Iraṇiyal and other places
Do the rites at Cucīntiram
Be tolerant with the citizens
Be vigilant with the people from the east"
Took the hands of his sons
And gave it to his nephew
Gave the sceptre and crown to him
Closed his eyes to go to Vaikuṇṭam.

### மன்னர் மரணமும் மார்த்தாண்டவர்மா செய்யும் சடங்குகளும்

திருவயது குறைந்திடவே வைகுண்டம் சேருவாராம்
திருவயது குறைந்திடவே திருநாடு நீங்கிடவே

திருநாடு நீங்கிடவே சிறந்தநல்ல கடைதுறையும்
கடைதுறையும் மணியங்களும் காவலர்க்குத் திட்டமுடன்
சந்தனமரங் கள்வெட்டி தானடக்கம் செய்தபோது
கணக்கினுடன் ஏழுநாளில் கடைதுறையும் தானடைத்துப்
பதினாறும் நாற்பத்தொன்றும் பாவினையாய் தானடத்தி
மக்கள் நடத்தும்முறை மக்களுமே தான்நடத்தி
மருமகன் நடத்தும்முறை மருமகனும் தான்நடத்தி
நித்தவெலி நடத்துமுறை நிறைவேற்றி மன்னவர்க்கு
கண்டுவெலி நடத்தி ஆண்டுகூட்டி மன்னவர்க்கு.

16.299 திருநாடு நீங்கிடவே - மன்னர் இறந்து நாட்டை விட்டு நீங்கிடவே. 16.300. கடைதுறை - கடைசி பிரிவு மக்கள். 16.301. மணியம் - அரசு நிர்வாக வேலைசெய்யும் பிரிவினுள் ஒரு கூட்டத்தார். காவலர் - அரசர். 16.303 கடைதுறை - கடைகள் மற்றும் வியாபார தலங்களையும் இவ்விடத்தில் குறித்தது 16.304. பதினாறு, நாற்பத்தொன்று - இறந்தவர்களுக்கு, அவர்கள் இறந்த பதினாறாம் நாளும் நாற்பத்தொன்றாம் நாளும் செய்யும் சடங்கு வகைகள். பாவினை - பாவனை; சிறப்பு. 16.305. மக்கள் - தம்பிமார்கள் மற்றும் அவர்கள் தங்கை கொச்சு மாடம்மையைக் குறித்தது 16.306. மருமகள் - மார்த்தாண்டவர்மாவைக் குறித்தது. 16.307. நித்தவெலி - தினப்பலி; நித்தியத்துவம் பெறுவதற்கான பலி எனினும் பொருந்தும். 16.308. கண்டுவெலி - கண்டபலி; கர்ம சாந்திக்கான பலி. ஆண்டு கூட்டி -ராமவர்மா இறந்து ஓர் ஆண்டு கழிய.

## Mannar maraṇamum mārttāṇṭavarmā ceyyum caṭaṅkukaḷum

*tiruvayatu kuraintiṭavē vaikuṇṭam cēruvārām*
*tiruvayatu kuraintiṭavē tirunāṭu nīṅkiṭavē*
*tirunāṭu nīṅkiṭavē cirantanalla kaṭaituṟaiyum*
*kaṭaituṟaiyum maṇiyaṅkaḷum kāvalarkkut tiṭṭamuṭaṉ*
*cantaṉamaraṅ kaḷveṭṭi tāṉaṭakkam ceytapōtu*
*kaṇakkiṉuṭaṉ ēḻunāḷil kaṭaituṟaiyum tāṉaṭaittup*
*patiṉāṟum nāṟpattoṉṟum pāviṉaiyāy tāṉaṭatti*
*makkaḷ naṭattummuṟai makkaḷumē tāṉnaṭatti*
*marumakaṉ naṭattummuṟai marumakaṉum tāṉnaṭatti*
*nittaveli naṭattumuṟai niṟaivēṟṟi maṉṉavarkku*
*kaṇṭuveli naṭatti āṇṭukūṭṭi maṉṉavarkku*

## Death of the King

Mārttāṇṭa Varmā took complete charge
Made elaborate arrangements for the funeral
Cut the Sandal wood for the pyre
Did all rites and ceremonies

Rightfully done by the sons and the nephew
All activities stopped for seven days
Celebrated the Seventh and the Sixteenth day
Yet one more on the forty first
The new king followed the path of the old king.

### மார்த்தாண்டவர்மாவின் ஆட்சிச் சிறப்பு

பின்புலகை ஆளவந்த பேருலகில் மன்னவரும்
நன்னூலின் படியாக வையகத்தைத் தானடக்கி
ஆறிலொரு கடமைதாண்டி அசையாத மணியும்கெட்டி
செங்கோலும் முத்திரையும் தேசமதில் புகழ்ந்திருந்து
என்றும் குறைவராமல் உலகமதை ஆண்டிருந்தாரே.

16.310. நன்னூல் - தர்ம நூல். வையகம் - உலகம். கடமை - வரி.

### Mārttāṇṭavarmāviṉ āṭcic ciṟappu

*piṉpulakai āḷavanta pērulakil maṉṉavarum*
*naṉṉūliṉ paṭiyāka vaiyakattait tāṉaṭakki*
*āṟiloru kaṭamaitaṇṭi acaiyāta maṇiyumkeṭṭi*
*ceṅkōlum muttiraiyum tēcamatil pukaḻntiruntu*
*eṉṟum kuṟaivarāmal ulakamatai āṇṭiruntārē*

Collected one sixth of the yield as tax
Saw the royal bell unmoved
Kept the sceptre and seal at its height,
Flanked by the two Brothers on both sides
The king ruled the country far and wide.

### மன்னருக்குத் தம்பிமார்கள் துணையிருத்தல்

அரசாளும் நாளதிலே அழகன்தம்பி மக்களுந்தான்
வலியதம்பி குஞ்சுதம்பி வாய்த்ததம்பிமார் பக்கத்தில்
திருமேனி காவலாகச் சிறந்ததம்பிமார் சேவிக்கவே
மன்னவர் வலதுபுறம் வலியதம்பி முன்சேவிக்க
சேவிக்க இடதுபுறம் குஞ்சுதம்பி பின்சேவிக்கவே
சேவிக்கவே மன்னவரும் சிந்தைமகிழ்ந்து சந்தோசமாய்ச்
சென்றபடை வீடதிலும் சிறந்தகேரள புரமதிலும்

பல்பநாப புரமதிலும் பாறசாலை தன்னதிலும்
மன்னவரும் எழுந்தருளி வையகத்தை யாண்டிருந்தார்.

### மன்னர் நாடு சுற்றிப் பார்த்தல்

அம்மாவன் பாராண்ட அழகுகோவில் கல்சுற்றிநோக்கி
திருக்கண்ணிலால் தானோக்கிச் சிறந்தமுடி மன்னரெழுந்தருளி
சிங்கநல்லூர் தெருவும்விட்டு சிறந்தகோவில் கல்தானும்விட்டு 325
இரணியல் ஏலாவிட்டு ஏத்தஆனைக் கழுத்திலேமன்னவரும்
மன்னவரும் எழுந்தருளி மதயானை கழுத்திலேவரும்நேரம்.

**16.316.** திருமேனி - அரசர். காவலாக - பாதுகாப்பாக சேவிக்கவே - பணிவிடைகள் செய்யவே. **16.319.** சிந்தை - மனம். **16.323.** அம்மாவன் - 'மாமன்' என்னும் பொருள் தரும் வட்டார வழக்குச் சொல். **16 326.** ஏத்த - 'ஏற்ற' என்பதின் பேச்சு வழக்கு. ஆனை கழுத்திலே - யானையின் முதுகிலே.

### Manṉarukkut tampimārkaḷ tuṇaiyiruttal

*aracāḷum nāḷatilē aḻakaṉtampi makkaḷuntāṉ*
*valiyatampi kuñcutampi vāyttatampimār pakkattil*
*tirumēṉi kāvalākac cirantatampimār cēvikkavē*
*maṉṉavar valatupuṟam valiyatampi muṉcēvikka*
*cēvikka iṭatupuṟam kuñcutampi piṉcevikkavē*
*cēvikkavē maṉṉavarum cintaimakiḻntu cantōcamāyc*
*ceṉṟapaṭai viṭatilum cirantakēraḷa puramatilum*
*palpanāpa puramatilum pāṟacālai taṉṉatilum*
*maṉṉavarum eḻuntaruḷi vaiyakattai yāṇṭiruntār*

### Maṉṉar nāṭu cuṟṟip pārttal

*ammāvaṉ pārāṇṭa aḻakukōvil kalcuṟṟi nōkki*
*tirukkaṇṇilāl tāṉōkkic cirantamuṭi maṉṉareḻuntaruḷi*
*ciṅkanallūr teruvumviṭṭu cirantakōvil kaltāṉumviṭṭu*
*iraṇiyal ēlāviṭṭu ēttaāṉaik kaḻuttilēmaṉṉavarum*
*maṉṉavarum eḻuntaruḷi matayāṉai kaḻuttilēvarumnēram*

### The new king's survey of the Land and People

Stayed for sometime at Ciṅkanallūr
Left for Kēraḷapuram another time
Had a brief stay at Pāṟacālai and Patmanāpapuram.

Thus he went round the country
Praised immensely by all the public
The land his uncle had ruled
Was spread far and wide
The nephew wanted to survey the land
To see all the beautiful places.
Leaving Ciṅkanallūr palace
He reached Iraṇiyal palace
Sitting on the back of the elephant
Surveyed the beauty of the place
To see him off there came the two Brothers
Paid obeisance to him
And wished him a happy journey.

### கொச்சு மாடம்மை நீராடித் திரும்புதல்

வலியதம்பி குஞ்சுதம்பி மன்னர்முன்னே சேவிக்கவே
தங்ககொச்சு மாடம்மைப்பிள்ளை தையநல்லாள் ஆறாட[1]
வட்டக்குடை காரிபக்கத்திலே[2] மங்கையர்க்குச் சாரகுடைபிடிக்க
பொன்னாலே கிண்ணத்தில் போதரவாய் அரப்புங்கொண்டு
வள்ளியது தனிலேவந்து மங்கையர்கள் ஆறாட
ஆறாடி கரையேறி அழகாய்பரிவட்டம் தான்சாத்த
சாத்தியே பரிவட்டம் சவ்வாது புனுகுதானணிந்து
அணிந்துஅவள் மேனியிலே அழகாய்சாம்பராணி தானிலங்க
நடையும் துடியிடையாள் நாணக்குழல் மடவாள்.

16.329. தையநல்லாள் - பெண்களில் சிறந்தவள். 16.330. வட்டக்குடைக்காரி - தாழை ஓலையில் செய்த வட்ட வடிவமான குடையைப் பிடித்துச் செல்பவள். மங்கை - தம்பிமார்களின் தங்கையைக் குறித்தது சாரகுடைப் பிடிக்க - சார்ந்து நின்று குடை பிடிக்க. 16.331. போதரவு - உபசரணை அரப்பு - உடலில் தேய்த்துக் குளிப்பதற்குக் கொண்டு செல்லும் சீயக்காய் போன்ற பொருள்களின் அரைப்பு. 16.332. வள்ளி - வள்ளியாறு. ஆறாட - ஆற்றில் நீராட. 16.333. பரிவட்டம் - பட்டாடை. சாத்த - சார்த்த; உடுத்த. 16.334. சவ்வாது, புனுகு - வாசனைப் பொருள்கள் சிலவற்றின் பெயர். 16.335. இலங்க - பொருந்தித் திகழ. 16.336. நாணக்குழல் - நாணல் போலும் வளையும் கூந்தலாள்.

சு.சொ : 1 ஆராட 2. காறிபக்கத்திலே

### Koccu māṭammai nīrāṭit tirumputal

*valiyatampi kuñcutampi mannarmunnē cēvikkavē*
*taṅkakoccu māṭammaippiḷḷai taiyanallāḷ āṟāṭa*

*vaṭṭakkuṭai kāripakkattilē maṇkaıyarkkuc cārakuṭaipiṭikka*
*poṉṉālē kıṇṇattil pōtaravāy arappumkoṇṭu*
*vaḷḷiyatu taṉılēvantu maṅkaıyarkaḷ āṟāṭa*
*āṟāṭı karaiyēṟı aḻakāy parivaṭṭam tāṉcātta*
*cāttiyē parıvaṭṭam cavvātu puṉukutāṉaṇıntu*
*aṇintuavaḷ mēṉıyılē aḻakāy cāmparāṇ ṉıtāṉilaṅka*
*naṭaıyum tuṭıyiṭaıyāḷ nāṇakkuḻal maṭavāḷ*

On his way the king had a rare sight
There came a damsel
She was Koccu māṭammai
Coming from the pond fresh and fragrant
Followed by beautiful servant-maids
It looked like a little procession of swans
She looked like a fairy's child
She had long hair, light foot
Arresting eyes and sweet looks
The king could not remove his eyes
From the beauty of the fairy's child
He turned towards his minister.

**கொச்சு மாடம்மையைப் பார்த்த மன்னர் மந்திரிகளிடம் வினாவுதல்**

ஆராடியே வரவே ஆனைகழுத்திலே' மன்னவரும்
திருக்கண்ணால் தான்நோக்கி தேன்மொழியாள் கண்டபோது
ஆரடி போறபெண்ணே ஆரெனவே கல்பிக்கவே.

**மந்திரிமார் பதில்**

அறிவித்தார் மந்திரிமார் வலியதம்பி குஞ்சுதம்பி
மன்னவர்களுடன் பிறந்த குஞ்சுதம்பிக்குப் பின்பிறந்த
கொச்சுமணித் தங்கையென்று மந்திரிமார் சொல்லக்கேட்டு.

**மன்னர் அரண்மனைக்குத் திரும்புதல்**

மன்னவரும் மனம்மகிழ்ந்து இரணியல் ஏலாவிட்டு
ஏற்றமிளகு பேட்டைதான்கடந்து தெக்குகோட்டை வாசல்வழி
சிறந்தமுத்தா வெளிதனிலே பல்பநாப புரமதிலே
பாராளும்மன்னர் எழுந்தருளிக் கோவில்கல் தனில்புகுந்து
கூண்டமுடிமன்னர் வீற்றிருந்தார் சடைவுநீக்க வீற்றிருந்தார்.

## மன்னர் மாடம்மை மீது ஆசைப்படல்

வீற்றிருக்கும் நாளதிலே வீரமுடி மன்னவரும்
பள்ளிகொண்ட மன்னவரும் பரபரென எழுந்திருந்து
கொச்சுமணித் தங்கையின்மேல் கொண்டமையல் தன்னாலே
ஆசைமையல் கொண்டல்லவோ அரசமன்னர் கற்பிக்கவே
மறுநா ளுதயத்திலே மந்திரிமார் வந்தபோது.

## மன்னர் தம்பிமாரை அழைத்துவர மந்திரிகளிடம் கூறுதல்

இந்நேரம்[2] தம்பியரை இசல்வாகக் கூட்டிவந்து
கூட்டிவந்து ஒருவார்த்தை குணமுடனே கேட்கவேணும்.

16.337. ஆராடிபேய - நீராடிபேய. ஆனை - 'யானை' என்பதின் பேச்சுவழக்கு. 16.338. தேன் மொழியாள் - தேன் போன்று பேசுபவள்; கொச்சு மாடம்மை. 16.339. ஆரடி - 'யாரடி' என்பதின் பேச்சு வழக்கு. போற - 'போகிற' என்பதின் பேச்சு வழக்கு. ஆர் - 'யார்' என்பதின் பேச்சு வழக்கு. கல்பிக்க - கட்டளையிட. 16. 344. மிளகுபேட்டை - குறுமிளகு வியாபாரம் நடக்கும் ஒரு சந்தை. தெக்கு - 'தெற்கு' என்பதின் பேச்சு வழக்கு. 16.345. முத்தாவெளி - முற்றத்துவெளி. 16.346. கோவில்கல் - அரண்மனை. 16.347. சடைவு - 'களைப்பு' என்பதின் தென் மாவட்ட வட்டார வழக்குச்சொல். 16.349. பரபரென - 'வேகமாக' என்ற பொருளமைதியில் வரும் ஒலிக்குறிப்புச் சொல். 16.350. மையல் - காதல். 16.353. இகல்வாக - இணக்கமாக.

சு சொ : 1 ஆனைகளத்திலே 2. இன்நேரம்

## Koccu māṭammaiyaip pārtta maṉṉar mantirikaḷiṭam viṉāvutal

*ārāṭıyē varavē āṉaikaḻuttilē maṉṉavarum*
*tirukkaṇṇāl tāṉnōkki tēṉmoḻiyāḷ kaṇṭapōtu*
*ārāṭı pōṟapeṇṇē āreṉavē kalpıkkavē*

## Mantirimār patil

*aṟıvittār mantırımār valıyatampı kuñcutampı*
*maṉṉavarkaḷuṭaṉ piṟanta kuñcutampikkup pıṉpiṟanta*
*koccumaṇıt taṅkaiyeṉṟu mantirımār collakkēṭṭu*

## Maṉṉar araṇmaṉaikkut tirumputal

*maṉṉavarum maṉammakiḻntu iraṇiyal ēlāviṭṭu*
*ēṟṟamiḷaku pēṭṭaıtāṉkaṭantu tekkukōṭṭaı vācalvaḻi*
*ciṟantamuttā veḷıtaṉilē palpanāpa puramatılē*
*pārāḷum maṉṉareḻuntaruḷik kōvilkal taṉılpukuntu*
*kūṇṭamuṭimaṉṉar viṟṟiruntār caṭaivuṉikka viṟṟıruntār*

### Maṉṉar māṭammai mītu ācaippaṭal

*vīṟṟirukkum nāḷatilē vīramuṭi maṉṉavarum*
*paḷḷikoṇṭa maṉṉavarum paraparena eḻuntiruntu*
*koccumaṇit taṅkaiyiṉmēl koṇṭamaiyal taṉṉālē*
*ācaimaiyal koṇṭallavō aracamaṉṉar kaṟpikkavē*
*maṟunā ḷutayattilē mantirimār vantapōtu*

### Maṉṉar tampimārai aḻaittuvara mantirikaḷiṭam kūṟutal

*innēram tampiyarai icalvākak kūṭṭivantu*
*kuṭṭivantu oruvārttai kuṇamuṭaṉē kēṭkvēṇum*

### Mārtāṇṭa varmā's meeting with Koccumaṇi

To know who she was
Bowed before the king
The minister and said these words
"She is Koccumaṇi Taṅkacci
Born next to Kuñcu Tampi
The only sister to
Valiya Tampi and Kuñcu Tampi."
Happy was the king to hear these words
Passing through Iraṇiyal
He reached Patmanāpapuram
Stayed there and took rest
He closed his eyes but never slept
He opened his eyes only to see the damsel.

### தூதர்கள் தம்பிமாரைக் கண்டு அழைத்தல்

கூட்டிவர வேணுமென்று கூண்டமன்னர் கற்பிக்கவே
அப்போது பட்டன்மாரும் அதிகவெள்ளித் தடிக்காரரும்
பல்பநாப புரமுமிட்டு பாவினையாய்த் தான்கடந்து
சினப்புலிபோல் வலியதம்பி மதப்புலிபோல் குஞ்சுதம்பி
பிச்சகப்பள்ளி நாயருடன் வட்டக்குட காரருமாய்
பெரிஞ்சவிளை பேய்குறிப்பும் ஏற்றகுட்டி மரைக்காணும்
மாடன்பொன்றை நாயருடன் வீராணிச் சங்குபிள்ளை
குஞ்சுக்காணி நாயருடன் தம்பிமார்க்கு அடப்பமிட்டு
தானவர்கள் நிற்கும்நேரம் தானவர்கள் நிற்கும்நேரம்.

## தூதர்கள் செய்தி கூறுதல்

வலியதம்பி முன்பில்சென்று மன்னவரும் கல்பித்தாரே
இன்று முகங்காட்ட இருபேரும் (நீங்கள்) வரவேணுமென்றார். 365

16.356. பட்டன்மார் - அறிவில் சிறந்தோர். 16.357. பாவினை - பாவனை. 16.359. பிச்சகப்பள்ளி நாயர் - தம்பிமார்களோடு சென்ற ஒருவரின் பெயர். வட்டக்குடைக்காரர் - தாழை ஓலையால் செய்த வட்ட வடிவக் குடையைப் பிடித்துச் செல்லும் பெரியவர் ஒருவர். 16.360 பெரிஞ்சவிளை - கல்குளம் வட்டத்தில் ஆளூர் பஞ்சாயத்திலுள்ள மிகச் சிறிய ஓர் ஊர் பேய்குறிப்பு - பேய்க் குறுப்பு, குறுப்பு என்னும் சாதியைச் சார்ந்த ஒருவரை உணர்த்தியது; இச்சாதியருள்ளும் மக்கள்வழி மருமக்கள் வழி எனும் இரு பிரிவினர் உண்டு. குட்டி மரக்காயன் - ஒருவரின் பெயர். 16.361. மாடன் பொன்னற நாயர் - ஒருவரின் பெயர். வீராணி - கல்குளம் தாலுகாவிலுள்ள ஆளூர் பஞ்சாயத்தை அடுத்த சிறு ஊர்; இவ்வூரிலுள்ள 12-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று இவ்வூர் பெயரை 'விக்கிரம சோழ பாண்டியபுரம்' எனக் குறிப்பிடும். சங்குப் பிள்ளை - ஒருவரின் பெயர். 16.362. குஞ்சுக்காணி நாயர் - ஒருவரின் பெயர், 'குஞ்சுகாணி' என்பது பெரும்பாலும் அவர் இருந்த தோட்டத்தின் பெயராக இருக்கலாம். அடப்பமிட்டு - வெற்றிலை பாக்கு கொடுத்து. 16.363. தானவர் - மன்னவர்; தம்பிமாரைக் குறித்தது. 16.364. முன்பில் - முன்பாக. மன்னவர் - மார்த்தாண்ட வர்மா. கல்பித்தார் - கற்பித்தார்; கட்டளையிட்டார்.

## Tūtarkaḷ tampimāraik kaṇṭu aḻaittal

*kūṭṭivara vēṇumeṉṟu kuntamaṉṉar karpikkavē*
*appōtu paṭṭaṉmārum atikaveḷḷit tatikkārarum*
*palpanāpa puramumiṭṭu pāviṉaiyāyt tāṉkaṭantu*
*ciṉappulipōl valiyatampi matappulipōl kuñcutampi*
*piccakappaḷḷi nāyaruṭaṉ vaṭṭakkuṭa kā[illegible]*
*periñcaviḷai pēykuṟippum ēṟṟakuṭṭi mara[illegible]ṉum*
*māṭaṉpoṉṟai nāyaruṭaṉ vīrāṇic caṅkupiḷḷai*
*kuñcukkāṇi nāyaruṭaṉ tampimārkku aṭappamiṭṭu*
*tāṉavarkaḷ niṟkumnēram tāṉavarkaḷ niṟkumnēram*

## Tūtarkaḷ ceyti kūṟutal

*valiyatampi muṉpilceṉṟu maṉṉavarum kalpittārē*
*iṉṟu mukaṅkāṭṭa irupērum (nīṅkaḷ) varavēṇumeṉṟār*

## A note sent to the Brothers

Gave order to bring the two Brothers
To seek their permission to marry their sister
There went a team to summon the Brothers
They had the stamp of official order
So there went the herald and the messenger.

They left Patmanāpapuram and
Reached Ciṅkanallūr.
When the team saw Valiya Tampi
He was perhaps conducting an enquiry
There were Piccakappaḷḷi Nāyar
Māṭaṉpoṉṟai Nāyar, Kuñcukkāṇi Nāyar
Vīrāṇi Caṅku Piḷḷai and others
Like a ferocious tiger Valiya Tampi spoke
Like a raving tiger Kuñcu Tampi spoke
It was a formal meeting
So the team conveyed the message
After observing all formalities
"You, two, are requested to meet the king today"
Said the messenger standing before the elder brother.

### தம்பிமார்கள் அழகுபடுத்திப் புறப்படுதல்

அப்போது தம்பிமார்கள் அதிசயந்தான் யேதுயென்ன
முகங்காட்ட போகவென்ன மிகுந்ததொரு தம்பிமார்கள்
நீராழி[1] தனிலிறங்கி நீராடிக் கரையேறி
அமுதுண்டு கைவிளக்கி ஆசையுடன் பணிகளிட்டார்
கையில் வீரச்சங்கிலியும் கழுத்தில்வீர சரப்பணியும்
ஆளியிட்ட முடுகுகளும் அரியகல்வைத்த மோதிரமும்
பொன்னாலே நாராயம் பொன்னுறையிட்ட[2] ஓடவாளும்
சரப்பணியும் ஆபரணம் தங்கத்தால் கைகெட்டும
பொன்னாலே கைப்பிரம்பும் திருவாளி மோதிரமும்
வகைவகையாய் எடுத்தணிந்து வாய்த்தபுகழ் தம்பிமார்கள்
தாயாரை அடிதொழுது தானவர்கள் விடைவாங்கிப்
பட்டன்மாரும் தம்பிமாரும் பல்பநாப புரததில்வந்தார்.

**16.368.** நீராழி - ஆறு அல்லது குளததிலுள்ள குளியல் மண்டபம்; இம்மண்டபத்தில் முக்கிய பிரமுகர்கள் மட்டும் குளிக்கலாம் என்கிற நியதி இருந்தது **16.369.** விளக்கி - சுத்தம் செய்து பணி ஆபரணம். **16 370-374** வீரச்சங்கலி, வீரசரப்பணி, முடுகு, மோதிரம், நாராயம், வாள், சரப்பணி, கைப்பிரம்பு, திருவாளி மோதிரம் - தம்பிமார்கள் அணிந்த சில வகையான ஆபரணங்களின் பெயர்கள். **16.372** நாராயம் - அரைஞாண் ஆபர வகை. ஓடவாள் - 'உறைவாள்' என்பதின் பேச்சு வழக்கு. **16.373.** சரப்பணி - 'சரப்பளி' என்னும் ஆபரண வகை

சு.சொ : 1 நீராளி 2 பொன்னுரையிட்ட 3 கைப்பிறம்பும்

## Tampimārkaḷaḻakup paṭuttip puṟappaṭutal

*appōtu tampimārkaḷ aticayantāṉ yētuyeṉṉa*
*mukaṅkāṭṭa pōkaveṉṉa mikuntatoṟu tampimārkaḷ*
*nīrāḻi taṉiliṟaṅki nīrāṭik karaiyēṟi*
*amutuṇṭu kaiviḷakki ācaiyuṭaṉ paṇikaḷiṭṭār*
*kaiyil vīraccaṅkiliyum kaḻuttil vīra carappaḷiyum*
*āḷiyiṭṭa muṭukukaḷum ariyakalvaitta mōtiramum*
*poṉṉālē nārāyam poṉṉuṟaiyiṭṭa oṭavāḷum*
*carappaḷiyum āparaṇam taṅkattāl kaikeṭṭum*
*poṉṉālē kaippirampum tiruvāḷi mōtiramum*
*vakaivakaiyāy eṭuttaṇintu vāyttapukaḻ tampimārkaḷ*
*tāyārai aṭitoḻutu tāṉavarkaḷ viṭaivāṅkip*
*paṭṭaṉmārum tampimārum palpanāpa purattilvantār*

## Journey of the Brothers

They didn't know the reason
They were wonder-struck and, thoughtful,
Straight went to the pond then
Took a quick bath.
Had their meals and
Wore all ornaments, gold and silver
Put the sword in sheath and put on the dress proper
Got the sanction and blessings
From their mother
And went with the messenger to Patmanāpapuram
On reaching the palace.

## தம்பிமார்கள் மன்னரைச் சந்தித்தல்

முத்தவெளி யானதிலே முடிதரித்த ராசமன்னர்
தம்பிமார்கள் இருபேரும் தானேமுகம் காட்டிநின்றார்
சென்றுமுகம் காட்டிநின்ற நேரமதில் மன்னவரும்
திருமனது சந்தோசமாகத் திருக்கண்ணால் நோக்கிப்பார்த்து.

16.378. முத்த வெளி - 'முற்ற வெளி' என்பதின் பேச்சு வழக்கு.

## Tampimārkaḷ maṉṉaraic cantittal

*muttaveḷi yāṉatilē muṭitaritta rācamaṉṉar*
*tampimārkaḷ irupērum tāṉēmukam kaṭṭiniṉṟār*
*ceṉṟumukam kaṭṭiniṉṟa nēramatil maṉṉavarum*
*tirumaṉatu cantōcamākat tirukkaṇṇāl nōkkippārttu*

They met the king in the open courtyard
The king was gay and happy
To receive the two brothers.

## தம்பிமாரிடம் மன்னர் தம் விருப்பம் தெரிவித்தல்

வாரும்வாரும் தம்பிமாரே வார்த்தையொன்று சொல்லக்கேளு
வரிசையுள்ள சிங்கநல்லூர் படைவீட்டில் வந்துதித்த
உங்களோ டுடன்பிறந்த கொச்சுமணித் தங்கையரை
நேசமுடன் பரிவட்டங்கள் கொடுக்கவேணும் கல்பித்தார்
சிங்கநல்லூர் படைவீட்டில் தேசமதை ஆண்டமன்னர்
மன்னர்மக ளல்லவோதான் முறைப்பெண்தான் கொச்சுமணி.

**16.385.** நேசமுடன் - அன்புடன். பரிவட்டம் - திருமணம் செய்வதற்குக் கொடுக்கப்படும் முகூர்த்தப்பட்டுப் புடவை.

## Tampimāriṭam maṉṉar tam viruppam terivittal

*vārumvārum tampimārē vārttaiyoṉṟu collakkēḷu*
*varicaiyuḷḷa ciṅkanallūr paṭaivīṭṭil vantutitta*
*uṅkaḷō ṭuṭaṉpiṟanta koccumaṇit taṅkaiyarai*
*nēcamuṭaṉ parivaṭṭaṅkaḷ koṭukkavēṇum kalpittār*
*ciṅkanallūr paṭaivīṭṭil tēcamatai āṇṭamaṉṉar*
*maṉṉarmaka ḷallavōtāṉ muṟaippeṇṭāṉ koccumaṇi*

"Come and be here my dear ones.
I wish to open my heart to you.
You are from the renowned Ciṅkanallūr Palace
You have a sister, Koccumaṇi
It is my pleasure to marry her.
Moreover I have a claim over her
For, she is my uncle's daughter"
Said the king in clear tones.

## தம்பிமார்களின் மறுப்புரைகள்

பரிவட்டங்கள் தாம்கொடுக்கப் பரிவட்டங்கள் என்றபோது
பதறிநின்று தம்பிமார்கள் பாருலகில் கேட்டதுண்டோ
இல்லமென்றும் துருவமென்றும் இரண்டுவகை உண்டல்லவோ
இணக்கமின்றிக் கற்பித்தீரே இவ்வுலகில் முறைகளுண்டோ
இல்லத்தில் பிறந்தவர்க்குத் துருவத்தில் பெண்கொடுப்பதுண்டோ
என்றுதம்பிமார் அறிவித்தாரே இகல்பெரிய மன்னர்முன்பு.

**16.389** கேட்டதுண்டோ - 'கேட்டது கிடையாது' என்ற பொருளில். **16.390.** இல்லம், துருவம் - இரு சொற்களும் இருவிதமான ஜாதிகளைக் குறித்தன. **16.391.** இணக்கமின்றி - பொருத்தமின்றி **16.393.** இகல் பெரிய - வலிமை மிகுந்த.

## Tampimārkaḷiṉ maṟuppuraikaḷ

*parivaṭṭaṅkaḷ tāmkoṭukkap parivaṭṭaṅkaḷ eṉṟapōtu*
*pataṟiniṉṟu tampimārkaḷ pārulakil kēṭṭatuṇṭō*
*illameṉṟum turuvanmeṉṟum iraṇṭuvakai uṇṭallavō*
*iṇakkamiṉṟik kaṟpittīrē ivvulakil muṟaikaḷuṇṭō*
*illattil piṟantavarkkuk turuvattil peṇkoṭuppatuṇṭō*
*eṉṟutampimār aṟivittārē ikalperiya maṉṉarmuṉpu*

## King's proposal rejected

Shuddered, shocked, frowned and fumed
They struggled hard to speak these words,
"Oh, King! Don't you know
There exists difference between
The two sects - *Illam* and *Turuvam*?
Are you ignorant of it?
We are poles apart.
We know our custom and convention
That denies free exchange of
Brides and Bridegrooms".

## தம்பிமார்களின் நிபந்தனை

நாட்டை ஆளும் மன்னவரே நாங்கள்கூறும் அர்ச்சிதன்னை
திருமனசில் ஆக்கிக்கொண்டு பகரம் சொல்லவேண்டும்
பக்குவமாய்த் தங்கையர்க்குப் பருவட்டங்கள் தாம்கொடுத்தால்

பாவைநல்லார் வயறுதன்னில் பதிவான குஞ்சங்கள்பிறந்தால்
நாட்டுவாழ்க்கை கொடுப்போமென்று திருவிளங்கள் பற்றிடுகில்
நலமான தங்கையர்க்குப்[1] பருவட்டங்கள் கொடுத்திடுவீர்
நாட்டுவாழ்க்கை யென்றபோது ராசமுடி மன்னவரும்
நலமென தம்பியூடே நாடித்திரு விளங்கள்பற்ற.

**16.394.** அர்ச்சி தன்னை - விண்ணப்பத்தை. **16.395.** ஆக்கிக் கொண்டு - புரிந்து கொண்டு. பகரம் - 'பதில்' என்னும் பொருளிலமைந்த வட்டார வழக்குச் சொல். **16.398.** நாட்டு வாழ்க்கை - அரச வாழ்க்கை; அரச பதவி. திருவிளங்கள் - உறுதிமொழிகள். பற்றிடுகில் - கூறமுடியுமானால். **16.400.** ராசமுடி மன்னவர் - முடி தரித்த மன்னவர்; மார்த்தாண்ட வர்மா. **16.401.** நலமென - நல்லது என. ஊடே - இடத்தில். திருவிளங்கள் பற்ற - தன் மேலான மன எண்ணத்தைக் கூற.

சு.சொ : 1. தங்கையற்கு

## Tampimārkaḷiṉ nipantaṉai

*nāṭṭaı āḷūmmaṉṉavarē nāṅkaḷkūṟum arccıtaṉṉaı*
*tırumaṉacil ākkikkoṇṭu pakaram collavēṇṭum*
*pakkuvamāyt taṅkaıyarkkup parivaṭṭaṅkaḷ tāmkoṭuttāl*
*pāvainallār vayaṟutaṉṉil pativāṉa kuñcaṅkaḷ piṟantāl*
*nāṭṭuvāḷkkai koṭuppōmeṉṟu tiruvılaṅkaḷ paṟṟiṭukil*
*nalamāṉa taṅkaiyarkkup parıvaṭṭaṅkaḷ koṭuttiṭuvīr*
*nāṭṭuvāḷkkai yeṉṟapōtu rācamuṭi maṉṉavarum*
*nalameṉa tampiyūṭē nāṭıttıru viḷaṅkaḷpaṟṟa*

There was pin-drop silence,
Nobody had words to speak.
The eerie silence was then broken
By the brothers with these words.
"There is a way that I shall say
Will you make your son, born to my sister
The king of this land?
If you agree to this
We shall agree to the marriage".

### மன்னரின் சினவுரைகள்

நடுநடுங்க வேகமுற்று நல்ல தம்பிமார்களூடே
நாடியேமன்னர் வேங்கைப்புலிபோல் திருமுகமும் தாம்சீறி

மண்ணுள்ள காலமட்டும் வாழ்வீரோ தம்பிமாரே
வையகத்தில் கேட்டதுண்டோ வாக்கிலார்தாம் பகிர்ந்ததுண்டோ
கண்ணகத்தில் முழிக்கவேண்டாம்[1] காட்டகத்தில் போய்விடுங்கள்.

16.405. வையகம் - உலகம். வாக்கிலார் - வாக்கு இல்லாதவர். பகிர்ந்ததுண்டோ கூறியதுண்டோ. 16.406. கண்ணகத்தில் - கண்களுக்கு நேராக.

சு.சொ : 1. முனிக்கவேண்டாம்

## Mannarin cinavuraikaḷ

*naṭunaṭuṅka vēkamuṟṟu nalla tampimārkaḷuṭē*
*nāṭiyēmannar vēṅkai Pulipōl tirumukam tāmciṟi*
*mannuḷḷa kālamaṭṭum vāḻvīrō tampimārē*
*vaiyakattil kēṭṭatuṇṭō vākkilārtām pakirntatuṇṭō*
*kaṇṇakattil muḻikkavēṇṭām kāṭṭakattil pōyviṭuṅkaḷ*

## The king's anger

"This was a sacrilege" thought the king.
The king was displeased and exasperated.
He was angry, hot and annoyed.
His face was red and, hurt like a wounded tiger
He cursed the brothers with sure death.
"Don't stand before me
Go and save your life by staying elsewhere".
Said the king driven by anger.

## தம்பிமார்கள் தம் அரண்மனைக்குத் திரும்புதல்

கறுத்துமன்னர் திருவிளங்கள்பற்ற கால்கைசோர்ந்து கைசோர்ந்து
விசையுங் கேளாமல் விரைவுடனே தம்பிமார்கள்
விக்கிவிறைத்தவர் நடந்தார் வீரசூரமுள்ள தம்பிமார்கள்
பாரமுடிமன்னரை விட்டுவிட்டு பரபரென நடந்தாரே
நடந்தாரே கோட்டைவிட்டு நன்றியுடன் தம்பிமார்கள்
இரணியல் சிங்கநல்லூர் ஏற்றநல்ல படைவீட்டில்
வேம்படிவாழ்[1] கோவில்கல்லில் விரைவாக வந்திருந்தார்

16.407. கறுத்து - மனம் சினந்து. 16.408. விசையுங் கேளாமல் - சிறிதளவு கூட கேட்காமல். 16.409. விக்கி விறைத்து - செய்வதறியாது திகைப்படைந்து. 16.410. பரபரென வேகக்குறிப்பை உணர்த்திய இரட்டைக் கிளவி.

சொ : 1. வேம்படிவான்

## Tampimārkaḷ tam araṇmaṉaikkut tirumputal

*karuttumaṉṉar tiruviḷaṅkaḷpaṟṟa kālkaicōrntu kaicōrntu*
*vicaiyuṅ kēḷāmal viraivutaṉē tampimārkaḷ*
*vikkiviṟaittavar naṭantār vīracūramuḷḷa tampimārkaḷ*
*pāramuṭimaṉṉarai viṭṭuviṭṭu parapareṉa naṭantārē*
*naṭantārē kōṭṭaiviṭṭu naṉṟiyutaṉ tampimārkaḷ*
*iraṇiyal ciṅkanallūr ēṟṟanalla paṭaiviṭṭil*
*vēmpaṭivāḻ kōvilkallil viraivāka vantiruntār*

Unable to withstand the king's rage
The Brothers came out tired and defeated.
They were not brisk in their walk
There was speed, no doubt,
But it was without spirit.
They came to Ciṅkanallūr.

### தாயார் தம்பிமார்களிடம் நடந்ததை வினாவுதல்

தம்பிமார்கள் வந்தசெய்தி தாயாரும் அறிந்தல்லோ[1]
முகம்காட்ட போனசெய்தி மீண்டுநீங்கள்[2] வந்ததென்ன
தாயாரும் கேட்டபோது தம்பிமாரும் முகம்சடைந்து.[3]

### தம்பிமார்களின் பதிலுரை

தாகத்துக்குத் தண்ணீரும் தானவரும் அருந்தாமல்
வீறுவீறாய்த் தம்பிமார்கள் வேகித்தவர் சொல்லிடவே
மன்னர்முன்னே போனதுவும் மறுத்துமன்னர் கற்பித்ததும்
தங்கைகொச்சு மாடம்மை தானுமவர் கேட்டதுவும்
பருவட்டங்கள் கொடுப்பதற்கும் பள்ளிகட்டில் சேர்வதற்குப்
பாராளும்மன்னர் கற்பிக்கவே கற்பித்தாரே மன்னவரும்
கற்பனையை மறுத்ததுவும் மாட்டோமென்று அறிவித்ததும்
மன்னர்சீறிக் கற்பித்ததும் செப்புவாராம் தாயாரோட.

**16.414.** அறிந்தல்லோ - அறிந்தல்லவா. **16.415.** முகம் காட்ட போன செய்தி - மன்னரிடத்தில் திருமுகம் காட்டி உரையாடப் போன செய்திகள். **16.416.** முகம் சடைந்து - முகம் சோர்ந்து. **16.417.** தானவர் - தம்பிமார்களைக் குறித்தது. **16.418.** வீறுவீறாய் - வேகமாய். வேகித்து - வேகம் கொண்டு. **16.421.** பள்ளிகட்டில் - பஞ்சணை. **16.423.** கற்பனை - கட்டளை. **16.424.** சீறி - சினங்கொண்டு. கற்பித்தவும் - கட்டளை இட்டதும்.

சு.சொ : 1 அறிந்ததல்லவோ 2. மீண்டுநாங்கள் 3. முகம்சடைத்து

## Tāyār tampimārkaḷiṭam naṭantatai viṉāvutal

*tampimārkaḷ vantaceyti tāyārum aṟintallō*
*mukamkāṭṭa pōṉaceyti miṉṭuniṅkaḷ vantateṉṉa*
*tāyārum kēṭṭapōtu tampimārum mukamcaṭaintu*

## Tampimārkaḷiṉ patilurai

*tākattukkut taṇṇīrum tāṉavarum aruntāmal*
*vīṟuvīṟāyt tampimārkaḷ vēkittavar colliṭavē*
*maṉṉarmuṉṉē pōṉatuvum maṟuttumaṉṉar kaṟpittatum*
*taṅkaikoccu māṭammai tāṉumavur kēṭṭatuvum*
*parivaṭṭaṅkaḷ koṭuppataṟkum paḷḷikaṭṭil cērvataṟkup*
*pārāḷummaṉṉar kaṟpikkavē kaṟpittārē maṉṉavarum*
*kaṟpaṉaiyai maṟuttatuvum māṭṭōmeṉṟu aṟivittatum*
*maṉṉarcīṟik kaṟpittatum ceppuvārām tāyārōṭa*

Hearing the news of their arrival.
Their mother came to enquire.
They were thirsty but didn't drink water.
They said everything that happened there
The king's desire to have their sister
And their refusal to give her.

## தாயாரின் அமைதியுரை

ஏதுகல்பினை யானாலும் இருபேரும் மனம்பொருந்தி
மனம்பொருந்தி இருபேரும் வாருமென்று சொல்லிவிட்டேன்
திருவாக்கு மறுவாக்கு சொல்லாமே தம்பிமாரைத்
தாயாரும் வேகமுற்று தானிருந்தாள் அந்நேரம்
பண்டுபோல கோவில்கல்லில் பாலித்தவர் வீற்றிருந்தாரே.

16.425. கல்பனை - 'கற்பனை' என்பதின் பேச்சுவழக்கு; கட்டளை. 16.429. பண்டு போல - முன்பு போல. பாலித்தவர் - பொருந்தியவர்.

## Tāyāriṉ amaitiyurai

*ētukalpiṉai yāṉālum irupērum maṉamporunti*
*maṉamporunti irupērum vārumeṉṟu colliviṭṭēṉ*
*tiruvākku maṟuvākku collāmē tampimārait*
*tāyārum vēkamuṟṟu tāṉiruntāḷ annēram*
*paṇṭupōla kovilkallil pālittavar vīṟṟuntārē*

She took stock of the sıtuation
Saıd these words to her sons,
"What ever you do,
Do it with mutual agreement."

### மாமாவின் மெத்தையை எடுத்துவர மன்னர் ஆணையிடல்

வீற்றிருக்கும் நாளதிலே வேந்தர்மனந் தான்சீறி
காந்தியும் ஊசியும்போல் கருதிமனம் இரண்டாகி
என்னுடைய ராச்சியத்தில் இவரிருந்தா லாகாது
எப்படித்தான் ஆனாலும் இவ்விடம்விட்டு விரட்டவேணும்
என்மாமன் ஆண்டிருந்த அரியதொரு பள்ளிமெத்தை
பள்ளிமெத்தை பள்ளிகட்டில் பண்பாக எடுத்துவர
எடுத்துவர வேணுமென்று ஏற்றமன்னர் கல்பிக்கவே.

**16.431**. காந்தி - காந்தம். **16.434**. பள்ளிமெத்தை - பஞ்சினால் செய்யப்பட்ட, துயில்வதற்குரிய மெத்தை.

### Māmāvin̠ mettaiyai eṭuttuvara man̠n̠ar āṇaiyiṭal

*vīr̠r̠irukkum nāḷatilē vēntarman̠an tān̠cīr̠i*
*kāntiyum ūciyumpōl karutiman̠am iraṇṭāki*
*en̠n̠uṭaiya rācciyattil ivariruntā lākātu*
*eppaṭittān̠ ān̠ālum ivviṭamviṭṭu viraṭṭavēṇum*
*en̠māman̠ āṇṭirunta ariyatoru paḷḷimettai*
*paḷḷimettai paḷḷikaṭṭil paṇpāka eṭuttuvara*
*eṭuttuvara vēṇumen̠r̠u ēr̠r̠aman̠n̠ar kalpikkavē*

While the king at his palace
Became restless like a tiger.
"I won't allow them to live in my land
However great they may be!
I will drive them out.
I wıll not give them peaceful life.
I will take the fine mattress used by my uncle".

### ஏவலர்கள் மெத்தையை எடுத்து வெளிக்கொணர்தல்

வெள்ளித்தடி காரர்களும் விரயகொல்ல சேவுகளும்
திட்டெனவே பட்டன்மாரும் தெருவதுவும் தான்கடந்து

சிங்கநல்லூர் படைவீட்டில் சிறந்தவேம்படிவாழ் கோவில்கல்லில்
பட்டன்மார்கள் சென்றிறங்கிப் பள்ளிமெத்தைத் தானெடுத்தார்
பள்ளிமெத்த பள்ளிகட்டில் பரபரென யெடுக்கும்நேரம்[1]
அங்கிருந்த பேர்களெல்லாம் அவரேதோ சொல்லுவாராம்
ஆராடா பள்ளிமெத்தைப் பறையாமல் எடுப்பதென்ன
கல்பனை படியல்லோ கடுகநாங்கள் எடுத்துவந்தோம்
எடுத்தல்லவோ பட்டன்மார்கள் ஏற்றநல்ல தெருவில்வந்தார்.

**16.437.** வெள்ளித்தடிகாரர்கள் - வெள்ளிப் பூண் இட்ட தடியினைக் கொண்ட ஏவலர்கள். விரைய - வேகமாக. கொல்ல சேவுகள் - கொல்லர் சாதியைச் சார்ந்த சேவகர்கள். திட்டெனவே - திரளாகவே. பட்டன்மார் - ஒரு சாதியாரைக் குறித்தது. **16.443.** ஆரடா - 'யாரடா' என்பதின் பேச்சுவழக்கு. பறையாமல் - 'கூறாமல்' என்பதின் வட்டார வழக்கு. **16.444.** கல்பனை படியல்லோ - அரசரின் ஆணைப்படி அல்லவா; கடுக - விரைவாக.

சு.சொ : 1. யெடுக்கும்நேரும்

## Ēvalarkaḷ mettaiyai eṭuttu veḷikkoṇartal

*veḷḷittaṭi kārarkaḷum virayakolla cēvukaḷum*
*tiṭṭeṉavē paṭṭaṉmārum teruvatuvum tāṉkaṭantu*
*ciṅkanallūr paṭaivīṭṭil ciṟantavēmpaṭivāḻ kōvilkallil*
*paṭṭaṉmārkaḷ ceṉṟiṟaṅkip paḷḷimettait tāṉeṭuttār*
*paḷḷimettai paḷḷikaṭṭil paraparena yeṭukkumnēram*
*aṅkirunta pērkaḷellām avarētō colluvārām*
*ārāṭā paḷḷimettaip paṟaiyāmal eṭuppteṉṉa*
*kalpaṉai paṭiyallō kaṭukanāṅkaḷ eṭuttuvantōm*
*eṭuttallavō paṭṭaṉmārkaḷ ēṟṟanalla teruvilvantār*

## Royal order against the Brothers

Said the king and ordered
To bring the mattress from Ciṅkanallūr.
The guards came to Ciṅkanallūr
Went inside the palace
Made elaborate arrangements
To shift the mattress from there.

## குஞ்சுத் தம்பி சினத்துடன் ஏவலர்களைத் தடுத்தல்

முத்துமயில் இலவாணிச்சி மொய்குழலாள்[1] கடைதனிலே
குஞ்சுதம்பி மன்னவரும் கூண்டங்கிருக்கும் நேரமதில்

கடையில்தம்பி தானிருக்கக் கடிதாக ஓடிவந்து
பள்ளிமெத்தை பள்ளிகட்டில் பரபரென தானெடுத்துக்
கல்பனை படியல்லோ கடுககொடு போறோமென்றார்
கொண்டுபோறேன் என்றுசொல்லிக் கோபமுற்று குஞ்சுதம்பி
இருவிழிகண்[2] தீப்பறக்க எதிராக ஓடிவந்து
வந்துஎதிர்த்துக் குஞ்சுதம்பி வார்த்தைஏதோ சொல்லுவாராம்.

**16.446.** முத்துமயில் - ஒரு பெண்ணின் பெயர்; இலைவாணியர் சாதியைச் சார்ந்த இவளைக் குஞ்சு தம்பி தன் காமக்கிழத்தியாக வைத்திருந்தார் என்பது வாய்மொழி மரபு. **16.447.** கூண்டு - பொருந்தி. **16.448.** கடிதாக - விரைவாக. **16.450.** போறோம் - 'போகிறோம்' என்பதின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. மொய்க்குளலாள் 2. இருவிளிகண்

## Kuñcutampi ciṉattuṭaṉ ēvalarkaḷait taṭuttal

*muttumayil ilavāṇicci moykuḻalāḷ kaṭaitaṉilē*
*kuñcutampi maṉṉavarum kūṇṭaṅkirukkum nēramatil*
*kaṭailyiltampi tāṉirukkak kaṭitāka ōṭivantu*
*paḷḷimettai paḷḷikaṭṭil paraparena tāṉeṭuttuk*
*kalpaṉai paṭiyallō kaṭukakoṭu pōṟōmeṉṟār*
*koṇṭupōṟēṉ eṉṟucollik kōpamuṟṟu kuñcutampi*
*iruviḻikaṇ tīppaṟakka etirāka ōṭivantu*
*vantuetittuk kuñcutampi vārttaiētō colluvārām*

## Kuñcu Tampi at that time

Had stayed at the house of Muttumayiḷ Ilavāṇicci
Not knowing what was going on
Those who stayed in the Palace
Made several questions.
The guards by this time
Brought the mattress to the street
It was their bad time
Kuñcu Tampi had come
With raging eyes emitting fire.

## சினங்கொண்ட குஞ்சுத்தம்பியின் செயல்

என்தாயார் தன்தனக்கு என்தகப்பன் கொடுத்தமெத்தை
தருவதில்லை ஒருநாளும் தருவதில்லை என்றபோது

தர்க்கமிட்டு[1] இருபேரும் இருபேரும் தர்க்கமிட்டு
எதிர்த்துநிற்கும் வேளையிலே குஞ்சுபீசாத்தித் தானெடுத்துக்
கண்டதுண்டமாய் அறுத்துத் துண்டதுண்டமாய் அறுத்துச்
சிங்கநல்லூர் படைவீட்டில் தெருவதிலே தூற்றிவிட்டார்.

**16.456.** தர்க்கமிட்டு - வாதம் செய்து. **16.457.** குஞ்சு பீசாத்தி - 'சிறிய கத்தி' என்ற பொருளிலமைந்த வட்டார வழக்குச் சொல்.

சு.சொ : 1. தற்கமிட்டு

## Ciṉaṅkoṇṭa kuñcuttampiyiṉ ceyal

*eṉtāyar taṉtaṉakku eṉtakappaṉ koṭuttamettai*
*taruvatillai orunāḷum taruvatillai eṉṟapōtu*
*tarkkamiṭṭu irupērum irupērum tarkkamiṭṭu*
*etirttuniṟkum vēḷaiyilē kuñcupīcāttit tāṉeṭuttuk*
*kaṇṭatuṇṭamāy aṟuttut tuṇṭatuṇṭamāy aṟuttuc*
*ciṅkanallūr paṭaivīṭṭil teruvatilē tūṟṟiviṭṭār*

## The Brothers revolt

"This mattress was my mother's property
My father's gift to my mother
I will never give it to anyone"
Said these to the standing guards.
The guards showed the royal order
After the altercation ended.
In a swift movement Kuñcu Tampi
Taking the small but pointed knife
Cut the mattress into thousand pieces
They flew in air and vanished.

### ஏவலர்கள் மன்னரிடம் வருதல்

வந்ததொரு நாயர்களும் மன்னர்முன்னே அறிவிக்கவே
பரபரென ஓடிச்சென்று பத்மனாப புரத்தில்வந்தார்.

### ஏவவர்கள் நடந்த நிகழ்வுகளைக் கூறுதல்

முத்தாவெளி யானதிலே முடிதரித்த மன்னர்முன்னே
அடிதொழுது நாயன்மாரும் அறிவித்தார் மன்னரோடே

பள்ளிமெத்தை பள்ளிகட்டில் பரபரென எடுக்கும்நேரம்
சினப்புலிபோல் குஞ்சுத்தம்பி தெருவதிலே வந்தெதிர்த்து
வந்தெதிர்த்துக் குஞ்சுத்தம்பி வாக்குத்தர்க்கம் தான்பறைஞ்சு
குஞ்சுபீசாத்தித் தானெடுத்துக் கூறுகூறாய்த் தானரிந்து
கண்டந்துண்டமாய்த் தானரிந்து காற்றதிலே தூற்றிவிட்டார்
தூற்றிவிட்டார் என்றுசொல்லி சொல்பெறவே அறிவிக்கவே
அப்போது மன்னவரும் திருவிளங்கள் பற்றுவாராம்.

**16.462.** முத்தாவெளி - முற்றத்து வெளி. **16.463.** நாயன்மார் - படைத்தலைவர்கள். **16.466.** வாக்குத் தர்க்கம் - விவாதம். பறைஞ்சு - 'கூறி' என்பதின் வட்டார வழக்குச் சொல். **16.467.** கூறு கூறாய் - சிறுசிறு பகுதிகளாய். **16.468.** கண்டந்துண்டமாய் - பல பகுதிகளாய். தூற்றிவிட்டார் - தூவினார். **16.470.** திருவிளங்கள் பற்றுவாராம் - திரு உள்ளத்திலே எண்ணுவாராம்.

## Ēvalarkaḷ maṉṉariṭam varutal

*vantatoru nāyarkaḷum maṉṉarmuṉṉē aṟivikkavē*
*paraparena ōṭiccenṟu patmaṉāpa purattilvantār*

## Ēvalarkaḷ naṭanta nikaḻvukaḷaik kūṟutal

*muttāveḷi yāṉatilē muṭitaritta maṉṉarmuṉṉē*
*aṭitoḻutu nāyaṉmārum aṟivittār maṉṉarōṭē*
*paḷḷimettai paḷḷıkaṭṭil paraparena eṭukkumnēram*
*ciṉappulipōl kuñcuttampi teruvatilē vantetirttu*
*vantetirttuk kuñcuttampi vākkuttarkkam tāṉparaiñcu*
*kuñcupīcāttit tāṉeṭuttuk kūṟukūṟāyt tāṉarintu*
*kaṇṭantuṇṭamāyt tāṉarintu kāṟṟatilē tūṟṟiviṭṭār*
*tūṟṟiviṭṭār eṉṟucolli colpeṟavē aṟivikkavē*
*appōtu maṉṉavarum tiruviḷaṅkaḷ paṟṟuvārām*

The guards and Nair officials
Went to the king and informed
That while they were on the mission
There came Kuñcu Tampi like an angry tiger
Thwarted their effort with many arguments
And damaged the mattress
By cutting it into thousand pieces
They all flew in the air
They all flew in the street.

### தம்பிமார்களின் வலிமை கண்ட மன்னர் மனவோட்டம்

என்மாமன் அன்றிருந்த அம்மானுட பள்ளிமெத்தை
அறுத்தானே குஞ்சுதம்பி துண்டுதுண்டாய் ஆக்கிவிட்டான்
சேனைப்படை தானிருக்கச் செங்கோல்முத்திரை தானிருக்கப்
பாளையங்கள் பலதிருக்க ஆண்டதினால் என்னபயன்
நம்முடைய படைதனிலே நாலிலொன்று தம்பிமார்க்குத்
தம்பிமார்க்கு உண்டுமானால் தரிக்கவொட்டார் நம்மையெல்லாம்
தம்பிமார் அதிகாரம் பிடாகைகளில் பறக்குதுபார்.

**16.471.** அம்மான் - 'மாமன்' என்ற பொருள் அமைந்த வட்டார வழக்குச் சொல். **16.474.** பாளையங்கள் - பாசறைகள்; பொதுவாகப் பல வில்லுப் பாடல்களில் இச்சொல் படை மற்றும் போர் வீரர்கள் கூடாரம் அடித்துத் தங்குதல் என்கிற பொருள்களில் வருகிறது; பல கிராமங்களின் தொகுதி எனினும் அமையும். **16.475.** நாலு - 'நான்கு' என்பதின் பேச்சு வழக்கு. **16.476.** உண்டுமானால் - இருக்குமானால். தரிக்கவொட்டார் - இருப்பதற்கு விடமாட்டார்.

### Tampimārkaḷiṉ valimai kaṇṭa maṉṉar maṉavōṭṭam

*eṉmāmaṉ aṉṟirunta ammāṉuṭa paḷḷimettai*
*aṟuttāṉē kuñcutampi tuṇṭutuṇṭāy ākkiviṭṭāṉ*
*cēṉaippaṭai tāṉirukkac ceṅkōlmuttirai tāṉirukkap*
*pāḷaiyaṅkaḷ palatirukka āṇṭatiṉāl eṉṉapayaṉ*
*nammuṭaiya paṭaitaṉilē nālilonṟu tampimārkkut*
*tampimārkku uṇṭumāṉāl tarikkavoṭṭār nammaiyellām*
*tampimār atikāram piṭākaikaḷil paṟakkutupār*

### King's plan to counter insurgency

Sad was the king and upset
"What is the use of sceptre and crown
Soldiers and Guards
I am not able to protect
My uncle's mattress, my uncle's property
Had he got one fourth of my army".
He would have wiped us out.

### மன்னர் தம்பிமார்களின் மானியங்களைப் பறித்தல்

என்மாமன் கொடுத்திருந்த அதிகதொரு வகைதொகையும்
வகைதுகையும் மானியங்களும் வாய்த்ததொரு முதலெடுப்பும்
இனிநாமன் எடுத்தல்லோ இவிடம்விட்டு விரட்டவேணும்

இப்போது தம்பிமார்க்கு இசலாகக் கொடுத்திருந்த
வலியதம்பி தன்தனக்கு மன்னவரும் கொடுத்திருந்த
கொடுத்திருந்த வகைதுகையும் கூண்டமன்னர் தானெடுத்தார்
கொடுத்திருந்த வகைதுகையும் சீறிமன்னர் எடுத்துவிட்டார்
தாயார்க்கும் தங்கையர்க்கும் தான்கொடுத்த வகைதுகையும்
ஆகவகை யத்தனையும் அடங்கலையும் எடுத்துவிட்டார்
அத்தனையும் எடுத்துவிட்டார் அழகன்வால வஞ்சிமார்த்தாண்டன்.

**16.477.** பிடாகை - நாஞ்சில் நாட்டின் உட்பகுப்புப் பகுதிகள் இச்சொல்லால் அக்காலத்தில் வழங்கப்பட்டன. **16.478.** வகைதொகை - சொத்துக்கள். **16.480.** நாமள் - நாம். எடுத்தல்லோ - எடுத்தல்லவா. **16.481.** இசலாக - தானமாக. **16.486.** அடங்கல் - குத்தகை உரிமை உடைய சொத்துக்கள்.

சு.சொ · 1. எடுத்ததல்லவோ

## Manṉar tampimārkaḷiṉ māṉiyaṅkaḷaip paṟittal

*eṉmāmaṉ koṭuttirunta atikatoru vakaitukaiyum*
*vakaitukaiyum māṉiyaṅkaḷum vāyttatoru mutaleṭuppum*
*iṉināmaḷ eṭuttallō iviṭamviṭṭu viraṭṭavēṇum*
*ippōtu tampimarkku icalākak koṭuttirunta*
*valiyatampi taṉtaṉakku maṉṉavarum koṭuttirunta*
*koṭuttirunta vakaitukaiyum kūṇṭamaṉṉar tāṉēṭuttār*
*koṭuttirunta vakaitukaiyum cīṟmaṉṉar eṭuttuviṭṭār*
*tāyarkkum taṅkaiyarkkum tāṅkoṭutta vakaitukaiyum*
*ākavakai yattaṉaiyum ataṅkalaiyum eṭuttuviṭṭār*
*attaṉaiyum eṭuttuviṭṭār aḻakaṉvāla vañcimārttāṇṭaṉ*

"My uncle's liberal grant
In the form of property and
Right to collect taxes
Must be taken from them"
Thought the king and said so several times.
Gave commands to relieve
The family of his uncle's property
Whatever given to the two brothers
Their mother and sister
Everything taken by Vañci Mārttāṇṭaṉ.

## தம்பிமார்கள் மன்னரை அழித்து நாட்டை ஆள வஞ்சினம் எடுத்தல்

வகைதுகையும் மானியங்களும் மன்னவனார் எடுத்துவிட்டார்
வகைதுகையும் எடுத்தபோது வாய்த்ததொரு தம்பிமார்கள்
மதப்புலிபோல் வலியதம்பி சினப்புலிபோல் குஞ்சுத்தம்பி
வகைதுகையும் எடுத்தமன்னர் ஒழிக்கஉபாயமது செய்யவேண்டும்
மறுதுருவம் தனிலேசென்று மாறிபடை கொண்டுவந்து
மாறிபடை கொண்டுவந்து மன்னவரை எதிர்த்துவெட்டி
படைபொருதி வெற்றிகொண்டு பறித்தவகை எடுக்கவேணும்
பறிக்கவேணும் எடுத்தவகை பாருலகம் ஆளவேணும்[1]
மூன்றுநாள் ஆனாலும் ராச்சியத்தை ஆளவேணும்
ராச்சியத்தை ஆளாவிட்டால் ராமவர்மா மக்களில்லை
என்றுசொல்லித் தம்பிமார்கள் இன்பமுடன் சிரித்துக்கொண்டு.

16.487. வால - இளமையான. 16.494. பொருதி - பொருது; போர் செய்து. 16.499. ஆரொருவர் - யாரொருவர்; யாரும். கருமானம் - வைராக்கியம்.

சு.சொ : 1. ஆளவேணும்

**Tampimārkaḷ maṉṉarai aḻittu nāṭṭai āḷa vañciṉam eṭuttal**

*vakaitukaiyum māṉiyaṅkaḷum maṉṉavaṉār eṭuttuviṭṭār*
*vakaitukaiyum eṭuttapōtu vāyttatoru tampimārkaḷ*
*matappulipōl valiyatampi ciṉapppulipōl kuñcuttampi*
*vakaitukaiyum eṭuttamaṉṉar oḻikkaupāyamatu ceyyavēṇṭum*
*maṟuturuvam taṉilēceṉṟu māṟipaṭai koṇṭuvantu*
*maṟipaṭai koṇṭuvantu maṉṉavarai etirttuveṭṭi*
*paṭaiporuti veṟṟikoṇṭu paṟittavakai eṭukkavēṇum*
*parikkavēṇum eṭuttavakai pārulakam āḷavēṇum*
*mūṉṟunāḷ āṉālum rācciyattai āḷavēṇum*
*racciyattai āḷāviṭṭāl rāmavarmā makkaḷillai*
*eṉṟucollit tampimārkaḷ iṉpamuṭaṉ cirittukkoṇṭu*

The two Brothers were angry
The king had deprived them of their right
Their right to collect tax and
Their right to enjoy the king's wealth
They became powerless in their own land.

They devised a plan
To dethrone the king
They would approach
The neighbouring enemy king.
They decided to seek his help
To send the king out
To teach him a lesson for his wrongs
Even for three days
He would not rule the land
He would not allow the king to prolong.
If they didn't succeed
They would never qualify to be
The sons of Rāmavarma Tampirāṉ.
This thought gave them
Immense happiness
They thus vowed to avenge the king.

### தம்பிமார்கள் வஞ்சினம் நிறைவேற்ற மாமனுடன் நாட்டை விட்டு வெளியேறுதல்

ஆரொருவர் அறியாமல் கருமானம் கொண்டல்லோ
ஆகத்தக்க கருவூலமும் அருமையுள்ள தங்கையரின்
வெள்ளிவெங்கல பாத்திரமும் மிக்கநல்ல பொன்பணமும்
பொன்பணங்கள் ஆனதெல்லாம் பொறுக்கத்தக்க முதலுகளும்
நூறுவிதமாய்ச் சுமடுகட்டி நூறுபேர் தலையிலேற்றி
நட்டநடு பாதிராவில் நடுக்கூறு சாமத்தில்
வலியதம்பி மன்னவர்க்கு வாய்த்ததொரு பல்லாக்கும்
மாமன்கொச்சு மாப்பிள்ளையும் மன்னர்பரி மீதிலேறி
குஞ்சுத்தம்பி மன்னவரும் கூண்டபதி தனிலேறி
கூடியவர் ஒருமுகமாய் கோவில்கல் தன்னைவிட்டு
வேம்படிவாழ் கோவில்விட்டு விரைவாக வழிநடந்து.

16.500. ஆகத் தக்க - முழுமையான. கருவூலம் - கருவூலத்துப் பணம். 16.502. பொறுக்கத்தக்க முதலுகளும் - சுமந்து செல்வதற்கு வசதியான பொருட்களும். 16.503. சுமடு - சுமையான பொட்டணம். 16.504. பாதி ராவில் - நடு இரவில்; ராவு என்பது இவண் இரவு என்ற பொருள் தரும் வட்டார வழக்குச் சொல். 16.506. பரி - குதிரை.

## Tampimārkaḷ vañciṉam niṟaivēṟṟa māmaṉuṭaṉ nāṭṭai viṭṭu veḷiyēṟutal

*āroruvar aṟiyāmal karumāṉam koṇṭallō*
*ākattakka karuvūlamum arumaiyuḷḷa taṅkaiyariṉ*
*veḷḷiveṅkala pāttiramum mikkanalla poṉpaṇamum*
*poṉpaṇaṅkaḷ āṉatellām poṟukkattakka mutalukaḷum*
*nūṟuvitamāyc cumaṭukaṭṭi nūṟupēr talaiyilēṟṟi*
*naṭṭanaṭu pātirāvil naṭukkūṟu cāmattil*
*valiyatampi maṉṉavarkku vāyttatoru pallākkum*
*māmaṉkoccu māppiḷḷaiyum maṉṉarpari mītilēṟi*
*kuñcuttampi maṉṉavarum kūṇṭapari taṉilēṟi*
*kūṭiyavar orumukamāy kōvilkal taṉṉaiviṭṭu*
*vēmpaṭivāḷ kōvilviṭṭu viraivāka vaḻinaṭantu*

### Rift between the king and the Brothers

They collected all the wealth
Available in their stack room
Silver vessels and gold coins
Gold and diamond jewels.
Packed each and everything
Into packets numbering hundred.
Put them on the head of workers numbering hundred.
At the dead of night they set out,
Each one had an elegant Palanquin
One for Valiya Tampi, one for Kuñcu Tampi
One for uncle Koccumārappa Piḷḷai
Another one for their sister and mother.

### பல ஊர்களைக் கடந்து தம்பிமார்கள் சுசீந்திரம் அடைதல்

வள்ளியாறு தான்கடந்து வாய்த்தயேலா வழியாக
ஈழுவன் மடமும்விட்டு ஏற்றசாலை வழியாக
வெள்ளங்கட்டி மடமும்விட்டு வீறுவீறாய் வழிநடந்து
கள்ளியங் காடும்விட்டு கணியாகுளம் விட்டு
பார்வதிவாழ்[1] அகரமிட்டு பரபரென வழிநடந்து
பஞ்சவர்கள் உறையுமந்த பஞ்சவர்ணக் காடுமிட்டு
நாகர்வாழ்[2] கோவில்விட்டு நல்லகோட்டாறு வழியாக

வர்த்தகார் கடையுமிட்டு வாய்த்தஓடை தான்கடந்து
ஆனப்பாலம் தன்னைவிட்டு ஆச்சிராம புரமும்விட்டு
சுயிந்திரம் பதிதனிலே சென்றாரே தம்பிமார்கள்.

16.510. ஏலா - வயல். 16.511. ஈழுவன் மடம் - இரணியல்.என்னும் ஊரை அடுத்த ஓர் மண்டபத்தின் பெயர். 16.512. வெள்ளங்கட்டி மடம் - சுங்கான்கடைக்கும் தக்கலைக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள ஒரு சிறிய கல் மண்டபம். வீறுவீறாய் - வேகமாய். அகரம் - மருதநிலம் சார்ந்த ஊரைக் குறிப்பிடும் சொல்.

*சு.சொ : 1. பாற்வதிவாள் 2. நாகர்வாள்*

## Pala ūrkaḷaik kaṭantu tampimārkaḷ cucīntiram aṭaital

*vaḷḷiyāṟu tāṉkaṭantu vāyttayēlā vaḻiyāka*
*īḻuvaṉ maṭamumviṭṭu ēṟṟacālai vaḻiyāka*
*veḷḷaṅkaṭṭi maṭamumviṭṭu vīṟuvīṟāy vaḻinaṭantu*
*kaḷḷiyaṅ kāṭumviṭṭu kaṇiyākuḷam viṭṭu*
*pārvativāḷ akaramiṭṭu parapreṇa vaḻinaṭantu*
*pañcavarkaḷ uṟaiyumanta pañcavarṇak kāṭumiṭṭu*
*nākarvāḷ kōvilviṭṭu nallakōṭṭāṟu vaḻiyāka*
*varttakār kaṭaiyumiṭṭu vāyttaōṭai tāṉkaṭantu*
*āṉappālam taṉṉaiviṭṭu āccirāma puramumviṭṭu*
*cuyintiram patitaṉilē ceṉṟārē tampimārkal*

Passing through river Vaḷḷi
Crossing several places like
Īḻuvaṉmaṭam Veḷḷaṅkaṭṭimaṭam,
Kaḷḷiaṅkāṭu, Kaṇiyākuḷam
Pārvatiyāḷpuram, Nākarkōyil
Kōṭṭāṟu and Āsrāmam,
They reached the familiar place
Cucīntiram, the temple town.

## ராமகிருஷ்ண குருக்கள் பண்டாரத்தின் வீட்டில் அடைக்கலமாய்த் தம்பிமார்கள் இருத்தல்

ஆருடைய பதிதனிலே அடைக்கலமாய்ச் சென்றிடுவோம்
என்றுசொல்லித் தம்பிமார்கள் இன்பமுடன் இருக்கும்நேரம்
ராமகிருஷ்ண குருக்கள்பண்டாரத்தை நன்றியுடன் கண்டல்லோ[1]
இன்றுஉந்தன் வீடதிலே இரவுதங்கிப் போகவேணும்

குருக்கள்பண்டார குடிதனிலே கொண்டுபோன பணங்களெல்லாம்
ஆகதக்க கருவூலமும் ஆதரவாய்த் தங்கையுடன்
அடக்கலமாய் அவர்வீட்டில் அங்கவர்கள்[2] இருந்தாரே.

16.520. ஆருடைய - 'யாருடைய' என்பதின் பேச்சு வழக்கு. 16.522. ராமகிருஷ்ண பண்டாரம் - தம்பிமார் மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்கு அடைக்கலம் கொடுத்தவர். 16.523. உந்தன் - உன்னுடைய. 16.526. அடக்கலம் - 'அடைக்கலம்' என்பதின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. கண்டல்லவோ 2. அங்கெவர்கள்

## Rāmkirusṇa kurukkaḷ paṇṭārattiṉ vīṭṭil aṭaikkalamāyt tampimarkaḷ iruttal

*āruṭaiya patitaṉilē aṭaikkaḷamayc cenriṭuvōm*
*eṉrucollit tampimārkaḷ iṉpamuṭaṉ irukkumnēram*
*rāmakirisṇa kurukkaḷ paṇṭārattai naṉriyuṭaṉ kaṇṭallō*
*iṉruuntaṉ viṭatilē iravutaṅkip pōkavēṇum*
*kurukkaḷpaṇṭāra kuṭitaṉilē koṇṭupōṉa paṇaṅkaḷellām*
*ākatakka karuvūlamum ātaravāyt taṅkaiyuṭaṉ*
*aṭakkalamāy avarvīṭṭil aṅkavarkaḷ iruntārē*

They wanted to stay in a house
That would offer safety and security.
They thought several names.
Then settled for one name
Rāmakirisṇa Guru Paṇṭāram
It was his name
He was loyal and grateful
So they kept the treasure in his house.
Thus he got asylum for his family
In the house of Rāmakirisṇa Guru.

## நாட்டைக் கைப்பற்ற தம்பிமார்கள் திட்டமிடுதல்

குஞ்சுதம்பி மன்னவரும் கொச்சுமணிப் பிள்ளையுடன்
குடக்காறச் சிறுக்கனுமாய்க் கூடியவர் விசாரமிட்டு
இனிமேல் கருமமென்ன இவடமிட்டு நாம்போவதற்குப்
பாரரசர் சீமையிலே பாவினையாய்ப் போகவேணும்[1]
போகவோ ரகசியமாய்ப் பொல்லாங்கு நினைத்தாரே

மறுதுருவம் தனிலேசென்று மாறிப்படை கொண்டுவந்து
பல்பநாப புரம்தனையும் நாடறிந்து தானடக்கி
மூன்றுநாள் ஆனாலும் முசியாமல் கைவசமாய்ப்
படைகள்கொண்டு தான்வரவே பணங்கள் வைத்தசாளியலாம்
ஒருசாளியல் தன்னிலே உற்றநல்ல கருவூலம்
மறுசாளியல் தன்னிலே வாய்த்ததோர் கள்ளப்பணமதுவும்
எடுத்தாரிது சாளிகையவர் சுமக்குமட்டாகக் கட்டியல்லோ
ரெண்டுசாளியல் பணமும்நாடி யெடுத்தாரே தம்பிமார்கள்
குடக்காற செறுக்கனுமாய்நல்ல கொச்சுவெஞ்சாமரைக் காரனுமாய்ப்
பிச்சைக்கப்பள்ளி நாயருடன்மாடன் பொன்னிற நாயருமாய்
வட்டவீசறக் காரர்களும்[2] வண்ணப்பரி மீதிலேறி
வாய்த்தவலிய தம்பியுமாய்க் குஞ்சுதம்பியும் தான்போகத்
தாயாரும் தங்கையரும் சுயிந்திரத்தில்(பண்டாரகுடிதனில்) அடைக்கலமாய்
அங்கவர்தா னிருத்திநடந்தாரே மாறிப்படை கொண்டுதிரும்பிடவே.

**16.528.** குடக்காறச் சிறுக்கன் - வட்டவடிவ, தாழை இதழால் செய்யப்பட்ட குடை அணிந்த சிறுவன். விசாரமிட்டு - கவலைப்பட்டு. **16.529.** இவடம் - இவ்விடம். **16.530.** பாவினையாய் - பாவனை; பிறருக்குத் தெரியாமல் பாசாங்குடன். **16.531.** பொல்லாங்கு - தீமை. **16.532.** மறுதுருவம் - அடுத்த பகுதி. மாறி - மார்த்தாண்டவர்மனோடு மாறுபட்டு. **16.534.** முசியாமல் - மனம் மற்றும் உடலால் சலிக்காமல்; பேச்சு வழக்குச் சொல். **16.536.** நல்ல கருவூலம் - நல்ல பணம். **16.539.** ரெண்டு - 'இரண்டு' என்பதின் பேச்சுவழக்கு. **16.540-542.** வண்ணப் பரி - அழகிய குதிரை. **16.544.** சுயிந்திரம் - 'சுசீந்திரம்' என்ற ஊரின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. போகவேணும் 2. காறர்களும்

## Nāṭṭaik kaippar̲r̲a tampimārkaḷ tiṭṭamiṭutal

*kuñcutampi man̲n̲avarum koccumaṇip piḷḷaiyuṭan̲*
*kuṭakkār̲ac cir̲ukkan̲umāyk kūṭiyavar vicāramiṭṭu*
*in̲imēl karumamen̲n̲a ivaṭamiṭṭu nāmpōvatar̲kup*
*pāraracar cīmaiyilē pāvin̲aiyāyp pōkavēṇum*
*pōkavō rakaciyamāyp pollāṅku nin̲aittārē*
*mar̲uturuvam tan̲ilēcen̲r̲u mār̲ippaṭai koṇṭuvantu*
*palpanāpa puramtan̲aiyum nāṭar̲intu tān̲aṭakki*
*mūn̲r̲unāḷ ān̲ālum muciyāmal kaivacamāyp*
*paṭaikaḷkoṇṭu tān̲varavē paṇaṅkaḷ vaittacāḷiyalām*
*orucāḷiyal tan̲n̲ilē ur̲r̲analla karuvūlam*
*mar̲ucāḷiyal tan̲n̲ilē vāyttatōr kaḷḷappaṇamatuvum*

*etuttāritu cālikaiyavar cumakkumattākak kottiyallō*
*rentucāliyal panamumnāti yetuttārē tampimārkaḷ*
*kutakkāra cerukkanumāynalla koccuveñcāmaraik kāranumāyp*
*piccaikkappaḷḷi nāyarutanmātanmātan ponnira nāyarumāy*
*vattavīcarak kārarkaḷum vannappari mītilēri*
*vāyttavaliya tampiyumāyk kuñcutampiyum tānpōkat*
*tāyārum taṅkaiyarum cuyintirattil (pantārakutitanil) ataikkalamāy*
*aṅkavartā niruttinatantārē mārippatai kontutirumpitavē*

## Brothers leaving Cūcīntiram

They arranged for a meeting
To devise a plan to redeem the honour
Ready to travel for three days
Ready to meet all hardships
Their aim was their honour
They would meet the enemy king
They would seek his army
To fight against Mārttānta Varma
To fight against his own men
Took bundles full of money
Gold and silver coins many
Piccaikapp paḷḷi Nāyar and
Mātan Ponnira Nāyar were also there
Leaving the mother and sister
At Cucīntiram as exiles
They left towards the east
On horses of different colours.

### ஊர்சாதி மக்கள் தம்பிமார்கள் திட்டமறிந்து தங்கள் எண்ணமுரைத்தல்

மாறிப்படை கொண்டுவர வாய்த்ததம்பிமார் வந்தசெய்தி
நாட்டாரும் ஊராரும் நல்லகரை யாளர்களும்
இவராலே மலைநாடு இனியழியு' மென்றுசொல்லி
ஊராரும் கரையாளரும் ஒருமித்தவர்கள் தான்கூடித்
தம்பிமாரை வந்துகண்டு சங்கடங்கள் போதித்தாராம்
என்னயென்ன தம்பிமாரே இப்போது போறசெய்தி.

16.547. நாட்டார் - நாஞ்சில் நாட்டுக கூட்டத்தலைவர். கரையாளர் - நாஞ்சில் நாட்டு கரையில் (கரை - நாஞ்சில் நாட்டுப் பகுதிகளில் ஒன்று) வரிப்பணம் வாங்குபவர். 16.549. ஒருமித்து - ஒன்றாகச் சேர்ந்து. 16.550. சங்கடங்கள் - கஷ்டங்கள். 16.551. போற - போகிற.

சு.சொ : 1. இனியளியு

## Ūrcāti makkaḷ tampimārkaḷ tiṭṭamaṟintu taṅkaḷ eṉṉamuraittal

*māṟippaṭai koṇṭuvara vāyttatampimār vantaceyti*
*nāṭṭārum ūrārum nallakarai yāḷarkaḷum*
*ivarālē malaināṭu iṉiyaḻiyu meṉṟucolli*
*ūrārum karaiyāḷarum orumittavarkaḷ tāṉkūṭit*
*tampimārai vaṅtukaṇṭu caṅkaṭaṅkaḷ pōtittārām*
*eṉṉayeṉṉa tampimārē ippōtu pōṟaceyti*

## Seeking help from foreigners

Before they set out
There came a crowd
People from different parts and places
Thronged the house of their stay
They all said in one voice
"There will be destruction
Of this beautiful Hill Land.
Seeking enemy's help means
Inviting death and destruction".
Said the people in chorus.

## வலியதம்பியின் பதிலுரை

அப்போது வலியதம்பி ஆணழகன் ஏதுசொல்வான்
எங்களுக்குத் தம்புரானார் குடுத்திருந்த வகைதுகையும்
அடங்கலையும் தானெடுத்துத் தள்ளிவிட்டார் எங்களையும்
குலமுறைக்கு[1] இருந்தமன்னர் இப்படி நடத்துகையில்
மாறிப்படை கொண்டுவந்து மன்னருட கோட்டைதன்னை
அந்தகோட்டை கைவசமாய் ஆக்கிடுவோ மென்றுசொல்ல.

16.553. தம்புரானார் - அரசர்; ராமவர்மாவைக் குறித்தது. குடுத்திருந்த - 'கொடுத்திருந்த' என்பதின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. குளமுறைக்கு

## Valiyatampiyin̲ patilurai

*appōtu valiyatampi ān̲alakan̲ ētucolvān̲*
*eṅkaḷukkut tampurān̲ār kuṭuttirunta vakaitukaiyum*
*ataṅkalaiyum tān̲etuttut taḷḷiviṭṭār eṅkaḷaiyum*
*kulamuṟaikku iruntaman̲n̲ar ippaṭi naṭantukaiyil*
*māṟippaṭai konṭuvantu man̲n̲aruṭa kōṭṭaitan̲n̲ai*
*antakōṭṭai kaivacamāy ākkituvō men̲ṟucolla*

The young and valiant
Valiya Tampi listened to their cry.
"We are compelled and forced
To take this course
We are deprived of our right
The right and authority
That Rāma Varma, our beloved
Father gave us while alive.
The fault is on the present king
The flaw is his present action
We will seek help from the enemy
To fight and get the fort"
Said Valiya Tampi vigorously.

### மக்களின் பதிலுரை

இப்போது தம்பிமாரே என்னவார்த்தை உரைத்தீரே
ஆனையும்ஆனையும் ராவிக்கொண்டால் அதிலிருந்த கொசுதனக்கு
அங்கேதம் வந்ததுபோல் அழிவுவந்து பிடித்திடுமே
அழிவுவந்து பிடித்தபோது அழியுமல்லவோ நாஞ்சிநாடு
படைகொண்டு வந்தீரானால் பாருலகம் தானழியும்
நாடழியும் தம்புரானே நல்வாக்கு வேணுமென்று
குடிகளாசை கொண்டல்லவோ கூண்டபுகழ் நாட்டாரும்.

16.559. ராவி - உரசி. 16.560. ஏதம் - துன்பம். 16.564. குடிகளாசை - குடிமக்கள் மேல் கொண்ட ஆசை.

## Makkaḷin̲ patilurai

*ippōtu tampimārē en̲n̲avārttai uraittīrē*
*ān̲aiyumān̲aiyum rāvikkonṭāl atilirunta kocutan̲akku*

*aṅkētam vantatupōl aḻivuvantu piṭittiṭumē*
*aḻivuvantu piṭittapōtu aḻiyumullavō nāñcināṭu*
*paṭaikoṇṭu vantirāṉāl pārulakam tāṉaḻiyum*
*nāṭaḻiyum tampurāṉē nalvākku vēṇumeṉṟu*
*kuṭikaḷācai koṇṭallavō kūṇṭapukaḷ nāṭṭārum*

To his words the crowd replied
"When two elephants fight
Think of the mosquito's plight
That stands between the two
There will be death and destruction
To the whole of Nañcilnāṭu".

### தம்பிமார்களின் மறுப்புரை

எத்தனைதான் சொன்னாலும் இனிநாங்கள் கேட்பதில்லை
விடுவதில்லை கருமம்இனி விலக்கவேண்டாம் நாட்டாரே
நாட்டாரை விட்டல்லவோ தம்பிகளும் தானடந்தார்.

16.566. கருமம் - கர்மம்; இங்கு நாட்டைப் பிடிக்கும் திட்டம்.

### Tampimārkaḷiṉ maṟuppurai

*ettaṉaitāṉ coṉṉālum iṉināṅkaḷ kēṭpatillai*
*viṭuvatillai karumamiṉi vilakka vēṇṭām nāṭṭārē*
*nāṭṭārai viṭṭallavō tampikaḷum tāṉaṭantār*

"Whatever you tell
We won't listen to it
We won't give it up.

### தம்பிமார்கள் சுசீந்திரத்திலிருந்து சிந்துபூந்துறை அடைதல்

சுயிந்திரம் பதியும்விட்டு தேரூர்குளம் கடந்து
திருப்பதிவா ளகரமிட்டு சீதப்பால் வழியாகக்
கொத்தன்பாறை குடமுமிட்டு கூடிநடந்தார் தம்பிமார்கள்
கடுக்கரை வழியாகக் கடுநடையாய் நடந்து
அனந்தாபுரம் தன்னைவிட்டு ஆனைக்கொப்பந்தன் ஊருமிட்டு
ஆணழகன் தம்பிமார்கள் மாறிப்புளி மூடுமிட்டு
பாரத்திருக் கணங்குடிகடந்து அசத்திராயன் பிள்ளைமடமுமிட்டு

மாவடிதான் கடந்து மைந்தன்வடலிவிளை ஊருமிட்டு
மாமன்கொச்சு மாடபிள்ளையோட வாய்த்தசாலப் புத்தூருமிட்டு
தேவநல்லூர் தான்கடந்து சிங்கிகுளத் தெல்லைவிட்டு
ஓமநல்லூர் திடிலூரும் உத்ததருவை தான்கடந்து
மின்னிப்பாளையம் தன்னைவிட்டு விரவினுடன் தம்பிமார்கள்
பெரியாத்தங் காவதிலே பெருகச்சிந்துபூந் துறைதனிலே
அங்கிருந்து களைப்பாறி அவர்கள்வெள்ளந் தானருந்தி
அடக்காயும் வெள்ளிலையும் அருந்தியவர் எழுந்திருந்து.

16.568. தேரூர் - சுசீந்திரம் ஊரை அடுத்து இரண்டு கி.மீ. தொலைவிலுள்ள, அகஸ்தீவரம் தாலுகாவிலுள்ள ஓர் ஊர்; இக்கோயில் கல்வெட்டு ஒன்று (12-ம் நூற்றாண்டு) இவ்வூரை 'தேரான் ஊர்' என்றும், நாகராஜ் கோயில் கல்வெட்டு (கி.பி. 1520) 'தேர்க்குளம்' என்றும் குறிப்பிடும். 16.569. திருப்பதிவாளகரம் - திருப்பதிசாரம்; இவ்வூர் 108 வைணவத் திருப்பதிகளுள் ஒன்று; இவ்வூர் நம்மாழ்வாரின் தாயார் ஊர்; இவ்வூர் குறித்த செய்திகள் கி.பி.8-ம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன. சீதப்பால் - தோவாளை தாலுகாவிலுள்ள ஒரு சிறிய ஊர். 16.570. கொத்தன்பாறை குளம் - சீதப்பால் ஊருக்கும் தெரிசனங்கோப்பு ஊருக்கும் இடையிலுள்ள ஒரு குளம். 16.571. கடுக்கரை - தோவளை தாலுகாவில் உள்ள ஊர்; இவ்வூர் கோயில் கல்வெட்டு (கி.பி.1706) 'அதியனூரான அழகியபாண்டியபுரம் கீழ்பால் கடுக்கரை' என இவ்வூரைக் கூறும்; இவ்வூர் மலைப்பாதை வழியே திருநெல்வேலி மாவட்டத்திற்குச் செல்ல வழியுண்டு. 16.572. அனந்தாபுரம் - தோவாளை தாலுகாவில் கடுக்கரையை அடுத்துக் காணப்படும் ஓர் ஊர். ஆனைக்கொப்பந்தன் - கடுக்கரை மலையிலுள்ள ஓர் இடம்; வழிப்போக்கர் இங்குத் தங்கிச் செல்வர். 16.573. புளிமூடு - புளியமரத்து மூடு இருக்கும் அடையாளத்தின் அடிப்படையில் வழங்கும் ஓர் இடம். 16.574. திருக்கணங்குடி - திருமால் கோயில் உள்ள ஓர் ஊர்; திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது. அசத்திராயன் பிள்ளைமடம் - திருக்கணங்குடியை அடுத்த ஓர் ஊரிலுள்ள மடத்தின் பெயர். 16.575. மாவடி - திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு அடுத்த ஓர் ஊர். வடலிவிளை - திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வள்ளியூர் அடுத்த ஓர் ஊர். 16.576. சாலப்புத்தூர் - திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி தாலுகாவிலுள்ள ஓர் ஊர். 16.577, 578. தேவநல்லூர், சிங்கிகுளம், ஓமநல்லூர், திடிலூர் - இவ்வூர்கள் நாங்குநேரி தாலுகாவில் அமைந்த சிறிய ஊர்கள்; இவ்வூர்களைத் தம்பிமார்களும் அவர்களுடன் சென்றோரும் கடந்து சென்றனர். 16.578. தருவை - திருநெல்வேலி மேலபாளையத்திற்கு அருகிலுள்ள ஊர். 16.579. மின்னிப்பாளையம் - பாளையங்கோட்டை பகுதியில் அமைந்த ஓர் இடம். விரவினுடன் - வேகத்துடன். 16.580. பெரியாத்தங்காவதில் - பெரிய ஆறாகிய தாமிரபரணி ஓடும் சோலையினுள்ளே. சிந்துபூந்துறை - திருநெல்வேலி நகரத்திலுள்ள ஓர் பகுதி. 16.581. வெள்ளம் - 'குடிநீர்' என்ற பொருளிலமைந்த வட்டார வழக்குச் சொல். 16.582. அடக்காய் வெள்ளிலை - பாக்கு வெற்றிலை.

## Tampimārkaḷ cucintirattiliruntu cintupūnturai aṭaital

*cuyintiram patiyumviṭṭu tērūrkuḷam kaṭantu*
*tiruppativā ḷakaramiṭṭu cītappāl vaḻiyākak*
*kottanpārai kuṭamumiṭṭu kūṭinaṭantār tampimārkaḷ*
*kaṭukkarai vaḻiyākāk kaṭunaṭaiyāy naṭantu*

*anantāpuram tannaiviṭṭu ānaikkoppantan ūrumiṭṭu*
*āṇaḷakan tampimārkaḷ mārippuḷi mūṭumiṭṭu*
*pārattiruk kaṇaṅkuṭikaṭantu acattirāyan piḷḷaimaṭamumiṭṭu*
*māvaṭitān kaṭantu maintanvaṭali viḷaiūrumiṭṭu*
*māmankoccu māṭapiḷḷaiyōṭa vāyttacālap puttūrumiṭṭu*
*tēvanallūr tānkaṭantu ciṅkikuḷat tellaiviṭṭu*
*ōmanallūr tiṭilūrum uttataruvai tānkaṭantu*
*minnippāḷaiyum tannaiviṭṭu viravinuṭan tampimārkaḷ*
*periyāttaṅ kāvatilē perukaccintu pūnturaitanilē*
*aṅkiruntu kaḷaippāri avarkaḷveḷḷan tānarunti*
*aṭakkāyum veḷḷilaiyum aruntiyavar eḻuntiruntu*

## Travel to Tirunelvēli

"We have determined and made it up
Not to give up our mission"
Said Valiya Tampi to the people.
Leaving Cucintiram and
Crossing Tērūr tank
Reaching Tiruppaticāram
Left for Kottanpārai and
Kaṭukkarai village
Also passed through several
Tiny villages and big towns.
Puḷimūṭu, Tirukkaṇaṅkuṭi
And Acattirāyan piḷḷai maṭam
Māvaṭi and Vaṭaliviḷai
Uncle Koccumāṭa Piḷḷai's
Puttūr, Tēvanallūr,
Ciṅkikuḷam and Minnipāḷayam
Are some of the places they crossed
Finally reached Cintupūnturai.

## ஊரார்கள் தம்பிமார் குறித்து வினாவுதல்

இனியெங்கே போவோமென்று இருக்குமந்த நேரத்திலே
அப்போது அங்கேயுள்ள அனைபேரும் வந்துகூடி
எங்கிருந்து தம்பிமாரே இங்குவந்த கருமமென்ன.

## அழகப்ப முதலியாரைச் சந்திக்கத் தம்பிமார் செல்லுதல்

அப்போது தம்பிமார்கள் அவரேதோ சொல்லுவாராம்
இங்கேயுள்ள மணியக்காரர் ஆரென்றுதான் கேட்டார்
அழகப்ப முதலியாரும் அவர்மணியந் தானெடுத்துப்
புதுமணியம் தானெடுக்கும் பொல்லாத துட்டனவன்
கள்ளர்துட்டர் தனையடக்கிக் கணிசமான பணங்கள்பெற்று
சிந்துபூந்துறை கச்சேரியில் சொகுசாக அங்கிருக்க
தம்பிமார்கள் புடைசூழ தக்ககுடைக்காற செறுக்கனுமாய்
ரெண்டுசாளியல் பணமும்கொண்டு நாடியவர்தான் நடந்தார்

16.584. அனைபேரும் - அனைவரும். 16.585. கருமமென்ன - நோக்கமென்ன. 16.587. ஆர் - யார். 16.588. அழகப்ப முதலியார் - நெல்லை மாவட்ட பகுதிகளில் மதுரை நாயக்கரின் படைத்தளபதியாகப் பணிபுரிந்தவர்; பணத்திற்காகப்படை நடத்துபவர் எனப் பெயர் பெற்றவர். 16.590. கள்ளர் துட்டர் தனையடக்கி - தன் பாளையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கொள்ளையடித்தவர்கள், துஷ்டர்கள் ஆகியோரை அடக்கி. 16.591. கச்சேரி - வருமானவரி அலுவலகம். 16.592. செறுக்கன் - சிறுக்கன்; சிறுவன் என்பதின் வட்டார வழக்குச் சொல். 16.593. ரெண்டு - இரண்டு.

## Ūrārkaḷ tampimār kuṟittu viṉāvutal

*iṉiyeṅkē pōvōmeṉṟu irukkumanta nērattilē*
*appōtu aṅkēyuḷḷa aṉaipērum vantukūṭi*
*eṅkiruntu tampimārē iṅkuvanta karumameṉṉa*

## Aḻakappa mutaliyāraic cantikkat tampimār cellutal

*appōtu tampimārkaḷ avarētō colluvārām*
*iṅkēyuḷḷa maṇiyakkārar āreṉṟutāṉ kēṭṭār*
*aḻakappa mutaliyārum avarmaṇiyan tāṉeṭuttup*
*putumaṇiyam tāṉeṭukkum pollāta tuṭṭaṉavaṉ*
*kaḷḷartuṭṭar taṉaiyaṭakkik kaṇicamāṉa paṇaṅkaḷpeṟṟu*
*cintupūntuṟai kaccēriyil cokucāka aṅkirukka*
*tampimārkaḷ puṭaicūḻa takkakuṭaikkāṟa ceṟukkaṉumāy*
*reṇṭucāḷiyal paṇamumkoṇṭu nāṭiyavartāṉ naṭantāṟ*

## Meeting the mercenary leader

They took rest there.
All the villagers assembled there
Made warm enquiries
The two Brothers asked the whereabouts

Of the *Maṇiyam*, the local head
His name was Aḻakappa Mutaliyār
Able administrator and efficient guard
He drove away the thieves
And was rich with the grace
Of the king and people.

### தம்பிமார்களை அழகப்ப முதலியார் வரவேற்றல்

*அழகப்ப முதலியுடன் அரண்மனையில்[1] செல்லுவாராம்*
*மதப்புலிபோல் வலியதம்பி சினப்புலிபோல் குஞ்சுத்தம்பி*
*இருபேரையும் கண்டபோது எழுந்திருந்து முதலியாரும்*
*மறுதுருவம் தனிலிருந்து மன்னர்வந்தார் என்றுசொல்லி*
*எழுந்திருந்து முதலியாரும் இருபேரையும் கைதொழுதார்.*

**16.597.** மறு துருவம் - பிற நாடு.

சு.சொ : 1. அரன்மனை

### Tampimārkaḷai aḻakappa mutaliyār varavēṟṟal

*aḻakappa mutaliyuṭaṉ araṇmaṉaiyil celluvārām*
*matappulipōl valiyatampi ciṉappulipōl kuñcuttampi*
*irupēraiyum kaṇṭapōtu eḻuntiruntu mutaliyārum*
*maṟuturuvam taṉiliruntu maṉṉarvantār eṉṟucolli*
*eḻuntiruntu mutaliyārum irupēraiyum kaitoḻutār*

Took enough money to please Mutaliyār
Went in search of his palace
Seeing the two Brothers
Seeing the two ferocious tigers
Mutaliyār came out and
Welcomed them as two kings
"We are no more kings
But common folks"
Said Valiya Tampi.
Asking them to sit on royal chairs
He asked about their mission and vision.

## தம்பிமாரின் வருத்தவுரையும் முதலியாரின் உபசரிப்பும்

தொழுதுநிற்கும் நேரமதில் சொல்லுவார்கள் தம்பிமார்கள்
மன்னரிலை இப்போது வாய்த்ததம்பி மார்களென்றார்
அப்போது முதலியாரும் அகமகிழ்ந்து சந்தோசமாய்
எங்கிருந்து தம்பிமாரே இங்குவந்த கருமமென்ன
என்றுசொல்லி முதலியாரும் இருபேரையும் கைபிடித்து
இரத்தினக் கம்பிளிதான் இருத்தி (ஆசுவாசமாய்) அமரச்சொல்லி
வலியதம்பி மன்னருடன் வார்த்தைதன்னைக் கேட்டபோது.

16.604. இரத்தினக் கம்பிளி - இரத்தினக் கம்பளம். ஆசுவாசமாய் - ஓய்விற்காக நிதானப்படுத்தி.

## Tampimārin̲ varuttavuraiyum mutaliyārin̲ upacarippum

*tol̲utunir̲kum nēramatil colluvārkaḷ tampimārkaḷ*
*man̲n̲arilai ippōtu vāyttampi mārkaḷen̲r̲ār*
*appōtu mutaliyārum akamakil̲ntu cantōcamāy*
*eṅkiruntu tampimārē iṅkuvanta karumamen̲n̲a*
*en̲r̲ucolli mutaliyārum irupēraiyum kaipiṭittu*
*irattin̲ak kampiḷitān̲ irutti[ācuvācamāy] amaraccolli*
*valiyatampi man̲n̲aruṭan̲ vārttaitan̲n̲aik kēṭṭapōtu*

## Al̲akappa Mutaliyār's Enquiry

"Who are you; my Brothers!
What brought you two, here?
What shall I do for you?"
That was the right chance
To tell him the whole story.

## தம்பிமார்கள் தன்நிலை உரைத்தல்

அந்தநேரம் வலியதம்பி அவர்ஏதோ சொல்லுவாராம்
நாஞ்சில்வள நாடதிலே சிங்கநல்லூர் படைவீட்டில்
வேம்படிவாழ்[1] கோவில்கல்லில் வீற்றிருந்த ராமவர்மா
தம்புரனார் ராமவர்மா மன்னருட மக்கள்நாங்கள்
முன்னிருந்த தம்புரனார் விட்டுதந்த வகைதுகையும்
மக்கதானம் தந்ததுண்டு மானியங்கள் தந்ததுண்டு
உள்முறையாய் வந்ததொரு கணக்கெழுதும் வேலையுண்டு

எங்களுக்கு விட்டுதந்த ஏற்றநல்ல உம்பளமும்
உம்பளமும் குறைகூலியும் மானியமும் வகதுகையும்
இல்லையென எடுத்துக்கொண்டார் வாலவஞ்சி மார்த்தாண்டர்
தனிவழியே விட்டுவிட்டார் எழுத்துவேலை எடுத்துக்கொண்டார்
வந்தேன்காண் உம்மிடத்தில் வரலாறு சொல்லுதற்கு.

16.606. ஏதோ - என்ன. 16.609. மன்னருட - 'மன்னருடைய' என்பதின் பேச்சு வழக்கு. 16.611. மக்க தானம் - குழந்தைகளுக்காக ராமவர்மாவினால் கொடுக்கப்பட்ட தானம். 16.613. உம்பளம் - வெகுமானம். 16.614. குறைகூலி - அரச வரிவிலக்கு. வகதுகை - 'வகைதொகை' என்பதின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. வேம்படிவாள்

## Tampimārkaḷ taṉṉilai uraittal

*antanēram valiyatampi avarētō colluvārām*
*nāñcilvaḷa nāṭatilē ciṅkanallūr paṭaiviṭṭil*
*vēmpaṭivāḷ kōvilkallil viṟṟunta rāmavarmā*
*tampuraṉār rāmavarmā maṉṉaruṭa makkaḷnāṅkaḷ*
*muṉṉirunta tampuraṉār viṭṭutanta vakaitukaiyum*
*makkatāṉam tantatuṇṭu māṉiyaṅkaḷ tantatuṇṭu*
*uḷmuṟaiyāy vantatoru kaṇakkeḻutum vēlaiyuṇṭu*
*eṅkaḷukku viṭṭutanta ēṟṟanalla umpaḷamum*
*umpḷamum kuṟaikūliyum māṉiyamum vakatukaiyum*
*illaiyeṉa eṭuttukkoṇṭār vālavañci mārttāṇṭar*
*taṉivaḻiyē viṭṭuviṭṭār eḻuttuvēlai eṭuttukkoṇṭār*
*vantēṉkāṇ ummiṭattil varalāṟu collutaṟku*

Thus said Valiya Tampi-
"We are the sons of
Rāmavarma Tampirāṉ-
The King who lived at
Vēmpaṭi House in Ciṅkanallūr
Before his death he gave us
Grants in the form of land and authority
A lot of area to collect taxes
Salt mines, coconut gardens
Paddy fields and ponds
Everything for a comfortable life

Except the right to wear the crown
When he died, the kingdom
Went down to his nephew
He is the present ruler
His name is Mārttāṇṭa Varmā
He took everything my father gave
He drove us from our land."

### அழகப்ப முதலியாருக்குத் தம்பிமார் பணம் கொடுத்தல்

என்றுசொல்லி தம்பிமார்கள் எடுத்தாரே சாளியலை
ஒருசாளியல் நல்லபணம் ஒருசாளியல் கள்ளபணம்
ரெண்டுசாளியல் பணமும்கொண்டு தானேயந்த முதலியாரும்
இனியேது கருமமென்ன என்னொடுஉரையும்[1] தம்பிமாரே.

16.620. ரெண்டு - இரண்டு' என்பதின் பேச்சு வழக்கு. 16.621. ஏது கருமம் - என்ன காரியம்.

சு.சொ : 1. எனனொரு உரையும்

### Aḻakappa mutaliyārukkut tampimār paṇam koṭuttal

*eṉṟucolli tampimārkaḷ eṭuttāṟē cāḷiyalai*
*orucāḷiyal nallapaṇam orucāḷiyal kaḷḷapaṇam*
*reṇṭucāḷiyal paṇamumkoṇṭu tāṉēyanta mutaliyārum*
*iṉiyētu karumameṉṉa eṉṉoṭu uraiyum tampimārē*

The Brother didn't complete
Showed signal to his guard
The guard placed two bundles
Of coins, white and black
Bright was the face of Mutaliyār
When he looked at the bag of coins
Asked the Brother to tell his wish
Which he was ready to fulfil.

### தம்பிமார் தம் எண்ணம் உரைத்தல்

மாறிப்படை கொண்டுசென்று மன்னரையும் செயித்துவந்து
பல்பநாபக் கோட்டைதன்னை பாவினையாய்த் தான்பிடித்து
எங்களுட கைவசமாய் இப்போது தந்ததுண்டால்

நாஞ்சில்நாட்டுப் பிடாகைகளில் நல்லதொரு கொள்ளையது
மூன்றுநாள் கொள்ளையது முறைமையோடு தாறோமென்றாரே.

## அழகப்ப முதலியார் படை திரட்டல்

கொள்ளையென்று சொன்னபோது கொண்டாடி முதலியாரும்
தம்பிமார் பெரும்படைக்குத் தக்கதொரு காலாளும்
அழகப்ப[1] முதலியாரும் அவர்படையைத் தான்திலித்து
கம்பளத்தார் ரெட்டிமாரும் கனத்த பட்டாணியுமாய்
வன்னியரும் வாணியரும் வாகான வங்கணத்தார்
கடல்போல் காலாளும் நிகரில்லா சேனைபடை
சந்தோசமாய்த் தான்மகிழ்ந்து தக்கபெரும் படைகுவித்தார்.

16.623. பாவினையாய் - பாவனையாய்; அழகாக. 16.625. கொள்ளை - கொள்ளையிடும் உரிமை. 16.626. முறைமையோடு - உரிமையோடு. தாறோம் - 'தருகிறோம்' என்பதின் பேச்சு வழக்கு. 16.629. திலித்து - அழைத்து. 16.630. கம்பளத்தார் - ஒன்பது வகை தெலுங்கு சாதியருள் ஒருவர்; கம்பளம் விரித்து ஒன்றாகக் கூடிப் பஞ்சாயத்து பேசுவதால் இப்பெயர் வந்தது என்பர்; தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர். ரெட்டிமார் - ஒரு சாதியினர். பட்டாணி - 'பத்தான்ஸ்' என்னும் இசுலாமியரில் ஒரு வகையினர். 16.631. வன்னியர் - ஒரு சாதியினர்; இவர்கள் தங்களை வீரசம்பு முனிவரின் யாகத்தில் பிறந்தவர்கள் எனக்கூறிக் கொள்வர். வாணியர் - எண்ணெய், வெற்றிலை முதலியன விற்கும் வணிகச் சாதியர். வாகான - பொருத்தமான. வங்கணத்தார் - தெலுங்கு பேசும் கம்பளத்து நாயக்கரில் ஒரு பிரிவினர்; இவர்கள் போர் வீரர்களாய்ப் படையுடன் வந்ததை வேறு பல வில்லிசைப் பாடல்கள் கூறும்.

சு.சொல் : 1. அளகப்ப

## Tampimār tam eṇṇam uraittal

*māṟippaṭai koṇṭuceṉṟu maṉṉaraiyum ceyittuvantu*
*palpanāpak kōṭṭaitaṉṉai pāviṉaiyāyt tāṉpiṭittu*
*eṅkaḷuṭa kaivacamāy ippōtu tantatuṇṭāl*
*nāñcilnāṭṭup piṭākaikaḷil nallatoru koḷḷaiyatu*
*mūṉṟunāḷ kōḷḷaiyatu muṟaimaiyōṭu tāṟōmeṉṟārē*

## Aḻakappa mutaliyār paṭai tiraṭṭal

*koḷḷaiyeṉṟu coṉṉapōtu koṇṭāṭi mutaliyārum*
*tampimār perumpaṭaikkut takkatoru kālāḷum*
*aḻakappa mutaliyārum avarpaṭaiyait tāṉtilittu*
*kampaḷattār reṭṭimārum kaṉatta paṭṭāṇiyumāy*
*vaṉṉiyarum vāṇiyarum vākāṉa vaṅkaṇattār*

*kaṭalpōl kālāḷum nikarillā cēṉaipaṭai*
*cantōcamāyt tāṉmakiḻntu takkaperum paṭaikuvittār*

## Enactment of Agreement

"We want your army
To fight against the king
To fight against our enemy!
We want Patmanāpapuram Fort
For your help we allow you
To plunder the wealth of Nāñcil Nāṭu
For three whole days"
Said Valiya Tampi to Mutaliyār
The bargain was acceptable to all.
Mutaliyār was gay and happy
Gave order to mobilize his army
An army comprising *Reṭṭiyārs*
*Paṭṭāṇimars* and *Vaṉṉiyars.*
An army of soldiers of all parts
Assembled at short notice.
When the army moved from there
It was like that of a moving ocean.

## அழகப்ப முதலியாரோடு அனைவரும் புறப்படுதல்

படைகள்தான் குவிக்கவென்ன பணம்படைக்க முதலியாரும்
கடல்வண்ண நிகரில்லா காலாளும் குதிரையுமாய்
திறமுடனே நாஞ்சிநாட்டில்நடக்குதுபார் வீறுவீறாய்
தம்பிமாரும் பெரும்படையும் தக்கதொரு காலாளும்
அழகப்ப முதலியாரும் அவர்படையைத் தான்வகுத்து
கம்பளத்து வீரருடன் வங்கணத்து வீரரெலாம்
வரிவரியாய் தான்தொடர வரிசையது போகுதுபார்
வலியதம்பி மன்னருக்கு வாய்த்தபல்லக்கு தான்கொடுத்தார்
குஞ்சுதம்பி மன்னருக்கு கூண்டபரி மீதிலேறி
மாமன்கொச்சு மாறப்பிள்ளை வாய்த்தபரி மீதிலேறி
அழகப்ப முதலியாரும் ஆடல்பரி மீதிலேறி
குஞ்சுதம்பி வலியதம்பி குடக்காரச் செறுக்கனுமாய்

வெள்ளி வெஞ்சாமரைவீச மிக்கபுகழ் தம்பிமாரும்
நாயன்பொன்னி நாயருடன் வட்டவீசை காரர்களும்
அழகப்ப முதலியாரும் அதிகரெட்டி காலாளும்
தம்பிமாரும் சூழ்ந்துகொண்டு தானேபெரும் படையோட.

16.646. வெள்ளி வெஞ்சாமரை - வெள்ளி பூணிட்ட வெண்சாமரை என்னும் விசறி வகை.

## Aḻakappa mutaliyārōṭu aṉaivarum puṟappaṭutal

*paṭaikaḷtāṉ kuvikkaveṉṉa paṇampaṭaikka mutaliyārum*
*kaṭalvaṇṇa nikarillā kālāḷum kutiraiyumāy*
*tiṟamutaṉē nāñcināṭṭil naṭakkutupār vīṟuvīṟāy*
*tampimārum perumpaṭaiyum takkatoru kālāḷum*
*aḻakappa mutaliyārum avarpaṭaiyait tāṉvakuttu*
*kampaḷattu vīraruṭaṉ vaṅkaṇattu vīrarelām*
*varivariyāy tāṉtoṭara varicaiyatu pōkutupār*
*valiyatampi maṉṉarukku vāyttapallakku tāṉkoṭuttār*
*kuñcutampi maṉṉarukku kūṇṭapari mītilēṟi*
*māmaṉkoccu māṟappiḷḷai vāyttapari mītilēṟi*
*aḻakappa mutaliyārum āṭalpari mītilēṟi*
*kuñcutampi valiyatampi kuṭakkārac ceṟukkaṉumāy*
*veḷḷi veñcāmaraivīca mikkapukaḻ tampimārum*
*nāyaṉpoṉṉi nāyaruṭaṉ vaṭṭavīcak kārarkaḷum*
*aḻakappa mutaliyārum atikareṭṭi kārarkaḷum*
*tampimārum cūḻntukoṇṭu tāṉēperum paṭaiyōṭa*

## Mutaliyār's army marching out

Marching forward to Nāñcil Nāṭu
Moving forward with the Brothers
Filing past several places
Valiya Tampi was on a Palanquin
Kuñcu Tampi was on horseback
Uncle Koccu Mārappa Piḷḷai on another horse
Aḻakappa Mutaliyār on yet another horse.
Poṉṉi Nāyar and others also went there.

## முதலியார் படைகள் கடுக்கரையை அடைதல்

திருநெல்வேலி படைவீட்டில் சிறந்தநல்ல பேட்டைவிட்டு
பெரியாறு தன்னைவிட்டு சிந்துபூந் துறைகடந்து
மின்னிபாளையம் தான்கடந்து மிகுந்தசிங்கி குளம்கடந்து
சாலப்புத் தூருமிட்டு சிறந்தகளக் காடுமிட்டு
நல்லமாவடி ஊரும்விட்டு(சிறந்த) நல்ல தம்பிமார்கள்
அழகப்ப முதலியாரும் சிறந்தராணுவ கூட்டமெலாம்
திருக்கணங்குடி வழியாகச் சிறந்தஆறு தனைவிட்டு
உப்புகண்டான் பொத்தைவிட்டு உற்றதொரு பெரும்படையும்
வேகத்தோடு வழிநடந்து விரசலாக[1] வழிநடக்க
அழகப்ப முதலியுடன் தம்பிகளும் கூடியல்லோ
கடுக்கரை தனிலேவந்து கடுகப்பாளையம் அடித்தாரே.

16.650. பேட்டை - திருநெல்வேலி நகரத்துள் ஒரு பகுதி. 16.651. பெரியாறு - பெரிய ஆறு; தாமிரபரணியைக் குறித்தது. 16.653. களக்காடு - மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில், நாங்குநேரி தாலுகாவிலுள்ள ஓர் ஊர்; இவ்வூர்ச் சிவன் கோயிலை வேணாட்டு அரசன் வீர மார்த்தாண்டன் கட்டினான் என்பர்; பல காலம் இவ்வூர் திருவிதாங்கூர் அரசர்களிடம் இருந்தது. 16.657. உப்புகண்டான் பொத்தை - 'உப்புகண்டான்' என்ற பெயரில் வழங்கப்பெறும் சிறிய குன்று. 16.658. விரசலாக - வேகமாக. 16.659. கூடியல்லோ - சேர்ந்தல்லவா. 16.660. கடுக - வேகமாக. பாளையம் - கூடாரம்.

கூ.சொ : 1. விரிசலாக

## Mutaliyār paṭaikaḷ kaṭukkaraiyai aṭaital

*tirunelvēli paṭaiviṭṭil cir̲antanalla pēṭṭaiviṭṭu*
*periyār̲u tan̲n̲aiviṭṭu cintupūn tur̲aikaṭantu*
*min̲n̲ipāḷaiyam tān̲kaṭantu mikuntaciṅki kuḷamkaṭantu*
*cālapput tūrumiṭṭu cir̲antakaḷak kāṭumiṭṭu*
*nallamāvaṭi ūrumviṭṭu [cir̲anta] nalla tampimārkaḷ*
*aḻakappa mutaliyārum cir̲antarāṇuva kūṭṭamelām*
*tirukkaṇaṅkuṭi vaḻiyākac cir̲antaār̲u tan̲aiviṭṭu*
*uppukaṇṭān̲ pottaiviṭṭu ur̲r̲atoru perumpaṭaiyum*
*vēkattōṭu vaḻinaṭantu viracalāka vaḻinaṭakka*
*aḻakappa mutaliyuṭan̲ tampikaḷum kūṭiyallō*
*kaṭukkarai tan̲ilēvantu kaṭukappāḷaiyam aṭittārē*

Tirunelvēli, Pēṭṭai and
Cintupūntur̲ai;

Minnipāḷayam and Mãvaṭi
Tirukkaṇaṅkuṭi and Kaṭukkarai
Were the places they passed by.
The army had their stay
At the foot of the Kaṭukkarai hill.
As the Mutaliyãr instructed
They all camped till dawn.

### படைகளின் அணிவகுப்பும் ஆரவாரமும்

பாளையம் சேகரித்துப் பண்பதாய் முதலியாரும்
நாளைநாம் போவோமென்று வேளையது பார்த்திருக்க
விரசலுடன் தம்பிமார்கள் சடுதியில் கெடுதிசெய்த
உதயத்திலே படைதிலித்தாரே ஆதித்தன் உதிக்குமுன்னே
அங்கேயவர் அணிவகுத்தார் அவயமிட்டு ஆதாளிசெய்தார்.

### அழகப்ப முதலியாரின் படைகள் கொள்ளையிட்ட இடங்கள்

கடுக்கரை ஊரதிலே கடுகப்படை தான்நடத்தி
மூன்றுவகையாய் படைதிரித்து மிகுந்தகொள்ளை யிடுவாராம்
தெரிசனங்கோப்பு ஊரதிலும் சிறமீட்ட ஊரதிலும்
சிறந்தஅழகிய பாண்டியபுரந்தனிலும் மூன்றுநாட்கள் கொள்ளையிட்டார்
இடங்கைக்கே வந்தபடை ஏற்றபுகழ் நாஞ்சிநாட்டை
நாஞ்சிநாட்டுப் பிடாகையெலாம் நன்றியுடன் கொள்ளையிட்டார்
பன்னிரண்டு பிடாகையிலும் பரந்தேறிக் கொள்ளையிட்டார்
அப்படியே தம்பிமார்கள் அழித்தாரே நாஞ்சிநாட்டை
ஊரழித்த படைகளெல்லாம் உடன்திரும்பி சேர்ந்திடவே
சேர்ந்துபடை அத்தனையும் திட்டுவிளை தனிலேவந்து
சென்றிறங்கிக் கூடாரம் திறமுடனே தானடித்தார்
அன்றுதங்கி முழித்திளகி[1] அதிகாலை எழுந்திருந்து
திட்டுவிளை தான்கடந்து சென்றிறங்கிக் கொள்ளையிட்டார்
பூதப்பாண்டி பிடாகையெலாம் பெருகஅவர் கொள்ளையிட்டார்
புத்தேரி பிடாகையெலாம் அழித்தாரே கொள்ளையிட்டு
வடசேரி மேடதிலும் கூடாரம் தானடித்து
அன்றுதங்கி முழித்திளகி அதிகாலை எழுந்திருந்து
வடசேரி மேடதிலும் வாய்த்தகோட்டாறு பிடாகையிலும்

ஏழகர நாடதிலும் இன்பமுடன் கொள்ளையிட்டார்
கடல்போல படைபரந்து இடலாக்குடி செல்லுதுபார். 685

16.662. வேளை - நேரம். 16.663. விரிசல் - வேகம்., சடுதி - சீக்கிரம். 16.664. ஆதித்தன் - சூரியன். 16.665. அவயம் - மிகுந்த ஓசை. ஆதாளி - ஆரவாரம். 16.668. தெரிசனங்கோப்பு - குமரி மாவட்டம் தோவாளை தாலுகாவில் உள்ள ஓர் ஊர்; இங்குள்ள கோவிலில் முதலாம் ராஜராஜனின் "காந்தளூர் சாலை . . . "எனத் தொடங்கும் கல்வெட்டு உள்ளது; இவ்வூர் கொள்ளையடிக்கப் பட்டதை முதலியார் ஆவணம் கூறும். சிறமீட்ட ஊர் - தற்பொழுது இவ்வூர் 'சிறமடம்' என வழங்கப்படுகிறது; விரவநெல்லூர் கல்வெட்டு ஒன்று (கி.பி. 1682) இவ்வூரை 'சிறைமீட்டத்தூர்' எனக் கூறும். 16.670. இடங்கை - வலங்கை, இடங்கை என்னும் அக்கால படைப்பிரிவுகளுள் இரண்டாம் வகை படைப்பிரிவு. 16.669. அழகியபாண்டியபுரம் - இவ்வூர் கல்வெட்டு (கி.பி.1076) ஒன்று 'அதியனூரான அழகியபாண்டியபுரம்' எனக்' குறிப்பிடும்; சங்க கால அதிகன் பெயரால் இவ்வூர் ஏற்பட்டது என்ற கருத்தும் உண்டு; பொதிய மலை அடிவாரத்திலுள்ள இவ்வூரில் நாஞ்சில் நாட்டில் வரிபிரிக்கும் பொறுப்பை வகித்த முதலியார்கள் வாழ்ந்தனர். 16.672. பன்னிரண்டு பிடாகை - மேல் பிடாகை, நடுவுப் பிடாகை, அழகியபாண்டியபுரம் பிடாகை, அனந்தபுரம் பிடாகை, தாழாக்குடி பிடாகை, தோவாளை பிடாகை, படப்பற்று பிடாகை, கோட்டாறு பிடாகை, பறக்கை பிடாகை, தேரூர் பிடாகை, சுசீந்திரம் பிடாகை, அகஸ்தீஸ்வரம் பிடாகை என்னும் பன்னிரண்டு பிடாகைகள். 16.675. திட்டுவிளை - தெரிசனங்கோப்பு ஊரை அடுத்த ஓர் ஊர். 16.677. முழித்திளகி - துயின்று. 16.679. பூதப்பாண்டி பிடாகை - தோவாளை தாலுகாவில் அமைந்த இவ்வூர் கல்வெட்டு ஒன்று (கி.பி 1578) 'நாஞ்சி நாட்டுப் பூதப்பாண்டி' எனக் குறிக்கிறது; சங்கப் பாடல் கூறும் ஒல்லையூர் பூதப்பாண்டியன் என்ற மன்னரின் பெயரால் உருவான ஊர் இது என்ற கருத்தும் உண்டு; இக்கதைப்பாடல் பூதப்பாண்டியை பன்னிரு பிடாகைகளுள் ஒன்றாகத் தவறாகக் கூறுகிறது. 16.680. புத்தேரி பிடாகை - நாகர்கோயிலின் வடக்கே ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்த இவ்வூரையும் இக்கதைப்பாடல் தவறுதலாக பன்னிரு பிடாகைகளுள் ஒன்றாகக் கூறுகிறது. 16. 683. வடசேரி மேடு - நாகர்கோவிலுக்கு வடக்கே இருக்கும் ஒரு பகுதி. 16.684. ஏழகர நாடு - நாகர்கோவிலுள் ஒரு பகுதியை இவ்வூர் பெயர் குறிப்பிடும்; இங்குள்ள திருமால் கோவிலில் மார்த்தாண்டவர்மா மறைந்திருந்தார் என ஒரு வாய்மொழிக்கதை வழக்கில் உள்ளது; இப்போது இப்பகுதி வாகையடித் தெரு என வழங்கப்படுகிறது.

சு.சொ : 1. முளித்திமகி

## Paṭaikaḷin aṇivakuppum āravāramum

*pāḷaiyam cēkarittup paṇpatāy mutaliyārum*
*nāḷaināṃ pōvōmenṟu vēḷaiyatu pārttirukka*
*viracaluṭaṉ tampimārkaḷ caṭutiyil keṭuticeyta*
*utayattilē paṭaitilittārē ātittaṉ utikkumuṉṉē*
*aṅkēyavar aṇivakuttār avayamiṭṭu ātāḷiceytār*

## Aḻakappa mutaliyāriṉ paṭaikaḷ koḷḷaiyiṭṭa iṭaṅkaḷ

*kaṭukkarai ūratilē kaṭukappaṭai tāṉnaṭatti*
*mūṉṟuvakaiyāy paṭaitirittu mikuntakoḷḷai yiṭuvārām*

*tericananköppu ūratilum ciramitta ūratilum*
*cirantaalakiya pāntiyapurantanilum mūnrunātkaļ kollaiyittār*
*itankaikkē vantapatai ērrapukaļ nāñcināttai*
*nañcināttup pitākaiyelām nanriyutan kollaiyittār*
*pannirantu pitākaiyilum parantērik kollaiyittār*
*appatiyē tampimārkaļ alittārē nāñcināttai*
*ūralitta pataikaļellām utantirumpi cērntitavē*
*cērntupatai attanaiyum tittuviļai tanilēvantu*
*cenriranki kūtāram tiramutanē tānatittār*
*anrutanki mulittilaki atikālai eluntiruntu*
*tittuviļai tānkatantu cenrirankik kollaiyittār*
*pūtappānti pitākaiyelām perukaavar kollaiyittār*
*puttēri pitākaiyelām alittārē kollaiyittu*
*vatacēri mētatilum kūtāram tānatittu*
*anrutanki mulittilaki atikālai eluntiruntu*
*vatacēri mētatilum vāyttakōttāru pitākaiyilum*
*ēlakara nātatilum inpamutan kollaiyittār*
*katalpōl pataiparantu italākkuti cellutupār*

## Army on offensive

Next day they went round, and round Katukkarai
To plunder the surrounding villages.
In three divisions they went
To bring all the wealth to the camp
On the left side they went to
Alakiyapāntiyapuram and Tericanankōppu
And all the twelve *pitākais*
The richest places of the land
The two Brothers and the army
Plundered and destroyed the whole of Nāñcil Nātu
And reached the village Tittuviļai.
Pūtappānti, Puttēri
Kōttār and Vatacēri.

## Heading towards Patmanāpapuram

Were the next places
They took possession of
Not stopping with that
Not satisfied with that
They all went to Ē̱lakaram
And Iṭalākkuṭi which became
Their next target.

### தம்பிமார்கள் சுசீந்திரம் சென்று உறவினரைச் சந்தித்தல்

குஞ்சுதம்பி வலியதம்பி சொச்சுமாறப் பிள்ளையுடன்
கூடித்திரண்ட தம்பிமார்கள் குருக்கள் பண்டாரக்குடிதனிலே
தங்கைகொச்சு மாடம்மையும் தாயாரையும் வந்துகண்டு
தாயாரையும் வந்துகண்டு தம்பிமார்கள் ஏதுசொல்வார்.

### தம்பிமார்கள் தங்கள் எண்ணத்தைத் தாயிடமுரைத்தல்

மலங்கவேண்டாம் தாயாரே மலைநாட்டை அழித்திடுவோம் 690
வாலவஞ்சி தம்புரானை மலைமேலே விரட்டிடுவோம்
பல்பநாபபுரக் கோட்டையிலே கால்வைப்போம் நாழியிலே
என்றுசொல்லித் தம்பிமார்கள் இருக்குமந்த நேரத்திலே.

**16.690.** மலங்க வேண்டாம் - மயங்க வேண்டாம்; 'குழப்பமடைய வேண்டாம்' எனினும் பொருந்தும். மலைநாடு - திருவிதாங்கூர் நாட்டைக் குறித்தது. **16.692.** நாழியிலே - ஒரு நாழிகை நேரத்திலே; ஒரு நாழிகையாவது 24 நிமிடம் கொண்ட ஒரு கால அளவு.

### Tampimārkaḷ cucīntiram ceṉṟu uṟaviṉaraic cantittal

*kuñcutampi valiyatampi koccumāṟap piḷḷaiyuṭaṉ*
*kūṭittiraṇṭa tampimārkaḷ kurukkaḷ paṇṭārakkuṭitaṉilē*
*taṅkaikoccu māṭammaiyum tāyāraiyum vantukaṇṭu*
*tāyāraiyum vantukaṇṭu tampimārkaḷ ētucolvār*

### Tampimārkaḷ taṅkaḷ eṇṇattait tāyiṭamuraittal

*malaṅkavēṇṭām tāyārē malaināṭṭai aḻittituvōm*
*vālavañci tampurāṉai malaimēlē viraṭṭituvōm*
*palpanāpapurak kōṭṭaiyilē kālvaippōm nāḻiyilē*
*eṉṟucollit tampimārkaḷ irukkumanta nērattilē*

Kuñcu Tampi, Valiya Tampi
Koccu Mārappa Piḷḷai and their company
Reached Kuru's Paṇṭārakkuṭi
At Cucīntiram, the place of asylum
Met their mother and their sister
Said these words to them:
"Oh, mother! Don't Brother
We will destroy the Hill land
We will drive Vañci Tampirāṉ to the woods
It is a matter of minutes to conquer Patmanāpapuram Fort."

### சுசீந்திரம் கோயிலை முதலியார் படைகள் கொள்ளையிடுதல்

அழகப்ப முதலிபடை அங்கேயவர் சொன்னபடி
கோவிலுள்ள பாத்திரமும் கூண்டகருவ சட்டிகளும்
கெண்டிகளும் குளச்சட்டுவம் நிலவாயும் கோருவையும்
தானவர் கொள்ளையாறச் சரப்பளிபொன் மாலைகளும்
தங்கக் கொடிமர மானதுவும் செம்புக்கொடிமர மானதுவும்
அங்கேயவர்கள்[1] கொள்ளையாடிக் கோவிலுள்ள வகைகளெல்லாம்
கொள்ளையிட்டார் முதலியாரும் சுமடுகட்டி வைத்துக்கொண்டார்.

16.695. கோவிலுள்ள - கோவிலின் உள்ளே உள்ள. கருவச்சட்டி - வாயகன்ற ஒரு வகை பித்தளைப் பாத்திரம். 16.696. கெண்டி - நீர்க் கெண்டி; சற்று நீண்ட குழல் போன்ற மூக்குடைய, வெண்கலம் அல்லது பித்தளையால் செய்யப்பட்ட ஒரு வகை பாத்திரம். குளச் சட்டுவம் - சுமார் மூன்றிலிருந்து மூன்றரை மீட்டர் நீளமுடைய, சாதம் மற்றும் பாயசத்தைக் கிளறப் பயன்படுகின்ற, இரும்பு அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்ட கரண்டி. நிலவாய் - கைப்பிடிகளுடன் கூடிய, வாயகன்ற, செம்பினால் செய்யப்பட்ட ஒரு வகை பாத்திரம்; பெரும்பாலும் பந்திகளில் சாதம் விளம்ப இது பயன்படும். கோருவை - சாதத்தை எடுக்கப் பயன்படுகின்ற வெங்கலத்தாலான, கைப்பிடியுடன் கூடிய ஒரு வகை கரண்டி. 16.697. கொள்ளையாற - வேண்டுமட்டும் கொள்ளையிட. சரப்பளி - ஒரு வகை ஆபரணம். 16.698. தங்கக் கொடிமரம் - தங்கத் தகட்டால் வேயப்பட்ட கொடிமரம்; இத்தகு கொடிமரம் சுசீந்திரத்தில் கிடையாது; தவறான செய்தி. செம்புக் கொடிமரம் - செம்புத் தகட்டால் வேயப்பட்ட இரண்டு கொடிமரங்கள் சுசீந்திரம் கோயிலில் உண்டு; இவற்றை முதலியார் கவர்ந்து சென்றமைக்கு வரலாற்று ஆதாரங்கள் இல்லை. 16.700. சுமடு - மூட்டை.

சு.சொ : 1. அங்கேவர்கள்

### Cucīntiram kōyilai mutaliyār paṭaikaḷ koḷḷaiyiṭutal

*aḻakappa mutalipaṭai aṅkēyavar coṉṉapaṭi*
*kōviluḷḷa pāttiramum kūṇṭakaruva caṭṭikaḷum*

*keṇṭikaḷum kuḷaccaṭṭuvam nilavāyum kōruvaiyum*
*tāṉavar koḷḷaiyārac carappaḻipoṉ mālaikaḷum*
*taṅkakkoṭimara māṉatuvum cempukkoṭimara māṉatuvum*
*aṅkēyavarkaḷ koḷḷaiyāṭik koviluḷḷa vakaikaḷellām*
*koḷḷaiyiṭṭār mutaliyarum cumaṭukaṭṭi vaittuk koṇṭār*

As per the earlier agreement
Aḻakappa Mutaliyār and his mercenary
Went inside Cucintiram temple
Swindled everything including brass vessels
Bundled gold and silver in neat packets.

### முதலியார் படைகள் பல இடங்களைக் கடந்து வில்லுக்கீறியில் பாளையமிடுதல்

அன்றுதங்கி முழித்திளகி அதிகாலம் எழுந்திருந்து[1]
மறுநா ளுதயத்திலே வாய்த்தபெரும் படையோட
அழகப்ப முதலியாரும் அங்கிருந்த தம்பிமாரும்
அவர்கள்படை தானிளகி[2] வடசேரி மேடுமிட்டு
வாய்த்தபெரும் படையோடு தக்கதொரு காலாளும்
தக்கதொரு காலாளும் குதிரைராணு கூட்டத்துடன்
பஞ்சவர்ணக் காடுமிட்டு பார்வதிவாழ் அகரமிட்டு
குடைமேலே குடைநெகிழ கோடிபடை சூழ்ந்துவர
கணியாங்குளம் கடந்து கள்ளியங்காடு மிட்டு
சுங்காங் கடையில்வந்து சூழ்ந்தபடை தான்திரித்தார்
இடங்கையிலும் வலங்கையிலும் ஏற்றநெற்றி படையதிலும்
வாய்த்தகுதிரை ராணுவுடன் சுஞ்சிமடம் தான்கடந்து
அழகப்ப முதலியாரும் அவர்துடர்ந்து தான்வரவே
கருப்புக்கட்டி யாறுமிட்டு குதிரைபாஞ்சாங் குளம்கடந்து
வில்லுக்கீறி அம்பலமும் மிக்கயேரி குளமதிலும்
ஏரி குளமதிலும் இன்பமுடன் பாளையங்கள்
பாளையங்கள் செய்திருந்து பண்பாக முதலியாரும்
கூடாரம் தானடித்துக் கூண்டவர்கள் தானிருந்தார்.

### முதலியார் படைகள் நாலாலமுட்டு சந்தையில் பாளயமிடுதல்

முள்ளுவேலி இட்டல்லவோ முதலியாரும் தானிருந்து
இடங்கைக்கே வந்துபடை ஏத்தநல்ல தம்பிமாரும்

அய்க்கனாரு குளத்துவழி[3] ஆட்டுவாணியன் மடம்கடந்தார்
சாலைவிளை மடம்கடந்து தம்பிமாரும் பெரும்படையும்
இரணிய னூரும்விட்டு ஏத்தநாலா மூட்டுசந்தையிலே
நாட்டினாம் பாளையத்தை நன்றாக இறுக்கிக்கட்டிக்
கூண்டபெரும் படையெல்லாம் கொடிபறக்கக் கூவுதுபார்.

### முதலியார் படைகள் பீரங்கியால் சுடுதல்

வலங்கைக்கே வந்தபடை வாய்த்தஏரி குளமதிலும்
இடங்கைக்கே வந்தபடை ரத்தநாலால மூட்டுசந்தையிலும்
வலங்கையிலும் இடங்கையிலும் வைத்தாரே பீரங்கி.

16.701. அதிகாலம் - விடியற்காலை நேரம். 16.702. படையோட - படையோடு. 16.704. இளகி - புறப்பட்டு. 16.706. ராணு - ராணுவம். 16.711. இடங்கை, வலங்கை - இரு வகை படை பிரிவுகள். நெற்றிப்படை - முன்னே செல்லும் படை; தற்கொலை படை என்றும் அழைக்கப்படும். 16.712. கஞ்சிமடம் - வழிப்போக்கர்களுக்கு இலவசமாகக் கஞ்சி வழங்குமிடம். 16.714. இட்டு - கடந்து. 16.715. அம்பலம் - கோயில். 16.718. கூண்டு - பொருந்தி. 16.720. ஏத்த - 'ஏற்ற' என்பதின் பேச்சு வழக்கு. 16.721. அய்க்கனாரு குளத்து வழி - கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் தக்கலை அடுத்த ஓர் ஊர். ஆட்டுவாணியன் மடம் - தக்கலைக்கும் சுங்கான்கடைக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள ஒரு கல் மண்டபம். 16.722. சாலவிளை மடம் - வில்லுக்கீறி அருகே உள்ள ஒரு மண்டபம். 16.725. கூண்ட - சேர்ந்த. கூவுது - ஓசை எழுப்புகிறது.

சு.சொ : 1.. எளுந்திருந்து 2. பாடைதானிழகி 3. குளத்துவளி

## Mutaliyār paṭaikaḷ pala iṭaṅkaḷai kaṭantu villukkīṟiyil pāḷaiyamiṭutal

*aṉṟutaṅki muḻittiḷaki atikālam eḻuntiruntu*
*maṟunā ḷutayattilē vāyttaperum paṭaiyōṭa*
*aḻakappa mutaliyārum aṅkirunta tampimārum*
*avarkaḷpaṭai tāṉiḷaki vaṭacēri mēṭumiṭṭu*
*vāyttaperum paṭaiyōṭu takkatoru kālāḷum*
*takkatoru kālāḷum kutirairāṇu kūṭṭattuṭaṉ*
*pañcavarṇak kāṭumiṭṭu pārvativāḻ akaramiṭṭu*
*kuṭaimēlē kuṭainekiḻa kōṭipaṭai cūḻntuvara*
*kaṇiyāṅkuḷam kaṭantu kaḷḷiyaṅkāṭu miṭṭu*
*cuṅkāṅ kaṭaiyilvantu cūḻntapaṭai tāṉtirittār*
*iṭaṅkaiyiluṃ valaṅkaiyilum ēṟṟaneṟṟi paṭaiyatilum*
*vāyttakutirai rāṇuvuṭaṉ kañcimaṭam tāṉkaṭantu*
*aḻakappa mutaliyārum avartuṭarntu tāṉvaravē*
*karuppukkaṭṭi yāṟumiṭṭu kutiraipāñcāṅ kuḷamkaṭantu*

*villukkiṟi ampalamum mikkayēri kuḷamatilum*
*ēri kuḷamatilum iṉpamutaṉ pāḷaiyaṅkaḷ*
*pāḷaiyaṅkaḷ ceytiruntu paṇpāka mutaliyārum*
*kūṭāram tāṉaṭittuk kūṇṭavarkaḷ tāṉiruntār*

### Muṭaliyār paṭaikaḷ nālālamūṭṭu cantaiyil pāḷayamiṭutal

*muḷḷuvēli iṭṭallavō mutaliyārum tāṉiruntu*
*iṭaṅkaikkē vantupaṭai ēttanalla tampimārum*
*aykkaṉāru kuḷattuvaḷi āṭṭuvāṇiyaṉ maṭamkaṭantār*
*cālaiviḷai maṭamkaṭantu tampimārum perumpaṭaiyum*
*iraṇiya ṉūrumviṭṭu ēttanālā mūṭṭu cantaiyilē*
*nāṭṭiṉām paḷaiyattai naṉṟāka iṟukkikkaṭṭik*
*kūṇṭaperum paṭaiyellām koṭiparakkak kūvutupār*

### Mutaliyār paṭaikaḷ pīraṅkiyāl cuṭutal

*valaṅkaikkē vantapaṭai vāyttaēri kuḷamatilum*
*iṭaṅkaikkē vantapaṭai rttanālāla mūṭṭucattaiyilum*
*valaṅkaiyilum iṭaṅkaiyilum vaittārē piraṅki*

### Army camping at places

Spent the night at Cucīntiram
Next morning passing through
Vaṭacēri, Pārvatipuram
Pañcavarṇakāṭu. Pārvatīpuram
Kaṇiyaṅkuḷam, Kaḷḷiaṅkāṭu
Cuṅkāṉkaṭai and Villukīṟi
Finally stayed near a lake
When the two divisions
The right and the left
Assembled at the particular place
They started their journey
And stopped at Iraṇiyal next
Fixed their camp and prepared
For the fight.

### மன்னர் மந்திரிகளுடன் ஆலோசனை செய்தல்

பீரங்கி முழக்கமெல்லாம் பெருகமன்னர் தான்கேட்டு
திருமனது தான்சடைந்து திருவிளங்கள் பற்றுவாராம்

தம்பிமார் படைகள்கொண்டு சடுதியிலே வந்துவிட்டார்
மாத்தான்மேல் படைபோக வகையேது மந்திரியே.

### மந்திரிமார் ஆலோசனைகளும் மன்னர் முடிவும்

கொச்சிரவி மார்த்தாண்டபிள்ளை கூறுமந்த தளவாயும்
தளவாயும் மந்திரியும் தானையவர் ஒன்றாய்க்கூடிக்
கிட்டிணன் கேசவன்மந்திரியும் கிருபையுடன் அறிவிக்கவே
வாலவஞ்சி மார்த்தாண்டர் மன்னருட படைகளெல்லாம்
ஒதுங்கிப் படைநடத்திப் போவதற்குக் கற்பித்தார்
எதிர்த்துப்படை போவதற்கு யாரைஅனுப்ப வேண்டுமென்றார்
காரக்கோட்டு பேயிகுறுப்பு களக்கூட்டத்துப் பப்புபிள்ளை
மகுடசேரி மார்த்தாண்டன் மாமன்கொச்சு பிள்ளையுடன்
வெள்ளநாட்டு கோட்டைதன்னில் நீலகண்ட பிள்ளையுடன்
ஆனையோட கலப்பிடிக்கும் அனந்தபத்ம நாபபிள்ளையுடன்
ஆரியநாட்டு கோட்டைதனில் அடக்கியர சாண்டிருந்த
எட்டுரெண்டு பதினாறு ஏற்றுவிட்ட பிள்ளைமாரும்
பதினாறுபேர் மாடம்பிமார் பிள்ளைகளாய் ஆண்டிருந்த
மாடம்பிகள் பதினாறுபேரை வரவழைத்து மன்னவரும்
தம்பிமார் தன்னுடனே தானேபடை பொருவதற்கு
அழைத்துவர உடனேசொல்லி அரசமன்னர் கற்பிக்கவே.

**16.730.** சடைந்து - சோர்ந்து. திருவிளங்கள் பற்றுவாராம் - திரு மனதிலே நினைப்பாராம். **16.731.** சடுதியிலே - விரைவாக. **16.732.** மாத்தான் - 'மாற்றான்' என்பதின் பேச்சுவழக்கு; பகைவன் என்ற பொருளில். **16.734.** தானை - படை. **16.737.** ஒதுங்கி - பதுங்கி. கற்பித்தார் - ஆணையிட்டார். **16.739-746.** காரக்கோட்டு . . . . மன்னவரும் - இவ்வரிகளில் பதினாறு மாடம்பிமார்களின் பெயர்கள் எட்டு பேர் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பெயர்களும் வரலாற்று ரீதியாகச் சரியானவை அல்ல; மதிலக ஓலைகளில் மாடம்பிமார்கள் யார் யார்? என்பது பற்றிய தெளிவான குறிப்புகள் உள்ளன. **16.748.** கற்பிக்கவே - ஆணையிடவே.

### Manṉar mantirikaḷuṭaṉ ālōcaṉai ceytal

*piranki muḻakkamellām perukamaṉṉar tāṉkēṭṭu*
*tirumaṉatu tāṉcaṭaintu tiruviḷaṅkaḷ paṟṟuvārām*
*tampimār paṭaikaḷkoṇṭu caṭutiyilē vantuviṭṭār*
*māttāṉmēl paṭaipōka vakaiyētu mantiriyē*

### Mantirimār ālōcaṉaikaḷum maṉṉar muṭivum

*kocciravi mārttaṇṭapiḷḷai kūṟumanta taḷavāyum*
*taḷavāyum mantiriyum tāṉaiyavar oṉṟāykūṭik*

*kiṭṭinaṉ kēcavaṉmantiriyum kirupaiyuṭaṉ aṟivikkavē*
*vālavañci mārttāṇṭar maṉṉaruṭa paṭaikaḷellām*
*otuṅkip paṭainaṭattip pōvataṟkuk kaṟpittār*
*etirttuppaṭai pōvataṟku yāraiaṉuppa vēṇṭumeṉṟār*
*kārakkōṭṭu pēyikuṟuppu kaḷakkūṭṭattup pappupiḷḷai*
*makuṭacēri mārttāṇṭaṉ māmaṉ koccuppiḷḷaiyuṭaṉ*
*veḷḷanāṭṭu kōṭṭaitaṉṉil nīlakaṇṭa piḷḷaiyuṭaṉ*
*āṇaiyōṭa kalappiṭikkum aṉantapatma nāpappiḷḷaiyuṭaṉ*
*āriyanāṭṭu kōṭṭaitaṉil aṭakki yaracāṇṭirunta*
*eṭṭureṇṭu patiṉāṟu ēṟṟuviṭṭa piḷḷaimārum*
*patiṉāṟupēr māṭampimār piḷḷaikaḷāy āṇṭirunta*
*māṭampikaḷ patiṉāṟupērai varavaḻaittu maṉṉavarum*
*tampimār taṉṉuṭaṉē tāṉēpaṭai poruvataṟku*
*aḻaittuvara uṭaṉēcolli aracamaṉṉar kaṟpikkavē*

### Attack on the Fort

The army with the help of cannon
Made shots that reached the Fort
That made the King upset
Called his ministers at once
To devise a plan to face the enemy army.
The chief, Koccu Ravi Mārttāṇṭa Piḷḷai and
The Minister Kēcavaṉ Kiruṣṇaṉ
Were in conclave with the king
They decided to authorise
Kaḻakkūṭṭam Pappup Piḷḷai, Makuṭacēri Mārttāṇṭaṉ
Uncle Koccu Piḷḷai, Veḷḷa Nāṭu Nīlakaṇṭa Piḷḷai
Aṉantapatmanāpa Piḷḷai, and
Āriya Nāṭu Piḷḷai of the Eight Houses
And others to lead the King's army.

### மன்னரின் படைகள் தக்கலை வருதல்

கற்பித்தாரே மன்னவரும் மாடம்பிமார் தன்னோடே
சென்றபடைவீடு முத்தாவெளியும் செருமியவர் அணிவகுத்தார்
அணியதுநெருங்க ஆனைப்படை அதிலேஒற்றைக் குதிரைப்படை

மருந்துஉண்டை வாணக்கெட்டும் மாடம்பிமார் பக்கம்சேரும்
சென்றபடைவீடு தன்னைவிட்டு திருவிதாங்கோடு தனைக்கடந்து
தக்கலை ஊரதுவும்கடந்து தக்ககூடாரம் அடித்தாரே.

16.750. முத்தாவெளி - 'முற்றத்து வெளி' என்பதின் பேச்சு வழக்கு. செருமி - கூடி. 16.751. ஆனை - 'யானை' என்பதின் பேச்சு வழக்கு. வாணக்கெட்டு - வாணவேடிக்கைக் காட்டும் 'கம்பங்கட்டு'; வெடிமருந்துக்கட்டு எனினும் அமையும்.

## Mannarin pataikal takkalai varutal

*karpittārē mannavarum mātampimār tannōtē*
*cenrapataivītu muttāveliyum cerumiyavar anivakuttār*
*aniyatuneruṅka ānaippatai atilēorraik kutiraippatai*
*maruntuuntai vānakkettum mātampipār pakkamcērum*
*cenrapataivītu tannaivittu tiruvitāṅkōtu tanaikkatantu*
*takkalai ūratuvumkatantu takkakūtāram atittārē*

The king's army of soldiers
With horses and elephants
Mobilized from all places
Marched towards Takkalai
And spent the night in camps.

## இருபடைகளும் போரிடுதல்

மன்னவரும் கூடாரம் வந்தடித்த நேரம்தில்.
அழகப்ப முதலியாரும் ஆனதொரு தம்பிமாரும்
வலங்கைக்கே முதலியாரும் வாய்த்தபடை தானிளக்கி[1]
சந்தைவெளித் தோட்டத்திலும் சுடுகாட்டு வெளிதனிலும்
இடங்கைக்கே தம்பிமார்கள் ஏத்தபடை தான்திலித்தார்
திருவிதாங் கோடதிலும் சிறந்தகேரள புரமதிலும்
கொற்றமுடி மன்னருட கோடிப்படை தானிளக்கி[2]
வாலவஞ்சி மார்த்தாண்ட மன்னருட பெரும்படையும்
இருவருட பெரும்படையும் எதிர்த்துவெட்டி நிற்கும்நேரம்
மாரிசரம் பொழிந்ததுபோல் வந்தெதிர்த்த நேரமதில்
இவர்படையும் அவர்படையும் எதிர்த்துப் பொருதிடவே.

## போர்க்களக் காட்சிகள்

வெட்டுக் கலந்ததுவும் வெட்டம்பு தைத்ததுவும்
வீரர்களும் ராகுத்தன்மாரும் வெட்டும்படி வெட்டுவாராம்

தட்டியவர் வெட்டவெட்ட எட்டியவர் தான்குத்த
குத்துக்கள் பட்டிடவே குதிரைகள் விழுந்திடவே
பக்கத்து மாடம்பிமார் பாருபாரெனவே நிற்பாராம்
இருபேர் பெரும்படையும் எதிர்த்துமுடுகி வெட்டுவாராம்.

16.757. இளக்கி - நகரச்செய்து. 16.759. ஏத்த - 'ஏற்ற' என்பதின் பேச்சு வழக்கு. திலித்தார் - செலுத்தினார். 16.763. எதிர்த்து வெட்டி நிற்கும் நேரம் - நேரடியாக எதிர்த்து நின்று போர் செய்யும் நேரம். 16.764. மாரி - மழை. சரம் - அம்பு. பொருதிட - போர் செய்திட. 16.767. ராகுத்தன்மார் - குதிரைவீரர். 16.771. முடுகி - வேகமாக.

சு.சொ : 1. தானிழக்கி 2. தானழகி

## Iru paṭaikaḷum pōriṭutal

*maṉṉavarum kūṭāram vantaṭitta nēramatil*
*aḻakkappa mutaliyārum āṉatoru tampimārum*
*valaṅkaikkē mutaliyārum vāyttapaṭai tāṉiḷakki*
*cantaiveḷit tōṭṭattilum cuṭukāṭṭu veḷitaṉilum*
*iṭaṅkaikkē tampimārkaḷ ēttapaṭai tāṉtilittār*
*tiruvitāṅ kōṭatilum ciṟantakēraḷa puramatilum*
*koṟṟamuṭi maṉṉaruṭa kōṭippaṭai tāṉiḷaki*
*vālavañci mārttāṇṭa maṉṉaruṭa perumpaṭaiyum*
*iruvaruṭa perumpaṭaiyum etirttuveṭṭi niṟkumnēram*
*māricaram poḻintatupōl vantetirtta nēramatil*
*ivarpaṭaiyum avarpaṭaiyum etirttu porutiṭavē*

## Pōrkkaḷak kāṭcikaḷ

*veṭṭuk kalantatuvum veṭṭimpu taittatuvum*
*vīrarkaḷum rākuttaṉmārum veṭṭumpaṭi veṭṭuvārām*
*taṭṭiyavar veṭṭaveṭṭa eṭṭiyavar tāṉkutta*
*kuttukkaḷ paṭṭiṭavē kutiraikaḷ viḻuntiṭavē*
*pakkattu māṭampimār pārupāreṉavē niṟpārām*
*irupēr perumpaṭaiyum etirttumuṭuki veṭṭuvārām*

## Terrific Fight

Aḻakappa Mutaliyār and the elder brother
Along with the right wing
Encountered the king's men
At a place near a market.

The younger brother with the left wing
Encountered the king's men
At Tiruvitāṅkōṭu and Kēraḷapuram.
The two armies came straight and fought
Swords crossed, spears brazed
Horses killed, Elephants lashed
Soliders thrashed, Sergeants crushed
Headless bodies, heaps of hands and legs
Hideous sight, Oh, terrific fight!
Braving the crowd there went
The Brothers on horses two
They cut the enemy horses into three
And mutilated the elephants into four.

### அழகப்ப முதலியின் படைகள் முன்னேறுதல்

வெட்டவே தம்பிமாரும் வேந்தர் பெரும்படையும்
விறுவிறென அழகப்பன் முதலிவிருது குறித்துவெட்டி
வெட்டவே சட்டைகளற விழுக்கென்று குறித்துவெட்ட
விருது குறித்துவெட்ட வீரர்கள் குறியாகவிழ[1]
வெட்டிக்கொண்டு சுடுவாரும் சுடுவார்தலை யதுஉருளவே
தரைதனிலே[2] தோளோடுசெவியறவே தொட்டவர்கிட்டே முட்டுகள்தட்ட
தொடையது தட்டவிழுவாரும் அணிகள்சிக்கிட அலைவாரும்
சிதறியேமுட்டியே தட்டழிந்து காலொடுகைகள் கரங்களறவே[3]
முதுகினில் வெட்டுவாரும் வெட்டவேதட்டி மீதெழும்பி[4]
விரவினுடனே சாடுவாரும் சாடவேமுதுகினில் அணியதுமுடுகி
தானவர் வெட்டுவாராம் கரிபரி மதயானைகள்
பட்டுமாத்தானும் முறியவே முறியவேபீரங்கி உண்டைகள்பட்டு
முன்னணி சிதறிடவே முன்னணிபின்னணி ஒக்கவுழிந்து
மீண்டுஓடும் பரியின்மீது தம்பிகளின் குதிரைஓடுதுபார்
உற்றதோர் பரியைவெட்டவே தம்பிமார்வெட்டவே தான்விரட்ட.

### மன்னர் படைகள் சிதறுதல்

வெட்டவேமன்னர் திருமனம்சடைத்து விதியோவிதியோ் எனசலித்து
மீளவேமன்னர் பெரும்படை விழுந்தவர் சிதறிஓடினாரே
ஓடிப்படை நாலுதிக்கும். ஒழித்தோடி தானொதுங்க.

16.773. விருது - வெற்றி. 16.774. சட்டைகள் அற - உடம்புகள் அற்று விழ; 'உடல்மேல் போடப்பட்ட பாதுகாப்பு கவசங்கள் விழ' எனினும் அமையும். 16.774. விழுக் - ஒலிக்குறிப்புச் சொல்; வாள் வீச்சின் வேகத்தை உணர்த்தியது. 16.777. முட்டுகள் - முழந்தாள்கள். 16.778. அணிகள் - ஆபரணங்கள். 16.780. வெட்டவே தட்டி - வாள் கொண்டு வெட்டும் பொழுது அதைத் தட்டிவிட்டு. 16.781. விரவு - விரைவு. சாடுவாரும் - ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குத் தாண்டுவாரும். முடுகி - விரைந்து. 16.782. கரி - யானை. பரி - குதிரை. 16.783. பட்டு - இறந்து. மாத்தானும் முறியவே - மார்த்தாண்ட வர்மரும் தோல்வி அடையவே. உண்டை - குண்டு. 16.784. ஒக்க - முழுவதும். 16.786. வெட்டவே - வெட்டுவதற்காவே. 16.788. மீளவே - தப்பித்துக் கொள்ளவே. 16.789. நாலு - 'நான்கு' என்பதின் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. குறியாகவிழ 2. தறைதனிலே 3. கரங்களரவே 4. மீதெளும்பி

## Aḻakappa mutaliyin paṭaikaḷ munnērutal

*veṭṭavē tampimārum vēntar perumpaṭaiyum*
*viruviṟena aḻakappaṉmutali virutu kuṟittuveṭṭi*
*veṭṭavē caṭṭaikaḷaṟa viḻukkeṉṟu kuṟittuveṭṭa*
*virutukuṟittu veṭṭa vīrarkaḷ kuṟiyākaviḻa*
*veṭṭikkoṇṭu cuṭuvārum cuṭuvārtalai yatuuraḷavē*
*taṟaitaṉilē tōḻōṭuceviyaṟavē toṭṭavarkiṭṭē muṭṭukaḷtaṭṭa*
*toṭaiyatu taṭṭaviḻuvārum aṇikaḷcikkiṭa alaivārum*
*citaṟiyēmuṭṭiyē taṭṭaḻintu kālotukaikaḷ karaṅkaḷaṟavē*
*mutukiṉil veṭṭuvārum veṭṭavētaṭṭi mīteḻumpi*
*viraviṉuṭaṉē cāṭuvārum cāṭavē mutukiṉil aṇiyatumuṭukit*
*tāṉavar veṭṭuvārām karipari matayāṉaikaḷ*
*paṭṭumāttāṉum muṟiyavē muṟiyavēpiraṅki uṇṭaikaḷpaṭṭu*
*muṉṉaṇi citaṟiṭavē muṉṉaṇipiṉṉaṇi okkaoḻintu*
*mīṇṭuōṭum pariyiṉmītu tampikaḷiṉ kutirai ōṭutupār*
*uṟṟatōr pariyaiveṭṭavē tampimārveṭṭavē tāṉviraṭṭa*

## Maṉṉar paṭaikaḷ citaṟutal

*veṭṭavēmaṉṉavar tirumaṇamcaṭaintu vitiyōvitiyō eṉacalittu*
*mīḷavēmaṉṉavar perumpaṭai viḻuntavar citaṟiōṭiṉārē*
*ōṭippaṭai nālutikkum oḷittōṭi tāṉotuṅka*

## Brother's victory

Mutaliyār's forces moved forward
With cannons and other weapons
Well trained and well planned in their attack

That the king cursed his fate
Found it hard to hold his army
That melted and vanished
To seek places of safety.

### மன்னர் மீண்டும் படைதிரட்டிப் போர்செய்தல்

தேடிக்கொண்டே ராசமன்னர் சிதறும்படை தான்திரட்டி
இன்னும்ஓர் போர்பொருதி இரண்டிலொன்று காணவேண்டும்
தென்வேந்தர் தன்படையைத் திரட்டிப்பல்ப நாபபுரத்தில்
பல்பநாபபுரத்துக் கோட்டைக்குள்ளே பாளையங்கள் தாம்சேகரித்து
நாலுகோட்டை வாசலிலும் நலம்பெறவே பீரங்கிப்
பாலும்நெய்யும் கலந்ததுபோல் படைபொருதார் தங்களிலே.

### இருபடைகளும் பொருதல்

இடங்கையில் வந்தபடை மேலக்கோட்டை வாசலிலே
அடங்களிலே தான்தெளித்து அமர்பொருதார் இருபேரும்
வடக்குக்கோட்டை வாசலிலும் முடுகியே படைபொருதார்
பொருதினாரே தம்பிமார்கள் புகழ்பெறவே தம்பிமார்கள்
வலங்கைக்கே வந்தபடை தெற்குக்கோட்டை கீழக்கோட்டை
தெற்குக்கோட்டை கீழக்கோட்டை தென்னவனார் தன்படையைக்
கலங்காமல் ரெண்டுகோட்டை வாசலிலே சென்றெதிர்த்து
இருபேருட தன்படையும் எதிர்த்துவெட்டி நிற்கும்நேரம்.

16.791. பொருதி - பொருது; போர் செய்து. 16.793. பாளையம் - படைகள். 16.796. மேலக்கோட்டை - மேலைக் கோட்டை; மேற்குக் கோட்டை. 16.797. அடங்கள் - சுற்றுப் பகுதி. 16.801. தென்னவனார் - மன்னவர்; மார்த்தாண்டவர்மாவைக் குறித்தது. 16.802. ரெண்டு - 'இரண்டு' என்பதின் பேச்சு வழக்கு.

### Maṉṉar mīṇṭum paṭaitiraṭṭip pōrceytal

*tēṭikkoṇṭē rācamaṉṉar citaṟumpaṭai tāṉtiraṭṭi*
*iṉṉumōr pōrporuti iraṇṭiloṉṟu kāṇavēṇṭum*
*teṉvēntar taṉpaṭaiyait tiraṭṭippalpa nāpapurattil*
*palpanāpapurattu kōṭṭaikkuḷḷē pāḷaiyaṅkaḷ tāmcēkarittu*
*nālukōṭṭai vācalilum nalampeṟavē pīraṅkip*
*pālumneyyum kalantatupōl paṭaiporutār taṅkaḷilē*

### Iru paṭaikaḷum porutal

*iṭaṅkaiyil vantapaṭai mēlakkōṭṭai vācalilē*
*aṭaṅkaḷilē tāṉteḷittu amarporutār irupērum*
*vaṭakkukōṭṭai vācalilum muṭukiyē paṭaiporutār*
*porutiṉārē tampimārkaḷ pukaḻpeṟavē tampimārkaḷ*
*valaṅkaikkē vantapaṭai teṟkukōṭṭai kīḻakkoṭṭai*
*teṟkukōṭṭai kīḻakkōṭṭai teṉṉavaṉār taṉpaṭaiyaik*
*kalaṅkāmal reṇṭukoṭṭai vācalilē ceṉṟetirttu*
*irupēruṭa taṉpaṭaiyum etirttuveṭṭi niṟkumnēram*

### Seige of the fort

The strong Patmanāpapuram was tied
On all sides with a joy of wild cry
Thr Brothers sealed and watched
The helpless king was caught inside.
The king gave a clarion call
Collected his trusted lieutenants from all
Neighbouring areas and nearby places.
"One more fight that will decide my fate
Success or defeat, nothing more to beat"
Said the king to his army.
They opened the gate and came out
With renewed force and reinforced strength
They fought as if with rare gift
The left wing of Mutaliyār's army
Met the king's forces in front of the
Western gate and Northern gate.
The right wing faced them
In front of the southern Gate and Eastern Gate.
The soldiers of the brothers
The soldiers of Mutaliyār
Soon tired, fainted and swooned.

### முதலியாரின் படைகள் அழிவுக்கு உள்ளாதல்

தம்பிமார் பெரும்படையும் தளர்ந்திட அந்தநேரம்
அழகப்ப முதலிபடை அங்கேயவர் பின்வாங்க

கம்பளத்து நாயக்கனும் கனத்தபடை மடிந்திடவே
மறப்படையும் வன்னியரும் வாய்த்தரெட்டி யார்படையும்
காலாள்கள் சேனைப்படை கடுகப்பரி விரட்டிடவே.

16.806. கனத்த - அதிகமான. 16.807. மறப்படை - மறவர் சாதியர் மிகுந்த படை. வன்னியர் - வன்னிய ஜாதியரைக் கொண்ட படை. ரெட்டியார் - ரெட்டியார் சாதியரைக் கொண்ட படை. 16.808. கடுக - விரைவாக. பரி - குதிரை.

## Mutaliyāriṉ paṭaikaḷ aḻivukku uḷḷātal

*tampimār perumpaṭaiyum taḷarntiṭa antanēram*
*aḻakappa mutalipaṭai aṅkēyavar piṉvāṅka*
*kampaḷattu nāyakkaṉum kaṉattapaṭai maṭintiṭavē*
*maṟappaṭaiyum vaṉṉiyarum vāytta reṭṭiyārpaṭaiyum*
*kālāḷkaḷ cēṉaippaṭai kaṭukappari viraṭṭiṭavē*

## Retreat by king's forces

The troops of Nāyakkar fell down.
So was the wing of Vaṉṉiyar
The same was the case of Reṭṭiyār

## தம்பிமார்கள் மன்னரை நோக்கி முன்னேறுதல்

ஆனைப்படை பட்டபோது ஆண்அழகன் வலியதம்பி
வலியதம்பி குஞ்சுதம்பி மன்னவரை எதிர்த்துவெட்ட
அமர்பொருதார் வலியதம்பி அரசாண்ட மன்னரோட
நாலுகோட்டை வாசலிலும் நன்றிபெற தான்திறந்து
மாடம்பிமார் பதினாறுபேர் வளைந்துநின்று பொருதிடுவார்.

## மாடம்பிகள் சதிசெய்து ஓடிவிடுதல்

முன்னணியில் நில்லாமல் பின்னணியில் மாடம்பிமார்
மாடம்பிமார் ஓடிவிட்டார் மன்னர்திரு முகம்வாடி.

16.809. ஆனை - 'யானை' என்பதின் பேச்சு வழக்கு. 16.810. அமர் - போர். 16.812. நாலு - 'நான்கு' என்பதின் பேச்சு வழக்கு.

## Tampimārkaḷ maṉṉarai nōkki muṉṉēṟutal

*āṉaippaṭai paṭṭapōtu āṇaḻakaṉ valiyatampi*
*valiyatampi kuñcuttampi maṉṉavarai etirttuveṭṭa*
*amarporutār valiyatampi aracāṇṭa muṉṉarōṭa*

*nālukōṭṭai vācalilum naṉṟipeṟa tāḻiṟantu*
*māṭampimār patiṉāṟupēr vaḷaintuniṉṟu porutiṭuvār*

### Māṭampikaḷ caticeytu ōṭiviṭutal

*muṉṉaṇiyil nillāmal piṉṉaṇiyil māṭampimār*
*māṭampimār ōṭiviṭṭār maṉṉartiru mukamvāṭi*

It was time for the Brothers
To show their inherent valour.
Braving the wild elephants
And fiery Māṭampi soldiers
Valiya Tampi had his success.
While on his part
Kuñcu Tampi put the king
And his guards on tenter hooks.
They forced open the gates of the fort
And faced Māṭampis numbering sixteen.
The sixteen and their guards
Slowly and steadily marched backward

### மன்னவர் கோட்டையில் பதுங்கியிருத்தல்

சதித்தாரே மாடம்பிமார் சதிவுவந்த தென்றுசொல்லி
ஆற்றாமல் மன்னவரும் அடைத்துக் கோட்டைக்குள்ளிருந்து
நாலுகோட்டை வாசலையும் நன்றாகத் தாமடைத்து
மன்னர் பெரும்படையும் வாய்த்தகோட்டைக் குள்ளிருக்க.

### தம்பிமார்கள் கோட்டையைச் சுற்றிவளைத்துக் காவல் செய்தல்

வலியதம்பி குஞ்சுதம்பி வாய்த்தபெரும் படையோட 820
நாலுகோட்டை வாசலையும் முன்னிறுத்திக் காவல்செய்ய.

16.818. சதித்தாரே - சதி வேலை செய்தாரே. சதிவு - சதி; இங்குத் தோல்வியைக் குறித்தது.
16.821. முன்னிறுத்தி - முதன்மைப்படுத்தி.

### Maṉṉavar kōṭṭaiyil patuṅkiyiruttal

*catittārē māṭampimār cativuvanta teṉṟucolli*
*āṟṟāmal maṉṉavarum aṭaittuk kōṭṭaikkuḷḷiruntu*
*nālukōṭṭai vācalaiyum naṉṟākat tāmaṭaittu*
*maṉṉar perumpaṭaiyum vāytta kōṭṭaikkuḷḷirukka*

### Tampimārkaḷ kōṭṭaiyaic cuṟṟi vaḷaittuk kāval ceytal

*valiyatampi kuñcu tampi vāyttaperum paṭaiyōṭa*
*nālukōṭṭai vācalaiyum muṉṉiṟutti kāvalceyya*

The king was shocked at the treacherous act
Retreated and withdrew his forces
To lock themselves inside the fort
Valiya Tampi and Kuñcu Tampi
Were happy to note the retreat
Ordered for a seige and
Guarded the gates with rage.

### மன்னர் தப்பித்து ஓடுதல்

தாய்வீட்டில் தானிருந்த வாலவஞ்சி மார்த்தாண்டர்
அடைத்துக்கொண்டு உள்ளிருந்தால் அபத்தம்வரும் என்றுசொல்லி
எப்படித்தான் போவோமென்று எங்கேஓடி ஒளிப்போமென்று[1]
வடக்குக்கோட்டை வாசலிலே வாய்த்தசுட்டி வாசல்வழி
மயிலாடும் பொத்தவழி மன்னவரும் போகவென்று
மும்பில்ரெண்டு குதிரக்காரர் பின்னேரெண்டு குதிரக்காரர்
பக்கத்தில் நாலுகுதிரக்காரர் பரிநடுவில் தம்புரானும்
ஒக்கயவர் தான்திரண்டு ஒழித்தோடும் வேளையிலே
தம்பிமார் இருபேரில் தக்கதொரு குஞ்சுதம்பி
கள்ளத்தன மாகவல்லோ காவலவன் குஞ்சுதம்பி
வடக்குக்கோட்டை வாசலிலும் மலையடி வாரத்திலும்
சுத்தியவர் குதிரைகட்டிச் சூழவேயவர் நிற்குநேரம்
அங்குநிற்ப தறியாமல் அரசாண்ட மன்னவரும்
தம்புரான்மேல் மன்னவரும் நாலுகுதிரைக் காரர்களும்
ஒருமித்து மன்னவரும் ஒடுமந்த வேளையிலே.

16.822. தாய் வீடு - அரண்மனையின் முக்கிய, ஆரம்ப காலத்தில் கட்டப்பட்டபகுதி இப்பெயரால் அழைக்கப்படுகிறது; இப்பொழுதும் இப்பகுதி 'தாய் கொட்டாரம்' எனச் சுட்டப்படுகின்றது. 16.823. அபத்தம் - கேடு. 16.824. எப்படித்தான் போவோம் - எந்த முறையிலே தப்பித்து இங்கிருந்து போவோம். 16.825. சுட்டி வாசல்வழி - சிறிய வாசல் வழி; பத்மநாபபுரம் அரண்மனையிலிருந்து வெளியில் செல்வதற்கு ரகசியமான வழி ஒன்று உண்டு என்ற வழக்காறு இன்றும் உள்ளது; இந்த வழியே சென்றால் கோட்டைக்கு வெளியே புலியூர்குறிச்சியை அடையலாம். 16.826. மயிலாடும் பொத்தை - குமாரகோயில் அருகே உள்ளே ஒரு சிறிய ஊர். 16.827. மும்பில் - 'முன்பாக' என்ற பொருள் தரும் வட்டார வழக்குச் சொல். குதிரக்காரர் - 'குதிரைக்காரர்' என்பதன் பேச்சு வழக்கு. 16.828. பரி -

குதிரை. தம்புரான் - அரசன்; மார்த்தாண்டவர்மா. 16.829. ஒக்க - அவர்கள் எல்லோரும்' என்ற பொருளில் அமைந்த வட்டார வழக்குச் சொல். 16.833. சுத்தி - 'சுற்றி' என்பதன் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. ஒழிப்போம்

## Maṉṉar tappittu ōṭutal

*tāyviṭṭil tāṉirunta vālavañci mārttāṇṭar*
*ataittukkoṇṭu uḷḷiruntāl apattamvarum eṉṟucolli*
*eppaṭittāṉ pōvōmeṉṟu eṅkēōṭi oḻippōmeṉṟu*
*vaṭakku kōṭṭai vācalilē vāyttacuṭṭi vācalvaḻi*
*mayilāṭum pottavaḻi maṉṉavarum pōkaveṉṟu*
*mumpilrenṭu kutirakkārar piṉṉērenṭu kutirakkārar*
*pakkattil nālukutirakkārar parinaṭuvil tampurāṉum*
*okkayavar tāṉtiranṭu oḻittōṭum vēḷaiyilē*
*tampimār irupēril takkatoru kuñcutampi*
*kaḷḷattaṉa mākavallō kāvalavaṉ kuñcutampi*
*vaṭakkukōṭṭai vācalilum malaiyaṭi vārattilum*
*cuttiyavar kutiraikaṭṭic cūḻavēyavar niṟkunēram*
*aṅkuniṟpa taṟiyāmal aracāṇṭa·maṉṉavarum*
*tampurāṉmēl maṉṉavarum nālukutiraik kārarkaḷum*
*orumittu maṉṉavarum ōṭumanta vēḷaiyilē*

## King's effort to escape

The King was looking for an escape route
He felt insecure in his own fort
Thought of north and south, east and west
Finally made way through a
Secret wicket gate on the north
Collected trusted guards
Numbering eight on horses bright
Left the palace through a secret tunnel
Emerged out near downsteps of a hill
With shivering hands and sad notes
He saw the devil and the deep sea
Standing in the form of Valiya Tampi and Kuñcu Tampi.

### தம்பிகள் மன்னரைச்சுற்றி வளைத்தல்

குஞ்சுத்தம்பி கண்டல்லோ குதிரைவிட்டுத் தான்விரட்டிக்
கிழக்கோட்ட வாசலிலே தம்புரானை வளைந்துகொண்டு
கூட்டாக வளைந்துகொண்டு குஞ்சுத்தம்பி மன்னவரும்.

### குஞ்சுத்தம்பி மன்னரை வாளால் வெட்ட முனைதல்

குஞ்சுத்தம்பி மன்னவரும் குதிரைபிறம் மேலிருந்து
மந்திரவாள் தாமெடுத்து கூர்பார்த்து மேல்பார்த்து
ஆணழகன் குஞ்சுத்தம்பி கைகலந்து வெட்டுநேரம்.

### முதலியார் குஞ்சுத்தம்பியைத் தடுத்தல்

குதிரை மேலிருந்த அழகப்ப முதலியாரும்
அரசழிக்க[1] நாயமில்லை ஆணழகா குஞ்சுதம்பி
மன்னவரை குலைகள்செய்ய வையகத்தில் கண்டதில்லை
சற்றுநேரம் பொறுத்திடுவாய் நாடாள்வாய் குஞ்சுத்தம்பி
ஆணையிட்டு முதலியாரும் அவர்முன்னே செல்லுநேரம்.

16.838. கீழ்கோட்ட வாசல் - கோட்டையின் கிழக்குப் பக்கத்தில் அமைந்த வாசல். 16.841. மந்திர வாள் - நினைத்ததைச் சாதிக்கும் வாள் என்ற பொருள். கூர் - கூர்மை. 16.842. கை கலந்து - மன்னனோடு நேரடியாக மோதி. 16.844. அரசழிக்க - அரசனான மார்த்தாண்டவர்மனை அழிக்க. நாயமில்லை - 'ஞாயமில்லை' என்பதன் பேச்சு வழக்கு. 16.845. குலை - 'கொலை' என்பதன் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. அரசளிக்க

### Tampikaḷ maṉṉaraic cuṟṟi vaḷaittal

*kuñcutampi kaṇṭallō kutiraiviṭṭut tāṉviraṭṭik*
*kiḻakkōṭṭa vācalilē tampurāṉai vaḷaintukoṇṭu*
*kūṭṭāka vaḷaintukoṇṭu kuñcutampi maṉṉavarum*

### Kuñcut tampi maṉṉarai vāḷāl veṭṭa muṉaital

*kuñcutampi maṉṉavarum kutiraipiṟam mēliruntu*
*mantiravāḷ tāmeṭuttu kūrpārttu mēlpārttu*
*āṇaḻakaṉ kuñcutampi kaikalantu veṭṭunēram*

### Mutaliyār kuñcut tampiyait taṭuttal

*kutirai mēlirunta aḻakappa mutaliyārum*
*aracaḻikka nāyamillai āṇaḻakā kuñcutampi*

*maṉṉavarai kulaikaḷceyya vaiyakattil kaṇṭatillai*
*caṟṟunēram poruttiṭuvāy nāṭāḷvāy kuñcutampi*
*āṇaiyiṭṭu mutaliyārum avarmuṉṉē cellunēram*

The horse that carried Kuñcu Tampi
Went straight and stopped before the king
He took his magical sword
And tuned it to kill the king
He swung the sword in anger
That made the king shiver.
"Stop" said Muṭaliyār
Coming towards them on horse back
"Nobody has the right to kill the king
And there is no justice in it
Restrain the urge to hit and kill
I remind, our aim is to retrieve the kingdom first".

### குஞ்சுத்தம்பி செய்வதறியாது திகைத்தல்

கண்டபோது குஞ்சுத்தம்பி கையெடுத்து வெட்டாமல்
கையினுட வாளோட காவலன் குஞ்சுத்தம்பி
அய்யய்யோ கெடுத்தானே அழகப்ப முதலியாரும்
கோடிமனம் தான்சடைத்து குஞ்சுத்தம்பி நிற்குநேரம்.

### வலியதம்பி குஞ்சுத்தம்பியிடத்து வினாவுதல்

வலியதம்பி மன்னவரும் வந்துகண்டு தம்பிதன்னைக்
குஞ்சுத்தம்பி மன்னவனே கோழப்பட்டு[1] போனதென்ன
தம்பிமார் இருபேரும் தர்க்கமிட்டு[2] தங்களிலே.

16.849. கையினுட - கையிலிருந்த. 16.851. கோடி - மனம் வருந்தி. 16.853. கோழப்பட்டு - கோழையாகி. 16.854. தர்க்கமிட்டு - வாதுசெய்து.

சு.சொ : 1. கோளப்பட்டு 2. தற்கமிட்டு

### Kuñcut tampi ceyvataṟiyātu tikaittal

*kaṇṭapōtu kuñcuttampi kaiyeṭuttu veṭṭāmal*
*kaiyiṉuṭa vāḷōṭa kāvalaṉ kuñcuttampi*
*ayyayyō keṭuttāṉē aḷakappa mutaliyārum*
*kōṭimaṉam tāṉcaṭaittu kuñcut tampi niṟkumnēram*

### Valiyatampi kuñcut tampiyiṭattu viṉāvutal

*valiyatampi maṉṉavarum vantukaṇṭu tampitaṉṉaik*
*kuñcut tampi maṉṉavaṉē kōḻappaṭṭu pōṉateṉṉa*
*tampimār irupērum tarkkamiṭṭu taṅkaḷilē*

### Deal between the king and Mutaliyār

Kuñcu Tampi stood still
Thinking that Aḻakappa Mutaliyār
Had spoilt all his plans to kill the king
At that time there came
The valiant Valiya Tampi
Wondering what was going on
Why his brother had missed
The fine opportunity to kill the king.

### அரசர் பிறர் அறியாவண்ணம் அழகப்ப முதலிக்குப் பணம்கொடுத்தல்

அங்கேயவர் நிற்குநேரம் அரசாளும் மன்னவரும்
ஏதுபாயம் விட்டல்லவோ இருபேரையும் இணைத்திடுவோம்
கள்ளத்தனமாக வல்லோ கருவலங்கள் சேகரித்து
ஒருசாளியல் நல்லபணம் ஒருசாளியல் கள்ளபணம்
இரண்டு சாளியல்பணமும் நலமுடனே தான்வரத்தி
ஆரொருவர் அறியாமல் அழகப்பன் முதலிகையில்
கள்ளர் கன்னமிட்டதுபோல் கையில் கொடுத்தாரே.

16.856. உபாயம் - சூழ்ச்சி. 16.857. கருவலங்கள் - 'கருவூலங்கள்' என்பதன் பேச்சு வழக்கு; இங்குக் கருவூலம் பணத்தைக் குறித்தது. 16.859. வரத்தி - 'வரச்செய்து' என்பதன் பேச்சு வழக்கு. 16.860. ஆரொருவர் - 'யாரும்' என்ற பொருளில். 16.861. கன்னமிட்டது - திருடியது.

### Aracar piṟar aṟiyāvaṇṇam aḻakappa mutalikkup paṇamkoṭuttal

*aṅkēyavar niṟkumnēram aracāḷum maṉṉavarum*
*ētupāyam viṭṭallavō irupēraiyum iṇaittiṭuvōm*
*kaḷḷattaṉamāka vallō karuvalaṅkaḷ cēkarittu*
*orucāḷiyal nallapaṇam orucāḷiyal kaḷḷapaṇam*
*iraṇṭu cāḷiyalpaṇamum nalamuṭaṉē tāṉvaratti*
*āroruvar aṟiyāmal aḻakappaṉ mutalikaiyil*
*kaḷḷar kaṉṉamiṭṭatupōl kaiyil koṭuttārē*

While they discussed there
The king thought of several ways
To come out safe
Gave secret signals to his guards
To bring money to bribe Mutaliyār
When Aḻakappa Mutaliyār
Was in his company
He gave in his hands bundles of money
As the lotus turns happy
On seeing the face of the sun
Aḻakappa Mutaliyār would be happy
On hearing the clink of money
With no time lost.

### அழகப்ப முதலி மூவரையும் திருநீலகண்ட சுவாமி கோவிலுக்கு அழைத்து வருதல்

கருவிளங்கள் கண்டபோது மனமகிழ்ந்து முதலியாரும்
நல்லுறவாய் தம்பிமாரை நாடியவர் நிரத்திக்கட்டித்
தம்பிமார் மன்னவரையும் தான்முதலி கைப்பிடித்து
மூவரையும் கைப்பிடித்து முதலியாரும் தான்நடந்தார்
அழகப்ப முதலியாரும் அவரேதோ உபாயமிட்டார்
பல்பநாப புரத்துக்கோட்டை பாருபாரென வந்துகண்டு
திருநீலகண்ட சுவாமிகோயில் திருநடையில் வந்துகண்டு
திருநடையில் வந்துகண்டு செய்தியெல்லாம் சொல்லுவாராம்.

### மூவரையும் முதலியார் சத்தியம் செய்யச் சொல்லுதல்

ஏதேதோ சத்தியங்கள் இனிநீங்கள் செய்திடுவீர்
தம்புரானும் தம்பிமாரை சதிவுசெய்ய மாட்டோமென்று.
சதிவுசெய்ய மாட்டோமென்று சத்தியங்கள் செய்யவேண்டும்
பாலும்கடை யாலும்வைத்து பாராளும் மன்னவரும்
தம்பிமார் தன்தனக்கு சதிவுசெய்வ தில்லையென்று
சதிவுசெய்வ தில்லையென்று சத்தியங்கள் செய்யச்சொன்னார்.

16.862. கருவிளங்கள் - கருவூலப் பணங்கள். 16.863. நிரத்திக் கட்டி - சமாளித்து; சமாதான படுத்தித் தன் வழிக்குக் கொண்டு வந்து. 16.868. திருநீலகண்டசுவாமி கோயில் - பத்மநாயுரம் கோட்டையினுள் அமைந்த கோயில்; கி.பி. 16-ம் நூற்றாண்டு பழமையான இக்கோயில் இறைவன் மாதேவன் என்றும், இறைவி ஆனந்தவல்லி என்றும்

அழைக்கப்படுகின்றனர். 16.872. சதிவு - வஞ்சகம். 16.873. கடையால் - பசுவிலிருந்து பால் கறக்கப் பயன்படும் மூங்கிலால் ஆன ஒரு வகை பாத்திரம்; கடையாலில் பாலை நிறைத்து வைத்து சத்தியம் செய்யும் வழக்கம் குமரிமாவட்ட மலைப்பகுதிகளில் உண்டு.

### Aḻakappa mutali mūvaraiyum tirunīlakaṇṭa cuvāmi kōvilukku aḻaittu varutal

*karuviḷaṅkaḷ kaṇṭapōtu maṉamakiḻntu mutaliyārum*
*nalluṟavāy tampimārai nāṭiyavar nirattikkaṭṭit*
*tampimār maṉṉavaraiyum tāṉmutali kaippiṭittu*
*mūvaraiyum kaippiṭittu mutaliyārum tāṉnaṭantār*
*aḻakappa mutaliyārum avarētō upāyamiṭṭār*
*palpanāpa purattukkōṭṭai pārupārēṉa vantukaṇṭu*
*tirunīlakaṇṭa cuvāmikōyil tirunaṭaiyil vantukaṇṭu*
*tirunaṭaiyil vantukaṇṭu ceytiyellām colluvārām*

### Mūvaraiyum mutaliyār cattiyam ceyyac collutal

*ētētō cattiyaṅkaḷ iniṉiṅkaḷ ceytiṭuvīr*
*tampurāṉum tampimārai cativuceyya māṭṭōmeṉṟu*
*cativuceyya māṭṭōmeṉṟu cattiyaṅkaḷ ceyyavēṇṭum*
*pālumkaṭai yālumvaittu pārāḷum maṉṉavarum*
*tampimār taṉtaṉakku cativuceyva tillaiyeṉṟu*
*cativuceyva tillaiyeṉṟu cattiyaṅkaḷ ceyyaccoṉṉār*

### Peace treaty

He was all for peace
Held their hands in one
And took them to the temple
Where God Thiru Nīlakaṇṭa Cāmi resided
They stood in front of the temple
To bring peace and to stop war.
"Swear before God
Never we fight again"
Urged Aḻakappa Mutaliyār.

### மன்னர் மனதில் வஞ்சகத்துடன் சத்தியம் செய்தல்

அப்போது மன்னவரும் அவர்மனதில் கள்ளம்வைத்து
சதியாமல் சதிக்கவேண்டும் சத்தியங்கள் செய்யவேணும்

அபத்தமது செய்யவேணும் அரசாளும் மன்னவரும்
ஆரொருவர் அறியாமல் அவர்பிடித்தார் ஒருஈயை
ஈயெதுவும் தான்பிடித்து அவருடைய திருநகத்தில்
நகத்துக்குள்ளே வைத்துக்கொண்டு நாடாளும் மன்னவரும்
தடதடவென ஓடிவந்து சத்தியங்கள் செய்வதற்கு
ஏதேது சத்தியந்தான் இனிசெய்வோம் முதலியாரே
குஞ்சுத்தம்பி வலியதம்பி கண்டதம்பி மார்களுக்கு
தம்பிமார்கள் இருபேர்க்கும் சதிவொருநாள் செய்வதில்லை
அவர்கள்ஏது வினைசெய்தாலும் நான்துரோகம் செய்வதில்லை
துரோகம் செய்வதில்லையென்று சத்தியங்கள் செய்யவேணும்
பாலுங்கடயாலும் வைத்துப் பாராளும் மன்னவரும்
ஈஉயிர்உள்ள காலமட்டும் தம்பிமார்க்கு ரெண்டகம்செய்வதில்லை
என்றுகடயலும் தொட்டு ஈயதையும் நசுக்கிவிட்டார்
ஈயதுவும் இறந்துபோச்சு இனிநமக்கு தோசமில்லை
என்றுசொல்லை மனதிலெண்ணி இன்பமுடன் மன்னவரும்.

## தம்பிகள் நேர்மையாகச் சத்தியம் செய்தல்

அப்போது தம்பிமார்கள் அவருபாயம் அறியாமல்
எங்கள்ஜீவ னுள்ளமட்டும் இவர்க்குரெண்டகம் செய்வதில்லை
ஆதுகல்பனை யானாலும் சதிகேடு வருவதில்லை
திருவாக்குக்கு மறுவாக்கு செய்வதில்லை முதலியாரே
திருநீலகண்ட சுவாமிகோவில் திருநடையில் சென்றுநின்று
மன்னவரும் தம்பிமாரும் வந்துசத்தியம் செய்தபோது.

16.876. கள்ளம் - பொய்; வஞ்சக எண்ணம். 16.877. சதியாமல் சதிக்க வேண்டும் - 'சதியின் தன்மை வெளியே தெரியாதவாறு தம்பிமாரைச் சதிக்க வேண்டும்' என்ற பொருளில். 16.878. அபத்தம் - கெடுதல். 16.879. ஆரொருவர் - 'யாரொருவர்' என்பதன் பேச்சு வழக்கு; யாரும். 16.882. தடதட - ஒலிக் குறிப்புச் சொல்; வேகத்தை உணர்த்தும் நிலையில் அமைந்தது. 16.886. வினை - கெடுதல்; துன்பம் எனினும் பொருந்தும். 16.889. ஈ - இந்த ஈஉயிர் உள்ள காலமட்டும் -(அ)'மார்த்தாண்டனாகிய நான், எனது உயிர் உள்ளவரையிலும்' என்ற பொருளில் தம்பிமார்கள் உணரும் படியும் (ஆ)'தன் கை நகத்திடையே உள்ள இந்த ஈயின் உயிர் உள்ள வரையிலும்' என்ற பொருளில் தன் மனசாட்சிக்கும் ஆக இரு நிலைகளில் இத்தொடர் பொருள் கொள்ளப்படும்; இந்த மன்னரின் சத்திய செய்தி வாய்மொழி வழக்கிலும் காணப்படுகிறது; மன்னர் இவ்விதம் பொய் சத்தியம் செய்தமைக்காக அதன் பாவத்திலிருந்தும் நிவர்த்தி பெற கோதானம் செய்தார் என்ற வழக்காறு உண்டு. 16.893. உபாயம் - மன்னரின் சூழ்ச்சி நிறைந்த சத்திய முறையான உபாயம். 16.894. ரெண்டகம் - 'இரண்டகம்' என்பதின் பேச்சு வழக்கு; நம்பிக்கைத் துரோகம் என்ற பொருளில். 16.895. கல்பனை - கற்பனை; கட்டளை அல்லது நிர்பந்தம் என்ற பொருளில். 16.896. திருவாக்கு - மன்னர் வாக்கு.

### Mannar manatil vañcakattutan cattiyam ceytal

*appōtu mannavarum avarmanatil kallamvaittu*
*catiyāmal catikkavēntum cattiyaṅkaḷ ceyyavēṇum*
*apattamatu ceyyavēṇum aracāḷum mannavarum*
*āroruvar ariyāmal avarpiṭittār oruīyai*
*īyetuvum tānpiṭittu avaruṭaiya tirunakattil*
*nakattukkuḷḷē vaittukkoṇṭu nāṭāḷum mannavarum*
*taṭataṭavena ōṭivantu cattiyaṅkaḷ ceyvatarku*
*ētētu cattiyantān iniceyvōm mutaliyārē*
*kuñcutampi valiyatampi kaṇṭatampi mārkaḷukku*
*tampimārkaḷ irupērkkum cativorunāḷ ceyvatillai*
*avarkaḷētu vinaiceytālum nāntur ōkam ceyvatillai*
*turōkam ceyvatillaiyenru cattiyaṅkaḷ ceyyavēṇum*
*pāluṅkaṭayālum vaittup pārāḷum mannavarum*
*īuyiruḷḷa kālamaṭṭum tampimārkku reṇṭakam ceyvatillai*
*enrukaṭayālum toṭṭu īyataiyum nacukkiviṭṭār*
*īyatuvum erantupōccu ininamakku tōcamillai*
*enrucollai manatileṇṇi iṇpamuṭan mannavarum*

### Tampikaḷ nērmaiyākac cattiyam ceytal

*appōtu tampimārkaḷ avarupāyam ariyāmal*
*eṅkaḷjīva nuḷḷamaṭṭum ivarkkureṇṭakam ceyvatillai*
*ētukalpanai yānālum catikēṭu varuvatillai*
*tiruvākkukku maruvākku ceyvatillai mutaliyārē*
*tirunīlakaṇṭa cuvāmikōvil tirunaṭaiyil cenruninru*
*mannavarum tampimārum vantucattiyam ceytapōtu*

### King's cunning act

To swear all three
The king was hideous
Frustrated and revengeful over his defeat
Unlike the brothers who were
Simple, frank and forgetful
So the king took a fly in his hand
Played with words while making the oath.

And said these words hiding the fly between his fingers
"As long as this body has life
(Meaning the fly--)
I would do no harm to Brothers"
The moment they took the oath
He killed the fly
Thereby making the oath invalid.
Without knowing this, the king's nefarious act
The Brothers swore in total faith
They did not know
The king was free of oath.

### தம்பிகளிடமிருந்து பறித்த சொத்துக்களை மன்னர் திருப்பிக் கொடுத்தல்

வாரும்வாரும் தம்புரானே வாய்த்ததம்பிமார் வகைதுகைய்யும்
முன்னெடுத்த வகைகளெலாம் முதல்கள்என்றும் குறையாமல்
உம்பளமும் இறைபகுதி உள்ளதொரு முதலெடுப்பும்
குறைப்பகுதியான தெல்லாம் அவர்க்குவிட்டு தான்கொடுத்தார்
வகையிலுள்ள முதலெடுப்பும் மன்னரவர் விட்டுவிட்டார்.

### அழகப்ப முதலி திரும்பிப் போதல்

இருவரையும் நிரத்திக்கட்டி ஏற்றஅழகப்ப முதலியாரும்
தன்படையும் தானழைத்துத் தான்போனார் முதலியும்தான்.

16.899. வகைதுகை - 'வகைதொகை' என்பதின் பேச்சு வழக்கு; அனுபவத்திற்கு உட்பட்ட சொத்துகள். 16.901. உம்பளம் - வெகுமானம். இறைபகுதி - வரி வசூலிப்பதற்குரிய நிலப்பகுதி.

### Tampikaḷiṭamiruntu par̲itta cottukkaḷai man̲n̲ar tiruppic koṭuttal

*vārumvārum tampurān̲ē vāyttatampimār vakaitukaiyum*
*mun̲n̲eṭutta vakaikaḷelām mutalkaḷen̲r̲um kur̲aiyāmal*
*umpaḷamum ir̲aipakuti uḷḷatoru mutaleṭuppum*
*kur̲aippakutiyān̲a tellām avarkkuviṭṭu tān̲koṭuttār*
*vakaiyiluḷḷa mutaleṭuppum man̲n̲aravar viṭṭuviṭṭār*

### Aḻakappa mutali tirumpip pōtal

*iruvaraiyum nirattikkaṭṭi ēr̲r̲aaḻakappa mutaliyārum*
*tan̲paṭaiyum tān̲aḻaittut tān̲pōn̲ār mutaliyumtān̲*

When the peace treaty was made perfect
Mutaliyār played the second part
Asked the king to part with what was taken
The right to live in the palace
The right to collect taxes
The right to hold salt mines
The right to have paddy fields and coconut gardens
The king gave his nod
And agreed to give all at once.
Then Aḻakappa Mutaliyār left the place
With his mercenary forces and
Carrying his booty looted everywhere.

### தம்பிகள் மறுபடியும் உறவினருடன் தம் அரண்மனையில் வாழ்தல்

அழகப்பமுதலி போனபோது ஆணழகன் தம்பிமார்கள்
தம்புரானும் தம்பிமாரும் தங்களிலே நிரந்திருந்தார்
நிரந்திருந்த தம்பிமார்கள் நிலைமையுள்ள உம்பளமும்
உம்பளமும் இறைபகுதி உண்டான முறைமைகளும்
தம்பிமார்கள் தானெடுத்துத் தாயாரையும் தான்வருத்திக்
கொச்சுமணி தங்கையரையும் கூண்டநல்ல மாமனையும்
கிட்டிணத்தம்மை தம்புரானும் கிருபையுடன் கூட்டிவரச்
சுயிந்திரம் பதிதனிலே சிங்கநல்லூர் படைவீட்டில்
யேற்றவேம்படிவாழ் கோவில்கல்லில் மாடன்பொன் னிஆயனுடன்
வாய்த்தபிச்சைகை பள்ளிநாயருமாய் குஞ்சிகாணி நாயருடன்
தம்பிமார்கள் இருபேரும் தங்களிலே வாழ்ந்திருந்தார்.

16.907. நிரந்திருந்திருந்தார் - சேர்ந்து வாழ்ந்திருந்தார். 16.910. வருத்தி - வரச்செய்து. 16.913. சுயிந்திரம் - 'சுசீந்திரம்' என்பதன் பேச்சு வழக்கு.

### Tampikaḷ maṟupaṭiyum uṟaviṉaruṭaṉ tam araṇmaṉaiyil vāḻtal

*aḻakappamutali pōṉapōtu āṇaḻakaṉ tampimārkaḷ*
*tampurāṉum tampimārum taṅkaḷilē nirantiruntār*
*nirantirunta tampimārkaḷ nilaimaiyuḷḷa umpaḷamum*
*umpaḷamum iṟaipakuti uṇṭāṉa muṟaimaikaḷum*
*tampimārkaḷ tāṉeṭuttut tāyāraiyum tāṉvaruttik*
*koccumaṇi taṅkaiyaraiyum kūṇṭanalla māmaṉaiyum*

*kiṭṭiṉattammai tampurāṉum kirupaiyuṭaṉ kuṭṭivarac*
*cuyintiram patitaṉilē ciṅkanallūr paṭaiviṭṭil*
*yēṟṟavēmpativāḻ kōvilkallil māṭaṉpoṉ niṟaāyaṉuṭaṉ*
*vāyttapiccaikai paḷḷināyarumāy kuñcikāṇi nāyaruṭaṉ*
*tampimārkaḷ irupērum taṅkaḷilē vāḻntiruntār*

## Reconcilliation

Brothers having got back all their rightfull wealth
Went to Cucīntiram
To bring back their family
Their mother Kiṭṭiṉattammāḷ
Sister Koccumaṇi,Uncle
And Māṭaṉ Poṉṉi Āayaṉ,
Piccaikaipaḷḷi Nāyar and
Kuñcikāṇi Nāyar
All were taken to Ciṅkanallūr

## தம்பிமார்கள் மன்னனுக்குத் தொண்டு செய்தல்

இருக்குமந்த நாளதிலே ஏற்றபுகழ் தம்பிமார்கள்
மன்னவரை முகம்காட்டி வடிவழகன் சேவிக்கவே
வலியதம்பி வாளுடனே சற்றும்கசடு இல்லாமல்
தம்புரானைச் சேவிக்கவே சற்றும்கசடு இல்லாமல்
சதிவாற தறியாமல் தான்சேவித்தார் மன்னவனை.

16.918. வடிவழகன் - அழகிய வடிவுடையவன்; வலிய தம்பியைக் குறித்தது. சேவிக்கவே - பணிவிடை செய்யவே. 16.921. வாற்து - 'வருகின்றது' என்பதன் பேச்சு வழக்கு.

## Tampimārkaḷ maṉṉaṉukkut toṇṭu ceytal

*irukkumanta nāḷatilē ēṟṟapukaḻ tampimārkaḷ*
*maṉṉavarai mukamkāṭṭi vaṭivaḻakaṉ cēvikkavē*
*valiyatampi vāḷuṭaṉē caṟṟumkacaṭu illāmal*
*tampurāṉac cēvikkavē caṟṟumkacaṭu illāmal*
*cativāṟa taṟiyāmal tāṉcēvittār maṉṉavaṉai*

To occupy the royal house
Then the brothers went and met the king
With brazen sword and pure heart

Greeted the king by bowing before him
Not knowing that the king had
A black spot in his narrow heart.

### மன்னரின் சூழ்ச்சி

மன்னவரும் திருமனதில் வாய்த்ததொரு கசடுவைத்து
இன்னும்ஒரு பிழைகள்வந்தால்[1] எதிர்ப்பாரே தம்பிமார்கள்
மறுதுருவம் தனிலேசென்று மாறிப்படை கொண்டுவாறார்
மாறிப்படை கொண்டுவந்து மலைநாட்டை அழித்திடுவார்[2]
நம்மைக்குலை செய்யவந்தவனை நாமள்குலை செய்யவேண்டும்
நாகருவாழ்[3] கோவிலிலே நலமுடனே எழுந்தருளி
முகங்காட்ட வேணுமென்று முறைமையுடன் தானழைத்து
நாடழித்த தம்பிமாரை நாமள்கொலை செய்யவேண்டும்.

16.924. வாறார் - 'வருகிறார்' என்பதன் பேச்சு வழக்கு. 16.926. குலை - 'கொலை' என்பதன் பேச்சு வழக்கு. நாமள் - 'நாம்' என்பதன் வட்டார வழக்கு. 16.928. வேணும் - 'வேண்டும்' என்பதன் பேச்சு வழக்கு.

சு.சொ : 1. பிள்ளைகள் வந்தால் 2. அளித்திடுவார் 3. நாகருவாள்

### Maṉṉariṉ cūḻcci

*maṉṉavarum tirumaṉatil vāyttatoru kacaṭuvaittu*
*iṉṉumoru piḻaikaḷvantal etirppārē tampimārkaḷ*
*maṟuturuvam taṉilēceṉṟu māṟippaṭai koṇṭuvāṟār*
*māṟippaṭai koṇṭuvantu malaināṭṭai aḻittiṭuvār*
*nammaikkulai ceyyavantavaṉai nāmaḷkulai ceyyavēṇṭum*
*nākaruvāḻ kōvililē nalamuṭaṉē eḻuntaruḷi*
*mukaṅkāṭṭa vēṇumeṉṟu muṟaimaiyuṭaṉ tāṉaḻaittu*
*nāṭaḻitta tampimārai nāmaḷkolai ceyyavēṇṭum*

### King's new plan to kill the Brothers

The king thought he should be wise
Not to repeat the earlier deed
For, his wrongful act would
Make the Brothers invite foreign forces
To wipe out the Hill Land
And to destroy his lovely Kingdom

"There will be no peace
Till I kill the two Brothers
I shall devise a plan
And invite them to Nākarkōyil
There I shall kill them safely"
Said the king to himself.

### மன்னரும் கூட்டத்தாரும் நாகர்கோயில் அரண்மனை வருதல்

கொலைகள்செய்ய வேணுமென்று கூண்டவர்கள் ஒன்றுகூடிப்
பத்மநாப புரமதிலும் பக்கத்திலே மந்திரிமாரும்
வில்லுகிறி அம்பலத்தில் விரைவாகக் கடந்துசென்று
குதிரைபாஞ்சான் குளம்கடந்து கண்டகருப்புக் கட்டிஆறுவிட்டு
தோசைபலகாரம் விற்கும் சுங்காங்கடை கடந்து
பார்பதியாள் அகரமிட்டு பஞ்சவர்ணக் காடும்விட்டு
நாகருவாழ் கோவிலிலே நன்றியுள்ள கொட்டாரத்தில்
கோவில்கல் கொட்டாரத்தில் கூண்டமன்னர் எழுந்தருளி
ஆசான்மாரும் பணிக்கன்மாரும் அவர்பக்கத்தில் சூழ்ந்துவர
செருமிநிற்கும் நேரமதில் சிறந்தமன்னர் கற்பித்தாராம்.

**16.930.** கூண்டு - சேர்ந்து. **16.934.** தோசை பலகாரம் விற்கும் சுங்காங்கடை - சுங்கம் வசூலிக்கும் இவ்விடத்தில் பலகாரக்கடை இருந்தது; வழிப்போக்கர்கள் இவ்வூர் கடையில் சாப்பிடுவதற்குரிய நேரத்தைக் கணக்கில் வைத்துப் பயணம் செய்வதாக வாய்மொழி வழக்காறு உள்ளது. **16.935.** பார்பதியாள் அகரம் - 'பார்வதிபுரம்' என்னும் ஊர். **16.936.** நாகருவாழ் கோவிலிலே நன்றியுள்ள கொட்டாரம் - நாகராஜர் வாழும் கோயிலாகிய நாகர்கோயிலுள்ள அரண்மனை; இவ்வரண்மனை இப்போதைய காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தின் முன்பு இருந்தது; இவ்வரண்மனை அடையாளங்கள் கி.பி.1990 வரை இருந்தன. **16.938.** பணிக்கன்மார் - ஈழுவ சாதியர். **16.939.** செருமி - சேர்ந்து; நெருக்கமாய்.

### Mannarum kūṭṭattārum nākarkōyil aranmanai varutal

*kolaikaḷceyya vēṇumenṟu kūṇṭavarkaḷ onṟukūṭip*
*patmanāpa puramatilum pakkattilē mantirimārum*
*villukiṟi ampalattil viraivākak kaṭantucenṟu*
*kutiraipāñcāṉ kuḷamkaṭantu kaṇṭakaruppuk kaṭṭiāṟuviṭṭu*
*tōcaipalakāram viṟkum cuṅkāṅkaṭai kaṭantu*
*pārpatiyāḷ akaramiṭṭu pañcavarṇak kāṭumviṭṭu*
*nākaruvāḻ kōvililē naṉṟiyuḷḷa koṭṭārattil*
*kōvilkal koṭṭārattil kūṇṭamaṉṉar eḻuntaruḷi*

*ācānmārum paṇikkaṉmārum avarpakkattil cūḻntuvara*
*ceruminiṟkum nēramatil ciṟantamaṉṉar kaṟpittārām*

And asked his ministers to
Arrange for his trip to Nākarkōyil
On a fine morning
The king and his team
Set out on their journey
From Patmanāpapuram to Nākarkōyil
With the definite goal of killing the two Brothers.
Passing the temple at Villukkuṟi
Crossing the Kutiraipāñcāṉkuḷam
And the river Kaṇṭakaruppukkaṭṭi
Moving through Cuṅkāṉkaṭai
Reaching Pārvatipuram
Surrounded by ministers and chieftains
They stayed at the palace in Nakarkōyil.

### மன்னன் தம்பிகளை அழைக்க ஒட்டனை அனுப்புதல்

குஞ்சுதம்பி வலியதம்பி கூண்டமன்னர் இரண்டுபேரும்
ஒட்டனையும் வரவழைத்து[1] உறுதியுடன் கூட்டிவர
தம்பிமார்கள் இருபேரும் தானவர்கள் மறுத்துச் சொன்னார்
மன்னருட பக்கத்திலே மன்னவரும் காணாமல்
வலியதம்பி குஞ்சுதம்பி வடிவழகன்[2] தம்பியரைத்
திருக்கண்ணில் காணாமல் திகைத்திருந்தார் என்றுசொல்லிச்
சீக்கிரத்தில்[3] கூட்டிவர திருவிளங்கள் பற்றுவாராம்.

### ஒட்டன் செய்திகளைத் தம்பிமாரிடத்துக் கூறுதல்

ஒட்டனும் விடைவாங்கி உற்றபுகழ் தம்பிமாரைக்
கூட்டிவர வேணுமென்று குணமுடனே தான்நடந்து
சிங்கநல்லூர் படைவீட்டில் செய்திஎல்லாம் சொல்லுவாராம்.

16.941. ஒட்டன் - தூதன். 16.944. வடிவழகன் தம்பியர் - வடிவ அழகில் சிறந்த தம்பிமார்.
16.946. திருவிளங்கள் பற்றுவாராம் - திருவுள்ளக்குறிப்பைக் கூறினாராம். 16.951. நீராழி -
நீராடும் பொய்கை. 16.953. சுத்தி - 'சுற்றி' என்பதின் பேச்சுவழக்கு. 16.954. அஞ்சு -
'ஐந்து' என்பதின் பேச்சு வழக்கு. அஞ்சு மூன்று எட்டெழுத்து - ஐந்தும் மூன்றுமாகச்
சேர்ந்து கிடைக்கும் எட்டெழுத்து; 'ஓம் நமோ நாராயணா' என்னும் மந்திரம்; ஐந்தாகிய
'நமசிவாய'; மூன்றாகிய அகர, உகர, மகர எழுத்துக்களின் சேர்க்கையாகிய 'ஓம்' என்னும்

மந்திரம்; மற்றும் 'ஓம் நமோ நாராயணா' என்னும் எட்டெழுத்து மந்திரம் எனினும் அமையும். 16.957. சேவித்தல்லோ - வணங்கியல்லவா. 16.958. அமுதேற்றும் மண்டபம் - சாப்பாட்டு அறை.

சு.சொ : 1. வரவழைத்து 2. வடிவளகன் 3. சீக்கிறத்தில்

## Mannan tampikalai alaikka ottanai anupputal

*kuñcutampi valiyatampi kūṇṭamannar iraṇṭupērum*
*oṭṭanaiyum varavaḻaittu uṟutiyuṭan kūṭṭivara*
*tampimārkaḷ irupērum tāṉavarkaḷ maṟuttuc coṉṉār*
*maṉṉaruṭa pakkattilē maṉṉvarum kāṇāmal*
*valiyatampi kuñcutampi vaṭivaḻakaṉ tampiyarait*
*tirukkaṇṇil kāṇāmal tikaittiruntār eṉṟucollic*
*cīkkirattil kūṭṭivara tiruviḷaṅkaḷ paṟṟuvārām*

## Oṭṭaṉ ceytikaḷait tampimariṭattuk kūṟutal

*oṭṭaṉum viṭaivāṅki uṟṟapukaḻ tampimārait*
*kūṭṭivara vēṇumeṉṟu kuṇamutaṉē tāṉnaṭantu*
*ciṅkanallūr paṭaivīṭṭil ceytiellām colluvārām*

## Message sent to the Brothers

Then the king recruited a special messenger
To bring the two Brothers to his camp
Telling them the king was upset
Felt very much their absence
He wished to see them at the earliest.
Carrying this urgent message
The herald went straight to Ciṅkanallūr.

## தம்பிமார்கள் நீராடி இறைவனைத் தொழுதல்

சந்தோசமாய்த் தம்பிமார்கள் யாத்திரையும் போகவென்று
நீராழி தனிலிறங்கி நீராடி தான்பொழிந்து
நீராட்டம் தனைப்பொழிந்து நேசமுள்ள தம்பிமார்கள்
நெற்றியிலே நீறணிந்து நீலகண்டா சரணமென்று
சுத்தி வலமாகவந்து சூரியனை அடிதொழுதார்
அஞ்சுமூன்று யெட்டெழுத்தும் ஆகமான மந்திரமும்
சகலவித சாஸ்திரமும் தப்பாமல் உச்சரித்து
நமஸ்கரித்து சேவித்தல்லோ நல்லதொரு தம்பிமார்கள்.

### தம்பிமார்கள் அமுது உண்டல்

அமுதேற்றும் மண்டபத்திலே அங்கவர்கள் வந்திருக்க
இருக்குமந்த நாளதிலே ஏற்றபுகழ் தம்பிமாரும்
கிட்டிணத்தா எம்மையுமே கிருபையுடன் அமுதளிக்க.

### தம்பிமார்களின் அலங்காரம்

அமுதளிக்க தம்பிமார்கள் அலங்கார அணியணிந்து
கஞ்சியிட்ட கவணிகளும் சருகையிட்ட உருமாலும்
கரையிட்ட வேட்டிகளும் கம்பிக்கரை கவணிகளும்
கையில் வீரச்சங்கிலியும் கல்பதித்த மோதிரமும்
கோர்த்தியிட்ட முடுகுகளும் குணமுடனே எடுத்தணிந்து
விலைமதிக்க வொண்ணாத வீரவாளிப் பட்டுடுத்து
மாந்தளிர்போல் பட்டுடுத்து வலியதம்பி குஞ்சுத்தம்பி
அரைதனிலே அரைஞானம் ஆளியிட்ட முடுவுகளும்
கச்சப்பிறம் கைமுடுகு கசவிட்ட வேட்டிகளும்
பொன்னுரைத்து பொட்டுமிட்டு புனுகுநன்றாய் உடல்பூசி
மணமார்பில் சந்தனமும் வாடையது கமகமென
வாடையது கமகமென மதப்புலிபோல் வலியதம்பி
சினப்புலிபோல் குஞ்சுத்தம்பி சிங்கார உடுப்புகளும்
மணிமார்பில் சந்தனமும் வடிவழகன் குஞ்சுதம்பி
ஆபரண மாலைகளாம் அணிமுத்து தான்பதித்த
முத்துமாலை ஆபரணம் விஸ்தாரமாய் அணியணிந்தார்
குஞ்சுதம்பி வலியதம்பி கூண்டதொரு தம்பிமார்கள்.

16.962. கவணி - ஆடை. உருமால் - தலையில் கட்டும் வண்ணத்துண்டு; இச்சொல் உருது சொல்லிலுருந்து தமிழுக்குப் பெறப்பட்டது. 16.964, 965. வீரச்சங்கிலி, மோதிரம், முடுகு - சில வகை ஆபரணங்கள் பெயர்கள். 16.967. மாந்தளிர் போல் பட்டு - மாந்தளிரைப் போல மெல்லியதான பட்டாடை. உடுத்து - உடுத்தி; அணிந்து. 16.968. அரைஞானம் - அரைநாண்; இடுப்பில் பூட்டும் ஒரு வகை ஆபரணம். 16.968,969. முடுவு, கச்சப்பிறம், கைமுடுகு - சில ஆபரணங்களின் பெயர்கள். 16.969. கசவு - கரை; வேட்டியின் ஓரத்தில் வெள்ளிச் ஜரிகையால் நெய்யப்பட்ட ஒன்று. 16.970. புனுகு - ஒரு வகை வாசனைப் பொருள். 16.971. மணி மார்பு - மாணிக்கம் போல் ஒளிரும் மார்பு. வாடை - நறுமணம். 16.973. உடுப்பு - ஆண்கள் அணியும் மேலாடை.

### Tampimārkaḷ nīrāṭi iṟaivaṉait toḻutal

*cantōcamāyt tampimārkaḷ yāttiraiyum pōkaveṉṟu*
*nīrāḻi taṉiliṟaṅki nīrāṭi taṉpoḻintu*
*nīrāṭṭam taṉaippoḻintu nēcamuḷḷa tampimārkaḷ*

*neṟṟiyilē nīṟaṇintu nīlakaṇṭā caraṇameṉṟu*
*cutti valamākavantu cūriyaṉai aṭitoḻutār*
*añcumūṉṟu yeṭṭeḻuttum ākamāṉa mantiramum*
*cakalavita cāstiramum tappāmal uccarittu*
*namaskarittu cēvittallō nallatoru tampimārkaḷ*

### Tampimārkaḷ amutu uṇṭal

*amutēṟṟum maṇṭapattilē aṇkavarkaḷ vantirukka*
*irukkumanta nāḷatilē ēṟapukaḷ tampimārum*
*kiṭṭiṇattā ḷammaiyumē kirupaiyuṭaṉ amutaḷikka*

### Tampimārkaḷiṉ alaṅkāram

*amutalikka tampimārkaḷ alaṅkāra aṇiyaṇintu*
*kañciyiṭṭa kavaṇikaḷum carukaiyiṭṭa urumālum*
*karaiyiṭṭa vēṭṭikaḷum kampikkarai kavaṇikaḷum*
*kaiyil vīraccaṅkiliyum kalpatitta mōtiramum*
*kōrttiyiṭṭa muṭukukaḷum kuṇamuṭaṉē eṭuttaṇintu*
*vilaimatikka voṇṇāta vīravāḷip paṭṭuṭuttu*
*māntaḷirpōl paṭṭuṭuttu valiyatampi kuñcutampi*
*araitaṉilē araiñāṉam āḷiyiṭṭa muṭuvukaḷum*
*kaccappiṟam kaimuṭuku kacaviṭṭa vēṭṭikaḷum*
*poṉṉuraittu poṭṭumiṭṭu puṉukunaṉṟāy uṭalpūci*
*maṇamārpil cantaṉamum vāṭaiyatu kamakameṉa*
*vāṭaiyatu kamakameṉa matappulipōl valiyatampi*
*ciṉappulipōl kuñcutampi ciṅkāra uṭuppukaḷum*
*maṇamārpil cantaṉamum vaṭivaḷakaṉ kuñcutampi*
*āparaṇa mālaikaḷām aṇimuttu tāṉpatitta*
*muttumālai āparaṇa viṣṭāramāy aṇiyaṇintār*
*kuñcutampi valiyatampi kūṇṭatoru tampimārkaḷ*

### Invitation accepted

Met the Brothers and presented the matter
With all humility and reverence
The happy Brothers gave their consent
Got ready for the hard journey
Had their bath in the lovely pond

Fixed holymarks on their foreheads
Went round and round the temple
Worshipped God Thiru Nīlakaṇṭaṉ
Pronounced holy chants
Had their meals given by their loving mother.
They wore the neat and the best
The dress they kept in the chest
A fine dhoti with colourful border
A silk towel with sylvan frills
Gold chain for the hands.
Gold rings for the fingers
Gold ornaments for the whole body
With all Royal get up
They looked like young tiger cubs
Kept the sword in its sheath
And tied it over their waist
To guard themselves from enemies
They carried pointed spears.

### தம்பிமார்கள் நாகர்கோவிலுக்குப் புறப்படுதற்கு ஆயத்தமாதல்

வலியதம்பி குஞ்சுதம்பி மன்னவர்கள் இருபேரும்
யாத்திரையும் போகவென்று வல்லயமும் தானெடுத்தார்
உடைவாளை உறைசொருவி உற்றபுகழ் தம்பிமார்கள்
குடைக்கார செறுக்கனுடன் கண்டவீசக் காரர்களும்
வைரவன்கோணம் தனில்வாழும்[1] மாடன்பொன்னிற நாயருடன்
பெரும்கோடு தனில்வாழும் பிச்சகப்பள்ளி நாயருடன்
யாத்திரை விடைவாங்கி தாயாருட முன்பில்வந்தார்
மன்னவர்க்கு முகம்காட்டி வாறோம்என்று அடிதொழுதார்
அடிதொழுது தம்பிமார்கள் அம்மைதம்புரான் ஏதுசொல்வார்.

### தாயார் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறி விடைகொடுத்தல்

பகையாமல் நாமிருந்து பகைத்தாயே மன்னவரை
ஏதுகல்பினை ஆனாலும் என்னுடைய பிள்ளைகளே.
மறுத்தொன்றும் பேசாமல் மன்னருட கல்பனைக்கு
கல்பனையைத் தான்கேட்டு அழகுமுகம் காட்டிவாரும்

வரும்விதியை அறியாமல் மாதாவும் திருவிளமாய்
யாத்திரையும் தான்வாங்கித் தம்பிமார்க்கு விடைகொடுத்தார்.

16.979. வெல்லயம் - ஒரு வகை ஈட்டி. 16.981. கண்டவீசக்காரர்கள் - கைப்பிடி வாளைப் பாதுகாப்புக்காகக் கொண்டவர்கள். 16.982. வைரவன் கோணம் - ஓர் ஊர்ப் பெயர். 16.983. பெருங்கோடு - ஓர் ஊர் பெயர். 16.982, 983. மாடன் பொன்னிற நாயர், பிச்சகப்பள்ளி நாயர் - இவ்விருவரும் தம்பிமார்களுக்கு உதவியாக இருந்தவர்கள். 16.984. முன்பில் - முன்பாக. 16.985. வாறோம் - 'வருகிறோம்' என்பதின் பேச்சு வழக்கு. 16.986. அம்மை - தாய். 16.987. பகையாமல் - பகை கொள்ளாமல். 16.988. கல்பினை - கற்பனை; கட்டளை. 16.991. திருவிளமாய் - திருவுள்ளத்துடன்; நிறைவுடன்.

சு.சொ : 1. தனில்வாளும்

## Tampimārkaḷ nākarkōvilukkup purappaṭutarku āyattamāṭal

*valiyatamipi kuñcutampi mannavarkaḷ iruperum*
*yāttiraiyum pōkavenru vallayamum tānēṭuttār*
*uṭaivāḷai uraicoruvi urrapukaḷ tampimārkaḷ*
*kuṭaikkāra cerukkanuṭan kanṭavīcak kārarkaḷum*
*vairavankōṇam tanilvāḷum māṭanponnira nāyaruṭan*
*perumkōṭu tanilvāḷum piccakappaḷḷi nāyaruṭan*
*yāttirai viṭaivāṅki tāyāruṭa munpilvantār*
*mannavarkku mukamkāṭṭi vārōmenru aṭitoḷutār*
*aṭitoḷutu tampimarkaḷ ammaitampurān ētucolvār*

## Tāyār piḷḷaikaḷukku arivurai kūri viṭaikoṭuttal

*pakaiyāmal nāmiruntu pakaittāyē mannavarai*
*ētukalpinai ānālum ennuṭaiya piḷḷaikaḷē*
*maruttonrum pēcāmaḷ mannaruṭa kalpanaikku*
*kalpanaiyait tānkēṭṭu aḷakumukam kāṭṭivārum*
*varumvitiyai ariyāmal mātāvum tiruviḷamāy*
*yāttiraiyum tānvāṅkit tampimārkku viṭaikoṭuttār*

Accompanied by Vairavakōṇam
Māṭan Ponnira Nāyar and
Peruṅkōṭu Piccakapaḷḷi Nāyar
They went before their mother
And sought her permission and blessings
To have a trouble free journey
And thereby fulfil the king's wish

"We have never been enemies to the king
But somehow you became his enemies
Don't say anything to offend him
Be restraintful and show tolerance."
Said the mother to her sons.

### தம்பிமார்கள் கணியாகுளம் வருதல்

விடைவாங்கித் தம்பிமார்கள் வீறுவீறாய் தான்நடக்க
வலியதம்பி குஞ்சுதம்பி மன்னவர்கள் இருபேரும்
நடந்தல்லவோ தம்பிமார்கள் நல்லதெரு வீதிவிட்டு
தெருவெல்லாம் தான்கடந்து சிறந்தஆற்றங் கரைவந்தார்
குடைக்கார சிறுக்கனோடே வெஞ்சாமரைக் காரனுடன்
ஆற்றங்கரை வாரமிட்டு ஆணழகன் தம்பிமார்கள்
சரலூர் அம்பலம்விட்டு சடிதியாக வழிநடந்தார்
வெள்ளங்கட்டி அம்பலமும் வீரசூரன் தான்நடந்தார்
ஆட்டுவாணியன் மடமும்விட்டு ஆணழகன் தம்பிமார்கள்
நெல்லிமடம் தான்கடந்து நிமிஷத்தில் போகவென்ன
சினப்புலிபோல் தம்பிமார்கள் இனயம்குறிச்சி ஏலாவிட்டு
ஆளூர் ஏலாவிட்டு அக்கினியா புரமுமிட்டு
அக்கினியா குளம்கடந்து ஆனசுங்காங் கடைகடந்து
கன்னியங் காடுமிட்டு கணியாகுளத்தில் வந்தார்.

### வலியதம்பியின் கட்டளைப்படி குஞ்சுதம்பி தாழக்குடி செல்லுதல்

முதலெடுப்பு உள்ளதெல்லாம் முறைமையுள்ள குஞ்சுதம்பி
பிச்சகப் பிள்ளைநாயரும் பெருமையுள்ள குடக்காரனும்
கைக்கணக்குப் பார்ப்பதற்குக் கடுநடையாய்த் தான்போனார்
கள்ளியங் காடும்விட்டு கணியா குளம்கடந்து
புத்தேரி தான்கடந்து சிறந்தபுகழ் குஞ்சுதம்பி
குஞ்சுதம்பி மன்னவரும் குடக்கார செறுக்கனுமாய்ப்
பிச்சப்பள்ளி நாயருடன் இறச்சகுளம் கடந்து
தாழக்குடி[1] கேள்விதன்னில் தான்போனார் குஞ்சுதம்பி.

16.993. வீறுவீறாய் - வேகமாய். 16.999. சரலூர் - கல்குளம் தாலுகா குருந்தங்கோடு பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஒரு சிற்றூர். சடுதியாக - வேகமாக. 16.1000. வெள்ளங்கட்டி - சரலூர் அருகேயுள்ள சிற்றூர். 16.1002. நெல்லிமடம் - தக்கலைக்கும் சுங்காங்கடைக்கும் இடைப்பட்ட ஓர் இடம். 16.1003. இணையம்குறிச்சி - குருந்தங்கோடு பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஓர் ஊர். 16.1004. அக்கினியாபுரம் - அம்மாண்டிவிளை ஊரை அடுத்த

ஒரு சிற்றூர். 16.1007. முறைமை - உரிமை. 16.1013. இறச்சகுளம் - நாகர்கோயிலிலிருந்து வடக்கே ஏழு கி.மீ. தொலைவிலுள்ள ஓர் ஊர்; இவ்வூர் கல்வெட்டு ஒன்று (கி.பி. 1629) இவ்வூரை 'எறச்சகுளம்' எனக் குறிப்பிடுகிறது.

சு.சொ : 1. தாளக்குடி.

## Tampimārkaḷ kaṉiyākuḷam varutal

*viṭaivāṅkit tampimārkaḷ viṟuvirāy tāṉnaṭakka*
*valiyatampi kuñcutampi maṉṉavarkaḷ irupērum*
*naṭantallavō tampimārkaḷ nallatoru vītiviṭṭu*
*teruvellām tāṉkaṭantu ciṟantaṟṟaṅ karaivantār*
*kuṭaikkāra ciṟukkaṉōṭē veñcāmaraik kāraṉuṭaṉ*
*āṟṟaṅkarai vāramiṭṭu āṇalakaṉ tampimārkaḷ*
*caralūr ampalamviṭṭu caiṭiyāka vaḷinaṭantār*
*veḷḷaṅkaṭṭi ampalamum vīracūraṉ tāṉnatantār*
*āṭṭuvāṇiyaṉ maṭamumviṭṭu āṇaḷakaṉ tampimārkaḷ*
*nellimaṭam tāṉkaṭantu nimiṣattil pōkaveṉṉa*
*ciṉappulipōl tampimārkaḷ iṉayamkuṟicci ēlāviṭṭu*
*āḷūr ēlāviṭṭu akkiṉiyā puramumiṭṭu*
*akkiṉiyā kuḷamkaṭantu āṉacuṅkāṅ kaṭaikaṭantu*
*kaḷḷiyaṅ kāṭumiṭṭu kaṉiyākuḷattil vantār*

## Valiyatampiyiṉ kaṭṭaḷaippaṭi kuñcutampi tāḻakkuṭi cellutal

*mutaleṭuppu uḷḷatellām muṟaimaiyuḷḷa kuñcutampi*
*piccakap piḷḷaināyarum perumaiyuḷḷa kuṭakkāraṉum*
*kaikkaṇakkup pārppataṟkuk kaṭunaṭaiyāy tāṉpōṉār*
*kaḷḷiyaṅ kaṭumviṭṭu kaṉiyā kuḷamkaṭantu*
*puttēri tāṉkaṭantu ciṟantapukaḻ kuñcutampi*
*kuñcutampi maṉṉavarum kuṭakkāra ceṟukkaṉumāyp*
*piccappaḷḷi nāyaruṭaṉ iṟaccakuḷam kaṭantu*
*tāḻakkuṭi kēḷvitaṉṉil tāṉpōṉār kuñcutampi*

## Journey of the Brothers

Not knowing the course of the cruel fate
The Brothers began their journey
Marching along the streets
And crossing through numerous villages

Through Caralūr temple swift they went
Veḷḷaṅkaṭṭimaṭam, Āṭṭuvāṇiyaṉmaṭam
Nellimaṭam, Iṇayamkuṟicci
Āḷūr, Akkiṉiyāpuram and Cuṅkāṉkaṭai.
They passed from place to place
With Piccakap Piḷḷai Nāyar and others
Kaḷḷiyaṅkāṭu and Kaṇiyākuḷam
Puttēri and Eṟaccakuḷam
Tāḻākkuṭi were the other places.
Leaving Kuñcu Tampi at Tāḻākkuṭi.

### வலியதம்பி நாகர்கோவில் செல்லுதல்

குஞ்சுதம்பி போனபோது கூண்டபுகழ் வலியதம்பி
மாடன்பொன்னிற நாயருடன் வாய்த்தகுடக்கார செறுக்கனுமாய்
பக்கத்திலே வெஞ்சாமரை பாவினையாய் சேவிக்கவே
பார்வதியாள் அகரமிட்டு பஞ்சவர்ணக் காடுமிட்டு
வெட்டூர்ணி மடம்கடந்து விரைவுடனே செல்லுவாராம்.

16.1017. பாவினை - பாவனை.

### Valiyatampi nākarkōvil cellutal

*kuñcutampi pōṉapōtu kūṇṭapukaḻ valiyatampi*
*māṭaṉpoṉṉiṟa nāyaruṭaṉ vāytta kuṭakkāṟa ceṟukkaṉumāy*
*pakkattilē veñcāmarai pāviṉaiyāy cēvikkavē*
*pārvatiyāḷ akaramiṭṭu pañcavarṇak kaṭumiṭṭu*
*veṭṭūrṇi maṭamkaṭantu viraivuṭaṉē celluvārām*

Valiya Tampi and others
Went through Pārvatipuram,
Veṭṭurṇimaṭam and reached
Nākarkōyil where the king stayed.

### வலியதம்பி மன்னரைக் காணுதல்

நாகருவாழ்' கோவிலிலே நலமுள்ள கொட்டாரத்தில்
பர்பரென தானேர்டி பாராளும் மன்னருடன்
மன்னருட திருமுன்பதிலே வந்துமுகம் காட்டிநின்றார்.

## மன்னர் வரவேற்றலும் வலியதம்பி வணங்குதலும்

வந்துமுகம் காட்டிநிற்கும் வலியதம்பி முகம்பார்த்து
வாரும்வாரும் வலியதம்பி வாருமென்தன் வலியதம்பி
அந்தநேரம் வலியதம்பி அடிதொழுது மன்னவரை
ஆசாரமாய் கைதொழுது கைதொழுது நிற்கும்நேரம்.

## மன்னர் வஞ்சக எண்ணம் கொள்ளுதல்

காசினியை ஆளும்வேந்தன் திருமுகத்தைக் கறுத்தானே
திருமுகத்தை மாறிவைத்துத் திருவிளங்கள் பற்றுவானாம்.

## மன்னர் தம்பியிடம் வஞ்சகமாகப் பேசுதல்

வாரும்வாரும் என்றுசொல்லி திருவிளங்கள் பற்றியதும்
வலியதம்பி வஞ்சமின்றி முகம்காட்டி முன்பில்போக
திருமனதில் கசடுவைத்து திருவிளங்கள் பற்றியதும்
தெரியாமல் வலியதம்பி அவத்தம் வாறதறியாமல்
ஆணழகன் வலியதம்பி அரசருடன் சந்தோசமானார்
சந்தோசமாய் வலியதம்பி சடையாமல் நிற்கும்நேரம்.

16.1026. ஆசாரமாய் - அரச நியதிகளுக்கு உட்பட்ட ஒழுக்க முறையுடன். 16.1027. காசினி - உலகம். கறுத்தானே - கோப்பட்டானே. 16.1028. திருமுகத்தை மாறிவைத்து - 'அரசர் தன் அழகிய முகத்தில் சினக்குறிப்பை வெளிக்காட்டும் தன்மையில் மாறுபாடாக வைத்து' என்ற பொருளில். 16.1032. அவத்தம் - அபத்தம்; தீங்கு. வாறது - 'வருகின்றது' என்பதின் பேச்சு வழக்கு. 16.1034. சடையாமல் - மனம் மற்றும் உடலால் தளராமல்.

சு.சொ : 1. நாகருவாள்

## Valiyatampi maṉṉaraik kāṇutal

*nākaruvāḻ kōvililē nalamuḷḷa koṭṭārattil*
*parapareṇa tāṉōṭi pārāḷum maṉṉaruṭaṉ*
*maṉṉaruṭa tirumuṉpatilē vantumukam kaṭṭiniṉṟār*

## Maṉṉar varavēṟṟalum valiyatampi vaṇaṅkutalum

*vantumukam kāṭṭiniṟkum valiyatampi mukampārttu*
*vārumvārum valiyatampi vārumentaṉ valiyatampi*
*antanēram valiyatampi aṭitoḻutu maṉṉavarai*
*ācāramāy kaitoḻutu kaitoḻutu niṟkumnēram*

## Maṉṉar vañcaka eṇṇam koḷḷutal

*kāciṉiyai āḷumvēntaṉ tirumukattaik kaṟuttāṉē*
*tirumukattai māṟivaittut tiruviḷaṅkaḷ paṟṟuvāṉām*

### Mannar tampiyiṭam vañcakamākap pēcutal

*vārumvārum eṉṟucolli tiruvilaṅkaḷ paṟṟiyatum*
*valiyatampi vañcamiṉṟi mukamkāṭṭi muṉpilpōka*
*tirumaṉatil kacaṭuvaittu tiruviḷaṅkaḷ paṟṟiyatum*
*teriyāmal valiyatampi avattam vāṟataṟiyāmal*
*āṉaḷakaṉ valiyatampi aracaruṭaṉ cantōcamāṉār*
*cantocamāy valiyatampi caṭaiyāmal niṟkumnēram*

### Valiya Tampi meeting the king

With no time lost he met the king
With high regard and great reverence
He bowed his head before the king.
"Welcome Valiya Tampi! Welcome"
Said the king to the man with folded hands.
Tampi was happy to face the king
Because he had no enmity in his heart.
He didn't notice the change on the king's face
The king's face was rude and red

### மன்னர் தம்பியிடம் உடைவாளை வாங்குதல்

கெட்டவிதிகள் வந்துசேர கேடுவரும் காலத்திலே
கீர்த்தியுள்ள வலியதம்பி தம்புரானின் முன்பில்செல்ல
"உறைகளத்தி உடைவாளை கொடும்தம்பி" கல்பித்தார்
உடைவாளைக் கேட்டபோது உற்றபுகழ் வலியதம்பி
ஊழிவிதி வாறதறியாமல் அட்டமத்து சனிதனிலே
கெட்டவிதி இருப்பதனால் ஆசனிபிடறி ஏறியதால்
உடைவாளை தானெடுத்து உலகாளும் மன்னருட
உற்றதொரு கைகளிலே திருக்கையில் கொடுத்தாரே.

### மன்னர் தம்பியின் உடைவாளை வீசி எறிதல்

திருக்கையினால் தான்வாங்கிச் சிறந்தநல்ல உடைவாளை
திட்டமிட்டு உறைஉருகி உறைஉருகி உடைவாளை
உற்றதொரு கைப்பிடித்து வலியதம்பி உடைவாளுக்கு
நிகராக இப்புவியில் வையத்தில் இல்லையென்றார்
திருக்கையால் ஆயுதத்தைச் சிறப்பாகத் தான்சேர்த்துச்
சிறந்ததொரு மண்டபத்தில் மண்டபத்தில் விட்டெறிந்தார்.

## தம்பியைச் சேவகர் சுற்றி வளைத்தல்

சுற்றிநின்ற சேவகரும் ஆசான்மார் பணிக்கன்மாரும்
அப்போது தானறிந்து ஆங்கவரும் நடையடைத்தார்
வாசலடை பட்டபோது வலியதம்பி முன்பாக
வந்தவரும் வளைத்தாரே வளைத்தவர்கள் நிற்கும்நேரம்.

16.1036. கீர்த்தி - புகழ். 16.1037. உறை - வாளுறை. களத்தி - 'களற்றி' என்பதின் பேச்சு வழக்கு. கல்பித்தார் - ஆணையிட்டார். 16.1038. அட்டமத்து சனி - அஷ்டமத்து சனி; எட்டாமிடத்து சனி; கிரக நிலைகளின் படி ஒருவருக்கு எட்டாம் வீட்டில் சனியிருக்குமானால் அவர் மிகுந்த துன்பங்களுக்கு ஆளாவார் என்பது நம்பிக்கை. 16.1040. ஆ சனி - அந்த சனி; 'ஆ' என்பது இவ்விடம் சுட்டுப்பெயராகக் குறிப்பிடப்பட்டது. பிடறி - பின் தலையின் கீழ் பகுதி; 'சனி புடதியில் ஏறி விட்டது' என்பது நாஞ்சில் நாட்டு வழக்காறு. 16.1044. உறை உருகி - உறையிலிருந்து உருவி எடுத்து. 16.1050. அப்போது தானறிந்து - அந்த நேரத்தில் மன்னரின் உள்ளக் குறிப்பை அறிந்து. நடையடைத்தார் - அரண்மனை வாசலை மூடினார்.

## Mannar tampiyiṭam uṭaivaḷai vaṅkutal

*keṭṭavitikaḷ vantucēra kēṭuvarum kālattilē*
*kīrttiyuḷḷa valiyatampi tampurāṉiṉ muṉpilcella*
*uṟaikaḷatti uṭaivāḷai koṭumtampi kalpittār*
*uṭaivāḷaik kēṭṭapōtu uṟṟapukaḻ valiyatampi*
*ūḻiviti vāratariyāmal aṭṭamattu caṉitaṉilē*
*keṭṭaviti iruppataṉāl ācaṉipiṭari ēṟiyatāl.*
*uṭaivaḷai tāṉeṭuttu ulakāḷum maṉṉaruṭa*
*uṟṟatoru kaikaḷilē tirukkaiyil koṭuttārē*

## Mannar tampiyiṉ uṭaivāḷai vīci eṟital

*tirukkaiyiṉāl tāṉvāṅkic ciṟantanalla uṭaivāḷai*
*tiṭṭamiṭṭu uṟaiuruki uṟaiuruki uṭaivāḷai*
*uṟṟatoru kaippiṭittu valiyatampi uṭaivāḷukku*
*nikarāka ippuviyil vaiyattil illaiyeṉṟār*
*tirukkaiyāl āyutattaic ciṟappākat tāṉcērttut*
*ciṟantatoru manṭapattil manṭapattil viṭṭeṟintār*

## Tampiyaic cēvakar cuṟṟi vaḷaittal

*cuṟṟiniṉṟa cēvakarum ācāṉmār paṇikkaṉmārum*
*appōtu tāṉaṟintu āṅkavarum naṭaiyaṭaittār*
*vācalaṭai paṭṭapōtu valiyatampi muṉpāka*
*vantavarum vaḷaittārē vaḷaittavarkaḷ niṟkumnēram*

He asked Valiya Tampi to come closer
"Remove the sword and feel ease and comfort"
Said the king with shining eyes.
Not knowing the cruel fate
And movement of the evil stars
He gave the sword to the king.
The king was cunning and careful
Commenting it was the best
With no equal in the world
Held it in his hand for sometime
Stealthily threw it in to the next hall
Waiting for this opportunity
Tampi was surrounded on all sides.

### மன்னரின் கட்டளை

மன்னவரும் கல்பித்தாராம் வலியதம்பி முகம்பார்த்து
இப்போது கேட்டிலையோ என்னுடைய வலியதம்பி
இசலான சுசீந்திரத்தில் மார்கழி மாசத்திலே
வந்ததல்லோ வலியதம்பி வாய்த்ததிருக் கொடியேற்றும்
கொடியேற்ற வேணுமல்லோ கண்டதொரு வலியதம்பி
தேரோட்ட சத்திவகைக்கு சாப்பிடபாத்திரம் வேண்டாமோ
பாத்திர பண்டங்களெல்லாம் ஆணழகா வலியதம்பி
அரைநாழிகைக்[1] குள்ளாடி இங்கவர வேணுமென்றார்.

**16.1054.** கேட்டிலையோ - கேட்பாயோ; இச்சொல்லில் மன்னனின் ஏளனக் குறிப்பு உள்ளது. **16.1055.** இசலான - பேரோசையுள்ள. **16.1056.** திருக்கொடியேற்று - மேலான கோயில் திருவிழா கொண்டாட்டத்திற்காக முதல் நாள் ஏற்றப்படும் கொடியேற்றச் சடங்கு. **16.1058.** தேரோட்ட சத்தி - தேரோட்டத் திருவிழாவான ஒன்பதாம் நாள் அன்று, அதனைக் காணவந்த பிராமணர், வேளாளர், நாயர் ஆகிய ஜாதியருக்கு கொடுக்கப்படும் சாப்பாட்டின் பெயர். **16.1060.** இங்க - 'இங்கே' என்பதின் பேச்சு வழக்கு.

*சு.சொ : 1. அரைநாளிகை*

### Maṉṉariṉ kaṭṭaḷai

*maṉṉavarum kalpittārām valiyatampi mukampārttu*
*ippōtu kēṭṭilaiyō eṉṉuṭaiya valiyatampi*
*icalāṉa cucīntirattil mārkaḻi mācattilē*
*vantatallō valiyatampi vāyttatiruk koṭiyēṟṟum*

*koṭiyēṟṟa vēṇumallō kaṇṭatoru vayiyatami*
*tērōṭṭa cattivakaikku cāppiṭapāttiram vēṇṭāmō*
*pāttira paṇṭaṅkalellām āṇaḻakā valiyatampi*
*araināḻikaik kuḷḷāṭi iṅkavara vēṇūmeṉṟār*

## Temple Issue

By able soldiers and well trained masters
Best and select Paṇikkar guards
"Listen to me Valiya Tampi
The month of *mārkaḻi* is meant for
Cūcīntiram car festival
To hoist the flag for the festival
And to host the pilgrims
We need big and large vessels
Bring everything within half an hour"
Said the king in a tougher tone

### வலியதம்பியின் பதில்

அப்போது வலியதம்பி அடுக்கநின்று அறிவித்தாராம்
"அழகப்ப முதலிபடை கொள்ளைகொண்டு போனதல்லோ
அரசமுடி மன்னவரே அறிஞ்சசெய்தி இதுவல்லோ."

### மன்னர் தகாத வார்த்தை உரைத்தல்

அழகன் அறிவித்தபோதே வேங்கைபுலி மன்னவரும்
சீறியே வேகமுற்று வெடுவெடென கல்பித்தாரே 1065
"அழகப்பன் உங்கள் அப்பனோடா" என்றரசர் கல்பித்தநேரம்.

### வலியதம்பியும் பதிலுக்கு உரைத்தல்

கல்பினைக்கு அடுத்தஉத்தரம் ஆணழகன் வலியதம்பி
மண்டபத்தின் நடுவேவந்து அரசர்திரு முன்பில்நின்று
அழகப்ப முதலியுந்தான் எந்தனுக்கு அப்பனென்றால்
அவ்விடத்து மாமனல்லோ அவ்விடத்து மாமனல்லோ. 1070

16.1061. அடுக்கநின்று - அருகில் நின்று. 16.1065. சீறியே - சினம் கொண்டே. வெடுவெடென - ஒலி குறிப்புச்சொல்; சினக் குறிப்பை உணர்த்தியது. கல்பித்தார் - கற்பித்தார்; கட்டளையிட்டார். 16.1067. அடுத்த உத்தரம் - உடனடியான பதில். 16.1070. அவ்விடத்து - அந்த முறைப்படி.

### Valiyatampiyiṉ patil

*appōtu valiyatampi aṭukkaniṉṟu aṟivittārām*
*aḻakappa mutalipaṭai koḷḷaikoṇṭu pōṉatallō*
*aracamuṭi maṉṉavarē aṟiñcaceyti ituvallō*

### Maṉṉar takāta vārttai uraittal

*aḻakaṉ aṟivittapōtē vēṅkaipuli maṉṉavarum*
*ciṟiyē vēkamuṟṟu veṭuveṭeṉa kalpittārē*
*aḻakappaṉuṅkaḷ appaṉōṭā eṉṟaracar kalpittanēram*

### Valiyatampiyum patilukku uraittal

*kalpiṉaikku aṭuttauttaram āṉaḻakaṉ valiyatampi*
*maṇṭapattil naṭuvēvantu aracartiru muṉpilniṉṟu*
*aḻakappa mutaliyuntāṉ eṉtaṉukku appaṉeṉṟāl*
*avviṭattu māmaṉallō avviṭattu māmanallō*

"All the vessels of the temple
Are with Aḻakappa Mutaliyār
You also know, Oh, king!
They all became his booty"
Replied. Valiya Tampi vigorously.
The king was angry and
Serious with vibrant words
"Is your father Aḻakappaṉ?"
For this swift came Tampi's reply
"If Aḻakappa Mutaliyār was my father
Wouldn't he be your uncle"

### மன்னரின் சினம்

மாமனென்று சொன்னபோது மன்னவரும் கோபித்தல்லோ
வந்துநின்றவர் முகம்பார்த்து கோபித்த நேரந்தன்னில்.

### தம்பியைச் சேவகர் சூழ்ந்து பிடித்து அடித்தல்

ஆசான்மாரும் பணிக்கன்மாரும் அங்கேநின்ற சேவுகாரரும்
மல்பிடிக்காரரும் வர்மக்காரரும் கூடியேநின்று வளைத்தாரே
ஈரச்சீலையில் எள்ளப்பினால்போல எல்லையில்லா சேவுகாரரும்

வந்தசேவுகளும் வலியதம்பியும் மல்லுகெட்டினால் போலகட்டினார்
மல்லுகட்டி பிடிக்கவே வர்மத்தட்டு தட்டவே
வந்துநின்ற வீரரெல்லாம் வளையவளைய நின்றனர்.

### வலியதம்பி எதிர்த்துப் போரிடுதல்

வலியதம்பி மாறிக்கட்டி வர்மத்தட்டு தட்டினார்
கால்பிடியும் கைபிடியுமாய் அடவுபோட்டு கட்டினார்
வளையவளைய நின்றுகொண்டு மாறிமாறித் தட்டினார்
ஆசான்மார் பணிக்கன்மார்களில் அஞ்சாறுபேர் அங்கேமடிந்தனர்
கோழிப்போர் பொருவதுபோல கூடிநின்ற பேர்களைக்குத்தினார்
கைகொண்டு குத்தினார் கால்கொண்டு தட்டினார்
கடுகநாலைந்து பேர்கள் தூணிலே மோதினார்
மாறிமாறி பொறித்தட்டினார் சேவகர்சிலரே மடிந்துபோனார்.

16.1071. கோபித்து - சினம் கொண்டு. 16.1073. சேவுகார் - சேவகர்கள். 16.1074. மல்பிடிக்காரர் - மல்யுத்தகாரர்கள். வர்மக்காரர் - வர்மக்கலை அறிந்தவர். கூடியே - சேர்ந்தே. 16.1075. ஈரச்சீலை - ஈரமான ஆடை. எள்ளப்பினால் போல - எள்ளானது ஒட்டிக் கொண்டதைப் போல. எல்லையில்லா - அளவிட முடியாத. 16.1076. சேவுகள் - சேவகர்கள். மல்லு கெட்டினால் போல கட்டினார் - மல்யுத்த வீரர்கள் நழுவ விட முடியாதவாறு எதிரியை மடக்கிப் பிடித்து விட்டதைப் போல கட்டினார். 16.1077. வர்மத்தட்டு - வர்ம அடிமுறைப்படி அடிக்கும் அடி. 16.1078. வளைய வளைய - சுற்றி சுற்றி. 16.1079. மாறிக்கட்டி - எதிராக நின்று மல்லுக்கட்டி. 16.1080. அடவு - அடைவு; வர்ம அடிமுறைப்படி கால் கைகளை முறையாக அசைத்துக் காட்டும் பாவனை. 16.1081. மாறி மாறி - மீண்டும் மீண்டும். 16.1083. கோழிப்போர் - சேவல் சண்டை. 16.1085. கடுக - வேகமாக. 16.1086. பொறி - வர்ம அடியின் முறையில் உடலிலுள்ள மர்ம ஸ்தானம்.

### Man̲n̲arin̲ cin̲am

*māman̲en̲r̲u con̲n̲apōtu man̲n̲avarum kopittallō*
*vantunin̲r̲avar mukampārttu kōpitta nērantan̲n̲il*

### Tampiyaic cēvakar cūḻntu piṭittu aṭittal

*ācān̲mārum paṇikkan̲mārum aṅkēnin̲r̲a cēvukārarum*
*malpiṭikārarum varmakkārarum kūṭiyēnin̲r̲u vaḷaittārē*
*īraccīlaiyil eḷḷappin̲ālpōla ellaiyillā cēvukārarum*
*vantacēvukaḷum valiyatampiyum mallukeṭṭin̲āl pōlakaṭṭin̲ār*
*mallukkaṭṭi piṭikkavē varmattaṭṭu taṭṭavē*
*vantunin̲r̲a vīrarellām vaḷaiyavaḷaiya nin̲r̲an̲ar*

### Valiyatampi etirttup pōriṭutal

*valiyatampi mār̲ikkaṭṭi varmattaṭṭu taṭṭin̲ār*
*kālpiṭiyum kaipiṭiyumāy aṭavupōṭṭu kaṭṭin̲ār*

*vaḷaiyavaḷaiya niṉṟukoṇṭu māṟimāṟit taṭṭiṉār*
*ācāṉmār paṇikkaṉmārkaḷil añcāṟupēr aṅkēmaṭintaṉar*
*kōḻippōr poruvatupōla kūṭiniṉṟa pērkaḷaikkuttiṉār*
*kaikoṇṭu kuttiṉār kālkoṇṭu taṭṭiṉār*
*kaṭukanālaintu pērkaḷ tūṇilē mōtiṉār*
*māṟimāṟi poṟittaṭṭiṉār cēvakarcilarē maṭintupōṉār*

## Tampi's fight with the guards

When he mentioned the word "uncle"
The king's anger was at its peak
He gave signal to his men.
The martial artmasters and
The mainguards of king's army
Overpowered Valiya Tampi
Who fought valiantly
With single hand and swift movement
The well trained master
And the best Paṇikkar cadress
Numbering five or six
Got killed and many injured.

## வலியதம்பி தளர்ந்து பலபட எண்ணுதல்

நாலாறுநாழிகை[1] மல்பிடிநடக்க தம்பியும்நன்றாய் தளர்ந்துபோனார்
காலசைத்து கையும்அசைந்தல்லோ கடுகவேதாகம் கொண்டெழும்புதாம்
நாவுணர்ந்து செவியடைத்தல்லோ நளினமுற்று வருகுதேபாரும்
அய்யய்யோ இந்தவிதி வாறதறியாமல் ஆணழகன் வலியதம்பி
மெய்கள்தான் சோர்ந்து எண்ணாதுஎண்ணி பொருமுகிறான்
ஆணழகன்நல்ல குஞ்சுதம்பியும் எந்தநேரத்தான் ஓடிவாறானோ
சினப்புலிபோல் குஞ்சுதம்பி வருவானோ வாளுடனே
மன்னவரைவெட்டிக் கொலைசெய்ய உறைவாளைக் கொடுத்தேனேஇப்போது
அபத்தம்வந்ததே எனப்புலம்பினானே குஞ்சுதம்பியும் வந்ததுண்டால்
குலைக்களத்தை மீளலாம் இப்போது வெருவெருத்த தம்பியும்
மெத்தெனவே மண்மீதுவிழுந்தானேகால்கை அசையாமல் கிடந்தானே.

## காவலர்கள் வலியதம்பியை மன்னர்முன் கிடத்துதல்

அந்தநேரம் ஆசான்மார்களும் அடுக்கநின்ற மந்திரிமார்கள்
சூழநின்றவர் தானும்பிடித்தல்லோ துரிசத்திலே பிடித்துமடக்கினார்

கைப்பிடியாக மன்னர்திருமுன்பு கடுகக்கொண்டு அவர்கள்கிடத்தினர்
மந்திரிமார் பிடித்துமடக்கினர் மன்னரின்முன்பு கொண்டுகிடத்தினர்.

16.1087. மல்பிடி - மல்யுத்த அடி. நன்றாய் - மிகவும். 16.1088. அசைந்தல்லோ - அசைந்ததால் அல்லவா. கடுகவே - அதிகமாகவே. 16.1089. நளினமுற்று - பரிகாசத்திற்கு ஆளாகி. 16.1091. மெய்கள் - உடலுறுப்புகள். எண்ணாது எண்ணி - எண்ணத் தகாதவற்றை எண்ணி. பொருமுகிறான் - மனம் திகைக்கின்றான். 16.1092. வாறானோ - வருவானோ. 16.1095. வந்ததுண்டால் - வருவானேயானால். 16.1096. குலைக்களம் - கொலைக்களம். வெருவெருத்த - தளர்ந்துபோன. 16.1097. மெத்தெனவே - ஒலி குறிப்புச்சொல். 16.1098. அடுக்கநின்ற - அருகில் நின்ற. 16.1099. துரிசத்தில் - வேகத்தில். 16.1100. கடுக - விரைவாக. 16.1101. கோரமாகவே - பயங்கரமாகவே.

சு.செ : 1. நாளிகை

## Valiyatampi taḷarntu palapaṭa eṇṇutal

*nāḻāṟunāḻikai malpiṭinaṭakka tampiyumnaṉṟāy taḷarntupōṉār*
*kālacaittu kaiyumacaintallō kaṭukavētākam koṇṭelumputām*
*nāvuṇarntu ceviyaṭaittallō naḷiṉamuṟṟu varukutēpārum*
*ayyayyō intaviti vāṟatāṟiyāmal āṇaḻakaṉ valiyatampi*
*meykaḷtāṉ cōrntu eṇṇātueṇṇi porumukiṟāṉ*
*āṇaḻakaṉnalla kuñcutampiyum entanērattāṉ ōṭivāṟāṉō*
*ciṉappulipōl kuñcutampi varuvāṉō vāḷuṭaṉē*
*maṉṉavarai veṭṭikolaiceyya uṟaivāḷai koṭuttēṉēippōtu*
*apattamvantatē eṉappulampiṉāṉē kuñcutampiyum vantatuṇṭāl*
*kulaikkaḷattai miḷalām ippōtu veruverutta tampiyum*
*mettaṉavē maṇmītu viḻuntāṉē kālkai acaiyāmal kiṭantāṉē*

## Kāvalarkaḷ valiyatampiyai maṉṉarmuṉ kiṭattutal

*antanēram ācāṉmārkaḷum aṭukka niṉṟa mantirimārkaḷ*
*cūḻaniṉṟavar tāṉumpiṭittallō turicattilē piṭittumaṭakkiṉār*
*kaippiṭiyāka maṉṉartirumuṉpu kaṭukakkoṇṭu avarkaḷkiṭattiṉar*
*mantirimār piṭittu maṭakkiṉar maṉṉariṉmuṉpu koṇṭukiṭattiṉār*

There was wrestling and boxing
That went for hours together
He became tired and withered
Longed for the arrival of
Kuñcu Tampi, his brave brother
Who would cut and kill the king

Felt very much for leaving the sword
Kept the fight for a short while
Fell down unable to survive the fatal attacks
He was placed before the king.

### மன்னன் வலியதம்பியை ஏளனம்பேசிக் கொலைசெய்தல்

கோவில்வாசல் நடையில்கிடத்தியே கோரமாகவே மன்னன்சிரித்தான்
கொற்றவனுக்குஎதிராளி நீயோடா என்தனக்குஎதிராளி நீயோடா
பறையடாஎன்றே சொல்லியழுத்தி பாராளும்மன்னர் நிமிர்ந்துநின்று
குஞ்சுபீசாத்தி தன்னைஎடுத்தல்லோ குதவளையை அறுத்துவிட்டார் 1105
ஆடுகோழி அறுத்ததுபோல அறுத்தாரே ராசன்சங்கை.

### உதிரஆற்றில் வலியதம்பி பிணமாதல்

சங்குதன்னை முறித்தபோது வலியதம்பியும் மாண்டுபோனான்
மாண்டுதம்பி கிடக்கக்கண்டுமே மன்னரும்சந் தோசமானாரே
வலியதம்பி தன்னையுமோ மன்னவர்வதை செய்தபோது
ஆடறுத்த களம்போல அலறிபட்ட உதிரமெலாம் 1110
கோவில்வாசல் படியெலாம் கொட்டார வாசல்படியெலாம்
உதிரமாக ஓடுதல்லோ உற்றநல்ல ஆறதுபோல.

16.1102. எதிராளி - சமமானபகைவன். 16.1104. பறையடா - மலையாள மொழிச்சொல். 16.1106. சங்கு - சங்கின் அமைப்புடைய குரல்வளை. 16.1109. வதை - கொலை. 16.1110. ஆடறுத்த களம் - ஆட்டைப் பலியிட்ட இடம். 16.1112. ஒடுதல்லோ - 'ஓடுகின்றதல்லவோ' என்பதின் பேச்சு வழக்கு.

### Mannan valiyatampiyai ēḷanam pēcik kolaiceytal

*kōvilvācal naṭaiyilkiṭattiyē kōramākavē mannan cirittān*
*korravanukku etirāḷi nīyōṭā entanakku etirāḷinīyōṭā*
*paraiyaṭāenrē colliyaḻutti pārāḷum mannar nimirntuninru*
*kuñcupīcatti tannaieṭuttallō kutavaḷaiyai aruttuviṭṭār*
*āṭukōḻi aruttatupōla aruttārē rācancaṅkai*

### Utiraāṟṟil valiyatampi piṇamātal

*caṅkutannai murittapōtu valiyatamiyum māṇṭupōnān*
*māṇṭutampi kiṭakkakkaṇṭumē mannarumcan tōcamānārē*
*valiyatampi tannaiyumō mannavarvatai ceytapōtu*
*āṭaṟutta kaḷampōla alaripaṭṭa utiramelām*

*kōvilvācal paṭiyelām koṭṭāra vācalpaṭiyelām*
*utiramāka ōṭutallō uṟṟanalla āṟatupōla*

## The king killed Valiya Tampi

The king was happy to see him lying
"Are you an enemy to me?"
Asked the king repeatedly,
He took a small but sharp knife
And cut the throat of Valiya Tampi
Like cutting the heads of goats and hens
Valiya Tampi was dead
On seeing him dead the king felt right
The blood that came from Tampi's body
Ran from the palace like a river flooded.

## அண்ணன் இறந்த செய்தியைக் குஞ்சுதம்பி அறிதல்

வல்லதம்பி தன்னையுமோ மன்னர்கொலை செய்தபோது
தாழக்குடி[1] கோவிலிலே தானிருந்த குஞ்சுதம்பி
தமயன்இறந்த செய்தியெலாம் அறிந்தவரும் கேட்டவரும்
அவர்கள்சொல்லைக் கேட்டவரும் வலியதம்பி தன்னையுமோ
மன்னர்கொலை செய்துவிட்டார் மன்னர்கொலை செய்துவிட்டார்
அண்ணருமோ இறந்தசெய்தி ஆணழகன் கேட்டபோது
அந்தநேரம் குஞ்சுதம்பி ஆவென்ற லறிவிட்டார்.

## குஞ்சுதம்பி பழிவாங்கப் புறப்படுதல்

ஆனபலமுள்ள அண்ணரையும் அரசர் குலைசெய்தாரோ
இனிநாமிருந்தால் நல்லதல்ல இரண்டிலொன்று காணவேண்டும்
வேங்கைப்புலிபோல சீறினாரே வெடுவெடென்று குஞ்சுதம்பி
உறைவாளை உருவியல்லோ கடுங்கோபம் கொண்டல்லோ
கோபம்கொண்டு குஞ்சுதம்பி கோபித்தாரவர் தன்னோட
படபடவென குஞ்சுதம்பி பரிதாபம்தான் கொண்டெழுந்து
தாழக்குடி கேள்விவிட்டு தானடைந்தார் குஞ்சுதம்பி.

16.1113. வல்லதம்பி - வலியதம்பி. 16.1120. ஆன பலம் - 'யானை பலம்' என்பதின் பேச்சு வழக்கு. குலை - 'கொலை' என்பதின் பேச்சு வழக்கு. 16.1122. வெடுவெடென்று - ஒலிக்குறிப்பு சொல்; வேகக் குறிப்பை உணர்த்தியது. 16.1125. படபடவென -- ஒலிக்குறிப்புச் சொல்; வேகக் குறிப்பை உணர்த்தியது. நெஞ்சின் துடிப்பையும், அதன் அமைதியற்ற

நிலையையும் உணர்த்தியது. 16.11.26. தாழக்குடி கேள்வி - தாழக்குடி ஊரிலுள்ள வருமானவரி அலுவலகம்.

சு.செ ; 1. தாழக்குடி.

### Annan irantaceytiyaik kuñcutampi arital

*vallatampi tannaiyumō mannarkolai ceytapōtu*
*tāḷakkuṭi kōvililē tānirunta kuñcutampi*
*tamayaniranta ceytiyelām arintavarum kēṭṭavarum*
*avarkaḷcollaik kēṭṭavarum valiyatampi tannaiyumō*
*mannarkolai ceytuviṭṭār mannarkolai ceytuviṭṭār*
*annarumō irantaceyti ānalakan kēṭṭapōtu*
*antanēram kuñcutampi āvenra lariviṭṭār*

### Kuñcutampi paḻivāṅkap purappaṭutal

*ānapalamuḷḷa annaraiyum aracar kulaiceytārō*
*inināmiruntāl nallatalla irantilonru kāṇavēṇṭum*
*vēṅkaippulipōla cirinārē veṭuveṭenru kuñcutampi*
*uraivāḷai uruviyallō kaṭuṅkōpam koṇṭallō*
*kōpamkoṇṭu kuñcutampi kōpittāravar tannōṭa*
*paṭapaṭavena kuñcutampi paritāpamtān koṇṭeḻuntu*
*tāḻakkuṭi kēḷviviṭṭu tānaṭaintār kuñcutampi*

### Reaction of Kuñcu Tampi

When Valiya Tampi was murdered
By the cruel hands of the king
Kuñcu Tampi was in the temple at Tāḻākkuṭi.
The news reached his ears
He was shocked and felt his blood freeze
His brother was powerful like an elephant
Even he was killed by the cruel king
Kuñcu Tampi took his sword
And left his place like an angry tiger.

### குஞ்சுதம்பி நாகர்கோவில் வருதல்

சீதப்பாலும் தான்கடந்து சிறந்தகுடக்காறச் செறுக்கனுமாய்
பொன்முடியிட்ட உறவாளும் பொந்தத்தடியும் எடுத்துக்கொண்டு

பழைய ஆற்றின் கரைவழியே புகழ்பெறவே குஞ்சுதம்பி
திருப்பதிவாழ் அகரம்விட்டு சிறந்துஒழுகும் நதிகடந்து
தந்தையார் குளம்கடந்து தக்கபுகழ் குஞ்சுதம்பி
புத்தேரிவாழ் அகரம்விட்டு கோலோச்சும் எல்லைவிட்டு
வடசேரி மேடுமிட்டு வாய்த்தநாகருவாழ் கோவிலிலே
கொட்டாரத்து வாசலிலே குஞ்சுதம்பி சென்றல்லவோ.

## குஞ்சுதம்பி நாகருவாழ் அரண்மனை அடைதல்

அடைத்திருந்த கோக்கதவை அவர்காலால் தான்மிதித்துக்
காலில்மிதி கொண்டல்லவோ கோக்கதவு தான்தெறிக்க
அந்தவாசல் தனைக்கடந்து ஆணழகன் குஞ்சுதம்பி
இருவிழிகள் தான்சிவந்து எரியும்அக்கினி போலவேதான்
கோவில்கல் வாசலிலே மன்னவரும் இருக்கும்நேரம்
இருக்குமந்த நேரத்திலே இசலழகன் குஞ்சுதம்பி
வேகத்தோடு வேகமாக வெட்டவேணும் என்றுசொல்லி
வீரசூரன் குஞ்சுதம்பி அண்ணனாரை குலைசெய்தவரை
வெட்டவேணும் குலைசெய்யவேணும் வெட்டிசின்னாபின்னம் ஆக்கவேணும்
குலைகள்செய்ய வேணுமென்று கூண்டபுகழ் குஞ்சுதம்பி.

16.1128. பொன்முடியிட்ட உறவாள் - பொன்னால் செய்யப்பட்ட வாளுறை. உறவாள் - 'உறை வாள்' என்பதின் பேச்சு வழக்கு. பொந்தந்தடி - பருத்த பெரிய தடி. 16.1129. பழைய ஆறு - 'பழையாறு' என்னும் நதி. 16.1130. திருப்பதிவாழ் அகரம் - 'திருப்பதிசாரம்' என்னும் ஊரின் பெயர். 16.1130. தத்தையார் குளம் - ஒரு பெரிய குளத்தின் பெயர்; இது நாகர்கோயில் - திருநெல்வேலியில் திருப்பதிசாரத்தை அடுத்து சாலையில் உள்ளது. இக்குளம் குறித்து நாகர்கோயில் கல்வெட்டு (கி.பி.1520) செய்தி தருகிறது. 16.1135. கோக்கதவு - அரசன் உள்ளிருக்கும் அரண்மனை வாசல் கதவு. 16.1136. காலில் மிதி கொண்டல்லவோ - 'காலால் மிதிக்கின்ற வலிமையான மிதியை ஏற்றதால் அல்லவா' என்ற பொருளில். தெறிக்க - உடைபட்டு விழ. 16.1139. கோவில்கல் - அரண்மனை. 16.1140. இசலழகன் - இயல்பான பேரழகன். 16.1142. வீர சூரன் - வலிமையான வீரன். 16.1143. வேணும் - 'வேண்டும்' என்பதின் பேச்சு வழக்கு. 16.1144. கண்ட புகழ் - மிகுந்த புகழ்.

## Kuñcutampi nākarkōvil varutal

*ci̇tappālum tāṉkaṭantu ciṟantakuṭakkāṟac ceṟukkaṉumāy*
*poṉmūṭiyiṭṭa uṟavāḷum pontantaṭiyum eṭuttukkoṇṭu*
*paḻaiyaāṟṟiṉ karaivaḻiyē pukaḻpeṟavē kuñcutampi*
*tiruppativāḻ akaramviṭṭu ciṟantuoḻukum natikaṭantu*
*tattaiyār kuḷamkaṭantu takkapukaḻ kuñcutampi*
*puttērivāḻ akaramviṭṭu kōlōccum ellaiviṭṭu*

*vaṭacēri mēṭumiṭṭu vāyttanākaruvāḻ kovililē*
*koṭṭārattu vācalilē kuñcutampi ceṉṟallavō*

### Kuñcutampi nākaruvāḻ araṇmaṉai aṭaital

*aṭaittirnta kōkkaṭavai avarkālāl tāṉmitittuk*
*kālilmiti koṇṭallavō kōkkaṭavu tāṉteṟikka*
*antavācal taṉaikkaṭantu āṇaḻakaṉ kuñcutampi*
*iruviḻikaḷ tāṉcivantu eriyumakkiṉi pōlavētāṉ*
*kōvilkal vācalilē maṉṉavarum irukkumnēram*
*irukkumanta nērattilē icalaḻakaṉ kuñcutampi*
*vēkattōṭu vēkamāka veṭṭavēṇum eṉṟucolli*
*vīracūraṉ kuñcutampi aṇṇaṉārai kulaiceytavarai*
*veṭṭavēṇum kulaiceyyavēṇum veṭṭiciṉṉāpiṉṉam ākkavēṇum*
*kulaikaḷceyya vēṇumeṉṟu kūṇṭapukaḻ kuñcutampi*

Walking through the bank of the river
Paḻaiyāṟu, he crossed Cītappāl
Tiruppaticāram, Tattaiyāṟu pond
Puttēri and Vaṭacēri
Finally reached Nākarkōyil
He went straight into the palace.
Opened the door with his legs
With red eyes and boiling blood
He searched for the king near the temple.

### குஞ்சுதம்பி மன்னரை வெட்ட முயற்சிசெய்தலும் தோல்விஅடைதலும்

உடைவாளைத் தானுருவி உள்ளமன்னவரை வெட்டுநேரம்
அரசமன்னவரை வெட்டுநேரம் அட்டமத்துச் சனியன்நின்று
சந்திரனும் சூழநின்று சனியன் பிடித்ததினால்
கண்டத்திலே சனியன்நின்று கைகலந்த நேரமதில்
வாளுருவி மன்னவரைவெட்ட வாசல்படி ஒட்டுந்தட்டி
வாசல்படி ஒட்டுந்தட்டி வாள்முட்டு தானிளகி
ஆகாசத்தில் வாள்பறிய அவர்கையில் முட்டிருக்க
வேகமுற்று குஞ்சுதம்பி வெடுவெடென வெட்டிவிட்டார்
சதிவுவந்த தென்று சொல்லி தட்டழிந்து[1] நிற்குநேரம்.

### குஞ்சுதம்பியும் மன்னரின் காவலாளிகளும் போர் செய்தல்

மன்னருட மந்திரிமார் வாய்த்தஆசான் பணிக்கன்மாரும்
ஈரச்சீலையில் எள்ளப்பினாற்போல் எல்லையில்லா சேவகரும் 1155
வந்தவர்கள்தானும் பிடித்தல்லோ வலுபெரிய குஞ்சுதம்பியும்
மல்போரும் வர்மம்தட்டும் வாய்த்தபொறித் தட்டுதட்டுவாரே.

16.1147. சந்திரனும் சூழ நின்று - ஒருவரின் ஜாதகத்தில் எட்டாமிடத்தில் சனியோடு சந்திரனும் இருக்குமானால் மனத் தடுமாற்றம், பேதலிப்பு இருக்கும் என்பது நம்பிக்கை கண்டத்திலே - எட்டாமிடத்திலே. சனியன் - சனி பகவான். கைகலந்த - ஒருவரோடு ஒருவர் மோதுகின்ற. 16.1149. ஒட்டுந்தட்டி - முழுவதுவுமாகத் தட்டி; அதாவது 'குஞ்சுதம்பி வாளால் மன்னனை வெட்டுகின்ற நேரத்தில் உத்திரத்தில் தட்டி' என்ற பொருளில். 16.1150. வாள் முட்டு - வாளின் கைப்பிடி. இளகி - நெகிழ்ந்து. 16.1151. பறிய - தனித்துச் செல்ல. மூடு - கைப்பிடி. 16.1156. வலு பெரிய - வலிமையில் பெரிய. 16.1157. மல்போர் - மல்யுத்தம். வர்மத்தட்டு - உடம்பின் மர்மயிடங்களில் அடிக்கும் அடிமுறை.

சு.சொ : 1. தட்டளிந்து

### Kuñcutampi mannarai veṭṭamuyarci ceytalum tōlvi aṭaitalum

*uṭaivāḷait tāṉuruvi uḷḷamaṉṉavarai veṭṭunēram*
*aracamaṉṉavarai veṭṭunēram aṭṭamattuc caṉiyaṉniṉṟu*
*cantiraṉum cūḻaniṉṟu caṉiyaṉ piṭittatiṉāl*
*kaṇṭattilē caṉiyaṉniṉṟu kaikalanta nēramatil*
*vāḷuruvi maṉṉavaraiveṭṭa vācalpaṭi oṭṭuntaṭṭi*
*vācalpaṭi oṭṭuntaṭṭi vāḷmūṭṭu tāṉiḷaki*
*ākācattil vāḷpaṟiya avarkaiyil mūṭṭirukka*
*vēkamuṟṟu kuñcutampi veṭuveṭeṉa veṭṭiviṭṭār*
*cativuvanta teṉṟucolli taṭṭaḷintu niṟkunēram*

### Kuñcutampiyum maṉṉariṉ kāvalāḷikaḷum pōr ceytal

*maṉṉaruṭa mantirimār vāyttaācāṉ paṇikkaṉmārum*
*īraccīlaiyil eḷḷappiṉāṟpōl ellaiyillā cēvakarum*
*vantavarkaḷtāṉum piṭittallō valuperiya kuñcutampiyum*
*malpōrum varmamtaṭṭum vāyttaporit taṭṭutaṭṭuvārē*

### Fate and Kuñcu Tampi

Removed the sword from its sheath
Raised it over his head
That hit the wood on the roof

Thus he lost the best of his sword
He too was overpowered
By the waiting ministers
And able guards and masters
Wrestling and martial art.

### குஞ்சுதம்பி போராடிச் சோர்வடைதல்

நாலாறு நாழிகையாய்[1] நன்றாகவே போராடிப்
பொன்னாங்குருவி பாய்ந்ததுபோல் புகழ்பெரிய குஞ்சுதம்பி
ஆசான்மார் பணிக்கன்மாரில் அஞ்சாறுபேர் அங்கேமடிந்தார்
கைபோர் பொருதலுற்று கைசோர்ந்து மெய்சோர்ந்து
நாவுலர்ந்து செவியடைத்து நயனமுற்று வந்தநேரம்.

### குஞ்சுதம்பியைக் காவலர்கள் மன்னர்முன் கொண்டுசெல்லுதல்

மாயவலை வீசவென்று வந்துகண்டார் தூதர்களும்
அந்நேரம் ஆசான்மார்கள் ஆணழகன் தனைப்பிடித்துக்
கைப்பிடியாய் தான்பிடித்து வாலவஞ்சி மன்னர்முன்னே.

16.1158. நாலாறு - 24 நாழிகை நேரமாய்; பல நாழிகைகளாய் என்ற பொருளில். 16.1159. பொன்னாங்குருவி - வேகமாகப் பறக்கும் ஒரு வகைப் பறவை. 16.1160. அஞ்சாறுபேர் - 'ஐந்தாறுபேர்' என்பதின் பேச்சு வழக்கு. 16.1161. மெய் - உடல். 16.1162. செவியடைத்து - உடல் சோர்வால் செவியினில் ஓசை கேட்புத்திறன் குறைந்து. நயனமுற்று - கண்கள் சோர்ந்து. 16.1163. மாயவலை வீசவென்று - கண்மயக்கி மாயமாய் வலை வீசிப் பிடிப்பதற்கு என்று.

சு.சொ : 1. நாளிகை

### Kuñcutampi pōrāṭic cōrvaṭaital

*nālāṟu nāḻikaiyāy naṉṟākavē pōrāṭip*
*poṉṉāṅkuruvi pāyntatupōl pukaḻperiya kuñcutampi*
*ācāṉmār paṇikkaṉmāril añcāṟupēr aṅkēmaṭintār*
*kaipōr porutaluṟṟu kaicōrntu meycōrntu*
*nāvularntu ceviyaṭaittu nayaṉamuṟṟu vantanēram*

### Kuñcutampiyaik kāvalarkaḷ maṉṉarmuṉ koṇṭu cellutal

*māyavalai vīcaveṉṟu vantukaṇṭār tūtarkaḷum*
*annēram ācāṉmārkaḷ āṇaḻakaṉ taṉaippiṭittuk*
*kaippiṭiyāy tāṉpiṭittu vālavañci maṉṉarmuṉṉē*

Manoeuvring tricks and magical fete
Everything he did to find an escape route
Continued the fight for hours together
At last he felt tired and fell
With dried tongue and tired hands
He fell on the ground with fallen head
The guards took him in their hand,
And brought him before the king.

### மன்னரின் சினவுரைகள்

மன்னர்முன்னே கொண்டுசெல்ல மதயானை போல்சீறி
வலியதம்பி பழிமீள வந்தாயோடா குஞ்சுதம்பி
உங்களுட வீரசூரம் எங்கேயடா குஞ்சுதம்பி
உங்களுட விதிவசங்கள் இப்படிஆச்சே குஞ்சுதம்பி
என்னைசதிவு செய்யவந்தாய் நான்உன்னைக் கொலைசெய்வேன்டா
அப்படியே மன்னவரும் அகம்மீறி தான்பறைந்து.

### குஞ்சுதம்பி மன்னரை இகழ்ந்துரைத்தல்

ஆணழகன் குஞ்சுதம்பி மதப்புலிபோல் குஞ்சுதம்பி
குஞ்சுதம்பி மன்னவரும் கூட்டியவர் பறைந்திடவே
ஆணுக் கொத்தழகோ அரசருக்கு ஒத்தசமர்த்தமோ
கள்ள உபாயமாகக் களவாகச் செய்கிறதோ
என்றுசொல்லிக் குஞ்சுதம்பி எதிர்த்தவரும் கேட்டபோது.

### மன்னர் குஞ்சுதம்பியைக் கொலை செய்தல்

பக்கத்திலே நின்றபேரைப் பார்த்தாரே திருக்கண்ணால்
நாடியவர் தான்பிடித்து நடையதிலே தான்கிடத்திக்
கைகால் உதறாமல் கைப்பிடியாய் தான்பிடித்து
பாராளும் மன்னவரும் பரபரென எழுந்திருந்து
குஞ்சுபீசாத்தி தானெடுத்து குதவளையைத் தானறுத்தார்
திருக்கையால் தானறுத்து சிறந்ததொரு குஞ்சுதம்பி
ஆடுகோழி அறுத்ததுபோல் அறுத்தாரே மன்னவரும்
அண்ணன்பட்ட படுகளத்தில் ஆணழகன் இறந்துவிட்டார்
இருபேருட தன்னழகும் இவ்வுலகில் கண்டதில்லை.

16.1166. மதயானை - மதம் விடித்த யானை. 16.1167. பழி மீள - பழிக்குப்பழி செய்ய; பழியை மீட்டுப் போக. 16.1169. உங்களுட . . . தம்பி - இத்தொடர் மன்னனின் ஏளனக் குறிப்பை உணர்த்தியது. 16.1170. சதிவு - அழிவு. 16.1171. அகம்மீறிதான் - அகத்திலுள்ள உணர்வு மீறியேதான். பறைந்து - 'கூறி' என்பதின் வட்டார வழக்குச் சொல். 16.1174. ஆணுக்கொத்தழகோ - ஆணுக்கு ஒத்த அழகுதானோ; இல்லை என்ற பொருளில். ஒத்த சமர்த்தமோ - ஒப்புமையுள்ள சமர்த்தான (திறமையான) காரியமோ. 16.1175. உபாயம் - சூழ்ச்சி. 16.1176. எதிர்த்தவரும் - மன்னரை எதிர்த்து குஞ்சுதம்பியாகிய அவரும். 16.1184. ஆணழகன் - குஞ்சுதம்பியைக் குறித்தது.

## Maṉṉariṉ ciṉavuraikaḷ

*maṉṉarmuṉṉē koṇṭucella matayāṉai pōlciṟi*
*valiyatampı paḷimiḷa vantāyōṭā kuñcutampi*
*uṅkaḷuṭa vīracūram eṅkēyaṭā kuñcutampı*
*uṅkaḷuṭa vitıvacaṅkaḷ ıpppaṭiāccē kuñcutampi*
*eṉṉaicatıvu ceyyavantāy nāṉuṉṉaik kolaiceyvēṉaṭā*
*appaṭiyē maṉṉavarum akammīṟi tāṉpaṟaintu*

## Kuñcutampi maṉṉarai ikaḻnturaittal

*āṇaḻakaṉ kuñcutampi matappulıpōl kuñcutampi*
*kuñcutampi maṉṉavarum kūṭṭiyavar paṟaintiṭavē*
*āṇuk kottaḻakō aracarukku ottacamarttamō*
*kaḷḷa upāyamākak kaḷavākac ceykiṟatō*
*eṉṟucollık kuñcutampi etirttavarum kēṭṭapōtu*

## Maṉṉar kuñcutampiyaik kolai ceytal

*pakkattilē niṉṟapēraip pārttārē tirukkaṇṇāl*
*nāṭiyavar tāṉpiṭittu naṭaiyatilē tāṅkiṭattik*
*kaikāl utaṟāmal kaıppiṭiyāy tāṉpiṭittu*
*pārāḷum maṉṉavarum parapareṉa eḻuntiruntu*
*kuñcupīcātti tāṉeṭuttu kutavaḷaiyaıt tāṉaṟuttār*
*tirukkaiyāl tāṉaṟuttu cīrantatoru kuñcutampi*
*āṭukōḻi aṟuttatupōl aṟuttārē maṉṉavarum*
*aṇṇaṉpaṭṭa paṭukaḷattil āṇaḻakaṉ ıṟantuviṭṭār*
*irupēruṭa taṉṉaḻakum ivvulakil kaṇṭatıllai*

## Kuñcu Tampi was also killed

The kıng was angry like a mad elephant
"Have you come to avenge the

Death of Valiya Tampi?
Where is your courage Kuñcu Tampi?
Show me now your courage?
I pity your ill-fate.
If you work against me
I will kill you, Kuñcu Tampi"
Said the king aloud.
Kuñcu Tampi opened his faint eyes
Though weak and faint
He laughed at the king
For his cowardly act
The king gave the right signal
Immediately they laid him bare on the ground
The king who ruled the land
Took a small but sharp knife in his land
And cut Kuñcu Tampi's neck
Like cutting the throat of
Goats and hens
Like his brother Valiya Tampi
Kuñcu Tampi was also dead
The death of the two brothers
Was known to all members.

### இறந்த தம்பிகள் வரம் வாங்க கைலாசம் செல்லுதல்

*நாடுநகரம் தானறிய நல்லதம்பிமார்கள் இறந்துவிட்டார்*
*பட்டுவிட்டார் இருபேரும் மாறிமன்னர் திருக்கையினால்*
*கொன்றவரைக் கொல்லவென்று கூண்டவனார் கைலாசத்தில்*
*வரம்வாங்க வேணுமென்று மகாதேவர் இடத்தில்சென்றார்.*

**16.1187.** *பட்டுவிட்டார் - கொல்லப்பட்டு விட்டார்.* **16.1188.** *கூண்டவனார் - சிவன். கைலாசம் - கைலாய மலை; இதில் சிவன் வாழ்வதாகப் புராணிகக் கதைகள் கூறுகின்றன.* **16.1189.** *மகாதேவர் - சிவபெருமான்.*

### Iṟanta tampikaḷ varamvāṅka kailācam cellutal

*nāṭunakaram tāṉaṟiya nallatampimārkaḷ iṟantuviṭṭār*
*paṭṭuviṭṭār irupērum māṟimaṉṉar tirukkaiyiṉāl*

*konṟavaraik kollaveṉṟu kūṇṭavaṉār kailācattil*
*varamvāṅka vēṇumeṉṟu makātēvar iṭattilceṉṟār*

## The souls moving to Kailash

Those killed by the cruel king
Went to Kailash to seek a boon
From the God Makātēvar, the head of Universe.

### தாயாரும், தங்கையும் புலம்பி அழுதல்

மன்னவரும் தம்பியரை வாதுசூதால் அறுத்துக்கொன்றார்
ஆனதாயார், தங்கைகேட்டு அங்குள்ள மாமன்கேட்டார்
தன்நகரில் தம்பிமார்கள் தானவர்கள் இறந்தசெய்தி
தங்கையரும் தாயாரும் அவர்கள்பழி வாங்கநின்றார்.

### தாயாரின் புலம்பல் உரைகள்

பட்டுவிட்டான் என்றவார்த்தை பைந்தொடியாள் தாம்கேட்டு
சுட்டுவிட்ட மெழுகதுபோல் சோர்ந்து உடல்தள்ளாடி
பற்றிவயிறு எரியுதல்லோ பஸ்பமாக எரியுதல்லோ
தலையிலடித் தாளவளும் தரையில் புரண்டழுதாள்
சாடிடுவாள் மோதிடுவாள் முகத்தோடு அணைத்திடுவார்
பட்டுவிட்டேன் பட்டுவிட்டேன் என்பாலரைக் காணாமல்
கட்டிவைத்த பொன்னதுபோல் களைந்தேனே என்மகனே
விட்டுவிட்டேன் நான்ஒருநாள் வீற்றிருந்தால் என்னபயன்
நானிருந்து பலனுமில்லை யிறந்தால் பலனுமுண்டு
கொதிக்குதல்லோ என்வயிறு குஞ்சுதம்பி என்றழுதாள்[1]
அழுதாளே தாயாரும் ஆணழகா[2] வலியதம்பியென்று
பெற்றவயிறு கொதிக்குதல்லோ யென்புத்திரரைக் காணாமல்
தலயில் இடித்தவளும் தரையில்[3] புரண்டழுதாள்
முட்டிடுவாள் மோதிடுவாள் முகத்தோடு அறைந்திடுவாள்
தங்கையழ தாயாரழ தன்மாமன் தானழவே
என்மகனே வலியதம்பிஉன்னை இவ்வுலகில் கண்டதில்லை
கண்டதில்லை குஞ்சுதம்பி காசினியில் பார்த்தாலும்
தேரோட்டம் திருவிழாவில் சென்றாலும் காண்பேனோ
சந்திரனும் சூரியனும் தான்மறைந்து போனாப்போல்
இந்திரன்போல் வடிவழகன் என்மகனே வலியதம்பி

வலியதம்பி என்றழுதாள் வடிவழகா குஞ்சுதம்பி
என்றுநான் காண்பேனோ என்மக்களே என்றழுதாள்
அழுதாளே தாயாரும் ஆயிழையாள்[4] தங்கையரும்
திருவிழாச் சிறப்பதுவும் சென்றுநான் காண்பதற்கு
உங்கள் திருமுகத்தை கண்டாலே திருமனதுநிறஞ்சிடுமே.

16.1190. சொதுசூது - சூழ்ச்சி. 16.1194. பைந்தொடியாள் - சிறந்த ஆபரணம் அணிந்தவள்; அபிராமி; தம்பிமார்களின் தாயைக் குறித்தது. 16.1196. எரியுதல்லோ - 'எரிகின்றதே' என்பதின் பேச்சு வழக்கு. பஸ்பமாக - சாம்பலாக. 16.1197. தலையில் அடித்தாள் - கையால் தலையில் அடித்தாள்; இச்செய்கை செய்வதறியா ஒருவரின் பரிதாப மெய்ப்பாட்டை உணர்த்தியது. 16.1199. பட்டுவிட்டேன் - இறந்துவிட்டேன். பாலர் - தம்பிமாரை உணர்த்தியது. 16.1200. கட்டி வைத்த பொன்னது போல் களைந்தேனே - 'கட்டிப் பாதுகாப்பாக வைத்திருந்த பொன்னைக் களைந்து விட்டது போல் உங்களையும் இழந்தேனே' என்ற பொருளில். 16.1201. விட்டு விட்டேன் - தவற விட்டுவிட்டேன். 16.1203. கொதிக்குதல்லோ - 'கொதிக்கின்றதே' என்ற பொருளில். 16.1206. தலயில் - 'தலையில்' என்பதின் பேச்சு வழக்கு. 16.1210. காசினி - உலகம். 16.1216. ஆயிழையாள் - தேர்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த பெண்ணாள்; தம்பிமார்களின் தங்கையைக் குறித்தது. 16.1217, 1218. திருவிழா. . . சிடுமே - இவ்விரு வரிகள் 'நான் திருவிழா சிறப்பு மற்றும் இது போலும் சிறப்புகளைக் காண்பதற்குப் பதில், அதற்கும் மேலாக உங்கள் இருவர் முகங்களைக் கண்டால் மகிழ்ச்சி அடைவேனே' என்ற பொருள் உணர்த்தியது.

சு.சொ : 1. என்றளுதாள் 2. ஆணவகா 3. தறயில் 4. ஆயிளை

## Tāyārum taṅkaiyum pulampi aḻutal

*mannavarum tampiyarai vātucūtāl aṟuttukkoṉṟār*
*āṉatāyār taṅkaikēṭṭu aṅkuḷḷa māmaṉkēṭṭār*
*taṉnakaril tampimārkaḷ tāṉavarkaḷ iṟantaceyti*
*taṅkaiyarum tāyārum avarkaḷpaḻi vāṅkaniṉṟār*

## Tāyāriṉ pulampal uraikaḷ

*paṭṭuviṭṭāṉ eṉavārttai paintotiyāḷ tāmkēṭṭu*
*cuṭṭuviṭṭa meḻukatupōl cōrntu uṭaltaḷḷāṭi*
*paṟṟivayiṟu eriyutallō paspamāka eriyutallō*
*talaiyilaṭit tāḷavaḷum taraiyil puraṇṭaḻutāḷ*
*cāṭiṭuvāḷ mōtiṭuvāḷ mukattōṭu aṭaittiṭuvāḷ*
*paṭṭuviṭṭēṉ paṭṭuviṭṭēṉ eṉpālaraik kāṇāmal*
*kaṭṭivaitta poṉṉatupōl kaḷaintēṉē eṉmakaṉē*
*viṭṭuviṭṭēṉ nāṉorunāḷ viṟṟiruntāl eṉṉapayaṉ*
*nāṉiruntu palaṉumillai yiṟantāl palaṉumuṇṭu*
*kotikkutallō eṉvayiṟu kuñcutampi eṉṟaḻutāḷ*

*aḻutāḷē tāyārum āṇaḻakā valiyatampiyeṉṟu*
*peṟṟavayiṟu kotikkutallō yeṉputtiraraik kāṇāmal*
*talayil eṭittavalum taraiyil puraṇṭaḻutāḷ*
*muṭṭiṭuvaḷ mōtiṭuvāḷ mukattōṭu araintiṭuvāḷ*
*taṅkaiyaḻa tāyāraḻa tāṉmāmaṉ tāṉaḻavē*
*eṉmakaṉē valiyatampiuṉṉai ivvulakil kaṇṭatillai*
*kaṇṭatillai kuñcutampi kāciṉiyil pārttālum*
*tērōṭṭam tiruviḻāvil ceṉṟālum kāṇpēṉō*
*cantiraṉum cūriyaṉum tāṉmaraintu pōṉāppōl*
*intiraṉpōl vaṭivaḻakaṉ eṉmakaṉē valiyatampi*
*valiyatampi eṉṟaḻutāḷ vaṭivaḻakā kuñcutampi*
*eṉṟunāṉ kāṇpēṉō eṉmakkaḷē eṉṟaḻutāḷ*
*aḻutāḷē tāyārum āyiḻaiyāḷ taṅkaiyarum*
*tiruviḻāc ciṟappatuvum ceṉṟunāṉ kāṇpataṟku*
*uṅkaḷ tirumukattai kaṇṭālē tirumaṉatu niṟañciṭumē*

## Plight of the mother

The news that the two were killed
By the cunning king at Nākarkōyil
Reached their mother and sister
Uncle and all others
Unable to bear the grief
She cried, wept and became sad
Like a candle she melted
Cried as if her womb burnt
Dashed her head against the wall
Struck her head against the floor.
"Lost my life, lost everything
Lost my sons, lost the gold
That I have kept protected
Where am I to go?
What am I to do?
What is the use of my life?"
Nobody could console her
Nobody could measure her grief

Their sister and uncle were
Also struck with grief
"Shall I see you again my sons?
Where shall I search for you?
Shall I seek you during the car festival?
No my son. I shall never find you there.
Like the glorious sun and the moon
You vanished from the scene.
What shall I do?
Where shall I report?
What more did I want?
Except your fully blossomed face".
Wept and broken and cried
The mother of all the three.

### தம்பிமார்களின் தங்கை அழுதுரைத்தல்

காரார் கருங்குழலாள் கன்னிசெந் தாமரையழகாள்
வீறான தங்கையரும் வீறாட்ட மாயழுதாள்
அழுதாளே என்பிறப்பே இனியாருதுணை என்றனுக்கு
பக்கத் துணையுமில்லை பதறாதே என்பதற்கு
என்னாலே படையெடுத்து யென்பிறப்பே யிறந்தீரே
பாவினான் பிறந்தல்லவோ பறிகொடுத்தேன் அண்ணர்களை
மன்னருடன் பகைத்தவர்கள் வையகத்தி லிருப்பதுண்டோ
இருப்பதுண்டோ என்பிறப்பே யேங்கி விழுந்தழுதாள்
அழுதிடுவாள் புரண்டிடுவாள் அங்கையங்கே மோதிடுவாள்
மோதிடுவாள் முட்டிடுவாள் முற்றத்தில் விழுந்திடுவாள்[1]
மேடையி லிருந்தவளும் விழுந்திடுவாள் தரைதனிலே
என்னுட அண்ணன்மாரே நீங்களிறந் தீரேஇப்போ
என்றுசொல்லித் தங்கையரும் ஏந்திழையாள்[2] தாயாரும்
தங்கையுடன் மாலைமணமதுவும் தான்காண விதியிலையே
நீங்கள்மாலை யிட்டுப்பார்த்தீரிலை மாலைமணம் கண்டீரிலை
இடையிலே யிறப்பெழுதி யீசுவரனார் விதித்தானோ
கோவில்கல்லு உடைந்ததல்லோ கூடாரஞ் சாயுதல்லோ
கறையான் நுழைந்தமரம்போல காற்றடித்த சாவியைப்போல்
நான்பேடுள்ள[3] மரமானேன் பெரும்பாவி யானேன்

குறுக்கவளைந்த பிச்சுப்பூ நுள்ளிப்[4] போட்டாப்போல்
தலைசரிந்த மரமானேன் சாவியிட்ட பயிரானேன்.

## தாய்தங்கையரோடு அனைவரும் அழுதல்

தாயாரழ தங்கையழ தாய்மாமன் தானழவே
மூபேரும் தானழுது முறைவைத்து முழக்கிடுவார்[5]
அன்னசுற்றம் மெல்லோரும் அயலாரும் தானழுதார்.

16.1219. காரார் கருங்குழலாள் - மேகம் போலும் கறுத்த கூந்தலை உடையவள்; தம்பிமார்களின் தங்கையைக் குறித்தது. 16.1220. வீறாட்டமாய் - பேரிரைச்சலுடன். 16.1223. என்னாலே . . . . தீரே - இவ்வரியில் தம்பிமார்களின் தங்கை, 'நீங்கள் என்னை மன்னருக்குத் திருமணம் செய்து வைப்பதில் முரண்பாடு கொண்டு அழகப்ப முதலியைப் படையெடுக்க வைத்து அதனால் மன்னனின் சினத்துக்கு ஆளாகி இறந்தீரே' என்ற கதைக் குறிப்பை உணர்த்தினாள். 1௬.1224. பறிகொடுத்தேன் - இழந்தேன். வையகம் - உலகம். 16.1230. இப்போ - 'இப்பொழுது' என்பதின் பேச்சு வழக்கு. 16.1233. நீங்கள் . . . சீரிலை - இவ்வரியில் 'நீங்கள் திருமணமாகி மணமாலையுடன் நிற்கும் காட்சியினைக் காண எங்கள் கண்களுக்குச் சிறப்பில்லையே' என்ற பொருளைத் தம்பி மார்களின் தங்கை உணர்த்தினாள். 16.1235. கோவில் . . . தல்லோ - இத்தொடர் எங்கள் குடும்பத்தின் அஸ்திவாரமே பெயர்ந்தது என்ற குறிப்புப் பொருளைத் தந்தது. 16.1236. கறையான் நுழைத்த மரம் - கறையானால் அரிக்கப்பட்ட மரத்தைப்போல. சாவி - உள்ளீடு அற்ற நெல்; பதர். 16.1237. பேடுள்ள மரம் - உள் வயிரம் அரிக்கப்பட்டு பலம் குறைந்த மரம். 16.1238. நுள்ளி - கிள்ளி. போட்டாப் போல் - போட்டதைப்போல். 16.1241. முழக்கிடுவார் - பேரோசையோடு அழுதிடுவார்.

சு.சொ : 1. விளுந்திடுவாள் 2. பேந்திளையாள் 3 நான்பேருள்ள 4. நுள்ளப் 5. முளக்கிடுவார்

## Tampimārkaḷiṉ taṅkai aḻuturaittal

*kārār karuṅkuḻalāḷ kaṉṉicen tāmaraiyaḻakāḷ*
*vīṟāṉa taṅkaiyarum vīṟāṭṭa māyaḻutāl*
*aḻutāḻē eṉpiṟappē iṉiyārutuṇai eṉṟaṉukku*
*pakkat tuṇaiyumillai pataṟātē eṉpataṟku*
*eṉṉālē paṭaiyeṭuttu yeṉpiṟappē yiṟantīrē*
*pāviṉāṉ piṟantallavō paṟikoṭuttēṉ aṇṇarkaḷai*
*maṉṉaruṭaṉ pakaittavarkaḷ vaiyakatti liruppatuṇṭō*
*iruppatuṇṭō eṉpiṟappē yēṅki viḻuntaḻutāḷ*
*aḻutiṭuvāḷ puraṇṭiṭuvāḷ aṅkaiyaṅkē mōtiṭuvāḷ*
*mōtiṭuvāḷ muṭṭiṭuvāḷ muṟṟattil viḻuntiṭuvāḷ*
*mēṭaiyi liruntavaḷum viḻuntiṭuvāḷ taraitaṉilē*
*eṉṉuṭa aṇṇaṉmārē nīṅkaḷiṟan tīrēippō*
*eṉṟucolli taṅkaiyarum ēntiḻaiyāḷ tāyārum*

*taṅkaiyuṭaṉ mālaimaṇamatuvum tāṉkāṇa vitiyilaiyē*
*nīṅkaḷmālai yiṭṭuppārttīrilai mālaimaṇam kaṇṭīrilai*
*iṭaiyilē yiṟappeḻutı yīcuvaraṉār vitittāṉō*
*kovilkallu uṭaintatallō kūṭārañ cāyutallō*
*kaṟaiyāṉ nuḻaıntamaṟampōla kaṟṟaṭitta cāviyaippōl*
*nāṉpēṭuḷḷa ıaramāṉēṉ perumpāvi yāṉēṉ*
*kuṟukkavaḷainta picuppū nuḷḷip pōṭṭāppōl*
*talaicarinta maramāṉēṉ cāviyiṭṭa payırāṉēṉ*

### Tāy taṅkaiyarōṭu aṉaivarum aḻutal

*tāyāraḷa.taṅkaiyaḷa tāymāmaṉ tāṉaḷavē*
*mūpērum tāṉaḻutu muṟaivaittu muḻakkıṭuvār*
*aṉṉacuṟṟam yellōrum ayalārum tāṉaḻutār*

### Pathetic cry of the sister

The young damsel with long black hair
The only and loving sister there
Cried pathetically with her mother
"Who is here to dispel my fear?
On whom shall I depend?
Oh! What shall I say?
You sacrified your lives
In order to save my life
Oh! cursed be my birth
That is responsible for your death.

### Broken heart of the mother

Can anyone withstand
The wrath of a King?"
She cried, sobbed and lamented.
"You have never seen me
With marriage garlands
Nor have you smelt
Your marriage garlands
God has taken your life
Half way through your life

The Kōvilkal palace is broken
The base of our family is broken
I have become a withered tree
Eaten by pests and rendered useless"
The mother, sister and uncle
All the three cried in despair
With the near and dear ones around there.

### தம்பிமார்களின் தாய் இறக்க முடிவெடுத்தல்

அய்யய்யோ மன்னவர்க்கு அரும்பகைதான் இருந்தாலும்
கொல்வதற்கும் மனதாச்சே கொலைகள்செய்தான் படுபாவி
அறுக்காமல் அறுப்பதற்கு அவர்மனது சரியாச்சே
என்மக்களைக் கொலைகள்செய்ய யிரங்காமல் போச்சோ
அறியாமல் செய்தபிழை[1] அரசமன்னர் பொறுத்ததிலை
பாவிமக்கள்செய்த பிழைதன்னை பாராசர் பொறுக்காரோ
பண்டைமன்னர் திருமுகத்தை நினைக்காமல கொலைசெய்தார்
கோவிலிலே சத்தியந்தான் கூண்டமன்னர் செய்ததுவும்
வஞ்சம்வச்ச சதிசெய்தார் வசமாத்தான் மாட்டிவிட்டார்
மக்களுட படுகளத்தைப்பார்த்து நாமனிறக்க வேணும்
இனியிங்கிருந்தால் கருமமல்ல [illegible] மோச்சம்வரும்.

16.1244. மனதாச்சே - 'மனது வந்ததோ' என்ற பொருளில். 16.1245. சரியாச்சே - 'சரியாகத் தோன்றியதோ' என்ற பொருளில் 16.1246. போச்சோ - போகியதோ' என்பதின் பேச்சு வழக்கு. 16.1248. பொறுக்காரோ - 'பொறுக்க மாட்டாரோ' என்ற பொருளில். 16.1249. பண்டை . . . . . . செய்தார் - இவ்வரியில் மன்னர் தான் கொலை செய்தவர்கள் இந்நாட்டு மன்னரின் மகன்கள் என்பதைக் கூட நினைக்காமல் கொலை செய்தார்' என்ற பொருளில். 16 1251. வஞ்சம் - வஞ்சகம். வச்சு - 'வைத்து' என்பதின் பேச்சு வழக்கு. வசமாத்தான் - நன்றாகவே. 16.1252. மக்களுட - தன் மக்களாகிய தம்பிமார்கள். நாமன் - நான். 16.1253. மோச்சம் - 'மோட்சம்' என்பதின் பேச்சு வழக்கு.

க.சொ : 1. செய்தபிழை

### Tampimarkaḷiṉ tāy iṟakka muṭiveṭuttal

*ayyayyō maṉṉavarkku arumpakaitāṉ iruntālum*
*kolvataṟkum maṉatāccē kolaikaḷceytāṉ paṭupāvi*
*aṟukkāmal aṟuppataṟku avarmaṉatu cariyāccē*
*eṉmakkaḷaik kolaikaḷceyya yiraṅkāmal pōccō*
*aṟiyāmal ceytapiḻai aracamaṉṉar poṟuttatilai*

*pāvimakkaḷceyta piḷaitannai pāraracar pōṟukkārō*
*paṇṭaimannar tirumukattai ninaikkāmal kolaiceytār*
*kōvililē cattiyantāṉ kūṇṭamannar ceytatuvum*
*vañcamvaccu caticeytār vacamāttāṉ māṭṭiviṭṭār*
*makkaḷuṭa paṭukaḷattaip pārttu nāmaḷirakka vēṇum*
*iniyiṅkiruntāl karumamalla yiṟantalveku mōccamvarum*

## Sobbing and weeping

"Oh! What a pity.
How was it possible?
The crowned King to cut
The throat of my loving sons;
The king; any king ought to be
Symbol of tolerance and patience
Can't he ignore the wrong of my sons?
Didn't he remember the face
Of the previous king, his uncle
To spare my sons from death?
Had he forgotten the oath
Taken in the temple?
There is no use to be here
If I die, there will be Salvation".
Cried the mother beating her heart.

## தாய், தங்கை, மாமன் மூவரும் படுகளம் காணுதல்

தன்தாயார் தங்கையுடன் தன்மாமன் மூபேரும்
படுகளந்தான் காணவென்று பரபெரன தானோடிப்
பாதிராவு சாமத்தில் பரரென தானோடி
ஒட்டமும் நடையுமாக ஒருநொடியில் செல்லுவாராம்
நாகருவாழ் கோவில்கல்லில் நலமுள்ள கொட்டாரத்தில்
கொட்டாரக் கோவில்கல்லில் கூடியவர் தானழுதார்..

16.1256. பாரிராவு - 'நடு இரவு' என்ற பொருள் தரும் வட்டார வழக்கு. சாமம் - நடு இரவு. 16.1258. கோவில்கல் - அரண்மனை.

## Tāy taṅkai māmaṉ mūvarum paṭukaḷam kāṇutal

*taṉtāyār taṉkaiyuṭaṉ taṉmāmaṉ mūpērum*
*paṭukaḷantāṉ kāṇaveṉṟu paraperaṉa tāṉōṭip*

*pātirāvu cāmattil paraparena tāṉōṭi*
*ōṭṭamum naṭaiyumāka orunoṭiyil celluvārām*
*nākaruvāḷ kovilkallil nalamuḷḷa koṭṭārattil*
*koṭṭārak kōvilkallil kūṭiyavar tāṉaḻutār*

The mother, sister and uncle
All the three wanted to see
The sight of the murder
And started to go over there
At dead of night
Under the cover of darkness
They ran and walked
And reached the palace at Nākarkōyil
The moment they saw the place
They fell down and banged their heads.

### படுகளம் கண்டவர்களின் அழுகை

தம்பிமார் இருபேரும் தானவர்கள் இறந்தகளம்
படுகளத்தைக் கண்டல்லோ பைந்தொடியாள் தங்கையரும்
சீற்றமுடன் தானழுது சிறந்ததொரு மாமனுமாய்
கடிதாகக் கோபம்கொண்டு கடும்பழிகள்[1] தான்வாங்க
இடிகள் விழுந்ததுபோல்[2] ஏங்கிவிழுந்[3] தழுதாளே[4]
வந்தார்படு களம்தன்னையும் கலங்கி விழுந்தழுதாள்
விழுந்தாள்விண் ணுலகம்தாமதிர விம்மிவிம்மி நனைத்தழுதாள்.

வேறு

17. தறித்த மரமது போல விழுந்து
சம்பி றங்கள் எங்கும் குமிற
இடயில் முறிந்த மரமது போல
ஈரேழு[5] லோகமும் கிறுங்கிட வேதான்
உண்டைகள் பட்டு யானையது போல
உள்ளங் களெங்கும் தடுமா றிடவே
அய்யய்யோ இந்தத் தம்பிமார் தன்னையும்
அரசர்தான் கொல்ல நீதியும் உண்டோ
உண்டோதா னிப்படி கொல்வதும் முறயோ
உடையவருக்கு ஏற்குமோ இந்தப் பாவச்செயல்

பகைத்துப் பகைத்தாலும் இப்போசதி செய்வதுசரியோ
பாராளும் மன்னவரும் கொல்லுவதும் நீதியோ
அடித்துக்கட்டி வைத்து அறுப்பார் யாருமுண்டோ
ஆட்டை அறுப்பதுபோல் குதவளையைக் குத்தினாயே
என்று முறையுமிட்டு மன்னர்முன்னே அழுதழுதாள்
ஏற்ற படுகளம் தன்னதிலே நின்று.

**16.1261.** படுகளம் - மரணம் செய்யப்பட்ட இடம். **16.1262.** சீற்றமுடன் - சினத்துடன். **16.1263.** கடிதாக - விரைவாக. **16.1266** நனைத்தழுதாள் - கண்ணீர் உடல் நனைக்க அழுதாள். **17.1.** தறித்த - வெட்டப்பட்ட. சம்பிறங்கள் - உடல் கூறுகள். **17.2.** இடயில் - 'இடையில்' என்பதின் பேச்சு வழக்கு; நடுவில். கிறுங்கிட - சுழன்றிட. **17.3.** உண்டை - வில்லிலிருந்து செலுத்தப் படும் ஓர் ஆயுத வகை. **17.5.** உடையவர் - மன்னவர். **17.6.** பகைத்துப் பகைத்தாலும் - தம்பிமார்கள் அரசரிடம் மிகுதியான பகை கொண்டாலும். **17.7.** அறுப்பார் - கழுத்தின் குரல்வளையை அறுக்கின்றவர். குதவளை - 'குரல்வளை' என்பதின் பேச்சுவழக்கு.

சு.சொ : 1 கடும்பழிகள் 2. விளுந்ததுபோல 3 ஏங்கிவிளுந 4. தளுதாளே 5. ஈரேளு

## Paṭukaḷam kaṇṭavarkaḷiṉ aḻukai

*tampimār irupērum tāṉavarkaḷ iṟantakaḷam*
*paṭukaḷattaik kaṇṭallō paintoṭiyāḷ taṅkaiyarum*
*ciṟṟamuṭaṉ tāṉaḻutu cirantatōṟu māmaṉumāy*
*kaṭitākak kōpamkoṇṭu kaṭumpaḻikaḷ tāṉvāṅka*
*iṭikaḷ viḻuntatupōl ēṅkiviḻun taḻutāḷē*
*vantārpaṭu kaḷamtaṉṉaiyum kaṇṭi viḻuntaḻutāḷ*
*viḻuntāḷviṉ ṉulakamtāmatira vimmivimmi naṉaittuḻutāḷ*

**vēṟu**

*17.* *taṟitta maramatu pōla viḻuntu*
*campi ṟaṅkaḷ eṅkum kumiṟa*
*iṭayil muṟinta maramatu pōla*
*īrēḻu lōkamum kiṟuṅkiṭa vētāṉ*
*uṇṭaikaḷ paṭṭa yāṉaiyatu pōla*
*uḷḷaṅ kaḷēṅkum taṭuma ṟiṭavē*
*ayyayyō intat tampimār taṉṉaiyum*
*aracartāṉ kolla nītiyum uṇṭō*
*uṇṭōtā ṉippaṭi kolvatum muṟayō*
*uṭaiyavarukku ēṟkumō intap pāvacceyal*
**pakaittup pakaittālum ippōcati ceyvatucariyō**

*pārāḷum maṉṉavarum kolluvatum nītiyō*
*aṭittukkaṭṭi vaittu aṟuppār yārumuṇṭō*
*āṭṭai aṟuppatupōl kuṭavaḷaiyaik kuttiṉāyē*
*eṉṟu muṟaiyumiṭṭu maṉṉarmuṉṉē aḻutaḻutāḷ*
*ēṟṟa paṭukaḷam taṉṉatilē niṉṟu*

They cried and filled the floor with tears
They sobbed and wept, and it reached the sky.
The mother fell down like a broken tree
That echoed throughout the universe
Fell down like the elephant
That was attacked by an arrow.
"Oh! What a pity!
Can the king's action be justified?
Can his killing be justified?
Even if there is enmity.
Can the king cut and kill his brethern?
Oh King!
You have killed my sons
Simply cutting their throats.
Are they goats or hens?"
Poured out her heart before the palace.

### தாயார் தற்கொலை செய்தல்

நின்றாளே படுகளம் தன்னதிலே தாயார்
நேரிழையாள் இந்தத்தங்கையுடன் காப்பாற்ற யாருமில்லை
ஆரும் துணையில்லை ஆதரிப்பா ராருமில்லை
ஆனாள் துணையில்லை என்றவள் தானினைந்து
நின்றவள் அண்ணாந்து வானத்தையுமே பார்த்து
நேரீது பரிவட்டம் கையிலே பிடித்துக்
கையில் பிடித்த பரிவட்டத் தோடே
கையினாலே குத்திப் பிடித்துக்
குத்திப் பிடித்து வலித்து எறிந்து
துய்ய படுகளத்தில் தொட்டியினில் மாண்டுவிட்டாள்.

## தங்கை நாக்கைப் பிடுங்கி இறத்தல்

தாயார் அங்கே இறந்த பொழுதினிலே
        தங்கைகொச்சு மாடம்மையும் தானாக அழுதுபுலம்புகிறாள்
தனியே இருந்தால் அழிவு (தான்)வரும்
        தாங்குவார் இங்கு யாரு மில்லை
நாக்கைப் பிடுங்கி நானி றப்பேன்
        நன்றாய்த் தம்பிகள் இடம் போவோம்
என்றவள் ஓங்கி நாக்கி னையும்
        பிடுங்கி எறிந்தாள் படுக ளத்தில்
சீவன் போகுது மாடம் மைக்குச்
        சிவனார் கிட்டே நெருங்கிப் போகுது.

17.10 ஆரும் - 'யாரும்' என்பதின் பேச்சுவழக்கு. அரனார் - சிவனார். 17.11. அண்ணாந்து - தலைநிமிர்ந்து. நேரிது - நேரியல்; இது தோளில் இடும் ஒரு வகை அங்கவஸ்திரம்; மலையாள தேசத்தில் இன்றும் பெண்கள் மார்பை மறைக்க இந்நேரியலை இடும் வழக்கம் உண்டு. பரிவட்டம் - சீலை. 17.12. குத்திப் பிடித்து - இறுக்கமாய்ப் பிடித்து. வலித்து யெறிந்து - ஆடையை வேகமாக பிடுங்கி எறிந்து. துய்ய - தூய்மையான. 17.15. தாங்குவார் - சிறப்பு செய்து பாராட்டிப் பேணுவார் 17.18. போகுது - 'போகின்றது' என்பதின் பேச்சு வழக்கு. கிட்டே - அருகிலே.

சு.சொ - 1 நேரிளையா 2 தானிளைந்து 3 பாறத்து

## Tāyār taṟkolai ceytal

*niṉṟāḷē paṭukaḷam taṉṉatilē tāyār*
        *nēriḷaiyā ḷintataṅkaiyutaṉ kāppāṟṟa yārumillai*
*ārum tuṇaiyillai ātarippār yārumillai*
        *araṉār tuṇaiyillai eṉṟavaḷ tāṉiṉaintu*
*niṉṟavaḷ aṇṇāntu vāṉattaiyum pārttu*
        *nēritu parivaṭṭam kaiyilē piṭittuk*
*kaiyil piṭitta parivaṭṭat tōṭē*
        *kaiyi ṉālē kuttip piṭittuk*
*kuttip piṭittu valittu yeṟintu*
        *tuyya paṭukaḷattil noṭiyiṉil māṇṭuviṭṭaḷ*

## Taṅkai nākkaip piṭuṅki iṟattal

*tāyār aṅkē iṟanta poḻutiṉilē*
        *taṅkaikoccu māṭammaiyum tāṉāka aḻutupulampukiṟāḷ*
*taṉiyē iruntāl aḻivu (tāṉ)varum*

*tāṅkuvār ıṅku yārumillai*
*nākkaip pıṭuṅkı nāṉı ṟappēṉ*
*naṉṟāyt tampikaḷ iṭam pōvōm*
*eṉṟavaḷ ōṅki nākki ṉaıyum*
*piṭuṅki eṟintāḷ paṭuka ḷattıl*
*cıvaṉ pōkutu māṭam maikkuc*
*cıvaṉār kıṭṭē neruṅkıp pōkutu*

## Suicide of Brother's mother and sister

Thought there was none to save
Not even the king to depend on
Looked up to the sky fırmly
Took her cloth that covered her breast
And fıxed it round her neck
Pressed vıolently tıll she died
When she saw her mother dead
Koccu Māṭammaı, the only sıster
Got wıld and wept alone
"There ıs no one to depend on
There ıs no use to live alone
I will pull my tongue out and die
To reach the place where my Brothers lıve"
Said these words and set
To remove her tongue and
To remove her lıfe
She lay dead ınstantly.

18. மாமன்கொச்சு மாறப்பிள்ளையும் தம்பிபட்ட படுகளத்தில்
தாய்தங்கை இறந்தாரென்று அவர்கள்போன பின்புநாமும்
தனித்திருந்து என்னபலன் இல்லைபல னொன்றுமில்லை
வாளைஎடுத்து தாயில்ஊன்றி படுகளத்தார் பார்த்துநிற்க
அலறிவீழ்ந்து அவனும்பட்டான் கிட்டநின்ற வீரரெல்லாம்
கலியும்முத்திப் போச்சுதென்பார்.

18.4 தரயில் - 'தரையில்' என்பதின் பேச்சுவழக்கு. படுகளத்தார் - கொலைக்களத்தில் நிற்கின்றவர்கள 18.5 கிட்ட - அருகில். 18.6. கலி - கலி காலம் முத்திப் போச்சு - 'முற்றிப் போயிற்று' என்பதின் பேச்சு வழக்கு.

18. *mānaṉkoccu mārappiḷḷaiyum tampipaṭṭa paṭukaḷattil*
*tāytaṅkai iṟantareṉṟu avarkaḷpōṉa piṉpunāmum*
*taṉittiruntu eṉṉapalaṉ illaipala ṉoṉṟumillai*
*vāḷaieṭuttu tarayilūṉṟi paṭukaḷattār pārttuniṟka*
*alariviḻntu avaṉumpaṭṭāṉ kiṭṭaniṉṟa vīrarellām*
*kaliyum muttip pōccu teṉpār*

### Death of uncle

Now it was the turn of
Uncle Koccu Mārappa Piḷḷai
He saw her sister and niece dead
At the place where the brothers got killed
Thought the lovely life wasteful
Fixed his sword on the floor
Fell over it to kill himself.

### இறந்த அனைவரும் கயிலை செல்லுதல்

இவருடைய விதிவசந்தான் ஈஸ்வரனார் கைலையிலே
வருவார் வருவாரென்று கணங்களுடன் காத்திருந்தார்
வலியதம்பி குஞ்சுதம்பி கொச்சுமாடம்மை தங்கையும்
தாய்மாமன் கொச்சுமாறன் கூண்டோடு கைலைசென்றார்
கொன்றகொலைக்கு பழிமீள கூடிஎல்லோரும் கைலைசென்றார்.

### அனைவரும் சிவனை வணங்குதல்

அரனார்இருந்த மேடையதில் அனைவரும்சென்று வணங்கினாரே
வரமது வாங்கவென்று மகாதேவரைத் தொழுதபோது
அரவம் புகுந்தஈசன் அவருட முகத்தைநோக்கி.

18.10. கூண்டோடு - மொத்தமாய். 18.11. பழி மீள - பழி வாங்க. 18.14. அரவம் புகுந்த ஈசன் - பாம்பினைத் தன் உடலில் புகும்படி விட்ட இறைவன்; சிவன். அவருட - அவர்களுடைய.

### Iṟanta aṉaivarum kayilai cellutal

*ivaruṭaiya vitivacantāṉ īsvaraṉār kailaiyilē*
*varuvār varuvāreṉṟu kaṇaṅkaḷuṭaṉ kāttiruntār*
*valiyatampi kuñcutampi koccumāṭammai taṅkaiyum*
*tāymāmaṉ koccumāṟaṉ kūṇṭōṭu kailaiceṉṟār*
*koṉṟakolaikku paḻimīḷa kūṭiellōrum kailaiceṉṟār*

## Aṉaivarum civaṉai vaṇaṅkutal

*araṉārirunta mēṭaiyatil aṉaivarumceṉṟu vaṇaṅkiṉārē*
*varamatu vāṅkaveṉṟu makātēvarai toḻutapōtu*
*aravam pukuntaīcaṉ avaruṭamukattai nōkki*

Those who witnessed the cruelsome act
Remarked it was the result of millenium
Every act in the world
Moves as per the dictum of God Civaṉ
The death of the two brothers
Their mother, sister and uncle
Are the result of their Fate
That was written before their birth
All the four after their death
Went up to the abode of Lord Civaṉ
They all worshipped him.

### சிவன் தம்பிமார்களை அக்கினித்தூண் தழுவக்கூறுதல்

கரமது உடயநீங்கள் காசினியில் பெரும்பகைகள் மீறியே
இறந்தவர் முகத்தைநோக்கி ஈஸ்வரன் யேதுரைப்பார்
வன்குலையால் இறந்தபேரோ தன்குலையா லிறந்தபேரோ
வன்குலையால் இறந்தபேர்கள என்னடிதொழுது நிற்பார்
வன்குலையால் இறநதபேர்க்கு வரமுமில்லை தவமுமில்லை
தன்குலையால் இறந்தபேர்க்கு வரமுமுண்டு தவமுமுண்டு
ஆனாலும் வலியதம்பி ஆணழகா குஞ்சுதமபி
உதிரக்களத்தில் இறந்தபேர்க்கு உண்டுதான் சுத்தக்கேடு
அசுத்தக்கேடு தீர்வதற்கு அக்கினித்தூண மெழுகவேணடும்'
அக்கினித்தூண் மெழுகிவந்தால் ஆனநல்ல வரமதருவேன்

### தம்பிமார்கள் பதிலுரை

அக்கினிதான் என்றபோது ஆணழகன் தம்பிமாாகள்
அக்கினியும் மெழுகறியேன அணைக்குழி தானறிவோம
ஓமககுழி கண்டறியாம் சொலபரன' திருவிளாமாய்
தொழுதாரே' தம்பிமார்கள் உடையவரை எணைத்தொழுதார்

18.15. கரம் - அழிவு உடய - 'உனை ய' என்பதின் பேச்சு வழக்கு 18.17 என்குலை கொலை தன்குலை - தற்கொலை 18.22. உதிரககளம் - இரத்தக்களம் சுததக்கேடு

ஆன்ம சுத்தக்கேடு. 18.23. அக்கினித்தூண் மெழுக வேண்டும் - அக்கினித்தூணினைத் தழுவி எடுத்து, அம்மலையைச் சுற்றிவந்து தன் திறமையை நிருபித்த நிகழ்வை 'மன்னர்ராஜா கதை' கூறும். 18.26. அணக் குழி - நெருப்புக் குழி 18.27. ஓமக்குழி - யாகம் வளர்க்கும் நெருப்புக் குழி. 18.27,28. சொல் பரன் திருவிளமாய் தொழுதாரே - 'சொல்லால் சொல்வதற்கரிய சிவனின் திருவுள்ளக் குறிப்பை அறிவதற்குத் தொழுதார்' என்ற பொருளில்.

சு.சொ : 1 மெளுக 2 சொல்பபரன் 3. தொளுதாரே

## Civaṉ tampimārkaḷai akkiṉittūṇ taḻuvak kūṟutal

*karamatu uṭayaniṅkaḷ kāciṉiyil perumpakaikaḷmiṟiyē*
*iṟantavar mukattainōkki īsvaraṉ yēturaippār*
*vaṉkulaiyāl iṟantapērō taṉkulaiyā liṟantapērō*
*vaṉkulaiyāl iṟantapērkaḷ eṉṉatitoḻutou niṟpār*
*vaṉkulaiyāl iṟantapērkku varamumillai tavamumillai*
*taṉkulaiyāl iṟantapērkku varamumuṇṭu tavamumuṇṭu*
*āṉālum valiyatampi āṇaḻakā kuñcutampi*
*utirakkaḷattil iṟantapērkku uṇṭutāṉ cuttakkēṭu*
*acuttakkēṭu tīrvataṟku akkiṉittūṇ meḻukavēṇṭum*
*akkiṉittūṇ meḻukivantāl āṉanalla varamtaruvēṉ*

## Tampimārkaḷ patilurai

*akkiṉitāṉ eṉṟapōtu āṇaḻakaṉ tampimārkaḷ*
*akkiṉiyum meḻukaṟiyēṉ aṇakkuḻi tāṉaṟivōm*
*ōmakkuḻi kaṇṭaṟiyām colparaṉ tiruviḷamāy*
*toḻutārē tampimārkaḷ uṭaiyavarai eṉaittoḻutār*

## Lord Civaṉ's advice

Lord Civaṉ who allowed
The snake to move on his body
Looked at them with compassion
He knew well that
They withstood all the ordeals
They faced all the trials and tribulations
He knew everything and said
"Those who seek my blessings
Should never have been killed or murdered
They will never be eligible

To get martyrdom or sainthood
Those who commit suicide
And sacrifice their life for others
Will always get my blessings and favour.
But listen, brave Valiya Tampi and Kuñcu Tampi
Those who shed blood and got killed
Have to face *Akkiṉi* (fire) and embrace it there
Then I will give them my blessings"
On hearing this difficult task
They said their ignorance to God
"Neither the "*akkiṉi* pillar' nor the
'*Akkiṉi pit*' nor the *ōm* pit
Not known to any one of us"
Said the brother sadly.

### தம்பிமார்களிடம் சிவன் அக்கினித் தூணைத் தழுவ ஆணையிடல்

அந்தவார்த்தை கேட்டபோது உடையவனார் கயிலைதன்னில்
ஓமக்குழி மெழுகிவந்தால் அரனாரும்[1] ஏதுசொல்வார்
வடகயிலாச புரமதிலே வளருதல்லோ அக்கினித்தூண்
அக்கினித்தூண் தழுகிவந்தால்[2] அழகான வரம்தருவேன்
எல்லையில்லா வரம்தருவேன் ஏற்றபூசை கொள்வதற்கு.

### அக்கினித் தூண் அமைப்பு

அரனார் சொல்படியே[3] யேற்றபூசை கொள்வதற்கு
வடகயிலாச புரமதிலே அவர்கள் அங்கேமுடுகுநேரம்
அக்கினித்தூண் தன்னருகே வந்தார்கள் ஒருமுகமாய்
அக்கினித்தூண் ஆனதிலே யென்றும்ஒன்றாய் குமுறுதல்லோ
யீரேழுலோகம் பதினாலும் அனலாய் குமுறுதல்லோ
ஒருவராலும் முடுகொணாது ஆணழகன் குஞ்சுதம்பி.

**18.32.** தழுகி - தழுவி. **18.35.** முடுகு நேரம் - விரையும் நேரம். **18.39.** முடுகொணாது - நெருங்க முடியாமல்.

சு.சொ : 1.. அரநாரும் 2. தளுகிவந்தால் 3. சொல்ப்படியே

### Tampimārkaḷiṭam civaṉ akkiṉit tūṇait taḻuva āṇaiyiṭal

*antavārttai kēṭṭapōtu uṭaiyavaṉār kayilaitaṉṉil*
*ōmakkuḻi meḻukivantāl araṉārum ētucolvār*

*vaṭakayilāca puramatilē vaḷarutallō akkiṉittūṇ*
*akkiṉittūṇ taḻukivantāl aḻakāṉa varamtaruvēṉ*
*ellaiyillā varamtaruvēṉ ēṟṟapūcai koḷvataṟku*

**Akkiṉittūṇ amaippu**

*araṉār colpaṭiyē yēṟṟapūcai koḷvataṟku*
*vaṭakayilāca puramatilē avarkaḷ aṅkēmuṭukunēram*
*akkiṉittūṇ taṉṉarukē vantārkaḷ orumukamāy*
*akkinittūṇ āṉatilē yeṉṟumoṉṟāy kumuṟutallō*
*yīrēḻulōkam patiṉālum aṉalāy kumuṟutallō*
*oruvarālum muṭukoṇātu āṉaḻakaṉ kuñcutampi*

Lord Civaṉ, the God was pleased
Gave them a hint to reach the place
It was in North Kailash that had the *Akkiṉi*
All went there in single unit
And saw the *Akkiṉi* pillar
Boiling, bursting and burning
Emitting ponds of heat far and wide
Valiya Tampi and Kuñcu Tampi
The Valiant Brothers went near the fire

**இறை மந்திரங்களை உன்னித் தம்பிமார்கள் அக்கினித்தூண் தழுவி எடுத்தல்**

அப்போது வலியதம்பி ஒருகாத தூரமட்டும்
யேதுயேது விதமாக அரியென்ற சிவத்தைஉன்னி
அன்பத்தோ ரட்சிரத்தை உள்ளெழுத்தை மனதிலுண்ணி
ஆழமான சாஸ்திரத்தை ஆங்காரமாய் நின்றபோது
அஞ்செழுத்தை மனதிலுன்னி அதைநினைத்து உச்சரித்து
அரனே சிவனேயென்று அக்கினிமண்டலம் தனைத்தாங்கி
வாதமண்டலம் தனிலேயவர் மனதிலே யடக்கிவச்சு
மேவரசிந்தனை யடக்கி அனல்மணல் குளிர்ந்திடுமாம்
அக்கினித்தூண் அருகேசெல்ல விரிசலாகத் தூணருகே
குளிர்ந்தபன்னீர் அதுபோலல்லோ அக்கினித் தூணும்தான்
அவருட தவத்தினால் குளிர்ந்த தல்லோ
எடுத்தாரே தலைசுமடாய் நீள்கயிலாசம் மேல்கயிலாசம்
கயிலாசம் எங்கும்சுற்றிக் கறைகண்டனார்[1] முன்பில்வைத்தார்.

**18.41.** ஏது ஏது விதமாக - பல்வேறு விதங்களில். உன்னி - நினைத்து. **18.43.** ஆங்காரமாய் - உள்ள உறுதியோடு. **18.46.** வாத மண்டலம் - காற்று மண்டலம். வச்சு - 'வைத்து' என்பதின் பேச்சு வழக்கு. **18.47.** மேவர சிந்தனை - பல்வேறு விதமான சிந்தனை. அனல்மணல் - நெருப்புத் தூண். **18.48.** விரிசலாக - பிளவு ஏற்பட்டது போல். **18.51, 52.** நீள் கயிலாசம், மேல் கயிலாசம், கயிலாசம் - இவை கயிலாசம் மற்றும் அதன் மேல் பரப்பு, நீண்ட பரப்பு ஆகிய இடங்களைச் சுட்டும். கறைகண்டனார் - ஆலகால விஷத்தை விழுங்கி, அதை கண்டத்திடத்தே பார்வதி தடுக்க, அதனால் கறை கண்டத்தையுடையவர்; சிவன். முன்பில் - முன்பாக.

*சு.சொ : 1. கறைகண்டனார்*

## Iṟai mantiraṅkaḷai uṉṉit tampimārkaḷ akkiṉittūṇ taḻuvi eṭuttal

*appōtu valiyatampi orukāta tūramaṭṭum*
*yētuyētu vitamāka ariyeṉṟa civattai uṉṉi*
*aṉpattōr raṭcirattai uḷḷeḻuttai maṉatiluṉṉi*
*āḻamāṉa cāstirattai āṅkāramāy niṉṟapōtu*
*añceḻuttai maṉatiluṉṉi atainiṉaittu uccarittu*
*araṉē civaṉēyeṉṟu akkiṉimaṇṭalam taṉaittāṅki*
*vātamaṇṭalam taṉilēyavar maṉatilē yaṭakkivaccu*
*mēvaracintaṉai yaṭakki aṉalmaṇal kuḷirntiṭumām*
*akkiṉittūṇ arukēcella viricalākat tūṇarukē*
*kuḷirntapaṉṉīr atupōlallō akkiṉit tūṇumtāṉ*
*avaruṭa tavattiṉāl kuḷirnta tallō*
*eṭuttārē talaicumaṭāy nīḷkayilācam melkayilācam*
*kayilācam eṅkumcuṟṟi kaṟaikaṇṭaṉār muṉpilvaittār*

### Embracing *Akkiṉi* pillar

They had prayers in their mind
They chanted the five lettered mantra in their heart.
Thus they curtailed the wrath of fire
And prayed for the blessings of Lord Civaṉ
What a tremendous change!
The fire no more was hot
The *Akkiṉi* pillar became cold
Took it and went round
All the surroundings of Kailash
And placed it before Lord Civan.

### சிவன் அனைவருக்கும் வரங்கொடுத்தல்

இப்படித்தான் தொழுதபோது மாறாத வரம்தருவேன்
வந்தீரோ தம்பிமாரே ஈஸ்வரனார் மனம்மகிழ்ந்து
எதிரியெல்லா வரம்தருவேன் இப்போது பூசைஉண்ண
கொல்லவரம் வெல்லவரம் புகழ்பெறவே[1] வரம்கொடுத்தார்
புதுக்கூட்டத்து வாதையென்று புகழ்பெறவே வரம்கொடுத்தார்
தாயார்க்கும் தங்கையர்க்கும் புகழ்பெரிய நீலியென்றும்
புதுக்கூட்டத்து யிசக்கியென்றும் புகழ்பெரிய நீலியென்றும்
கருநீலிமக்கள் நீங்கள் கடுகதம்பிமாரே வாரும்
கால்கடிய சேவுகரே காவலவன் தம்பிமாரே
தேருக்கு முன்னோடும் முகனையுள்ள சேவகன்போல்
வித்துபெட்டி தான்சுமக்க சேவகனாய் சேர்த்துக்கொண்டார்
மகாதேவர் கொடுத்தவரம் மாறாது ஒருநாளும்.

18.55. எதிரியெல்லா - எதிரில்லா; எதிரிட்டு கூறமுடியாத; ஒப்பு கூற முடியாத. 18.57. புதுக்கூட்டத்து வாதை - புதிய கூட்டமான பேய் தெய்வங்கள்; மன்னர் கருங்காலி உள்ளிட்ட 21 வாதைகள் பழைய வாதைகள் ஆதலால் தம்பிமார்கள் 'புதுக் கூட்டத்து வாதைகள்' எனப் பெயர் பெற்றனர்; இவர் முத்தாரம்மன் கோயில் சிலவற்றில் வழிபாடு செய்யப் பெறுகின்றனர். 18.59. இசக்கி, நீலி - தென்மாவட்டங்களில் உள்ள நாட்டார் பெண் தெய்வம். 18.60. கடுக - விரைவாக. 18.61. கால் கடிய - காற்றினும் வேகமான. சேவுகர் - சேவை செய்வோர்; தம்பிமாரைக் குறித்தது. 18.62. முகனை - முனைப்புள்ள. 18.63. வித்துப்பெட்டி - வெப்பு நோய்களை உருவாக்கும் முத்தாகிய வித்துக்கள் அடங்கிய பெட்டி.

சு.சொ : 1. புகள்பெறவே

### Civaṉ aṉaivarukkum varaṅ koṭuttal

*ippaṭittāṉ toḻutapōtu māṟāta varamtaruvēṉ*
*vantīrō tampimārē īsvaraṉār maṉammakiḻntu*
*etiriyellā varamtaruvēṉ ippōtu pūcaiuṇṇa*
*kollavaram vellavaram pukaḻpeṟavē varamkoṭuttār*
*putukkuṭṭattu vātaiyeṉṟu pukaḻpeṟavē varamkoṭuttār*
*tāyārkkum taṅkaiyarkkum pukaḻperiya nīliyeṉṟum*
*putukkūṭṭattu yicakkiyeṉṟum pukaḻperiya nīliyeṉṟum*
*karunīlimakkaḷ nīṅkaḷ kaṭukatampimārē vārum*
*kālkaṭiya cēvukarē kāvalavaṉ tampimārē*
*tērukku muṉṉōṭum mukaṉaiyuḷḷa cēvakaṉpōl*
*vittupeṭṭi tāṉcumakka cevakaṉāy certtukkoṇṭār*
*makātēvar koṭuttavaram māṟātu orunāḷum*

God was pleased, Civaṉ was moved
Ready to grant whatever they wanted
Blessed them with a favourable boon
They would become celebrated deities
Putukūṭṭattu Vātai was their new family name,
The mother and daughter became Nīli
And were called Putukūṭṭattu Icakki
The brothers and their uncle
Were fondly given worthy assignments
They would serve Lord Makātēvar
As faithful attendants awaiting His orders.

### அனைவரும் வரம்பெற்று வீற்றிருத்தல்

மாறாத வரங்கள்பெற்று வன்னமுத்தார் இடமாக
கங்காளப் பேச்சியுடே வங்காளக் காச்சக்காரி
வன்னமுத்தார் உலகளந்தாள் வடிவழகன் முப்புராதியுடன்
கூடியவர் பூசையுண்ண கோடிகோடி வரங்கள்பெற்று
வரங்கள்பெற்று வையகத்தில் பூசையுண்டு வீற்றிருந்தார்
மகாதேவர் கொடுத்தவரம் வரம்வாங்கி வீற்றிருந்தார்.

**18.65.** வன்னமுத்தார் - முத்தாரம்மன் தெய்வத்தின் மற்றுமொரு பெயர். **18.66.** கங்காளப் பேச்சி, வங்காளக் காச்சக்காரி - இவை முத்தாரம்மனின் வேறு பெயர்கள்; இப்பெயர்கள் 'முத்தாரம்மன் கதைப் பாடல்'-ம் வருகின்றன. **18.67.** முப்புராதி - ஒரு பெண் தெய்வம்; நீலன், குமுதம், ஆதித்தன் ஆகிய மூவரும் முப்புராதி என முத்தாரம்மன் கதை கூறும்.

### Aṉaivarum varam peṟṟu vīṟṟiruttal

*māṟāta varaṅkaḷpeṟṟu vaṉṉamuttār iṭamāka*
*kaṅkāḷap pēcciyuṭē vaṅkāḷak kāccakkāri*
*vaṉṉamuttār ulakaḷantāḷ vaṭivaḻakaṉ muppurātiyuṭaṉ*
*kuṭiyavar pūcaiyuṇṇa kōṭikōṭi varaṅkaḷpeṟṟu*
*varaṅkaḷpeṟṟu vaiyakattil pūcaiyuṇṭu vīṟṟiruntār*
*makātēvar koṭuttavaram varamvāṅki vīṟṟiruntār.*

### Civaṉ's Blessings

They would carry His orders
And execute all His orders
They would be the carriers

Of His wish and visions
This was the rare gift
That they got from Lord Makātēvar
They were called by different names
Vaṉṉamuttār, Ulakaḷantāḷ
Muppiṭāri and Icakki
And worshipped by all
Prayed and performed *pūjais*
Thus they became immortal deities
By the grace of Makātēvar.

* * *

## Glossary

| | |
|---|---|
| Akkiṉi pillar | A fiery at Kailāsam myth holds it that the sinners souls get purified by embracing it. |
| Accampāṟai, Vaḷḷiāpuram, Kaluṅku, Periyakuḷam, Talakkuḷam | The places on way to Vāliyāmpāṟai where Rāma Varma went for the holy dip. |
| Apirāmi | The wife of Rāma Varma and mother of the Tampis |
| Ayōtti | The supposed native place Apirāmi |
| Aḻakappa Mutaliyār | Was a general of the army of the Nāyakkars. Had a mercenary army. |
| Āṟṟiṅkal | The Queen sister of Rāma Varma lived here. Mārtāṇṭa Varma was born here. |
| Āsrāmam | A village near Cucīntiram. The village is associated with Attiri and Asūyai, purāṇic characters |
| *Catayam* | The 24th star of the 27 stars in the Zodiac. |
| Cintupūnturai | a place in Tirunelvēli Town where Aḻakappa Mutaliyār resided |
| Civaṉ, | The supreme Lord of the Hindus. Especially, the Saivartes supposed to be at Mount Kailash |
| Citappāl, Tiruppaticāram, Tattaiyāru pond, Puttēri, Vaṭacēri | Some place names in Kaṉṉiyākumari Dist. |
| Cucīntiram | Famous for the Tāṇumālayaṉ Temple. |
| *Hari Sri* and *Hari Ōm* | The first *mantiram* to which the Tampis are initiated. |
| *Illam* and *Turuvam* | Matriarchal and patriarchal systems |
| Iraṇiyal | An important town in Travancore state. A small palace is situated there |

| | |
|---|---|
| Kaṭiyapaṭṭiṉam | A village on the sea shore where the king Rāma Varma sacrificed his little finger to pacifythe turbulent sea. On his way back after a holy dip at Vāliyāmpāṟai |
| *Kaṭaiyāl* | A kind of vessal |
| Kaṇapati | The elephant-headed, eldest son of Lord Civaṉ |
| Kiruṭṭiṉattammāḷ alias Kiṭṭiṉattāḷ | These names are given to Apirāmi by Rāma Varma |
| Kirṣṇan, | Brother of Apirāmi |
| Kutiraipāñcāṉkuḷam, Kaṇṭakaruppukkaṭṭi | Some place names in Kaṉṉiyākumari Dist. |
| Kuñcu Tampi | The younger Tampi, S/o. Rāma Varma alias Rāmaṉ Tampi |
| Kēraḷapuram | A village in Travancore state |
| Kailash | The abode of. Lord Civaṉ |
| Kòccumaṇi | The younger sister of the Tampis d/o. King Rāma Varma |
| Koccumāṟa Piḷḷai | originally known as Kiruṣṇaṉ Apirāmi's brother,Rāma Varma changes it as above. |
| Kollam | A city during Mārttāṇṭa Varma's reign. |
| Kōvilkal palace | The palace of Kiruṣṇattammāḷ M/o. the Tampis |
| Makātēvar | A name of Civaṉ |
| *Maṇiyam* | (Formerly) village official entrusted with the collection of land revenue, house tax etc. |
| Māṭampımār, | Another name for *eight vīṭṭu piḷḷais* |
| *Mātuḷai, Tūtuḷai, Picci, Araḷi* | Some flowers |

| | |
|---|---|
| *Mārkaḻi* | The ninth Tamil month |
| Muttārammaṉ | A village diety in the Southern districts |
| Muttiruḷa Nāṭār, Kaṟuppu Nāṭār | Two big and lords during Rāma Varma's period. The king allowed the Tampis to collect taxes from them. |
| Nampūtiri | A high caste among Brahmin sect acted as the powerful advisors of the king. |
| Nāñcil Nāṭu | An ancient dicision of Travancore the region consisting of Akastīsvaram and Tōvāḷai at present. |
| Nākarkōyil | The capital of Kaṉṉiya Kumari district |
| *Nāyakkar* | The caste of some soldiers in the army of Aḻakappa Mutaliyār. |
| Nālālamūṭu, Koṭuppakkuḻi, Tālākkuṭi, Kūṭṭappuḷi | Villages gifted by the king to the Tampis |
| *Nāḻi* | A container used as a measure in ancient times |
| *Nīli* | A fierce female diety |
| Patmañapapuram | Capitalcity of Travancore the reign of Mārtaṇṭa Varma during. |
| Paḻaiyāṟu | A river in Kaṉṉiya Kumari district. It has reference in the *Caṅkam* period works. |
| Paḷḷiyaṅkāṭu, Periyakuḷam | Places Rāma Varma crossed on his way back from his holy dip at Vāliyāmpūṟai |
| Pāṟacālai | A town in Travancore State; situated on the NH 47 |
| Piccakappaḷḷi Nāyar, Vīrāṇi Caṅku Piḷḷai, Māṭaṉpoṉṟai-Nāyar, Kuñcukkāṇi Nāyar | Characters who helped Tampi in his rebellion against Martaṇta Varma |
| *Piṭākais* | The sub divisions of Nāñcil Nāṭu. They were twelve. |

| | |
|---|---|
| Putukkūṭṭattu Icakki | A *subordenate* deity to Nīli |
| Putu kūṭṭattu Vātai, | They were the male subordinate decties to Nīli as Putukkūṭṭattu Vātai. Icakki is the female version. |
| *Pūjais* | Adoration of deities with proper rituals such as lighting lamps, chanting *mantiras*, etc. |
| Rāmakiriṣṇa Kurukkaḷ | Belongs to Cucīntiram. He gives refuge to the family of the Tampis when they go to A̲lakappa Mutaliyār in search of enforcements |
| Rāma Varma | Father of the Tampis; uncle of Mārttāṇṭa Varma |
| *Reṭṭiyārs, Paṭṭāṇiyars* and *Vaṉṉiyar* | The majority of the soldiers in A̲lakappa Mutaliyārs army belonged to these castes |
| *Tai* | The tenth Tamil month |
| Tāṇumālayaṉ | The family deity of the Royalth of Travancore during Marttaṇṭa Varmas Lord period Civaṉ exists here in the form of Trinity. |
| Tiṭṭuviḷai, Pūtappāṇṭi, Puttēri, Kōṭṭar, Vaṭacēri, E̲lakaram, Iṭalākkuṭi, A̲lakiyapāṇṭya-puram, Tericaṉaṅkōppu | the places of Travancore state where the army of Travancore state where the army of Aḷakappa Mutaliyār plundered |
| Tirumāl | The supreme god of the Vaishnavites supposed to be at Vaikuṇṭam |
| Tirunīlakaṇṭa Piḷḷai | The music teacher (ācaṉ) of the Tampis |
| Tiruvanantapuram, Tiruvitāṅkōṭu & Tiruvañcikkarai | Three important historical places in the Travancore |
| Tērūr, Tiruppaticāram, Kottaṉpāṟai, Kaṭukkarai, Puḷimūṭu, Tirukkaṇaṅkuṭi, | |

| | |
|---|---|
| Māvaṭi, Vaṭaliviḷai, Puttūr, Tēvanallūr, Ciṅkikuḷam, Miṉṉipāḷayam | The places the Tampis crossed when they went to Aḻakappa Mutaliyār |
| The Brothers | Valiya Tampi alias Kuñcu Tampi alias Rāmaṉ Tampi |
| The Eight Houses Piḷḷais alias administrators during *Eiṭṭuvīṭṭu Piḷḷaimār* | A caste; Pappu Tampi powerful Mārttaṇṭa Varmas rule they sided with the Tampis |
| Thiru Nīlakaṇṭa Cāmi | The chief deity in the Viṣṇu Temple at Patmanāpapuram palace. |
| Vañci Mārttāṇṭan alias Mārttāṇṭa Varma | The Nephew of king Rāma Varma. Inherits the throne after the king. |
| Vañci Mārttāṇṭa Tampirān, Iṭattaruvāḷ Pōṟṟi, Vaḷḷiyāttu-Pōṟṟi, Makuṭañcēri Piḷḷai, Talaiccēri Mārttāṇṭa Piḷḷai, Mārttāṇṭa Piḷḷai | Persons who assisted the administration of king Rāma Varma |
| Valiya Tampi | Alias Pappu Tampi, the elder son of Rāma Varma |
| *Varuṇaṉ* | God of rain |
| Vāliyāmpāṟai pond | The pond where king Rāma Varma takes his holy dip |
| Veṭṭūrṇimaṭam, Pārvatipuram, Kaḷḷiyaṅkāṭu, Kaṇiyākuḷam, Cuṅkāṉkaṭai, Turaṭṭiyōṭu, Ceṭṭimaṭam, Ciṅkanallūr | Rāmavarma crosses these places to go to his palace after getting married to Apirāmi |
| *Vaikuṇṭam* | The abode of Lord Viṣṇu |
| Umaiyāḷ | Consort of Lord Civaṉ |
| *Uttiram* | Among the 27 stars this is the 12th star |
| *Yātavas* | A caste name |

## துணைநூல் பட்டியல்


சுவடிகள்

1. தம்பிமார் கதை — 'கலைமாமணி' முத்துச்சுவாமி புலவர், சுயம்புலிங்கபுரம் என்பவரின் ஓலைச் சுவடி.

2. தம்பிமார் கதை — சுயம்புராஜன், ராஜாக்கமங்கலம் என்பவரின் தாள்ச்சுவடி.

அச்சு நூல்கள்

1) ஆறுமுகப் பெருமாள் நாடார், கு. — தோட்டுக்காரி அம்மன்கதை, நாகர்கோயில், 1981.

2) சர்வேஸ்வரன், ப. — ஒட்டன் கதை, மனோ வெளியீடு, மதுரை, 1982.

3) வானமாமலை, நா. — ஐவர் ராசாக்கள் கதை, மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1974.

4) நடராஜன், தி. & சர்வேஸ்வரன், ப. — தம்பிமார் கதை, முருகன் அச்சகம், மதுரை, 1977.

5) Ibrahim Kunju, A.P. — *Expansion of Travancore in Eighteenth Century*, 1975.

6) Krishna Iyer, K.V. — *A Short History of Kerala*, 1966.

7) Kurman, K.K. — *Marthandvarma and the problem of his succession*, 1981.

8) Nagam Aiyar V. — *The Travancore State Manual, Vol-I*, Asian Educational Services, New Delhi, 1989.

9) Panikkar, K.M. *A History of Kerala 1498-1801 A.D.*, Annamalai University, Annamalai, 1959.

10)Pillai, K.K. *The Suchindrum Temple*, 1953.

11) Shangunny Menon, *History of Travancore*, Asian Educational Services, New Delhi, 1982.

12)Sreedhara Menon, A. *A Survey of Kerala History*, Kottayam, 1967

## சொல்லடைவு

### (எண் - பாடல், அடி எண்)


அக்கினி 16-1138

அக்கினி மண்டலம் 18-45

அக்கினித்தூண் 18-23, 24, 31, 32, 36, 37

அடக்காய் 16-582

அணக்குழி 18-26

அபிராமி 3-21, 34, 50, 6-7 7-3, 16

அம்மாவன் 16-323

அம்மைதம்புரான் 7-16, 16-986

அரப்பு 16-331

அரளி 8-46

அரித்துவாரி 16-252

அரிநமோத்து சிந்தம் 9-9

அரியெழுத்து 9-12

அரைஞானம் 16-968

அலுங்குமாக்த்தன் 16-9

அழகப்ப முதலி 16-594, 659, 694, 703

அழகப்ப முதலியார் 16-588, 629, 638, 644, 648, 655, 713, 756, 774, 805, 843, 850, 866, 904, 906, 1062, 1069

அழகப்பன் 16-1066

அழகப்பன் முதலியார் 16-850

அனந்தபத்மநாப பிள்ளை 16-742

அனல்வாரி 16-252

ஆகாசப்பச்சி 16-9, 28

ஆச்சிமார் குலம் 3-20

ஆசான் 8-47, 16-1154

ஆசான்மார் 16-938, 1049, 1073, 1082, 1093, 1160

ஆதித்தன் 16-664

ஆபரண மாலை 16-976

ஆரத்தியம் 16-246, 262

ஆரியநாட்டு கோட்டை 16-743

ஆழி 16-210

ஆளி 16-69, 143, 371, 968

இங்கிலீஷ் 9-28

இடங்கை 13-61, 16-670, 711, 720, 727, 728, 759, 796

இடத்தறுவாள் போத்தி 16-58

இந்திரன் 16-71, 1213

இரண்டு 16-803, 827

இரத்தினக் கம்பிளி 16-604

இரவி 16-76

இறைபகுதி 16-909

ஈஸ்வரனார் 18-7

உண்டை 17-3

உதிரமண்டலம் 16-253

உப்பளம் 16-108

உம்பளம் 16-612, 901, 908, 909

உமையாள் 2-1

உலகளந்தாள் 18-67

எட்டெழுத்து 9-25

எண்வாய் கணக்கு 9-24

எருது 16-164

ஒட்டகை 16-160

ஓட்டன் 16-138, 947

ஓமக்குழி 18-27, 30

கங்காளர் பேச்சி 18-66

கச்சப்புறம் 11-4, 16-70, 143, 148, 969

கசை குடை 16-20

கடயால் 16-888, 890

கண்டவிசக்காரர் 16-981
கணபதி 1-4, 7-110, 8-48, 9-5, 11-10, 12
கந்தர்வமடவார் 16-48
கம்பக்கட்டுக்காரர் 16-166
கம்பளத்தார் ரெட்டிமார் 16-630
கம்பளத்து நாயக்கன் 16-806
கம்பளத்து வீரன் 16-639
கயிலாசம் 18-51, 52
கரிஞ்சம்படை 16-254
கருநீலிமக்கள் 18-60
கருவசட்டி 16-695
கருவூலம் 16-536
கரைக்கண்டனார் 18-53
கரையாளர் 16-547, 549
கல்பதித்தமோதிரம் 16-964
கவனி 16-149, 962
கழுக்கோல் 8-10
கள்ளப்பணம் 16-537
களக்கூட்டத்துப் பப்பு பிள்ளை 16-739
காங்கயன் 16-76
காரியக்காரர் 16-170
கிட்டிணத்தம்மா 7-21
கிட்டிணத்தம்மை 16-912
கிட்டிணத்தம்மை தம்புரான் 16-112
கிட்டிணத்தாள் 2-3, 5-6
கிட்டிணத்தாளம்மை 7-17, 87, 169, 16-50, 67, 259, 960
கிட்டிணர் 7-18, 19
கிட்டிணன் 16-735
கிருட்டிணர் 3-22
கிளி 16-49
குசை 16-23, 34
குஞ்சம் 16-397
குஞ்சுகட்டநாயன்மார் 16-167
குஞ்சுக்காணி நாயர் 16-362, 18-915
குஞ்சுகூட்டநாயன்மார் 5-24
குஞ்சுதம்பி 7-102, 103, 105, 122, 163, 172, 174, 11-2, 6, 13-4, 16-4, 24, 26, 85, 88, 100, 102, 154, 315, 318, 328, 340, 341, 358, 451, 453, 465, 466, 472, 490, 506, 527, 543, 595, 642, 645, 686, 810, 820, 836, 840, 842, 844, 848, 849, 851, 853, 884, 940, 967, 973, 977, 978, 994, 1011, 1014, 1015, 1092, 1093, 1095, 1122, 1124, 1125, 1126, 1129, 1134, 1137, 1140, 1142, 1152, 1159, 1167, 1168, 1169, 1172, 1173, 1176, 1182, 1203, 1210, 1214, 18-9, 21, 38
குஞ்சுமாடம்மை பிள்ளை 16-52
குட்டி மரக்கால் 16-77
குட்டிமரைக்காணு 16-360
குடக்காரர் 16-1008
குடக்காறச் சிறுக்கன் 16-528, 540, 645, 1012, 1016, 1127
குடைக்காற செறுக்கன் 16-592, 981, 993
குதிரை 7-88, 16-12, 34, 39, 101, 161, 173, 832, 840, 843
குதிரைபட்சி 16-13
குதிரைப்படை 16-751
குரவை 16-156
குருக்கள் 16-687
குலசேகர மார்த்தாண்டன் 16-91
குழல் 16-156
குளச்சட்டுவம் 16-696
கெண்டி 16-696
கேசவன் 16-735
கைப்பிடிவார் 16-20
கைப்பிடிவாள் 16-30

கைபிரம்பு 16-374
கைலை 1-1, 16-237, 18-7, 11
கொச்சு கூட்ட நாயன்மார் 5-23
கொச்சு பிள்ளை 16-740
கொச்சுமணி 16-387
கொச்சுமணித் தங்கை 7-61, 120, 123,164, 166, 16-5, 342, 384, 911
கொச்சுமணிப் பிள்ளை 16-527
கொச்சு மாட பிள்ளை 16-576
கொச்சு மாடம்மை 16-103, 107, 109, 420, 688, 17-14, 18-9
கொச்சு மாறப் பிள்ளை 16-260, 506
கொச்சு மாற்ப்பிள்ளை 16-79, 175, 643, 18-1
கொச்சுமாறன் 18-10
கொச்சிரவி மார்த்தாண்ட பிள்ளை 16-733
கொச்சுவெஞ்சாமரைக்காரன் 16-540
கொட்டாரம் 16-1020
கைமுடுகு 16-148, 961
கைமுறை 3-23, 57, 5-7, 8
கைமுறைகள் பூட்டுகின்றமுறை 15-2
கைலாசம் 16-1188
கொட்டாரக் கோவில்கல் 16-1259
கொற்றவன் 16-1103
கோருவை 16-696
சங்கு 16-1107
சதிவு 16-816, 871, 874, 875, 1153
சந்தனமரம் 16-302, 971
சந்திரன் 16-1147
சந்தை முதல் எடுப்பு 16-87
சரப்பளி 16-373
சரப்பளி பொன்மாலை 16-697
சவ்வாது 16-334
சனியன் 16-1147, 11448
சாணிக் கணபதி 8-31
சாம்பராணி 16-335
சாரகுடை 16-330
சாளியல் 16-535, 536, 537, 539, 593, 615, 618, 619, 620, 858
சிவனார் 17-18
சீவன் 17-18
சீவிலி 5-18
சுங்கா முதலெடுப்பு 16-62
சுங்கினம் 16-160
சுட்டிவாசல்வழி 16-825
சுழுகரணங்கள் 9-25
சூரியன் 8-43, 16-954, 1212
செங்கோல் 16-473
செம்புக்கொடிமரம் 16-698
சேவுகாரர் 16-1073
சேனைப்படை 16-808
சொச்சு மாறப் பிள்ளை 16-686
சோதிரி 7-42
சோதிரிசி 7-59, 68, 107, 116, 154, 156
தங்கக் கொடிமரம் 16-698
தங்கசரப்பளி 16-142
தங்கமணி மாலை 16-147
தங்ககொச்சு மாடம்மைப் பிள்ளை 16-329
தம்பிமார் 1-3, 8-22, 9-1, 8, 12, 21, 10-1, 11-12, 15-4, 16-2, 27, 32, 39, 43, 44, 76, 80, 109, 116, 121, 123, 140, 141, 171, 179, 259, 294, 315, 316, 362, 366, 367, 375, 377, 379, 382, 393, 408, 409, 411, 414, 416, 427, 498, 521, 546, 579, 585, 586, 592, 600, 628, 637, 646, 649, 663, 673, 687, 689, 703, 720, 731, 747, 756, 759, 772, 786, 799, 804, 830, 854, 863,

864, 871, 874, 884, 885, 898, 899, 906, 907, 908, 916, 917, 923, 941, 950, 953, 959, 961, 980, 992, 993, 995, 998, 1001, 1003, 1186, 1192, 17-4, 18-60

தம்புரான் 16-67, 754, 828, 835, 837, 871, 899, 907, 920, 1036

தலைசேரி மார்த்தாண்ட பிள்ளை 16-59

தளவாய் 16-170, 733, 734

தாணுமாலையப்பெருமாள் 5-20

தாணுலிங்கம் 3-52

தாவட்டம் 16-40

திருக்காய்ச்சல் 16-248

திருநீலகண்டசுவாமி கோயில் 16-868, 897

திருநீலகண்ட பிள்ளை 7-180, 185

திருமஞ்சனம் 16-203

திருவரைநாண் கொடி 16-110

திருவாளி மோதிரம் 16-374

திருவிழா 16-1211

திருவெழுத்து 9-1

துடராஞ்ஞாண் 16-70

தூதுளை 8-42

தெச்சணா பூமி 3-28

தெற்கு கோட்டை 16-800, 801

தென்னவனார் 16-801

தேரோட்டம் 16-1211

நம்பூதிரிமார் 8-18

நாகசுரக்குழல் 6-10

நாகரெத்தின முத்து 6-11

நாயர் 16-460

நாயன்மார் 16-463

நாராயணம் 16-147

நாராயம் 16-372

நானிகைத் தட்டு 15-4

நிலவாய் 16-696

நீராழி 16-368, 951

நீலகண்ட அண்ணாவி 8-5

நீலகண்ட பிள்ளை 16-741

நீலகண்டர் 7-189

நீலி 18-58, 59

நூல் சாஸ்திரம் 9-20

நெல்லிமடம் 16-1003

நேரத் தட்டு 15-4

பச்சி 16-46

பஞ்சவர்கள் 16-515

பட்டன்மார் 16-356, 377, 438, 440

பட்டாணி 16-630

படர்தாமரை 16-253

பண்டாரகுடி 16-544, 687

பணிக்கன்மார் 16-938, 1049, 1073, 1082, 1154

பத்தரகாளி 16-179

பத்திரகாளி இலங்கம் 16-234

பரி 7-14, 16-4, 12, 29, 30, 32, 44, 46, 47, 151, 154, 505, 507, 542, 642, 643, 785, 786

பரிசு 11-20

பரிசை 11-19

பரியாளர் 16-8

பரியேற்று 16-7, 8

பரிவட்டம் 16-107, 204

பல்லக்கு 16-641

பல்லாக்கு 16-163, 505

பள்ளிகிரந்தம் 9-20

பாளையம் 16-475, 793

பிச்சகப் பிள்ளை 16-1003

பிச்சகப்பள்ளி நாயர் 16-360, 541, 915, 983
பிச்சி 8-44
பிச்சிப் பூ 16-1238
பிச்சை பெருமாள் 16-52
பிடாகை 16-477, 671, 672
பிடித்தல் 16-1099, 1156
பிள்ளைமார் 8-45
பிறதி பிள்ளமார் 16-169
பீரங்கி 16-165, 728, 729, 794
பீரங்கி உண்டைகள் 16-783
புதுக்கூட்டத்து இசக்கி 18-59
புதுக்கூட்டத்து வாதை 18-57
புதுமணியம் 16-589
புரவி 16-12, 22, 28, 33, 36
புலி 16-358, 490
புறா 16-48
புனுகு 16-150, 334, 970
பூட்டுகள் பூட்டுகின்ற முறை 15-1
பெரிஞ்சவிளை பேய் குறுப்பு 16-360
பெரியாத்தங்காவல் 16-580
பெரியாறு 16-651
பேய்க்குறுப்பு 16-77
பொந்தந்தடி 16-1128
பொந்தி 11-14
பொன்னரஞ்ஞாண் 16-144
பொன்னரந்நாண் 16-70, 144, 145
பொன்னி நாயர் 16-647
மகாதேவர் 16-189, 18-13, 64, 70
மகாதேவர் கோயில் 5-7
மகுடசேரி மார்த்தாண்டன் 16-740
மகுடஞ்சேரி பிள்ளை 16-59
மஞ்சநீர் 16-105
மடைமுகம் 16-187
மணல் வாரி 16-252
மணியக்காரர் 16-587
மணியன் 16-588
மந்திரிமார் 16-1101
மயில் 16-826
மல்பிடிக்காரர் 16-1074
மல்போர் 16-1157
மலையாள கிரந்தம் 9-26
மற்போர் 15-1
மறப்படை 16-806
மாடம்பிகள் 16-746
மாடம்பிமார் 16-56, 749, 770, 813, 814, 815, 816
மாடம்பிமார் பிள்ளை 16-745
மாடம்மை 17-8
மாடம்மை தங்கை 16-80
மாடம்மை பிள்ளை 16-66
மாடன் பொன்னி நாயர் 16-541
மாடன்பொன்னிற ஆயன் 16-914
மாடன் பொன்னிற நாயர் 16-983, 1016
மாடன் பொன்றை நாயர் 16-361
மாதா 16-991
மாதுளை 8-40
மாமங்கம் 16-125, 127
மார்த்தாண்ட தம்புரான் 16-55
மார்த்தாண்ட பிள்ளை 16-60
மார்த்தாண்ட மன்னர் 16-265
முடுகு 16-69, 143, 371, 965
முண்டக்கண்ணு பிள்ளை 16-78
முத்தலைக் குறுப்புமார் 16-78
முத்திருள நாடான் 16-94
முத்து 16-975

முத்துமயில் இலவாணிச்சி 16-446
முதலியார் 16-596, 598, 601, 603, 620, 627, 634, 700, 717, 719, 757, 847, 862, 865, 883
முதலெடுப்பு தீர்வை 16-83, 84
முப்புராதி 18-67
முரசு 16-155
முருகன் சேனைக்குட்டி நாடான் 16-97
முள்ளுவேலி 16-719
மேலக்கோட்டை வாசல் 16-796
மேனா· 16-163
மோதிரம் 16-371
யானை 16-327, 1166, 17-3
ராகுத்தன்மார் 16-767
ராசகுரு 7-178, 181
ராசன்சங்கை 16-1106
ராமகிருஷ்ண குருக்கள் பண்டாரம் 16-522
ராமவர்மத் தம்புரான் 3-17, 5-30, 7-21, 40, 125, 182, 16-55, 81, 120, 176
ராமவர்மா 16-293, 497, 608, 609
ராமவர்மா தம்புரான் 7-27
ரெட்டி 16-648
லக்கம் 9-17, 23
வங்கணத்தார் 16-631
வங்கணத்து வீரன் 16-639
வங்காளக் காச்சக்காரி 18-66
வஞ்சிமார்த்தாண்டன் 16-278
வட்டக் குடைகாரி 16-330
வட்ட வீசறக்காரர் 16-542, 647
வடக்குக்கோட்டை 16-825, 832
வடக்குகோட்டை வாசல் 16-798
வட கயிலாசபுரம் 18-31
வட கயிலாபுரம் 18-35
வர்ணத்தட்டு தட்டுறமுறை 15-3
வர்மத்தட்டு 16-1077, 1079, 1157
வர்மக்காரர் 16-1074
வர்மவகைகள் 12-5
வல்லயம் 14-2, 16-979
வலங்கை 13-6, 16-711, 726, 728, 757, 800
வலிய தம்பி 7-79, 81, 90, 92, 102, 104, 121, 163, 170, 174, 11-2, 5, 13-3, 4, 16-3, 22, 24, 26, 29, 85, 89, 99, 100, 151, 174, 315, 317, 328, 340, 358, 364, 490, 505, 543, 552, 595, 605, 606, 645, 686, 809, 810, 811, 820, 852, 884, 919, 940, 967, 973, 977, 978, 1015, 1023, 1024, 1025, 1030, 1032, 1033, 1036, 1038, 1045, 1051, 1053, 1054, 1061, 1062, 1067, 1076, 1079, 1107, 1109, 1113, 1116, 1167, 1204, 1209, 1213, 1214 18-9, 21, 39
வள்ளி 16-332
வள்ளியாத்து போத்தி 16-58
வன்னியகாலப்பெருமாள் 16-57
வன்னியர் 16-631, 806
வாணியர் 16-631
வாமடை 8-10
வாத்தியார் கோணம் 16-99
வாதமண்டலம் 18-46
வாலவஞ்சி தம்புரான் 16-691
வாலவஞ்சி மன்னர் 16-293, 487, 1165
வாலவஞ்சி மார்த்தாண்ட மன்னவர் 16-272, 281, 295, 762
வாலவஞ்சி மார்த்தாண்டன் 16-264, 282, 615, 736, 822
வாலியாம் பாறை 7-127, 16-130, 131, 132, 191
வாள் 16-372
வாஸ்தாரம் 11-18

விக்கிலாங்குருவி 16-53
வித்துபெட்டி 18-63
விநாயகன் 2-1
விருது 16-159
வீரசங்கிலி 16-142, 370, 964
வீரமாகுத்தன் 16-25
வீரவாளி 11-3, 16-144, 966
வீராணிச் சங்கு பிள்ளை 16-36
வெங்கல பாத்திரம் 16-501
வெஞ்சாமரை 16-646
வெஞ்சாமரைக்காரன் 16-997
வெடிகுடுக்கை 16-166
வெண்டயம் 16-155
வெள்ளி 16-501, 646
வெள்ளித்தடிக்காரர் 16-356, 437
வெள்ளிலை 16-582
வேங்கைபுலி 16-403
வேங்கைபுலி மன்னவர் 16-1064
வேம்படிவாழ் கொட்டாரம் 16-119
வேம்படிவாழ் கோவில் 16-280, 504
வேம்படிவாழ் கோவில்கல் 7-13, 16-413, 439, 608
வைகுண்டம் 16-298

## ஊர்பெயர் அகராதி

(எண் - பாடல், அடி எண்)


அக்கினியாகுளம் 16-1005
அக்கினியாபுரம் 16-1004
அச்சம்பாறை 16-180
அசத்திராயன் பிள்ளைமடம் 16-574
அட்டமங்கலம் 7-110
அம்மாண்டிவிளை 16-93
அமுதேற்றும் மண்டபம் 16-958
அய்யமடம்காடு 3-43
அய்யன்கோவில் 3-45
அய்க்கனாருகுளத்துவழி 16-721
அயோத்தி 3-30
அயோத்திபட்டணம் 3-19, 5-4, 5
அழகியபாண்டியபுரம் 16-669
அன்பத்தோட்சிரம் 18-41
அனந்தாபுரம் 16-572
ஆச்சிராமபுரம் 16-518
ஆச்சிராமம் 5-26
ஆட்டுவாணியன் மடம் 16-721, 1001
ஆரல்வாய்மொழிக்கோட்டை 3-43
ஆளூர் ஏலா 16-1004
ஆற்றங்கரை 16-998
ஆற்றங்கல் 16-267, 268, 274
ஆனப்பாலம் 3-48, 5-26, 16-517, 1120
ஆனைக்கொம்பந்தன் ஊர் 16-572
இடலாக்குடி 16-106, 685
இரணியல் 16-343, 412
இரணியல்வாழ் கோவில் 16-289
இரணியனூர் 16-723
இறச்சகுளம் 16-1013
இனயம்குறிச்சி ஏலா 16-1003
ஈழுவன்மடம் 16-511
உப்புகண்டான் பொத்தை 16-657
எழுந்திட்டாம்பாறை 16-183, 231
எழுகர நாடு 16-684
ஓம நல்லூர் 16-578
கஞ்சிமடம் 16-712
கடம்பூர் 3-31, 32
கடியப்பட்டிணம் 16-211
கடுக்கரை 16-571, 660, 666
கடைதுறை 16-300, 301
கணியாங்குளம் 7-8, 16-513, 707, 1006, 1010
கயத்தாறு 3-31
கருப்புக் கட்டியாறு 16-714, 933
கலுங்கு முகம் 16-232
கள்ளியங்காடு 7-8, 16-513, 709, 1006, 1010
களக்காடு 16-653
கன்னியாகுமரி 16-131
காரக்கோட்டு பேயிகுறுப்பு 16-739
கிள்ளியூர் 16-113
கீழ்க்கோட்டவாசல் 16-837
கீழக்கோட்டை 10-800, 801
குதிரைபாஞ்சான்குளம் 7-11, 16-933
குதிரைவையாளி விளை 16-26
குருக்கள் பண்டாரகுடி 16-524
கூட்டத்தெங்கு 16-187
கூட்டப்பளி 16-90
கெங்கைகொண்டான். 3-31

கேரளபுரம் 7-193, 16-320, 760
கைக்கடியப்பட்டணம் 16-222, 228
கொடுப்பக்குழி பேட்டை 16-84
கொத்தன் பாறை 16-570
கொல்லம் 16-167, 437
கோட்டாறு 5-27, 16-516
கோட்டாறு பிடாகை 16-683
கோவிக்கல் 8-1, 16-325, 346, 508, 1235
கோவில்கல் கொட்டாரம் 5-31, 16-937
சரலூர் அம்பலம் 16-999
சாலப்புத்தூர் 16-576, 653
சாலைவிளைமடம் 16-722
சிங்கநல்லூர் தெரு 16-325, 402
சிங்கநல்லூர்படை வீடு 7-12, 91, 16-104, 119, 177, 235, 383, 386, 439, 469, 607, 913, 949
சிங்கிகுளம் 16-577, 652
சிந்துபூந்துறை 16-580, 651
சிந்துபூந்துறை கச்சேரி 16-591
சிறமீட்ட ஊர் 16-668
சீதப்பால் 16-569, 1127
சுங்காங்கடை 7-9, 16-710, 934
சுசீந்திரம் 16-1054
சுயிந்திரம் 3-17, 49, 5-25, 16-514, 544, 568, 913
செட்டிமடம் 7-10
தத்தையார்குளம் 16-1131
தலக்குள ஏலா 16-181
தலக்குளம் 16-233
தாமராக்குடி 16-86, 106, 1014, 1114, 1126
திட்டுவிளை 16-675
திடிலூர் 16-578
திருக்கணங்குடி 3-36, 16-574, 656
திருநெல்வேலி 3-36, 16-650
திருப்பதிவாழ் அகரம் 16-569, 1130
திருவஞ்சிக்கரை 3-5
திருவனந்தபுரம் 3-3, 16-275, 277
திருவிதாங்கோடு 3-4, 16-753, 760
தெக்கு கோட்டை 16-344
தெரிசனங்கோப்பு 16-668
தேரூர் 16-568
தேவநல்லூர் 16-577
தோவாளை 3-45
நாகர்வாழ் கோவில் 16-516
நாகருவாழ் கோவில் 5-30, 7-1, 5, 147, 16-927, 936
நாகருவாழ் கோவில்கல் 16-1258
நாங்குனசேரி 3-39
நாஞ்சிநாடு 16-625, 636, 673
நாஞ்சில் வளநாடு 16-607
நாலால முட்டுச்சந்தை 16-83, 723, 727
நாலால முடு 16-82
பஞ்சவர்ணக்காடு 7-6, 16-229, 515, 707, 1018
பம்மத்து மூலை 16-229
பல்பநாபக்கோட்டை 16-623, 692, 867
பல்பநாபபுரம் 3-6, 7-179, 16-276, 321, 345, 357, 377, 461, 792, 793
பள்ளியந்திலா 5-21, 7-2, 16-172
பன்னிகோட்டு தெரு 16-178, 234
பன்னியங்காடு 16-189
பன்னியம்திலா 16-208
பார்வதியாள் அகரம் 7-7, 16-514, 7-7, 935, 1018
பாளையங்கோட்டை 3-38
பாறச்சாலை 3-6, 16-321

புத்தேரி 16-1011, 1132
புத்தேரி பிடாகை 16-680
புளிமூடு 16-573
பூதப்பாண்டி பிடாகை 16-679
பெரும்கோடு 16-983
பேய்க்கடுக்காய் மூடு 16-186, 230
மணக்குடி 16-108
மத்மத்து மூலை 16-188
மாவடி 16-654
மிளகு பேட்டை 16-344
மின்னிப்பாளையம் 16-579, 652
முருங்கவிளை 16-96
வடசேரி மேடு 16-681, 683, 704, 1133
வடலிவிளை 16-575
வடிவீஸ்வரம் 5-28
வம்புமலை கோணம் 16-101
வள்ளியாபுரம் 16-181, 223
வள்ளியாறு 16-189, 510
வள்ளியூர் 3-40
வில்லுக்கீறி அம்பலம் 16-715, 933
வீரத்தண்டை 16-149
வெட்டூர்ணிமடம் 16-1019
வெள்ளங்கட்டி அம்பலம் 16-1000
வெள்ளங்கட்டி மடம் 16-512
வெள்ளநாட்டு கோட்டை 16-741
வெள்ளமடம் 3-47
வைரவன் கோணம் 16-982

## வழக்குச்சொல் அகராதி

(எண் - பாடல், அடி எண்)

அஞ்சு 7-104, 172, 16-955, 1082, 1160
அஞ்செழுத்து 18-44
அட்டமத்துச்சனியன் 16-1146
அவருட 18-50
அவுத்து 16-14
அன்பத்தெட்டு 7-46
ஆச்சே 16-1169
ஆனை 7-88, 16-38, 160, 226, 267, 326, 337, 559, 742
ஆத்தங்கரை 3-45, 16-264
ஆயன்மார் 16-170
ஆரடி 16-339
ஆராடா 16-443
ஆருடன் 7-176
ஆருடைய 7-77, 101, 16-520
ஆரும் 17-10
ஆரென்று 16-587
ஆரொருவர் 16-499, 860, 879
ஆனயுட 13-3
ஆனைப்படை 16-751, 809
இப்போ 16-1230, 17-6
இவிடம் 16-480, 529
இறகூலி 16-114
உடய 18-15
உடவாள் 11-7, 11, 16-2, 145
உடைத்தல்லோ 16-1235
எடுத்தல்லோ 16-1105
எழுதியல்லோ 11-10
எழுதிவச்ச 16-184
என்னுட 11-22, 14-4, 16-1230
ஏத்த 7-132, 16-720
ஏத்தபடை 16-759
ஏதாலே 7-58
கட்டியல்லோ 16-538
கண்டல்லோ 16-522
காணுதல்லோ 16-251
கிட்டே 17-18
கிறுங்கிட 17-2
குஞ்சு 16-467, 1105, 1181
குடுத்திருந்த 16-553
குதவளை 16-1105, 1181
குதிரக்காரர் 16-827, 828
குலை 1-3, 16-845, 1120, 1142
குலைக்களம் 16-1096
கூடியல்லோ 16-659
கெட்டி 3-9
கெட்டியல்லோ 7-162, 10-4
கேட்டிலை 16-1054
கொண்டல்லோ 16-499
கொதிக்குதல் 16-1203, 1205
கோரியெடுத்தல்லோ 16-41
கோழப்பட்டு 16-853
சம்பிறங்கள் 17-1
சரியாச்சே 16-1245
சாத்த 16-333
சாத்தி 16-334

சாத்தினார் . 6-7
சாயுதல் 16-1235
சாயுதல்லோ 16-164, 183
சுட்டாக 7-75
சுண்டுவிரல் 16-215
சுத்தி 16-833, 954
சுறுதியாக 6-3
செயித்து 16-622
செல்ல வேணும் 3-54
சோதிருசி 7-53, 58
தமுகி 18-32
தன்குலை 18-17, 20
தாறோம் 16-626
திருமனசு 7-23
துடர்ந்து 16-213, 713
துடர 16-212
துடைத்து 16-16
துரிசத்தில் 16-1099
தாத்துவாரி 16-252
தேங்கா 8-49
தொளித்து 16-16
நாட்டியல்லோ 8-8
நாமள் 16-926
நாயமில்லை 16-844
நாலு 16-36, 475, 789, 794, 812, 818, 821, 828, 835, 1087
நிறஞ்சிடும் 16-1218
நிறநாழி 11-11
நெறுத்து 7-159
நேரிது 17-11
பகரம் 16-395
பறைஞ்சு 16-466
பறைந்து 16-1171, 1173
பறையடா 16-1104
பறையாமல் 16-443
பாசை 9-26
பிசாத்தி 16-467, 1105, 1181
பிடறி 16-1040
பிறகாலே 16-212
பேரலே 16-213
பேரிட 7-162
போகுது 17-18
போச்சு 16-891, 18-6
போச்சோ 16-1246
போற 16-334, 551
போறோம் 16-450
போனாப்போல் 16-1212
மக்களுட 16-1253
மன்னருட 16-556
மனசு 16-395
மனதாச்சே 16-1244
மனது 16-381
மாத்தார் 16-783
மாத்தான் 13-1, 5,
முடுவு 16-968
முண்டு 6-8
முத்தவெளி 16-378
மும்பில் 16-827
முறயோ 17-5
முன்பில் 16-280, 1030, 1036, 18-52
முணு 7-105, 170
யாரு 16-1221
ராவு 16-504, 1256
ரெண்டகம் 16-889

ரெண்டு 16-539, 593, 620

வகைதுகை 16-479, 483, 484, 485, 488, 489, 491, 613, 899

வச்சு 7-43, 11-11, 16-18, 1251, 18-46

வசமாத்தான் 16-1251

வயத்தில் 12-3

வரத்தி 16-859

வருத்தியல்லோ 7-71

வலித்துடுத்து 7-191

வளருதல்லோ 18-31

வன்குலை 18-17, 18, 19

வாரதெல்லாம் 7-68

வாற 16-209, 238, 924, 985, 1090, 1092

விரசாக 7-154

வெலி 16-307, 308

வெளுக்குமுன்னே 7-184

வேணும் 3-14, 7-160, 162, 173, 16-11, 12, 13, 75, 136, 385, 480, 523, 530, 563, 1189, 1253

# பிற ஆவணங்கள்

## 1. மாடம்பிமார் கதை

நாடான நாடதிலே நல்லவட நாடதிலே
தேசமான தேசத்திலே திருவனந்த புரமதிலே
திருவனந்த புரமதிலும் திருவட்டாறு தனிலும்
திருவட்டாறு தனிலும் திருவிதாங் கோடதிலும்
திருவிதாங் கோடதிலும் கொல்லமுதலே குமரிமட்டும்
கோழிமுக டேறிமேயும் வல்லபுகழ் நாட்டையெல்லாம்
வரிசையுடன் ஒருகுடைக்கீழ் அடக்கிஅர சாண்டிருந்தார்
அழகுடைய வஞ்சிமன்னன் வாலவஞ்சி மார்த்தாண்டன்
மன்னர்குல சேகரனார் ஆண்டுவரும் நாளையிலே
அழகுடைய மாடம்பிமார் வலியதம்பி குஞ்சுதம்பி
மாடம்பிமார் பதினாறுபேர் ஆண்டுவரும் நாளையிலே
அழகுடைய மாடம்பிகள்மார் மார்த்தாண்டன் பிள்ளைமகள்
மங்கைநல்லாள் சிவகாமி சிறப்புடனே பெண்கேட்டார்
மாட்டேனென்று சொல்லியவர்
வம்புகொள்ள யேதுவினால் மார்த்தாண்டம் பிள்ளைபேரில்
வாய்த்தகள்ளக் கணக்கெழுத கள்ளக்கணக்கு எழுதுவாராம்
மாடம்பிகள் தாம்கூடி அறிந்தாரே மார்த்தாண்டன்
குதிகுதித்துக் கோவமதாய் மாடம்பிமார் தங்கள்பேரில்
வரிசையுடன் படையெடுத்தார் படையெடுத்து வருவதையும்
பார்த்தாரே பிள்ளைமார்கள் எதுத்தவரும் சண்டைசெய்தார்
எதுத்தல்லோ மாடம்பிமார் வலிபகுஞ்சு மன்னருடன்
வந்தெதுத்த பிள்ளைமார்கள் வாள்தடிகள் ஆயுதங்கள்
வரிசையுடன் கொண்டுவெட்ட
ஒருவருக் கொருவர்மீது யுத்தம்செய்யும் வேளையிலே
வஞ்சிமன்னர் தன்படைகள் வரிசையுடன் மடிந்திடுமாம்
வெட்டிவிட்டுப் போனார்கள் வீரமுள்ள மன்னவர்கள்
மார்த்தாண்ட பிள்ளையவர் வரிசையுடன் கோபமுற்று
மாடம்பிமார் தங்களையும் வரிசையுடன் கொல்லவென்று

காவலது வைத்திருந்தார் கருத்துடனே பிடிப்பதற்கு
திருவனந்தபுர மதிலும் திருவிதாம் கோடதிலும்
கொல்லமட்டும் குமரிமட்டும் கண்டகோழி கோடுமட்டும்
காவலாளர் இருக்கின்றார் கருத்துடன் பிடிக்கவென்று
எங்கேபோய் ஒளித்திடலாம் என்றுசொல்லி மாடம்பிமார்
மாடம்பி வலியதம்பி வாய்த்தநல்ல கொச்சுதம்பி
இவர்களெல்லாம் தான்கூடி இன்பமுடன் ஓரிடத்தில்
பதினாறு பேர்களுமே பாவினையாய் தான்கூடி
நாகருவாளம்மன் கோவில் நலமுடனே வந்தவர்கள்
கோயிலுக்குள் தான்பதுங்கி குணமுடனே தானிருந்தார்
காடெங்கும் தான்தேடி காணாமல் யாபேரும்
கோவிலுக்குள் இருக்கும்செய்தி குணமுடனே தானறிந்து
நாலுபக்கம் வளைந்துகொண்டார் நலமுடனே கோயிலையும்
வளைந்துகொண்டு பாலமுடனே (பிடித்துக்கொண்டார் அரசரையும்
வாய்த்த முடிமன்னரையும்
கைவிலங்கு தான்மாட்டி காவலர் ஏதுசெய்தார்
வாசல்நடை யானதிலே வாய்த்ததொரு களுமரம்தானாட்டி
அந்தநல்ல களுமரத்தில் அழகுமன்னர் இருபேரை
தூக்கிவிட்டார் மன்னர்அவர்கள் தூரிசமுடன் ரெண்டுபேரை
சேளமுள்ள பேர்களையும் சுசீந்தாபுரம் கொண்டு வந்தார்
அதிலொரு களுமரத்தை ஆதரவாய் தானாட்டி
அதில்தான் ரெண்டுபேரை ஆதரவாய் தூக்கிவிட்டார்
மற்றுமுள்ள பேர்களையும் வரிசையும் கொண்டுபோயி
ஆரல்வாய்மொழிக் கோட்டை ஆதரவாய் கொடு போனார்
அந்தக்கோட்டை வாசலிலே அதிலேஒரு களுநாட்டி
அதிலேரெண்டு பேரைத்தூக்கி அழகுடைய மன்னரவர்கள்
அந்தக்கோட்டை வாசல்விட்டு அடுத்தக்கோட்டை போகிறாராம்
அஞ்சுக்கிராமம் கோட்டை அழகுபெற வந்துகண்டார்
அந்தநல் கோட்டையிலே அதிலேஒரு களுநாட்டி
நாட்டி அந்தக் களு மரத்தில் இரண்டுபேரைத் தூக்கிப்போட்டார்
நாலுண்டு எட்டு பேராநலமுடனே கொடுபோனான்
உகந்தவர்கள் கொடுபோனார் அதிலேஒரு களுமரத்தை

அவர்களுமோ தானாட்டி ரெண்டுபேரைத் தூக்கிப் போட்டார்
அதுக்குஅப்பால் வட்டக்கோட்டை அங்கேஒரு களுநாட்டி
ரெண்டுபேரைத் தூக்கிபோட்டார் அதுக்கப்பால் வட்டக்கோட்டை
அங்கேஒரு களுநாட்டி ரெண்டுபேரைத் தூக்கிப்போட்டார்
நலமுடைய களு மரத்தில் சேளமுள்ள நாலுபேரை
சீக்கிரத்தில் கூட்டிப்போய் கன்னியா குமரியிலே
பகவதியாள் வாசலிலே அதிலே ஒருகளு நாட்டி
ஆதரவாய் ரெண்டுபேரை தூக்கிலிட்டு மன்னவர்கள்
துரிசமுடன் ஏதுசெய்தார் காரியக்காறன் மடத்திலே
காவலர் ரெண்டுபேரை தூக்கிலிட்டார் மன்னரவர்
மாண்டிறந்து போனபேர்கள் கொல்லாமல் ஓடுவாராம்
ம்காதேவர் கயிலையிலே வந்துவளைந்து கொண்டார்
மகாதேவர் எங்களுக்கு வாய்த்தவரம் தாருமென்றார்
எங்களுக்கு வரமருள்வாய் ஈஸ்வரரோ மகாதேவா
எட்டுகூட்டமாகி நின்று ஈஸ்வரனே போற்றிசெய்தார்
பார்த்தாரே பரம்சிவம் பாவனையாய் ஏதுசெய்தார்
எட்டுகூட்டம் பதினாறுபேர் எல்லோரையும் வரவழைத்து
திருவனந்த புரமதிலும் திருவிதாங் கோடதிலும்
கன்னியாகுமரி மட்டும் கணக்கெழுத வரமும்தந்தேன்
நாடெங்கும் கணக்கெளுத நல்லபுள்ளை மார்கள்
திருவனந்த புரமதிலே செல்லவேணு மென்றுசொல்லி
எட்டுகூட்ட வீரரெல்லாம் பதினாறுபேர்கள் தான்கூடி
அனந்தமதில் பள்ளிகொள்ளும் ஆதி நாராயணரே
ஆடியெங்கள் தனைக்காத்து அதியபூசை தரவேணும்
என்றுசொல்லி எல்லோரும் இன்பமுடன் கேட்டபோது
மாயவனார் மனதிரங்கி வரிசையுடன் ஏதுசெய்வார்
ஊரவர்கள் கண்ணதிலே உத்தகனா காணுவாரா
கனவுகண்டு முளித்தெளுந்தார் கீர்த்தியுள்ள வேதியர்கள்
கோவிலுக்குக் கல்லெடுத்து கண்டகோவில் கொட்டுவாராம்
மாயவர்க்கு இடதுபுறம் பெரியகோவில் தானும்கெட்டி
பூசைசெய்தார் வேதியர்கள் பிள்ளைமார்கள் தங்களுக்கு
அனந்தமதில் பூசையுண்டு அல்லாரும் வீற்றிருந்தார்

## தம்பிமார் கதையை வில்லிசையில்
## பாடிய பாடுகின்ற குமரி மாவட்டக் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆறுமுகப் பெருமாள் புலவர் | ஒரப்பன விளை |
| 2. | கணபதி | தெக்குறிச்சி |
| 3. | கிருஷ்ண மணி | கல்லு விளை |
| 4. | சண்முக நாடார் | முருங்க விளை |
| 5. | சித்திரைக்குட்டி | தெக்குறிச்சி |
| 6. | சுயம்புத்தங்கம் | கண்ணா விளை |
| 7. | சுயம்பு ராஜன் | ராஜாக்கமங்கலம் |
| 8. | ஞானக்கண்ணுப் புலவர் | வெள்ளமடி |
| 9. | பாக்கியலெட்சுமி | பள்ளி விளை |
| 10. | புகழ் பெருமாள் | தெக்குறிச்சி |
| 11. | பெரிய நாடார் | ஒரப்பன விளை |
| 12. | பெருமாள் நாடார் | தெக்குறிச்சி |
| 13. | போத்தி புலவர் | வெள்ளமடி |
| 14. | முத்துசுவாமிப் புலவர் | சுயம்புலிங்கபுரம் |
| 15. | முத்தையா புலவர் | பண்ணையூர் |
| 16. | ராஜகிளி | அம்மாண்டி விளை |
| 17. | ராஜாத்தி | கல்லுக்கட்டி |

## Our Publications pertaining to Palm-leaf Manuscripts

### Descriptive Catalogues of Palm-Leaf Manuscripts in Tamil,

General Editors: **Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | Vol I Part I | Editor | M. Shanmukham Pillai, | 1990 | Rs. 177.50 | US $ 25 |
| 2. | Vol I Part II | Editor | M. Shanmukham Pillai, | 1990 | Rs. 177.50 | US $ 25 |
| 3. | Vol II Part I | Editor | M. Shanmukham Pillai, | 1991 | Rs. 177.50 | US $ 25 |
| 4. | Vol II Part II | Editor | M. Shanmukham Pillai, | 1992 | Rs. 225.50 | US $ 25 |
| 5. | Vol III Part I | Editor | Dr. A. Thasarathan, | 1993 | Rs. 250.00 | US $ 50 |
| 6. | Vol III Part II | Editor | Dr. A. Thasarathan, | 1993 | Rs. 250.00 | US $ 50 |
| 7. | Vol IV Part I | Editor | Dr. P. Subramaniam, | 1996 | Rs. 250.00 | US $ 50 |
| 8. | Vol IV Part II | Editor | Dr. P. Subramaniam, | 1996 | Rs. 250.00 | US $ 50 |
| 9. | Vol V Part I | Editors | Dr. P. Subramaniam, Dr. K. Jayakumar; | 1997 | Rs. 250.00 | US $ 50 |

General Editor : **Dr. G. John Samuel**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10. | Vol V Part II | Editors | Dr. P. Subramaniam, Dr. K. Jayakumar, | 1998 | Rs. 250.00 | US $ 50 |

### Palm-Leaf Manuscript Publications

General Editors: **Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel**

| | | Editors: | | | |
|---|---|---|---|---|---|
| 1. | The Wandering Voice (3 Ballads), | Dr. R. Nirmala Devi, | 1987 | Rs. 120.00 | US $ 32 |
| 2. | The Art of Drumming - Mattaḷaviyal, | Dr. V.P.K. Sundaram, | 1988 | Rs. 90.00 | US $ 20 |
| 3. | The Dateless Muse - Veṅkalarājaṉ Katai, | Dr. R. Nirmala Devi, | 1988 | Rs. 80.00 | US $ 20 |
| 4. | The Unsung Melodies, Palavēcañ Cērvaikkāraṉ Katai, | Dr. V. Murugan | 1989 | Rs.75.00 | US $ 32 |
| 5. | The Divine Pilgrimage - Perumāḷcāmi katai, | M. Shanmukham Pillai, | 1982 | Rs. 200.00 | US $ 40 |
| 6. | A Tale of Romance - Cakuntalai Nāṭakam, | Dr. A Thasarathan, | 1993 | Rs. 300.00 | US $ 50 |
| 7. | Varma Cūttiram, | Dr. P. Subramaniam, | 1994 | Rs.400.00 | US $ 50 |
| 8. | Nīli Yaṭcakāṉam, | Dr. P. Subramaniam, | 1994 | Rs. 150.00 | US $ 20 |
| 9. | Peṇṇaraciyar katai, | Dr. K. Jayakumar, D. Boominaganathan | 1995 | Rs.100.00 | US $ 20 |
| 10. | A Tale of Nemesis - Nīli Yaṭcakāṉam, | Dr. P. Subramaniam, | 1996 | Rs. 250.00 | US $ 20 |
| 11. | The Valorous Virgins - Peṇṇaraciyar Katai, | Dr. K. Jayakumar D. Boominaganathan | 1996 | Rs.220.00 | US $ 35 |
| 12. | A Tale of Betrayal - Cāraṅkataraṉ Yaṭcakāṉam, | Dr. P. Subramaniam, | 1996 | Rs.400.00 | US $ 65 |
| 13. | The Epic Eternal - Irāmar Katai, Part I, | Dr. K. Jayakumar, | 1996 | Rs.450.00 | US $ 65 |
| 14. | The Epic Eternal - Irāmar Katai, Part II, | Dr. K. Jayakumar, | 1996 | Rs.450.00 | US $ 65 |
| 15. | Palm-leaf and other Manuscripts in Indian Languages, | Dr. A. Pandurangan, Dr. P. Maruthanayagam | 1996 | Rs.300.00 | US $ 50 |
| 16. | Destiny and Divinity - Varāṅkaṉ Katai, | M. Parimanan, | 1996 | Rs.200.00 | US $ 30 |
| 17. | The Vows Fulfilled - Āmaiyar Ammāṉai, | M. Maruthamuthu, | 1996 | Rs.450.00 | US $ 65 |
| 18. | Poetic Petals in the Interior Landscape-Uttaṇṭaṉ Kōvai, | R. Jayalakshmi, | 1997 | Rs.400.00 | US $ 50 |
| 19. | Where Justice Chimes | Dr. P. Subramaniam, | 1997 | Rs.400.00 | US $ 50 |
| 20. | The Defender of the Faith | Dr. K. Jayakumar, R. Jayalakshmi, | 1996 | Rs.350.00 | US $ 40 |

General Editor : **Dr. G. John Samuel**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | Redemption Through Grace | M. Maruthamuthu | 1998 | Rs.350.00 | US $ 40 |
| 22. | Tirukkalampakam | M. Parimanan R. Jayalakshmi | 1999 | Rs.300.00 | US $ 30 |
| 23. | Treatise on Mathematics | Dr. P. Subramaniam, K. Sathya Bama | 1999 | Rs.300.00 | US $ 30 |